குறுந்தொகை

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

குறுந்தொகை

மூலமும் உரையும்

[பல்வகை ஆய்வுப் பகுதிகளுடன்]

பதிப்பாசிரியர்

பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை

தலைவர் — ஓலைச் சுவடித்துறை

தமிழ்ப் பல்கலைக் கழகம்

தஞ்சாவூர்

முனைவர் ரா. காமராசு,
விரிவுரையாளர்,
சுவடித்துறை,
தமிழ்ப்பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் - 613 010.

தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு: 30
திருவள்ளுவர் ஆண்டு 2016, ஆவணி—செப்டம்பர் 1985
பதிப்பாசிரியர்: மு. சண்முகம் பிள்ளை
நூல்: குறுந்தொகை (மூலமும் உரையும்)
பதிப்பு: முதற்பதிப்பு

மறு அச்சு : தமிழ்ப் பல்கலைக் கழக
1994 மறுதோன்றி அச்சகம்,
தஞ்சாவூர்.

விலை: உரூ. 200.00

அச்சு: மாருதி பிரஸ், சென்னை-14.

முனைவர் இரா.காமராசு,
விரிவுரையாளர்,
இலக்கியத்துறை,
தமிழ்ப்பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் - 613 010.

உள்ளுறை

முகவுரை ...	க - சுச
குறுந்தொகை — மூலமும் உரையும் ...	1 - 350
பாட்டு முதற் குறிப்பு அகராதி ...	351 - 358
பாடவேறுபாடு — ஏடுகள் ஒற்றுமை வேற்றுமை ...	359 - 362
பாடவேறுபாடு — ஒப்புநோக்கு அட்டவணை ...	363 - 561
பாடினோரும் பாடற் குறிப்பும் ...	562 - 566
பாடலில் சுட்டப் பெற்றோர் ...	567
திணைமுறை ...	568 - 569
கூற்றுவகை ...	569 - 570
தொடரடைவு ...	571 - 672
சொல்லடைவு ...	673 - 792
பிழைதிருத்தம் ...	793

முகவுரை

தோற்றுவாய்

தமிழ் இலக்கிய உலகில் காலத்தால் முற்படத் தோன்றியவை சங்கப்பாடல்கள். இவை பிறந்த காலம் கி.பி. 3ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட சில நூற்றாண்டுகள் ஆகலாம் என்று ஆய்வாளர் பலரும் கருதுகின்றனர். சங்கப்புலவர் வாயிலிருந்து பாக்கள் வெளிப்பட்ட காலம் பல்வேறாக இருந்தாலும் அவையெல்லாம் தொகுக்கப்பெற்று ஒழுங்குற அமைந்த காலம் கி.பி. 3ஆம் நூற்றாண்டிலாகும் என்பர்.

தொகை நூல் வரலாறு

முச்சங்க வரலாறுகளைத் தரும் இறையனார் களவியல் உரையிலே கடைச்சங்க காலத்தில் பாடல்கள் வகைப்படுத்தப் பெற்றுத் தொகுக்கப்பெற்றதாகக் காணப்படுகிறது. தொகுத்தமை பற்றிய அவ் வரலாற்றுச் செய்திகள் வருமாறு :

> "இனிக் கடைச்சங்கம் இருந்து தமிழாராய்ந்தார் சிறுமேதாவியாரும், சேந்தம்பூதனாரும், அறிவுடையரனாரும், பெருங்குன்றூர்கிழாரும், இளந்திருமாறனும், மதுரை ஆசிரியர் நல்லந்துவனாரும், மதுரை மருதனிளநாகனாரும், கணக்காயனார் மகனார் நக்கீரனாரும் என இத் தொடக்கத்தார் நாற்பத் தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினார் என்ப. அவர்களால் பாடப்பெற்றன நெடுந்தொகை நானூறும், குறுந்தொகை நானூறும், நற்றிணை நானூறும், புறநானூறும், ஐங்குறுநூறும், பதிற்றுப்பத்தும், நூற்றைம்பது கலியும், எழுபது பரிபாடலும், கூத்தும் வரியும், சிற்றிசையும் பேரிசையும் என்று இத் தொடக்கத்தன. அவர்க்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமும் என்ப." (இறையனார். நூற்பா 1, உரை)

இந்த உரைப்பகுதியில் எட்டுத்தொகை நூல்களைப் பற்றிய விவரங்களே உள்ளன. நெடும் பாடல்களாகிய பத்துப்பட்டுத் தொகுப்புப்பற்றி யாதும் கூறப் பெறவில்லை. அவை வெவ்வேறு ஆசிரியர்களால் பாடப்பெற்ற தனித்தனி நூல்களாகத் திகழ்ந்தமையின் தொகைநூல்களோடு சேர்க்காது விடுத்தார் போலும். தமிழ் விடு தூதுடையார்,

'... ... ... மூத்தோர்கள்
பாடியருள் பத்துப் பாட்டும் எட்டுத்தொகையும்
கேடில் பதினெட்டுக் கீழ்க்கணக்கும்' (தமிழ்விடு. 56)

என்று பழந்தமிழ் நூல்களை அறிமுகப்படுத்துகிறார். இங்கே பத்துப்பாட்டிற்கு இவ்வாசிரியர் முதலிடம் தந்துள்ளார். அதற்கு அடுத்த நிலையில்தான் எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களை வைக்கிறார். இவற்றைக் குறித்த சில செய்திகளைத் தொல்காப்பிய உரைகாரர் முதலியோரும் குறிப்பிட்டுள்ளனர்.

உரைகாரர் கருத்து

பேராசிரியர், "பாட்டும் தொகையும் அல்லாதன சில நாட்டிக் கொண்டு" என்கிறார் (தொல். மரபு. 94 உரை). இங்கே 'பாட்டு' என்பது பத்துப்பாட்டினை; 'தொகை' என்பது எட்டுத்தொகையினை. நன்னூலுக்கு முதலுரை கண்ட சமணமுனிவராகிய மயிலைநாதர்தாம் தொகை நூல்கள் எட்டு என்பதைச் சுட்டி உரைத்தாராவர்.

"ஐம்பெருங்காப்பியம், எண்பெருந்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு என்னும் இவ்விலக்கியங்களுள்ளும் விரிந்த உரிச்சொற்பனுவல்களுள்ளும் உரைத்தவாறு அறிந்து வழங்குக்" (நன். 387 உரை)

என்னும் அவருடைய உரைவாக்கியம் நமக்குப் பண்டை இலக்கியத் தொகுப்புகள் எனவயெவை என்பதனைத் தெளிவுபடுத்து கின்றமை காணலாம்.

குறுந்தொகை மாண்பு

எட்டுத்தொகை நூல்களை 'எண்பெருந்தொகை' என மயிலைநாதர் சிறப்பித்தோதுகின்றமையை மேலே கண்டோம். குறுந்தொகை எனப் பெயரில் குறுமை காணப்படினும் மயிலை நாதர் நோக்கில் இதுவும் ஒரு பெருந்தொகையே.

எட்டுத்தொகை நூல்கள் இன்ன என்பதனை,

'நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியே அகம்புறமென்று
இத்திறத்த எட்டுத் தொகை'

என்னும் பழம்பாடல் தெளிவிக்கின்றது. இங்கே பாடலின் அமைப்புக் கருதி இரண்டாவதாகக் குறுந்தொகையை வைத்துள்

ளார். எனினும் 'நற்றிணை' என்றாற்போல, 'நல்ல குறுந் தொகை என இத் தொகை நூலுக்கு 'நல்ல' என்னும் சிறப்படை யிட்டுள்ளமை இந் நூலின் மாண்பினைக் காட்டும்.

இறையனார் களவியலுரைகாரர் தொகைநூல்களைச் சுட்டு மிடத்து, 'நெடுந்தொகை நானூறும் குறுந்தொகை நானூறும்' என அகநானூற்றுப் பெருந்தொகையினை அடுத்து இரண்டாவ தாக இத்தொகையினைக் குறிக்கின்றார். இதுவும் இதன் சிறப்புக் கருதி வைத்த அடைவு முறை என்றே கொள்ளக் கிடக்கின்றது.

தொகை நூல்கள் எல்லாம் அகம், புறம் என்னும் பொருள் நிலைவகையானும் அகவல், கலி, பரிபாடல் என்னும் பாநிலை வகையானும் தொகுக்கப் பெற்றுள்ளன. குறுந்தொகை நற்றிணை, அகநானூறு என்னும் மூன்றும் ஆசிரியப்பாவின் அடிவரையறை கொண்டு தொகுக்கப்பெற்ற நானூற்றுத் தொகை களாகும். குறுந்தொகையுள் 4 அடி முதல் 8 அடி வரையுள்ள பாடல்கள் உள. நற்றிணையில் 9 முதல் 12 அடி வரையுள்ள அகப்பொருட்பாக்களைக் காண்கிறோம். அகநானூற்றின் அடி யளவுச் சிறுமை 13; பெருமை 31. இந்த அடியளவுகளை நோக்க இம் மூன்றும் ஒன்றன்பின் ஒன்றாக அடுத்தடுத்துத் தொகுக்கப் பெற்றிருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

குறைந்த அடியளவுடைய பாடல்கள் கொண்ட தொகுப்பைக் 'குறுந்தொகை' என்றனர்; அடியளவு மிகுந்த பாடல்களைக் கொண்ட அகநானூற்றை 'நெடுந்தொகை' என்று சுட்டலாயினர். இங்ஙனமாக அகப்பொருள் தொகை நூல்களுள் குறுந்தொகை எல்லாவகையானும் முற்படக் கருதப்பெறும் சிறப்புடையது என்பது விளங்கும்.

பண்டை உரைகாரர் பலராலும் எடுத்துக் காட்டப்பெறும் மேற்கோள் நூல்களுள் இந் நூற் பாடல்களே மிகுதியாய் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. ஏனைய தொகை நூல்களைவிடவும் அதிகமான பதிப்புகளைப் பெற்றிருப்பதும் இக் குறுந்தொகையே. இதற்கு உரைகாண முற்பட்டாரும் பலராவர் என்பதும் கருதத் தக்கது.

குறுந்தொகையின் காலம்

சங்கப் பாடல்களிலே பாட்டில் பயின்றுவரும் சிறப்புத் தொடர்களால் பெயர் பெற்ற புலவர் பெருமக்கள் இருபத் தெழுவர் காணப்படுகின்றனர். இவருள் பத்தொன்பது புலவர் பெயர்களுக்குரிய சிறப்புத்தொடர்களைக் கொண்ட பாடல்கள் குறுந்தொகையுள் உள. பிற நூல்களிலும் குறுந்தொகைத்

தொடரால் பெயர் பெற்ற புலவர்கள் வருகின்றனர். எனவே, புலவர்களின் பெயரீட்டிற்குக் காரணமான பாடல்களைக் கொண்ட குறுந்தொகை ஏனையவற்றினும் முற்பட அமைந்தது என்று கொள்ள இடமுண்டு.

பேராசிரியர் ச. வையாபுரிப் பிள்ளையவர்கள் தெரிவித்துள்ள ஒரு கருத்தும் மேலதற்கு அரணாயுள்ளது. அவர்தம் ஆய்வுரை வருமாறு:

"ஓரேருழவன், கயமனார், காக்கை பாடினியார் நச்செள்ளையார், தும்பிசேர்கீரனார் என்ற புலவர் பெயர்கள் குறுந்தொகையில் (131, 9, 210, 392) வந்துள்ளன. இந் நூலில் இப் புலவர்களின் பெயர்கள் காரணம் பற்றி அமைந்துள்ளன என்பது விளங்குகிறது. எனவே, இந் நூலிலேயே இப் புலவர்களின் பாடல்கள் முதலில் தொகுக்கப்பட்டன என்று கொள்ளுதல் வேண்டும்."

(இலக்கிய தீபம், பக். 75-76)

மாங்குடி மருதனாரைப் புறப்பாட்டு ஒன்று (72) ஏனைய புலவர்களுக்குத் தலைவராகக் கொண்டு போற்றுகிறது.

'மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புல்வர் பாடாது வரைகஎன் நிலவரை'

(புறம். 72 : 14-16)

என்று தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் சூள் உரைக்கின்றான். இவன் தலைமைப் புலவராகக் குறிப்பிடும் மாங்குடி கிழாரின் பாடல் குறுந்தொகையுள் இடம் பெற்றிருத்தலால் இது முதன்மை பெற்ற நூல் என்பது கருதத்தகும்.

சங்கப்பாடல்கள் பலவற்றின் ஆசிரியர்களாகத் திகழும் கபிலர், பரணர், ஔவையார், நக்கீரர் முதலியோர் பாடல்கள் இக் குறுந்தொகையுள் அமைந்திருத்தலும் இதன் காலப்பழமைக்கு ஒரு சார்புச் சான்றாகக் கொள்ளலாம். இத்தகைய செய்திகளால் குறுந்தொகையின் சிறப்பும் கால முற்பாடும் நமக்குப் புலப்படக் காணலாம்.

குறுந்தொகையின் காலம் பற்றிப் பேராசிரியர் ச. வையாபுரிப் பிள்ளையவர்கள் தமது குறுந்தொகை ஆய்வுரையுள் சுட்டியுள்ளார்கள். அவர்களின் கருத்துச் சுருக்கத்தை இங்கே காண்போம்.

குறுந்தொகைப் பாடல்களைப் பாடிய புலவர்கள் வேறுவேறு காலத்தினர். புறநானூற்று முதற்பதிப்பு முகவுரையில் காணும்,

"இந் நூற் செய்யுட்களால் பாடப்பட்டவர்கள் ஒரு காலத்தாரல்லர்; ஒரு குலத்தாரல்லர்; ஒரு சாதியாரல்லர்; ஓரிடத்தாருமல்லர், பாடியவர்களும் இத்தன்மையரே" என்னும் குறிப்பு தொகை நூற்பாடல்கள் பற்றிய சரியான கணிப்புரையாகும்.

தொல்காப்பிய உரைகாரராகிய பேராசிரியர் குறுந்தொகைக்கு உரைவரைந்துள்ளமையால் அவர் காலமாகிய 14ஆம் நூற்றாண்டிற்கு முன்பே இது தொகுக்கப்பெற்றது என்பது தெளிவு.

இளம்பூரணரும் குறுந்தொகைப் பாடல்களை மேற்கோளாக எடுத்தாளுதலின் அவர் காலமாகிய 12ஆம் நூற்றாண்டிற்கும் முற்பட்டது இத் தொகை என்பது துணிவு.

வீரசோழியவுரையில், 'அளவடியாற் றொக்கது குறுந்தொகை' (அலங். 36, உரை) என்று கூறப்பட்டுள்ளது. எனவே, இந் நூல் எழுதப்பட்ட கி. பி. 1062-ல் பட்டமெய்திய வீரராசேந்திரன் காலத்திற்கு முன்னரே இக் குறுந்தொகை கோக்கப்பெற்றமை விளங்கும்.

"உருத்திரசன்மன் அகநானூறு தொகுத்தவன் என்பது தெரிகிறது. சங்கப்புலவர்களின் இறுதிக்காலம் கி. பி. 3ஆம் நூற்றாண்டின் இறுதி எனத் துணியலாம். இவர்களது செய்யுட்களைத் தொகுக்கும் கருத்து எழுவதற்கும் செயலாக முற்றுதற்கும் ஒன்றிரண்டு நூற்றாண்டுகள் சென்றிருக்கலாம். எனவே, அகநானூறு தொகுக்கப்பட்ட காலம் 5ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என்பது ஒரு வகையாற் புலனாகின்றது. குறுந்தொகை நூலினைத் தொகுத்தவன் பூரிக்கோ ஆதலானும் இப் பூரிக்கோ என்பான் உப்பூரிகுடிகிழானாக இருத்தல் கூடுமாதலானும் இத் தொகை நூல் உருத்திரசன்மனது தந்தையால் நான்காம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொகுக்கப்பெற்றது எனக் கொள்ளுதல் தக்கதாகின்றது" என்பர்.

(இலக்கிய தீபம். பக். 102 - 103)

குறுந்தொகையிலுள்ள செய்யுள் ஒவ்வொன்றும் தோன்றிய காலத்தை வரையறுத்தலும் இயலாததொரு காரியமே. சில செய்யுட்களை இயற்றிய ஆசிரியர் பெயர்களே மறைந்துவிட்டன. 19 செய்யுட்களை இயற்றியோர்க்கு அவரவரது செய்யுட்களில் வந்துள்ள அருந்தொடர்களே பெயராக அமைந்துள்ளன. எஞ்சிய செய்யுட்களிலும் காலவரையறை செய்தற்குப் பயன்படும் ஆதாரங்கள் சிலவேயாம்.

'நீகண் டனையோ கண்டார்க் கேட்டனையோ
ஒன்று தெளிய நசையினம் மொழிமோ
வெண்கோட்டு யானை சோணை படியும்
பொன்மலி பாடலி பெறீஇயர்
யார்வாய்க் கேட்டனை காதலர் வரவே'

என்னும் குறுந்தொகைப் பாடலில் (75) வரலாற்றுச் செய்தி ஒன்று தென்படுகிறது. "சோணைநதிக் கரையிலே பொன் மிகுதியால் சிறப்புற்று விளங்கும் பாடலி என்னும் வள நகரத்தை நீ பெறுவாயாக" என்று தலைமகனது வரவுணர்த்திய பாணனை நோக்கித் தலைமகள் கூறுகிறாள். எனவே, இச் செய்யுள் இயற்றப்பெற்ற காலத்தே பாடலிபுந்திரம் வளஞ்சிறந்த பெரு நகரமாக விளங்கியது என்பது புலனாம்.

பாடலிபுத்திர நகரின் வரலாறு கி.மு. 5-ல் இருந்தே தொடங்குகிறது. அசோக மாமன்னன் காலத்திற்குப் பின்பு கிறித்து பிறந்த சில தொடக்க நூற்றாண்டுகளில் பாடலி சிறப்புற்று விளங்கியது. கி.பி. 4ஆம் நூற்றாண்டில் குப்தர் காலம் இதன் பொற்காலமாய் இருந்தமை தெரிய வருகிறது. எனவே, குறுந்தொகைச் செய்யுட்கள் இயற்றப்பெற்ற காலம் கி.பி. 2ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் என்னும் முடிவிற்கு வருகிறார் பேராசிரியர். எனவே, குறுந்தொகைப் பாடல்கள் கி.பி. 3ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டுப் பாடப் பெற்றவை என்பது விளங்கும்.

தொகுப்பு வரலாறு

"இத்தொகை முடித்தான் பூரிக்கோ. இத்தொகை பாடிய கவிகள் இருநூற்றைவர்" என்பது பழங்குறிப்பு. இதனைத் தொகுப்பித்தார் பெயர் தெரியக்கூடவில்லை. 10 பாடல்களின் ஆசிரியர் பெயர் காணப்பெறவில்லை.* எஞ்சிய பாடல்களைப் பாடியவர்களின் தொகை இருநூற்றைவர் என்னும் வரையறையை நிறைவு செய்கின்றது.

குறுந்தொகையும் அகநானூறும் முறையே தந்தையும் மகனாரும் தொகுத்தனராதல் வேண்டும் என்று கருதுகிறார் பேராசிரியர் ச. வையாபுரிப் பிள்ளை. அவர் தரும் விளக்கம் வருமாறு :

"முதன் முதலாகத் தொகுக்கப்பட்டுக் குறுந்தொகை எனப் பெயர்கொண்டு வெளிவந்த வரலாற்றினைப் பற்றி ஒரு சிறிது

---

* 191, 201, 256, 313, 321, 326, 375, 379, 381, 395,

கூறலாம் என்று எண்ணுகிறேன். பிரதிகளின் இறுதியில், 'இத்தொகை முடித்தான் பூரிக்கோ. இத் தொகை பாடிய கவிகள் இருநூற்றைவர். இத் தொகை நாலடிச் சிற்றெல்லை யாகவும் எட்டடிப் பேரெல்லையாகவும் தொகுக்கப்பட்டது' என்று காணப்படுகின்றது. அகநானூறு என்ற தொகைநாற் பிரதிகளின் இறுதியில், 'தொகுத்தான் மதுரை உப்பூரிகுடி கிழார் மகனாவான் உருத்திரசன்மன்; தொகுப்பித்தான் பாண்டியன் உக்கிரப் பெருவழுதில்' எனக் காணப்படுகின்றது. நற்றிணைப் பிரதிகளின் இறுதியில், 'இத்தொகை தொகுப்பித் தான் பன்னாடு தந்த மாறன் வழுதி' எனக் காணப்படு கின்றது. குறுந்தொகைப் பிரதியின் இறுதியிலுள்ள 'முடித்தான்' என்பது 'தொகுத்தான்' என்று பொருள்படும் எனக் கோடலே நேரிது. இஃது உண்மையொடு பட்டதாயின் பூரிக்கோவும், உப்பூரிகுடி கிழாரும் ஒருவரேயாதல் சாலும். ஆகவே, குறுந்தொகையும் அகநானூறும் முறையே தந்தையும் மகனாரும் தொகுத்தனராதல் வேண்டும்."

(இலக்கிய தீபம். பக். 95-96)

பூரிக்கோ என்றும் உப்பூரிகுடிகிழார் என்றும் வரும் பெயர் களைக் கொண்டு பார்க்கும்போது 'கோவும் கிழாரும்' ஒரே இனத்தாரைச் சுட்டுவன அல்ல என எண்ண இடமாகிறது. எனவே இது மேலும் ஆராய்தற்குரியது ஆகும்.

பதிப்பு வரலாறு

இனிக் குறுந்தொகையின் பதிப்பு வரலாற்றை நோக்குவோம். குறுந்தொகைச் சுவடிகள் நாட்டின் பல இடங்களிலும் பரவலாகக் கற்றார்களிடையே இருந்து வந்தன. சென்ற நூற்றாண்டிலேயே புலவர் சிலர் காகிதத்தில் இந் நூலைப் பாடல் வடிவில் பெயர்த்து எழுதிக் கற்றுப் போற்றி வரலாயினர். சங்க நூல்களைப் பதிப்பிடும் முயற்சியே சென்ற நூற்றாண்டில் 1887 முதற் கொண்டுதான் தொடங்கியுள்ளது. இந்த இருபதாம் நூற் றாண்டில் 1920ஆம் ஆண்டோடு பாட்டு தொகைகள் அச்சுருப் பெற்று உலாவரலாயின.

முதற்பதிப்பு

முதன் முதலாகக் குறுந்தொகையைப் பதிப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டவர் திருக்கண்ணபுரத்தலத்தான் சௌரிப்பெருமாள் அரங்கன் என்பவராவர். அவர் தம் ஆசிரியப் பணிகளுக்கிடையே இந்நூலின் ஆய்வில் ஈடுபட்டுவந்தார், இதன் பொருட்டு அவர்

எங்கெங்கெல்லாம் சென்று எவ்வெவ் வகையில் சுவடிகளைப் பெற்று ஆராய்ந்தார் என்பதனை அவர்தம் பதிப்புரையில் சுட்டியுள்ளார். பல்வேறு முட்டுப்பாடுகளுக்கிடையில் 1915ஆம் ஆண்டுக் குறுந்தொகைப் பதிப்பினை முதன் முதலாகத் தந்த பெருமை அரங்கனாரையே சாரும்.

அரங்கனாரின் உரைத்திறம்

அரங்கனார் திணைக்குறிப்பின்றி யிருந்த இந் நூற்பாடல்களுக்குத் திணைக்குறிப்புகளை ஆராய்ந்து குறித்துள்ளார். இந் நூலுக்குப் பழையவுரை கிட்டாத நிலையில் தாமே அரிதின் முயன்று உரையும் எழுதிச் சேர்த்துள்ளார்.

> "இதனைப் பலகால் முயன்று தமது கூரிய சீரிய நுட்பமதியுடன் எனது ஆருயிர் அன்பர்களாகிய ஸ்ரீமத் பண்டிதர் T.S. அரங்கசாமி ஐயங்கார் அவர்கள் தாம் இயற்றிய திணை, உள்ளுறை, இறைச்சி, மேற்கோள், இலக்கணக் குறிப்பு முதலியற்றைக் காட்டிச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தலாகிய புத்துரையுடன் ஆராய்ச்சித்திறன் கொண்ட அரும்பெருங் குறிப்புக்கள் பலவற்றைச் சேர்த்து, அழகிய புத்தகமாகப் பதிப்பித்து, அருந்தமிழ் கற்பித்து ஆருதவி புரிந்த சோழவந்தான் கிண்ணிமடம் ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகளுக்கு உரிமையாக்கி வெளியிட்டிருக்கின்றார்கள்"

என முகவுரையில் மணக்கால் அய்யம்பேட்டை S. முத்துரத்ந முதலியார் அவர்கள் குறிப்பிட்டுள்ளமை பதிப்பாசிரியரின் பேருழைப்பையும் திறனையும் வெளிப்படுத்திக் காட்டவல்லது.

நமச்சிவாயர் பதிப்பு

இதன் பின்னர், பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியார் குறுந்தொகை மூலப்பதிப்பு ஒன்று அச்சிட்டமை தெரியவருகிறது. ஆனால், அப் பதிப்பு வெளிவந்து எங்கும் பரவியதாகத் தெரியவில்லை.

இராமரத்தின ஐயர் உரை

1930-ல் புரசைப்பாக்கத்திலிருந்து வழக்கறிஞர் டி.என். சேஷாசல ஐயர் தாம் வெளியிட்டுவந்த கலாநிலையம் வார இதழில், திரு. இராமரத்தின ஐயர் எழுதிய உரையுடன் குறுந்தொகையை வெளியிட்டுவந்தார். 1930ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் தொடக்கமாக வாராவாரம் வெளிவந்த

இவ் உரை அந்த ஆண்டு டிசம்பர்த் திங்களில் முற்றுப் பெற்றது. இவ் உரை தனி நூலாக இதுவரையிலும் வெளியிடப்பெறவில்லை.

அருணாசலதேசிகர் மூலம்

கலா நிலைய முயற்சிக்குப்பின் 1933-ல் சென்னைப் புரசைப் பாக்கம் சோ. அருணாசலதேசிகரால் மூலம் மாத்திரம் கொண்ட பதிப்பு வெளியிடப் பெற்றது. முந்திய பதிப்புகளைவிடவும் இதில் பாடங்களிலே பல திருத்தங்கள் வெளிப்பட்டன. சுவடிகளை வைத்து ஒப்பிட்டு ஆராய்ந்ததுடன் உரையாசிரியர் பலரும் தத்தம் உரைகளுக்கு இடையில் எடுத்தாண்ட குறுந்தொகைச் செய்யுட் பாடங்களையும் ஒப்பிட்டுத் திருத்தமான நல்ல பாடங்கள் கொண்டதாய் இம் மூலப்பதிப்பு அமைவதாயிற்று. எனினும் இதிலும் பாடங்கள் பலவிடத்தும் திருந்த வேண்டுவனவாய் இருந்தன.

சாமிநாதையர் பதிப்பு

இந் நிலையில் டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்களுடைய ஆராய்ச்சிப் பதிப்பு, அவர்களால் எழுதப்பெற்ற விளக்கவுரையுடன் 1937-ல் வெளிவந்து இந் நூலின் சீர்மையை உலகுக்குப் பறைசாற்றியது. இப் பதிப்பில் டாக்டர் ஐயர் அவர்கள், கூற்று, கூற்றுவிளக்கம், மூலம், பிரதிபேதம், பழைய கருத்து, ஆசிரியர் பெயர், பதவுரை, முடிபு, கருத்து, விசேடவுரை, மேற்கோளாட்சி, ஒப்புமைப் பகுதி எனப் பன்னிரண்டு கூறாகப் பகுத்துக் கொண்டு ஒவ்வொரு பாடலுக்கும் விளக்கமான உரை எழுதியுள்ளார்கள்.

சங்க நூல் வெளியீட்டில் இறுதியாக அவர்களால் வெளியிடப் பெற்றது இக் குறுந்தொகை உரைநூல். தாம் பெற்ற பெரும் பயிற்சியால் சுவடிகளை ஆராய்ந்து ஒப்புமைப் பகுதிகள், மேற்கோளாட்சிகள் என்று இன்னோரன்னவற்றைத் தொகுத்து ஒப்புநோக்கி உரைவரைந்துள்ளமை சிறப்பாகும். பிற சங்க நூல்களின் பழைய உரையாசிரியர்களின் குறிப்புகளையும் நன்கு தெளிந்து ஏற்ற முறையில் எழுதப்பெற்ற இவ்வுரை சங்கநூற் புத்துரை வெளியீடுகளிலேயே ஒரு தனிச் சிறப்பைப் பெற்று விளங்குகிறது. நூலின் முகப்பில் விரிவான முகவுரை அமைந்திருப்பதோடு நூலாராய்ச்சி என்னும் ஆய்வுப்பகுதி ஒன்றும் இதில் உள்ளது. பாடினோர், பாடப்பட்டோர் அகரவரிசை, அரும்பதம் முதலியவற்றின் அகராதி முதலியனவும் இதன் சிறப்பு அங்கங்களாம்,

சங்க இலக்கியப் பதிப்பு

1940-ல் பாட்டு தொகைப் பாடல்களை ஆசிரியர் அடைவில் முறைப்படுத்தி அமைத்துச் 'சங்க இலக்கியம்' என்னும் பெருந் தொகுப்பைப் பேராசிரியர் ச. வையாபுரிப்பிள்ளையவர்கள் அறிஞர் சிலர் துணையுடன் ஆய்ந்து, மூலபாடப் பதிப்பினைச் சைவசித்தாந்த மகா சமாஜத்தின்வழி வெளியிட்டார். இப் பதிப்பில் முந்திய பதிப்புகளையும் கிட்டிய சுவடிகளையும் ஆராய்ந்து தக்க பாடங்களைத் தேர்ந்தெடுத்துத் தந்திருப்பது இதற்குரிய சிறப்புகளுள் ஒன்றாகும். இதில் இணைக்கப் பெற்றுள்ள பல்வேறு அகராதிகள் முதலியன சிறந்த அணிகலன் களாகத் திகழ்கின்றன.

குறுந்தொகை விளக்கம்

சேதுசமஸ்தான மகாவித்துவான் ரா. இராகவையங்கார் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே ஆராய்ச்சித் துறைத் தலைவராய் விளங்கியபோது (1935-1941) முதுகலை பயிலும் மாணவர்களுக்குக் குறுந்தொகையைப் பாடம் சொல்ல வும் நேர்ந்தது. இலக்கியங்களை நன்கு கூர்ந்து கற்றுச் சுவைநலம் துய்க்கும் பண்பாளராகிய மகாவித்துவான் அவர்கள் குறுந் தொகையுள் சிற்சில புதிய ஏற்புடைப் பாடங்களையும் நயமான புதிய உரைகளையும் கண்டார்கள். தாம் கண்டவற்றை வகுத்து அமைத்ததே அவர்களுடைய 'குறுந்தொகை விளக்கம். இதில் முதற்கண் 112 பாடல்களுக்கு உரிய உரைவிளக்கமே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தாரால் 1946-ல் வெளியிடப் பெற்றது. ஏனைய பகுதிகளுக்குரிய இவர் உரை அச்சேறாமல் மாய்ந்தது தமிழுக்கு ஒரு பேரிழப்பே. எல்லாக் காலத்திலும் தமிழ் நூல்கள் சிலபல ஏதுக்களால் அழிவுற்றுவந்தன என்பதற்கு இவ்வுரையின் இழப்பும் ஒரு காட்டாகும்.

மகாவித்துவான் அவர்கள் எழுதிய விளக்கக் குறிப்புகள் முதற்படியாக எழுதப்பெற்ற நிலையில் அவர்களுடைய மாளிகை யிலிருந்து கிட்டியிருப்பதாக இப்பொழுது தக்கவர்களிடமிருந்து செய்தி தெரியவந்துள்ளது. இம் முதல் வரைவை அடியாக வைத்து நூல் முழுமைக்கும் இவர்தம் விளக்கத்தைக் கொண்டு வந்துவிட இயலும் எனக் கருதுகின்றனர். இதன் விளைவு இன்னும் சில காலத்தில் தெரியவரும்.

கழகப் பதிப்பு

1955-ல் பெருமழைப் புலவர் திரு. பொ. வே. சோமசுந்தரனார் எழுதிய உரையுடன் கூடிய ஒரு பதிப்பைத் திருநெல்வேலி

தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் கொண்டு வந்தனர். இதுவும் ஐயரவர்கள் பதிப்பை ஒட்டிய ஒரு விளக்க வுரைப் பதிப்பே.

இலக்கியச் செல்வ வரிசை

1957-ல் மர்ரே எஸ். ராஜம் என்பார் வெளியிட்ட 'இலக்கியச் செல்வம்' வரிசையில் குறுந்தொகை மூலப்பதிப்பு ஒன்று வந்தது. இஃது எளிதிற் சொற்களைப் புரிந்து பாடல்களைப் படிக்கும் வண்ணம் சந்தி பிரித்தும் பொருட்போக்கிற்கு ஏற்புடைய குறியீடு களைக் கொண்டும், சிறப்புப் பெயர் அகராதி முதலிய இன்றியமை யாத அகராதிகளுடனும் காணப்படுகிறது.

தெளிவுரைப் பதிப்பு

சங்க இலக்கியங்கள் முதலியவற்றிற்குத் தெளிவுரை எழுதி வெளியிட்டு வருபவராகிய புலியூர்க்கேசிகனின் குறுந்தொகைத் தெளிவுரை 1965-ல் முதல் முதலாக வெளிவந்தது. இஃது ஆய்வு நோக்கிலன்றி எல்லாரும் எளிதில் பெற்றுப் பயன்பெறும் வகையில் அமைந்த ஓர் எளிய உரைப்பதிப்பாகும்.

பழங்குறிப்புகள்

ஒவ்வொரு செய்யுளுக்கும் அவ்வவற்றின் உயிர்நிலைப் பொருளைத் தெரிவிப்பதான பழங்குறிப்புகள் உள்ளன. இவை தொகுத்தவராலேனும் அன்றிப் பிற்காலத்தவராலேனும் எழுதப் பட்டனவாகலாம். இவை பாடற் பொருளைத் தெளிய உதவுவனவாகும். சில பாடல்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துரைகளும் காணப்படுகின்றன. உரையாசிரியர்கள் மேற் கோளாக இந் நூற்பாடல்களைக் குறிப்பிட்டு உரைக்கும் கருத்து கள் பலவிடங்களில் பழைய குறிப்புகளினும் வேறுபட்டும் உள்ளன. சிற்சில இடங்களில் ஒத்தும் காணப்படுகின்றன.

பதிப்புகளில் பழங்குறிப்புகள்

பழங்குறிப்புகளைப் பாடலை அடுத்துத் தந்து, பாடிய புலவர் பெயரையும் தருவது ஏடுகளில் காணப்படும் முறையாகும். இம் முறை சோ. அருணாசல தேசிகர் மூலப்பதிப்பு, டாக்டர் உ. வே. சாமிநாதையர் உரைப்பதிப்பு ஆகியவற்றில் காணப்படு கின்றது.

முதற்பதிப்பாசிரியர் தாம் தேர்ந்தமைத்த ஐந்திணைப் பெயர் களைத் தந்து, அதனை அடுத்துப் பழங்குறிப்புகளைக் கொடுத்து,

அதற்கு விளக்கமும் கூறிப் பாடினார் பெயரைத் தந்து, பின் பாடலும் தமது புத்துரையுமாக எழுதியுள்ளார். மகாவித்துவான் ரா. இராகவையங்கார் புலவர் பெயரின் கீழ்ப் பாடலைத் தந்து, அடுத்துப் பழங்குறிப்பைக் கொடுத்துத் தம்முடைய விளக்கவுரையை அமைத்துள்ளார். பெருமழைப்புலவர் டாக்டர் ஐயர் அவர்களைப் போலக் கூற்றுத் தலைப்புத் தந்து, பழங் குறிப்பும் அதற்கு விளக்கமும் அமைத்துப் பின் பாடலும் பாடினார் பெயரும் கொடுத்து உரை எழுதுகிறார்.

திணைபற்றிய பாகுபாட்டுக் குறிப்பு அகநானூறு, ஐங்குறு நூறு முதலியவற்றிற் போலக் குறுந்தொகை, நற்றிணை நூல்களுக்குப் பழமையானதாக இல்லை. இவ்விரு நூல்களையும் முதல்முதல் பதிப்பித்த பதிப்பாசிரியர்கள்தாம் பாடலின்கண் அமைந்த கருப்பொருள், உரிப்பொருள்களைக் கருத்தில் கொண்டு திணைப்பாகுபாட்டுக் குறிப்புத் தந்துள்ளனர். டாக்டர் உ. வே. சாமிநாதையர் இப் பாகுபாட்டைக் கொள்ளாது கூற்று வகைப் பெயர்களைப் பாடல் தலைப்பாகத் தந்து பதிப்பித்துள் ளார். கூற்றுவகை தருவது ஒரு புதுமையே.

அகப்பாடல்கள் ஐந்திணைக் கூறுபாடுடைய வாதலின் திணைக் குறிப்பும் ஐயரவர்கள் சுட்டுவதுபோலக் கூற்றுவகைக் குறிப்பும் இப் பதிப்பில் தரப்பட்டுள்ளன. அடுத்துப் பாடலும் பாடினார் பெயரும் கொடுக்கப்பட்டுள்ளன. அதன்பின் பழைய குறிப்பைத் தந்து, பொழிப்புரையும் விளக்கங்களுமாக அமைக்கப் பட்டுள்ளன.

பாடலை அடுத்து ஆசிரியர் பெயரை அமைத்தது தொகுத்தார் காலத்துத் தரப்பட்ட குறிப்பாதலினாலாகும். பழங் குறிப்புரை ஆசிரியர் எழுதியதன்று. ஐயத்திற்கிடமாய்ப் பின்னர்ச் சேர்க்கப்பட்டிருக்கலாம் எனத் தெரிய வருவதால் பாடினார் பெயரின் பின் அமைக்கலாயிற்று. மேலும், பழங் கருத்துரையை அடுத்துப் புதிய உரை தொடர்வது பொருத்த மாகவும் மேலதற்கு விளக்கமாகவும் அமையும்.

பாடல் அமைப்பு

குறுந்தொகை நூலின் பாடல் தொகை கடவுள் வாழ்த்துப் பாடல் நீங்கலாக 401 ஆகும். நற்றிணை, அகநானூறு போலவே இதுவும் 400 செய்யுட்களாயிருத்தலே பொருத்தமுடையதாகும். 'குறுந்தொகை நானூறு' என்றே இறையனாரகப் பொருள் உரைகாரர் குறிப்பிடுகின்றார். இதனுள் 307, 391 ஆம் செய்யுட் கள் ஒன்பது அடிகள் கொண்டுள்ளன, எட்டடிப் பேரெல்லையைக்

கடந்த இந்த இரண்டு செய்யுட்களும் ஐயத்திற்கு இடமான
வையே. நற்றிணையில் முற்றும் காணப்பெறாத செய்யுள் இந்த
இரண்டனுள் ஒன்றாக இருக்குமோ என்று நினைக்கவும்
இடமுண்டு. 391 ஆம் செய்யுள் சில பாடவேறுபாடுகளுடன் எட்டு
அடியாகச் சில சுவடிகளில் எழுதப்பட்டுள்ளது என்றும், இதனை
எட்டு அடியாகக் கொண்ட போதிலும் 307 ஆம் செய்யுள் எல்லாச்
சுவடிகளிலும் ஒன்பது அடிகளை உடையதாக இருக்கிறது
என்றும், இந்தப் பாடலை (307) குறுந்தொகையுள் சேராது என்று
விலக்கின் 400 செய்யுட்கள் என்னும் வரையறை நிரம்பியதாகும்
என்றும் டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் கருதியுள்
ளார்கள்.

பெருமழைப்புலவர் பொ. வே. சோமசுந்தரனார் தாம்
வரைந்த உரைப் பதிப்பின் அணிந்துரையில், "இக் குறுந்தொகை
நூலின்கண் இற்றைநாள் நானூற்றொரு செய்யுட்களும் அவை
யிற்றுள் ஒன்பதடிப் பெருமையுடைய இரண்டு செய்யுட்களும்
(307, 391) காணப்படுகின்றன. ஒரு செய்யுளையும் மற்றொரு
செய்யுளின்கண் ஓரடியையும் இடையே செருகியதனால் ஏற்பட்ட
தாகும்" என்று அமைதி காண்கிறார். ஒன்பது அடிகளைக்
கொண்டதான இந்த இரண்டு பாடல்களும் மேலும் ஆராய்ச்சிக்கு
இடமானவையேயாகும்.

இப் பதிப்பில் பாடல்கள் எல்லாம் மரபுவழிச் சீர்முறை
அமைப்பிலேயே தரப்பட்டுள்ளன. ஆயினும் பாடல்களில்
பயின்ற சொற்களின் வடிவம் புலப்படும் வகையில் சந்தி பிரித்து
அமைக்கப்பட்டுள்ளன. அதனால் புலவர்க்கேயன்றி ஏனை
யோர்க்கும் பாடலை எளிதில் படித்தற்கு இயலும். சந்தி பிரித்த
தன்மையால் சிற்சில இடங்களில் எதுகை மோனை முதலிய
தொடையமைப்பில் மாறுபட்டிருப்பதுபோலத் தோற்றலாம்.
இலக்கண ஆய்வாளர்கள் இவ்விடங்களில் சந்தி பிரியா நிலையை
உளத்துட் கொண்டு நோக்குவார்களாயின் தொடையமைதிகளும்
தோற்றமளிக்கத் தட்டில்லை. எல்லார்க்கும் பயனாகும் வகை
யில் இத்தகு அமைப்புமுறையைத் தழுவியுள்ளோம் என்பதும்
ஈண்டுக் கருதற்பாலது.

பாவகை

ஆசிரியப் பாவால் இயன்ற அகப்பொருட் பாடல்கள்
தொகை நூல்களில் பெரும்பாலும் நேரிசை ஆசிரிப்பாவினா
லேமே பாடப்பெற்றுள்ளன. எனினும் நிலைமண்டில ஆசிரியப்
பாக்களும் அங்கொன்று இங்கொன்றாக இலைமறைகாய்போல்
சிற்சில உள்ளன. குறுந்தொகை நானூற்றில் 396 பாடல்கள்

நேரிசையாசிரியப்பாக்களே. 16, 18, 93, 113, 222 என்னும் எண் உள்ள ஐந்து பாடல்களும் நிலைமண்டில ஆசிரியப்பாக்களாம்.

கூன் பெற்ற பாடல்

குறுந்தொகைப் பாடல்களுள் சில கூன் எனப்படும் தனிச் சொல் பெற்றும் வந்துள்ளன. கூன் என்பதுபற்றி யாப்பருங்கலக் காரிகை தந்த அமிதசாகரர்,

'பொருளோடு அடிமுதல் நிற்பது
　　கூன்அது வேபொருந்தி
இருள்சேர்வு இலாவஞ்சி ஈற்றினும்
　　நிற்கும்..........' (யாப். காரிகை. 43)

என்று விளக்கம் தருகிறார். ஆகக் கூன் என்பது பாடலின் அடியளவுக்குமேல் வரும் அசையும் சீரும் ஆகும் என்பது தெளிவு. இஃது பாடலின் முதலில் வரும் என்றாலும் இடையிலும் வருகின்ற நிலையும் காணப்படுகிறது. இவ்வகையாகத் தரப்படும் தனிச்சொற்கள் பொருளுக்கு ஒரு தனி ஆற்றலையும் திருப் பத்தையும் சிறப்பு நிலைமையும் விளக்கிக் காட்டி நிற்கின்றன.

ஆசிரியர் தொல்காப்பியர் செய்யுளியலில்,

'அசைகூன் ஆகும் அவ்வ யினான.'
'சீர்கூன் ஆதல் நேரடிக் குரித்தே.'

என்னும் இருநூற்பாக்களில் (48, 49) இக் கூன் பற்றிய செய்திகளைத் தந்துள்ளார். நேரடி என்பது நாற்சீர் கொண்ட அளவடியைக் குறிக்கும். ஆசிரியப்பாக்களில் பெரும்பான்மையும் இந்த அளவடிகள்தாம் மிகுந்து காணப்பெறும். குறுந்தொகையில் பதினொரு பாடல்களில் (23, 34, 43, 81, 124, 169, 216, 292, 300, 309, 372) சீர் கூனாக வந்துள்ளது.

இவற்றுள் 81, 124, 372 எண் கொண்ட மூன்று பாடல்களிலும் தனிச்சொல் முதற்கண் காணப்படுகிறது. 216ஆம் பாடலில் முதலிலும் இடையிலும் தனிச்சொல் வருகின்றது. ஏனைய ஏழு பாடல்களிலும் பாடலின் இடையில் தனிச்சொல் வருதலைக் காணலாம்.

தனிச்சொல்லை அது எந்த அடியின் முதலில் வருகிறதோ அந்த அடியின் அங்கமாகக் கொண்டு பாடல் அடி கணக்கிடுவது வழக்கமாகும். முந்திய பதிப்பாசிரியர்கள் தனிச்சொற்களைக் காற்புள்ளி இட்டு அடியுடன் இணைத்துப் பதிப்பித்துள்ளனர். மிகையாக வரும் இத் தனிச்சொற்களை விளக்கமுற அமைத்துக் காட்டினாரில்லை. இப் பதிப்பில் தொல்காப்பியம் முதலிய

இலக்கண நூலார் கருத்தின்படி தனிச்சொற்கள் நன்கு புலப்படத் தனிப்பட அமைத்துக் காட்டப்பட்டுள்ளன. தனிச்சொற்களைத் தனியே நிறுத்திப் படிக்கின்றபோது பொருளின் தெளிவும் நன்கு புலப்படும். அன்றியும் பெரும்பாலும் எதுகையமைப்புத் தனிச் சொல்லை விடுத்தே முன்பின் வரும் அடிகளுள் தொடர்புபடவும் காணப்படுகிறது.

குறுந்தொகையின் பழைய உரை

குறுந்தொகைக்கான பழைய உரைகள் இரண்டு முன்னாளில் எழுந்தன என்பதற்கான சான்றுகள் உள்ளன. ஒன்று பேராசிரியரின் உரை; மற்றொன்று நச்சினார்க்கினியர் உரை. பேராசிரியர் இருபது பாடல் ஒழிந்த பிறபகுதிகளுக்கு உரை கண்டார் என்றும், அவர் விடுத்த இருபது பாடல்களுக்கு நச்சினார்க்கினியர் பின்னாளில் உரைவரைந்தனர் என்றும் தெரிய வருகின்றது.

'நல்லறி வுடைய தொல்பே ராசான்
கல்வியும் காட்சியும் காசினி அறிய
பொருள்தெரி குறுந்தொகை இருபது பாட்டிற்கு
இதுபொருள் என்றுஅவன் எழுதாதொழிய
இதுபொருள் என்றுஅதற்கு ஏற்ப உரைத்தும்'

எனவரும் நச்சினார்க்கினியரின் உரைப்பாயிரப்பகுதி மேலதற்குச் சான்றாகும். இச் செய்தியை,

'பாரத்தொல் காப்பியமும் பத்துப்பாட் டுங்கலியும்
ஆரக் குறுந்தொகையுள் ஐஞ்ஞான்கும் — சாரத்
திருத்தகு மாமுனிசெய் சிந்தா மணியும்
விருத்திநச்சி னார்க்கினிய மே'

எனவரும் வெண்பாவும் தெரிவிக்கின்றது.

பேராசிரியர் குறுந்தொகைக்கு உரைகண்டார் என்பதற்கு நச்சினார்க்கினியரின் உரைச்சான்றும் உள்ளது. தொல்காப்பிய அகத்திணையியல்,

'உள்ளுறை உவமம் ஏனை உவமம் எனத்
தள்ளா தாகும் திணையுணர் வகையே'

என்னும் 46ஆம் நூற்பா உரையில்,

'யானே ஈண்டை யேனே' (குறுந். 54) என்பதனை எடுத்துக் காட்டி, "பேராசிரியரும் இப் பாட்டில் மீனெறி தூண்டில் என்பதனை ஏனை உவமம் என்றார்" எனக் குறிப்பிட்டுள்ளார். ஆகவே, குறுந்தொகைக்குப் பேராசிரியர் பேருரை கண்டிருந்தார் என்பது தெளிவாகத் தெரியவரும்.

பேராசிரியர் உரை எழுதா இருபது பாடல்

பேராசிரியர் உரை எழுதாது விடுத்த இருபது பாடல்கள் எவையாக இருக்கலாம் என்பதில் இருவேறு கருத்துகள் காணப் படுகின்றன. டாக்டர் ஐயர் அவர்கள்.

> "அவர் உரை எழுதாது விடுத்த இருபது செய்யுட்கள் பின் இருபது செய்யுட்களாக இருத்தல் கூடும். இடையிடையே பொருள் தோற்றாமல்விட்ட செய்யுட்கள் எனக் கொள்ளுதல் நல்லறிவுடைய தொல் பேராசானாகிய அவரது பெருமைக்கு இழுக்காகும். அவர்தம் முதுமையில் குறுந்தொகைக்கு உரை எழுதத் தொடங்கி 380 செய்யுட்களுக்கு எழுதி முடித்த பின்னர் நோய்வாய்ப்பட்டதாலோ பிற காரணத்தாலோ மேல் எழுத இயலா நிலையை அடைந்தனர் என்றே கொள் ளுதல் ஏற்புடைத்தாகும். பிற்காலத்தில் நச்சினார்க்கினியர் அவ்வரிய உரையைப் பின்பற்றி அதற்கேற்ப எஞ்சிய செய்யுட்களுக்கு உரை எழுதியிருத்தல் கூடும்"
>
> (குறுந்தொகைப் பதிப்பு, முகவுரை பக். 8)

என்று குறித்துள்ளார்கள். பேராசிரியர் ச. வையாபுரிப்பிள்ளை யவர்கள் பிறிதொரு காரணமும் கருதியுரைத்துள்ளார்கள். அவர் கள் உரை வருமாறு:

> "பேராசிரியர் 20 செய்யுட்களுக்கு ஏன் பொருள் எழுதாது விடுத்தனர் என்ற கேள்வி நமக்கு எழுதல் இயல்பே. அதற்குரிய விடையை நாம் ஆராய்ந்து தெரிவதில் பயன் யாதுமில்லை. குறுந்தொகைப் பதிப்பாசிரியராகிய ஸ்ரீ ஐயரவர்கள் ஒரு காரணத்தைத் தம் பதிப்புரையில் காட்டி யிருக்கின்றார்கள். அக் காரணத்தை ஒப்புக்கொள்ளுதலில் எவ்வகைத் தடையும் தோன்றவில்லை. அதைப் போன்ற ஒத்த தகுதியுடைய வேறொரு காரணமும் கூறுதல் கூடும். உரைகாரர்கள் பொருள் வெளிப்படையெனத் தாம் கருதுஞ் செய்யுட்களுக்கு உரையெழுதாது விடுதல் மரபு. ஐங்குறு நூற்றிற் பல செய்யுட்களுக்கு உரையின்மையும் ஈண்டு நோக்கத் தக்கது. இங்ஙனம் தாம் வெளிப்படை எனக் கருதிய 20 செய்யுட்களுக்கு உரை வரையாது விடுத்திருப்ப, அவற்றின் அருமைப்பாட்டினை உணர்ந்து நச்சினார்க்கினியர் தம் புலமையெல்லாம் தோன்ற உரை எழுதினார் எனக் கொள்ளுதலும் அமையும்." (இலக்கிய தீபம் - பக், 90)

இருபது பாடல்களுக்கு உரை எழுதாது விடுத்த காரணம் எதுவாயினும் பேராசிரியர் உரை எழுதினார் என்பதில்

ஐயமில்லை. நச்சினார்க்கினியர் அவருடைய உரையின் அருமைப்பாட்டை உணர்ந்து குறையை நிரப்பியதும் ஏற்புடையதே. இவ்விரு பேராசிரியர்களின் உரைகளும் இன்று கிட்டாமற் போய்விட்டன. இவ்விழப்பை நினைந்து வருந்துதல் அன்றி வேறு யாது செய்தல் இயலும்? வருந்துவதோடு நாம் அமைந்துவிட வேண்டுவதுதான்.

பாட வேறுபாடுகள்

குறுந்தொகைப் பாடல்களை உரையாசிரியர்கள் மிகவும் அதிகமாக எடுத்து மேற்கோள் காட்டியுள்ளனர். இந் நூலின் மேற்கோளாட்சி குறித்து டாக்டர் ஐயரவர்கள் குறிப்பிடும் போது,

> "ஏனைய தொகை நூல்களைக் காட்டிலும் குறுந் தொகையே மிகுதியாக எடுத்தாளப்படுகின்றது. இதனால் இத் தொகை நூற் செய்யுட்களில் உரையாசிரியர் கருத்துக்கள் பெரிதும் ஈடுபட்டிருந்தன என்று தெரி கின்றது. இந் நூலுள் இப்பொழுது தெரிந்த வரையில் 165 செய்யுட்களே பிற நூல்களில் மேற்கோளாகக் காட்டப் பெறாதவை"

என்று எடுத்துரைத்துள்ளார்கள். எனவே, குறுந்தொகை பலராலும் விரும்பிக் கற்கப்பெற்றது என்பதும் அதனால் பாட வேறுபாடுகள் பல நிகழ்தற்கு இடமாயிற்று என்பதும் தெரிய வரும்.

குறுந்தொகைச் சுவடிகளில் காணும் பாடங்களுக்கு வேறு பாடான பாடங்கள் பல உரையாசிரியர்கள் எடுத்துக் காட்டும் மேற்கோட் பகுதிகளிலும் காணப்பெறுகின்றன. குறுந்தொகையில் பாடவேறுபாடுகள் இந்நூற் சுவடிகளிலிருந்தும் உரையாசிரியர் களின் மேற்கோட் பகுதிகளிலிருந்தும் எடுக்கப்பெற்றன. குறுந் தொகைப் பதிப்பாசிரியர்கள் இவ்வாறான வழிகளை மேற் கொண்டு பாடவேறுபாடுகளைத் தொகுத்துத் தந்துள்ளனர்.

இந்தப் பதிப்பிற்கு இதற்கு முன் வந்த பதிப்புகள் எல்லாம் ஒப்பு நோக்கப் பெற்றன. இதற்கு முன் ஏனையோர் பயன்படுத் தாத சுவடிகள் சிலவும் கிட்டின. கிட்டியன எல்லாம் காகிதச் சுவடிகளே. அவற்றுள் ஒன்று இலண்டன் பிரிட்டிஷ் அருங்காட்சி யகத்திலிருந்து வரவழைக்கப்பெற்றது. அது 118 பக்கம் கொண்டது. டாக்டர் பர்னல் துரையின் தூண்டுதலால் 1884ஆம் ஆண்டு எழுதப்பெற்று, அவருடைய தமிழாசிரியர் மதுரை முத்துப் பிள்ளையால் பார்வையிடப் பெற்றது. அதனை பர்னல் துரை

இலண்டன் அருங்காட்சியகத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். இச் சுவடி மதுரைப் பகுதியில் கிட்டிய ஓர் ஏடு பார்த்து எழுதப் பெற்ற தாதல் வேண்டும்.

மற்றொரு சுவடி மகாவித்துவான் ரா. இராகவையங்காரால் பெயர்த்து எழுதப்பெற்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு அளிக்கப் பெற்றதாகும். இக் காகிதச் சுவடி 1899 ஆம் ஆண்டில் மகாவித்துவான் அவர்களால் எழுதப் பெற்றது என்பது அச் சுவடிக் குறிப்பினால் தெரியவருகிறது.

திரு. அடிகளாசிரியர்வழிக் கிட்டிய குறுந்தொகைக் காகிதச் சுவடி 226 பாடல்கள் வரையுள்ள குறைச்சுவடியாகும். இஃது ஏட்டுச்சுவடியின் வடிவில் அமைக்கப்பெற்று, இருபத்தியாகப் பாடல்கள் ஒவ்வொன்றும் முழுமையாய் அடிவரையறையுடன் அமையுமாறு எழுதப்பெற்றதாகும்.

இச் சுவடிகளேயன்றி இராமசாமிபுரம் மூவரையர் வண்ணம் பாடிய பூண்டியப்பப் புலவர் ஏடு பார்த்துப் பேராசிரியர் இரா. கந்தசாமியாரால் திருத்தப் பெற்ற முதற்பதிப்புப் படியைப் பார்த்துப் பாடவேறுபாடுகள் முற்றுமாய்க் குறிக்கப்பெற்றன. தம்மிடம் உள்ள இந்த அரிய புத்தகத்தை மதுரை இரா. இளங் குமரன் அவர்கள் தந்து உதவினார்கள்.

இலண்டன் காகிதப் படியுடன் டாக்டர். உ. வே. சாமி நாதையர் அவர்களின் குறுந்தொகை முதற்பதிப்பை வைத்து ஒப்பு நோக்கியபோது 24, 25, 26, 32, 355 ஆகிய ஐந்து பாடல்களுக் குரிய ஆசிரியர் பெயர்கள் தெரியவந்தன. பின்னர் ஐயர் அவர் களின் பதிப்பை ஆழ்ந்து ஆராய்ந்து பார்த்ததில் இந்தப் பாடல் களுக்குரிய ஆசிரியர் பெயர் அச்சிடுங்காலத்து எப்படியோ தவற விடப்பட்டது என்பது தெரியவந்தது. முதற்பதிப்பில் உள்ள பாடினோர் பெயர் அகராதியில் இப்பாடல்களைப் பாடிய பரணர், கபிலர், வெளிவீதியார், அள்ளூர் நன்முல்லை, கபிலர் என்னும் புலவர் பெயர்களை அடுத்து இப் பாடல் எண்களைத் தந்துள்ளார். ஐயரவர்களின் பிற்பதிப்பில் இப் பாடல்களுக்கும் ஆசிரியர் பெயர் இட்டு நிரப்பப் பெற்றமையும் தெரியவந்தது.

சுவடிகளுக்குள் புலவர் பெயர்களில் சிற்சில விகுதி வேறுபாடு களால் பெயர் வேறுபடுதல் போலத் தோன்றும் இடங்கள் சில உள. ஆசிரியர் வரிசையில் பதிப்பிக்கப்பட்டுள்ள சங்க இலக்கியத் தொகுதியில் ஆசிரியர் பெயர்கள் ஒருவாறு வரையறை செய்யப் பட்டுள்ளன. ஆகவே சங்க இலக்கியத்தில் காண்கிறபடி ஆசிரியர் பெயர்கள் அமைத்துக் கொள்ளப்பெற்றன.

புதிதாகக் கிட்டிய நான்கு சுவடிகளையும் முந்திய பதிப்பு களையும் ஒப்புநோக்கிப் பாடவேறுபாடுகள் தொகுக்கப்பட்டுள் ளன. ஒப்புநோக்கி உண்மைப் பாடம் காண்பதற்குப் பயன்படும் வகையில் வகையில் அவையெல்லாம் அட்டவணைப்படுத்திக் தரப்பெற்றுள்ளன. இப் பாடவேறுபாடு - ஒப்பு நோக்குப் அட்டவணை பின்னிணைப்பாக இப் பதிப்பில் சேர்க்க பெற்றுள்ளது (பக். 363-561).

புதிய பாடங்கள்

இந்தப் புதிய பதிப்பில் பாடவேறுபாடுகளை யெல்லாம் ஆய்ந்து நோக்கிப் புதிய பாடங்களும் சிற்சில பாடல்களில் கொள்ளப்பெற்றன. அவை பாடலின் இசைப்போக்கு, பொருளின் பொருத்தம், இலக்கண அமைதி, உரையாசிரியர் மேற்கோளாட்சி, இலக்கிய ஆட்சி போன்ற ஏதுக்களை அடியாகக் கொண்டு திருத்தமான பாடங்களாகத் தேர்வு செய்யப்பெற்றன. புதிய பாடங்களைத் தேர்ந்தமைக்கான ஏதுக்களை விளக்கு முகத்தான் சிற்சில எடுத்துக்காட்டுகளை ஈண்டு நோக்குவோம்.

கடவுள் வாழ்த்துப் பாடலில், 'அஞ்சுடர் நெடுவேல்' என்பது முந்திய பாடம். இப்பொழுது தேர்ந்தெடுத்த பாடம் 'செஞ்சுடர் நெடுவேல்' என்பது. சேவடி, மேனி, உடுக்கை என்பன செந்நிற மாக வருணிக்கப்படுதலின் வேலும், 'செஞ்சுடர் நெடுவேல்' என்று கொள்வது பொருத்தம். 'குன்றின் நெஞ்சு பக எறிந்த வேல்' என்பதனானும், முதற்பாட்டில், 'செங்கோல் அம்பு' என முருகனது அம்பு குறிக்கப்படுதலினானும் இப் பாடமே ஏற்புடைத்து எனத் துணியப் பெற்றது. பிற சங்க நூல்களுள் ஒன்றாகிய திருமுருகாற்றுப்படையில், 'செவ்வேற் சேஎய்' (61) என முருகன் சிறப்பிக்கப்பட்டுள்ளார். 'சூர் கொன்ற செவ்வேலாற் பாடி' என்பது கலித்தொகை (93 : 26). மன்னரின் வேலையும் 'செவ்வேல்' என்று குறிப்பிடும் மரபு சங்க நூல்களிற் காணப்படு கிறது: 'செவ்வேல் வயவன்' (நற். 260 : 6), 'செவ்வேல் மலையன்' (குறுந். 312 : 2), 'செவ்வேல் முள்ளூர் மன்னன்' (அகம். 209 : 11 - 12). இவற்றையும் ஒப்பு நோக்கின், மேற்கூறிய தன் உண்மை புலனாம்.

'பறைபட' எனத் தொடங்கும் 15ஆம் பாடலின் 5ஆம் அடியில் உள்ள இருசீர்களும், 'செயலை வெள்வேல்,' 'சேயிலை வெள்வேல்' என இருவகையாகப் படித்தற்கியலும் வகையில் சுவடி நிலை உள்ளது. இது படிக்குங்கால் நேரும் குறில் நெடில் கொம்பு வேறுபாட்டால் நேர்வது, சேயிலை வெள்வேல் எனப் பாடங் கொண்டு இரண்டு அடைகளும் நிறம் பற்றியன என உரை

கண்டனர் முற்பதிப்பாசிரியருட் சிலர். மேற்குறித்தபடி இருவகையாகப் படிக்கலாமாயினும், 'செயலை வெள்வேல்' என்பது அடுத்த அடிமுதலில் வரும் 'தொகுவளை' என்பதற்கு ஏற்புடைய மோனைநயம் வாய்ந்த பாடமாம். செயலை என்பது அசோகு. இங்கே அசோகின் இலை போன்ற வடிவுடையது என்றாம். இப் பாடத்தால் முன் அடை வடிவத்தையும் பின் அடை வண்ணத்தையும் குறிப்பதாக அமைதல் காணலாம். 'புதுவது புனைந்த செயலை வெள்வேல்' என்னும் அகநானூற்றுத் தொடரும் (221 : 5) ஈண்டு ஒப்புநோக்கத் தக்கது.

24ஆம் பாடலில், 'எழுகுளிறு மிதித்த,' 'எழு குளிர் மிதித்த' எனப் பாடங் கொள்வாரும் உளர். குளிறு, குளிர் என்பன நண்டைக் குறிக்கும் சொற்களாம். நண்டுகள் பொருள்களைக் கால்களால் பற்றி உருட்டுமேயல்லது மிதித்தல் இல்லை. ஆகவே, 'நண்டு மிதித்த' என்பது மரபன்று. யானை முதலிய விலங்குகள் பொருள்களைக் காலால் நசுக்குவதை மிதித்தல் என்று கூறுவதே பெருவழக்கு. எழு களிறு என்பதற்கு ஏழு களிறு என்று பொருள் கொள்ளுதலும் பொருந்தாது. ஒரு களிறு மிதித்தாலே அத்திப் பழம் குழைந்துவிடும். ஆகவே இங்கு எழுகளிறு என்பதற்கு எழுந்து வருகின்ற ஆண்யானை என்று கொள்வதே பொருத்தமாம். முதற் பதிப்பாசிரியர், 'எழுகின்ற களிறு' என்றும், கலா நிலைய உரைகாரரும் இப் பாடமே கொண்டு, 'ஆற்று நீராடி எழுந்த ஆண் யானை' என்றும் பொருள் தருகின்றனர். எனவே, 'எழுகளிறு மிதித்த' என்பதே இங்குச் சிறப்பான பாடமாகும்.

52ஆம் பாடலில், 'ஆர் களிறு மிதித்த நீர்திகழ் சிலம்பில்' என்பதற்கு 'யானை மிதித்தலால் ஏற்பட்ட பள்ளத்தில் தங்கிய நீர் விளங்கும் மலையிலே' என்று விளக்கம் தருகின்றனர். மலைமேல் யானை மிதித்ததனால் பெரும் பள்ளமாதல் என்பது இயற்கையன்று. 'ஆர்கலி மிதித்த' என்னும் பாடமே ஏற்புடைய பாடம் எனக் கருதத் தக்கது. 'ஆர்கலி' என்பது வெள்ளம் என்னும் பொருள்தருவதாகும். 'ஆர்கலி முனைஇய' என்னும் நெடுநல்வாடைத் தொடருக்கு (3) வெள்ளத்தை வெறுத்த என நச்சினார்க்கினியர் பொருள் தருகின்றார். எனவே, 'ஆர்கலி மிதித்த' என்றால், 'வெள்ளம் பாய்ந்தோடியதனால்' என்பது பொருளாகும்.

93ஆம் பாடலின் ஈற்றயலடியை, 'அன்னையும் அத்தனும் அல்லரோ' என முச்சீராகக் கொண்டனர் சிலர். ஆயின், ஏடுகளில், 'அன்னையும் அத்தனும் அல்லரோ தோழி' என நாற்சீர் கொண்ட பாடம் காணப்படுகிறது. சங்கப் பாடல்களில் நேரிசை

யாசிரியப்பா மிகுந்து காணப்படுவதளால் முச்சீராகக் கொண்டனரோ என்று எண்ண இடமாகிறது. இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் 'அன்னையும் அத்தனும் அல்லரோ தோழி' என நாற்சீரடியாகவே கொண்டு மேற்கோள் காட்டியுள்ளனர். எனவே, இப் பதிப்பிலும் நாற்சீரடியாகவே கொள்ளப்பெற்றது.

244ஆம் பாடலின் மூன்றாம் அடி, 'கேளேம் அல்லேம் கேட்டனம் பெரும' என்று பதிப்புகளில் காணப்படுறது. இங்கே கேட்டனம் என்பதில் அம் என்பது தன்மைப் பன்மையைச் சுட்டு மாயினும், 'கேளேம் பெரும' என வருதற்கு ஒப்ப, 'கேட்டனெம்' என எம் விகுதி கொண்ட பாடம் ஏற்றுக் கொள்ளப் பெற்றது.

'பொத்து இல் காழ' எனத் தொடங்கும் 255ஆம் பாடலின் 6ஆம் அடித் தொடக்கத்தில், 'தம் கடன்' என்றும், 8ஆம் அடித் தொடக்கத்தில் 'நாம்வெம்' என்றும் பாடம் கொண்டுள்ளனர். இப் பாடலின் அமைப்பைக் கூர்ந்து நோக்குமிடத்து முழுமையும் இரண்டிரண்டடிகள் ஒத்த எதுகையவாய் வரும் தன்மை புலப்படு கிறது. எனவே, தம் கடன் என்பதற்கு மாற்றாகக் 'கடன் கடன்' என இரட்டித்து வரும் பாடம் கொள்ளப்பெற்றது: 'கடன் கடன்' என்றால் கடமை எல்லாவற்றையும் சுட்டும். இப் பாடம் மேலடியில் வரும் 'தடமருப்பு' என்பதனோடு ஒத்த எதுகையுடைய பாடமும் ஆகும். அந்த அடியில்தானே 'இடந் தொறும்' எனவரும் 4ஆம் சீர்க்கு ஏற்புடைய எதுகை நயத்த தாகவும் அமைகிறது. ஈற்றடியில் 'நாமஎம்' என்னும் பாடம் தலைவன் சென்ற ஆற்றின் அருமையை வெளிப்படுத்தும் பொருட் சிறப்புடையதாயும், முன்னடியில் வரும் 'காமர்' என்பதற்கு ஏற்ற தொடையமைதி யுடையதாயும் அமைகிறது. இப் பாடங்களால் ஈரடி ஓர் எதுகை கொண்டு அமையும் இப் பாடலின் வடிவும் நிரம்புகிறது. தொடையமைதிக்கும் பொருள் தெளிவிற்கும் ஏற்புடையவை இவையேயாதலின் இப் பாடங்கள் எடுத்துக் கொள்ளப் பெற்றன.

287ஆம் பாட்டு முழுமையும் மேகத்தின் எழுச்சி பற்றிய சித்திரமாகும். அசைஇ, கொண்டு, புணரி, நோக்கி ஏர்தரும் பொழுது என்பது வினைமுடிபு ஆகும். இங்ஙனம், இருக்கவும் 'முந்நால் திங்கள்' எனப் பாடம் கொண்டு அசைஇ என்பதைச் சூல் மகளிர்க்கு ஏற்றி உரைப்பது சற்றும் பொருந்தாது. 'முந்நாள் திங்கள்' என்பது நீர்கொள்ளுமுன் காணும் வெண்ணிற மேகத் திற்கு ஒப்புக்கூறப் பெற்றதாம். ஏடுகளில் காணும் பாடமும் 'முந்நாள் திங்கள்' என்பதே. எனவே, இப் பாடமே இங்குப் பொருத்தமாகப் பாடற் பொருளுக்கு ஏற்புடையதாய் இருத்தலின் கொள்ளப்பெற்றது.

ஞெகிழ்தல் — நெகிழ்தல் என்றாற் போல ஞகர நகர முதலெழுத்துச் சொற்கள் மாறிவருதலும், அமிழ்தம், அமிர்தம், அமுதம் என்னும் ஒருபொருட் சொற்களின் வடிவ மாற்றங்களும், முன்பனிக் காலத்தைக் குறிக்கும் அற்சிரம் — அச்சிரம் என்னும் வடிவங்களும், வெயிலின் வெம்மை மிக்க பொழுதினைக் குறித்து வரும் வேனில் — வேனல் என்பனவும் சுவடி மாறுபாடுகளாகப் பலவிடத்தும் வருகின்றன. இவற்றுள் பாடற்பகுதியின் ஓசையும் பொருளும் கருதி ஏற்புடைய வடிவங்கள் இடமறிந்து ஏற்றுக் கொள்ளப்பெற்றன.

இவ்வாறாகப் பற்பல பாடங்கள் பாடல்களின் அமைப்பு நோக்கியும், அவற்றின் பொருட் போக்கினை உட்கொண்டும், இலக்கிய இலக்கண மரபு கருதியும் ஏனைய பதிப்புகளில் இல்லாது இப் பதிப்பில் புதியனவாய்த் தேர்ந்து கொள்ளப்பெற்றன. இவற்றைத் தேர்ந்தெடுத்தற்கான ஏதுக்களும் அங்கங்கே உரிய இடங்களில் சுட்டி விளக்கப்பெற்றுள்ளன. எடுத்துக் காட்டாக மேலே சுட்டிய எட்டும் உளப்பட 131 புதிய பாடங்கள் இப் பதிப்பில் தேர்ந்து கொள்ளப் பெற்றன. இவற்றைப் பின்வரும் அட்டவணையுள் காணலாம்.*

அடி நிரம்புகை

குறுந்தொகை 266ஆம் பாடலிலும் 394ஆம் பாடலிலும் டாக்டர் உ. வே. சாமிநாதையர் பதிப்பில் விடுபட்டிருந்த அடிகள் இப் பதிப்பில் நிரப்பப்பெற்றன. முதற்பதிப்பாசிரியர் சௌரிப் பெருமாள் அரங்கன் 266ஆம் பாடலில் குறையுளது என்பது கண்டு, "இப் பாட்டு ஆறடியினதாதல் உணர ஒரு பிரதியில் 4,5 அடிகளுக்கு இடம் விடப்பட்டிருக்கிறது" என்று குறிப்பு எழுதியிருக்கின்றார். அதற்குப் பின்வந்த பதிப்பாசிரியர்கள் இப் பாடலில் அவர் சுட்டிய குறைபற்றிய செய்தியைக் குறிப்பிடாது ஒருவகையாக உரை வரைந்தும் சென்றனர். பேராசிரியர் ச. வையாபுரிப் பிள்ளையவர்கள் குறுந்தொகையை ஆராய்ந்து வந்தபொழுது அப்பாடலில் ஓர் அடியே விடுபட்டிருந்தது என்னும் உண்மையைக் கண்டு கொண்டார்கள். அது, 'மறப்பரும் பணைத் தோள் மரீஇ' என வரும் 4ஆம் அடியாகும். இச் செய்தியை 1938ஆம் ஆண்டில் வெளிவந்த 'கரந்தைக் கட்டுரை' என்னும் தொகுதியில் குறுந்தொகை பற்றித் தாம் எழுதிய ஆய்வுரையில் குறிப்பிட்டிருந்தார்கள். இதன்பின் 1940-ல் அவர்கள் பதிப்பித்த சங்கஇலக்கியப் பதிப்பில் இந்த அடியுடன் 266ஆம் பாடலை 5

---

* இதனை முகவுரை இணைப்பு 4-ல் காண்க.

அடிப் பாடலாகத் தந்தார்கள். இப்பொழுது எமக்குக் கிடைத்த இரு பழம் சுவடிகளில் இவ்வடியுடனேயே பாடல் அமைந்திருக்கக் கண்டோம். அவர்கள் கொண்டவாறே 5 அடிப் பாடலாக இப் பதிப்பிலும் அமைத்துள்ளோம்.

394ஆம் பாடலின் 4ஆம் அடியாகக் 'கூரை முற்றும் சாரனாடன்' என்பது சில சுவடிகளில் காணப்படவே முதற் பதிப்பாசிரியர் குறிப்பிட்டுள்ளார். டாக்டர் உ. வே. சாமிநாதையர் இந்த அடியை அடிக் குறிப்பில் சுட்டிக் காட்டியுள்ளார். பின் வரும் 'முன்நாள்' எனத் தொடங்கும் அடியை நோக்க இதனைக் 'கூரை முற்றும் சாரல் நாடல்' என்று படித்தல் வேண்டும் என்பது புலனாகும். அவ்வாறு கொள்ளும் போது அதில் குறிப்பிடப் பெறும் யானைக் கன்றின் செய்கை தொடர்புற அமைகிறது. ஏடுகள் பெரும்பாலனவற்றில் இவ்வடி உள்ளது. எனவே, இப் பதிப்பில் 4ஆம் அடியாக இஃது இணைத்துக் கொள்ளப்பெற்றது.

பதிப்புகளிடையே பாடவேறுபாடு

டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களுடைய குறுந்தொகைப் பதிப்பு அதற்கு முன்வந்த நான்கு பதிப்புகளை விடவும் திருத்தமுற அமைந்த பதிப்பு ஆகும். முந்திய பதிப்பாசிரியர்களும் சுவடிகள் நோக்கிப் பாடங்களைத் தேர்ந்து கொள்வதில் ஒருவர்க்கொருவர் மேம்பட்டுக் காணப்படுகின்றனர். ஐயரவர்கள் பாடபேதங்களைப் பெருமளவில் தந்துள்ளதோடு பாடத் தேர்விலும் முந்தையரினும் சிறப்புற அமைத்துள்ளார். விளக்கமான அகலவுரை வரைந்திருப்பது இவர் பதிப்பின் தனிச் சிறப்பு. இவர்கள் காட்டிய பாட்வேறுபாடுகள் தவிர எமக்குக் கிடைத்த சுவடிகளில் மேலும் பல வேறுபாடுகள் காணப்பெற்றன. இங்ஙனமே சங்கஇலக்கியப் பதிப்பிலும் சுவடிகளின் துணைகொண்டு வேறுபாடுகள் பலவற்றைக் கண்டனர். ஐயரவர்கள் பதிப்பிற்குப்பின் சுவடிகளின் அடிப்படையில் பாடவேறுபாடுகளைக் கூர்ந்து நோக்கி ஏற்புடைய பாடங்களைத் தேர்ந்தெடுத்து அமைத்துள்ள பதிப்பு சங்கஇலக்கியப் பதிப்பு. இப் பதிப்புடன் ஐயரவர்கள் பதிப்பினை ஒப்பு நோக்கிய போது 234 இடங்களில் புதிய பாடங்களைப் பதிப்பாசிரியர் கொண்டிருப்பது தெரிய வந்தது.[1] தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் வழி வெளிவரும் இப் பதிப்பு டாக்டர் ஐயரவர்கள் பதிப்பிலிருந்து 260 இடங்களில் வேறுபட்டுப் புதிய பாடங்களைத் தருகின்றது.[2] சங்கஇலக்கியப் பதிப்பிற்கும் தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிப்பிற்கும் 225 இடங்கள் வேறுபடு

1, 2, 3, 4, 5, இவற்றின் விவரத்தை முகவுரையின் இணைப்பில் காண்க.

கின்றன.[3] டாக்டர் ஐயர் அவர்கள் பதிப்பிலும் சங்கஇலக்கியப் பதிப்பிலும் இடம் பெறாத 131 புதிய பாடங்கள் இப் பதிப்பில் இடம் பெற்றுள்ளன.[4] இப் பாடங்களைத் தேர்ந்தமைக்கான ஏதுக்களை உரிய இடங்களிகளில் விளக்கியிருத்தல் காணலாம். குறுந்தொகை இலக்கியத் தொடர்பான சில புள்ளி விவரங்கள் இறுதி இணைப்பாக வைக்கப்பட்டுள்ளன.[5] புதிய ஏட்டுச் சுவடி களும் முந்திய பதிப்பாசிரியர்களின் பதிப்புகளும் இவ்வகையில் புதிய பாடங்களை ஆய்ந்து கொள்வதற்குத் துணையாக அமைந்தன. இவற்றை உதவியவர்களுக்கு நன்றி பாராட்டும் கடப்பாடுடையேம்.

புத்துரை அமைப்பு

"பழைய உரைகளினுடைய திட்பத்தைப் பாதுகாத்து இக் காலத்தார் எளிதில் அறியக்கூடிய நடையில் இந் நாளைய புத்துரை அமைதல் வேண்டும்" என்னும் ஒரு கருத்து சங்கஇலக்கிய முதற்பதிப்பு முகவுரையில் காணப்படுகிறது. பாடலின் பொருள் செவ்விதின் புலப்படும் வகையில் விளக்கத்திற்கு இன்றியமையாத குறிப்புகள் இருந்தால் போதும் என்றும் சிலர் கருதிப் பண்டை இலக்கிய அரும்பதவுரைகளைச் சான்றாகக் காட்டுவர்.

குறுந்தொகைப் பாடல்களுக்குப் பழைய உரைகாரர்களின் போக்கினை அடியொற்றிப் பொழிப்புரையாக எழுதப் பெற்றிருக் கிறது. இப் புத்துரை பாடலின் பொருள்கோள்நிலை தழுவி அமைக்கப்பட்டுள்ளது. பாடலின் பொழிப்புத்திரட்டினை அடுத்து அதனால் வெளிப்படும் உயிர் நிலையான கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்பின் அருஞ்சொற்பொருள், இலக்கணக் குறிப்புகள் தரப்பட்டுள்ளன. பல இடங்களில் பாட வேறுபாட்டுக் குறிப்பு, தேர்ந்த பாடம் பற்றிய அமைவுரை முதலியனவும் காணலாகும். உள்ளுறை உவமம், இறைச்சிப் பொருள் அமைந்த பாடல்களில் அவ்வப் பொருள்கள் விளக்கமுறத் தரப்பட்டுள்ளன. தொல்காப்பிய உரைகாரர் முதலிய பண்டை உரைகாரர் இந் நூற் செய்யுட்களை மேற்கோளாக எடுத்துக் காட்டிய அகப்பொருள் துறை பற்றிய செய்திகளும் உரை இறுதி யில் சேர்க்கப்பட்டுள்ளன.

பின்-இணைப்புகள்

இவ்வுரை நூலின் பின்-இணைப்புகளாகப் பின்வருவன தரப்பட்டுள்ளன. குறுந்தொகைப் பாடவேறுபடுகள் அனைத்தை யும் ஒப்புநோக்கிக் காணும் வகையில் தரப்பட்டுள்ள குறுந்

தொகைப் பாடவேறுபாடு - ஒப்புநோக்கு அட்டவணை ஒரு தனிச் சிறப்புப் பகுதியாகும். மேலும், செய்யுள் முதற்குறிப்பு அகராதி, பாடினோரும் பாடற்குறிப்பும், பாடலில் சுட்டப் பெற்றோர் விவரம், திணைபற்றிய குறிப்பு, கூற்றுவகை விளக்கம், சொல்லடைவு, தொடரடைவு, என்பனவும் தரப்பட்டுள்ளன, இவற்றுள் சொல்லடைவில் நால்வகைச் சொற்களும் அவற்றின் ஆட்சியைப் புலப்படுத்தும் எண் குறிப்புடன் தரப்பெற்றுள்ளன.

தொடரடைவின் அமைப்பும் பயனும்

தொடரடைவில் பாடல்களில் காணும் தொடர் அடைவு நிலைகள் பொருள் விளங்கும் வகையில் எடுத்துத் தரப் பட்டுள்ளன. தொடரடைவு இப் பதிப்பில் ஒரு புதுமையான இணைப்பாகும். சங்க இலக்கிய நடைமை நன்கு அறிய அவற்றில் பயின்று வந்துள்ள தொடர்களின் அமைப்புகள் ஆராயப்பட வேண்டும். அகப்பொருள், புறப்பொருள் தொடர்பான துறை களில் அமைந்துள்ள பாடல்களில் அவ்வத் துறைகளுக்கு இயை பான பல செய்திகளை விளக்கும் தொடர்கள் இடம்பெறுதல் இயல்பே. பொருள்களின் பண்பு, செயல்களை விளக்கும் அடை மொழித் தொடர்கள் பலவாகப் பாடல்களில் இடம்பெறுகின்றன. உலகியலை விளக்கும் உரைகள், அறவுரைகள், வாழ்க்கைச் சூழல்களை விளக்கும் பகுதிகள் என்று இன்னோரன்ன தொடர்கள் புதைந்துள்ளன. ஒரே வகையான கருத்து, வருணனைகள்கூடப் புலவர்களிடையே காணப்படுதலையும் இத் தொடர் ஆய்வு விளக்கவல்லது.

பெயர், வினை, இடை, உரி என்னும் நால்வகைச் சொற் களின் பயன்பாடுகளையும் தொடர் அடைவு வழி அறியலாகும். இத் தகைய இலக்கிய இலக்கண முறைமை விளங்கும் வகையில் ஒவ்வொரு பாடலிலும் உள்ள தொடர்கள் தனித்தனியே எடுத்துத் தரப்பட்டுள்ளன. கூடிய வரையிலும் அவை ஒரு கருத்தினை வெளிப்படுத்தும் அளவிலும் பிரித்து எடுக்கப் பெற்றன. சிற்சில தொடர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட அடிகளிலும் சென்று முடியும் நிலையினவாயும் உள்ளன. பெரும்பாலும் எல்லாத் தொடர்களும் கருத்து முடியும் வகையில் அமைக்கப் பெற்றுள்ளன.

சங்க இலக்கியச் சொற்பொருளாய்வுக்குத் தொடரமைவுக் கோவை பெரிதும் பயன்படும். ஒரு சொல்லுக்கு உரிய பல்வேறு பொருள்களையும் அவற்றின் ஆட்சி நிலைகளையும், காலமுறை வளர்ச்சிகளையும் கணக்கிட்டறியவும் தக்க மேற்கோள்களை எடுத்தாளவும் எளிதின் இயலும்.

குறுந்தொகைத் தொடரடைவுடன் "நற்றிணை" முதலிய பிற சங்க இலக்கியத் தொடர்களையும் இவ்வாறு செய்து, இறுதியில் பாட்டு தொகைப் பாடல்களுக்கு முழுமையான தொடர் அடைவு உருவாக்க வேண்டும். அப்பொழுது சங்க இலக்கியத் தொடர்களின் சிறுதொடரமைப்பு, சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல், பொருள் பொதிந்த செறிவு, இனிய சொற்புணர்ப்பு போன்ற தனித்தன்மைகள் எல்லாம் நன்கு புலனாகும்.

ஆய்வுப்பாட நுண்பதிப்பு

பழஞ்சுவடிகளைத் தேடித் தொகுத்துப் பாதுகாப்பதுடன் இதுவரை வெளிவாராத நூல்களைப் பதிப்பித்தலையும் முதன்மை நோக்கமாகத் தமிழ்ப் பல்கலைக் கழக ஓலைச்சுவடித்துறை கொண்டுள்ளது. அதனோடு முன்பு பதிப்பிடப்பெற்றுள்ள சங்க நூல்கள், தொல்காப்பிய உரைகள் முதலியவற்றைக் கிட்டும் சுவடிகளுடனும் முற்பதிப்புகளுடனும் ஒப்புநோக்கிச் சரியான பாடங்களை வரையறுத்து, இக்காலத்திற்கு ஏற்ற விளக்கங் களுடனும், நூற்பொருள்களை எளிதில் அறிவதற்கும் ஆராய்ச்சி க்ளுக்கு இன்றியமையாது வேண்டப்படும் குறிப்புகளைப் பெறு வதற்கும் ஏற்புடைய பல்வேறு வகையான அகராதிகளுடனும் பதிப்பிக்கத் திட்டமிட்டு இந் துறையில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஏற்கெனவே வெளிவந்த நூல்களை மீண்டும் பரிசோதித்துப் பதிப்பிக்க வேண்டுமா? குறுந்தொகைக்குப் பல பதிப்புகள் வந்துள்ளனவே? மீண்டும் ஒரு குறுந்தொகைப் பதிப்பா? என்னும் எண்ணங்களும் வினாக்களும் பொதுவாக எழுவது இயல்பே. இப்பொழுது வெளியிடப்பெறும் பதிப்புப் போன்ற பதிப்புகள் வெளி வரவேண்டும் என்பது குறித்து மேற்படிப் பழம்பெரு நூல்களைப் பதிப்பித்துத் தமிழுலகுக்கு வழங்கிய பேராசிரியர் ச. வையா புரிப்பிள்ளையவர்களே முப்பது ஆண்டுகளுக்கு முன் சுட்டிக் காட்டி யுள்ளார்கள். 'திராவிட மொழிகளில் ஆராய்ச்சி' என்னும் அவர்களுடைய நூலுள் தெரிவித்துள்ள பின்வரும் செய்திகள் நாம் ஊன்றிக் கவனித்தற்குரியன. பேராசிரியர் அவர்களின் கருத்துரை வருமாறு:

"ஒரு துறையில் நாம் சிறந்து விளங்குகிறோம்; அது நூற் பதிப்புத்துறை. சிறந்த கல்வியாளர்கள் பலர் இத் துறையில் உழைத்திருக்கிறார்கள். வித்துவான் தாண்டவராய முதலியார், வேதகிரி முதலியார், சரவணப் பெருமாளையர்,

விசாகப் பெருமாளையர், ஆறுமுக நாவலர், ராவ்பகதூர் தாமோதரம் பிள்ளை, சுப்பராயச் செட்டியார், டாக்டர் உ. வே. சாமிநாதையர் முதலியவர்களை இங்கே குறிப்பிட லாம். இவர்கள் தொல்காப்பியம் சங்க இலக்கியங்கள் முதலிய முக்கியமான நூல்களை அருமையாகப் பதிப்பித்து வெளியிட்டிருக்கிறார்கள். தமிழ் மக்கள் இவர்களை மிகவும் போற்றிவரக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இத்துறையிலுங் கூட இன்னும்செய்ய வேண்டுவன பல இருக்கின்றன. மேற் குறித்த நூல்களுக்கும் கம்பராமாயணம் முதலியகாவியங்களுக் கும் வரையறை செய்த பாடங்களுடன், தற்காலத்துக்குரிய ஆராய்ச்சியுபகரணங்களுடன், சிறந்த பதிப்புக்கள் இனிமேல் தான் வெளிவருதல் வேண்டும். அன்றியும் எண்ணற்ற நூல்கள் ஓலைச்சுவடிகளில் புதைந்து கிடக்கின்றன. இவ் ஓலைகள் எளிதில் அழியக் கூடியன. இங்ஙனம் அழிவுறு வதற்கு முன்பு இந் நூல்களையெல்லாம் பதிப்பித்து வெளியிடுதல் வேண்டும். திராவிட மொழிகள் பிறவற்றிலும் இங்ஙனமே பல நூல்கள் உள்ளன என்று தெரிகின்றேன். இப் பதிப்புத்துறையில் வல்ல கல்வியாளர்கள் பலர் ஒருங்கு சேர்ந்து நூற்பதிப்புக்களை மேற்கொள்ளுதல் வேண்டும்."

(திராவிட மொழிகளில் ஆராய்ச்சி, பக்: 19-20)

பேராசிரியர் அவர்கள் இங்குச் சுட்டிக்காட்டிய முறையில் குறுந்தொகை, நற்றிணை முதலிய சங்க நூல்களையும் தொல் காப்பியத்திற்குரிய முதல் உரையாகிய இளம்பூரணர் உரை முதலிய பண்டையுரைகளையும் பதிப்பிக்கும் பணியில் இத்துறை ஈடுபட்டு வளர்ந்து வருகிறது. இவ் வரிசையில் முதல் நூலாகக் குறுந்தொகை ஆய்வுப் பாட நுண் பதிப்பு இப்பொழுது வெளி வருகிறது.

பிழை திருத்தம்

எவ்வளவு விழிப்போடு இருந்த போதிலும் அச்சுப்பேய் அறை யாமல் விடுவதில்லை என்பதை அச்சுத் தொழிலில் ஈடுபட்டார் நன்கு அறிவர். இந் நூலகத்தும் ஒருசில பிழைகள் நேர்ந்திருப்பது இயற்கையே. பிழைதிருத்தப் பகுதி நூலிறுதியில் தரப் பட்டுள்ளது. இப் பகுதியை நோக்கி முதலில் திருத்திக் கொண்டு நூலைப் படிக்க வேண்டுகிறேன். மேலும் விடுபட்ட பிழைகளை அறிஞர் காண்பாராயின் அறிவித்துதவ வேண்டுகிறேன். இந்த உதவி அடுத்த பதிப்பில் திருத்தம் பெறுவதற்குத் துணையாகும்.

பிழையின்றி நூல்கள் வெளிவருவதற்கு நாம் பல முன்னேற்பாடுகளைச் செய்தாகவேண்டும். முதலில் அச்சுக்குத் தரும் மூலப்படி செவ்வையாக அமைதல்வேண்டும். அதில் எவ்வித மாற்றமும் இன்றி அப்படியே அச்சிடலாம் என்னும் நிலையில் அஃது அமைதல் மிகமிக இன்றியமையாதது. கையெழுத்துப் படியாயிருந்தால் திருத்தமுறத் தெளிவான கையெழுத்தில் அடித்தல் திருத்தல் அதிகம் இன்றி அமைதல் வேண்டும். தட்டச்சுப் படியாயின் அதன் திருத்தம் பெற்ற துலக்கமான முதற்படியையே அச்சகத்திற்குத் தருதல் வேண்டும். நூலாசிரியர், பதிப்பாசிரியர், அச்சுப்படி திருத்துவோர், அச்சகத்தில் திருத்தம் செய்வோர் முதலியோரின் ஒத்துழைப்பு மிகமிக இன்றியமையாதது. பக்க அச்சுப்படி, நிறைவு அச்சுப்படி ஆகியவற்றை அச்சுத்தொழில் நுட்பம் அறிந்த மற்றொருவ ராகிலும் பார்வையிடுதலும் நன்றாகும்.

எல்லாவற்றிற்கும் மேலாக அச்சுயந்திரக் கோளாறு இன்மை, தொழிலாளர் விழிப்பு இப்படி எத்தனையோ துணைகளும் சீராக அமைதல் வேண்டும். இத்தகு பெருங்கவனம் நூலாசிரியர், பதிப்பாசிரியர், அச்சகத்தார் ஆகியோரிடம் போதிய அளவு இன்னும் நம் நாட்டில் ஏற்படவில்லை என்றுதான் இப்பொழுது வெளிவரும் அச்சு நூல்களால் தெரியவருகிறது. பிழையின்றிச் செவ்விய முறையில் நூல்கள் வெளிவருதல் வேண்டும் என்னும் குறிக்கோளில் நாம் மேலும் மேலும் விழிப்புடன் செயலாற்ற முற்படுவோமாக.

நன்றியுரை

ஆன்றோர் போற்றிய அரும்பெரும் நூலாகிய குறுந் தொகைக்கு உரையுடன் கூடிய ஆய்வு நுண் பதிப்பொன்றைப் படைத்தற்குத் தக்க சூழ்நிலையை அமைத்தருளிய திருவருளை எண்ணிச் சிந்தித்து முதற்கண் வந்திக்கின்றேன்.

சங்க நூல்களும் தொல்காப்பிய உரைகளும் திருத்தமுற ஆய்வுப் பதிப்புகளாக வெளிவரவேண்டும் என்பதில் துணை வேந்தர் வ. அய். சுப்பிரமணியம் அவர்கள் பேரார்வம் கொண்டுள் ளர்கள். அவர்களுடைய தூண்டுதலும் ஆக்கவுரைகளும் இப் பதிப்பின் செம்மைக்கு உறுதுணையாயிருந்தன. ஆய்வுக்குழுவிலும் புலக்குழுவிலும் உள்ள உறுப்பினர்கள் இந் நூலின் அமைப்பும் வளர்ச்சியும் குறித்துக் குழுக்கூட்டங்களில் கருத்துரை வழங்கி யுள்ளார்கள். இவர்களுக்கெல்லாம் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

எங்கள் ஓலைச்சுவடித்துறையின் இணைப்பேராசியராய் விளங்கிவரும் புலவர் பெருமான் திரு. அடிகளாசிரியர் அறிவு அனுபவங்களில் மிக்கார். குறுந்தொகைக்கான ஒரு காகிதச் சுவடியும் முற்பதிப்புகள் இரண்டும் தந்தவர். அவ்வப்போது நேரும் ஐயங்களைப் போக்கி நல்ல பல கருத்துகளை இப் பதிப்பின் ஆக்கத்திற்கு அளித்து உதவிய அவர்களுக்கு என் வணக்கமும் நன்றியும் உரியனவாகுக.

அடுத்தபடியாகச் சென்ற ஓர் யாண்டாகத் தாம் இணைப் பேராசிரியராகப் பொறுப்பேற்றது முதல் என் குறுந்தொகை ஆய்வுப் பணியிலும் உடனிருந்து வேண்டும் பல உதவிகளை உற்சாகத்துடன் செய்துவரும் டாக்டர் த. கோ பரமசிவம் அவர்களுக்கு என் நன்றி ஒருபாலாக, அவர் நூலாய்விலும் பதிப்புத்துறையிலும் சிறந்து விளங்க வாழ்த்துகிறேன். இந் நூலின் அகராதியாக்கத்திற்கு யான் குறித்தபடி வேண்டும் பணிகளைச் செய்துவந்த தொழில் நுட்ப உதவியாளராகிய இளைஞர் திரு. சி. இலட்சுமணனுக்கு என் நல்வாழ்த்துகள்.

திரு. அடிகளாசிரியர் அவர்களைப் போன்றே முற்பதிப்புகள் சிலவற்றைத் தந்து உதவிய மதுரைப்புலவர் இரா. இளங்குமரன், சென்னைப் புலவர் கா. பெ. ஞானசம்பந்தம், தஞ்சைப் புலவர் வி. சொக்கலிங்கம், பாவலரேறு பாலசுந்தரம் முதலியோர்க்கு என் நன்றி உரித்தாகுக.

குறுந்தொகை நூலைச் செவ்வையாய் அழகுற அச்சிடுவதற்கு ஒத்துழைத்த சென்னை மாருதி அச்சக உரிமையாளர்க்கும் உடன் பணிபுரியும் அன்பர்களுக்கும் மிக்க நன்றி. எல்லோருக்கும் நல்வாழ்த்துகள்.

இந் நூலைப் போலவே நற்றிணை, அகநானூறு முதலிய சங்க நூல்களும் இம் முறையில் வெளிவந்து அறிஞர் உலகம் போற்ற விளங்குவனவாக.

தமிழ்ப் பல்கலைக் கழகம்,
20-6-1985.

மு. சண்முகம் பிள்ளை

டாக்டர் உ. வே. சாமிநாதையர் பதிப்பு - சங்க இலக்கியப் பதிப்பு

பாட வேறுபாடுகள் - 234

பாட்டு - அடி - சீர்		டாக்டர் ஐயர் பதிப்பு	சங்க இலக்கியப் பதிப்பு
8.	1 : 2	மாத்து	மாஅத்து
11.	1 : 4	நாடொறும்	நாளும்
	6 : 1	பல்வேல்	வல்வேல்
12.	4 : 3-4	அவர் சென்ற வாறே	அவர்தேர்சென்றவாறே
13.	3 : 2	ஒரு தலை	ஒரு கலை
	5 : 2	ஆர்ந்தன	ஆர்ந்தநம்
14.	6 : 2	கூறயாம்	கூறயாஅம்
16.	1 : 4	கள்வர்தம்	கள்வர்
19.	1 : 3	வறுமையாழ்ப்	வறுமையர்
	3 : 2	வாழிய	வாழியர்
30.	2 : 3	மெய்உறல்	மெய்உற
	6 : 1	தமியேன்	தமியென்
	6 : 4	அளியேன்	அளியென்
34.	6 : 1	குழல்விளங்கு	குழைவிளங்கு
49.	4 : 1-2	நீஆகியர் என்	நீஆகியர்எம்
50.	2 : 1	செவ்வீ	செவ்வி
52.	5 : 2	அல்லனோ	அல்லெனோ
53.	7 : 2	மகளிரொடு	மகளிரோடு
56.	5 : 2	அளியள்எம்	அளியள்என்

பாட்டல் - அடி - சீர்		டாக்டர் ஐயர் பதிப்பு	சங்க இலக்கியப் பதிப்பு
59.	2 : 7	அரலைக்	அதலைக்
	3 : 3 4	நாறுநின்	நாறுநறுநுதல்
	4 : 1-2	நறுநுதல் மறப்பரோ	தவ்வென மறப்பரோ
60.	2 : 3	இருக்கை	இருங்கால்
62.	2 : 3	இடைப்பட	இடைஇடுபு
64.	4 : 3	அணவந்	அலம்வந்
68.	3 : 2	அச்சிரம்	அற்சிரம்
70.	5 : 5-2	அணைமெல்லியள்	அனைமெல்லியல்
73.	3 : 3-4	நாட்டிற் போகிய	ஞாட்பிற்போக்கிய
76.	6 : 2	அச்சிரம்	அற்சிரம்
79.	6 : 1	சேந்தனர்	சேர்ந்தனர்
	7 : 3	தப்பல்	தப்பற்குச்
	8 : 2	அகறல்	ஏகல்
80.	7 : 1	கிளையொடும்	கிளையொடு
82.	6 : 2	அச்சிரம்	அற்சிரம்
88.	3 : 2	சோரும்	சொல்லும்
93.	3 : 3-4	அல்லரோ தோழி	அல்லரோ
94.	3 : 2	மருள்வேன்	மருள்வென்
99.	1 : 1	நினைத்தனென்	நினைந்தனென்
	2 : 4	நினைத்து	நினைந்து
	4 : 2	மரத்த	மராஅத்த
100.	3 : 1-2	காந்தள் வேலிச்	காந்தள்அம் சிலம்பில்
	3 : 4	பசிப்பின்	பசித்தென
103.	1 : 2	தொகுத்த	தொடுத்த
104.	5 : 4	ஆகுவவே	ஆகுபவே
107.	6 : 2-7	ஊரன் தன்னொடு வதிந்த	ஊரனொடு வதிந்த
109.	1 : 1	முடக்கால்	முட்கால்
113.	5 : 2	எருமண்	எருமணம்

பாட்டு - அடி - சீர்		டாக்டர் ஐயர் பதிப்பு	சங்க இலக்கியப் பதிப்பு
121.	1 : 1	மெய்யோ	மெய்யே
	2 : 1-2	மைபட் டன்ன	மைப்பட் டன்ன
128.	3 : 3-4	அணவந் தாங்குச்	அணவந் தாஅங்குச்
132.	6 : 1-2	சாஅய் நோக்கினளே	சாஅய் நோக்கினள்
140.	4 : 2	தாங்கிய	அழுங்கிய
141.	5 : 3	கோள்வல்	கொலைவல்
142.	3 : 2-3	தனளோ இலளோ	தன்றோ இலளே
143.	1 : 3	அழிபு	அன்பு
	7 : 3	பாய	பாஅய
144.	5 : 1	பரல்பாழ்	பரல்பாற்
148.	2 : 2	வாய	வாஅய
	4 : 1	குருந்தோடு	குருந்தொடு
149.	4 : 3	வீய்ந்துக்	வீந்துக்
151.	4 : 1	குன்றுகெழு	குன்றுஉறு
157.	2 : 3	தூய	தூஉ
160.	6 : 4	வரைவே	வரவே
162.	2 : 1	பலர்புகு	பல்ஆபுகு
164.	4 : 2	பவ்வம்	பௌவம்
165.	3 : 1	அருங்கரை	இருங்கரை
	4 : 3	வீந்தாங்கு	வீஇந் தாங்கு
167.	3 : 4	கமழத்	கழுமத்
172.	1 : 1	தாஅ	தாஅவல்
173.	4 : 1	அழிபடர்	பழிபடர்
	7 : 4	உளெனே	உளேனே
174.	2 : 1	கவைமுட்	கவைமுடக்
177.	3 : 1	மன்றவம்	மன்றலம்
	5 : 4	நாந்தப்	நாம்நகப்
181.	6 : 2	பலகடம்	பல்கடம்

பாடல் - அடி - சீர்		டாக்டர் ஐயர் பதிப்பு	சங்க இலக்கியப் பதிப்பு
182.	4 : 4	நீக்கித்	நீங்கித்
	6 : 1	கலிழ்ந்தவிர்	கலிழ்கவின்
183.	7 : 1	கான	புன்புல
	7 : 3	புன்புலத்	கானத்
186.	3 ; 2	முகைக்கும்	முகையும்
	4 : 3	தோழிஎன்	தோழிஎம்
189.	1 : 3	வருவது	வருதும்
190.	5 : 1	உரஉரும்	நரைஉரும்
	6 : 2	இயங்குதோறு	இயங்குதொறு
191.	1 : 3	இதுஎன்	இதுஎன
	3 : 4	உள்ளா	உள்ளத்
193.	5 ; 2	மன்நெடும்	மன்எம்
194.	1 : 4	மின்னுபு	மின்னுவர
195.	5 : 4	உறுதரச்	ஊர்தரச்
199.	8 : 4	பெறுமே	பெறினே
200.	2 : 2	தாஅய	தாஅய்
	2 : 3-4	வீஇ சுமந்துவந்து	வீசும் வளிகலந்து
	5 : 4	மாமழை	மாமலை
	6 : 3	உருமின்	உரும்இனம்
201.	5 : 3	மூங்கில்	மூங்கிலில்
203.	5 : 1	ஓரீஇ	ஓரிஇனன்
208.	5 : 3	ஒன்ற	ஒன்றி
209.	1 : 1	அறந்தலைப்	சுரந்தலைப்
	2 ; 4	கறங்கும்	கரக்கும்
	4 : 1-2	குறுநடை பலஉள்	குறுநடைப் புள்உள்
211.	2 : 1	நேர்ந்துநம்	நொந்தும்நம்
	3 : 4	எஞ்சாத்	எஞ்சாது
212.	2 : 3	தெளிமணி	தெளிர்மணி
213.	4 ; 3	வழுஇல்	அழிவுஇல்
216.	3 : 3	நெகிழ	ஞெகிழ
	6 : 2	பெய்ய	பெய்யும்
217.	1 ; 2	கடிகெனின்	கடிதலின்
	6 : 1	ஐதே	ஐதேய்
	6 ; 2	காமம்	கம்ம
219.	5 : 4	முள்இலைத்	அள்இலைத்
	6 : 4	சேர்ப்பர்க்கு	சேர்ப்பற்கு
225.	7 ; 3	உரியவாம்	உரியவால்

பாட்டு - அடி - சீர்		டாக்டர் ஐயர் பதிப்பு	சங்க இலக்கியப் பதிப்பு
227	1 : 1	பூண்வனைந்	பூண்வளைந்
228.	2 : 2	இடத்தின்	இறகின்
	6 : 2	அணியர்	அணியரோ
230.	6 : 1-2	சின்னாள் அன்ன	தவச்சில் நாளினன்
233.	1 : 3	அகல்வாய்ச்	கல்வாய்ச்
234.	2 : 1	எல்லறு	எல்லுறு
236.	2 : 1	நேர்ந்தனை	நொந்தனை
237.	1 : 4	தழீஇய	தழீஇ
239.	1 : 1	தொடிஞெகிழ்ந்	தொடிநெகிழ்ந்
240.	3 : 4	கஞல	கஞலி
241.	1 : 1	யாமே	யாம்எம்
244,	2 : 3	இரவுக்கதவம்	இரவுக்கதவு
	3 : 3	கேட்டனம்	கேட்டனெம்
256.	1 : 4	அறுகை	அறுகைப்
	2 : 1	பிணிகால்	பிணங்குஅரில்
	2 : 4	மார்ந்த	மாந்தி
258.	5 : 3	அந்தோட்டு	அங்கோட்டு
	8 : 3	தொலைதல்	தொலைவன
266.	4	இந்த அடி இல்லை	மறப்அரும்பணை தோள்மரீஇ
270.	4 : 1	பெய்துஇனி	பெய்கஇனி
	5 : 4	உள்ளமோடு	உள்ளமொடு
273.	2 : 1	பெருங்காட்டு	பெருங்காடு
274.	1 : 4	உகாஅய்க்	உகாஅத்து
	2 : 1	காசினை	இறவுச்சினை
	8 : 3	உள்கினம்	முயங்கினம்
275.	1 : 3	கல்உயர்	கல்உயர்பு
277.	1 : 3	நாயில்	ஆசில்
278.	6 : 1-2	ஏற்பன ஏற்பன	ஓர்ப்பன ஓர்ப்பன
282.	2 : 1	கௌவை	கவ்வை
	5 : 4	அவிழ்ந்த	விரிந்த
283.	7 : 1	படுமுடை	படுமுடைப்
285.	1 : 1	வைகல்	வைகா
285.	2 : 3	எல்லையும்	எல்லவும்
	7 : 2-2	ஒருபருந்து இருக்கும்	பருந்துஇருந்து உகக்கும்
291.	4 : 3-4	எழல்ஒல் லாவே	விழல்ஒ வாவே
	8 : 4	றனவே	றவ்வே

பாட்டல் - அடி - சீர்		டாக்டர் ஐயர் பதிப்பு	சங்க இலக்கியப் பதிப்பு
293.	1 : 3	ஆத்திரை	ஆர்த்திய
294.	2 : 3	தழுவணி	தழூஉஅணி
	5 : 1	தித்தி பரந்த	துத்திப்பாந்தள்
297.	3 : 2	இறந்த	எதிர்ந்த
298.	5 : 4	பின்றை	தந்தை
299.	3 : 1	இணர்அவிழ்	இணர்வீழ்
	8 : 2	ஞெகிழ்பஎன்	ஞெகிழ்பஎம்
300.	8 : 6-2	விடல்சூ ழலனால்	விடல்சூ ழலன்யான்
301.	5 : 3	இனமணி	இன்மணி
306.	6 : 1	தண்கடல்	தெண்கடல்
307.	3 : 1	இன்னம்	இன்னாப்
308.	2 : 2	அருந்தலை	இருந்தலை
309.	3 : 1	நீடின	நீடிய
	4 : 1	கொடியரோ	கொடியோர்
310.	7 : 2	துறைவர்க்கு	துறைவற்கு
311.	4 : 2	டலனோ விலனோ	டன்றோ இலனே
314.	5 : 1	மின்உறல்	இன்உறல்
318.	8 : 1	கள்வனும்	களவனும்
320.	1 : 3-4	கொள்மீன் உணங்கல்	கோள்மீன் உணங்கலின்
	2 : 1	அருங்கழிக்	இருங்கழிக்
	4 : 2	பரக்கும்	பரிக்கும்
321.	4 : 1	மடவரல்	மடம்ஆர்
323.	3 : 2	எழுஞ்சுவர்	அஞ்சுவர
	6 : 2	தோள்இணைத்	தோள்அணைத்
324.	1 : 1	கொடுங்கால்	கொடுந்தாள்
	5 : 3	உயங்கும்	உவக்கும்
325.	1 : 4	பண்டைத்தன்	பண்டைத்தம்
327.	4 : 3-2	தீய கலுழி	தீம்கலுழ் உந்தி
329.	5 : 1	வேனல்	வேனில்
	2 : 3	உகுத்தலின்	உஞற்றலின்
332.	5 : 1	குன்றச்	குன்றகச்
334.	4 : 1	விரிநீர்ச்	இருநீர்ச்
335.	5 : 1	வெற்பிடை	வெற்புஅயல்
337.	2 : 1	மென்குரல்	குரலே
	3 : 1	செறிநிரை	செறிமுறை
	4 : 4	அணங்குதற்கு	அணங்குஎன
	5 : 2	அறிவல்	அறிவலே

பாட்டு - அடி - சீர்		டாக்டர் ஐயர் பதிப்பு	சங்க இலக்கியப் பதிப்பு
338.	5 : 4	அச்சிரம்	அற்சிரம்
339.	5 : 4	மாயிதழ்	மாவிதழ்
340.	4 : 3	அலர்வேய்க்	அலர்வேர்க்
341.	1 : 2	பட்ட	படரிய
343.	4 : 3	கொளீஇ	கொளீஇய
345.	2 : 3	தவிர்த்துநின்று	தவிர்த்தனிர்
	3 : 4	தெய்ய	தகைய
347.	1 : 2	புலர்ந்த	உலர்ந்த
349.	1 : 3-4	சிதைஇ மீன்அருந்தும்	சிதைஇய மீன் அருந்தி
	6 : 2 3	தாவென்சொல்லினும்	தாஎனக் கூறலின்
350.	4 : 3	இருந்தோட்டு	இருங்கோட்டு
351.	4 : 4	துறைவர்க்கு	துறைவற்கு
355.	1 : 1	பெயல்கண்	பெயல்கால்
	1 : 4	காணலையே	காணலரே
	2 : 4	காணலையே	காணலரே
358	7 : 3	முல்லைமென்	முல்லைவெண்
359.	4 : 4	நகையின்	நகைஇ
361.	4 : 3-4	காந்தள் முழுமுதல்	முழுமுதற் காந்தள்
363.	2 : 1	செங்கோல்	செங்கால்
	3 : 2	வரையா	மரையா
365.	3 : 3	ததும்பிய	ததும்பி
	4 : 2	முரசின்	முழவின்
366.	3 : 1	வெறியாள்	வேறுயான்
366.	6 : 1	அழுத	ஒழுகு
367.	5 : 4	அருவியின்	அருவி
368.	7 : 1	திண்கரைப்	இடிகரைப்
372.	3 : 3	அணங்கும்	உணங்கும்
373.	1 : 1	நீர்தீப்	நீர் திரிந்து
	6 : 2	உடைஇப்	உடையூப்
378.	2 : 4	காயாது மரநிழற்பட்டு	காணாத மாண்நிழற்
	3 : 2-3	தலையின்றாக	தலைய வாகுக [படீஇய
382.	3 : 1	பூமலி	பூஅமல்
383.	4 : 4	அழுங்கத்	ஒடுங்கத்
385.	5 : 3	கிழவன்	கிழவோன்
386.	3 : 3	விழவுஅணி	விழவுஅணிக்
387.	2 : 4	மாலையும்	மாலை

பாட்டல் - அடி - சீர்		டாக்டர் ஐயர் பதிப்பு	சங்க இலக்கியப் பதிப்பு
	3 : 1	இரவரம்பு	உயிர்வரம்பு
391.	1 : 3	உழாது	உழாஅது
392.	1 : 3	அணிச்சிறைத்	மணிச்சிறைத்
		கடமை	கடவை
394.	6 : 1-2	அவர்தினை மேய்தந்து	அவர்தினைப் புனம் [மேய்ந்து
395.	4 : 2	மதியினுக்கு	மதியிற்கு
396.	4 : 1	ஓமை	ஓமைக்
	5 : 3	வெவ்அரைக்	வெவ்அறைக்
397.	1 : 3	சினைமருள்	தினைமருள்
	2 : 3	பெய்தல்	பெய்த
	5 : 1	அன்னா	அன்னாய்
398.	2 : 2	துவலைத்	திவலைத்
	4 : 1	கைபுணை	கையுறை

டாக்டர் உ. வே. சாமிநாதையர் பதிப்பு - தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிப்பு

பாட வேறுபாடுகள் - 260

பாடல் - அடி - சீர்		சாமிநாதையர்	த. ப. ப்திப்பு
0.	4 : 3	அஞ்சுடர்	செஞ்சுடர்
3.	3 : 1	கருங்கோல்	கருங்கால்
5.	3 : 4	திவலை	துவலை
	3 : 4	தீநீர்	தூநீர்
7.	2 : 2	மேலவும்	மேலவ
8.	1 : 2	மாத்து	மரத்து
	11 : 4	நாடொறும்	நாளும்
11.	4 : 4	முனாது	முனாஅது
	6 : 1	பல்வேல்	வல்வேல்
12.	1 : 1	எறும்பி	எறும்பின்
13.	3 : 2	ஒருதலைச்	ஒருகலை
	4 : 1	நோய்தந்து	ஒய்தந்து
	5 : 2	ஆர்ந்தன	ஆர்ந்தநம்
14.	1 : 4	வந்த	நிவந்த
15.	5 : 1	சேயிலை	செயலை
16.	1 : 4	கள்வர்தம்	கள்வர்
17.	4 : 3	காமம்காழ்க்	காமம்காழ்
21.	5 : 2	தேறேனவர்	தெறேனவர்
24.	4 : 1	எழுகுளிறு	எழுகளிறு
25.	1 : 4	கள்வன்	களவன்
	3 : 4	காஎ	காஅல
26.	7 : 4	தந்தைக்	தந்தை
27.	4 : 2	உணீஇயர்	உணீஇய
28.	1 : 1-2	முட்டுவேன்கொல்	மூட்டுவேன்கொல்
29.	4 : 4	நன்றும்	என்றும்
30.	2 : 3	மெய்யுறல்	மெய்யுற
	6 : 1	தமியேன்	தமியென்
	6 : 3	அளியேன்	அளியென்

பாடல் - அடி - சீர்		சாமிநாதையர்	த. ப. பதிப்பு
31.	6 : 3	மோராடுகள	ஆடுகள
32.	5 : 1	தெற்றெனத்	தோற்றேன்
34.	6 : 2	மரந்தை	மாந்தை
43.	1 : 4	தனனே	தெனனே
50.	2 : 1	செவ்வீ	செவ்வி
51.	3 : 2	பரக்கும்	வரிக்கும்
52.	1 : 1	ஆர்களிறு	ஆர்கலி
	5 : 2	அல்வனோ	அல்லெனோ
54.	1 : 4	என்னலனே	என்னலன்
59.	2 : 1	அரலைக்	அதலைக்
	3 : 1-4	குளவிநாறுநின்	குளவிநாறு நறுநுதல்
	4 : 1	நறுநுதல்	தவ்வென
64.	3 : 3	அணவந்	அவம்வந்
67.	2 : 3	வேப்ப	வேம்பின்
	3 : 2	நுழைப்பான்	நுழைப்பாள்
68.	3 : 2	அச்சிரம்	அற்சிரம்
70.	5 : 1-2	அணைமெல் லியள்யான்	அனைமெல் லியல்யான்
73.	3 : 3-4	நாட்டிற்போகிய	ஞாட்பிற்போக்கிய
76.	6 : 2	அச்சிரம்	அற்சிரம்
82.	6 : 2	,,	,,
88.	3 : 2	சோரும்	சொல்லும்
	3 : 4	சாரல்	சோலை
94.	3 : 2	மருள்வேன்	மருள்வென்
97.	1 : 4	என்னலனே	என்னலன்
99.	2 : 1	நினைத்தனென்	நினைந்தனென்
	2 : 4	நினைத்து	நினைந்து
103.	1 : 2	தொகுத்த	தொடுத்த
	1 : 3	நடுங்கஞர்	நடுங்கயிர்
105.	2 : 4	செழுங்குரல்	சில்குரல்
106	6 : 1	தான்மணந்	தாம்மணந்
107.	6 : 2	ஊரன் தன்னொடு	ஊரனொடு
109.	1 : 1	முடக்கால்	முட்கால்
113.	5 : 2	எருமண்	எருமணம்
127.	6 : 2	போல்வர்நீ	போல்வர்நின்
128.	3 : 4	தாங்குச்	தாஅங்குச்
132.	6 : 1	சாஅய்நோக்	சாய்நோக்
133.	1 : 4	சிறுதினை	சிறுதினைக்
141.	5 : 3	தோள்வல்	கொலைவல்

பாடல் - அடி - சீர்		சாமிநாதையர்	தி. ப. பதிப்பு
143.	1 : 3	அழிபுபெரிது	அன்புபெரிது
	7 : 3	பாய	பாஅய
148.	2 : 2	வாய	வாஅய
	4 : 1	குருந்தோடு	குருந்தொடு
149.	4 : 3	வீய்ந்துக்	வீந்துக்
150.	4 : 3-4	மல்கும்	மிகுமினி மல்கும்
157.	2 : 3	தூய	தூஉ
158.	5 : 1	இமயமும்	இமையமும்
160.	6 : 4	வரைவே	வரவே
161.	4 : 1	அன்னா	அன்னாய்
162.	2 : 1-2	பலர்புகு தருஉம்	பல்லாபுகுதரும்
164.	4 : 2	பவ்வம்	பௌவம்
166.	3 : 3	மரந்தை	மாந்தை
167.	3 : 4	கமழுத்	கமுழமத்
172.	1 : 1	தாஅ	தாஅவல்
176.	7 : 3	கலிழும்என்	கலுழும்என்
177.	3 : 1	மன்றவம்	மன்றலம்
	5 : 4	நாந்தப்	நாநகப்
181.	5 : 1	பாஅற்	பாற்பெய்
	6 : 2	பலகடம்	பல்கடம்
182.	6 : 1	கலிழ்ந்தவிர்	கலிங்கவிர்
183.	7 : 1	கான	புன்புல
	7 : 3	புன்புலத்	கானத்
184.	4 : 3	மாண்தகை	நாண்தகை
	5 : 3	மாண்முடிப்	மாமுடிப்
186.	3 : 2	முகைக்கும்	முகையும்
189.	1 : 3	வருவது	வருதும்
190.	6 : 2	இயங்குதோறு	இயங்குதொறு
191.	7 : 4	மன்னே	யாமே
194:	1 : 4	மின்னுப்பு	மின்னுவர
195.	2 : 4	உறுதரச்	ஊர்தரச்
199.	2 : 4	திண்தேர்க்	திண்தோள்
209.	1 : 1	அறந்தலைப்	சுரந்தலைப்
	2 : 1	மையிருங்	மழையிருங்
211.	2 : 1	நேர்ந்துநம்	நொந்தும்நம்
213.	4 : 3	வழுவில்	அழிவில்
216.	3 ; 3	நெகிழ	நெகிழ

பாட்டு - அடி - சீர்		சாமிநாதையர்	த. ப. பதிப்பு
217.	1 : 1	தினைகிளி	தினைக்கிளி
225.	5 : 2	மறந்தமையாய்	மறந்தனை
	7 : 3	உரியவாம்	உரியவா
228.		இடத்தின்	இறகின்
	6 : 2	அணியர்	அணியரோ
234.	2 : 1	எல்லுறு	எல்லுறு
237.	1 : 4	தழீஇய	தழீஇ
239.	1 ; 1	தொடிஞெகிழ்ந்	தொடிநெகிழ்ந்
240,	3 : 4	களுல	கஞலி
241.	1 : 1	யாமே	யாம்எம்
244.	2 : 3	இரவுக்கதவம்	இரவுக்கதவு
244,	3 : 3	கேட்டனம்	கேட்டனெம்
247.	3 : 3	புணையுமார்	உளையுமார்
	3 : 4	இவ்வென	இல்லென
	6 : 2	இயம்பும்	ஈயும்
251.	1 : 4	மாயினம்	ஆய்இனம்
252 .	4 : 3	அவனெதிர்	அவனே
255.	6 : 1	தம்கடன்	கடன்கடன்
	8 : 1	நாம்வெம்	நாமஎம்
256.	2 ; 4	ஆர்ந்த	மாந்தி
258,	8 : 3	தொலைதல்	தொழுதன
261.	1 : 1	பழமழை	படுமழை
262.	3 : 2	இருக்க	இருக்கத்
264.	5 : 1	பயந்தக்	பசந்தக்
	5 : 3	பயப்புறல்	பசப்புறல்
266.	4 : 1-3	மூன்று சீரும் இல்லை	மறப்பரும் பணைத்
270.	2 : 4	ஊழின்	ஊழியின் [தோள்மரீஇ
	5 : 4	உள்ளமோடு	உள்ளமொடு
275.	1 : 3	கல்லுயர்	கல்லுயர்பு
	4 : 1	புல்லார்	புல்லூர்
	4 : 3	பூண்மணி	பூமணி
277.	4 : 1	அற்சிர	அற்சிரை
279.	5 : 1	மழைகழூஉ	மழைகெழு
282.	2 : 1	கௌவை	கவ்வை
	5 : 4	அவிழ்ந்த	அவிந்த
	8 : 4	நமரே	அவரே
283.	7 ; 1	படுமுடை	படுமுடைட்

பாட்டல் - அடி - சீர்		சாமிநாதையர்	த. ப. பதிப்பு
285.	1 : 1	வைகல்	வைகா
	2 : 3	எல்லையும்	எல்லவும்
286.	4 : 3	கொடிச்சி	மடந்தை
287.	3 : 1	முந்நால்	முந்நாள்
291.	4 : 3	எழல்ஒல்	விழல்ஒல்
	8 : 4	றனவே	றவ்வே
293.	1 : 3	ஆத்திரை	ஆர்த்திய
	5 : 1	அயவெள்	வயல்வெள்
294.	2 : 3	தழுவணி	தழூஉவணி
295.	3 : 2	வருதி	நின்றாய்
296.	3 : 1	உறுகழிச்	அறுகழிச்
299.	8 : 2	ஞெகிழ்பஎன்	ஞெகிழ்பவெம்
300.	8 : 1-2	விடல்சூ ழலனால்	விடல்சூ ழலென்யான்
301.	2 : 3	சிறுகோல்	சிறுபொன்
306.	6 : 1	தண்கடல்	தெண்கடல்
307.	6 : 2	யாஅம்	யாஅத்
308.	1 : 2	வாழைச்	வாழை
	1 : 3-4	சுரிநுகும் பிணைய	சுரித்துகும் பிணிய
	2 : 2	அருந்தலை	இருந்த்லை
309.	3 : 1	நீடின	நீடிய
	4 : 1	கொடியரோ	கொடியோர்
	7 : 1	இன்னாதன	இன்னாகிய
310.	7 : 2	துறைவர்க்கு	துறைவற்கு
311.	4 : 2-3	டனனோஇலனோ	டன்றோஇலனே
314.	5 : 2	இளமுலை	இழைமுலை
315.	3 : 2	அனையன்	அனையனென்
316.	1 : 4	நிறுப்பவும்	நிற்பவும்
318.	5 : 4	எய்த்தஇப்	வேய்கவிப்
	8 : 1	கள்வனும்	களவனும்
319.	4 : 1	மையணி	அமையணி
320.	1 : 4	உணங்கல்	உணங்கலின்
	2 : 1	அருங்கழிக்	இருங்கழிக்
	4 : 2	பரக்கும்	பரிக்கும்
321.	4 : 1	மடவரல்	மடமார்
	6 : 4	அதனால்	அதனான்
323.	3 : 2	எழுஞ்சுவர்	அஞ்சுவர
	6 : 2	தோளிணைத்	தோளணைத்

பாடல் - அடி - சீர்		சாமிநாதையர்	த. ப. பதிப்பு
324.	1 : 1	கொடுங்கால்	கொடுந்தாள்
	5 : 3	உயங்கும்	உவக்கும்
325.	1 : 4	பண்டைத்தன்	பண்டைத்தம்
326	1 : 2	கோதைப்	தோகைப்
327.	4 : 3-4	தீய கலுழி	தீம்கலுழ் உந்தி
329.	1 : 3	வேனல்	வேனில்
	2 : 3	உகுத்தலின்	உகுற்றலின்
334.	4 : 1	விரிநீர்ச்	இருநீர்ச்
335.	5 : 1	வெற்பிடை	வெற்பன்
336.	1 : 2	உவகை	உறுநகை
	2 : 1	ஈங்கனம்	ஈங்கினம்
337.	2 : 2	மென்குரல்	குரலே
339.	5 : 4	மாயிதழ்க்	நறுவிதழ்க்
340.	4 : 1	அழுவம்	அழியின்
	4 : 3	அலர் வேய்	அலர்வேர்க்
341.	1 : 2	பட்ட	படரிய
	6 : 1	வலியா	வலிய
343.	4 : 3	கொளீஇ	கொளீஇய
345.	2 : 3	தவிர்த்துநின்	தவிர்த்தனிர்
	3 : 4	தெய்ய	தகைய
346.	1 : 3	முளைக்கோட்டு	முனைக்கோட்டு
349.	1 : 3	சிதைஇமீன்	சிதைய
	6 : 2	தாவென்	தாவெனச்
350.	3 : 3	செல்வர்	செல்லார்
	4 : 3	இருந்தோட்டு	இருங்கோட்டு
351.	1 : 3	விரைவுறு	விரவும்
	3 : 1-2	ஈர்மணல் மலிர்நெறி	இளமணல் ஈர்நெறி
	4 : 4	துறைவர்க்கு	துறைவற்கு
353.	4 : 3	கண்ணோடு	கண்ணொடு
355.	1 : 1	பெயல்கண்	பெயல்கால்
	1 : 4	காணலைமே	காணலரே
	2 : 4	,,	,,
356.	4 : 2	கலுழி	கலுழித்
358.	3 : 1	சுவர்வாய்	வாய
	7 : 1	சொல்லுப	சொல்லுவ
	7 : 3	முல்லைமென்	முல்லைவெண்
359.	4 ; 4	நகையின்	நகைஇப்

பாட்டு - அடி - சீர்		சாமிநாதையர்	த. ப. பதிப்பு
361.	4 : 3-4	காந்தள் முழுமுதல்	முழுமுதல் காந்தள்
363.	3 : 2	வரையா	மரையா
365.	4 : 2	முரசின்	முழவின்
366.	3 : 1	வெறியாள்	எனயான்
367.	5 : 4	அருவியின்	அருவி
372	3 : 3	அணங்கும்	உணங்கும்
	6 : 3	அளவை	இரவை
373.	6 : 2	உடைஇப்	உடையூ
375.	6 : 3-4	அவியா மாறே	அவியன்மா ரன்றே
376.	2 : 3	ஆரம்	ஆஅம்
377.	4 : 1	அறிதற்கு	எய்தற்கு
378	3 : 4	நம்நீத்துச்	தண்ணளிச்
379.	4 : 1	அறிவுகாழ்க்	அறிவுகாழ்
380.	7 : 2	தோன்றும்	என்ப
381.	5 : 3	நாள்மலர்	நன்மலர்
382.	4 : 1-2	வம்புப்பெய்யுமால்	வம்பும் பெய்யுமார்
383.	4 : 4	அழுங்கத்	ஒடுங்கித்
384.	4 : 3	மகிழ்நநின்	மகிழ்ந்த
385	5 : 3	கிழவன்	கிழவோன்
	7 : 2	தம்மஇவ்	தம்மஇப்
	7 : 3	அழுங்கல்	பழங்கேள்
386.	3 : 3	விழவணி	விழவணிக்
387.	2 : 4	மாலையும்	மாலை
	3 : 1	இரவரம்பு	உயிர்வரம்பு
388	2 : 2	ஒற்றினும்	எற்றினும்
389.	4 : 3	என்றனென்	என்றலின்
390.	3 : 3	சாத்துவந்து	சார்ந்துவந்து
391.	1 : 3	உழாது	உழாஅது
392	1 : 3	அணிச்சிறைத்	மணிச்சிறைத்
	4 : 1	கடமை	கடவை
	5 : 1	துளரெறி	துளிரெறி
	6 : 1	தமரின்	தமரான்
	7 : 2	நுண்தோல்	நுண்தேர்
394.	4-	இவ்வடி இல்லை	கூரை முற்றும் சாரல் [நாடல்
395.	4 : 1-2	அரவுநுங்கு மதியினுக்	அரவுறு மதியிற்கு
	6 : 1	அஞ்சல்	அஞ்சேல்

பாட்டல் - அடி - சீர்		சாமிநாதையர்	த. ப. பதிப்பு
395.	8 : 1-2	ஆங்கவர் வதிவயின்	யாங்கா வா அது
396.	4 : 1	ஓமை	ஓமைக்
	5 : 3	வெவ்வரைக்	வெவ்வறைக்
397	1 :¦3	சினையருள்	தினைமருள்
	5 : 1	அன்னா	அன்னாய்
398.	1 : 1	தேற்றாம்	செற்றாம்
	4 : 1	கைபுணை	கையுறை
	5 : 1	சுடர்துயர்	சுடர்துயில்
	8 : 3	அரக்கு	ஆக்கு
400.	4 : 4/5 : 1	கரம்பைப்	களரிக் கரம்பைப்

சங்க இலக்கியப் பதிப்பு - தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிப்பு

பாட வேறுபாடுகள் - 225

பாடல் - அடி - சீர்		சங்க இலக்கியம்	த. ப. பதிப்பு
0.	4 : 3	அஞ்சுடர்	செஞ்சுடர்
3.	3 : 1	கருங்கோல்	கருங்கால்
5.	3 : 2	திவலை	துவலை
	3 : 4	தீநீர்	தூநீர்
7.	2 ; 2	மேலவும்	மேலன
8.	1 : 2	மாஅத்து	மரத்து
11.	1 : 3	நெகிழ	* ஞெகிழ
	4 : 4	முனாது	முனாஅது
12.	1 : 1	எறும்பி	எறும்பின்
	4 : 2	என்பஅவர்தேர்	* என்பஅவர்
13.	4 : 1	நோய்தந்து	ஒய்தந்து
14.	1 : 4	வந்த	நிவந்த
	6 : 2	கூறயாஅம்	* கூறயாம்
15.	5 : 1	சேயிலை	செயலை
17.	4 : 3	காமம்காழ்க்	காமம்காழ்
19.	1 : 3	வறுமையர்	* வறுமையாழ்ப்
	3 : 2	வாழியர்	* வாழிய
21.	5 : 2	தேறேனவர்	தெறேனவர்
24.	4 : 1	எழுகுளிறு	எழுகளிறு
25.	1 : 4	கள்வன்	களவன்
	3 : 4	கால	காஅல
26.	7 : 4	தந்தைக்	தந்தை
27.	4 : 2	உணீஇயர்	உணீஇய
28.	1 : 1	முட்டுவேன்	மூட்டுவேன்
29.	4 : 4	நன்றும்	என்றும்
31.	6 : 3	மோராடுகள	ஆடுகள
32.	5 : 1	தெற்றெனத்	தோற்றேன்
34.	6 : 2	மரந்தை	மாந்தை

* உடுக்குறி சாமிநாதையர் கொண்ட பாடம்

பாடல் - அடி - சீர்		சங்க இலக்கியம்	த. ப. பதிப்பு
43.	1 : 4	தனனே	தெனனே
49.	4 : 1-2	நீயாகியர்எம்	* நீயாகியர்என்
51.	3 : 2	பரக்கும்	வரிக்கும்
52.	1 : 1	ஆர்களிறு	ஆர்கலி
53.	7 : 2	மகளிரோடு	* மகளிரொடு
54.	1 : 4	என்னலனே	என்னல்ன்
56	5 : 2	அளியளென்	* அளியளெம்
60.	2 : 3	இருங்கால்	* இருக்கை
62.	2 : 3	இடையிடுபு	* இடைப்பட
67.	2 : 3	வேப்ப	வேம்பின்
67.	3 : 2	நுழைப்பான்	நுழைப்பாள்
79.	6 : 1	சேர்ந்தனர்	* சேந்தனர்
	7 : 3	தப்பற்குச்	* தப்பல்
	8 : 2	ஏசல்	* அகறல்
80.	7 : 1	கிளையொடு	* கிளையொடும்
88.	3 : 4	சாரல்	சோலை
93.	3 : 3-4	அல்லரோ	* அல்லரோதோழி
97.	1 : 4	என்னலனே	என்னலன்
99.	4 : 2	மராஅத்த	* மரத்த
100.	3 : 2	சிலம்பில்	* வேலிச்
	3 : 4	பசித்தென	* பசிப்பின்
103.	1 : 3	நடுங்கஞர்	நடுங்கயிர்
104.	5 : 4	குபவே	* குவவே
105.	2 : 4	செழுங்குரல்	சில்குரல்
106.	6 ; 1	தான்மணந்	தாம்மணந்
121.	1 : 1	மெய்யே	* மெய்யோ
	2 : 1	மைப்பட்	* மைபட்
127.	6 : 2	போல்வர் நீ	போல்வர் நின்
132.	6 : 1-2	சாஅய் நோக்கினள்	சாய்நோக் கினளே
133.	1 : 4	சிறுதினை	சிறுதினைக்
140.	4 : 2	அழுங்கிய	* தாங்கிய
142.	3 : 2-3	தன்றோ இலளே	* தனளோ இல்ளோ
144.	5 : 1	பரல்பாற்	* பரல்பாழ்
150.	4 : 3-4	மல்கும்	* மிகுமினி மல்கும்
151.	4 : 1	குன்றுறு	* குன்றுகெழு
158.	5 : 1	இமயமும்	இமையமும்
161.	4 : 1	அன்னா	அன்னாய்

பாட்டு - அடி சீர்		சங்க இலக்கியம்	த. ப. பதிப்பு
165.	3 : 1	இருங்கரை	* அருங்கரை
165.	4 : 3	வீஇந்து	* வீந்து
166.	3 : 3	மரந்தை	மாந்தை
173.	4 : 1	பழிபடர்	* அழிபடர்
173.	7 : 4	உளேனே	* உளெனே
174.	2 : 1	கவைமுடக்	* கவைமுட்
176.	7 : 3	கலிழும்என்	கலுழும்என்
182.	6 : 1	கலிழ்கவின்	கலிங்கவிர்
184.	4 : 3	மாண்தகை	நாண்தகை
	5 : 3	மாண்முடிப்	மாமுடிப்
186.	4 : 3	தோழிஎம்	* தோழிஎன்
190.	5 : 1	நரைஉரும்	* உரவுரு
191.	1 : 3	இதுஎன	* இதுஎன்
191.	3 : 4	உள்ளத்	* உள்ளா
191.	7 : 4	மன்னே	யாமே
193.	5 : 2	மன்னெம்	* மன்னெடும்
199.	8 : 4	பெறினே	* பெறுமே
200.	2 : 2	தாஅய்	* தாஅய
	2 : 3-4	வீசும் வளிகலந்து	* வீஇ சுமந்துவந்து
	5 : 4	மாமலை	* மாமழை
201.	5 : 3	மூங்கிலில்	* மூங்கில்
203.	5 : 1	ஓரீஇனன்	* ஓரீஇ
208.	5 : 3	ஒன்றி	* ஒன்ற
209.	2 : 4	கரக்கும்	* கறங்கும்
209.	4 : 1	குறுநடைப்	* குறுநடை
	4 : 2	புள்உள்	* பலஉள்
	7 : 1	மையிருங்	மழையிருங்
211.	3 : 4	எஞ்சாது	* எஞ்சாத்
212.	2 : 3	தெளிர்மணி	* தெளிமணி
216.	6 : 2	பெய்யும்	* பெய்ய
217.	1 : 1	தினைகிளி	தினைக்கிளி
	1 : 2	கடிதலின்	* கடிகெனில்
	6 : 1	ஐதேய்	* ஐதே
	6 : 2	கம்ம	* காமம்
219.	5 : 4	அள்ளிலைத்	* முள்ளிலைத்
	6 : 4	சேர்ப்பற்கு	* சேர்ப்பர்க்கு
225.	5 : 2	மறந்தமையாய்	மறந்தனை

பாடல் - அடி சீர்		சங்க இலக்கியம்	த. ப. பதிப்பு
	7 : 3	உரியவால்	உரியவா
227.	1 : 1	பூண்வளைந்து	* பூண்வனைந்து
230.	6 : 2	தவச்சின் னாளினன்	* சின்னாள் அன்ன
233.	1 : 3	கல்வாய்ச்	* அகல்வாய்ச்
236.	2 : 1	நொந்தனை	* நேர்ந்தனை
247.	3 : 3-4	புணையுமார் இவ்வென	உளையுமார் இல்லென
251.	1 : 4	மாயினம்	ஆய்இனம்
252.	4 : 3	அவனெதிர்	அவனே
255.	6 : 1	தம்கடன்	கடன்கடன்
	8 : 1	நாம்வெம்	நாமஎம்
256.	2 : 1	பிணங்கரில்	* பிணிகால்
258.	5 : 3	அங்கோட்டு	* அம்தோட்டு
	8 : 3	தொலைவன	தொழுதன
261.	1 : 1	பழமழை	படுமழை
261.	3 : 2	இருக்க	இருக்கத்
264.	5 : 1	பயந்தக்	பசந்தக்
	5 : 3	பயப்புஒல்	பசப்புஒல்
270.	2 : 4	ஊழின்	ஊழியின்
	4 : 1	பெய்கினி	* பெய்தினி
273.	2 : 1	பெருங்காடு	* பெருங்காட்டு
274.	1 : 4	உகாஅத்து	* உகாஅய்க்
	2 : 1	இறவுச்சினை	* காசினை
	8 : 3	முயங்கினம்	* உள்கினம்
275.	4 : 1	புல்லார்	புல்லூர்
275.	4 : 3	பூண்மணி	பூமணி
277.	1 : 3	ஆசில்	* நாயில்
	4 : 1	அற்சிர	அற்சிரை
278.	6 : 1-2	ஓர்ப்பன ஓர்ப்பன	* ஏற்பன ஏற்பன
279.	5 : 1	மழைகழூஉ	மழைகெழு
282.	5 : 4	விரிந்த	அவிந்த
	8 : 4	நமரே	அவரே
285.	7 : 2	பருந்திருந்து	* ஒருபருந்து
	7 : 3	உகக்கும்	* இருக்கும்
286.	4 : 3	கொடிச்சி	மடந்தை
287.	3 : 1	முந்நால்	முந்நாள்
291.	4 : 3-4	விழல்ஓ வாவே	விழல்ஒல் லாவே
293.	5 : 1	அயவெள்	வயல்வெள்

பாடல் - அடி சீர்		சங்க இலக்கியம்	த. ப. பதிப்பு
294.	5 : 1-2	துத்திப் பாந்தள்	* தித்தி பரந்த
295.	3 : 2	வருதி	நின்றாய்
296.	3 : 1	உறுகழிச்	அறுகழிச்
297.	3 : 2	எதிர்ந்த	* இறந்த
298.	5 : 4	தந்தை	* பின்றை
299.	3 : 1	இணர்வீழ்	* இனரவிழ்
300.	8 : 1-2	விடல்சூ ழலன்யான்	விடல்சூ ழலென்யான்
301.	2 : 3	சிறுகோல்	சிறுபொன்
	5 : 3	இன்மணி	* இனமணி
307.	3 : 1	இன்னாப்	* இன்னம்
	6 : 2	யாஅம்	யாஅத்
308.	1 : 2	வாழைச்	வாழை
	1 : 3-4	சுரிநுகும் பிணைய	சுரித்துகும் பிணிய
309.	7 : 1-2	இன்னா தனபல	இன்னா கிளபல
314.	5 : 1-2	இன்னுறல் இளமுலை	மின்னுறழ்இழைமுலை
315.	3 : 2	அனையன்	அனையனென்
316.	1 : 4	நிறுப்பவும்	நிற்பவும்
318.	5 : 4	எய்த்தஇப்	வேய்கவிப்
319.	4 : 1	மையணி	அமையணி
320.	1 : 3	கோள்மீன்	* கொண்மீன்
321.	6 : 4	அதனால்	அதனான்
326.	1 : 2	கோதைப்	தோகைப்
332.	5 : 1	குன்றகச்	* குன்றச்
335.	5 : 1	வெற்பயல்	வெற்பன்
336.	1 : 2	உவகை	உறுநகை
	2 : 1	ஈங்கனம்	ஈங்கினம்
337.	3 : 1	செறிமுறை	* செறிநிரை
	4 : 4	அணங்குஎன	* அணங்குதற்கு
	5 : 2	அறிவல்	* அறிவலே
338.	5 : 4	அற்சிரம்	* அச்சிரம்
339.	5 : 4	மாவிதழ்	நறுவிதழ்க்
340.	4 : 1	அழுவம்	அழியின்
341.	6 : 1	வலியா	வலிய
346.	1 : 3	முளைக்கோட்டு	முனைக்கோட்டு
347.	1 : 2	உலர்ந்த	* புலர்ந்த
349.	1 : 3	சிதைஇய்மீன்	தையமீன்
	1 : 4	அருந்தி	* ஆருந்தும்

பாட்டு - அடி சீர்		சங்க இலக்கியம்	த. ப. பதிப்பு
	6 : 2	தாவெனக்	தாவெனச்
	6 : 3	கூறலின்	* சொல்லினும்
350.	3 : 3	செல்வர்	செல்லார்
351.	1 : 3	விரைவுறு	விரவும்
	3 : 1-2	ஈர்மணல் மலிர்நெறி	இளமணல் ஈர்நெறி
356.	4 : 2	கலுழி	கலுழித்
358	2 : 4	இட்டுச்	இட்டு
	3 : 1	சுவர்வாய்	வாய
	7 : 1	சொல்லுப	சொல்லுவ
363.	2 : 1	செங்கால்	* செங்கோல்
365.	4 : 2	ததும்பி	* ததும்பிப
366.	3 : 1	வேறுயான்	எனயான்
	6 ; 1	ஒழுகு	* அழுத
368.	7 : 1	இடிகரைப்	* திண்கரைப்
372.	6 : 3	அளவை	இரவை
373.	1 : 3	நீர் திரிந்து	* நீர்தீப்
375.	6 : 3-4	அவியா மாறே	அவியன்மா ரன்றே
376.	2 : 3	ஆரம்	ஆஅம்
377.	4 : 1	அறிதற்கு	எய்தற்கு
378.	1 : 2	காணாத	* காயாது
	1 : 3-4	மாண்நிழற் படீஇய்	* மரநிழல் பட்டு
	3 : 2-3	தலைய வாகுக	தலையின் றாகத்
	3 : 4	நம்நீத்துச்	தண்ணளிச்
379.	4 : 1	அறிவுகாழ்க்	அறுவுகாழ்
380.	7 : 2	தோன்றும்	தென்ப
381.	5 : 3	நாள்மலர்	நன்மலர்
382.	3 : 1	பூஅமல்	* பூமலி
	4 : 1-2	வம்புப் பெய்யுமால்	வம்பும் பெய்யுமார்
383.	4 : 4	ஒடுங்கத்	ஒடுங்கித்
384.	4 : 3	மகிழ்நநின்	மகிழ்ந்த
385.	7 : 2	தம்மஇவ்	தம்மஇப்
	7 : 3	அழுங்கல்	பழங்கேள்
388.	2 : 2	ஒற்றினும்	எற்றினும்
389.	4 : 3	என்றனென்	என்றலின்
390.	3 : 3	சாத்துவந்து	சார்ந்துவந்து
392.	5 : 1	துளரெறி	துளிரெறி
	6 ; 1	தமரின்	தமரான்

பாடல் - அடி சீர்		சங்க இலக்கியம்	த. ப. பதிப்பு
392.	7 : 2	நுண்தோல்	நுண்தேர்
394.	4ஆம்	அடி இல்லை	கூரை முற்றும் சாரல்
	6 : 2	புனம்மேய்ந்து	* மேய்தந்து [நாடல்
395.	4 : 1	அரவுநுங்கு	அரவுறு
	6 : 1	அஞ்சல்	அஞ்சேல்
	8 : 1-2	ஆங்கவர் வதிவயின்	யாங்கா வாவது
397.	2 : 3	பெய்த	* பெய்தல்
398.	1 : 1	தேற்றாம்	செற்றாம்
	2 : 2	திவலைத்	* துவலைத்
	5 : 1	சுடர்துமர்	சுடர்துயில்
	8 : 3	அரக்கு	ஆக்கு
400.	4 : 4/5 : 1	கரம்பைப்	களரிக் கரம்பைப்

முற்பதிப்புகள் — தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிப்பு

பாடவேறுபாடுகள் [புதியன] - 131

பாடல் - அடி - சீர்		முற்பதிப்பு	த. ப. பதிப்பு	விளக். பக்.
0.	4 : 3	அஞ்சுடர்	செஞ்சுடர்	1
3.	3 : 1	கருங்கோல்	கருங்கால்	5
5.	3 : 2	திவலை	துவலை	7
	3 : 4	தீநீர்	தூநீர்.	7
7.	2 : 2	மேலவும்	மேலன	9
8.	1 : 2	மாஅத்து	மரத்து	10
11.	4 : 4	முனாது	முனாஅது	14
12.	1 : 1	எறும்பி	எறும்பின்	16
13.	4 : 1	நோய்தந்து	ஓய்தந்து	17
14.	1 : 4	வந்த	நிவந்த	18
15.	5 : 1	சேயிலை	செயலை	19
17.	4 : 3	காமம்காழ்க்	காமம்காழ்	21
21.	5 : 2	தேறேனவர்	தெறேனவர்	25
24.	4 : 1	எழுகுளிறு	எழுகளிறு	28
25.	1 : 4	கள்வன்	களவன்	29
	3 : 4	கால	காஅல	29
26.	7 : 4	தந்தைக்	தந்தை	30
27.	4 : 2	உணீஇயர்	உணீஇய	31
28.	1 : 1	முட்டுவேன்	மூட்டுவேன்	32
29.	4 : 4	நன்றும்	என்றும்	33
31.	6 : 3	மோராடு கள	ஆடுகள	35
32.	5 : 1	தெற்றெனத்	தோற்றேன்	37
34.	6 : 2	மரந்தை	மாந்தை	38
43.	1 : 4	தனனே	தெனனே	47
51.	3 : 2	பரக்கும்	வரிக்கும்	54
52.	1 : 1	ஆர்களிறு	ஆர்கலி	54
54.	1 : 4	என்னலனே	என்னலன்	56
67.	2 : 3	வேப்ப	வேம்பின்	68
	3 : 2	நுழைப்பான்	நுழைப்பாள்	68
88.	3 : 4	சாரல்	சோலை	85

பாட்டு - அடி - சீர்		முற்பதிப்பு	த. ப. பதிப்பு	விளக். பக்.
97.	1 : 4	என்னலனே	என்னலன்	94
103.	1 : 3	நடுங்கஞர்	நடுங்கயிர்	99
105.	2 : 4	செழுங் குரல்	சில்குரல்	101
106.	6 : 1	தான்மணந்	தாம்மணந்	102
127.	6 : 2	போல்வர்நீ	போல்வர்நின்	119
132.	6 : 1-2	சாஅய் நோக்கினள்	சாய்நோக்கினளே	123
133.	1 : 4	சிறுதினை	சிறுதினைக்	124
150.	4 : 3-4	மல்கும்	மிகுமினி மல்கும்	138
158.	5 : 1	இமயமும்	இமையமும்	145
161.	4 : 1	அன்னா	அன்னாய்	148
166.	3 : 3	மரந்தை	மாந்தை	151
176.	7 : 3	கலிழும்என்	கலுழும்என்	160
182.	6 : 1	கலிழ்கவின்	கலிங்கவிர்	166
184.	4 : 3	மாண்தகை	நாண்தகை	168
	5 : 3	மாண்முடிப்	மாமுடிப்	168
191.	7 : 4	மன்னே	யாமே	173
209.	7 : 1	மையிருங்	மழையிருங்	188
217.	1 : 1	தினைகிளி	தினைக்கிளி	194
225.	5 : 2	மறந்தமையாய்	மறந்தனை	201
	7 : 3	உரியவால்	உரியவா	201
247.	3 : 3-4	புணையுமார் இவ்வென	உளையுமார் இல்லென	219
251.	1 : 4	மாயினம்	ஆய்இனம்	221
252.	4 : 3	அவனெதிர்	அவனே	222
255.	6 : 1	தம்மடன்	கடன்கடன்	225
	8 : 1	நாம்வெம்	நாமஎம்	225
258.	8 : 3	தொலைவன	தொழுதன	227
261.	1 : 1	பழமழை	படுமழை	230
262.	3 : 2	இருக்க	இருக்கத்	231
264.	5 : 1	பயந்தக்	பசந்தக்	233
	5 : 3	பயப்புஒல்	பசப்புஒல்	233
270.	2 : 4	ஊழின்	ஊழியின்	238
275.	4 : 1	புல்லார்	புல்லூர்	241
	4 : 3	பூண்மணி	பூமணி	242
277.	4 : 1	அற்சிர	அற்சிரை	244
279.	5 : 1	மழைகழுஉ	மழைகெழு	245
282.	5 : 4	விரிந்த	அவிந்த	248
282.	8 : 4	நமரே	அவரே	248

பாட்டல் - அடி - சீர்		முற்பதிப்பு	த. ப. பதிப்பு	விளக். பக்.
286.	4 : 3	கொடிச்சி	மடந்தை	251
287.	3 : 1	முந்நால்	முந்நாள்	252
291.	4 : 3 - 4	விழல்ஓ வாவே	விழல்ஓல் லாவே	255
293.	5 : 1	அயவெள்	வயல்வெள்	257
295.	3 : 2	வருதி	நின்றாய்	259
296.	3 : 1	உறுகழிச்	அறுகழிச்	261
300.	8 : 1 - 2	விடல்கூ ழலன்யான்	விடல்கூ ழலென்யான்	264
301.	2 : 3	சிறுகோல்	சிறுபொன்	265
307.	6 : 2	யாஅம்	யாஅத்	271
308.	1 : 2	வாழைச்	வாழை	272
	1 : 3 - 4	சுரிநுகும் பிணைய	சுரித்துகும் பிணிய	272
309.	7 : 1 - 2	இன்னா தனபல	இன்னா கியபல	273
314.	5 : 1 - 2	இன்னுறல் இளமுலை	மின்னுறழ் இழைமுலை	277
315.	3 : 2	அனையன்	அனையனென்	278
316.	1 : 4	நிறுப்பவும்	நிற்பவும்	279
318.	5 : 4	எய்த்தஇப்	வேய்கவிப்	280
319.	4 : 1	மையணி	அமையணி	281
321.	6 : 4	அதனால்	அதனான்	284
326.	1 : 2	கோதைப்	தோகைப்	287
335.	5 : 1	வெற்பயில்	வெற்பன்	295
336.	1 : 2	உவகை	உறுநகை	296
	2 : 1	ஈங்கனம்	ஈங்கினம்	296
339.	5 : 4	மாவிதழ்	நறுவிதழ்க்	299
343.	4 : 1	அழுவம்	அழியின்	299
341.	6 : 1	வலியா	வலிய	300
346.	1 : 3	முளைக்கோட்டு	முனைக்கோட்டு	304
349.	1 : 3	சிதைஇயமீன்	சிதையமீன்	307
	6 : 2	தாவெனக்	தாவெனச்	307
350.	3 : 3	செல்வர்	செல்லார்	308
351.	0 : 3	விரைவுறு	விரவும்	309
351.	3 : 1 - 2	ஈர்மணல் மலிர்நெறி	இளமணல் ஈர்நெறி	309
356.	4 : 2	கலுழி	கலுழித்	313
358.	2 : 4	இட்டுச்	இட்டு	315
358.	3 : 1	சுவர்வாய்	வாய	315
	7 : 1	சொல்லுப	சொல்லுவ	315
366.	3 : 1	வேறுமான்	வெனயான்	321
372.	6 ; 3	அளவை	இரவை	326

பாட்டல் - அடி - சீர்		முற்பதிப்பு	த. ப. பதிப்பு	விளக். பக்.
375.	6 : 3 - 4	அவியாமாறே	அவியன்மாரன்றே	328
376.	2 : 3	ஆரம்	ஆஅம்	329
377.	4 : 1	அறிதற்கு	எய்தற்கு	330
378.	3 : 2-3	தலைய வாகுக	தறையின்றாகத்	330
	3 : 4	நம்நீத்துச்	தண்ணளிச்	330
379.	4 : 1	அறிவுகாழ்க்	அறிவுகாழ்	331
380.	7 : 2	தோன்றும்	தென்ப	332
371.	5 : 3	நாள்மலர்	நன்மலர்	333
382.	4 1-2	வம்புப்பெய்யுமால்	வம்பும்பெய்யுமார்	334
383.	4 : 4	ஓடுங்கத்	ஓடுங்கித்	334
384.	4 : 3	மகிழ்நநின்	மகிழ்ந்த	335
385.	7 : 2	தம்மஇவ்	தம்மஇப்	336
	7 : 3	அழுங்கல்	பழங்கேள்	336
388.	2 : 2	ஒற்றினும்	எற்றினும்	339
	4 : 3	என்றனென்	என்றலின்	339
390.	3 : 3	சாத்துவந்து	சார்ந்துவந்து	340
392.	5 : 1	துளரெறி	துளிரெறி	342
	6 : 1	தமரின்	தமரான்	342
	7 : 2	நுண்தோல்	நுண்தேர்	342
394.	4 ; 1-4	4ம் அடி இல்லை	கூரை முற்றும் சாரல் நாடல்	344
395.	4 : 1	அரவு நுங்கு	அரவுறு	345
	6 : 1	அஞ்சல்	அஞ்சேல்	345
	8 : 1-2	ஆங்கவர் வதிவயின்	யாங்கா வாவது	345
398	1 : 1	தேற்றாம்	செற்றாம்	347
	5 : 1	சுடர்துயர்	சுடர்துயில்	347
	5 : 3	அரக்கு	ஆக்கு	347
400.	4:4/5-1	கரம்பைப்	களரிக் கரம்பைப்	349

குறுந்தொகை - சில புள்ளி விவரங்கள்

1.	இத்தொகை முடித்தான் - பூரிக்கோ.	முதலில் பதிப்பித்தவர்: திருமாளிகைச் சௌரிப் பெருமாளரங்கன் 1915
2.	பாடல்கள்—1 + 401	402
3.	மொத்த அடிகள்	2506
4.	மொத்த சீர்கள்	9641
5.	பாட வேறுபாடு கொண்ட சீர்கள்	2033
6.	பாடவேறுபாடு %	21% (கிட்டத்தட்ட நூற்றாண்டுக்கு (1%)
7.	மாறுபாடற்ற பாடல்கள்	5
8.	” %	1.24%
9.	பாடிய புலவர்கள்	1+204
10.	ஆசிரியர் பெயர் இல்லாதன	10
11.	சிற்றெல்லை (பாடலின் அடிகள்)	4
12.	பேரெல்லை (”)	8
13.	விதிவிலக்கான பாடல்கள் 2-ன் அடிகள்	9 (307, 391)
14.	ஒரு பாடலே பாடிய புலவர்	150
15.	இரண்டு பாடல் பாடிய புலவர்	24
16.	மூன்று ”	10
17.	நான்கு ”	8
18.	ஐந்து ”	2
19.	ஆறு ”	2
20.	ஏழு ”	1
21.	எட்டு ”	2
22.	ஒன்பது ”	1

		சங்.
23.	பத்து ,,	1
24.	பதினொன்று ,,	1 (அம்மூவனார்)
25.	பதினைந்து ,,	1 (ஔவையார்)
26.	பதினேழு ,,	1 (பரணர்)
27.	இருபத்தெட்டு ,,	1 (கபிலர்)
28.	ஆண்பாற் புலவர்கள்	195
29.	பெண்பாற் புலவர்கள்	9
29.	சிறப்புத் தொடரால் பெயர் பெற்ற அ புலவர்கள்	19
30.	4 அடிப் பாடல்கள்	38
31.	5 ,,	89
32.	6 ,,	95
33.	7 ,,	103
34.	8 ,,	75
35.	9 ,,	2
36.	தனிச்சொல் இடம்பெற்ற பாடல்கள்	11
37.	நேரிசை ஆசிரியப்பாவின	397
38.	நிலைமண்டில ,,	5
39.	குறிஞ்சித் திணைப்பாடல்கள்	145
40.	பாலை ,,	90
41.	முல்லை ,,	45
42.	மருதம் ,,	50
43.	நெய்தல் ,,	71
44.	தலைவன் கூற்றாக வருவன	92
45.	தலைவி கூற்றாக வருவன	180
46.	தோழி கூற்றாக வருவன	140
47.	செவிலித்தாய் கூற்றாக வருவன	9
48.	பாங்கன்கூற்றாக வருவன	2

49. கண்டோர் கூற்றாக வருவன 3
50. காதற்பரத்தை கூற்றாக வருவன 5
51. பரத்தை கூற்றாக வருவன 2
52. இற்பரத்தை கூற்றாக வருவது 1

தொகுப்பு

இத்தொகை தொகுக்கப்பட்ட பாடல் வரிசை முறை விளங்கவில்லை. தலைவன், தலைவி, தோழி போன்ற கிளவிக்குரியார் முறையிலோ, குறிஞ்சி, பாலை, முல்லை போன்ற திணை முறையிலோ, பாடிய புலவர் முறையிலோ, பாடல் அடிவரையின் முறையிலோ, கால அடைவிலோ, கூற்றை விளக்கும் துறைகளின் முறையிலோ பிற ஏதுக்களின் முறையிலோ முறைப்படத் தொகுக்கப் பெற்றதாகத் தோன்றவில்லை.

இத்தொகுப்பின் முதல் பாடலைக் குறிஞ்சித் திணையில் தோழி தொடங்கி வைக்க, நெய்தல்திணையில் தலைவி முடித்து வைக்கின்றாள்.

குறுந்தொகை

கடவுள் வாழ்த்து

தாமரை புரையும் காமர் சேவடிப்
பவழத்து அன்ன மேனித் திகழ்ஒளிக்
குன்றி ஏய்க்கும் உடுக்கைக் குன்றின்
நெஞ்சுபக எறிந்த செஞ்சுடர் நெடுவேல்
சேவல்அம் கொடியோன் காப்ப
ஏம வைகல் எய்தின்றால் உலகே.

— பாரதம் பாடிய பெருந்தேவனார்

செந்தாமரைப் பூவினை ஒத்திருக்கும் உள்ளம் கவரும் அழகிய சிவந்த திருவடிகளையும், பவழநிறம் போன்ற செந்நிறத் திருமேனியையும், மேன்மேலும் பொங்கிவரும் ஒளியினையும், குன்றிமணியின் நிறத்தைக் கொண்ட செவ்வாடையினையும், கிரவுஞ்ச மலையின் நடுவிடம் பிளவுபடும்படி வீசிய செந்நிறம் ஒளிரும் நீண்ட வேலாயுதத்தினையும் கொண்டுள்ள சேவற் கோழிக் கொடியுடையோனாகிய முருகன் காத்துவருதலினாலே இந்த உலகத்து உயிர்கள் எல்லாம் இன்ப மயமான நாள்களை அடைகின்றன.

இப் பாடல் பாடாண்திணைப் பகுதியவாகிய கடவுள் வாழ்த்து. இதில் முருகப் பெருமானின் திருவுருவமும் அவனது அளியும் தெறலும் சிறப்பிக்கப்பட்டுள்ளன.

அகத்திணைக் களவொழுக்கத்திற்குரிய நிலப்பகுதி குறிஞ்சி. அகப்பொருள் தொகைநூலாகிய இதற்குக் குறிஞ்சிக் கடவுளை முன்வைத்து வாழ்த்துதலால் இஃது ஏற்புடைக் கடவுள் வாழ்த்து ஆம்.

சேவடி, மேனி, உடுக்கை என்பன செந்நிறமாக வருணிக்கப் படுதலின் வேலும் செஞ்சுடர் நெடுவேல் எனக் கொள்வது பொருத் தமாம். குன்றை எறிந்த என்பதால் குருதி பட்டுச் சிவந்த வேல் என்று கொள்ளத்தகும். முதற்பாட்டில் 'செங்கோல் அம்பு' எனக் குறிப்பிடுதலும் ஒப்புக் காணத்தகும். குன்றின் நெஞ்சு பக எறிந்த வேல், செஞ்சுடர்வேல், நெடுவேல் என அவ் வேலின் வினை, உரு, மெய் என்னும் முத்தன்மைகளையும் சுட்டியதாகக் கொள்வது பொருத்தமாம். பிற சங்க நூல்களுள் ஒன்றாகிய திருமுருகாற்றுப்

படையில், 'செவ்வேற் சேஎய்' (61) என்று முருகப் பெருமான் சிறப்பிக்கப்பட்டுள்ளார். 'சூர் கொன்ற செவ்வேலாற் பாடி' என்பது கலித்தொகை (93 : 26). மன்னரின் வேலையும் 'செவ்வேல்' என்று குறிப்பிடும் மரபு சங்க நூல்களில் காணப்படுகிறது : 'செவ்வேல் வயவன்' (நற். 260 : 6), 'செவ்வேல் மலையன்' (குறுந். 312 : 2), 'செவ்வேல் முள்ளூர் மன்னவ்' (அக. 209 : 11-12).

'ஏம வைகல்' என்பதற்கு 'ஏமம் வைகல்' என்னும் பாடமும் பொருந்துவதே. பாதுகாப்பை எந்நாளும் பெற்றன என்பது பொருள்.

காமர் - அழகு, விருப்பம்; குன்றி - குன்றிமணி; உடுக்கை - அரையாடை; நெஞ்சு - நடுவிடம்; ஏமம் - காப்பு; வைகல் - நாள்; எய்தின்று - அடைந்தது, பெற்றது; தொகுதியொருமை. 'ஏமவைகல்' என்னும் தொடருக்குப் 'பிறவித் துன்பம் சாராத நாள்கள்' என்பர் பரிமேலழகர் (பரி. 17 : 53 உரை).

தாமரை, பவழம், குன்றி, குன்றம் என்பவை முறையே மருதம், நெய்தல், முல்லை, குறிஞ்சி என்னும் இன்ப நிகழ்வுக்குரிய நானிலங்களைச் சுட்டுவதாகவும் உரைப்பர்.

1. குறிஞ்சி — தோழி கூற்று

செங்களம் படக்கொன்று அவுணர்த் தேய்த்த
செங்கோல் அம்பின் செங்கோட்டு யானைக்
கழல்தொடிச் சேஎய் குன்றம்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே.

— திப்புத்தோளார்

தோழி கையுறை மறுத்தது.

வெற்ப! போர்க்களத்தில் எதிர்த்த அவுணர்கள் சாயுமாறு கொன்று வீழ்த்தி, அந்த அசுரர்களைத் தரையோடு தரையாய்த் தேய்த்து இல்லையாம்படி செய்த சிவந்த நேரான அம்பினையும், பகைவரைக் குத்தியமையால் செந்நிறம் படிந்த கொம்புகளையுமுடைய யானையையும், கழல இடப்பட்ட வீரவளையினையும் உடைய முருகப் பெருமானுக்குரிய இந்த மலை உதிரநிறம் வாய்ந்த பூக்களைக்கொண்ட செங்காந்தளின் பூங்கொத்துகளையுடையது.

காந்தட்பூ நிறைய உடையேமாதலின் நின் கையுறையாம் காந்தட் பூவினை ஏற்றுக்கொள்ளோம் என்பது கருத்து. இது கூற்றெச்சம் எனப்படும்.

செங்களம் - போர்க்களம்; செங்கோலம்பு - சிவந்த வளைவற்ற நேரான அம்பு; கோல் - நேர்மை, திரட்சி; யானை - முருகக் கடவுளின் ஊர்திகளுள் ஒன்று. இதனைப் பிணிமுகம் என்பர். கழல்தொடி - உழலுந்தொடி, வினைத்தொகை; கழலும் தொடியும் என உம்மைத் தொகையாக்கிக் காலில் வீரக்கழலையும் கையில் வீரவளையையும் உடையான் என்றும் கொள்ளலாம். சேஎய் - அளபெடுத்த பெயர். 'சேய' என்னும் பாடத்திற்குச் சேயினுடைய குன்றம் என்றாம்.

குருதி - உதிரம், சிவப்பு; குலை - கொத்து; காந்தள் - இங்கே செங்காந்தள்; அடைமொழி வெண்காந்தளை விளக்கியது.

இப் பாடலைத் "தோழி தலைவியை இடத்துய்த்து நீங்கியது" என்னும் துறைப்பாற்படுத்துவர் நச்சினார்க்கினியர் (தொல். களவு. 23). தலைமகனது வரவு உணர்ந்த தோழி தலைமகளைக் குறியிடத்துக் கொண்டு சென்று, 'யான் செங்காந்தட்பூக் கொய்து வருவல்' என அவளை விட்டு நீங்குவள். 'அது காண்பாயாகிற் காண்' எனத் தலைவியை நோக்கி இடத்துய்த்துக் கூறுவது குறிப்பெச்சமாகும்.

2. குறிஞ்சி — தலைவன் கூற்று

கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயில்இயல்
செறிஎயிற்று அரிவை கூந்தலின்
நறியவும் உளவோநீ அறியும் பூவே.

— இறையனார்

(இயற்கைப் புணர்ச்சி புணர்ந்தவழி) இயற்கைப் புணர்ச்சிக்கண் இடையீடுபட்டு நின்ற தலைமகன் தலைமகளை நாணின் நீக்குதற்பொருட்டு மெய்தொட்டுப் பயிறல் முதலாயின அவள் மாட்டு நிகழ்த்திக் கூடித் தனது அன்புதோற்ற நலம் பாராட்டியது.

மணத்தை நாடிச் சென்று பூந்தேனை உண்ணும் வாழ்க்கையினையும் உட்சிறகினையும் பெற்ற உயர்வண்டே! என் விருப்பத்தையே நீ பேசாமல் கண்டவற்றையே சொல்வாயாக. என்னோடு என்றும் நீங்காது பொருந்திய நட்பையும் மயில்போன்ற மென்மையையும் நெருங்கிய பற்களையுமுடைய இப் பெண்ணின் கூந்தலைப் போல நீ அறியும் மலர்களுள் நறுமணமுடையன உள்ளனவோ? செப்புவாயாக.

இதனால் தன் தலைவியின் கூந்தல் இயற்கை மணம் மிகவுடையது என்பதைக் குறிப்பித்தவாறாம்.

'கண்டது' என்பது தொகுதியொருமையாய்க் கண்டவற்றை யெல்லாம் சுட்டும். 'கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்,' 'கண் கண்டது கைசெய்யும்' என்னும் உலகியலுரைகள் நோக்கத்தக்கன.

கொங்கு - மணம், தேன்; பூந்தாது என்றும் உரைப்பர். அஞ்சிறை - அகஞ்சிறை, உட்சிறகு; அம் சிறை எனப் பிரித்து அழகிய சிறை என்னவும் ஆம். தும்பி - வண்டினத்தில் உயர்ந்தது; உயர்ந்த சாதி வண்டு. சுரும்பு, மிஞிறு, வண்டு, தேன் என்பவை தும்பியின் இனங்களாம். சீவகன் சுரமஞ்சரி, குணமாலை என்னும் இருவருடைய சுண்ணங்களுள் ஏற்றம் காண வண்டுகளை அழைத்து ஆராய்ந்தது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

காமம் - விருப்பம்; இயல் - சாயல், நடை; செறிவு - நெருக்கம்; பயிலியது கெழீஇய நட்பு - எழுமையும் என்னோடு பொருந்தித் தொடர்ந்து வரும் நட்பு. அரிவை என்பது இங்குப் பெண்களின் பருவநிலையைக் குறியாது பெண் என்னும் பொருளில் வந்துள்ளது.

"கொங்கு தேர் வாழ்க்கை என்னும் பாட்டு இயற்கைப் புணர்ச்சிக்கண் நிகழ்ந்த செய்யுள்" என்பர் பேராசிரியர் (தொல். செய்யு. 187). நச்சினார்க்கினியரோ, "இயற்கைப் புணர்ச்சியில் தலைவன் கூற்றாகக் குறிக்கப்படும் முன்னிலையாக்கல்" (தொல். களவு. 10) என்பதற்கு இப் பாடலை எடுத்துக்காட்டுவர்.

"இதனுள், 'தும்பி' என்றது முன்னிலையாக்கல்; 'கண்டது மொழிமோ' என்றது சொல்வழிப்படுத்தல்; 'கூந்தலின் நறியவும் உளவோ' என்றது நன்னயமுரைத்தல்; 'காமம் செப்பாது' என்றது என் நிலத்து வண்டாதலின் எனக்காகக் கூறாது மெய் கூறு எனத் தன் இடம் அதுவாகக் கூறலின் இடமணித்து என்றது; 'பயிலியது செழீஇய நட்பு' என்றது தம் நிலை உரைத்தல்" (தொல். களவு. 10). மேலும், நச்சினார்க்கினியர், "கொங்குதேர் வாழ்க்கை என்பதும் இளவேனிலாயிற்று; தும்பி கொங்கு தேரும் காலம் அதுவாதலின்" (தொல். அகத். 16) என்றும் விளக்குவர்.

இதனை ஆலவாய் இறையனாராகிய சொக்கநாதர் தருமிக்குப் பொற்கிழி வாங்கித் தருவதற்காகப் பாடிய பாட்டு எனத் திருவிளையாடற்புராணம் முதலியன கூறும்.

3. குறிஞ்சி — தலைவி கூற்று

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆர்அளவு இன்றே சாரல்
கருங்காற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே.

— தேவகுலத்தார்

தலைமகன் சிறைப்புறமாக, அவன் வரைந்து கொள்வது வேண்டித் தோழி இயற்பழித்தவழித் தலைமகள் இயற்பட மொழிந்தது.

மலைப்பக்கத்திலே கரிய காம்புகளைக்கொண்டுள்ள குறிஞ்சி மலர்களைக் கொண்டு பெரிய அளவாகத் தேனைச் சேர்த்தற்கு இடமான நாட்டையுடைய தலைவனால் விளைந்த நட்பு, நிலவுலகத்தைக் காட்டிலும் பெரிதும் விரிந்தது; வானை விடவும் அதிகம் உயர்ந்தது; கடலைக்காட்டிலும் அளத்தற்கு அரிய ஆழமுடையது.

எனவே, தலைவன் தலைவியோடு கொண்டுள்ள நட்பு மிகவும் சிறந்தது என்பது விளக்கமாம். இத்தகு நட்பினால் தலைவன் விரைந்து வந்து மணங்கொள்வான் என்பது குறிப்பு.

இழைத்தல் - சிறிதுசிறிதாகச் சேர்த்தல்; நீர் - கடல்; உயர்ந்தன்று - உயர்ந்தது; அளவின்று - அளவிடற்கு அரியது. கால் - காம்பு.

குறிஞ்சி பன்னிரண்டு ஆண்டிற்கு ஒருமுறை மலரும் என்பர். அம் மலரிலிருந்து எடுக்கப்பெறும் தேன் சுவைமிக்கது என்பதாம்.

பேராசிரியர் இப்பாடலைப் 'பெருமை வியப்பு' என்று போற்றுகிறார். அவர் தரும் விளக்கம் வருமாறு:

"'நிலத்தினும்...........நட்பே' என்பது பெருமை வியப்பு. கருங்காற் குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந்தேன் இழைத்தாற்போல வழிமுறை முறையாற் பெருகற்பாலதாய நட்பு மற்று அவனைக் கண்ணுற்ற ஞான்றே நிலத்தினது அகலம் போலவும் விசும்பின் ஒக்கம் போலவும் கடலின் ஆழம் போலவும் ஒருகாலே பெருகிற்று என்றமையின்! இது தன்கண் தோன்றிய பெருமை வியப்பு. இது தலைமகன் கருத்தினுள் நட்பிற்குக் கொள்ளுங்கால் பிறன்கண் தோன்றிய பெருமை வியப்பாம் என்பது கொள்க" (தொல். மெய்ப். 7).

கருங்காற் குறிஞ்சிப்பூ - என்பதில் கால் என்பது பூவின் காம்பினைக் குறிக்கும். 'திரள் கால் உளை அலரி' என வரும் நாலடியார்த் தொடர் (199) பூக்காம்பினைக் 'கால்' எனக் குறிப்பிடுகிறது. 'கருங்காற் குறிஞ்சி' என்னும் தொடர் நற்றிணையிலும் (268 : 3) மதுரைக் காஞ்சியிலும் (300) வருதலும் ஈண்டு ஒப்பு நோக்கத்தகும். இம் மலரின் காம்பு கருமைநிறம் கொண்டதாகும். எனவே, 'கருங்கால்' என்னும் பாடம் கொள்ளப் பெற்றது.

4. நெய்தல் — தலைவி கூற்று

நோம்என் நெஞ்சே நோம்என் நெஞ்சே
இமைதீய்ப் பன்ன கண்ணீர் தாங்கி
அமைதற்கு அமைந்தநம் காதலர்
அமைவுஇலர் ஆகுதல் நோம்என் நெஞ்சே.

— காமஞ்சேர் குளத்தார்

பிரிவிடை, 'ஆற்றாள்' எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

தோழி! என் நெஞ்சு நோகும்; என் நெஞ்சு நோகும். கண்ணிமைகளைச் சுடுவது போன்ற வெம்மையான கண்ணீரைத் துடைத்துத் தடுத்து உடனிருந்து அளவளாவுதற்குரிய அன்பர் இப்பொழுது உடன் இராமல் பிரிந்திருத்தலால் என் நெஞ்சு வருந்தாநிற்கும்.

பிரிவாற்றாமை மிகுதி தோன்ற 'நோம் என் நெஞ்சு' என மும்முறை கூறினாள்.

முன்பு கண்ணீரை அன்பர் தடுத்தவராதலினால் மீண்டும் அவர் வந்து தலையளிசெய்வார் என எண்ணி ஆற்றுவேன் என்னும் கருத்துப் புலப்படக் காணலாம்.

பிரிவிடை என்பது வரைபொருட்பிரிவிடையாம். நோம்-நோகும், வருந்தும்; தாங்குதல் - தடுத்தல்; அமைதல் - பொருந்தியிருத்தல், தலையளிசெய்தல்.

இளம்பூரணர் இப் பாடலை, 'முனிவு மெய்ந்நிறுத்தல்' என்னும் மெய்ப்பாட்டிற்கு எடுத்துக்காட்டுவர் (தொல். களவு. 21). களவொழுக்கத்தால் நேர்ந்த துன்பத்தைப் பிறர்க்கு வெளிப்படாதவண்ணம் தன் உடம்பின்கண்ணேயே நிறுத்திக் கொள்வது என்பது இம் மெய்ப்பாடு.

5. நெய்தல் — தலைவி கூற்று

அதுகொல் தோழி காம நோயே
வதிகுருகு உறங்கும் இன்நிழற் புன்னை
உடைதிரைத் துவலை அரும்பும் தூநீர்
மெல்லம் புலம்பன் பிரிந்தெனப்
பல்இதழ் உண்கண் பாடுஒல் லாவே.

— நரிவெரூஉத்தலையார்

பிரிவிடை, 'ஆற்றாள்' எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

தோழி! தன்னிடத்தே தங்கியிருக்கும் குருகுகள் உறங்குவதற்கு ஏற்ற இனிய நிழலைத் தரும் புன்னை மரத்தையும் உடைந்து சிதறுகின்ற அலைகளால் வீசப்படும் நீர்த்துளிகள் வெளிப்படும் வெள்ளிய நீர்ப்பரப்பையும் உடைய மென்னிலமாகிய கடற்கரைக்கு உரிய தலைவன் என்னைப் பிரிந்து சென்றானாகப் பல இதழ்களோடு கூடிய குவளைமலர் போன்ற மையுண்ட என் கண்கள் இமை பொருந்தாவாய்த் துயிலுதலைச் செய்யாவாயின. காமநோய் என்பது அத்தகு தன்மையுடையதோ!

'அது கொல்' என்றது கண்கள் துயிலொழிந்து நின்றமையைச் சுட்டியது. செய்யுளாகலான் சுட்டுப் பெயர் முதலில் வந்தது. குருகும் இனிய துயிலைப் பெறுவதாகிய நாட்டினன் எனக்குத் துயில் நீங்குதற்குக் காரணமானான் என்பது உட்குறிப்பு.

உடைதிரை - முரிந்து சிதறுகின்ற அலை; தூநீர்ப் புலம்பு, மெல்லம் புலம்பு எனக் கூட்டுக. தூ - வெண்மை; மெல்லம் புலம்பன் - மென்புலமாகிய நெய்தல் நிலத்தவன். புலம் என்பது புலம்பு என ஆயிற்று; புறம் - புறம்பு, பறம் - பறம்பு என வருவன காண்க. மருதமும் நெய்தலும் மென்புலம் எனப்படும்.

துவலை - தூவப்படும் நீர்த்துளி; தூவுதல் என்னும் வினையடியாக வருதலின் இவ் வடிவமே பொருந்தியதாகும். இப் பொருளில் 'திவலை' என்பது வழங்குமாயினும் சங்கப்பாடல்களில் துவலை என்பதே மிகுதியும் பயின்று வருதல் காணலாம். உடைதிரைத் துவலையினின்று தெறித்து விழும் நீர்த்துளிகள் வெண்ணிறமாகத் தோற்றம் அளிக்குமாதலின் 'தூநீர்' என்னும் பாடம் இங்குக் கொள்ளப்பட்டது. 'தூநீர் வளைநரல் பௌவம்' என்பது நற்றிணைக் கடவுள் வாழ்த்துப் பாடல் தொடராகும்.

'பல் இதழ் உண்கண்' என்பதற்குத் தாமரை மலரைப்போன்ற கண்கள் என்று உரைப்பாரும் உளர். பல் இதழ் என்பது பல இதழ்களையுடைய பூவைக் குறிக்கும். கண்ணுக்குக் கருங்குவளை மலரையே ஒப்பிடுதல் பெருமரபாதலால் இங்கும் குவளை என்பதே சிறப்புடைத்தாம்.

காமநோய் அதுகொல் - அத் தன்மையதாகுமோ என ஐயுற்று உரைத்தாளாம். 'கொல்லே ஐயம்' என்பது தொல்காப்பியம் (சொல். இடை. 20). இங்கே கொல் என்பதனை வினாப்பொருள் தருவதோர் இடைச்சொல் என்றும் கொள்ளலாம். வினாவுள் ஐய வினாவும் ஒன்றாகும். 'வருவர்கொல் வயங்கிழாய்' என்றாற் போலக் கொள்க.

6. நெய்தல் — தலைவி கூற்று

நள்ளென் றன்றே யாமம் சொல்அவிந்து
இனிதுஅடங் கினரே மாக்கள் முனிவுஇன்று
நனந்தலை உலகமும் துஞ்சும்
ஓர்யான் மன்ற துஞ்சா தேனே.

— பதுமனார்

வரைவிடை வைத்துப் பிரிந்தவழி ஆற்றாளாகிய தலைமகள் தோழியை நெருங்கிச் சொல்லியது.

தோழி! இராப்பொழுதின் நடுவாகிய யாமம் செறிந்த இருளையுடையதாயிருக்கின்றது; மனிதர் பேச்சு அடங்கி இனிய துயிலில் ஆழ்ந்துள்ளனர். பரந்த இடத்தையுடைய இவ்வுலகத்துள்ள ஏனைய உயிர்களும் வெறுப்பின்றித் தூக்கத்தில் பொருந்தியுள்ளன. யான் ஒருத்தியே நிச்சயமாக உறங்காதவள் ஆயினேன்.

ஊரும் உலகமும் நல்லுறக்கத்தில் ஆழ்ந்திருக்கும் நடு இரவிலும் யான்மட்டும் துயிலவில்லை எனத் தன் நிலையைத் தலைவி தோழிக்கு எடுத்துரைக்கின்றமை சுட்டப்படுகிறது. இதனால் தலைவியின் பிரிவாற்றாமை வெளிப்படுதல் காணலாம்.

ஐம்பறிவுடைய உயிர்கள் மாக்கள் எனப்படும். தன் துயர் அறியாது அன்னை முதலியோர் தூங்குதலின் இவ்வாறு இழிவு தோன்றக் கூறினாளாம்.

நள் - செறிவு. நள்ளென்னும் ஓசை என்றும் உரைக்கலாம். யாமம் நள் என்னும் குறிப்பு இடையாமம் என்பதனை உணர்த்தும்; பதினைந்து நாழிகையளவினதாகிய நடுஇரவு. நன - அகலப் பொருள் உணர்த்தும் உரிச்சொல். மன்ற - தேற்றப் பொருள் (தெளிவுப் பொருள்) தருவதோர் இடைச்சொல்.

இளம்பூரணர் இப் பாடலைத் தன்வயின் உரிமை என்பதற்கு மேற்கோள் காட்டுவர் (தொல். களவு. 21). நச்சினார்க்கினியர், வாயில்கட்குத் தலைமகள் தன்நிலை உணர்த்தியதாக எடுத்துரைக்கின்றார். அவர்தம் விளக்கவுரை வருமாறு :

தலைவன் வருந்தொழிற்கு அருமை வாயில் கூறின் தலைவிக்குக் கூற்று நிகழும். "இதனுள் பொழுது சென்றதில்லை என்றும் மாக்கள் இன்னும் துயின்றிலர் என்றும் அருமையை வாயில் கூறியவழித் தலைவி யாமமும் நள்ளென்றும் மாக்களும் துயின்றும் வந்திலர் என வருந்திக் கூறியவாறு காண்க" (தொல். களவு. 20). இவர் கருத்துப்படி தலைவி வாயில்கட்குத் தன் நிலை வெளிப்படுத்திக் கூறியவாறாம்.

7. பாலை — கண்டோர் கூற்று

வில்லோன் காலன கழலே தொடியோள்
மெல்அடி மேலன சிலம்பே நல்லோர்
யார்கொல் அளியர் தாமே ஆரியர்
கயிறுஆடு பறையின் கால்பொரக் கலங்கி
வாகை வெண்நெற்று ஒலிக்கும்
வேய்பயில் அழுவம் முன்னி யோரே.

—பெரும்பதுமனார்

செலவின்கண் இடைச்சுரத்துக் கண்டார் சொல்லியது.

ஆரியக் கூத்தர் மூங்கில் கழையிற் கட்டிய கயிற்றின் மேலே நின்று ஆடுவதற்கு இசைவாகக் கொட்டப்படும் பறையின் ஓசையைப் போல மேல்காற்று மோதுதலினால் வாகை மரத்தினது காய்ந்த வெண்ணிற நெற்றுகள் ஒலித்துக் கொண்டிருப்பதும் மூங்கில் பண்ணைகள் நிறைந்துள்ளதுமான பாலைநிலப் பரப்பினைக் கடந்து செல்ல நினைந்து வருபவர்களுள் வில்லையுடைய ஆடவனது காலிலே உள்ளன வீரக்கழல்கள். வளை அணிந்தவளாகிய அப் பெண்ணின் காலின் மேலே உள்ளன சிலம்புகள். அந் நல்லோர் யாவராயிருப்பாரோ? அவர்கள் அளிசெய்யத் தகுந்தோராவர்.

மணஞ்செய்து கொள்ளாது பாலை வழியாகச் செல்லும் அவர்தம் நிலை இரங்கத்தக்கது என்பதாம்.

தலைவியைத் தலைமகன் திருமணஞ்செய்து கொள்ளாமை அவள் காலின்மேல் சிலம்பு இருத்தலைக் கொண்டு வெளிப்படுத்தியுள்ளார் புலவர்.

திருமணத்திற்குமுன் மணப்பெண்ணின் காலில் அவளுடைய பெற்றோரால் அணியப் பெற்ற சிலம்பினை நீக்கிவிடுவர். இதனை ஒரு சடங்காகக் கொண்டாடும் வழக்கமும் அந்நாளில் இருந்தது. இதற்குச் 'சிலம்பு கழி நோன்பு' என்பது பெயர். திருமணத்துக்கு முன்பு நிகழ்த்தப்பெறும் இச் சடங்கினை,

'நும்மனைச் சிலம்பு கழீஇ அயரினும்
எம்மனை வதுவை நன்மணங் கழிகெனச்
சொல்லின் எவனோ தோழி
பொய்வல் காளையை ஈன்ற தாய்க்கே'

என வரும் ஐங்குறுநூற்றுப் பாடல் வழி (390) உணரலாகும்.

கழல் - ஆடவர்தம் வீரத்திற்கும் வெற்றிக்கும் சின்னமாகக் கட்டப்படும் காலணி. சிலம்பு - மகளிர் காலணி. 'மெல்லடி மேலவும்' என்றும் பாடம் உண்டு; இது 'மெல்லடி மேவுன' எனவும்

காணப்படுகிறது. முந்திய அடியில் வரும் 'காலன' என்பதனை ஒத்துவருதலின் இப் பாடம் கொள்ளப்பெற்றது. கால் - காற்று.

'அத்த வாகை அமலை வால்நெற்று
அரிஆர் சிலம்பின் அரிசி ஆர்ப்பக்
கோடை தூக்கும் கானம்' (குறுந். 369 : 1-3)

என வருதலால் இப் பாடலில் வரும் காற்று என்பது மேல்காற்று எனக் கொள்ளலாம். மேல்காற்றின் போதுதான் வாகை நெற்று மிகுதியாக ஒலிக்கும். ஆரியர் என்றது ஆரிய நாட்டிலுள்ள கழைக்கூத்தரை. 'ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்' என்பது பழமொழி. இக் கூத்தர் மூங்கில் கழையை நட்டு, மேலே கயிறு கட்டி, அக் கயிற்றின்மேல் நின்று ஆடுவர்.

8. மருதம் — காதற்பரத்தை கூற்று

கழனி மரத்து விளைந்துஉகு தீம்பழம்
பழன வாளை கதூஉம் ஊரன்
எம்இல் பெருமொழி கூறித் தம்இல்
கையும் காலும் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போல
மேவன செய்யும்தன் புதல்வன் தாய்க்கே.

— ஆலங்குடி வங்கனார்

கிழத்தி தன்னைப் புறனுரைத்தாள் எனக் கேட்ட காதற்பரத்தை அவட்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது.

வயலின் பக்கத்தில் உள்ள மரத்திலிருந்து முற்றக் கனிந்து விழுந்த இனிய பழத்தை நீர் நிறைந்த அந்த வயலில் உள்ள வாளை மீன்கள் கவ்வி உண்ணும் இடமாகிய ஊரையுடைய தலைவன், எம்முடைய வீட்டில் பெருமித மொழிகளைச் சொல்லிச் சென்று, தம்முடைய வீட்டிலே தம் முன் நின்றார் கைகால்களைத் தூக்கத் தானும் அவ்வாறே தூக்கும் கண்ணாடியில் தோன்று கின்ற பாவையாகிய நிழலுருவைப் போலத் தம்முடைய இல்லத் தில் புதல்வனின் தாயாகிய மனைவிக்கு அவள் விரும்பியவற்றைச் செய்வான்.

இதனால் அத் தலைவன் மனைவிக்கு அஞ்சி நடப்பவன் என்பதனைக் காதற்பரத்தை சுட்டிக்காட்டுகின்றாள் என்பது பெறப்படும். அவனுடைய செய்கையே அவள் என்னைப் புறங் கூறுவதற்கு ஏதுவாயிற்று என்பதாம்.

'மரத்து' என்பதற்கு மாத்து, மாஅத்து எனும் பாடங்களும் உள. மாத்து என்பது மாமரத்தை மட்டுமே குறிக்கும். மரத்து

என்றால் வயல் வரப்பிலுள்ள பழமரங்களாகிய மா, நாவல், கொய்யா முதலிய எதனையும் குறிக்கலாம். எனவே, இங்கு 'மரத்து' என்னும் பாடம் கொள்ளப்பெற்றது.

கழனி - வயல்; பழனம் - வயல்; பொய்கை என்றும் கொள்வர். கதூஉம் - கதுவும், கவ்வும். ஊரன் - மருதநிலத் தலைவன். ஆடி - கண்ணாடி, முதற்குறை. பெருமொழி - அன்பை வெளிப்படுத்தும் பெருமித மொழிகள், வஞ்சினம்.

வயலின் கரையில் உள்ள மரத்திலிருந்து முற்றிக் கனிந்து தானே உதிர்ந்த பழத்தை அந்த வயலிடத்து வாளை கவ்வி உண்ணும் ஊரன் என்றது அதுபோல இவ்வூர்ப் பரத்தை யாதொரு முயற்சியுமின்றித் தலைவனை அடைகின்றாள் என்னும் கருத்துப் புலப்பட நிற்றலால் இஃது உள்ளுறை உவமமாம்.

9. நெய்தல் — தோழி கூற்று

யாய்ஆ கியளே மாஅ யோளே
மடைமாண் செப்பில் தமிய வைகிய
பெய்யாப் பூவின் மெய்சா யினளே
பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்
இனமீன் இருங்கழி ஓதம் மல்குதொறும்
கயம்மூழ்கு மகளிர் கண்ணின் மானும்
தண்ணம் துறைவன் கொடுமை
நம்முன் நாணிக் கரப்பா டும்மே.

— கயமனார்

தலைமகற்குத் தோழி வாயில் நேர்ந்தது.

மாமை நிறத்தையுடையவளாகிய தலைவி பொருத்துவாய் மாட்சிமையுடைய செப்பினுள்ளே இட்டுவைக்கப்படாது தனியாக இருந்து வாடும் மலர்களைப் போலத் தன் மேனியில் வாட்ட முற்றாள். பசுமையான இலைகளுக்கு மேலாக உயர்ந்த திரண்ட தண்டினைக் கொண்ட நெய்தற் பூக்கள் திரளான மீன்களை யுடைய கரிய கழியிலே நீர்ப்பெருக்கு மிகுந்தோறும் குளத்திலே முழுகும் மகளிரின் கண்ணை ஒத்திருக்கும் தண்ணிய நீர்த்துறைக் குரிய தலைவன் செய்த கொடுமையை வெளியே சொல்வதற்கு நாணங்கொண்டவளாய் நம்முன்னே மறைத்து உரையாடுகிறாள். ஆதலால் அவள் இப்பொழுது இளமையிலே அறிவுமிகுந்து தாயின் தன்மையைப் பெற்றுள்ளாள்.

எனவே, அவள் தலைவனைப் பிழை பாராட்டாது ஏற்றுக் கொள்வாள் என்பதனைக் குறிப்பித்தவாறாம்.

தலைவியை யாய் என்றது புலத்தற்குக் காரணமான பரத்தைமை தலைவன்பால் உள்ளதாகவும் அதை மனங் கொள்ளாத கற்பின் சிறப்பை நோக்கி என ஐங்குறுநூற்று உரைகாரர் (1) தரும் விளக்கம் இங்கும் பொருத்தமுடைத்தாகும்.

மடைமாண் செப்பில் பெய்யாப்பூ, தமிய வைகியபூ என்க. 'கூடினர் புரிந்து குணன் உணப்பட்டோர், சூடினர் இட்ட பூ ஒரன்னர்' என வரும் கலித்தொகை (23 : 12-13) அடிகளின் கருத்து இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

மாயோள் - மாமை நிறத்தையுடைய இளம்பருவத்தினள்; கரப்பாடும் - மறைத்துரைக்கும்; மாமை - மாந்தளிர் போன்ற அழகிய நிறம்.

"தலைமகனைப் பேணாத ஒழுக்கத்தினால் தலைமகள் காணிய பொருண்மைக் கண்ணும் தோழிக்குக் கூற்று நிசழும்" (தொல். கற்பு. 9) என்பதற்கு இப் பாடலை இளம்பூரணர் எடுத்துக் காட்டுவர். மேலும் அவரே, "தலைவியின் தன்மைகளை அகம்புகல் மரபின் வாயில்கள் தம்முட் கூறியதற்கும்" (தொல். கற்பு. 11) காட்டாக உரைப்பர். ஆதலால் இப் பாடல் தோழி கூற்றாகவும் பாணன், பாடினி முதலிய வாயில்களின் கூற்றாகவும் கொள்ளத்தக்கதாயுள்ளது என்பது பெறப்படும்.

சிறப்பில்லாத நெய்தற் பூக்கள் சிறப்புடைய மகளிர் கண்களை மானும் என்றமையால் சிறப்பில்லாத பரத்தையர் தலைவனுக்குச் சிறப்புடைய தலைவியை ஒத்தனர் என்னும் குறிப்பும் பெறப்படும் என்பது ஐங்குறுநூற்றுப் பழையவுரை (2 உரை). இவ் விளக்கம் இப் பாடற் பகுதிக்கும் பொருத்தமாக உள்ளது.

உன்னால் தலையளி செய்யப்படாததனால் தனித்திருந்து தலைவி மெலிகின்றாள் என்பதைக் குறிப்பிடுதலால் இஃது உள்ளுறை உவமமாம்.

10. மருதம் — தோழி கூற்று

யாய்ஆ கியளே விழவுமுத லாட்டி
பயறுபோல் இணர பைந்தாது படீஇயர்
உழவர் வாங்கிய கமழ்பூ மென்சினைக்
காஞ்சி யூரன் கொடுமை
கரந்தனள் ஆகலின் நாணிய வருமே.

— ஒரம்போகியார்

தலைமகற்குத் தோழி வாயில் நேர்ந்தது.

விழாவுக்குரிய முதன்மையை ஆளுகின்ற எம் தலைவி பயற்றங் காய்போன்ற பூங்கொத்துகளிலுள்ள பசிய பூந்தாது தம்மேல் படும் படியாக உழவர் வளைத்த மணக்கின்ற மெல்லிய கொம்புகளைக் கொண்ட காஞ்சி மரத்தினையுடைய ஊரனது கொடுமையைப் பிறர் அறியாது மறைத்தாள் ஆதலினால் நீவிர் நாணமுறும்படி எதிர்கொண்டு வருவாள். இதனால் அவள் என் தாயைப் போன்ற அறிவு முதிர்ந்த தன்மையையுடையள் ஆயினாள்.

பரத்தையர் சேரியிலிருந்து வருபவனாதலின் தலைவியின் ஊடலைக் கண்ட மாத்திரத்தே தன் தகாத செயலுக்கு நாணித் தலை கவிழ்வானாயினான் என்பதாம்.

தலைவனோடு ஊடாது அன்புள்ளத்தால் தோழியராய யாமும் நாணுமாறு எதிர்கொண்டு வருகின்றாள் என்றும் கருத லாம்.

தலைவனது இல்லறம் சிறப்புற்று இலங்க அவள் வருகையே காரணமாதலின் 'விழவு முதலாட்டி' என்றார். விழவு என்பது செல்வச் செழிப்பும் இல்லற இன்பமும் மிகுந்தமையைச் சுட்டும்.

'ஓர்ஆன் வல்சிச் சீர்இல் வாழ்க்கை
பெருநலக் குறுமகள் வந்தென
இனிவிழவு ஆயிற்று என்னும் இவ் ஊரே'

எனவரும் குறுந்தொகைப் பாடல் (295 : 3 - 5) தலைவியின் வருகையால் தலைவனது வாழ்வு வளம்பெற்றமையை உணர்த் தும். விழவாயிற்று என்பது விழாவுக்குரிய வளம் மிக்கதாயிற்று என்பதாம்.

உழவர் காஞ்சியின் கிளையை வளைத்தமையை அவர் மேற் படிந்த பூந்தாது காட்டுமாறு போலத் தலைவனின் பரத்தைமைப் போக்கை அவனுடைய உடம்பின்மேல் காணப்படும் சந்தனம் முதலிய நறுமணப் பொருள்கள் புலப்படுத்தும் என்பது குறிப்பித்த படியாம்.

பூங்கொத்து உடைமையால் உழவர் காஞ்சிமரக் கொம்பு களை வளைக்கும் ஊரன் என்றதனால் தலைவனுடைய செல்வச் செழிப்பினைக் கண்டு பரத்தையரால் வளைக்கப் படுவா னாயினான்' என்னும் உட்கோள் பெறவைத்தலின் இஃது இறைச்சிப் பொருளாம்.

11. பாலை — தலைவி கூற்று

கோடுஈர் இலங்குவளை ஞெகிழ நாளும்
பாடுஇல கலிழும் கண்ணொடு புலம்பி
ஈங்குஇவண் உறைதலும் உய்குவம் ஆங்கே
எழுஇனி வாழிஎன் நெஞ்சே முனாஅது
குல்லைக் கண்ணி வடுகர் முனையது
வல்வேற் கட்டி நல்நாட்டு உம்பர்
மொழிபெயர் தேஎத்தர் ஆயினும்
வழிபடல் சூழ்ந்திசின் அவருடை நாட்டே.

— மாமூலனார்

தலைமகள் தன் நெஞ்சிற்குச் சொல்லுவாளாய்த் தோழி கேட்பச் சொல்லியது.

எனது நெஞ்சமே! வாழ்வாயாக. சங்கினை அறுத்துச் செய்யப்பட்ட விளங்கும் கைவளை உடல்மெலிவினால் முன்கையில் நெகிழாநிற்ப எந்நாளும் இமைபொருந்துதல் இல்லாது உறக்கமின்றிக் கலங்கி அழும் கண்ணோடு தனித்திருந்து வருந்தி இவ்வாறு இவ்விடத்திலே தங்குதலிலிருந்தும் விடுபடுவோமாக. முன்னேயுள்ளதாகிய கஞ்சங்குல்லையை அணிந்த வடுகர்க்குப் பகைப்புலமாகவுள்ள வலிமையான வேலாயுதத்தினையுடைய கட்டி என்பவனது நல்ல நாட்டுக்கு அப்பாலுள்ள மொழி வேறுபட்ட நாட்டில் உள்ளவரானாலும் அவர் சென்ற நாட்டினிடத்தே செல்லுதலை யான் எண்ணினேன். இப்பொழுதே எழுவாயாக.

வளை கழலுதலும் கண்ணுறங்காமையும் தலைவனது பிரிவுத் துன்பத்தால் விளைந்தனவாம். வடுகர் - வேங்கடமலையின் வடக்கே இருந்த ஓர் இனத்தார். கட்டி - சேரனுடைய படைத் தலைவர்களுள் ஒருவனாக விளங்கிய குறுநிலத்தலைவன். கட்டி, வடுகர் நாடுகளுக்கு அப்பால் வேற்றுமொழி வழங்கும் நாடு உள்ளது என்பது தெரியவரும்.

முனாது என்பதிலுள்ள 'து' குற்றுகரமாய் ஓசை சிறவாமையின் 'முனாஅது' என்னும் பாடம் கொள்ளப்பெற்றது. 'பல்வேற் கட்டி' என்றும் பாடமுண்டு; பலவேலினும் வலிமைபெற்ற வேலே சிறப்புடைத்து; ஆதலின், 'வல்வேற்கட்டி' என்னும் பாடம் கொள்ளப்பட்டது. வேற்றானை, விற்றானை என்று படைகளைப் பகுத்துக் காணும் நிலையில், வேற்படையினர் பலரைக் கொண்டவன் என்று கருத இடமுண்டு.

ஞெகிழ்தல் - கழலுதல்; புலம்பி - தனித்திருந்து; முனாஅது - முற்பட உள்ளது; முனை - பகைமுனை, அதாவது பகைப்புலம்;

மொழிபெயர்தேஎம் - தமிழல்லாத வேற்றுமொழி வழங்கும் நாடு.

இளம்பூரணர், "காமக் கிழவன் உள்வழிப்படுதல் (தொல். களவு. 23) "தலைவி நெஞ்சொடு உசாவித் தலைவனைச் சேர்ந்தது" (தொல். பொருளியல், 9) என ஈரிடத்தும் இப் பாடலை எடுத்துக்காட்டுவர். நச்சினார்க்கினியரோ, தலைவன் நாட்டிற்குச் செல்வாம் என்று தலைவி தன் நெஞ்சிற்குக் கூறியது என்பதற்கு மேற்கோளாகத் தருவர்.

12. பாலை — தலைவி கூற்று

எறும்பின் அளையின் குறும்புஅல் சுனைய
உலைக்கல் அன்ன பாறை ஏறிக்
கொடுவில் எயினர் பகழி மாய்க்கும்
கவலைத்து என்பஅவர் சென்ற ஆறே
அதுமற்று அவலம் கொள்ளாது
நொதுமல் கழறும்இவ் அழுங்கல் ஊரே

— ஓதலாந்தையார்

ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

தலைவர் போனவழி, எறும்புப் புற்றுகளை உடைய குறும்பினை யும் நீரற்ற சுனையினையும் கொண்டுள்ள கொல்லனது உலைக் களத்துள்ள பட்டடைக்கல்லைப் போன்ற வெம்மையையுடைய பாறையின்மேல் ஏறி வளைந்த வில்லையுடைய மலைவாழ் எயினர் தம்முடைய அம்புகளைத் திட்டுவதற்கு இடமாகிய கவர்த்த வழிகளையுடையது என்பர். இந்த ஆரவாரத்தினுடைய் ஊரானது அவ்வழியின் கொடுமையை உளம் கொள்ளாமல் அயற்றன்மையுடைய சொற்களைக் கூறி என்னையும் இடித் துரைக்கும்.

வழியின் கொடுமையைத் தோழி நினைந்திலள் என்பதனைச் சுட்டிக் காட்டினாளாயிற்று.

வழியின் வெம்மையும் உணவும் நீரும் அற்ற நிலைமையும் ஆறலைகள்வரால் வரும் அச்சமும் தலைவியின் அவலத்தைத் தூண்டுவனவாயின என்பதாம்.

குறும்பு - சிற்றரண்; அளை - புற்று; அல்சுனை - நீரற்ற வறுஞ்சுனை; சுனைய பாறை, அன்ன பாறை என இயைக்க. கொடுவில் - கொல்லுவதற்கு ஏதுவாகிய கொடுமையையுடைய வில் என்றும் ஆம்; கொடுவில் எயினர் - வளைந்த கொடிய வில்லையுடைய வேடர்; பகழி - அம்பு; மாய்த்தல் - தீட்டுதல்;

அழுங்கல் - ஆரவாரம்; ஊர் என்றது தோழியை; தோழியை ஊர் என்றல் மரபு.

'எறும்பின்' என்பதற்கு 'எறும்பி' என்னும் பாடம் கொள்வர். இப் பாடம் எறும்புக்குப் பெயராகக் கருதிக் கொள்ளப்படுகிறது. ஆனால் எறும்புக்கு 'எறும்பி' என்னும் பெயர் சங்க இலக்கியத்தில் இடம்பெறவில்லை. யானைக்குப் பெயராகத் திவாகர நிகண்டு இதனைச் சுட்டுகிறது. எனவே, இச் சொல்லுக்கு எறும்பு என்று பொருள் கொள்வது பொருந்தாது. எறும்பு என்னும் சொல்லாட்சி சங்க இலக்கியத்தே பரவலாகக் காணப்படுகிறது. எனவே 'எறும்பின் அளையின்' என்னும் பாடம் ஈண்டுக் கொள்ளப்பெற்றது.

"அவர் சென்ற ஆற்றில் உணவளிப்பது எறும்பியளை, நீர் தருவது அறுநீர்ச்சுனை, உறைவிடம் உலைக்கல் அன்ன பாறை, வாழ்வோர் பகழிமாய்க்குங் கொடுவில் எயினர் என அவர் சென்ற ஆற்றின் இடையூறெல்லாந் தெரியக் கூறினாளாகக் கொள்க" என்னும் மகாவித்துவான் இராகவையங்கார் விளக்கம் இங்கு நோக்கத் தக்கதாகும்.

தலைவன் பிரிந்துழி வழியருமை பிறர் கூறக் கேட்டுத் தலைவி கூறியது என்பர் நச்சினார்க்கினியர் (தொல். கற்பு. 6).

13. குறிஞ்சி — தலைவி கூற்று

மாசுஅறக் கழீஇய யானை போலப்
பெரும்பெயல் உழந்த இரும்பிணர்த் துறுகல்
பைதல் ஒருகலை சேக்கும் நாடன்
ஒய்தந் தனனே தோழி
பசலை ஆர்ந்தநம் குவளைஅம் கண்ணே.

— கபிலர்

தலைவன் தோழியிற்கூட்டம் கூடி, ஆற்றும் வகையான் ஆற்றுவித்துப் பிரிய, வேறுபட்ட கிழத்தி தோழிக்கு உரைத்தது.

புழுதி முற்றும் நீங்கும் வண்ணம் பாகனால் கழுவப்பெற்ற யானையைப் போலப் பெருமழையினால் கழுவப்பெற்றுத் தூய்மை அடைந்த கரிய சருச்சரையையுடைய நெருங்கிய பாறையில் இளைய தனித்த ஆண்மான் தங்குகின்ற நாட்டையுடையவன் என்னை விட்டு நீங்கத் தலைப்பட்டனன். அதனால் என்னுடைய குவளைமலர் போன்றிருந்த அழகிய கண்கள் இப்பொழுது பசலை நிறத்தை நிரம்பப் பெற்றுவிட்டன.

தலைவனது பிரிவினால் இவ் வேறுபாடுகள் வந்துற்றன எனத் தன் நிலையைத் தலைவி எடுத்துரைப்பாளாயினள்.

துறுகல்லின் மாசு நீக்கப்பெற்ற நாடன் எனக்குக் கண்களின் இயல்பை மறைக்கும் பசலையைப் படரச் செய்தானே எனத் தலைவி தன் உள்ளத்துயரை வெளிப்படுத்தியவாறாம். ஆண்மான் தனித்துத் தங்கும் நாடன் என்றமையால் தன்னைப் பிரிந்து தங்க முற்பட்டான் என்பதைச் சுட்டியவாறாம். குறிப்பாக வெளிப்படுத்தப்படும் இஃது இறைச்சிப் பொருள் எனப்படும்.

மாசு - அழுக்கு, புழுதி; மழையின்மையால் கற்பாறை புழுதி படிந்து காணப்படும் என்பதனை, 'மழை கழூஉ மறந்த மாயிருந் துறுகல், துகள்சூழ் யானையின் பொலியத் தோன்றும்' என வரும் 279`ஆம் குறுந்தொகைப் பாடற்பகுதி தெரிவிப்பது ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது. பிணர் - சருச்சரை, சுரசுரப்பு; துறுகல் - உருண்ட சிறுபாறை, பொற்றை; நாடன் - குறிஞ்சி நிலத் தலைவன்; பைதல் - இளமை; ஒய்தருதல் - அகன்று செல்லல்; குவளைஅம்கண் பசலை படர்வதற்கு முன்னிருந்த நிலையைச் சுட்டியதாம்.

'நாடனொய்ந்தனன்' என்னும் ஏட்டு வடிவத்தை 'நாடன் ஒய்தந்தனன்' என்றும், 'நாடன் நோய்தந்தனன்' என்றும் படித்தற்கு இடமுண்டு. இது தலைவன் பிரிய வேறுபட்ட கிழத்தி சொல்லுகின்றமையின், தலைவன் பிரிவை உணர்த்தும் ஒய்தந்தனன் என்னும் பாடமே பொருத்தமாக உள்ளது. ஒய்தருதலாவது நீங்கிச் செல்லுவது. எனவே இப் பாடம் கொள்ளப் பெற்றது.

14. குறிஞ்சி — தலைவன் கூற்று

அமிழ்துபொதி செந்நா அஞ்ச நிவந்த
வார்ந்திலங்கு வைஎயிற்றுச் சின்மொழி அரிவையைப்
பெறுகதில் அம்ம யானே பெற்றாங்கு
அறிகதில் அம்மஇவ் வூரே மறுகில்
நல்லோள் கணவன் இவன்எனப்
பல்லோர் கூறயாம் நாணுகம் சிறிதே.

— தொல்கபிலர்

'மடன்மா கூறும் இடனுமாருண்டே' என்பதனால் தோழி குறை மறுத்துழித் தலைமகன், 'மடலேறுவல்' என்பதுபடச் சொல்லியது.

அமுதத்தை உள்ளடக்கிய செவ்விய நாக்கு அஞ்சும்படியாக எழுந்து நேராக விளங்குகின்ற கூரிய பற்களையும் சிலவாகிய சொற்களையும் உடைய தலைவியை யான் மடல்மா ஏறுதலால் முன்பு களவிற் பெற்றபடியே பெறுவேனாக இவ்வூரிலுள்ளார் யாவரும் அறிவதாக விரும்புவேன். தெருவில் இந் நல்லாருடைய கணவன் இவன் எனப் பலரும் சொல்லாநிற்க நாம் சிறிதே நாணுவோம்.

தலைவி யான் அடைவதற்கு நீ துணை செய்யாவிடின் மடன்மா ஊர்ந்து வந்தேனும் அவளைப் பெறுவேன் என்று கூறினானாயிற்று.

அமிழ்து பொதி எயிறு, அஞ்ச நிவந்த எயிறு எனக் கூட்டுக. பற்கள் கூரியவாயிருத்தலின் நாக்கு அஞ்சிச் சில மொழி கூறியது என்பதாம்.

வார்தல் - நேராதல்; வை - கூர்மை; அரிவை என்றது பருவம் குறியாது பெண் என்பதனைச் சுட்டி நிற்கிறது. சின்மொழி - சிலவாகிய மொழி, மென்மொழி. இப் பாடலில் வரும் 'தில்' என்னும் இடைச்சொல் விழைவின்கண் வந்தது.

நா அஞ்சுவதற்குக் காரணம் பல்லினுடைய எழுச்சி. எழுதல் என்னும் பொருளில் வரும் சொல் நிவந்த என்பதாகும். எனவே அஞ்சுதற்கான காரணத்தை வெளிப்படுத்தும் இப் பாடமே கொள்ளப்பெற்றது.

தலைவன் மடலேறுகின்ற காலத்துத் தன் உருவத்தையும் தலைவியின் உருவத்தையும் எழுதிய படத்தைக் கையில் ஏந்திச் செல்வானாதலால் இவளுடைய கணவன் இவன் என்பதை ஊரார் அறிவதற்கு ஏதுவாம் என்பதாம்.

15. பாலை — செவிலித்தாய் கூற்று

பறைபடப் பணிலம் ஆர்ப்ப இறைகொள்பு
தொல்மூ தாலத்துப் பொதியில் தோன்றிய
நால்ஊர்க் கோசர் நல்மொழி போல
வாய்ஆ கின்றே தோழி ஆய்கழல்
செயலை வெள்வேல் விடலையொடு
தொகுவளை முன்கை மடந்தை நட்பே.

— ஔவையார்

உடன் போயின பின்றைத் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றாள். நிற்பச் செவிலித்தாய் நற்றாய்க்கு அறத்தொடு நின்றது.

தோழி, அழகிய வீரக்கழலையும் அசோக இலையின் வடிவான வெள்ளிய வேலையும் கொண்ட விடலைப் பருவத்தையுடைய தலைவனோடு பலவாகத் தொகுக்கப்பட்ட வளைகளைப் பூண்ட முன்கையையுடைய நம் மகள் கொண்ட நட்பானது, மிகப் பழமையான ஆலமரத்தடியில் உள்ள பொதுவிடத்தில் தங்குதலைக் கொண்டு தோன்றிய நான்கு ஊரிலும் உள்ள கோசரது நல்ல மொழி உண்மையாதல்போல, மணமுரசு முழங்கவும் சங்கு ஒலிக்கவும் அங்கே திருமணம் செய்தமையால் உண்மையாயிற்று.

தலைவி தலைவனுடன் சென்று அவனது ஊரில் திருமணம் புரிந்து கொண்டாள் என்பதாம். இது கொடுப்போர் இன்றி நிகழ்ந்த கரணத்தின்பாற்படும்.

பறையும் சங்கும் மங்கல வாத்தியங்களாகும். பலர் கூடியிருத்தற்கு ஏற்ற பரந்த கிளைகளையுடைய ஆலமரத்தின் அடியில் அவை கூடுதல் பண்டை வழக்கமாகும். செயலை - அசோகு.

கோசர் - மோகூர்ப் பழையனுடைய அறங்கூறவையத்திலிருந்த வீரக்குடியினர். நாலூர்க் கோசர் - நான்மொழிக் கோசர் என மதுரைக் காஞ்சியுள் (508-509) மாங்குடி மருதனார் குறிப்பிடுதலும் கருதத்தக்கது.

தொகுவளை - திரளாக அணிந்த வளையல்கள். 'தொடுவளை' என்னும் பாடமும் ஏற்புடைத்தே. தொடுவளை என்னின் அணியப்பெற்ற வளைகள் என்க.

'சேயிலை வெள்வேல்' என்றும் பாடம். இங்கே செம்மையும் வெண்மையும் நிறம்பற்றிய அடை. 'செயலை' என்பது அசோகின் இலை போன்ற வடிவைக் குறிக்கும். ஆதலின் அப் பாடம் கொள்ளப்பெற்றது. 'புதுவது புனைந்த செயலை வெள்வேல்' எனும் அகநானூற்றுத் தொடரும் (221 : 5) ஈண்டு ஒப்புநோக்கத் தகும். பின்வரும் 'தொகுவளை' என்பதற்கு ஏற்ற மோனையாகவும் இஃது உள்ளது.

தலைவி தலைவனுடன் சென்றமை அறிந்து தோழியோடு பொருந்திக் கற்பின் ஆக்கத்து நிற்றற்கண் செவிலிக்குக் கூற்று நிகழும் என்பர் இளம்பூரணர் (தொல். களவு. 25). மேலும் அவர், "இதனுள் விடலையொடு மடந்தை நட்பு, பறைபடப் பணிலம் ஆர்ப்ப, இறைகொண்டு நாலூர்க் கோசர் நன்மொழி போல வாயாயிற்றெனச் செவிலி நற்றாய்க்குக் கூறினமை யானும், விடலை எனப் பாலை நிலத்திற்குரிய தலைவன் பெயர் கூறினமை

யானும் கொடுப்போரின்றியும் கரணம் நிகழ்ந்தவாறு" (தொல். கற்பு. 2) என்றும் விளக்கம் தருகிறார். நச்சினார்க்கினியரும் இந் நூற்பாவில் இங்ஙனமே கருத்துரைத்துள்ளார். மேலும் களவியலில், "உடன்போயபின் செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நின்றது" (தொல். களவு. 24) என்றும் இப் பாடலை எடுத்துக் காட்டுவர்.

16. பாலை — தோழி கூற்று

உள்ளார் கொல்லோ தோழி கள்வர்
பொன்புனை பகழி செப்பம் கொண்மார்
உகிர்நுதி புரட்டும் ஓசை போலச்
செங்காற் பல்லி தன்துணை பயிரும்
அங்காற் கள்ளியங் காடுஇறந் தோரே.

— பாலை பாடிய பெருங்கடுங்கோ.

பொருள்வயிற் பிரிந்தவிடத்துத் தலைமகள் ஆற்றாமை கண்டு தோழி கூறியது.

தோழி, ஆறலை கள்வர் இரும்பினால் செய்யப்பெற்ற தம் அம்பின் செம்மையினைக் காணும் பொருட்டாகத் தம் விரல் நக நுனியிலே புரட்டுதலால் உண்டாம் ஒலியைப்போலச் செந்நிற மான கால்களையுடைய ஆண்பல்லி தன் துணையாகிய பெண்பல்லியை அழைத்தற்கு இடமாகிய அழகிய அடியையுடைய கள்ளிகள் நிறைந்த பாலைநிலத்தைக் கடந்து பொருளுக்காகப் பிரிந்து சென்றிருப்பவரான தலைவர் அந்த அழைப்பொலியைக் கேட்குங்காலத்து நம்மை நினையாது இருப்பாரோ?

உன் நினைவுவர விரைவில் திரும்பிவருவார் என்பதாம்.

பொன் - கரும்பொன், இரும்பு; பகழி - அம்பு; செப்பங் காண்பதாவது அம்பின் கூர்மையைச் சோதித்தல். பயிர்தல் - அழைத்தல்; உகிர் - நகம்; புரட்டுதல் - நெருடிப்பார்த்தல்.

17. குறிஞ்சி — தலைவன் கூற்று

மாவென மடலும் ஊர்ப பூவெனக்
குவிமுகிழ் எருக்கங் கண்ணியும் சூடுப
மறுகின் ஆர்க்கவும் படுப
பிறிதும் ஆகுப காமம்காழ் கொளினே.

— பேரெயின் முறுவலார்

தோழியிற் கூட்டம் வேண்டிப் பின்னின்ற தலைமகன் தோழி குறைமறாமல் கூறியது.

காமநோயானது முதிர்ச்சியடைந்தால் ஊரும் குதிரை எனப் பனைமடலாற் செய்த குதிரையின்மேல் ஆடவர் ஏறிவருவர்; தலையிற் சூடும் கண்ணியாக எருக்கமாலையையும் அணிவர்; வீதியில் பிறர்கண்டு ஆரவாரத்துடன் நகுதற்கும் உட்படுவர். இவற்றிற்கும் மேலாகத் தம் கருத்தினை நிறைவேற்றச் சாதலுக் குரிய வேறுசெயல்களையும் உடையராவர்.

இங்ஙனம் காமுற்றார் பிறர் நிலையினைச் சுட்டிக் கூறியது தானும் அங்ஙனம் மடலூர்வேன் என்பதனைத் தலைவன் புலப் படுத்தியவாறாம்.

மா - குதிரை; மடல் - மடன்மா; கண்ணி - தலை மாலை; ஆர்க்கவும் - ஆரவாரிக்கவும்; தலைவனை இந் நிலைக்கு ஆளாக்கிய தலைவியைச் சுட்டி ஊரவர் தமக்குள்ளே பேசி ஆரவாரிப்பர் என்பதாம். 'காழ்கொள்ளுதல்' முதிர்தல் என்னும் பொருளில் வரும் ஒருசொல். கிழ்க்கொள்ளுதல் என்னும் பாடத்திற்கு முதிர்தல் எனப் பொருள்கொள்ளல் சற்றும் பொருந்தாது. எனவே காழ்கொள்ளுதல் என்னும் பாடம் கொள்ளப்பெற்றது.

18. குறிஞ்சி — தோழி கூற்று

வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை ஆகுமதி
யார்அஃது அறிந்திசி னோரே சாரல்
சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங்குஇவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே.

— கபிலர்

இரவுக்குறி வந்து நீங்கும் தலைமகனைத் தோழி எதிர்ப்பட்டு வரைவு கடாயது.

இயல்பாக வளர்ந்த சிறுமூங்கிலாகிய வாழ்வேலியையுடைய வேரிலே குலைகளையுடைய பலாமரங்கள் நிறைந்த மலைச்சார லைப் பெற்றுள்ள நாட்டையுடையவனே! பலா மரத்தினது சிறிய கொம்பில் பெரிய பழம் தொங்கியதுபோல இவளுடைய உயிரானது மிகவும் சிறிதாம். காமநோயோ மிகப் பெரிதாகும். அத்தகு நிலையை அறிந்தவர் யார்? ஒருவரும் இல்லை. நீ அவளை மணந்து கொள்ளும் பருவத்தையுடையை ஆகுக.

நீ தலைவியைத் திருமணம் புரிந்து கொள்ளவேண்டும் என வற்புறுத்துகின்றமை தெளிவாம்.

பழம் மிகக் கனிந்து கீழே விழுவதன்முன் உரியார் உரிய காலத்தில் கொள்வதைப்போல இவள் உயிர் விடுவதற்குமுன் இவளுக்கு உரியவனாகிய நீ வரைந்து கொள்க எனக் குறிப்பித்த வாறு. இஃது உள்ளுறை உவமமாம்.

வேரல் - சிறுமூங்கில்; வேர்க்கோட் பலவு - வேர்ப்பலா; இது பலாமரத்தின் ஒருவகை இனம். செவ்வி - உரியகாலம்; மதி - முன்னிலையசைச்சொல். தவ - மிகுதிப் பொருள் உணர்த்தும் உரிச்சொல்.

இப் பாடலைத் "தோழி தலைவியின் காதல் மிகுதி கூறியது" என்னும் பொருளது என்பர் இளம்பூரணர் (தொல். களவு. 23).

19. மருதம் — தலைவன் கூற்று

எவ்வி இழந்த வறுமையாழ்ப் பாணர்
பூவில் வறுந்தலை போலப் புல்லென்று
இனைமதி வாழிய நெஞ்சே மனைமரத்து
எல்உறும் மௌவல் நாறும்
பல்இருங் கூந்தல் யாரளோ நமக்கே.

— பரணர்

உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன் சொல்லியது.

நெஞ்சே! வீட்டுத் தோட்டத்தில் உள்ள மரத்தில் படர்ந்த ஒளியுடைய முல்லை மலர்களின் மணம் வீசும் பலவாகிய கரிய கூந்தலையுடைய இவள் எத்தகைய உறவினள்? தொடர்பு இல்லா அயலார் போலும். எவ்வி என்னும் கொடையாளனை இழந்தத னால் வறுமையுற்றவராகிய யாழ்ப்பாணரது பொற்பூச் சூடுதலை இல்லாத வெறுமையான தலை பொலிவற்றுக் காண்பதுபோல பொலிவு இழந்து வருந்துவாயாக.

இதனால் இத் தலைவி இப்பொழுது நமக்கு வேறுபட்ட நிலையினள் ஆனாள் என்பது சுட்டியவாறாம்.

எவ்வி - மிழலைக் கூற்றத்துத் தலைவனாகிய ஒரு வள்ளல். கடற்கரை ஊராகிய 'நீழல்' என்பது இவனுடைய ஊர் எனத் தெரியவருகிறது. அவனை இழந்ததனால் பாணர் தம் யாழை முரித்துப்போட்டுப் புலம்பினர் என்னும் ஒரு செப்தி அகநானூற் றில் வந்துள்ளது (அகம். 115),

புல்லென்றல் - பொலிவழிதல்; மதி - முன்னிலையசை; வாழிய - இங்கே அசை. எல் - ஒளி; இரவு என்று கொண்டு இரவில் மலரும் முல்லை எனவும் கொள்வர். கற்புக்கு அறிகுறியாக முல்லை மலரைச் சூடுவது மரபு. பனிச்சை முதலிய ஐவகைப் பகுதிகளை உடையதாதலின் பல் கூந்தல் எனப்பட்டது.

உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைவன் புலத்தல் என்பதற்கு இப் பாடலைக் காட்டுவர் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் (தொல். கற்பு. 15). "தலைவி தான் உணர்த்தவும் உணராமல் தன்னைக் கைவிட்டுப் பிரியின், தான் அவளை நீங்குதற்கு அஞ்சிய அச்சத்தின்கண்ணும் தலைவற்குக் கூற்று நிகழும்; அஃது உணர்ப்புவயின் வாரா ஊடலாம்" என்பதற்கு இப் பாடலை எடுத்துக்காட்டி, "இதனுள் அவளையின்றி வருந்துகின்ற நெஞ்சே அவள் நமக்கு யாரெனப் புலத்தலன்றி ஆண்டு நின்றும் பெயர்தல் கூறாமையிற் கைவிடின் அச்சமாயிற்று" என்று விளக்கமும் தருவர் நச்சினார்க்கினியர் (தொல். கற்பு.5).

20. பாலை — தலைவி கூற்று

அருளும் அன்பும் நீக்கித் துணைதுறந்து
பொருள்வயிற் பிரிவோர் உரவோர் ஆயின்
உரவோர் உரவோர் ஆக
மடவம் ஆக மடந்தை நாமே.

— கோப்பெருஞ்சோழன்

செலவுணர்த்திய தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

தோழியே! அருளையும் அன்பையும் கைவிட்டுத் தம் துணைவியை விடுத்துப் பொருள் தேடும் பொருட்டாகப் பிரியும் தலைவர் அறிவுடையோராயினால் அவ்வாற்றலையுடையோர் அறிவுடையவரே ஆகுக. அவரைப் பிரிந்திருக்க இயலாத நாம் அறிவிலேம் ஆகுக.

இதனால் என்னைப் பிரிந்து செல்லுதல் அறிவுடைய தலைவர்க்குத் தகாது என்று கூறியவாறாம்.

பெண் என்னும் பொதுமைபற்றி என்னிடம் அருளாவது துணை என்னும் சிறப்புநிலையால் அன்பாவது உளராயின் நீங்கார் என்பது அவளுடைய உட்குறிப்பு.

அருள் - தொடர்பில்லாதாரிடத்தும்
அன்பு - தொடர்புடையாரிடத்து

னின்றும் அருள் பிறக்கும் என்பர். உரவோர் - அறிவுடையோர், ஆற்றலுடையோர்; மடவம் - அறிவில்லேம்.

பிரிவு உணர்த்திய தோழிக்குத் தலைவி கூறியது என இப் பாடலுக்குக் கருத்துரைப்பர் இளம்பூரணர் (தொல். அகத். 45). நச்சினார்க்கினியர். "தோழி பிரிவுணர்த்தியவழி செலவழுங்கக் கூறியது" என்பர் (தொல். கற்பு. 6).

21. முல்லை — தலைவி கூற்று

வண்டுபடத் ததைந்த கொடிஇணர் இடையிடுபு
பொன்செய் புனைஇழை கட்டிய மகளிர்
கதுப்பின் தோன்றும் புதுப்பூங் கொன்றைக்
கானம் கார்எனக் கூறினும்
யானோ தேறேன்அவர் பொய்வழங் கலரே.

— ஓதலாந்தையார்

பருவம் வருந்துணையும் ஆற்றுவித்த தோழி, 'அவர் வரல்குறித்த பருவ வரவின்கண் இனி ஆற்றுவிக்குமாறு எவ்வாறு' என்று தன்னுள்ளே கவன்றாட்கு அவளது குறிப்பறிந்த தலைமகள், 'கானம் அவர்வரும் கார்காலத்தைக் காட்டிற்றாயினும் யான் இது கார்காலம் என்று தேறேன், அவர் பொய் கூறாராகலின்' எனத் தான் ஆற்றுவல் என்பதுபடச் சொல்லியது.

தோழி, வண்டுகள் வந்து படியும்படியாகச் செறிந்து மலர்ந்த கொடிபோன்ற நீட்சியையுடைய பூங்கொத்துகளைத் தழைகளின் இடையிடையே கொண்டு, பொன்னாற் செய்யப் பெற்ற தலையணிகளையும் சேர்த்துக்கட்டிய மகளிருடைய கூந்தலைப் போலக் கண்ணுக்குக் காட்சி நல்கும் புதிய பூக்களைக் கொண்ட கொன்றை மரங்களையுடைய காடானது இது கார்ப் பருவம் என்று தெரிவித்தபோதிலும் அத் தலைவர் பொய் கூறார் ஆதலினால் யான் அதனைக் கார்காலம் என்று வருந்தேன்.

கார்காலத்தே வருவேன் என்று பிரிந்த தலைவர் எப்படியும் அந்தக் காலம் தவறாமல் வந்துவிடுவார். ஆதலினால் இதனை உண்மையான கார்காலத் தொடக்கமாகக் கொள்ளேன் என்பதாம்.

மகளிர் கூந்தலைப் போலக் கொன்றை தோன்றுமாயினும் மகளிர் அல்லரென்று தெளிவதுபோல இது கார்ப்பருவம் என்று தோற்றம் செய்யினும் அன்று என்று தெளிந்தேன் என்று கூறுதல் புலனாம்.

தகைதல் - செறிதல், மலர்தல்; கொடியிணர் - நீட்சியையுடைய பூங்கொத்து; இழை - அணிகலன்; கதுப்பு - கூந்தல்; கானம் - காடு; அவர் - நெஞ்சறி சுட்டு. கொன்றை - கார்காலத்தில் மலரும் தன்மையது; இதன் மலர் பொன்போற் பொலிந்து தோன்றும். தெறுதல் - வருந்துதல்.

ஆற்றுதல் என்பது வருந்தாமையாகும். இப் பொருள்தரும் சொல் தெறேன் என்பதே. மேலும் தெறேனவர் என்பது ஈரசையாய் ஆசிரிய ஓசைக்கு ஏற்றதாயும் உள்ளது. எனவே இப் பாடம் கொள்ளப்பெற்றது.

"இது பருவங்கண்டுழியும் பொய்கூறார் என்று தலைவி ஆற்றியிருந்தது" என்பர் நச்சினார்க்கினியர் (தொல். அகத். 14). மேலும் அவர், "கானம் கார் எனக் கூறவும் வாரார் என்றவழி, அது கூறினும் யானோ தெறேன் எனப் பிரிநிலை ஓகாரத்தால் பிரிந்தது" என்றும் பிறிதோரிடத்தில் (தொல். கற்பு. 6) கூறுகின்றார்.

22. பாலை — தோழி கூற்று

நீர்வார் கண்ணை நீஇவண் ஒழிய
யாரோ பிரிகிற் பவரே சாரல்
சிலம்புஅணி கொண்ட வலம்சுரி மராஅத்து
வேனில் அம்சினை கமழும்
தேம்ஊர் ஒண்ணுதல் நின்னொடும் செலவே.

— சேரமானெந்தை

செலவுக் குறிப்பு அறிந்து ஆற்றாளாகிய கிழத்தியைத் தோழி வற்புறுத்தியது.

மலைப்பக்கம் அழகு கொள்ளுதற்குக் காரணமாக வலமாகச் சுரித்த வெண் கடப்ப மலரையுடைய வேனிற் காலத்து மலர்ந்த அழகிய கொம்புகளைப் போல் நறுமணம் கமழுகின்ற நெற்றியையுடையையாகிய நீ இங்கே தனியாகத் தங்கியிருக்க நின்னைப் பிரிந்து செல்லும் ஆற்றலையுடையவர் யாவர்? அவருடைய செலவு நின்னோடேயே ஆகும்.

தலைவர் நின்னைப் பிரிந்து செல்லார் என்று தோழி வற்புறுத்தியுரைத்தல் காணலாம்.

'தேம் மூசு ஒண்ணுதல்' என்றும் ஒரு பாடம். இதற்குத் தன்பால் உள்ள வாசனையால் வண்டுகள் மொய்க்கும் ஒள்ளிய நெற்றி என்றாம்.

வார்தல் - ஒழுகுதல், சிந்துதல்: பிரிகிற்பவர் - பிரியச் சம்மதிப்பவர்; வேனில் - இங்கே இளவேனில்; மராஅம் - வெண் கடம்பு; இஃது இளவேனிலில் மலரும் இயல்புடையது. சுரித்தல் - சுழித்தல்; தேம் - மணம்; வண்டு என்றும் கொள்வர்.

"ஆற்றாளாய தலைமகட்குத் தோழி பிரிவு நயப்பச் சொல்லியது" என்பார் தமிழ்நெறிவிளக்க நூலார் (24).

23. குறிஞ்சி — தோழி கூற்று

அகவன் மகளே அகவன் மகளே
மனவுக்கோப்பு அன்ன நல்நெடுங் கூந்தல்
அகவன் மகளே பாடுக பாட்டே
இன்னும் பாடுக பாட்டே அவர்
நல்நெடுங் குன்றம் பாடிய பாட்டே.

— ஔவையார்

கட்டுக்காணிய நின்றவிடத்துத் தோழி அறத்தொடு நின்றது.

தெய்வங்களை அழைத்துப் பாடும் கட்டுவிச்சியே! கட்டுவிச்சியே! சங்குமணிக் கோவை போன்ற வெண்மையான நல்ல நீண்ட கூந்தலையுடைய கட்டுவிச்சியே! நீ இப்பொழுது பாடிய பாட்டை மீண்டும் பாடுக. மேன்மேலும் அப் பாட்டைப் பாடுக. அவருடைய நல்ல நெடிய குன்றத்தைக் குறித்துப் பாடிய பாட்டை மீண்டும் பாடுவாயாக.

தலைவிபால் அன்புடைய தலைவரின் குன்றத்தைப் பாடினால் இவளுடைய வேறுபாடு நீங்கும் என்பதால் அப் பாட்டை மீண்டும் மீண்டும் பாடுக என வேண்டுவதாயினாள் என்க.

அகவன்மகள் - தெய்வங்களை அழைத்துப் பாடும் கட்டுவிச்சி. இவள் தெய்வங்களை அழைத்துக் குறிகூறும் இயல்பினளாதலின், இப் பெயர் பெற்றாள். இவள் முறத்தில் நெல்லையிட்டு எண்ணி அதனால் பெற்ற நிமித்தங்களை அறிந்து எடுத்துச் சொல்லுவாள். இம் மகளிர் தெய்வமேறிக் குறி கூறுதலும் உண்டு. இவளையே பின்னாளில் குறத்தி என்று கூறலாயினர். கட்டுவிச்சியைப் பற்றிய செய்திகள் சங்கப் பாடல்களிலும் பிற்காலச் சிற்றிலக்கியங்களிலும் மிகுதியாக உண்டு. மனவுக்கோப்பு - சங்குமணி மாலை.

ஓர் உண்மையை நிலைநாட்டற்கு மும்முறை கூறுதல் வழக்க மாதலின் தாம் கூறுவதன் உண்மையைக் கூர்ந்து அறியும் பொருட்டு 'அகவன் மகளே' என மும்முறை அழைத்தாள் என்க.

அகவன் மகள் குறிபார்க்கும்போது தான் கண்ட மலை களைப் பற்றிப் பாடுவது இய்ல்பு. தலைவனது மலைவளத்தைக் கேட்பதற்குத் தலைவிக்குப் பெருவிருப்பம் இருக்குமாதலின் அதனை மீண்டும் பாடுமாறு தோழி வேண்டுகிறாள்.

அவர் நல்நெடுங் குன்றம் என்பதனால் அவர் யார் என்னும் ஆராய்ச்சி தாயரிடையே தோன்றி அவர்கள் உண்மை அறிவதற்கு ஏதுவாம் ஆதலின் இஃது அறத்தொடு நிற்றலாயிற்று.

மனவு - சங்குமணி; கோப்பு - கோவை, மாலை.

"கட்டுக்காணிய நின்றவிடத்துத் (தோழி) அறத்தொடு நின்றது. அதுவும் வெறியாட்டின்கண் அடங்கும்" என்பார் நச்சினார்க்கினியர் (தொல். பொருளியல், 12).

24. முல்லை — தலைவி கூற்று

கருங்கால் வேம்பின் ஒண்பூ யாணர்
என்னை இன்றியும் கழிவது கொல்லோ
ஆற்றுஅயல் எழுந்த வெண்கோட்டு அதவத்து
எழுகளிறு மிதித்த ஒருபழம் போலக்
குழையக் கொடியோர் நாவே
காதலர் அகலக் கல்லென் றவ்வே.

— பரணர்

பருவங்கண்டு ஆற்றாளாகிய கிழத்தி உரைத்தது.

கரிய அடிமரத்தையுடைய வேப்ப மரத்தினது ஒள்ளியவான பூக்களாகிய புது வருவாயானது என்னுடைய தலைவன் இல்லாம லும் வறிதே செல்லுவதோ? கொடியோர்களாகிய அலர் தூற்றும் மகளிருடைய நாக்கள், என்னுடைய காதலர் என்னை விட்டு நீங்கிச் செல்லவும் ஆற்றின் அருகே கரைக்கண் முளைத்து வளர்ந்த வெண்ணிறமான கொம்புகளையுடைய அத்திமரத்தினது எழுந்து வருகின்ற ஆண்யானையின் காலால் மிதித்து உழக்கப் பெற்ற ஒற்றைப் பழம் குழைவது போலக் குழைந்து நான் வருந்தும்படி அலர் கூறிக் கல்லென்ற ஆரவாரத்துடன் முழங்கின.

...தலைவர் வாராமையினாலே ஊராரின் பழிப்புரை அடங்க வில்லை என்பதைக் குறிப்பிடுகின்றாள்.

வேம்பு இளவேனிற் காலத்து மலர்வதாகும். தலைவன் வருவதாகச் சொல்லிச் சென்ற பருவமும் அதுவே. தலைவனைத் தலைவி 'என்னை' என்று கூறுதல் மரபு. கொல் - இரக்கப் பொருளில் வந்துள்ளது. யாணர் - புதுவருவாய்.

'எழுகுளிறு மிதித்த' எனப் பாடம் கொள்வாரும் உளர். (குளிறு-நண்டு). நண்டுகள் பொருள்களைக் கால்களால் பற்றி உருட்டுமேயல்லது மிதித்தல் இல்லை. ஆகவே, 'நண்டு மிதித்த' என்பது மரபன்று. யானை முதலிய விலங்குகள் பொருள்களைக் காலால் நசுக்குவதை மிதித்தல் என்று கூறுதலே பெருவழக்கு. எழுகளிறு என்பதற்கு ஏழுகளிறு என்று பொருள்கொள்ளுதலும் பொருந்தாது. ஒரு களிறு மிதித்தாலே அத்திப்பழம் குழைந்து விடும். ஆகவே, இங்கு எழுகளிறு என்பதற்கு எழுந்துவருகின்ற ஆண் யானை என்று கொள்வதே பொருத்தமாகும். முதற்பதிப் பாசிரியர், 'எழுகின்ற களிறு' என்றும் கலாநிலைய உரைகாரர் இப் பாடமே கொண்டு, 'ஆற்று நீராடி எழுந்த ஆண்யானை' என்றும் பொருள் தருகின்றனர். ஆகவே 'எழுகளிறு மிதித்த' என்பதே இங்குச் சிறப்பான பாடம் ஆகும்.

25. குறிஞ்சி — தலைவி கூற்று

யாரும் இல்லைத் தானே களவன்
தான்அது பொய்ப்பின் யான்எவன் செய்கோ
தினைத்தாள் அன்ன சிறுபசுங் காஅல
ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்
குருகும் உண்டுதான் மணந்த ஞான்றே.

— கபிலர்

வரைவு நீட்டித்த இடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

தோழி, தலைவன் என்னைக் களவில் மணந்த காலத்திலே வேறு எவரும் இல்லை; அவன் ஒருவனே அந்த இடத்தில் சான்றாக இருந்தவன். தனிமையில் அவன் அன்று மொழிந்த சூளுறவிலிருந்தும் தவறினால் நான் யாது செய்யக்கூடும்? தினையின் அடித்தாளைப் போன்ற சிறிய பசுமையான கால்களைக் கொண்ட நாரையும் அப்பொழுது இருந்தது.

தலைவன் என்னை மணந்தபொழுது அவன் ஒருவனேதான் சான்று. ஆரல் மீனை எதிர்நோக்கியிருந்த நாரை சான்று கூறுமோ? அவன் தன் வாக்கிலிருந்து தவறிவிட்டால் யான் என்ன செய்வேன் எனத் தலைவி தன் ஏக்கத்தைத் தோழியிடம் வெளிப் படுத்துதல் காணலாம்.

அது என்றது தலைவன் அவளைப பிரியேன் என்றும் பிரிந்தால் தனித்து ஆற்றியிரேன் என்றும் விரைவில் அவளை மணந்து கொள்வேன் என்றும் சொல்லிய சூளுரையைக் குறிக்கும். அது - நெஞ்சறி சுட்டு.

தலைவன் களவுமணம் கொண்டமைக்குச் சான்று கூறுவது இப் பாடல். சான்று சொல்வதற்குரியார் யாரும் அவ்விடத்து இல்லை. தலைவன் ஒருவனே சான்றாக உள்ளான் என்பதனைச் சுட்டிக் காட்டுதலின், சான்றாவான் என்னும் பொருள்தரும் களவன் என்னும் பாடமே நேரிது. சான்று சொல்ல இயலாத நாரையைப் பின்னர்ச் சுட்டுதலும் இப் பொருளைக் கருத இட மாகிறது.

'கால' என்பது இன்னோசைக்காகக் 'காஅல' என நீண்டது. குருகு -. நாரை; ஞான்று - பொழுது.

'தாம் மணந்த ஞான்றே' என்றும் பாடம் உண்டு. இஃது அவன் மணந்த பொழுதை எண்ணிய பெருமிதத்தைச் சுட்டும்.

26. குறிஞ்சி — தோழி கூற்று

அரும்புஅற மலர்ந்த கருங்கால் வேங்கை
மேக்குஎழு பெருஞ்சினை இருந்த தோகை
பூக்கொய் மகளிரின் தோன்றும் நாடன்
தகாஅன் போலத் தான்தீது மொழியினும்
தன்கண் கண்டது பொய்க்குவது அன்றே
தேக்கொக்கு அருந்தும் முள்எயிற்றுத் துவர்வாய்
வரைஆடு வன்பறழ்த் தந்தை
கடுவனும் அறியும்அக் கொடியோ னையே

— கொல்லன் அழிசி

நற்றாயும் செவிலித்தாயும் தலைமகளது வேறுபாடு கண்டு, 'இஃது எற்றினான் ஆயிற்று என்று' கட்டுவிச்சியை வினவிக் கட்டுக் காண்கின்ற காலத்துத் 'தலைமகளது வேறுபாட்டிற்குக் காரணம் பிறிதோர் தெய்வம்' என்று கூறக் கேட்டுத் தோழி அறத்தொடு நின்றது.

அரும்புகள் முற்றவும் மலர்ந்திருக்கின்ற கரிய அடிமரத்தை யுடைய வேங்கைமரத்தின் மேலே ஓங்கி வளர்ந்துள்ள பெரிய கிளையில் இருந்த மயில்கள் மரத்தின்மீது ஏறிப் பூப்பறிக்கின்ற மகளிரைப் போலக் காட்சி தரும் குறிஞ்சி நாட்டுத் தலைவன் இவளுக்கு உரியனாம் தகுதியற்றவன் போலக் கட்டுவிச்சி

தெய்வத்தான் வந்தது என்று தீங்கான மொழி பகரினும், தேமாவின் பழத்தைத் தின்னுகின்ற முள்ளைப் போன்ற பற்களையும் சிவந்த வாயையுமுடைய மலைகளிலே ஓடியாடி விளையாடுகின்ற வலிய குட்டிகளின் தந்தையாகிய ஆண் குரங்கும் அந்தக் கொடியவனாகிய தலைவன் இவள்பால் கொண்ட நட்பினை அறியும். ஆதலால் அக் குரங்கு தன் கண்ணால் கண்ட நிகழ்ச்சியைக் காணேன் என்று பொய்யுரையாது.

இவ்வாறு தோழி உரைப்பதனால் தலைவியின் துன்பத்திற்குக் காரணம் தலைவன் ஒருவனோடு கொண்ட நட்பே என்பதனை வெளிப்படுத்தவாறாம்.

அற - முழுவதும். தகாஅன் போல என்பதனாலேயே அவன் தகுதியுடையவன் என்பது பெறப்படும். கொக்கு - மாமரம்; பறழ் - குட்டி; கடுவன் - ஆண் குரங்கு. தந்தைக் கடுவன் என்னாது, தந்தை கடுவன் என்றது 'அஃறிணை விரவுப்பெயர் இயல்புமார் உளவே' (தொல். எழுத்து. 156) என்னும் தொல்காப்பிய விதிபற்றியாகும். அவ்வாறே சுவடி வேறுபாடும் காணப்படுகிறது.

மயில்கள் மலரைக் கொய்து மரத்தின் அழகைக் கெடுப்பது போலத் தோன்றினாலும் அம் மரத்திற்கு அக் காட்சி அழகு தருவதாகவே உள்ளது. அதுபோலத் தலைமகன் இப்பொழுது இவள் நலனழியச் செய்வான் போலக் காணப்படினும் இவளை மணந்து இவளுடைய நலத்தை வளரச் செய்வான் என்னும் உட்பொருளை வெளிப்படுத்துவதால் உள்ளுறை உவமமாம்.

கடுவன் தன் குட்டிக்குக் காவலாய் இருந்தமையைக் கண்ட தலைமகன் தலைவியை விரைவில் மணந்து இல்லறம் புகாமல் கட்டுவிச்சி வருதற்குக் காரணமாய்விட்டானே என்று அவன் செயலைப் பழித்துக் கூறினாளாயிற்று.

நச்சினார்க்கினியர், "தலைவனைத் துறந்தான் போலவும் மறந்தான் போலவும் கருதித் தான் தீது மொழியினும்......எனத் தோழி வினவாக் காலத்து அவன் தவற்றைத் (தலைவி) வரைவிடைவைத்தலின் ஆற்றாமைக்கு அறிவித்தாள்" என்பர் (தொல். களவு. 21).

27. பாலை — தலைவன் கூற்று

கன்றும் உண்ணாது கலத்தினும் படாது
நல்ஆன் தீம்பால் நிலத்துஉக் காஅங்கு
எனக்கும் ஆகாது என்னைக்கும் உதவாது
பசலை உணீஇய வேண்டும்
திதலை அல்குல்என் மாமைக் கவினே.

— வெள்ளிவீதியார்

பிரிவிடை, 'ஆற்றாள்' எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

நல்ல பசுவின் இனிய பாலானது அப் பசுவின் கன்றினாலும் உண்ணப்படாமல் கலத்தில் கறந்து கொள்ளப்படாமல் வீணாகத் தரையில் சிந்தியது போல, தேமல் படர்ந்த அல்குலிடத்து என்னுடைய மாமையாகிய பேரழகு எனக்கும் அழகு பயவாமல் என் தலைவனுக்கும் இன்பம் செய்யாமல் பசலையானது தான் உண்ணுதற்கு விரும்பும் நிலையாயிற்றே.

தலைவனுடைய பிரிவினால் தலைவியின் மாமைக்கவின் அழியப் பசலை பரந்தமையைத் தலைவி உரைத்தாள். இதனால் தன் அழகு பொலிவுறத் தலைவன் மீண்டும் விரைந்து வாரானோ என்பதைச் சுட்டியவாறாம்.

கலம் - பால் கறக்கும் பாத்திரம்; திதலை - தேமல்; மாமை - மாந்தளிர் போன்ற மேனிநிறம்; இதற்கு ஈங்கைக் கொடியின் தளிர், அசோகந்தளிர் என்பவற்றின் நிறமும் கூறப்ப்டுவது உண்டு. கவின் - அழகு; பசலை - பிரிவாற்றாமையால் மகளிர் மேனியில் உண்டாம் வேறுபாடான பொன்னிறம். கன்றை முன்னர் ஊட்டிப் பின் பாலைக் கறத்தல் மரபாதலின் கறவைக்கலம் பிற் கூறப்பட்டது.

உணீஇயர், உணீஇய என்னும் இரண்டு வினையெச்ச வாய்பாடுகளும் ஒன்றுபோல்வனவாயினும் அஃறிணைச் சொற்கு ஏற்ற சொல்லமைதியை உடையது உணீஇய என்னும் பாடமே யாகும். எனவே இப் பாடம் கொள்ளப்பெற்றது.

கன்று தலைவிக்கும் கலம் தலைவனுக்கும் ஒப்பாம். பிரிவுக்கு வருந்துதலினும் பயனற்றுக் கழியும் மாமைக்கவினை நினைந்து பெரிதும் வருந்துவதாகத் தலைவி உரைக்கின்றாள். பசலை படர்வதற்குப் பிரிவே ஏது என்பதும் தெரியவரும்.

நச்சினார்க்கினியர், 'இது வெள்ளிவீதியார் பாட்டு' என்பர். மேலும், இது தம் பெயர் கூறின் புறமாம் என்று அஞ்சி வாளாது கூறினார் என்றும் கருத்து உரைப்பர் (தொல். அகத். 54).

28. பாலை — தலைவி கூற்று

மூட்டு வேன்கொல் தாக்கு வேன்கொல்
ஓரேன் யானும்ஓர் பெற்றி மேலிட்டு,
'ஆஅ ஒல்'எனக் கூவு வேன்கொல்
அலமரல் அசைவளி அலைப்பஎன்
உயவுநோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே.

— ஔவையார்

வரைவிடை ஆற்றாளய்க் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

சுழலுதலோடு அசைந்து வருகின்ற வாடைக்காற்று வருத்தா நிற்பவும் எனது வருந்துதலையுடைய காமநோயை உணர்ந்து கொள்ளாமல் கவலையின்றித் தூங்குகின்ற ஊரிலுள்ளார்க்கு நினைவு மூளச் செய்வேனோ? அவர்தம் உடலைத் தீண்டிப் புடைப்பேனோ? ஏதேனும் ஒரு தலைக்கீட்டை முன்னிட்டுக் கொண்டு 'ஆஅ' என்றும் 'ஒல்' என்றும் ஒலியுண்டாக உரத்துக் கூப்பாடு போடுவேனோ? இன்னது செய்வது என்பதனை அறியேன்.

என்னுடைய நோயைத் தாயர் முதலியோர் அறியாமையால் யான் ஆற்றாமல் வருந்தா நின்றேன் என்பதாம்.

ஊரெல்லாம் உறங்கும் வேளையிலும் காமநோயால் தான் கண்ணுறங்காமையை வெளிப்படுத்தியுள்ளாள் தலைவி. ஊர் என்றது தன் துயர் அறியாது உறங்கும் தாயர் முதலியோரை.

மூட்டுதல் - நினைவை மூண்டு எழச் செய்தல்; தாக்குதல் - கோல் முதலிய கருவிகளால் தீண்டிவருத்துதல்; ஓர் பெற்றி மேலிட்டுக் கூறுதலாவது 'பாம்பு பாம்பு' என்றேனும், 'திருடன் திருடன்' என்றேனும் தேளைக் கண்டு அஞ்சி யரற்றியேனும் வேறு எவ்வாறேனும் ஒன்றைக்கூறி ஊராரைக் கூவி அழைத்தல். இவை முறையே மனம், மெய், வாக்கு என்னும் மூன்றாலும் முயன்றமையைத் தெளிவுபடுத்தும். மூட்டுவேன் என்பது அடுத்த அடியில் வரும் ஓரேன் என்பதற்கு ஏற்புடைய மோனை நயமுடைய பாடமும் ஆகும். அலமரல் - சுழலுதல்; அலமரல் அசைவளி - சுழன்றடிக்கும் வாடைக் காற்று. உயவுநோய் - வருத்தத்தையுடைய காமநோய்.

29. குறிஞ்சி — தலைவன் கூற்று

நல்உரை இகந்து புல்உரை தாஅய்ப்
பெயல்நீர்க்கு ஏற்ற பசுங்கலம் போல
உள்ளம் தாங்கா வெள்ளம் நீந்தி
அரிதுஅவா உற்றனை நெஞ்சே என்றும்
பெரிதால் அம்மநின் பூசல் உயர்கோட்டு
மகவுடை மந்தி போல
அகன்உறத் தழீஇக் கேட்குநர்ப் பெறினே.

— ஔவையார்

இரவுக்குறி மறுக்கப்பட்ட தலைமகன், 'இவர் எம்மை மறுத்தார்' என்று வரைந்து கொள்ள நினையாது பின்னும் கூடுதற்கு அவாவுற்ற நெஞ்சினை நோக்கிக் கூறியது.

நெஞ்சே! நல்ல பேச்சுகளை ஒழிந்து பயனற்ற பேச்சுகள் பரவப்பெற்று, பெய்கின்ற மழைநீரை எதிர்கொண்ட பசுமண்ணாலாகிய பாண்டத்தைப்போல உள்ளத்தால் பொறுக்கமுடியாது ஆசைப்பெருக்கில் கிடந்து உழன்று, பெறுதற்கு அரியதைப் பெற ஆசைகொண்டாய். உயர்ந்த மரக்கிளையிலுள்ள குட்டியால் தழுவப்பெற்ற பெண்குரங்குபோல நின் நினைவைத் தானும் தழுவிக்கொண்டு மனம் பொருந்த உன் குறையைக் கேட்டு நிறைவேற்றுவாரைப் பெறுவாயாயின், உன் போராட்டம் எப்பொழுதும் மிகுந்துள்ளது.

இப்பொழுதோ அத் தலைவியைக் காண்டலும் அரிதாயிற்று என மனத்திற்குச் சொல்லியவாறாம்.

பூசல் பெரிது என்பது இடையறாது இருந்துவந்த தாதலின், 'என்றும்' என்னும் பாடம் இங்கு ஏற்புடைத்தாம்.

நல்லுரை என்பது தான் விரும்பும் இரவுக்குறி நேர்தலை. புல்லுரை என்பது இரவுக் குறி மறுத்து வரைவுகடாயதாம். பசுங்கலம் நீரைத் தாங்காது கரைதல் போல உள்ளமும் ஆசை வெள்ளத்தைத் தாங்காதாயிற்று என்பதாம். பசுங்கலம் - சுடப்படாத குயக்கலம்; நீந்துதல் - உள்ளே கிடந்து தடுமாறுதல். அரிது என்பது அவன் விரும்பிய இரவுக் குறியினை. கேட்குநர் - கேட்டுக் குறைதீர்ப்பவர்.

தோழியால் வரைவு கடாவப்பட்ட பின்னரும் தலைவன் களவொழுக்கம் வேண்டிக் கூறியது என இப் பாடலுக்குக் கருத்துரைப்பர் இளம்பூரணர் (தொல். களவு. 17). நச்சினார்க்கினியர், "தோழி இவ்விடத்துக் காவலர் கடியர் எனக் கூறிச் சேட்பட

நிறுத்தலில் தனக்கு உண்டாகிய வருத்தத்தையும் பார்த்து. உம்மை சிறப்பு. இதுவே மடன்மாக் கூறுதற்கு ஏதுவாயிற்று'' என்று விளக்கம்கூறி இப் பாடலை எடுத்துக் காட்டுவர். (தொல். களவு. 11).

30. பாலை — தலைவி கூற்று

கேட்டிசின் வாழி தோழி அல்கல்
பொய்வ லாளன் மெய்உற மரீஇய
வாய்த்தகைப் பொய்க்கனா மருட்ட ஏற்றுஎழுந்து
அமளி தைவந் தனெனே குவளை
வண்டுபடு மலரின் சாஅய்த்
தமியென் மன்ற அளியென் யானே.

— கச்சிப்பேட்டு நன்னாகையார்

'அவர் நின்னை வரைந்துகோடல் காரணத்தால் பிரியவும், நீ ஆற்றியிராது ஆற்றாய் ஆகின்றது என்?' என வினாய தோழிக்குத் தலைமகள், 'யான் ஆற்றியுளேனாகவும் கனவு வந்து என்னை இங்ஙனம் நலிந்தது' எனக் கூறியது.

தோழி, கேட்பாயாக. இராப்பொழுதிலே, பொய்யுரைத் தலில் வல்லவனான தலைவன், என் உடம்புடன் சேர்தலைப் பொருந்திய மெய்யே போலும் தகைமையினையுடைய பொய் யான கனவு தோன்றி என்னை மயக்க, அதிலிருந்தும் விடுபட்டுத் துயிலுணர்ந்து எழுந்து, தலைவன் அருகில் இருப்பதாக எண்ணிப் படுக்கையைத் தடவினேன். வண்டுகள் விழுந்து உழக்கிய குவளை மலரைப் போல மெலிவுற்று நிலைகுலைந்து எப்படியும் தனித்தவளாயிருத்தலை உணர்ந்தேன். அத்தகைய நான் இரங்கத்தக்க நிலைமையேன் ஆவேன்.

சின் - முன்னிலை அசை; வாழிய - அசைநிலை; அல்கல் - இரவு; ஏற்று எழுதல் - துயிலுணர்ந்து எழுதல்; தமியேன் என்றது கனவில் தனியான நிலைமையை.

'அமளி தைவந்தனன்' என்றும் பாடம் உண்டு: இங்கே தன்மை வினை 'அன்' விகுதி பெற்றிருப்பது பண்டைய தொல்காப்பிய இலக்கணத்திற்கு மாறுபட்டது. 'அமளி தைவந்தனென்' என என் விகுதியாயிருத்தலே ஏற்புடையது.

'காமம் இடையீடுபட்டுழித் தலைவி கனாக் கண்டு கூறியது' என்பதற்கு இப் பாடலை மேற்கோளாக இளம்பூரணர் தருகிறார் (தொல். பொருளியல், 3). நச்சினார்க்கினியர், 'வரைதற்குப் பிரிய, வருந்துகின்றது என்'னென்றாட்கு (தோழிக்கு)த் (தலை-

கனவு நலிவு உரைத்தல் (தொல். களவு. 21) என்பதற்கு எடுத்துக் காட்டுவர்.

31. மருதம் — தலைவி கூற்று

மள்ளர் குழீஇய விழவி னானும்
மகளிர் தழீஇய துணங்கை யானும்
யாண்டுங் காணேன் மாண்தக் கோனை
யானும்ஓர் ஆடுகள மகளே என்கைக்
கோடீர் இலங்குவளை நெகிழ்த்த
பீடுகெழு குரிசிலும் ஆடுகள மகனே.

— ஆதிமந்தி

நொதுமலர் வரைவுழித் தோழிக்குத் தலைமகள் அறத்தொடு நின்றது.

மாண்புடைய தகுதி படைத்தவனான தலைவனை வீரர்கள் கூடித் திரண்டிருக்கின்ற சேரி விழாவினிடத்தும், பொதுமகளிர் அவரவர் காதற்கிழவரைத் தழுவி ஆடும் துணங்கைக் கூத்தின் கண்ணும், இவையல்லாத பிறவிடத்தும் கண்டேனில்லை. யானும் ஆடுகளத்திற்குரிய மகளாய் விட்டேன். சங்குகளை அறுத்துச் செய்யப்பட்ட என் கையில் உள்ள வளையல்கள் நெகிழுமாறு பிரிந்துசென்ற பெருமை பொருந்திய தலைவனும் ஆடுகளத்திற் குரியவனே யாவன்.

இவ்வாறாகத் தன்னோடு தொடர்புடைய ஆடவன் ஒருவன் உளன் என்பதனைத் தோழிக்குத் தலைவி எடுத்துரைக்கின்றாள்.

மள்ளர் - வீரர்; விழா - தங்கள் சேரிகளில் வீரர்கள் நிகழ்த்திக் காட்டும் வீரவிளையாட்டு. துணங்கை - மகளிர் ஆடவருடன் கூடியாடும் ஒருவகைக் கூத்து. இதனைச் 'சிங்கிக் கூத்து' என்றும் உரைப்பர். இருகைகளை மடக்கியடித்துச் சுழன்றாடும் தன்மையது என்பர். விழாக் காலத்தில் மகளிர் துணங்கையாடுதலும் அவர்களுக்கு ஆடவர் முதற்கை கொடுத்தலும் பண்டை வழக்கமாகும்.

ஓர் ஆடுகளமகள் என்பதற்கு ஒப்ப ஓர் ஆடுகளமகன் என்பது வேண்டுவதன்று. குரிசிலும் என்பதிலுள்ள உம்மேபொருட்சிறப்புத் தருவதாகும். மேலும் குரிசிலும் என்பது ஈரசை அகவற்சீராகவும் அமைவதாகும். எனவே, இப் பாடம் கொள்ளப்பெற்றது.

''இது காதலற்கெடுத்த ஆதிமந்தி பாட்டு'' என உரைக் கிறார் நச்சினார்க்கினியர். அவர் உரை வருமாறு:

"இது காதலற் கெடுத்த ஆதி மந்தி பாட்டு. (இது) தத்தம் பெயர் கூறிற் புறமாம் என்று அஞ்சி வாளாது கூறினார். ஆதிமந்தி தன் பெயரானும் காதலனாகிய ஆட்டனத்தி பெயரானும் கூறிற் காஞ்சிப்பாற்படும். 'ஆதிமந்திபோல, ஏதஞ் சொல்லிப் பேது பெரிதுறலே' எனவும், 'வெள்ளி வீதியைப் போல நன்றும், செலவயர்ந்திசினால் யானே' எனவும் அகத்திணைக்கண் சார்த்து வகையான் வந்தனவன்றித் தலைமை வகையாக வந்தில என்பது" (தொல். அகத். 54). மேலும் அவர், "(நொதுமலர் வரைவின்கண்) தலைவி தன் குடிப்பிறப்பும் கற்பும் முதலிய உயர்ச்சிக் கேற்ப அதனை மறுத்துத் தலைவன் வரையுமாறு நீ கூறு எனத் தோழிக்குக் கூறும்" (தொல். களவு. 16) என்றும் உரைக்கின்றார்.

32. குறிஞ்சி — தலைவன் கூற்று

காலையும் பகலும் கையறு மாலையும்
ஊர்துஞ்சு யாமமும் விடியலும் என்றுஇப்
பொழுதுஇடை தெரியின் பொய்யே காமம்
மாஎன மடலொடு மறுகில் தோன்றித்
தோற்றேன் தூற்றலும் பழியே
வாழ்தலும் பழியே பிரிவுதலை வரினே.

— அள்ளூர் நன்முல்லையார்

பின்னின்றான் கூறியது.

காலைப் பொழுதும் உச்சி வேளையும் பிரிந்தார் செயலற்று வருந்துதற்குக் காரணமான மாலைக் காலமும் ஊரார் எல்லாம் தூங்குகின்ற இடையாமமும் விடியற்காலமும் இடையே தோன்றுமானால் அவர் கொண்ட காமக் கூட்டம் பொய்படும்; உண்மையன்று. இவ்வகை இன்பக் கூட்டம் நிகழாது பிரிவு நேருமானால் குதிரை எனக்கொண்டு பனைமடலாற் செய்த குதிரைமேல் தெருவில் வெளிப்பட்டு அவளை அடைதலில் தோற்றேனாகிய என்னையும் அவ்ளையும் பலர் அறியச் செய்தலும் பழிப்புக்கு ஏதுவாகும். மடலூராது உயிரோடு வாழ்ந்திருத்தலும் எனக்குப் பழி தருவதாகும்.

தலைவியைப் பிரிந்து உயிர் வாழேனாதலின் மடலூர்ந்தாயினும் அவளைப் பெறுவேன் எனத் தன் துணிவினைத் தலைவன் கூறலாயினன் என்க.

தோழியை இரந்து வேண்டினானது இவ்வுரையால் தோழி தங்கள் கூட்டத்திற்குத் துணைபுரிவாள் என்பதாம்.

கையறுதல் - செயலறுதல்; மறுகு - தெரு; தூற்றல் - பலர் அறியச் செய்தல்.

'தோற்றேன் தூற்றலும்' என்பது தோற்றேனைத் தூற்றலும் என்றாகும். தூற்றலும் என்பதற்கு ஏற்ற மோனை நயமுடையது இந்தப் பாடம். மேலும் தோன்றி என்ற எச்சத்துக்கு ஏற்ற முடிபாகவும் இப் பாடம் அமைகிறது.

33. மருதம் — தலைவி கூற்று

அன்னாய் இவன்ஓர் இளமா ணாக்கன்
தன்னூர் மன்றத்து என்னன் கொல்லோ
இரந்தூண் நிரம்பா மேனியொடு
விருந்தின் ஊரும் பெருஞ்செம் மலனே.

— படுமரத்து மோசிகீரன்

வாயிலாகப் புக்க பாணன் கேட்பத் தோழியை நோக்கித் தலைமகள் வாயில் நேர்வாள் கூறியது.

தோழியே, இங்கு வந்துள்ள இப் பாணன் ஓர் இளைய மாணாக்கன் ஆவான். தன்னுடைய ஊரிலுள்ள பொதுவிடத்திலே இவன் எத்தகையவன் ஆவானோ? பிறரிடம் இரந்து பெறும் உணவினால் முழுவளர்ச்சி பெறாத உடம்புடனே உள்ள இவன் புதிதாகப் பெறும் விருந்தின்பொருட்டுச் செல்லும் பெரிய தலைமையுடையன் ஆவான்.

இங்கும் விருந்து பெறத் தக்கவனே என அவன் வேண்டுதலை ஏற்றமையைப் புலப்படுத்தினாளாவள்.

இரந்தூண் - இரந்து உண்ணும் உணவு; மாணாக்கர் இரந்து உண்ணுதல் பண்டை மரபாகும். நிரம்பாமை - பொலிவு பெறாமை.

''பாணன் வாயிலாக வந்துழித் (தலைவி) கூறியது'' என்பர் இளம்பூரணர் (தொல். கற்பு. 6). நச்சினார்க்கினியர் மேலும் விளக்குவாராய், ''பாணன் சொல்வன்மைக்குத் தோற்று வாயில் நேர்ந்த தலைவி தோழிக்கு உரைத்தது'' என்பர் (தொல். கற்பு 6).

34. மருதம் — தோழி கூற்று

ஒறுப்ப ஓவலர் மறுப்பத் தேறலர்
தமியர் உறங்கும் கௌவை இன்றாய்
இனியது கேட்டுஇன் புறுகஇவ் வூரே
முனாஅது,

யானையங் குருகின் கானல்அம் பெருந்தோடு
அட்ட மள்ளர் ஆர்ப்புஇசை வெரூஉம்
குட்டுவன் மாந்தை அன்னஎம்
குழல்விளங்கு ஆய்நுதற் கிழவனும் அவனே.

— கொல்லிக் கண்ணன்

வரைவு மலிந்தமை ஊர்மேல் வைத்துத் தோழி கிழத்திக்குச் சொல்லியது.

கடற்கரையிலுள்ள யானையை போலப் பிளிறும் இயல்புடைய வண்டாளங்குருகின் பெரிய தொகுதியானது, பகைவரைக் கொன்றொழித்து வெற்றி கொண்ட வீரரின் பேராரவார ஒலியைக் கேட்டு, அஞ்சுதற்கு இடமான குட்டுவனது மாந்தை என்னும் பட்டினத்தைப் போன்ற என்னுடைய கூந்தல் விளங்குகின்ற அழகிய நெற்றிக்கு உரிமையுடையோன் முன்னரும் வரைவொடும் வந்த அத் தலைவனேயாவன். விட்டுப் பிரியாத தாயர் வைது ஒறுக்கவும் களவிற் கூடிய நிலை தெரியாராய்த் தலைவர்க்கு மணம் செய்தலை மறுக்கவும் காதலனைக்கூடப் பெறாது தனித்து உறங்காதிருக்குமவரை உறங்குமாறு சொல்லும் கடுஞ்சொற்கள் இல்லையாகவும் இவ்வூரில் உள்ளார் மணந்து கொள்வான் என்ற இனிய செய்தியைக் கேட்டு இன்புறுவாராக.

ஒவலர் - விட்டு நீங்காத தாயர் முதலியோர்; கௌவை - கடுஞ்சொற்கள்; தோடு - தொகுதி; மள்ளர் - வீரர். யானையங் குருகு - வண்டாளங்குருகு; இதனை 'ஆனைச்சாத்தன்' என்னும் பெயராலும் வழங்குவர்.

மாந்தை என்னும் ஊர்ப்பெயர் சங்க இலக்கியத்துப் பல இடங்களில் வருகின்றது. இதனை மரந்தை எனத் தவறாகப் படித்தாரும் உளர். முத்தொள்ளாயிரத்து, 'மல்லனீர் மாந்தையார் மாக்கடுங் கோக்கோதைக்கு' என வெண்பா அடியின் வருதலால் இவ்வூர்ப் பெயர் மரந்தையாகாமை நன்கு துணியப்படும். இவ்வூர் மாதை எனத் திரிந்தும் வழங்கப்பட்டமை தெரிய வருகிறது. எனவே இப் பாடம் கொள்ளப்பெற்றது.

'சீர்கூனாதல் நேரடிக்கு உரித்தே' (தொல். செய்யு. 49) என்பதனால் ஆசிரியப்பாவின் அடி முதற்கண் கூனாகிய தனிச் சொல்வரும் என்பது பெறப்படுகிறது. இப் பாடலில் 4ஆம் அடியின் முற்பட 'முனாஅது' எனத் தனிச்சொல் வந்துள்ளது. அதனைத் தனிப்பட எடுத்துக்காட்டிய போதிலும் அது அந்த அடியைச் சார்ந்தது என்றே கொள்ளப்படும்.

35. மருதம் — தலைவி கூற்று

நாண்இல மன்றஎம் கண்ணே நாள்நேர்பு
சினைப்பசும் பாம்பின் சூல்முதிர்ப் பன்ன
கனைத்த கரும்பின் கூம்புபொதி அவிழ
நுண்உறை அழிதுளி தலைஇய
தண்வரல் வாடையும் பிரிந்திசினோர்க்கு அழலே.

— கழார்க் கீரன் எயிற்றி

பிரிவிடை மெலிந்த கிழத்தி தோழிக்குச் சொல்லியது.

தோழி! தலைவர் பிரிந்த நாளிலே அதற்கு உடம்பட்டு இருந்தன என் கண்கள், இப்பொழுது கருப்பத்தையுடைய பச்சைப் பாம்பினது கருமுதிர்ச்சியைப் போன்ற திரண்ட கரும்பினது குவிந்த பொதி அரும்பு மலரும்படி சிறு துளிகளாகத் துளித்துப் பெரிய துளியாக மழை பெய்தலைப் பொருந்திய குளிர்ச்சிவருதலையுடைய வாடைக் காற்று வீசும் கூதிர்க் காலத்தும் பிரிந்து உறையும் தலைவருக்காக அழுதலால், அக் கண்கள் உறுதியாக நாணம் இல்லாதனவாயின.

பிரியும்பொழுது அழுதால் அவர் பிரிவு தடைபட்டிருக்கும். அவர் இல்லாத இப்பொழுது அழுதலால் நாணம் இல்லாதன என்பது கருத்து.

நாள் நேர்தல் - இன்ன நாளில் வருவேன் என்ற தலைவன் உரைக்கு உடம்பட்டிருத்தல். சினை - கருப்பம்; சூல் - கருப்பம்; பசுந்தோகையால் மூடப்பட்டுள்ள கரும்பின் முதிர்ந்த பூ அடி பருத்தும் நுனி கூம்பியும் காணப்படுமாதலின் 'கூம்பு பொதி' எனப்பட்டது. பிரிந்திசினோர் - இதில் இசின் என்னும் இடைச் சொல் படர்க்கையிடத்து வந்துள்ளது. நுண் உறை - சிறு துளி; அழிதுளி - பெருந்துளி.

பிரியுங்காலத்தில் தலைவியின் கண்கள் அழுகையால் தலைவனின் செலவைத் தடுத்தலும் உண்டு என்பது,

'சொல்லா முன்னர் நில்லா ஆகி
நீர்விலங்கு அழுதல் ஆனா,
தேர்விலங் கினவால் தெரிவை கண்ணே'

என வரும் இந் நூற்பாடலால் (256) தெரியலாகும்.

''மேனி பசந்து, தனிப்படர் உறுங்காலத்துத் தலைவி தன்னுடைய உறுப்பினை அறிந்தன போலப் பொருந்தின கூற்றாற் சொல்லவும் பெறும்'' என்னும் பொருளுடைய நூற்

பாவுக்கு இப் பாடலை மேற்கோளாகத் தருவர் நச்சினார்க்கினியர் (தொல். பொருளியல், 8)

36. குறிஞ்சி — தலைவி கூற்று

துறுகல் அயலது மாணை மாக்கொடி
துஞ்சுகளிறு இவரும் குன்ற நாடன்
நெஞ்சுகளன் ஆக நீயலென் யான்என
நற்றோள் மணந்த ஞான்றை மற்றுஅவன்
தாவா வஞ்சினம் உரைத்தது
நோயோ தோழி நின்வயி னானே.

— பரணர்

வரைவிடை வைத்துப் பிரிய ஆற்றாள் எனக் கவன்று வேறுபட்ட தோழியைத் தலைமகள் ஆற்றுவித்தது.

தோழி! பொற்றைக் கல்லின் பக்கத்தில் உள்ளதாகிய மாணை என்னும் பெருங்கொடி அக் கல்லில் படராது அருகே தூங்குகின்ற களிற்றின்மேல் படரும் குன்றங்களையுடைய நாட்டுக்குத் தலைவன் என்னுடைய நல்ல வனப்புடைய தோள்களைத் தழுவிக்கலந்தபோது, தன் நெஞ்சே பற்றுக் கோடாக, நின்னைப் பிரியேன் என்று அவன் கெடாத உறுதிமொழி சொன்னது நின் வருத்தத்திற்குக் காரணமாகுமோ?

அவன் சூளுரை மறந்தமைக்கு நான் துன்பமுறாது பொறுத்திருக்க நீ துன்புறுதற்கு ஏதுவில்லை என்பதாம்.

யானை துறுகல்லைப் போலத் தோன்றுதலால் கொடி அதன் மேல் படர்ந்தது என்க. யானை துயிலெழக் கொடிக்குரிய பற்றுக் கோடு போம். தலைவன் தோள் மணந்த இன்பமும் அவன் பிரிதலால் சிறிது காலமே இருந்தது என்பதனைக் குறிப்பித்த வாறாம்; துஞ்சுதல் - தூங்குதல்; ஞான்றை - பொழுது; களன் - தொடர்பு, பற்றுக்கோடு; நீயலென் - நீங்கேன், பிரியேன்.

நிலையின்றித் திரியும் இயல்புடைய தூங்கும் யானையைத் துறுகல்லாக எண்ணி அதன்மேல் படர்ந்த மாணைக்கொடி பின் அந்த யானை எழுந்து போனபின் பற்றுக் கோடின்றித் துன்புறுதல் போன்று தலைவனது சூளுறவினைப் பற்றாகக் கொண்டிருந்த எனக்கு அதனை அவன் காப்பாற்றாமை துன்பத்திற்கு ஏதுவாயிற்று என்னும் குறிப்பினைக் கொண்டிருத்தலால் இஃது இறைச்சிப் பொருளாம்.

'தோழியைத் தலைவி ஆற்றுவித்தலும் கொள்க' என்று கூறி இப் பாடலை எடுத்துக் காட்டுகிறார் நச்சினார்க்கினியர் (தொல். களவு. 22).

37. பாலை — தோழி கூற்று

நசைபெரிது உடையர் நல்கலும் நல்குவர்
பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பொளிக்கும்
அன்பின தோழிஅவர் சென்ற ஆறே.

— பாலை பாடிய பெருங்கடுங்கோ

தோழி, 'கடிது வருவர்' என்று ஆற்றுவித்தது.

தோழி! நம் தலைவராகிய அவர் சென்ற வழிகள், பெண் யானையின் பசியைப் போக்கும்படியாகப் பெரிய நீண்ட துதிக் கையையுடைய ஆண்யானை மெல்லிய கிளைகளையுடைய யாமரத்தின் பட்டையை உரித்துக் கொண்டிருக்கும் அன்பைப் புலப்படுத்தும் இடமாயுள்ளன. அதனால் நின்பால் விருப்பம் மிகவும் உடையராகிய அவர் விரைவில் மீண்டு உனக்கு இன்பம் நல்குதலைச் செய்வார்.

வழியிடத்துக் காணும் களிற்றின் அன்புநிலை கண்ட தலைவரும் விரைந்து வந்து உனக்குத் தலையளி செய்வார் என்பது சுட்டியவாறாம்.

தலைவனது பிரிவாற்றாமல் வருந்தும் தலைவிக்குத் தோழி, கருப்பொருள்களுள் தலைவன் அன்பு செய்தற்குத் தகுவனவற்றைக் கருதிக் கூறுதல் வற்புறுத்தலாகுமாதலின் இங்ஙனம் கூறினாள் எல்பதாம்.

நல்கல் - தலையளி செய்தல், அன்பு செய்தல்; நல்கலும் நல்குவர் என்பது நல்குவர் என்னும் ஒருசொல் நீர்மையதாம். யா - பாலை நிலத்து வளரும் ஒருவகை மரம். பொளித்தல் - உரித்தல்.

இப் பாடலின் பொருளை விளக்குவார் போல நச்சினார்க்கினியர்,

'இதனுள், 'முன்பே நெஞ்சகத்து அன்புடையார் அதன்மேலே களிறு தன்பிடியின் பெரும்பசி களைதற்கு மென்றோலையுடைய ஆச்சாவைப் பிளந்து அந் நாரைப் பொளித்து ஊட்டும் அன்பினையுடைய அவர் சென்ற ஆறு, அதனைக் காண்பர்காண்' என்று அன்புறுதகுந கூறிப் பிரிவாற்றாதவளை வற்புறுத்தவாறு காண்க. நம்மேல் இயற்கையாக அன்பிலனென்று ஆற்றாளாவள் என்று

கருதாது இவளை ஆற்றுவித்தற்பொருட்டு இவ்வாறு கூறலின் வழுவாய்மைந்தது'' (தொல். பொருளியல், 37) என நச்சினார்க்கினியர் எழுதும் பகுதி நோக்கத்தக்கது.

38. குறிஞ்சி — தலைவி கூற்று

கான மஞ்ஞை அறைஈன் முட்டை
வெயில்ஆடு முசுவின் குருளை உருட்டும்
குன்ற நாடன் கேண்மை என்றும்
நன்றுமன் வாழி தோழி உண்கண்
நீரொடு ஒராங்குத் தணப்ப
உள்ளாது ஆற்றல் வல்லு வோர்க்கே,

— கபிலர்

வரைவு நீட்டித்தவழித் தலைமகள் தனது ஆற்றாமை தோன்றத் தோழிக்குக் கூறியது.

தோழி! காட்டிடத்துள்ள மயில் பாறையில் இட்ட முட்டைகளை வெயிலில் விளையாடித் திரியும் கருங்குரங்கின் குட்டி உருட்டிவிடும் இயல்புடைய மலைநாட்டை யுடையவனாகிய தலைவனது நட்பு, அவன் பிரிய, மை தீட்டப் பெற்ற கண்ணிலிருந்து பெருகும் கண்ணீரோடு ஒருபடியாக அப் பிரிவைப் பொறுத்துக்கொள்ளும் வன்மையுடையார்க்கு மட்டுமே எப்பொழுதும் மிக நல்லதாகும்.

யான் அங்ஙனம் ஆற்றகில்லேன் எனச் சுட்டியவாறு.

மயில் அடைகாத்தற்குரிய முட்டை அங்ஙனம் செய்யப் படாமல் பாறைமேல் தனித்துக் கிடப்பதேயன்றி அதனைக் குரங்கின் குட்டியும் உருட்டுவது போல உடனிருந்து இன்புறுத்து தற்குரிய தலைவனது பிரிவினால் அவள் துன்புறுதலேயன்றி ஊரார் அலர் தூற்றும் துன்பத்தையும் பெறலாயினள் என்பது குறித்தலின் இஃது இறைச்சிப்பொருளாம்.

அறை - பாறை; ஈன்முட்டை - இட்ட முட்டை; தணப்ப - பிரிய; வல்லுவோர் - வன்மையுடையோர்.

39. பாலை — தலைவி கூற்று

வெந்திறல் கடுவளி பொங்கர்ப் போந்தென
நெற்றுவிளை உழிஞ்சில் வற்றல் ஆர்க்கும்
மலையுடை அருஞ்சுரம் என்பநம்
முலையிடை முனிநர் சென்ற ஆறே.

— ஔவையார்

பிரிவிடை, 'ஆற்றல் வேண்டும்' என்ற தோழிக்கு, 'யாங்ஙனம் ஆற்றுவேன்?' எனத் தனது ஆற்றாமை மிகுதி தோன்றத் தலைமகள் கூறியது.

தோழி! நம் முலையிடத்தே துயிலுதலை வெறுத்தவராகிய தலைவர் பிரிந்துசென்ற வழியானது வெம்மையோடு கூடிய வலிய பெருங்காற்றுக் கிளைகளினூடே வீசியதால் வாகை மரத் தின் நெற்றாய் விளைந்த வற்றல்கள் ஆரவாரிக்கும் மலைகளை யுடைய கடத்தற்கரிய பாலை வழியாகும் என்று உரைப்பர்.

அவர் சென்ற வழியின் கொடுமை நினைந்தே ஆற்றே னாயினேன் எனத் தலைவி தன் நிலையினை உரைத்தாளாயினள் என்க.

பாலைநிலமாதலின் அங்கு வீசும் காற்று வெம்மையுடைய தாயிற்று. திறல் - வலி; கடுவளி - விரைந்துவீசும் காற்று, பெருங் காற்று; பொங்கர் - மரக் கொம்பு, சோலை; வற்றல் - பசுமை அறக் காய்ந்து வற்றிய காய்.

வழியருமை கேட்டவழித் தலைவி கூறியது என நச்சினார்க் கினியர் கருத்துரைப்பர் (தொல். கற்பு. 6).

40. குறிஞ்சி — தலைவன் கூற்று

யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே.

— செம்புலப் பெயனீரார்

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பின்னர், பிரிவர்' எனக் கருதி அஞ்சிய தலைமகள் குறிப்பு வேறுபாடு கண்டு தலைமகன் கூறியது.

என் தாயும் நின் தாயும் என்ன தொடர்புடையவர்? என் தந்தையும் நின் தந்தையும் எம்முறையில் உறவினராவர்? யானும் நீயும் எவ்வாறு முன்பு ஒருவரையொருவர் அறிந்தோம். இவ்வகை யான சூழல் எதுவும் இன்றியே செம்புலமாகிய பாலை நிலத்தில் பெய்த மழைநீர் அந்நிலத்தே சுவறி ஒன்றாய்க் கலந்து விடுதல் போல அன்புடைய நம் நெஞ்சங்கள் தாமாகவே ஒன்றுபட்டன. ஆகவே நாம் இனிப் பிரிவு அரிது எனத் தெளிவித்தானாயிற்று.

யாய், ஞாய், தாய் என்பன முறையே மூவிடச் சொல்லாய் என்தாய், நின்தாய், அவன் தாய் என வருவனவாம். இதனைத் தெய்வச்சிலையார் உரைப்பகுதி நன்கு தெளிவுபடுத்துகிறது. அவ்வுரைப்பகுதி வருமாறு:

'இம் மூன்றிடத்தும் ஒட்டுப்பட்ட பெயர்கள் ஆறாம் வேற்றுமை முறையைக் குறித்து மேற்சொல்லிய வாற்றான் தந்தை, நுந்தை, எந்தை எனவும்; தாய், ஞாய், யாய் எனவும்; தம்முன், நும்முன், எம்முன் எனவும்; தம்பி, நும்பி, எம்பி எனவும் முதல்வனையும் ஈன்றாளையும் முன்பிறந்தானையும் பின்பிறந்தானையும் உணர்த்தும் பன்மைச் சொற்கள்.' (தொல். எச்ச. 14).

'யாயும் யாயும்' என்றும் பாடம் உண்டு. யாய் என்பது தன்மை முன்னிலை ஈரிடமும் சுட்டும். 'நுந்தையும் யாயும் கடியரோ நின்னே' (ஐங். 98) என்றவிடத்து யாய் முன்னிலை சுட்டி வருதல் காணத்தகும்.

செம்புலம் - பாலை நிலம். 'மறுபுலம் செம்புலம் வன்பால் பாலை' என்பது பிங்கல நிகண்டு (நூற்பா 527).

'செம்புலம்' என்பதற்குச் செம்மண் நிலம் எனப் பொருள் கொண்டு அந் நிலத்தில் பெய்த மழைநீர் அதற்கேற்ப நிறமும் சுவையும் பெற்று ஒன்றுபடுவதுபோல எனவும் உரைப்பர். நீர் சார்ந்ததன் வண்ணமாய் வேறுபட்டதேயன்றி ஒன்றினுள் ஒன்று கலந்து, சேர்ந்த சுவடே தெரியாமல் கூடிவிட்டன என்பதற்கில்லை. 'நிலத்தொடு நீரியைந் தன்னார்' (குறள். 323) என்னும் வள்ளுவர் வாக்கும் இங்குக் கருதத்தக்கது.

'களவுக்காலத்து வருந்திய வருத்தம் தீரத் தனது காதல் மிகுதி தோன்றச் சொல்லுதற் பொருளின்கண் தலைவனுக்குக் கூற்று நிகழ்ந்தது' (தொல். கற்பு. 5) என்பர் இளம்பூரணர். நச்சினார்க்கினியர் 'பிரிவர் எனக் கருதிய தலைவி குறிப்புணர்ந்து தலைவன் கூறியது' (தொல். களவு. 10) எனவும், 'நம்மானன்றி நெஞ்சம் தம்மில்தாம் கலத்தலின் தெய்வத்தான் ஆயிற்று எனத் (தலைவன் தலைவியைத்) தெருட்டியது' எனவும் (தொல். கற்பு. 5) ஈரிடத்தில் இப் பாடலை எடுத்துக்காட்டுகிறார்.

41. பாலை — தலைவி கூற்று

காதலர் உழையர் ஆகப் பெரிதுஉவந்து
சாறுகொள் ஊரின் புகல்வேன் மன்ற
அத்தம் நண்ணிய அம்குடிச் சீறூர்

மக்கள் போகிய அணில்ஆடு முன்றிற்
புலப்பில் போலப் புல்லென்று
அலப்பென் தோழிஅவர் அகன்ற ஞான்றே.

— அணிலாடு முன்றிலார்

பிரிவிடை வேறுபாடு கண்டு கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

தோழி! காதலர் பக்கத்திலே உள்ளவராக மிகவும் மகிழ்ச்சியுற்று விழாக் கொண்ட ஊரினர் மகிழ்வதைப் போல நான் விரும்பி மகிழ்வேன். ஆயின் அவர் என்னை விட்டுப் பிரிந்த அப்பொழுதே பாலை நிலத்தில் பொருந்திய அழகிய குடிகளையுடைய சிற்றூரிலே மக்கள் எல்லாரும் நீங்கிச் சென்ற அணில் விளையாடுகின்ற முற்றத்தையுடையதான தனிமைப்பட்ட வீட்டைப்போலப் பொலிவழிந்து வருந்துவேன்.

தலைவன் பிரிவினால் தான் உறும் வருத்தம் இயல்பானதே என்பதனைத் தலைவி புலப்படுத்துகின்றாள்.

உழை - பக்கம்; உழையர் - பக்கத்தில் உள்ளவர்; சாறு - விழா; புகல்வேன் - விரும்புவேன், மகிழ்வேன்; போகிய - ஒழிந்த, விட்டுச்சென்ற; முன்றில் - முற்றம்; புலம்பு - தனிமை; புலம்பு இல் என்பது புலப்பில் என்றாயிற்று. அலத்தல் - துன்புறல், வருந்தல்.

நச்சினார்க்கினியர் இப் பாடலைப் 'பிரிவிடை ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்கு ஆற்றுவல் எனக் கூறியது' என்பர் (தொல். கற்பு. 6).

42. குறிஞ்சி — தோழி கூற்று

காமம் ஒழிவ தாயினும் யாமத்துக்
கருவி மாமழை வீழ்ந்தென அருவி
விடரகத்து இயம்பும் நாடஎம்
தொடர்பும் தேயுமோ நின்வயி னானே.

— கபிலர்

இரவுக்குறி வேண்டிய கிழவற்குத் தோழி நேர்ந்த வாய்பாட்டான் மறுத்தது.

நடு இரவில் மின்னல் இடி முதலிய தொகுதியையுடைய மழை பெய்தலினால் நீர் பெருகிப் பாயும் அருவியானது மலை முழைஞ்சு ...ளில் ஒலிக்கும் நாட்டையுடையவனே! நீ கூடித் துய்க்கின்ற காம

இன்பம் ஒரோவழி நீங்குமாயினும் உள்ளத்தில் கொண்ட நட்பு அழியுமோ? நீ இரவுக் குறியில் வாராவிடினும் நினக்கும் தலைவிக்கும் உள்ள நட்பு அழியாது என்பதாம்.

காமம் - இங்கே மெய்யுறு புணர்ச்சியைச் சுட்டும். கருவி - தொகுதி; விடரகம் - மலையிடத்துள்ள வெடிப்புகளும் குகைகளும். எம் என்றது தலைவிக்கும் தனக்கும் உள்ள ஒற்றுமை பற்றியதாம்.

காமம் ஒழிவதாயினும் என்பதனால் இரவுக் குறியில் கூடுதல் அருமை என்பதனைத் தோழி சுட்டுகிறாள். நீர் அருவியாக வீழ்தலினாலே இரவில் மலையிலே மழை பெய்தமை அறியப்படுதல் போலக் களவுக் கூட்டம் தலைவியின் மேனி வேறுபட்டால் பிறரால் அறியப்படுவதற்கும் அலர் பிறத்தற்கும் ஏதுவாயிற்று என்னும் உள்ளுறைப் பொருள் புலப்படுதல் காணலாம். தலைவி இரவுக்குறி மறுத்தமைக்கு ஏதுவும் இதனால் புலப்படும்.

43. பாலை — தலைவி கூற்று

செல்வார் அல்லர்என்று யான்இகழ்ந் தனெனே
ஒல்வாள் அல்லள்என்று அவர்இகழ்ந் தனரே
ஆயிடை,
இருபேர் ஆண்மை செய்த பூசல்
நல்அராக் கதுவி யாங்குஎன்
அல்லல் நெஞ்சம் அலமலக் குறுமே.

— ஔவையார்

பிரிவிடை மெலிந்த கிழத்தி சொல்லியது.

தோழி! தலைவர் ஒருபோதும் என்னைப் பிரிந்துசெல்லார் என்று யான் அவர் செலவை விலக்காமல் சோர்ந்திருந்தேன். அவரும் பிரிவை அறிவித்தால் அதற்கு உடம்படமாட்டாள் என்று கருதி என்னிடம் சொல்லாது சோர்ந்திருந்தார். அந்தக் காலத்தில் இருவரிடத்தும் உள்ள இருவகை ஆண்மைகளால் விளைந்த மாறுபாட்டினால் என் துன்பத்தையுடைய நெஞ்சு நல்ல பாம்பு கவ்வித் தீண்டியதனால் வருத்தமுறுதல் போல மிக்க கலக்கத்தை இப்பொழுது பெற்றுள்ளது.

தலைவர் சொல்லாமற் பிரிந்துசென்ற ஏதுவாகத் தான் துன்பத்தால் கலங்கியிருக்கும் நிலையைத் தலைவி எடுத்துரைக்கின்றாள். நல்ல பாம்பு கடித்தால் உயிர் நீங்குமளவும் துன்புறுதல் போலப் பிரிவுத்துயரால் தலைவியும் உயிர் சோரத் துடிதுடித்தாள் என்பதாம்.

செல்லார் என்று தலைவி கருதியிருத்தற்குக் காரணம் அவள்பால் தலைவன் வைத்துள்ள மிக்க அன்புடைமையே. இகழ் தல் - செய்வது செய்யாது சோர்ந்திருத்தல். ஒல்வாள் அல்லள் - ஆற்றியிராள்; பூசல் - மாறுபாடு; பேர் - பெயர்; நல்அரா - பொல்லாங்குக்கு நல்லதான பாம்பு; அலமலக்குறுதல் - துன்பத் தாற் சுழலுதல். தொல்காப்பியர் தன்மை வினைக்கு 'அன்' விகுதி விதிக்க வில்லை. என், ஏன், அல், (வினை.6) என்னும் மூன்று விகுதி களையே காட்டுகின்றார். 'அன்' தன்மை ஒருமைக்கு வருவது பிற்கால வழக்காகும் எனவே, 'என்' விகுதியைக் கொண்ட 'இகழ்ந்தனெனே' என்னும் பாடமே ஈண்டுக் கொள்ளப்பெற்றது.

44. பாலை — செவிலித்தாய் கூற்று

காலே பரிதப் பினவே கண்ணே
நோக்கி நோக்கி வாள்இழந் தனவே
அகல்இரு விசும்பின் மீனினும்
பலரே மன்றஇவ் உலகத்துப் பிறரே.

— வெள்ளிவீதியார்

இடைச்சுரத்துச் செவிலித்தாய் கையற்றுச் சொல்லியது.

என் கால்கள் நடந்து நடந்து மேலும் நடக்க இயலாதபடி ஓய்ந்துவிட்டன. என் கண்களும் எதிர் வருவாரைப் பார்த்துப் பார்த்து ஒளியை இழந்துவிட்டன. என் மகளும் அவள் காதலனும் அல்லாத காதற்பிணைப்புடன் செல்வார் பிறர் அகன்ற பெரிய வானத்தில் உள்ள விண்மீன்களைக்காட்டிலும். இவ்வுலகத்துப் பலராவர்.

என் மகளையும் அவள் காதலனையும் காணவில்லை என் கிறாள் செவிலித்தாய்.

பரி - நடை; அகல் இரு விசும்பு என்பதற்குத் தன்னை ஒழிந்த நான்கு பூதமும் அகன்று விரிதற்குக் காரணமாகிய பெரிய ஆகாயம் என்பர் நச்சினார்க்கினியர். நோக்குதல் - ஊன்றிப் பார்த்தல்; வாள் - ஒளி.

இப் பாடலைச் 'சுரத்திடை வினாஅயது நிகழ்ந்த பின்னர் (செவிலி) கூறியது' என்பதற்கு எடுத்துக்காட்டுவர் இளம்பூரணர் (தொல். அகத். 40). நச்சினார்க்கினியர், 'செவிலி கடத்திடைத் தன் நெஞ்சிற்குச் சொல்லியது' (தொல். அகத். 42) எனக் கருத் துரைப்பர்.

45. மருதம் — தோழி கூற்று

காலை எழுந்து கடுந்தேர் பண்ணி
வால்இழை மகளிர்த் தழீஇய சென்ற
மல்லல் ஊரன் எல்லினன் பெரிதுஎன
மறுவரும் சிறுவன் தாயே
தெறுவது அம்மஇத் திணைப்பிறத் தல்லே.

— ஆலங்குடி வங்கனார்

தலைமகற்குப் பாங்காயினார் வாயில் வேண்டியவழித் தோழி வாயில் நேர்ந்தது.

காலையில் துயில் எழுந்து விரைவுடன் செல்லும் தன் தேரை அலங்கரித்து, அதில் ஏறிச் சென்று தூய அணிகலன்களை அணிந் தவராகிய பரத்தையரை அணையும் பொருட்டுச் சென்ற வளப்ப மான ஊரையுடைய தலைவன் மிகவும் விளக்கத்தையுடையவன் ஆயினான் என்று ஆண்மகவு பெற்ற தாயாகிய தலைவி அவனை ஏற்றுக் கொள்ளுதல் கருதி மனம் சுழலுவாள். ஆயினும் அவனது தகாத ஒழுக்கத்தைப் பாராட்டாது ஏற்றுக்கொள்ளுதற்குரிய இந்த உயர் குடியிலே வந்து பிறத்தல் பெரிதும் துன்பம் தருவதாம்.

தலைவி கற்பொழுக்கமுடைய ளாதலின் தலைவனை ஏற்றுக் கொள்வாள் எனத் தோழி வாயில்களுக்கு உரைத்தாள் என்பதாம்.

'தரீஇய' என்றும் ஒரு பாடம் உண்டு. அதற்கு நம் இல்லத் தில் கொண்டு வைத்தற்கு என்று பொருளாம்.

பண்ணல் - ஒப்பனை செய்தல்; ஊரன் - மருதநிலத் தலைவன்; எல் - ஒளி, விளக்கம்; மறுவருதல் - சுழலுதல்.

பரத்தையிற் பிரிந்த தலைமகன் தனக்கு ஆண் மகவு பிறந்தது அறிந்து குழந்தையைக் காண வீட்டிற்கு வருதலும் அப்பொழுது தலைவி அவனுடைய் தகாத ஒழுக்கத்தை மறந்து ஏற்றுக் கொள் ளுதலும் மரபாகும்.

உயர்குடிப் பிறந்த மகளிர் தன் தலைவர் தீங்கு செய்யினும் அதனை மறந்து அன்பு பாராட்டுதல் அவர்தம் பிறப்பின் தனிப் பண்பு ஆகும் என்பதும் கருதற்பாற்று.

'பிறத்தல்லே' என்பதில் 'ல்' மிகுதல் செய்யுள் ஓசை கருதி விரிக்கும்வழி விரித்தலாம்.

இளம்பூரணர், 'புறப்பட்ட விளையாட்டினைத் தலைவன் பொருந்திய புகர்ச்சிக்கண் (தலைவிக்குக்) கூற்று நிகழும்' (தொல்.

கற்பு. 9) என்றும், குடிப் பிறத்தலை வெறுத்தலாகிய மெய்ப்பாடு வந்தது (தொல். மெய்ப். 12) என்றும் இப் பாடலை மேற்கோள் காட்டிக் கூறுவர். நச்சினார்க்கினியர், உறுதகை இல்லாப் புலவியுள் மூழ்கிய கிழவோன்பால் நின்று கெடுத்தற்கண் தோழி கூறியது (தொல். கற்பு. 9) என்றும், தோழி தலைவியை உயர்த்துக் கூறியது (தொல். பொருளியல், 46) என்றும் எடுத்துக் காட்டுவார்.

46. மருதம் — தலைவி கூற்று

ஆம்பற் பூவின் சாம்பல் அன்ன
கூம்பிய சிறகர் மனைஉறை குரீஇ
முன்றில் உணங்கல் மாந்தி மன்றத்து
எருவின் நுண்தாது குடைவன ஆடி
இல்இறைப் பள்ளித்தம் பிள்ளையொடு வதியும்
புன்கண் மாலையும் புலம்பும்
இன்றுகொல் தோழிஅவர் சென்ற நாட்டே.

— மாமிலாடன்

பிரிவிடை, 'ஆற்றாள்' எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி ஆற்றுவல் என்பதுபடச் சொல்லியது.

தோழி! ஆம்பல் மலரின் வாடலை ஒத்த குவிந்த சிறகுகளை யுடையதும் வீட்டினிடத்தே தங்குவதுமாகிய குருவிகள், முற்றத் தில் காயப் போட்டிருக்கும் தானியங்களைத் தின்றனவாய்ப் பொது இடத்திலுள்ள எருவினது நுண்ணிய பொடியைத் துளைந்து விளையாடி, மாலையில் வீட்டின் இறப்பிடத்தில் உள்ள சேக்கையிலே தம் குஞ்சுகளோடு தங்கியிருக்கும் பிரிந்து உறைப வர்க்குத் துன்பத்தைத் தரும் மாலைக் காலமும் தனிமைத் துயரும் அத் தலைவர் பிரிந்து சென்ற நாட்டில் இல்லை போலும்.

தலைவரும் இத்தகு தனிமைத் துயரால் துன்புறுவர்; ஆதலின் விரைந்து மீண்டு வருவர் என்பது அவள் கருத்து.

மாலைக் காலத்தில் தமக்குரிய இருப்பிடத்திலே குஞ்சு களோடு குருவிகளைக் காணும் தலைவர் தாமும் தம் மனைவி மக்களோடு சேர்ந்திருக்க வேண்டும் என்னும் கருத்தினராவர் என்பது இறைச்சிப்பொருள்.

சாம்பல் - பூவின் வாடல்; குரீஇ - குருவி; எருவின் நுண்தாது - உலர்ந்த சாணத்தின் துகள்கள்; பிள்ளை - பறவைக் குஞ்சினைக் குறிக்கும் மரபுச் சொல்; பள்ளி - சேக்கை, கூடு. மன்றத் தெருவின்

நுண்தாது எனப் பிரிப்பின் பொதுவிடத்துள்ள தெருவினில் காணும் புழுதி என்க. புன்கண்மாலை - துன்பம் செய்யும் மாலை; ஒளி மழுங்கிய மாலை என்றும் கொள்ளலாம்.

47. குறிஞ்சி — தோழி கூற்று

கருங்கால் வேங்கை வீஉகு துறுகல்
இரும்புலிக் குருளையின் தோன்றும் காட்டிடை
எல்லி வருநர் களவிற்கு
நல்லை அல்லை நெடுவெண் நிலவே.
— நெடுவெண்ணிலவினார்

இரா வந்து ஒழுகுங்காலை முன்னிலைப் புறமொழியாக நிலாவிற்கு உரைப்பாளாகத் தோழி உரைத்தது.

நீட்டித்து விளங்கும் வெண்ணிலாவே! கரிய அடிமரத்தையுடைய வேங்கை மரத்தின் பூக்கள் உதிர்ந்து கிடக்கின்ற குண்டுக் கல்லானது பெரிய புலியின் குட்டியைப் போலக் காணப்படும் காட்டிடத்தே இரவில் வருவாராகிய தலைவரின் களவொழுக்கத்திற்கு நீ நன்மை தருவாய் அல்லை.

நிலவு ஒளி வீசுதலால் இரவிற்கூடும் களவொழுக்கம் நிகழத் தடையாயிற்று என்பதாம். ஆகவே இனித் தலைவர் விரைவில் தலைவியை மணந்துகொள்ளுதல் வேண்டும் என்று தோழி புலப் படுத்தலாயினள்.

கருங்கால் - வலிய அடிமரம் என்றும் கொள்ளலாம்; வீ - மலர்; துறுகல் - குண்டுக்கல்; எல்வி - இரவு; நெடுவெண் நிலவு - நீண்ட நேரமாக ஒளி வீசிக் கொண்டிருக்கும் வெண்ணிலவு.

வேங்கைப்புலி கருந்தோலில் பொன்நிறப் புள்ளி அமைந்த உடம்பினதாதலின் கரிய குண்டுப்பாறைமேல் உதிர்ந்த வேங்கைப் பூத்தொகுதியும் புலிக்குட்டியின் தோற்றத்தைத் தருவதாயிற்று என்பதாம். புலித்தோற்றம் இரவில் வரும் தலைவர்க்கு அச்சம் விளைக்கும் என்பது கருத்து. 'களவிற்கு நல்லை அல்லை' என்பதால் கற்பிற்கு நன்றாவாய் என்னும் குறிப்பு வெளிப்பட வரைதல் நன்று என வரைவு கடாவினாளு மாயிற்று.

வேங்கைமலர் படிந்த கற்கள் புலிக்குட்டிபோல அச்சம் விளைக்கும் காடு என்பதனால் எம் தமரும் வரைவு உடன் படார்போல உனக்கு அச்சம் விளைக்கின்றனர் என்னும் உட்கோள் தோன்றுகை இறைச்சிப் பொருளாம்.

48. பாலை — தோழி கூற்று

தாதின் செய்த தண்பனிப் பாவை
காலை வருந்தும் கையாறு ஓம்புஎன
ஓரை ஆயம் கூறக் கேட்டும்
இன்ன பண்பின் இனைபெரிது உழக்கும்
நன்னுதல் பசலை நீங்க அன்ன
நசைஆகு பண்பின் ஒருசொல்
இசையாது கொல்லோ காதலர் தமக்கே.

— பூங்கணுத்திரையார்

பகற்குறிக்கண் காணும் பொழுதினும் காணாப்பொழுது பெரிதாகலின், வேறுபட்ட கிழத்தியது வேறுபாடு கண்டு தோழி சொல்லியது.

பூந்தாது முதலிய துகள்களால் செய்யப்பட்ட மிக்க குளிர்ச்சியையுடைய பனியில் கிடந்த விளையாட்டுப் பாவை காலையில் வெயிலிலே கிடந்து வருந்துதலால் தோன்றிய செயலறுதல் வாராமல் பரிகரி என்று விளையாட்டு மகளிர் திரள் சொல்லக் கேட்ட பின்பும் இப்படிப்பட்ட தன்மையளாய்த் துன்பம் பெரிதாக வருந்தும் நல்ல நெற்றியையுடைய தலைவியின் பசலை நீங்கும்படி இவளுக்கு அத்தகைய விருப்பமாம் தன்மை யுடைய வரைவேன் என்னும் ஒரு சொல்லைத் தலைவருக்குச் சொல்ல இயலாதோ?

பசலையைக் கண்ட காதலர் அவளை வரைவேன் என்று ஒரு சொல் சொன்னால் அவள் பசலை நீங்கி நலம் பெறுவள் என்பதாம்.

தாது - பல்வகைப் பொடி; கையாறு - செயலறவு; ஓம்பு - பரிகரி, நீக்கு; இனை - வருத்தம்; உழக்கும் - அடையும்; இன்ன பண்பு என்பது தலைவனைக் காணாமையால் பசலையுற்றிருக்கும் நிலைமை. நசை - விருப்பம்; நன்னுதல் - களவிற்கு முந்திய நிலையினது; அந் நுதல் காதலர் உடனுறையாமையால் பசலையுற்றது என்பதாம். ஓரை ஆயம் - விளையாட்டுக்குரிய பெண்கள் திரள்.

49. நெய்தல் — தலைவி கூற்று

அணிற்பல் அன்ன கொங்குமுதிர் முண்டகத்து
மணிக்கேழ் அன்ன மாநீர்ச் சேர்ப்ப
இம்மை மாறி மறுமை ஆயினும்
நீயா கியர்என் கணவனை
யானா கியர்நின் நெஞ்சுநேர் பவளே.

— அம்மூவனார்

தலைமகன் பரத்தைமாட்டுப் பிறந்தவழி ஆற்றளாகிய தலைமகள் அவனைக் கண்டவழி அவ்வாற்றாமை நீங்குமன்றே; நீங்கியவழிப் பள்ளியிடத்தானாகிய தலைமகற்குச் சொல்லியது.

அணிலின் பல்லை ஒத்த முள்ளையுடைய தாது முதிர்ந்த முள்ளிச் செடியும் நீலமணியின் நிறம் போன்ற கருநிறமுடைய கடல்நீரும் கொண்டுள்ள நெய்தல் நிலத் தலைவனே! இப் பிறப்பு நீங்கி நமக்கு வேறு மறு பிறப்பு உண்டாயினும் என்னுடைய தலைவன் நீயே ஆகுக. நின்னுடைய மனத்திற்கு ஒத்த மனைவி இப்பொழுது உன்னோடு சேர்ந்துள்ள யானே ஆகுக.

இருவர் மாட்டும் உள்ள அன்பும் உறவும் பிறவிதோறும் தொடர்வனவாக என்பது தலைவியின் விருப்பம் ஆகும்.

கொங்கு - பூந்தாது; முண்டகம் - முள்ளிச் செடி; மணி - நீல மணி; கேழ் - நிறம்; மா - கருமை; இம்மை - இப் பிறப்பு; மறுமை - மறு பிறப்பு; நேர்தல் - ஒத்தல்; கொடுத்தல் என்றும் கொள்வர். தலைவிக்கு நெஞ்சு கொடுத்தலாவது தலைவன் அவளை நினைந்து அன்பு பாராட்டுதலாம்.

முள்ளிச்செடி வெளியே முள்ளுடையதாயினும் அகத்தே மலர்களும் மணமும் பூந்தாதும் நிறையப் பெற்றிருத்தல் போலத் தலைவன் புறத்தொழுக்க முடைய னாயினும் தலைவியிடம் அன்புடையவனாகவே உள்ளான் என்பதனை வெளிப்படுத்தலால் இஃது இறைச்சிப் பொருளாம்.

தலைமகன் நலம் பாராட்டியவழித் தலைவி கூறியது என்பதற்கு இப் பாடலை எடுத்துக்காட்டுவர் இளம்பூரணர் (தொல். கற்பு. 6). நச்சினார்க்கினியரோ, காமக்கிழத்தியர் நலம் பாராட்டிய தீமையின் முடிக்கும் பொருளின்கண் தலைவி கூறியது (தொல். கற்பு. 6) என்கிறார்.

50. மருதம் — தலைவி கூற்று

ஐயவி அன்ன சிறுவீ ஞாழல்
செவ்வி மருதின் செம்மலொடு தாஅய்த்
துறைஅணிந் தன்றுஅவர் ஊரே இறைஇறந்து
இலங்குவளை நெகிழச் சாஅய்ப்
புலம்புஅணிந் தன்றுஅவர் மணந்த தோளே.

— குன்றியனார்

கிழவற்குப் பாங்காயின வாயில்கட்குக் கிழத்தி சொல்லியது.

ஞாழல் மரத்தின் வெண்சிறு கடுகைப் போன்ற சிறிய பூக்கள் அழகிய மருதமரத்தின் பழம்பூவுடனே பரந்து அவனுடைய

ஊரிடத்தில் நீர்த்துறையை அழகு செய்தது. அவர் முன்பு சேர்ந்து தழுவி இன்புற்ற தோளானது விளங்கும் வளைகள் மூட்டுவாய்ச் சந்தினைக் கடந்து நெகிழ்ந்து விழத் தனிமைத் தன்மையைப் பூண்பதாயிற்று.

அவர் என்னைப் புறக்கணித்துச் சென்றமையால் தோள் மெலிவுற்றேன் என்பதாம். நீர்த்துறை அழகு பெற்றது என அவன் பரத்தையருடன் கூடி விளையாட்டில் பொழுது போக்கியமை சுட்டினாளாம். துறை அழகு பெறத் தோள்மெலிதல் ஒருபால் மகிழ்வும் ஒருபால் துன்பும் உள்ளமை குறித்தபடியாம்.

ஐயவி - வெண்சிறுகடுகு; ஞாழல் - சுரபுன்னை; வீ - மலர்; செவ்வி - அழகு; செம்மல் - பழம்பூ; புலம்பு - தனிமை.

51. நெய்தல் — தோழி கூற்று

கூன்முள் முண்டகக் கூர்ம்பனி மாமலர்
நூல்அறு முத்தின் காலொடு பாறித்
துறைதொறும் வரிக்கும் தூமணற் சேர்ப்பனை
யானும் காதலென் யாயும் நனி வெய்யள்
எந்தையும் கொடீஇயர் வேண்டும்
அம்பல் ஊரும் அவனொடு மொழிமே.

— குன்றியனார்

வரைவு நீட்டித்தவிடத்து ஆற்றாளாய தலைமகட்குத் தோழி வரைவு மலிவு கூறியது.

வளைவான முள்ளையுடைய கழிமுள்ளியினது மிக்க குளிர்ச்சியையுடைய கரிய மலர் நூல் அற்றுச் சிதறி விழுந்த முத்துகளைப் போலக் காற்றால் சிதறி நீர்த்துறைகள் தோறும் அணிசெய்யும் தூயவெண் மணலையுடைய கடற்கரைக்குத் தலைவனை யானும் விரும்புகின்றேன்; நம் தாயும் அவனிடம் மிக்க விருப்பமுடையாள்; நம் தந்தையும் வரைவொடுவரின் அவனுக்கே நின்னை மணம் செய்து கொடுக்க விரும்புகின்றார். பழிமொழி பேசும் ஊரவரும் அவனை நின்னோடு இணைத்தே பேசுகின்றனர்.

இத்தகு சூழல்களால் நின் மணம் விரைந்து நடப்பது திண்ணம் என்பதைத் தோழி குறிப்பினால் உணர்த்தினாள் ஆவள்.

முண்டகம் - கழிமுள்ளி; காலொடு பாறி - காற்றால் சிதறி; வரித்தல் - அழகு செய்தல்; வெம்மை - விருப்பம்; அம்பல் - சிலர் அறிந்து கூறும் பழிமொழி.

துறையை மலர் அணி செய்வது போலத் தலைவி தலைவனுக்கு அணி செய்கின்றாள் எனும் கருத்தினை உட்கொண்

டிருத்தலால் 'வரிக்கும்' என்னும் பாடமே ஈண்டு இயைபுடைய தாகக் கொள்ளப்பெற்றது.

முட்செடியாகிய முள்ளியின் மலர் கைவருந்திப் பறிக்க வேண்டாது காற்றினால் மணலில் பரந்து எளிதில் பெறும்படி கிடப்பது போல அரிய முயற்சியால் பெறவேண்டிய வரைவு தலைவனுடைய முயற்சியினால் எளிதாய் எல்லாருடைய உடம்பாட்டையும் பெற்றது என்பது வெளிப்படுதலின் இஃது இறைச்சிப்பொருளாம்.

இளம்பூரணர் இப் பாடலைத் தமர் வரைவு உடன்பட்ட தன்மையினால் தலைவியை வற்புறுத்தற்கண் தோழிக்குக் கூற்று நிகழ்ந்தது (தொல். களவு. 24) என்பர். நச்சினார்க்கினியர், தோழி வரைவு கடாயவழி அவ் வரைந்துகோடல் மெய்யாயின மையின் வதுவை முடியுமளவும் ஆற்றுதற்கு தோழி வற்புறுத்திக் கூறியது என்பர் (தொல். களவு. 24).

52. குறிஞ்சி — தோழி கூற்று

ஆர்கலி மிதித்த நீர்திகழ் சிலம்பில்
சூர்நசைந் தனையையாய் நடுங்கல் கண்டே
நரந்தம் நாறும் குவைஇருங் கூந்தல்
நிரந்துஇலங்கு வெண்பல் மடந்தை
பரிஇ தனென் அல்லெனோ இறைஇறை யானே.

— பனம்பாரனார்

வரைவு மலிவு கேட்ட தலைமகட்குத் தோழி, முன்னாளில் தான் அறத்தொடு நின்றமை காரணத்தால் இது விளைந்தது என்பதுபடக் கூறியது.

நரந்தம்பூவின் மணம் கமழ்கின்ற தொகுதியாய் அமைந்த கரிய கூந்தலையும் வரிசையாய் விளங்கும் வெண்ணிறமான பற்களையுமுடைய பெண்ணே! வெள்ளம் பாய்ந்தோடியதனால் நீர் நிரம்பப் பெற்று விளங்கும் மலைப்பக்கத்தே தெய்வத்தால் விரும்பப் பெற்றவளைப் போல்வாளாய்க் கற்புக்கு ஏதம் வருமோ என்று அஞ்சி உளம் நடுங்குதலை அறிந்து, அதனைப் பொறாத யான் இரங்கிச் சிறிதுசிறிதாக வெளியிட்டனன் அல்லனோ?

யான் உன் காதல் நிலையை வெளியிட்டு அறத்தொடு நின்றேன் என்பதாம்.

ஆர்கலி - வெள்ளம். 'ஆர்களிறு மிதித்த நீர்' என்னும் பாடத்திற்கு யானை மிதித்தலால் உண்டாம் பள்ளத்தில் உள்ளநீர்

என்று பொருள் காண்பர். மலையில் யானை மிதித்து பெரும் பள்ளம் ஏற்படுவது இயற்கையன்று. ஆகவே வெள்ளம் என்னும் பொருள் தரும் 'ஆர்கலி' என்னும் பாடமே ஈண்டு கொள்ளப் பெற்றது. 'ஆர்கலி முனைஇய' (நெடுநல். 3) என்பதற்கு வெள்ளத்தை வெறுத்த என்பர் நச்சினார்க்கினியர். சிலம்பு - மலை; சூர் - அச்சம் தரும் தெய்வம். நரந்தம் - நரந்தம் பூ; மகளிர் கூந்தலில் அணியத்தக்க மணமுடையது. நிரத்தல் - வரிசை யாதல். மடந்தை - பருவம் குறியாது பெண் என்னும் துணையாய் வந்தது. பரிதல் - இரங்கி அறத்தொடு நிற்றல். இறை - சிறிது.

"தோழி கூறிய சொற்கேட்டு வரைவுடம்படுதற்கண்ணும் தலைவிக்குக் கூற்று நிகழ்ந்தது" (தொல். களவு 17) என்பர் இளம் பூரணர்.

53. மருதம் — தோழி கூற்று

எம்அணங் கினவே, மகிழ்ந! முன்றில்
நனைமுதிர் புன்கின் பூத்தாழ் வெண்மணல்
வேலன் புனைந்த வெறிஅயர் களம்தொறும்
செந்நெல் வான்பொரி சிதறி யன்ன
எக்கர் நண்ணிய எம்ஊர் வியன்துறை
நேர்இறை முன்கை பற்றிச்
சூரர மகளிரொடு உற்ற சூளே.

— கோப்பெருஞ்சோழன்

வரைவு நீட்டித்தவழித் தோழி தலைமகற்கு உரைத்தது.

மகிழ்ச்சி தருவதற்குரிய தலைவனே! நீர்த்துறையின் முன் விடத்துள்ள அரும்பு முதிர்ந்த புன்கமரத்தின் மலர்கள் உதிர்ந்து கிடக்கின்ற வெண்மணற் பரப்பு, வேலன் வெறியாடிய இடந் தோறும் செந்நெல்லின் வெண்ணிறப் பொரி சிதறிக் கிடந்தாற் போன்ற தோற்றத்தைத் தரும் மணல் மேடுகள் பொருந்திய எம் முடைய ஊரில் உள்ள அகன்ற நீர்த்துறையிடத்தே நேரிய மூட்டுவாயையுடைய முன்கையைப் பிடித்துத் தெய்வமகளிரைச் சுட்டிச் சொல்லிய உறுதிமொழிகள் எம்மைத் துன்புறுத்தின.

நீ உன் உறுதிமொழியைப் பேணி விரைவில் மணம்புரிவாயாக என்பது சுட்டியவாறாம்.

நனை - அரும்பு; வேலன் - முருகனை வழிபட்டு வெறியாட்டு எடுப்பவன். இவன் ஆடும் களத்தில் பொரிகளைச் சிதறுதல் உண்டு. சூள் - உண்மையான உறுதிமொழி. சூள் அணங்குத லாவது அதனை நினைந்து வருந்துதல்.

"தலைமகன் சூளுற்ற சூளுறவில் சோர்வு கண்டு அழிந்து தோழி கூறியது" (தொல். கற்பு. 9) என இப் பாட்லை எடுத்துக் காட்டுவர் இளம்பூரணர். மேலும், தீராத் தேற்றத்தைப் பின்னொருகால் தலைவி தேர்ந்து தெளிவு ஒழித்துக் கூறியது என இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் கூறுகின்றனர் (தொல். களவு, இ. 10, ந. 11).

54. குறிஞ்சி — தலைவி கூற்று

யானே ஈண்டை யேனே என்நலன்
ஏனல் காவலர் கவண்ஒலி வெரீஇக்
கான யானை கைவிடு பசுங்கழை
மீன்எறி தூண்டிலின் நிவக்கும்
கானக நாடனொடு ஆண்டுஒழிந் தன்றே.

— மீனெறிதூண்டிலார்

வரைவு நீட்டித்தவழி ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

தோழி! நான் மட்டும் இவ்விடத்தில் உள்ளேன். என்னோடு ஒன்றியிருந்த பெண்மைப் பொலிவு, தினைப்புனம் காப்பார் வீசி எறியும் கவண்கல்லின் ஒலிக்கு அஞ்சிக் காட்டு யானை இழுத்துக் கைவிட்ட மூங்கிலானது மீனைக் கவர்ந்த தூண்டிலைப் போல மேலே செல்லுதற்கு இடமாகிய காட்டிற்கு உட்பட்ட நாட்டினனாகிய தலைவனோடு அவன் பிரிந்த அப்பொழுதே நீங்கிப் போயிற்று.

தலைவனுடைய பிரிவினால் பெண்மை நலம் இழந்தேன் என்பது சுட்டியவாறாம்.

இப் பாடல் முழுமையும் ஈரசைச் சீர்களே வந்துள்ளன. நலன் ஒழிந்தது என்பதே ஈண்டுக் கருத்தாகும். இங்கு ஏகார நீட்சியால் பொருள் சிறப்பதும் இல்லை. எனவே ஈரசை கொண்ட 'என்னலன்' என்னும் பாடமே கொள்ளப்பெற்றது.

இப் பாடலின் கருத்தைப் பெரிதும் ஒத்துள்ளது ஐங்குறு நூற்றின் 278ஆம் பாடல். அங்கே குரங்கு மூங்கில் மேல் தாவி இருந்தபோது வளைந்து அதிலிருந்து பாய்ந்து விலகிப்போகுங் காலத்து மேலெழு மூங்கிலை, 'மீனெறி தூண்டிலின் நிவக்கும் நாடன்' என்கிறார். இதற்குத் தன்மேல் அன்புளதாகிய காலத்து வளைந்து வளைந்து ஒழுகி அன்பற்ற காலத்துப் பணி வின்றித் தலைமை செய்து நம் நலம் கொண்ட கொடுமைதோன்ற

ஒழுகுகின்றான் என்பதாம்' எனப் பழைய உரைகாரர் கருத்துரைப்பர். இக் குறுந்தொகைப்பாடலிலோ யானை வளைத்துவிட்ட மூங்கிலுக்கு ஒப்பிடுகிறார். முன்பு நெருங்கி உறவாடிய தலைவன் இப்பொழுது பிரிந்து விலகியுள்ளான் என்னும் உள்ளுறை தோன்றியுள்ளமை காணலாம்.

55. நெய்தல் — தோழி கூற்று

மாக்கழி மணிப்பூக் கூம்பத் தூத்திரைப்
பொங்குபிதிர்த் துவலையொடு மங்குல் தைஇக்
கையற வந்த தைவரல் ஊதையொடு
இன்னா உறையுட்டு ஆகும்
சில்நாட்டு அம்மஇச் சிறுநல் ஊரே.

— நெய்தற்கார்க்கியர்

'வரைவொடு புகுதானேல் இவள் இறந்துபடும்' எனத் தோழி, தலைமகன் சிறைப்புறத்தானாகச் சொல்லியது.

இந்தச் சிறிய நல்ல ஊரானது, கரிய உப்பங்கழியிடத்தே உள்ள நீர், நீலமணி போன்ற நெய்தற்பூக்கள் குவியும்படி கரையை வந்து மோதுகின்ற அலையிடத்திருந்து பொங்கி எழும் பிசிராகிய நீர்த்துளியோடு மேகத்தைப் பொருந்திப் பிரிந்தார் செயலறும்படி அவர்தம் உடம்பைத் தடவிச் செல்லும் வாடைக் காற்றோடு துன்பத்தைத் தருகின்ற தங்குமிடத்தையுடைய சில நாள்களையே கொண்டதாகும்.

தலைவன் விரைந்து வரைந்துகொள்ள வாராவிடில் தலைவி இன்னும் சில நாள்களே உயிர் வாழ்வாள் என்பதனை அவனுக்குக் குறிப்பித்தவாறாம்.

ஊரின் மேல்வைத்துத் தோழி கூறியது தலைவியைக் குறித்துச் சொன்னதேயாகும். ஊர் துன்ப உறையுளாகவும் சில நாள் உடையதாகவும் ஆனமை ஊரின் குறையினால் அன்று என்பாள் 'சிறுநல் ஊர்' என்னும் சிறப்பால் பெற வைத்தாளாவள்.

தூ - மோதுதல்; மங்குல் - மேகம்; ஊதை - குளிர்காற்று, வாடைக்காற்று.

56. பாலை — தலைவன் கூற்று

வேட்டச் செந்நாய் கிளைத்தூண் மிச்சில்
குளவி மொய்த்த அழுகற் சின்னீர்
வளையுடைக் கையள் எம்மொடு உணீஇயர்
வருகதில் அம்ம தானே
அளியளோ அளியள்எம் நெஞ்சுஅமர்ந் தோளே.

— சிறைக்குடி ஆந்தையார்

தலைமகன் கொண்டுதலைப் பிரிதலை மறுத்துத் தானே போகின்ற வழி இடைச்சுரத்தின் பொல்லாங்கு கண்டு கூறியது.

வேட்டைமேற் செல்லும் செந்நாய் தோண்டி உண்டு எஞ்சியதும் காட்டு மல்லிகையின் இலையும் பூவும் மூடி அழுகிய நாற்றத்தை யுடையதும் ஆகிய சிறிதளவாக உள்ள நீரை வளையலை அணிந்த கையளாகிய தலைவி எம்மொடும் உண்ணு தற்கு வருவாளாக. வந்தால் எம் நெஞ்சில் விரும்பியிருப் போளாகிய அத் தலைவி மிகவும் இரங்கத் தக்கவள் ஆவள்.

பருகுவதற்கு நல்ல நீர்கூடக் கிட்டாத இவ்விடத்தில் தலைவி வருதற்குரியள் அல்லள் என்னும் கருத்தினால் இங்ஙனம் உரைப்ப தாயினன் என்க.

வேட்டம் - இரைதேடி வேட்டையாடுதல்; மிச்சில் - எச்சம்; குளவி - காட்டு மல்லிகை; சின்னீர் - சிறிதளவாகிய நீர். வருகதில் என்றது வந்தால் இத்தகு துன்பத்திற்கு ஆளாவள் என்னும் ஒழியிசைப் பொருள்தரும். நெஞ்சு அமர்ந்தோள் - நெஞ்சிற்குடி கொண்டவள்.

தமர் வரைவுடன்படாத வழித் தலைமகளைச் சுரத்ின்கண் உடன்கொண்டு போகத் தலைவன் துணிந்தது என்பர் இளம் பூரணர் (தொல். அகத். 44). நச்சினார்க்கினியர், நீ களவில் தேற்றிய தெளிவகப்படுத்தலும் தீராத்தேற்றமும் பொய்யாம்; அவை பொய்யாகாதபடி செய்கைகளோடே இவளை உடன் கொண்டு செல்க எனத் தன் அறியாமை தோன்றக் கூறி வந்த தோழி கேட்பத் தலைவன் கூறியது என்பர் (தொல். கற்பு. 5).

57. நெய்தல் — தலைவி கூற்று

பூஇடைப் படினும் யாண்டுகழிந் தன்ன
நீர்உறை மகன்றிற் புணர்ச்சி போலப்
பிரிவுஅரி தாகிய தண்டாக் காமமொடு
உடன்உயிர் போகுக தில்ல கடன்அறிந்து

இருவேம் ஆகிய உலகத்து
ஒருவேம் ஆகிய புன்மைநாம் உயற்கே.

— சிறைக்குடி ஆந்தையார்

காப்பு மிகுதிக்கண் ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

தோழி! செய்யத் தகுவதாகிய கடப்பாட்டினைத் தெரிந்து கணவன் மனைவியாக உடலால் இருவேமாக வந்த இவ்வுலகத்தில் தலைவனின் பிரிவினால் ஒருவராயிருக்கும் இழிநிலையிலிருந்தும் நாம் தப்பிச் செல்லுதற்கு — ஒரு பூ இடைப்பட்டுத் தனிக்க நேர்ந்தாலும் அந்தக் கணப்பொழுதையும் ஓர் ஆண்டு கடந்தாற்போலத் துன்புறும் நீரில் வாழும் மகன்றிற் பறவைகளின் சேர்க்கையைப் போலப் — பிரிதல் அருமையான துய்த்து நிரம்பாத காமத்தோடு எம் உயிரும் ஒருசேரப் போவனவாக.

பிரிவினால் துயருறுதலினும் அத் தலைவர் பிரிந்த பொழுதே உயிர்விட்டிருந்தால் சிறப்பாகும் என்று கருதிக் கூறுகின்றாள் தலைவி.

மகன்றில் - ஆணும் பெண்ணும் பிரிவின்றி இணைந்து வாழும் நீர்வாழ் பறவை. தண்டாமை - அமையாமை, நிரம்பாமை; காமம் - மெய்யுறுபுணர்ச்சி; கடன் - கடப்பாடு; இங்கு இல்லறமுறைமை. ஒருவேம் - பிரிவினால் ஒருத்தராய்த் தனித்திருக்கை; புன்மை - பொலிவிழந்த தன்மை. உயல் - தப்புதல், விடுபடுதல்.

நச்சினார்க்கினியர் இச் செய்யுளுக்கு, 'முற்பிறப்பில் இருவேமாய்க் கூடிப் போந்தனம்; இவ்வுலகிலே இப் புணர்ச்சிக்கு முன்னர் யாம் வெவ்வேறாய் உற்ற துன்பத்தினின்று நாமே நீங்குதற்கெய்திய பிரிவரிதாகிய காமத்துடனே இருவர்க்கும் உயிர் போவதாக. இஃது எனக்கு விருப்பம் என்றான் என்பதனால் தந்நிலை உரைத்தலும் பிரிவச்சமும் கூறிற்று' (தொல். களவு 10) என்று கருத்து விளக்கம் தருவர். இக் கருத்தே சிறப்புடையது என்பர்.

58. குறிஞ்சி — தலைவன் கூற்று

இடிக்கும் கேளிர் நும்குறை ஆக
நிறுக்கல் ஆற்றினோ நன்றுமன் தில்ல
ஞாயிறு காயும் வெவ்அறை மருங்கில்
கைஇல் ஊமன் கண்ணின் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போலப்
பரந்தன்று இந்நோய் நோன்றுகொளற்கு அரிதே.

— வெள்ளிவீதியார்

கழற்றெதிர்மறை.

இடித்துக்கூறும் கேண்மையுடையீர், நும்முடைய இன்றியமையாத செயலாக யான் உற்ற காமநோயைத் தடுத்து நிறுத்த வல்லீராயின் மிக நன்று; வேறு எதுவும் பயன் தராது. சூரியனின் கிரணம் தாக்குதலால் வெம்மையுற்ற பாறையினிடத்தில் கையில்லாத ஊமையன் தன் கண்ணினால் பாதுகாக்க முயலும் வெண்ணெய் உருகி அழிந்து பரத்தல் போல இக் காமநோய் என் பால் பரவியுள்ளது. அதனைப் பொறுத்தல் அரிய செயலாகும்.

இடித்தல் - கண்டித்துரைத்தல்; குறை - இன்றியமையாத செயல்; தில்ல - ஒழியிசை; விழைவுப் பொருளது என்பாரும் உளர். உணங்கல் - உருகியழிதல்; நோன்றல் - பொறுத்தல்.

வெண்ணெய் பாறையிடத்தில் உருகிப்பரத்தல் போல் காமநோய் உடலிடத்தே பரவியது. வெண்ணெய் உருகாமல் அதனை எடுத்து வேறிடத்து வைத்துக் காக்கக் கை இல்லை; பிறர் உதவியை நாடவோ வாய் இல்லை. அங்ஙனமே தன்பால் உற்ற காமநோயை அடக்கி நிறுத்தவும் இயலவில்லை. பிறரிடம் வெளியிட்டு உதவிபெறவும் முயலவில்லை. ஆகையால் இக் காமநோய் கட்டுக் கடங்காது மேனியை வெதுப்புவதாயிற்று என்கிறான் தலைவன்.

'பாங்கற் கூட்டத்துக்கண் வந்தது' (தொல். செய்யு. 186) என்கிறார் பேராசிரியர். பார்ப்பான் கேட்போனாகத் தலைவனுக்குக் கூற்று நிகழ்ந்தது (தொல். செய்யு. 196) எனப் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் உரைப்பர். மேலும் நச்சினார்க்கினியர், பாங்கன் கழறியவற்றை மறுத்துத் தன் நெஞ்சில் நிகழும் வருத்தங்களை அவற்குக் கூறுதற்கண் தலைவனுக்குக் கூற்று நிகழ்ந்தது என்றும் களவியல் உரையில் குறிப்பிடுவர் (தொல். களவு. 11).

59. பாலை — தோழி கூற்று

பதலைப் பாணிப் பரிசிலர் கோமான்
அதலைக் குன்றத்து அகல்வாய்க் குண்டுசுனைக்
குவளையொடு பொதிந்த குளவிநாறு நறுநுதல்
தவ்வென மறப்பரோ மற்றே முயலவும்
சுரம்பல விலங்கிய அரும்பொருள்
நிரம்பா ஆகலின் நீடலோ இன்றே.

— மோசிகீரனார்

பிரிவிடை அழிந்த கிழத்தியைத் தோழி வற்புறுத்தியது.

ஒரு கண்ணுடைய கிணைப் பறையை முழக்கும் தாளத்தினை யுடைய பாணர் முதலிய பரிசிலரைப் பாதுகாக்கும் மன்னனுடைய அதலைக்குன்றத்தில் உள்ள அகன்ற வாய் கொண்ட ஆழமான சுனைகளில் மலர்ந்த குவளை மலர்களோடு சேர்த்துக் கட்டிய காட்டுமல்லிகையின் மணம் கமழும் நின் நல்ல நெற்றி அழகு கெடும்வண்ணம் மறந்து விடுவாரோ? எவ்வளவு முயன்ற போதும் பாலை நில வழி பல குறுக்கிட்ட இடத்திற்குச் சென்று தேடும் கிட்டுதற்கு அரிய பொருளானது முற்றவும் பெற இயலாது. ஆதலின் அவர் அங்கு நீட்டித்துத் தங்குதல் இல்லை.

தலைவர் குறித்த காலத்தில் திரும்பி வருவார் எனத் தோழி தேற்றுகிறாள்.

தலைவி நுதலின் வாசநினைவும் பொருள் நிரம்பாமையும் அவர் மீள்வதற்குக் காரணமாம் என்பதாம்.

பதலை - ஒரு கண்ணுடைய பறை; அதலை - குறுநில மன்னன் ஒருவனுக்குரிய மலை. இதனை அரலைக்குன்றமென்றும் அதற்குரிய கோமானை நள்ளி என்றும் இராகவையங்கார் கருது கின்றார். குளவி - காட்டு மல்லிகை. தவ்வெனல் - கெடுதல் சுருங்குதல்; விலங்குதல் - குறுக்கிடுதல்.

60. குறிஞ்சி — தலைவி கூற்று

குறுந்தாட் கூதளி ஆடிய நெடுவரைப்
பெருந்தேன் கண்ட இருக்கை முடவன்
உட்கைச் சிறுகுடை கோலிக் கீழ்இருந்து
சுட்டுபு நக்கி யாங்குக் காதலர்
நல்கார் நயவார் ஆயினும்
பல்கால் காண்டலும் உள்ளத்துக்கு இனிதே.

— பரணர்

பிரிவிடை ஆற்றாமையான் தலைமகள் தோழிக்கு உரைத்தது.

தோழி, குறிய அடியையுடைய கூதளஞ் செடிகள் அசைந்து காணப்பெறும் உயர்ந்த மலையில் உள்ள பெரிய தேனடையைக் கண்ட இருகாலும் முடமாய், நிற்க இயலாதிருக்கும் முடவன் உள்ளங்கையைச் சிறிய பனங்குடைபோலக் குழித்து அம் மலையின் கீழேயிருந்து மேலேயுள்ள தேனடையைப் பல முறை சுட்டி உள்ளங்கையை நக்கியது போல, நம் காதலர் நமக்கு அளிசெய்யாராயினும் நம்மை விரும்பாராயினும் அவரைப் பல முறை பார்த்தலும் உள்ளத்துக்கு இனிமை தருவதாம்.

தலைவன் பிரிந்து சென்றமையால் அவனைக் காணுதற்கு இயலாதவளாயினாள் தலைவி. முடவன் தேனடையைக் கண்டு இன்புற்றது போல எட்டியிருந்தாலும் தலைவனுடைய காட்சி கிட்டுமாயின் அதுவே தன் உள்ளத்திற்கு இனிமை பயப்பது என்பது தலைவியின் உட்கோள்.

கூதளி என்பது கூதளம்; கூதாளம் எனவும் கூறப்படும். ஆடுதல் - அசைதல். 'முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப் பட்டது போல' என்பது உலக வசனம். குடை - பனையோலை யால் செய்யப்படும உண்கலம். இது நீர் இறைத்தற்கும் நீர் எடுத்தற்கும் பருகுதற்கும் உணவுப்பொருள் வைத்துண்பதற்கும் எடுத்த நுங்கு போன்ற பொருள்களைப் பொதிதற்கும் பயன் படுவது. இதனைப் பட்டை எனவும் தென்குமரிப் பகுதியில் வழங்குவர்.

61. மருதம் — தோழி கூற்று

தச்சன் செய்த சிறுமா வையம்
ஊர்ந்துஇன் புறாஅர் ஆயினும் கையின்
ஈர்த்துஇன் புறூஉம் இளையோர் போல
உற்றுஇன் புறேஎம் ஆயினும் நற்றேர்ப்
பொய்கை ஊரன் கேண்மை
செய்துஇன் புற்றனெம் செறிந்தன வளையே.

— தும்பிசேர்கீரன்

தோழி தலைமகன் வாயில்கட்கு உரைத்தது.

தச்சனால் செய்யப்பெற்ற சிறுகுதிரை பூட்டிய கைவண்டியை ஏறிச் செலுத்தி இன்பம் பெறாவிடினும் கையால் இழுத்து இன்பம் அடையும் இளம்பிள்ளைகளைப் போலத் தலைவனது மெய்யுற்று இன்பம் பெறாவிடினும், நல்ல தேரையும் பொய்கை கையும் உடைய ஊர்க்குத் தலைவனது நட்பை எம் உள்ளத்தே மென்மேலும் பெருகச் செய்து இன்பம் உற்றேன். அதனால் வளைகள் கழலாமல் கையின்கண் இறுகி அமைந்துள்ளன.

தோழி தனக்கும் தலைவிக்கும் உள்ள ஒற்றுமைபற்றி, 'உற்று இன்புறேம் ஆயினும்...செய்து இன்புற்றனெம்' எனப் பன்மையால் கூறினாள்.

தலைவன் தன்னிடத்திற்கு வராமலிருக்கவும் வந்தது போன்ற இன்பத்தைப் பெறுதலினால் அவன் வந்து செய்யத்தக்கது ஒன்று மில்லை என வாயில் மறுத்தாளாயிற்று.

எமக்கு இளஞ்சிறார் இழுக்கும் சிறுதேர் போன்றவன் பரத்தையர்க்கு ஊர்ந்து இன்புறாஉம் பெருந்தேர்போல் ஆனான் எனக் குறிப்பின் பெறவைக்கின்றமையும் காணலாம்.

62. குறிஞ்சி — தலைவன் கூற்று

கோடல் எதிர்முகைப் பசுவீ முல்லை
நாறுஇதழ்க் குவளையொடு இடைப்பட விரைஇ
ஐதுதொடை மாண்ட கோதை போல
நறிய நல்லோள் மேனி
முறியினும் வாய்வது முயங்கற்கும் இனிதே.

— சிறைக்குடி ஆந்தையார்

தலைமகன் இடந்தலைப்பாட்டின்கண் கூடலுறும் நெஞ்சிற்குச் சொல்லியது.

காந்தள் மலரையும் தோற்றிய அரும்பிலிருந்து வெளிப்பட்ட செவ்வி மலர்களாகிய முல்லை மலரையும் மணம் பொருந்திய இதழ்களையுடைய குவளை மலர்களோடு இடையிடையே கலந்து வைத்து அழகிதாகத் தொடுத்த மாட்சிமையுடைய மாலையைப் போல நல்மணமுடைய நல்லாளாகிய தலைவியினது மேனியானது தளிரைக் காட்டிலும் மென்மையும் நிறமும் பொருந்தியது; தழுவுதற்கும் இனிமை தருவது.

முன்பு தலைவியைத் தழுவி இன்புற்றது போல இப்பொழுதும் இன்புறுவேன் எனத் தலைவன் குறிப்பித்தவாறாம்.

'இடையிடுபு விரைஇ' என்றும் பாடமுண்டு. இதில் இரு செய்தென் வினைகள் அடுத்தடுத்து வருதல் பொருத்தமாயில்லை. எனவே 'இடைப்பட' என்னும் பாடம் தேர்ந்தெடுக்கப்பெற்றது.

எதிர்தல் - தோன்றுதல்; பசுவீ - செவ்விப்பூ; ஐது - அழகிது; மேனி - உடம்பு; முறி - தளிர்; வாய்தல் - பொருந்துதல்; முயங்குதல் - தழுவுதல்.

இயற்கைப் புணர்ச்சிக்கண் தலைவியுடன் தோய்ந்து பழகியவனாதலின் தலைவன் அவளுடைய மேனியின் இயல்பினைக் கூறினான் என்க.

தலைவன் பிரிந்துழிப் பெருகிய சிறப்பின்கண் அவனுக்குக் கூற்று நிகழ்ந்தது என்கிறார் இளம்பூரணர் (தொல். கற்பு. 5). இக் குறுந்தொகை புணர்ந்துழி மகிழ்ந்து கூறியது என்றும் (தொல். அகத். 14, களவு. 6) இயற்கைப் புணர்ச்சிக்கண் வந்தது (தொல். செய். 186) என்றும் நச்சினார்க்கினியர் கருத்துரைப்பர்.

63. பாலை — தலைவன் கூற்று

ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல்எனச்
செய்வினை கைம்மிக எண்ணுதி அவ்வினைக்கு
அம்மா அரிவையும் வருமோ
எம்மை உய்த்தியோ உரைத்திசின் நெஞ்சே.

— உகாய்க்குடி கிழார்

பொருள் கடைக்கூட்டிய நெஞ்சிற்குச் சொல்லியது.

நெஞ்சே! அறம் கருதி இரவலர்க்குக் கொடுத்தலும் உலக இன்பங்களைத் துய்த்தலும் ஆகிய இரண்டும் பொருள் இல்லாத வறியவருக்கு இல்லை என்று கருதிப் பொருள் செய்தற்குரிய செயல்களை மிகவும் எண்ணிக் கொண்டிருக்கின்றாய். பொருள் தேடுதலாகிய அந்தச் செயலுக்கு அழகிய மாமை நிறத்தையுடைய தலைவியும் நம்முடன் வருவாளோ? எம்மை மட்டும் செலுத்து கின்றாயோ? சொல்வாயாக.

இதனால் பொருள் தேடத் தலைவியைப் பிரிந்து செல்லுதல் இயலாது என்பதனைத் தலைவன் வெளிப்படுத்தியுள்ளமை காண லாகும்.

பொருளினால் அறமும் இன்பமும் எய்துமாகலின் முறையே ஈதலையும் துய்த்தலையும் கூறினான் என்க.

ஈதல் - வறியார்க்கு வேண்டுவன கொடுத்தல்; இல்லோர் - பொருள் இல்லாதவர் : வேற்றுநாட்டுக்குச் சென்று பொருள் தேடாது இல்லத்தே முடங்கியிருப்பார் என்றும் உரைப்பர். உரைத் திசின் - சின் முன்னிலையசை.

இங்ஙனமாகத் தலைவன் தான் பொருள்மேற் செலவினைத் தவிர்வதாக உரைப்பது தலைவியை ஆற்றுவித்தற்பொருட்டே யாகும். பொருள் வேண்டிப் பிரிவதே உலகவழக்காகும்; புலனெறிவழக்கமும் அதுவே.

'செலவிடை அழுங்கல் செல்லாமை அன்றே
வன்புறை குறித்த தவிர்ச்சி ஆகும்'

என்னும் தொல்காப்பிய நூற்பா இதனை மெய்ப்பிக்கும். 'அம்மா அரிவை' என்றது அவளுடைய இளமையையும் இன்பம் துய்க்கும் பருவத்தையும் சுட்டுவதாகும்.

இப் பாடலை நச்சினார்க்கினியர் தொல்காப்பியப் பொருளதி கார உரையில் மூவேறு இடங்களில் எடுத்துக் காட்டியுள்ளார்:

1. இன்மையது இளிவைத் தலைவன் நெஞ்சிற்குக் கூறியது: இது (பொருள்வயிற் பிரிவு) வணிகர்க்கே உரியது (தொல். அகத். 41).

2. தலைவியை வருகின்றாளன்றே எனக் கூறித் தலைவன் செலவழுங்கியது (தொல். கற்பு: 5).

3. மறுத்துரைப்பார் போல நெஞ்சினை இளிவரல்பற்றிக் கூறியது (தொல். பொருளியல் 2).

64. முல்லை — தலைவி கூற்று

பல்ஆ நெடுநெறிக்கு அகன்று வந்தெனப்
புன்தலை மன்றம் நோக்கி மாலை
மடக்கண் குழவி அலம்வந் தன்ன
நோயேம் ஆகுதல் அறிந்தும்
சேயர் தோழி சேய்நாட் டோரே.

— கருவூர்க் கதப்பிள்ளை

பிரிவிடை ஆற்றாமை கண்டு, 'வருவர்' எனச் சொல்லிய தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

தோழி! பல பசுக்களும் நெடுந் தொலைவான வழியில் நீங்கிச் சென்றனவாக, அவை தங்கியிருந்த புல்லிய இடத்தையுடைய மன்றத்தைப் பார்த்து மாலைக் காலத்திலே இளமை வாய்ந்த கண்களையுடைய கன்றுகள் மனம் சுழன்றாற் போல, தலைவரின் வரவு நோக்கித் துன்பத்தையுடையேமாய் யாம் இருத்தலைத் தெரிந்திருந்தும் நெடுந் தொலைவிலுள்ள நாட்டிற்குச் சென்ற தலைவர் இன்னும் அந்த நெடுந்தொலைவிலேயே உள்ளார்.

நம் துயரம் அறிந்தவராயிருந்தும் தலைவர் இன்னும் வந்திலர் எனத் தன் ஆற்றாமை தோன்ற உரைக்கின்றாள் தலைவி.

அகன்றுவருதல் - நீங்கிச் செல்லுதல்; பிரிந்து போதல். மன்றம் - பசுக்கள் தங்கும் பொதுவிடம். 'குழவி அணவந்தன்ன' என்றும் பாடம் உண்டு; அதற்குக் கன்றுகள் தலையைத் தூக்கிப் பார்த்து வருந்தினாற்போல என்பது பொருள்.

பிரிந்து சென்ற பசுக்கள் மீண்டும் மன்றம் வருதலைக் கன்றுகள் எதிர்நோக்கி வருந்தியிருத்தல் போலப் பிரிந்த தலைவர் இல்லத்திற்குத் திரும்பி வருதலைத் தலைவியும் எதிர்நோக்கி மனம் வருந்தியிருந்தாள் என்க.

தாய்ப் பசுவிற்கும் கன்றிற்கும் உள்ள அன்பை மிகச் சிறந்ததாக எடுத்தோதுவர். தாய் சேய் அன்பு, தலைவன் தலைவியர்

காதல், ஆண்டவன் அடியார் அன்பு ஆகியவற்றைக் குறிக்கப் பசுவும் கன்றும் கூறப்படுதல் மரபாகும்.

65. முல்லை — தலைவி கூற்று

வன்பரற் தெள்அறல் பருகிய இரலைதன்
இன்புறு துணையொடு மறுவந்து உகளத்
தான்வந் தன்றே தளிதரு தண்கார்
வாராது உறையுநர் வரல்நசைஇ
வருந்திநொந்து உறைய இருந்திரோ எனவே.

— கோவூர் கிழார்

பருவங் கண்டு அழிந்த தலைமகள் தோழிக்கு உரைத்தது.

தோழி! வலிய பருக்கைக் கற்களிடத்தேயுள்ள தெளிவாய்ச் சிறுகி ஓடும் நீரைக் குடித்த ஆண்மான், இன்புறுதற்குரிய தன்னுடைய பெண்மானோடு சுழன்று திரிந்து துள்ளி விளையாடவும், மீண்டு வருதலை எண்ணாது சென்ற இடத்திலே தங்கியிருக்கும் தலைவர் மீண்டுவருதலை விரும்பி மிக வருந்தித் தங்கும் பொருட்டு உயிர்தாங்கி இருத்திரோ என்று கேட்பதற்கு மழைத் துளியைத் தருகின்ற குளிர்ந்த கார்ப்பருவம் வந்தது.

கார்ப்பருவம் வந்தும் அந் நாளில் மீண்டுவருவதாக உறுதி கூறிச் சென்ற தலைவர் வந்திலர் என்பதாம்.

கார்ப்பருவம் வந்த பின்பும் நாம் உயிரோடு இருத்தல் குற்றமாம் என்னும் கருத்துப் புலப்பட அப் பருவம் கேட்பதாகத் தலைவி கூறுகிறாள். அவர் விரைவில் வாராவிடில் உயிர் வாழ்தல் அருமை என்பது புலப்படவைத்தாள்.

பரல் - பருக்கைக் கற்கள்; அறல் - சுருங்கி ஓடும் நீர்; இரலை - ஆண்மான்; மறுவருதல் - சுழலுதல்; உகளுதல் - துள்ளி விளையாடுதல்; தளி - மழைத்துளி.

66. முல்லை — தோழி கூற்று

மடவ மன்ற தடவுநிலைக் கொன்றை
கல்பிறங்கு அத்தம் சென்றோர் கூறிய
பருவம் வாரா அளவை நெரிதரக்
கொம்புசேர் கொடிஇணர் ஊழ்த்த
வம்ப மாரியைக் கார்என மதித்தே.

— கோவர்த்தனார்

பருவங்கண்டு அழிந்த தலைமகளைத் தோழி, 'பருவம் அன்று' என்று வற்புறீஇயது.

தோழி! கற்கள் விளங்கும் பாலைநில வழியைக் கடந்து சென்ற தலைவர் மீண்டு வருவதாகச் சொன்ன கார்ப்பருவம் வாராத காலத்திலேயே பருவம் அல்லாக் காலத்துப் பெய்யும் மழையைக் கார்கால மழை எனத் தவறாகக் கருதிச் சிறு கொம்புகளைச் சேர்ந்த ஒழுங்கு அமைந்த பூங்கொத்துகளைக் கொன்றை மரங்கள் செறியப் புறப்பட விட்டன. ஆதலால் பருத்த அடிமரத்தையுடைய கொன்றை மரங்கள் அறியாமையுடையன.

தலைவர் சொல் தவறார். இது கார்காலம் அன்று. ஆதலால் நீ வருந்தாதே எனத் தோழி தேற்றுவாளாயினள் என்க.

அத்தம் - பாலைவழி; கொன்றை மலர்கள் நீண்ட கொத்தாக இருப்பதால் கொடியிணர் எனப்பட்டது. நெரிதர - நெருக்கமாக, செறிய. கொன்றை கார்காலத்தில் மலர்வதாகும். வம்பமாரி - காலம் அல்லாக் காலத்துப் பெய்த மழை.

இப் பாடலை இளம்பூரணர், தலைவிக்குத் தோழி பருவம் அன்று என்றது (தொல். அகத். 42) என்பர். நச்சினார்க்கினியர் பருவம் அன்று என்று வற்புறுத்தலின் இச் செய்யுள் இருத்தல் நிமித்தமானது (தொல். அகத். 14) என்கிறார். மேலும் அவர். பருவம் அன்று எனத் தோழி படைத்து மொழிந்தது (தொல் கற்பு. 9) என்றும் கூறுவர்.

67. பாலை — தலைவி கூற்று

உள்ளார் கொல்லோ தோழி கிள்ளை
வளைவாய்க் கொண்ட வேம்பின் ஒண்பழம்
புதுநாண் நுழைப்பாள் நுதிமாண் வள்உகிர்ப்
பொலங்கல ஒருகாசு ஏய்க்கும்
நிலம்கரி கள்ளியங் காடுஇறந் தோரே.

— அள்ளூர் நன்முல்லை

பிரிவிடை ஆற்றாத தலைமகள் தோழிக்கு உரைத்தது.

தோழி! கிளி தன் வளைந்த அலகினிடத்தில் கொண்ட வேம்பினது ஒளியுள்ள பழமானது பொன்னாபரணத்தின் பழநூலை மாற்றிப் புது நூலை நுழைப்பாளது முனை மாட்சிமைப் பட்ட கூரிய நகங்களிடைக் கொண்ட பொன்னாபரணத்திற்குரிய ஒரு காசை ஒத்துக் காணப்படும் நிலம் கரிந்துள்ள கள்ளியை யுடைய பாலை நிலத்தைக் கடந்து சென்றோர் நம்மை நினையார் போலும்.

வேம்பு என்னும் மரப்பெயருடன் சினைப்பெயர் சேரும்போது இன் சாரியை பெறுதலே பெரும்பான்மை. நற்றிணை 279ஆம் பாட்டில் 'வேம்பின் ஒண்பழம்' என்பது பயின்றுள்ளது. புறநானூற்றில், 'கருஞ்சினை வேம்பின் தெரியலோன் அல்லன்' (45:2) என்றும், 'கானவேம்பின் காய்திரங்க' (389:2) என்றும் வந்துள்ளன. எனவே வேப்ப ஒண்பழம் என்பதனை விடுத்து இப் பாடம் கொள்ளப்பெற்றது.

'நுழைப்பாணுதிமாண் வள்ளுகிர்' என்பதனை நுழைப்பாள் நுதிமாண் வள்உகிர் எனப் பிரித்தல் வேண்டும். ணகரத்தை னகரமாகப் படித்ததனால் 'நுழைப்பான்' எனும் பாட வேறுபாடு கொண்டாரும் உளர். அப் பாடம் உவமைக்கு ஏற்றதன்று. பான் ஈற்று வினையெச்சம் சங்க இலக்கியத்துள் மிகமிக அருகிய வழக்காகும்.

பொலங்கலம் - பொற்காசு கோத்த காசுமாலை; பழநூல் நைந்து அறும் நிலையுற்றபோது புது நூலுக்கு மாற்றுவது பெண் களின் இயல்பு. பெண்ணின் செம்பஞ்சு தீட்டிய கூரிய நகம் கிளிமூக்கிற்கும், நகங்களால் பற்றப்பட்டிருக்கும் பொற்காசு வேப்பம் பழத்திற்கும் ஒப்பாகும். நாண் - நூல்; 'கள்ளியங்காடு' என்றமையால் மரநிழல் அற்ற பாலை என்பது தெரியவரும். இறந்தோர் - கடந்து சென்றோர். வேம்பும் கள்ளியும் பாலை நிலக் கருப்பொருள்களாகும். உள்ளார்கொல் என்றது உள்ளி யிருப்பின் மீண்டு வந்திருப்பரே என்னும் நிலையைப் புலப்படுத்து கின்றது.

கிளியின் வாயில்பற்றிய பழம் அதற்கு இனிமை தருவ தாயினும் நமக்கு இனிமை தருமாறில்லை. தலைவனது பொருட் பிரிவு அவர்க்கு இன்பம் செய்யினும் நமக்குத் துன்பம் தருவதா யுள்ளது என்னும் குறிப்புடைமையின் இஃது இறைச்சிப் பொருளாம்.

68. குறிஞ்சி — தலைவி கூற்று

பூழ்க்கால் அன்ன செங்கால் உழுந்தின்
ஊழ்ப்படு முதுகாய் உழையினம் கவரும்
அரும்பனி அற்சிரம் தீர்க்கும்
மருந்துபிறிது இல்லைஅவர் மணந்த மார்பே.

— அள்ளூர் நன்முல்லை.

பிரிவிடைக் கிழத்தி மெலிந்து கூறியது.

குறும்பூழ்ப் பறவையின் காலைப் போன்ற செவ்விதான தாளையுடைய உழுந்தினது மிக முதிர்ந்த காய்களை மான்

கூட்டங்கள் தின்னும் பொருட்டுக் கவர்ந்துகொள்ளும் பொறுத்தற்கரிய பனியையுடைய முன்பனிக் காலத்தில் உளதாம் துன்பத்தைப் போக்கும் மருந்து தலைவன் மணந்த மார்பேயன்றி வேறு எதுவும் இல்லை.

தலைவர் உடன் இல்லாமையால் முன்பனிக்காலம் துன்பம் தருவதாயிற்று என்பதாம். முன்பு மணந்ததுபோல அவர் மீண்டும் வந்து கூடவேண்டும் என்னும் குறிப்பினை வெளிப்படுத்தாளாயிற்று.

பூழ் - குறும்பூழ்ப் பறவை, காடை; உழைஇனம் - மான் கூட்டம்; அற்சிரம் - முன்பனிக்காலம்; மருந்து - பரிகாரம், போக்கும் வழி; உழுந்து பனிப் பருவத்துக் காய்க்கும் என்பர். 'இரும் பனிப் பருவத்து மயிர்க்காய் உழுந்து' என்பது நற்றிணை (89). பனி நோய்க்கு மருந்து அவர் மணந்த மார்பேயாதலை முன்னரும் உணர்ந்தவளாதலின் இங்ஙனம் கூறினாள்.

உழுந்தின் முதுகாயை உடையவர் கொள்ளாமல் மானினம் கவரும் என்றது என் கவினை நுகர்தற்குரிய தலைவன் பெறாமல் பசலைபற்றி உண்ணுகிறதே என்னும் குறிப்பினை வெளிப்படுத்தி நிற்றலின் இஃது இறைச்சிப் பொருளாம்.

69. குறிஞ்சி — தோழி கூற்று

கருங்கட் தாக்கலை பெரும்பிறிது உற்றெனக்
கைம்மை உய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதல் சேர்த்தி
ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்துஉயிர் செகுக்கும்
சாரல் நாட நடுநாள்
வாரல் வாழியோ வருந்துதும் யாமே.

— கடுந்தோட் கரவீரன்

தோழி இரவுக்குறி மறுத்தது.

கரிய கண்ணையும் வலிமையையும் உடைய ஆண் குரங்கு இறந்துப்பட்டதாக அதன் பிரிவினால் உளதாம் கைம்மைத் துன்பத்திற்கு ஆற்றாத பெண் குரங்கு, தன் தொழிலாகிய மரம் ஏறுதல் முதலிய தொழில்களைக் கல்லாத வலிய குட்டியைச் சுற்றத்தினிடத்து அடைக்கலமாகச் சேர்ப்பித்துப் பின் உயர்ந்த மலைப் பக்கத்தில் குதித்துத் தன் உயிரைப் போக்கும் இடமாகிய மலைச்சாரலையுடைய நாட்டையுடையோனே, நள்ளிரவிலே வருதலை ஒழிப்பாய். வந்தால் நினக்குத் தீங்கு நேருமோ என்று யாமும் வருந்தி இருப்போம்.

இரவு வருதல் வருத்தத்திற்கு ஏதுவாதலின் அதனை ஒழிப்பா யாக என்பதாம். இதனால் தோழி இரவுக் குறியை மறுத்தா ளாயிற்று.

மந்தி தாய்மையினும் கற்பைப் பெரிதாய்க் கருதியதாதலின் நினக்கு ஒரு துன்பம்வரின் தாங்கி எம்மால் உயிர்வாழ இயலுமோ என்னும் குறிப்பினை வெளிப்படுத்தலின் இஃது இறைச்சிப் பொருளாம்.

தா - வலி; கலை - ஆண் குரங்கு; மந்தி - பெண்குரங்கு; பறழ் - குட்டி; கிளை - சுற்றம்; செகுக்கும் - மாய்த்துக் கொள்ளும்.

காப்புவரை யிறந்தது (தொல். களவு. 24) என இளம்பூர ணர் இப் பாடலுக்குக் கருத்துரைப்பர்.

70. குறிஞ்சி — தலைவன் கூற்று

ஒடுங்குஈர் ஓதி ஒள்நுதற் குறுமகள்
நறுந்தண் நீரள் ஆர்அணங் கினளே
இனையள் என்றுஅவட் புனைஅளவு அறியேன்
சிலமெல் லியவே கிளவி
அனைமெல் லியல்யான் முயங்குங் காலே.

— ஓரம்போகியார்

புணர்ந்து நீங்கும் தலைமகன் தன் நெஞ்சிற்கு சொல்லியது.

நெஞ்சே! ஒடுங்கிய நெய்ப்பையுடைய கூந்தலையும் ஒள்ளிய நெற்றியையும் உடைய இளையோளாகிய தலைவி, நறுமணத்தை யும் குளிர்ச்சியையும் உடைய தன்மையினள். ஆயினும் பிரிந்த காலத்துப் பொறுத்தற்கரிய வருத்தம் தருபவளாயினள். அவளை இத்தகைமையள் என்று புனைந்துரைக்கும் அளவினை அறியேன். அவளுடைய சொற்கள் சிலவாகவும் மென்மை வாய்ந்தனவாகவும் உள்ளன. யான் அவளைத் தழுவிச் சேரும்போதும் அந்தச் சொற்களைப் போன்றே மென்மையுடையவளா யிருக்கின்றாள்.

இவ்வாறு தலைவி ஐம்புலன்களுக்கும் ஒருங்கே இன்பம் தருபவளாவள் என்று தலைவன் போற்றுகின்றான்.

'ஓதி ஒண்ணுதற் குறுமகள்' என்பதனால் காட்சி இன்பமும் 'சில மெல்லியவே கிளவி' என்பதனால் கேள்வி இன்பமும், 'தண்ணீரள், அனை மெல்லியல்' என்பதனால் ஊற்றின்பமும், 'நறு நீரள்' என்பதனால் உயிர்ப்பின்பமும், 'முயங்குங்கால்' என்னும் குறிப்பினால் சுவையின்பமும் தருபவளாய் ஐம்புலன்

களுக்கும் இன்பம் நல்கினாள் என்பதனைத் தலைவன் வெளிப் படுத்தியுள்ளான்.

ஓதி - கூந்தல்; குறுமகள் - குமரிப்பெண்; புனை அளவு - புனைந்துரைக்கும் எல்லை; அனை மெல்லியல் - அத்தகைய மெல்லிய இயல்புடையவள். முயங்குதல் - தழுவுதல்.

இப் பாடலைப் புணர்ச்சியால் தலைவன் மகிழ்ந்தது என்பர் இளம்பூரணர் (தொல். களவு. 11); நச்சினார்க்கினியரோ, இடந் தலைப் பாட்டின்கண் தலைவன் புணர்ச்சியின் மகிழ்ந்தது (தொல். களவு. 11) என்று உரைப்பர்.

71. பாலை — தலைவன் கூற்று

மருந்துஎனின் மருந்தே வைப்புஎனின் வைப்பே
அரும்பிய சுணங்கின் அம்பகட்டு இளைமுலைப்
பெருந்தோள் நுணுகிய நுசுப்பின்
கல்கெழு கானவர் நல்குறு மகளே.

— கருவூர் ஓதஞானி

பொருள் கடைக்கூட்டிய நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லிச் செலவழுங்கியது.

நெஞ்சே! கற்கள் பொருந்திய காட்டிற்குரிய கானவர் பெற்ற மகளாகிய தலைவி அங்கங்கே முகிழ்த்த தேமலையுடைய அழகிய பெருமை பொருந்திய இளமுலைகளையும் பெருத்த தோள்களை யும் நுண்ணிதாகிய இடையினையும் உடையவள். நான் தேடும் பொருள் அமுதம் போன்று இனிது என்பாயேல் எனக்கு அமுத மாக அமைந்துள்ளவள் இவளே. போகம் நுகர வைப்பாகப் பெருநிதி வேண்டும் என எண்ணின் இவளே எனக்குக் காப்பான செல்வமும் ஆவள்.

ஆதலால் இவளைப் பிரிந்துசென்று பெறும் செல்வம் வேறு ஒன்றும் இல்லை என்பதாம்.

மருந்து - அமுதம்; காமநோய் நீக்கும் மருந்தும் ஆம்; வைப்பு - சேமநிதி; சுணங்கு - தேமல்; அரும்புதல் - முகிழ்த்தல்; தோன்று தல்; பகடு - பெருமை; கல் - கற்கள்; மலை என்றும் கொள்ள லாம். நல்குறு மகள் - பெற்றமகள்.

தலைவியின் உறுப்பு நலன்களைக் கூறியது அத்தகு நலனுடையாளைப் பிரிவரிது என்பதனைக் குறிப்பிக்க வேண்டி. 'கானவர் மகள்' என்றதனால் இன்னும் அவள் வரைந்து கொள்ளாதவளா ""ள்ளாள் என்பதும் பெறப்படும்.

72. குறிஞ்சி — தலைவன் கூற்று

பூஒத்து அலமரும் தகைய ஏஒத்து
எல்லாரும் அறிய நோய்செய் தனவே
தேமொழித் திரண்ட மென்தோள் மாமலைப்
பரீஇ வித்திய ஏனல்
குரீஇ ஒப்புவாள் பெருமழைக் கண்ணே.

— மள்ளனார்

தலைமகன் தன் வேறுபாடு கண்டு வினாவிய பாங்கற்கு உரைத்தது.

பாங்கனே! இடையே பருத்தி விதைக்கப் பெற்ற முதிர்ந்த தினைப்புனத்தில் கதிர்களில் வந்துவிழும் குருவிகளை ஓட்டுகின்ற தலைவி இனிய மொழியையும் திரட்சியுடைய மென்மையான தோள்களையும் உடையவள். அவளுடைய பெரிய குளிர்ந்த கண்கள் பூவை ஒத்தனவாய்ச் சுழலும் தன்மை உடையன. ஆயினும் அவை அம்புகளை ஒத்தவைவாய் நின்போன்றார் எல்லாரும் அறியுமாறு எனக்குத் துன்பத்தைத் தோற்றுவித்தன.

குருவிகளை ஓட்டும் மலைவாழ் மகள் ஒருத்தியிடம் ஈடுபட்டுக் காமநிலையில் உள்ளேன். அதன் காரணமாக மேனி வேறுபாடுற்றது.

முன்னர்க் குருவி ஓட்டுவாளின் குரலினிமையைக் கேட்டும், பின்னர் அவளன்பின் வயப்பட்டு அவளுடைய தோள் நலம் துய்த்தும் அறிந்தவன் ஆதலால் மொழியும் தோளும் என முறையே கூறலாயினன் என்க.

இக் குறுந்தொகையுள் குரீஇ ஒப்புவாள் கண் என வழிநிலைக் காட்சியைப் பாங்கற்குக் கூறினமையின் அத் தினைக்கதிர் முற்றுதற்குரிய இளவேனிலும் பகற்பொழுதும் காட்சிக்கண் வந்தன என எடுத்துரைக்கிறார் நச்சினார்க்கினியர் (தொல். அகத். 16).

73. குறிஞ்சி — தோழி கூற்று

மகிழ்நன் மார்பே வெய்யை யால்நீ
அழியல் வாழி தோழி நன்னன்
நறுமா கொன்று நாட்டில் போக்கிய
ஒன்றுமொழிக் கோசர் போல
வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமால் சிறிதே.

— பரணர்

பகற்குறி மறுத்து இரவுக்குறி நேர்ந்து அதுவும் மறுத்தமைபடத் தலைமகட்குத் தோழி சொல்லியது.

தோழி! மகிழ்ச்சி தருதற்குரிய தலைவனுடைய மார்பையே நீ விரும்புகின்றாய். நன்னனது காவல் மரமாகிய நறிய மாமரத்தை வெட்டிப் போரிலே அவனையும் அழித்தொழித்த ஒன்று மொழி யாகிய வஞ்சினத்தையுடைய கோசரைப் போல வன்கண்மை யுடைய ஆராய்ச்சியும் சிறிது காலத்திற்கு வேண்டும். அதன் பொருட்டு நீ வருந்தற்க.

ஒன்றுமொழி - வஞ்சினம்; உண்மைமொழி என்றும் கொள்ள லாம். குறுந்தொகை 15ஆம் பாடலில் வரும் 'நாலூர்க் கோசர் நன்மொழி' என்னும் தொடர் 'ஒன்று மொழி' என்பதனோடு இயைபுடைத்தாம். வன்கண் - அருளில்லாமை, இரக்கமில்லாமை; சூழ்ச்சி - எண்ணிச் செய்யும் தந்திரம்.

'வன்கட் சூழ்ச்சி' என்பது பகற்குறி மறுத்து, இரவுக்குறி நேர்ந்து அதனையும் மறுத்தமையைக் காட்டுவதாகும். சூழ்ச்சிக் காலம் பெரிதாயின் தலைவன் உள்ளம் உடைந்து போவான் ஆதலால் சிறிது காலமே வேண்டும் என்றும் குறிப்பிடுகிறாள்.

ஆற்றில் மிதந்து வந்த மாங்காயைத் தின்ற ஒரு பெண்ணுக்கு நன்னன் என்பான் இரக்கமின்றிக் கொலைத் தண்டனை விதித் தமையைக் குறுந்தொகை 292ஆம் பாடல் சுட்டுகிறது. அங்கே அவனைப் 'பெண் கொலை புரிந்த நன்னன்' என்கிறார். அப் பாடலைப் பாடியவரும் பரணரே. இப் பெருங் குற்றம் இழைத்த நன்னனைக் கோசர் போரில் வென்று ஓட்டிய செய்தி அதன் பின் நிகழ்ச்சியாதல் வேண்டும்.

இப் பாடலைத் தோழி வன்புறை என இளம்பூரணர் எடுத்துக் காட்டுவர் (தொல். களவு. 24).

74. குறிஞ்சி — தோழி கூற்று

விட்ட குதிரை விசைப்பின் அன்ன
விசும்புதோய் பசுங்கழைக் குன்ற நாடன்
யாம்தற் படர்ந்தமை அறியான் தானும்
வேனில் ஆனேறு போலச்
சாயினன் என்பநம் மாண்நலம் நயந்தே.

— விட்ட குதிரையார்

தோழி தலைமகன் குறை மறாதவாற்றால் கூறியது.

கட்டு அவிழ்த்து விடப்பட்ட குதிரை துள்ளி எழுதலைப் போன்று வளைத்து விட்ட மூங்கில் வானத்தைத் தோயும்படி நிமிர்ந்த பசிய மூங்கிலையுடைய குன்றம் விளங்கும் மலை

நாட்டுத் தலைவனாகிய அவனை யாம் நினைந்து மெலிவுறுதலை அறியாதவனாய்த் தானும் வேனிற் காலத்திலே வெம்மையால் எருது மெலிவதுபோல நம் மாட்சிமைப்பட்ட அழகினை விரும்பி அது பெறாமையால் உற்ற காமநோயால் மெலிவான் ஆயினான்.

ஆதலால் தலைவன் கருத்துக்கு நாம் இணங்குதல் இருவருக்கும் நலம் பயக்கும் என்பதாம்.

யானை உண்ணும் பொருட்டு மூங்கிலை வளைத்தலும் விடுத்தலும் இயல்பாய் நிகழும் நிகழ்ச்சிகளாம். மூங்கில் வளைக்குங் காலத்து வளைந்துகொடுக்குமாயினும் இயல்பாக உயர்ச்சியுடைய தாகும். அதுபோலத் தலைவனும் நம் பொருட்டுப் பணிந்து நடந்தாலும் உயர் தகுதியுடையன் என்பதைக் குறிப்பதாயிற்று. எனவே இஃது உள்ளுறை உவமமாம்.

75. மருதம் — தலைவி கூற்று

நீகண் டனையோ கண்டார்க்கேட் டனையோ
ஒன்று தெளிய நசையினம் மொழிமோ
வெண்கோட்டு யானை சோணை படியும்
பொன்மலி பாடலி பெறீஇயர்
யார்வாய்க் கேட்டனை காதலர் வரவே.

— படுமரத்து மோசிகீரனார்

தலைமகன் வரவுணர்த்திய பாணற்குத் தலைமகள் கூறியது.

தலைவன் வரவு உரைத்த பாணனே! தலைவரது வரவினை நீ நின் கண்ணால் பார்த்தாயோ? அன்றித் தலைவரைக் கண்டவர் சொல்லக் கேட்டுத் தெளிந்தாயோ? காதலர் வரவினைப் பிறரிடமிருந்து கேட்டாயானால் யார் வாயிலாக நீ அறிந்தாய். உண்மையான ஒன்றைத் தெளிவாய் அறிய விரும்பினோம். உண்மையை உரைப்பாயாக. அதற்குப் பரிசாக வெண்ணிறக் கொம்புகளையுடைய யானைகள் துளைந்து விளையாடும் சோணையாற்றின் கரையில் உள்ள பொன்மிக்க பாடலி நகரத்தைப் பெறுவாயாக.

தலைவன் வரவு நோக்கியிருக்கும் அன்பு அவள் பாணனை வினவுமுறையால் புலனாம். பலகால் தலைவனின் வரவை எதிர் நோக்கியிருக்கும் தலைவிக்குப் பாணன் நற்செய்தி சொன்னமையால் மகிழ்ந்து அவனை வாழ்த்தினாள் என்பது பெறப்படும். 'பொன்மலி பாடலி பெறீஇயர்' என்றது மிகு செல்வம் பெற்று வாழ்வாயாக என்னும் குறிப்பிற்று.

ஒன்று - உண்மை; பாடலி - வடநாட்டுப் பாடலிபுத்திர நகர்; சோணையாற்றங்கரையிலுள்ள இவ்வூர் ஒரு காலத்தில் நந்தர்

களுக்கு உரியதாயிருந்தது. செல்வ வளம் நிறைந்த பெருநகர் என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

தலைவன் வருகின்றான் என்ற உழையர்க்குத் தலைவி கூறியது (தொல். கற்பு. 6) என்பர் இளம்பூரணர். நச்சினார்க்கினியர், தலைவன் வரவைத் தலைவி விரும்பிக் கூறியது என்கிறார் (தொல். கற்பு. 6.)

76. குறிஞ்சி — தலைவி கூற்று

காந்தள் வேலி ஓங்குமலை நல்நாட்டுச்
செல்ப என்பவோ கல்வரை மார்பர்
சிலம்பில் சேம்பின் அலங்கல் வள்இலை
பெருங்களிற்றுச் செவியின் மானத் தைஇத்
தண்வரல் வாடை தூக்கும்
கடும்பனி அற்சிரம் நடுங்குஅஞர் உறவே.

— கிள்ளிமங்கலங்கிழார்

பிரிவுணர்த்தச் சென்ற தோழிக்கு அவர் பிரிவு முன்னர் உணர்ந்த தலைமகள் சொல்லியது.

தோழி! மலைப் பக்கத்தில் உள்ள சேம்பின் அசைதலையுடைய வளப்பமான இலை பெரிய ஆண்யானையின் செவியைப் போலத் தோன்றும் வண்ணம் தட்வியபடி தண்ணிய வரவையுடைய வாடைக் காற்றானது அசைத்தற்குரிய மிக்க பனி நிறைந்த முன்பனிக் காலத்திலே நடுங்குதற்குக் காரணமாகிய துன்பத்தை யான் அடையுமாறு கற்கள் நிறைந்த மலை போன்ற வலிய மார்பையுடைய தலைவர் காந்தளை வேலியாகவுடைய உயர்ந்த மலை பொருந்திய நல்ல நாட்டினிடத்து என்னைப் பிரிந்து செல்வதாகச் சொல்லுகின்றனரோ?

தலைவர் பிரிந்து செல்ல நினைத்தனர் என்பதனை முன்னமேயே அறிவேன் என்பதாம்.

சிலம்பு - மலை; வள் - வளப்பம்; கல்வரை - கற்கள் நெருங்கிச் சேர்ந்த மலை; வாடை - வாடைக்காற்று; அற்சிரம் - முன்பனிக்காலம்; தூக்குதல் - அசைத்தல்.

77. பாலை — தலைவி கூற்று

அம்ம வாழி தோழி யாவதும்
தவறுஎனின் தவறோ இலவே வெஞ்சுரத்து
உலந்த வம்பலர் உவல்இடு பதுக்கை

நெடுநல் யானைக்கு இடுநிழல் ஆகும்
அரிய கானம் சென்றோர்க்கு
எளிய ஆகிய தடமென் தோளே.

— மதுரை மருதன் இளநாகனார்

பிரிவின்கண் ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

தோழி, ஒன்று சொல்வேன், கேட்பாயாக. வெம்மை மிகுந்த கடத்தற்கு அரிய பாலை வழியிலே இறந்துபட்ட புதியவரான வழிப்போக்கர்களுடைய உடல்களை மூடி மறைத்த தழையிட்ட குவியலானது உயர்ந்த நல்ல யானைக்குச் செயற்கையாய் இட்டு வைத்த நிழலாகப் பயன்படும் கடத்தற்கு அரிய பாலை நிலத்தில் பிரிந்து சென்ற தலைவர் திறத்துப் புனையப் பெறாத மெலிவுற்ற பரந்த மெல்லிய என் தோள்கள் தவறுடைய எனக் கூறின் அவை சிறிதும் தவறு இல்லாதனவேயாம்.

இதனால் தோள்கள் மெலிவுறும் வண்ணம் பிரிந்து சென்ற தலைவரே தவறுடையவராயினர் என்பதாம்.

உவல் - தழை; வம்பலர் - வழிப் போவாராய புதியவர்; பதுக்கை - பதுக்கிவைத்தற்கான குவியல்; யாவதும் - சிறிதும்.

78. குறிஞ்சி — பாங்கன் கூற்று

பெருவரை மிசையது நெடுவெள் அருவி
முதுவாய்க் கோடியர் முழவின் ததும்பிச்
சிலம்பின் இழிதரும் இலங்குமலை வெற்ப
நோதக் கன்றே காமம் யாவதும்
நன்றுஎன உணரார் மாட்டும்
சென்றே நிற்கும் பெரும்பே தைமைத்தே.

— நக்கீரனார்

பாங்கன் தலைமகற்குச் சொல்லியது.

பெரிய மலையின் உச்சியிடத்து உள்ளதாகிய நீண்ட வெண்ணிறமுடைய அருவியானது அறிவு முதிர்ந்த வாய்மையை யுடைய கூத்தரது முழவைப்போலும் ஒலியுடையதாய்ப் பக்கமலை யிடத்தே விழுகின்ற விளங்குகின்ற மலையையுடைய நாட்டுத் தலைவனே! காமம் என்பது சிறிதும் இது நன்மை தருவது என அறியாதவராகிய அறிவில்லாதாரிடத்தும் சென்று நிற்கச் செய் யும் பெரிய அறிவின்மையுடையதாகும்.

ஆதலால் அது வெறுக்கத்தக்கது. இதனை அறிந்து நீ கொண்ட காமத்தை விடுவாய் என்பதாம்.

முதுவாய்க்கோடியர் - அறிவு வாய்த்தலையுடைய கூத்தர் என்றும் ஆம். ததும்புதல் - ஒலித்தல்; உணரார் என்றது காம நுகர்ச்சிக்குப் பொருளாகிய தலைவியைச் சுட்டியது.

மிக உயர்ந்த மலையில் பிறந்த அருவி தாழ்ந்த பக்க மலையில் விழுவதுபோலப் பெருமை மிக்க நீ அப் பெருமையும் வலிமையும் நீங்கியவனாய்க் காமவயப்பட்டாய் என்பதால் இறைச்சிப் பொருளாம்.

79. பாலை — தலைவி கூற்று

கான யானை தோல்நயந்து உண்ட
பொரிதாள் ஓமை வளிபொரு நெடுஞ்சினை
அலங்கல் உலவை ஏறி ஒய்யெனப்
புலம்புதரு குரல புறவுப்பெடை பயிரும்
அத்தம் நண்ணிய அம்குடிச் சீறூர்ச்
சேந்தனர் கொல்லோ தாமே யாம்தமக்கு
ஒல்லேம் என்ற தப்பல்
சொல்லாது அகறல் வல்லு வோரே.

— குடவாயிற் கீரனக்கன்

பொருள்வயிற் பிரிந்த தலைமகனை நினைந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

தோழி! யாம் தாம் பிரிவதற்கு ஒருப்படேம் என்று சொன்ன தவற்றால் நம்மிடம் சொல்லாதே செல்லுதலின் வன்மை பெற்றவராகிய தலைவர்—காட்டுயானையால் பட்டைவிரும்பி உண்ணப் பட்ட பொரிந்த அடியையுடைய ஓமை மரத்தினது காற்று மோதுதலான் நீண்ட கிளையினது அசைதலையுடைய வற்றற் கொம்பில் ஏறி, ஒய்யென்று தனிமை வருத்தத்தை வெளிப்படுத்தும் குரலையுடையனவாய் ஆண்புறாக்கள் பெண் புறாக்களை அழைக்கும் பாலை நிலத்திலே உள்ள அழகிய குடிகளையுடைய சிற்றூரில் தங்கினரோ?

அத்தகைய இடத்தில் சேர்ந்துள்ளவர் விரைவில் மீண்டு வருவர் என்பதாம்.

பாலை நிலத்தில் ஆண் புறா தன் பெட்டையை விரும்பி அழைக்கும் இடத்தில் தங்கினரோ என்றதால் அந்த நிகழ்ச்சி தலைவருக்குத் தன்பால் மீண்டு வரும் கடமையை அறிவிக்குமே என்பது அவள் உளக்குறிப்பு. இக் குறிப்பினை வெளிப்படுத்தலான் இஃது இறைச்சிப் பொருளாம்.

தோல் - பட்டை; ஓமை - பாலைக் கருப்பொருளாகிய மரம்; உலவை - உலர்ந்த கொம்பு; ஒல்லேம் - ஒருப்படேம், உடம் படேம்; பயிர்தல் - அழைத்தல்; புலம்பு - தனிமை, வருத்தம்; சேந்தனர் - அடைந்து தங்கினர்.

இப் பாடலின் பொருளை இளம்பூரணரும் நச்சினார்க் கினியரும் பின்வருமாறு விளக்குகின்றனர். 'புணர்ந்துடன் போகிய கிழவோள் மனை இருந்து, இடைச்சுரத்து இறைச்சியும் வினையும் சுட்டி, அன்புறு தக்க கிளத்தல் தானே, கிழவோன் செய்வினைக்கு அச்சம் ஆகும்' ஆதலின், புலம்புதரு குரலவாய்ப் புறவினைப் பெடை அழைக்கும் வருத்தம் கண்டு வினைமுடியாமல் வருவரோ என அஞ்சியவாறு காண்க (தொல். கற்பு. 7 இளம். நச்).

80. மருதம் — பரத்தை கூற்று

கூந்தல் ஆம்பல் முழுநெறி அடைச்சிப்
பெரும்புனல் வந்த இருந்துறை விரும்பி
யாம்அஃது அயர்கம் சேறும் தான்அஃது
அஞ்சுவது உடையள் ஆயின் வெம்போர்
நுகம்படக் கடக்கும் பல்வேல் எழினி
முனைஆன் பெருநிரை போலக்
கிளையொடும் காக்கதன் கொழுநன் மார்பே.

— ஔவையார்

தலைமகட்குப் பாங்காயினார் கேட்பப் பரத்தை சொல்லியது.

கூந்தலிலே புறவிதழ் ஒடியாத ஆம்பலின் பூவைச் செருகி, வெள்ளம் பெருகிவரப்பெற்ற பெரிய நீர்த்துறையை விரும்பித் தலைவனும் யானும் அப் புனல் விளையாடுதற்பொருட்டுச் செல்வோம். அங்ஙனம் யாம் விளையாடுதலுக்கு அத் தலைவி அஞ்சுவாளானால், கொடிய போரில் பகைவரை நேர்மையுடன் எதிர் நின்று கொல்லும் பல வேலையுடைய எழினியின் போர் முனையிலுள்ள பசுக்களின் பெரிய கூட்டத்தைக் காத்து மீட்பது போலத் தன் கணவனது மார்பைத் தனக்குப் பாங்காயின ரோடும் காத்துக் கொள்வாளாக.

இதனால் தலைவன் யான் விரும்பியபடி நடப்பானேயன்றித் தலைவி விரும்பிய வண்ணம் செல்லான் என்பதைக் குறிப்பித்த வாறாம்.

முழுநெறி - புறவிதழ் ஒடியாத பூ; புறவிதழ் ஒடிந்த பூ என்றும் உரைப்பர். அடைச்சுதல் - செருகுதல்; நுகம்படுதல் -

நடுநிலைமை உண்டாதல், நேர்மையுடைமை. எழினி - அதிகமான் அஞ்சி. அதிகமான் அஞ்சி தன் நாட்டுப் பசுநிரைகளைப் பகைவர் பற்றிக்கொண்டு செல்ல அவரோடு போர் செய்து அவற்றை மீட்டுக் காத்தான் என்பது வரலாறு.

எழினி தனக்குரிய பசுநிரையை மீட்டது போலத் தலைவியும் தலைவனுடைய மார்பை என்னிடமிருந்து மீண்டும் பெற்றுக் காப்பாளாக என உவமை அமைந்துள்ளது.

புனல் விளையாட்டின்கண் காமக்கிழத்தியர் கூற்று நிகழ்ந்தது என்பதற்கு இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் இப் பாடலைக் காட்டுவர் (தொல். கற்பு. 10).

81. குறிஞ்சி — தோழி கூற்று

இவளே,
நின்சொற் கொண்ட என்சொற் றேறி
பசுநனை ஞாழற் பல்சினை ஒருசிறைப்
புதுநலன் இழந்த புலம்புமார் உடையள்
உதுக்காண் தெய்யஉள்ளல் வேண்டும்
நிலவும் இருளும் போலப் புலவுத்திரைக்
கடலும் கானலும் தோன்றும்
மடல்தாழ் பெண்ணைஎம் சிறுநல் ஊரே.

— வடமவண்ணக்கன் பேரிசாத்தன்

தோழியிற் கூட்டங்கூடிப் பிரியும் தலைமகற்குத் தோழி சொல்லியது.

தலைவ! இத் தலைவி குறையிரந்து வேண்டிய நின் சொற்களை ஏற்றுக்கொண்டு என்னால் சொல்லப்பட்ட சொற்களை மெய் எனத் தெளிந்து, பசுமையான அரும்புகளையுடைய ஞாழல் மரத்தினது பல கிளைகள் செறிந்து இருக்கும் ஒருபக்கத்தில் இதுவரையில் தன்னிடம் புதுப்பொலிவுடன் இருந்த அழகினை இழந்ததனால் உண்டான தனிமையை உடையளா யுள்ளாள். வெண்ணிலாவையும் கரிய இருளையும் போலப் புலால்நாற்றம் வீசும் அலைகளையுடைய கடற்கரை வெண்மணலும் அதனைச் சார்ந்த சோலையும் தோன்றுகின்ற, மடல்கள் தாழ்ந்த பனை மரங்களையுடைய எமது சிறிய நல்ல ஊர் நேர் எதிரில் தோன்றுவதை எண்ணிப் பார்ப்பாயாக.

இனி, எம்மை மறவாது நீர் நினைத்தல் வேண்டும் என்றது எம்மை மறவாது எம் ஊருக்கு வந்து அன்பு செய்தல் வேண்டும் என்பதாம்.

நனை - அரும்பு: ஞாழல் - நெய்தல் நிலத்து வளரும் மர வகை; உது - நடு, நேர். தெய்ய - அசை. நிலவுக்கு ஒப்பிடப்படுத லின் இங்குக் கடல் அடைகரையைச் சுட்டியது.

கடலை இருளுக்கும் கானலை நிலவுக்கும் கொண்டால் எதிர் நிரல்நிறையாகக் கூட்டிக் காணவேண்டும். அவ்வாறு கொள்ளின் கருநிறக்கடலையும் கடற்கரை மணற்பரப்பையும் சுட்டியதாக அமையும்.

இவ்வொழுக்கம் புறத்தார்க்குப் புலனாகும் என்று அறிவுறுத்த வழிப் பின்னும் புணர்ச்சி வேண்டிய தலைவற்குத் தோழி இட முணர்த்தியது என்பர் இளம்பூரணர் (தொல். களவு. 24). நச்சினார்க்கினியர், பாங்கியிற் கூட்டத்தின்பின் முற்காலத்துப் பணிந்து பின்னின்றோனைத் தோழி தானே பணிந்தொழுகு மிடத்து அவளுக்குக் கூற்று நிகழ்ந்தது என்றும் (தொல். களவு. 23) தோழிக்குத் தலைவி தனது வேட்கையை எதிர்நின்று கூறியது (தொல். களவு. 27) என்றும் கூறுவர்.

82. குறிஞ்சி — தலைவி கூற்று

வார்உறு வணர்கதுப்பு உளரிப் புறஞ்சேர்பு
அழாஅல் என்றுநம் அழுதகண் துடைப்பார்
யார்ஆ குவர்கொல் தோழி சாரற்
பெரும்புனக் குறவன் சிறுதினை மறுகால்
கொழுங்கொடி அவரை பூக்கும்
அரும்பனி அற்சிரம் வாரா தோரே.

— கடுவன் மள்ளன்

பருவங் கண்டு அழிந்த தலைமகள், 'வருவர்' என்று வற்புறுத் தும் தோழிக்குச் சொல்லியது.

தோழி! மலைப்பக்கத்தேயுள்ள பெரிய தினைப்புனத்திற்குரிய வனாகிய குறவன் தினை அரிந்த மறுகாலிடத்திலே கொழுமை யான அவரைக்கொடியானது மலர்கின்ற பொறுத்தற்கரிய பனியையுடைய இந்த முன்பனிக்காலத்திலும் வாராத தலைவர், பிரியும் முன்பாக நீட்சியையுடைய வளைந்த கூந்தலைக் கோதி முதுகைச் சார்ந்து அழுதலைத் தவிர் என்று நம்அழுத கண்ணீரைத் துடைப்பவர் இப்பொழுது எத்தன்மை உடையவராவரோ?

வாராமையால் நம்மை மறந்தனர் போலும் எனத் தலைவி குறிப்பதாயினள் என்க.

வார் - நீட்சி; வணர்தல் - வளைதல், சுருளுதல்; உளர்தல் - கோதுதல்; புறம் - முதுகு; மறுகால் - அரிந்த தினைத்தாளி லிருந்து கிளைத்த மறுபயிர். அவரை என்றது இங்கே மொச் சையை என்பர்.

குறவன் முதலில் விதைத்த தினைக் கதிர் பெற்றதன்றி மறுகால் பயிரின் திலையும் பெறுவதோடு அவரையி னாலும் பயன் பெறுகின்றான். அதுபோலத் தலைவன் முதலில் இன்புற்றதோடு மீண்டுவந்து என்பாற் பெறும் இன்பமும் செய் வினை முடித்ததனாலாகிய இன்பமும் பெறுவானாக என்னும் உட்பொருளும் தோற்றும். இஃது இறைச்சிப் பொருளாம்.

83. குறிஞ்சி — தோழி கூற்று

அரும்பெறல் அமிழ்தம் ஆர்பதம் ஆகப்
பெரும்பெயர் உலகம் பெறீஇயரோ அன்னை
தம்இல் தமதுஉண் டன்ன சினைதொறும்
தீம்பழம் தூங்கும் பலவின்
ஓங்குமலை நாடனை வரும்என் றோளே.

— வெண்பூதன்

தலைமகன் வரைந்தெய்துதல் உணர்த்திய செவிலியைத் தோழி வாழ்த்தியது.

தமக்கு உரித்தான வீட்டில் இருந்து தமது முயற்சியால் சேர்த்த பொருளில் தமது பங்கை உண்டாற் போன்ற இனிமை தருவனவாய்க் கிளைகள்தோறும் இனிய பழங்கள் தொங்குகின்ற பலா மரங்களையுடைய உயர்ந்த மலைநாட்டுத் தலைவனை வரைதற்குரிய பொருளொடு வருவான் என்று சொன்னவளாகிய அன்னை பெறுதற்கு அரிதாகிய அமிழ்தமே உண்ணும் உணவாகப் பெரும்புகழுடைய பேரின்ப உலகத்தைப் பெறுவாளாக.

தலைவனுடைய நல்வரவினை உரைத்தமையால் செவிலி யைத் தோழி வாழ்த்துகிறாள்.

பெரும்புண்ணியம் செய்தார்க்கன்றிப் பிறரால் பெறுதற்கு அரியதாமாதலின் அமிழ்தம், 'அரும்பெறல் அமிழ்தம்' என்று சிறப் பிக்கப்படுகிறது. பெரும்பெயர் உலகம் - பெரும் புகழுடைய உலகம் என்றது பேரின்ப வாழ்விற்கிடமான சுவர்க்கத்தை. ஓங்கு தல் - உயர்தல்.

இதனால் தோழி தலைவிக்குத் தலைமகன் வரைவொடு வரும் செய்தியும் அன்னை முதலியோர் உடம்பட்டமையும் உணர்த்தி னாளாயிற்று.

84. பாலை — செவிலித்தாய் கூற்று

பெயர்த்தனென் முயங்கயான் வியர்த்தனென் என்றனள்
இனிஅறிந் தேன்அது துனிஆ குதலே
கழல்தொடி ஆஅய் மழைதவழ் பொதியில்
வேங்கையும் காந்தளும் நாறி
ஆம்பல் மலரினும் தான்தண் ணியளே.

— மோசிகீரன்

மகட் போக்கிய செவிலித்தாய் சொல்லியது.

உழலும்படி அணிந்த தோள்வளையையுடைய ஆய் என்னும் வள்ளலுக்குரிய மேகம் தவழும் பொதியில் மலையில் உண்டான வேங்கை மலரும் காந்தள்மலரும் தன்பால் மணக்க ஆம்பல் மலரைவிடவும் குளிர்ச்சியுடையவளாகிய என் மகள், யான் ஒரு முறை தழுவியதோடு அமையாது மீட்டும் தழுவும் காலத்தில் அதற்கு இசையாது, நான் வியர்வையை அடைந்தேன் என்று கூறினாள். அங்ஙனம் அவளை மீட்டும் தழுவியது வெறுப் புண்டாக்குதலை யான் இப்பொழுது அறிந்துகொண்டேன்.

தலைவனின் முயக்கத்தை விரும்பியவளாதலின் தாயின் தழுவுதலை வெறுத்தனள் என்பது தெரியவரும்.

இனி - இப்பொழுது; துனி - வெறுப்பு; ஆய் - பொதியில் மலைக்கு உரியவன்; ஏழு வள்ளல்களுள் ஒருவன்.

இளம்பூரணர், உடன்போக்கிய செவிலி கவன்று உரைத்தது என்பர் (தொல். அகத். 39). இக் கருத்து மேலும் தெளிவுறும் வகையில் நச்சினார்க்கினியர், உடன் போக்கிற்கு மகள் நெஞ்சு துணிந்த காலத்துத் தன்மேல் அன்பு நீங்கியது உணர்ந்து செவிலி கூறியது (தொல். களவு. 24) என்று விளக்குவார்.

85. மருதம் — தோழி கூற்று

யாரினும் இனியன் பேர்அன் பினனே
உள்ளூர்க் குரீஇத் துள்ளுநடைச் சேவல்
சூல்முதிர் பேடைக்கு ஈனில் இழைஇயர்
தேம்பொதிக் கொண்ட தீம்கழைக் கரும்பின்
நாறா வெண்பூக் கொழுதும்
யாணர் ஊரன் பாணன் வாயே.

— வடமவண்ணக்கன் தாமோதரன்

வாயில் வேண்டிச் சென்ற பாணற்குத் தோழி சொல்லி, வாயில் மறுத்தது.

ஊரினுள் வாழும் ஊர்க்குருவியினது துள்ளித்துள்ளி நடக்கும் நடையுடைய ஆண் பறவை தன்னுடைய கருப்பம் முதிர்ந்த பெண் பறவைக்குக் கருவுயிர்த்தற்குரிய இடத்தை அமைக்கும் பொருட்டாகத் தேன் போன்ற சாறு நிரம்பிய இனிய தண்டையுடைய கரும்பினது மணமற்ற வெண்ணிறப் பூவைக் கொய்து கொண்டு வரும் புதுவருவாயுடைய ஊருக்குத் தலைவன், பாணனின் வாய்ச் சொல்லளவில் எல்லாரினும் இனிமையுடையான்.

தலைவியின்பால் பெரிய அன்பை வைத்துள்ளவன் என்பதன்றி உண்மையில் அவன் அத்தகையவன் அல்லன் என்பதாம்.

குரீஇ - குருவி; துள்ளுநடை - துள்ளிக் குதித்துச் செல்லும் நடை; உள்ளூர்க்குரீஇ - ஊரினிடத்துள்ள குருவி, ஊர்க்குருவி; ஈனில் - கருவுயிர்க்கும் அறை; பொதிதல் - உள்ளடக்கியிருத்தல்; தேம் - தேன்; தேனடை என்றும் ஆம். தீம் - இனிமை.

பாணனின் வாய்ப்புகழ்ச்சியில் இனிமையும் அன்பும் உள்ளனவே தவிர அத் தலைவனுடைய செயலில் அவை இல்லை என்னும் குறிப்பினால் வாயில் மறுத்தாளாயிற்று.

தீங்கழை இருக்க மணமற்ற வெண்பூவைக் குருவி கோதி எடுக்கும் ஊரன் என்றமையால் அறநெறியில் இன்பம் துய்த்தற்குரிய தலைவி இருப்பவும் அவளை விடுத்து அன்பும் கற்பும் இல்லாப் பரத்தையரை விரும்பினான் என்னும் குறிப்பை உட்கொண்டுள்ளமையால் இஃது இறைச்சிப் பொருளாம்.

86. குறிஞ்சி — தலைவி கூற்று

சிறைபனி உடைந்த சேயரி மழைக்கண்
பொறைஅரு நோயொடு புலம்புஅலைக் கலங்கிப்
பிறரும் கேட்குநர் உளர்கொல் உறைசிறந்து
ஊதை தூற்றும் கூதிர் யாமத்து
ஆன்நுளம்பு உலம்புதொறு உளம்பும்
நாநவில் கொடுமணி நல்கூர் குரலே.

— வெண்கொற்றன்

ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி சொல்லியது.

தடுக்கப்பட்ட நீர் உடைந்து துளித்துளியாக விழுகின்ற செவ்வரி படர்ந்த குளிர்ச்சியுடைய கண்களுடனும் பொறுத்தற்கரிய காம நோயொடும் தனிமை வருத்தத்தால் கலங்கி வருந்தி மழைத்துளிகள் மிகுந்து வாடைக் காற்று வீசித் தூவுகின்ற கூதிர்ப் பருவத்தின் நள்ளிரவிலே எருதானது ஈ ஒலிக்கும் போதெல்லாம்

அலைகின்ற நாவினால் முழங்குகின்ற கொடியமணியின் நலிந்த ஓசையைக் கேட்பவராகிய பிற பெண்களும் உளரோ?

யான் ஒருத்தியே பிரிவாற்றாது தனிமைத் துன்பத்தை உடையளாயிலேன் என்பதாம்.

தலைவன் உடன் இருத்தற்குரிய இப் பருவத்தில் தனிமைத் துன்பத்தை யான் ஒருத்தியே உடையனாயினேன் என்று தலைவி சுட்டினாளாயிற்று.

சிறை - தடை; பனி - நீர்; சேயரி - செவ்வரி; நுளம்பு - ஈ, இங்கே மாட்டு ஈ; உலம்புதல் - ஒலித்தல்; உளம்புதல் - அலைதல், அசைதல்.

87. குறிஞ்சி — தலைவி கூற்று

மன்ற மராஅத்த பேஎம்முதிர் கடவுள்
கொடியோர்த் தெறூஉம் என்ப யாவதும்
கொடியர் அல்லர்எம் குன்றுகெழு நாடர்
பசைஇப் பசந்தன்று நுதலே
ஞெகிழ ஞெகிழ்ந்தன்று தடமென் தோளே.

— கபிலர்

தலைமகள் தெய்வத்திற்குப் பராஅயது

பொதுவிடத்தில் உள்ள கடப்பமரத்தில் குடிகொண்டிருக்கும் அச்சம் செய்தலில் முதிர்ந்த தெய்வம் கொடுமைபுரிவாரை வருத்தும் என்று சொல்வார்கள். குன்றங்கள் நிறைந்த நாட்டை யுடைய எம் தலைவர் சிறிதும் கொடுமையுடையாரல்லர். என் நெற்றி நான் அவரை விரும்பியதால் பசலை பெற்றது. என் மனம் அவர்பால் நெகிழ்ந்தமையால் என் பரந்த மெல்லிய தோள் களும் மெலிவுற்றன.

என்னிடம் வேறுபாடு உண்டாவதற்குத் தலைவரே காரண மாவர் என்பதாம்.

மன்றம் - பலர் கூடியிருக்கும் பொதுவிடம்; மராஅம் - கடம்பு; பேஎம் - அச்சம்; பசைதல் - விரும்புதல்.

தலைவன் செய்த சூளுறவு பொய்த்ததற்காகத் தெய்வம் அவனை வருத்தும் என்று தலைவி அஞ்சியபொழுதும் தாவில் நன்மொழி கூறும்பொழுதும் தலைவிக்குக் கூற்று நிகழும் என்பர் இளம்பூரணர் (தொல். களவு. 21, 23). நச்சினார்க்கினியர், தலைவன் தெய்வத்தை நோக்கிச் சூளுற்றுப் பொய்த்தானாகத்

தெய்வம் அச் சூளுறவிற்கு அவனை வருத்தும் என்று அச்சம் நீட்டிப்பின் தலைவிக்குக் கூற்று நிகழும் (தொல். களவு. 20) எனக் கருத்துரைப்பர்.

88. குறிஞ்சி — தோழி கூற்று

ஒலிவெள் அருவி ஓங்குமலை நாடன்
சிறுகட் பெருங்களிறு வயப்புலி தாக்கித்
தொல்முரண் சொல்லும் துன்அருஞ் சோலை
நடுநாள் வருதலும் வரூஉம்
வடுநா ணலமே தோழி நாமே.

— மதுரைக் கதக்கண்ணன்

இரவுக்குறி நேர்ந்த வாய்பாட்டால் தோழி தலைமகட்குச் சொல்லியது.

தோழி! ஒலிசெய்து பாயும் வெள்ளருவியையுடைய உயர்ந்த மலைகள் உள்ள நாட்டையுடைய தலைவன், சிறிய கண்ணை யுடைய பெரிய ஆண்யானையானது வலிமை வாய்ந்த புலியைத் தாக்கித் தன் பழைய வலிமை இழந்துநிற்கும் மக்கள் சென்றடைதற்கு அரிய மரங்களடர்ந்த மலைச் சோலையின் வழியே இடையிரவுப் பொழுதில் வருதலையும் செய்தான். அங்ஙனம் அவன் வருதலால் உண்டாகும் பழிக்கு நாண மாட்டோம்.

ஆதலால் அவர் இரவு வரத் தட்டில்லை என்பதாம்.

களிறும் புலியும் போர் செய்தலால் மக்கள் செல்லுதற்கு அரிதாயிற்று என்பதாம். 'சிறுகட் பெருங்களிறு' என்பதில் முரண் தொடை நயம் காணலாம்.

தலைவன் மரங்களடர்ந்த அஞ்சத் தகுந்த விலங்குகள் வாழும் சோலை வழியைக் கடந்து இரவுக்குறிக்கண் வந்தான் என்பது வழியின் அருமை சுட்டியவாறாயிற்று. மேலும் சோலை என்பது தொல்முரண் எனத் தொடங்கும் முதற்சீருக் குரிய மோனை நயமுடையதாய், முற்றுமோனை பெற்ற அடியாகவும் அமைகிறது. எனவே, சாரல் என்பதனை விடுத்துச் சோலை என்னும் பாடம் கொள்ளப்பெற்றது.

வயம் - வலிமை; சொல்லும் - இழக்கும்; துன்னுதல் - நெருங்குதல்; நடுநாள் - இடையாமம் வடு - குற்றம்; அதாவது தலைவன் வருதலைப் பிறர் அறிந்து பழி கூறுதல்.

அருவியானது உயர்ந்த மலையிடத்திலிருந்து கீழே இறங்கி நிலப்பரப்பில் வாழ்வார்க்குப் பயன்படுதல் போலத் தலைவனும்

நெடுந்தூரம் நடந்து வந்து நமக்குப் பயன் தருவான் என்பது பாடலின் பொருட்புறத்ததாகப் புலப்படுதலின் இறைச்சிப்பொருளாம்.

பகற்குறி நேர்ந்த இடத்துத் தோழி தலைவிக்குக் கூறியது என்பர் இளம்பூரணர் (தொல். களவு. 24). தமிழ் நெறி விளக்க முடையார் இப் பாடலை 'இரவுக்குறி மறுத்தது' என்பார் (தமிழ் நெறி. 18)

89. மருதம் — தோழி கூற்று

பாஅடி உரல் பகுவாய் வள்ளை
ஏதில் மாக்கள் நுவறலும் நுவல்ப
அழிவது எவன்கொல்இப் பேதை ஊர்க்கே
பெரும்பூண் பொறையன் பேஎம்முதிர் கொல்லிக்
கருங்கட் தெய்வம் குடவரை எழுதிய
நல்இயல் பாவை அன்னஇம்
மெல்இயல் குறுமகள் பாடினள் குறினே.

— பரணர்

தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தன்னுள்ளே சொல்லுவாளாய்ச் சொல்லியது; தலைமகற்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லி வாயில் மறுத்ததூஉம் ஆம்.

பெரிய அணிகலத்தைப் பூண்டுள்ள சேரனுக்குரிய அச்சம் தருதலில் மிக்கதான கொல்லிமலையில் உள்ள கரிய கண்ணை யுடைய தெய்வத்தால் அம் மலையின் மேல்பால் எழுதிவைக்கப் பெற்ற நல்ல அழகினையுடைய கொல்லிப் பாவையைப் போன் றவளாகிய இந்த மெல்லிய இயல்பினையுடைய இளையாளாகிய தலைவியானவள் பரந்த அடியையுடைய உரலினது பிளப்பான வாயினிடத்தே உலக்கையால் தானியம் குற்றும்போது பாடும் பாடலாகிய வள்ளைப்பாட்டைப் பாடிக் குற்றினாளாக அதனைக் கேட்ட அயலார்கள் பழி கூறலையும் செய்வார்கள். இத்தகு அறிவின்மையுடைய இந்த ஊராரின் பொருட்டாக வருந்துவ தால் உளதாய பயன் யாது?

இதனால் தலைவன் விரைந்து வந்து திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பது குறிப்பின் வெளிப்படுத்தவாறா யிற்று.

வள்ளை - உலக்கை; உரலில் தானியம் இடிக்கும் போது பாடு கின்ற பாடல். இதனை உரற்பாட்டு, உலக்கைப்பாட்டு, அவலிடி, அம்மானை வள்ளை என்னும் பெயர்களாலும் குறிப்பிடுவர்.

பகுவாய் - பிளந்தவாய், பெருவாய். கொல்லிப் பாவை - கொல்லி மலையின் மேல்புறத்தே தெய்வத்தால் எழுதிவைக்கப்பட்ட பெண் தெய்வம். இது தன்னைக் கண்டார் நெஞ்சம் கலங்குமாறு செய்யும் தன்மையதாம். ஏதின் மாக்கள் - அயல் தன்மையராய பிறர்-

தலைவனுக்குப் பாங்காயினார் கேட்கும்வண்ணம் தலைவனுடைய பரத்தைமை யொழுக்கத்தைச் சுட்டி இழித்துப் பாட அது பொறாத பரத்தையர் பழிதூற்றுகின்றனர். அவர்களுக்குத் தலைவி செயலால் நேர்ந்த அழிவு என்னையோ என இரண்டாவது பழங்கருத்திற்கு ஏற்பவும் கொள்ளலாம்.

இளம்பூரணர் இப் பாடலை, தலைவன் ஒழுகலாறு புறத்தார்க்குப் புலனாகி அலர் தூற்றப்பட்ட இடத்துத் தோழியைச் செவிலி வினாவியது என்பர் (தொல். களவு. 25). செவிலி தானே கூறியது என்பர் நச்சினார்க்கினியர் (தொல். களவு. 24).

90. குறிஞ்சி — தோழி கூற்று

எற்றோ வாழி தோழி முற்றுபு
கறிவளர் அடுக்கத்து இரவில் முழங்கிய
மங்குல் மாமழை வீழ்ந்தெனப் பொங்குமயிர்க்
கலைதொட இழுக்கிய பூநாறு பலவுக்கனி
வரைஇழி அருவி உண்துறைத் தரூஉம்
குன்ற நாடன் கேண்மை
மென்தோள் சாய்த்தும் சால்புஈன் றன்றே.

— மதுரை எழுத்தாளன் சேந்தன் பூதன்

வரைவு நீட்டித்தவழி ஆற்றாளாகிய தலைமகட்குத் தலைமகன் சிறைப்புறமாகத் தோழி கூறியது.

தோழி! சூல் நன்கு முற்றுப் பெற்று மிளகு வளர்கின்ற மலைப்பக்கத்தில் இராப்பொழுதிலே முழங்கிய மேகத்தினின்று பெரிய மழை விழுந்ததாக, மலையினின்றும் இறங்கிவரும் அருவியானது மிகுந்த மயிரையுடைய ஆண் குரங்கு தொட்டதனால் விழுந்ததான பொலிவு பெற்ற மணம்வீசும் பலாக்கனியை மக்கள் நீருண்ணுகின்ற துறையினிடத்துக் கொண்டுவந்து தரும் குன்றுகள் உள்ள நாட்டையுடைய தலைவனது நட்பு நினது மென்மையான தோள்களை மெலியச்செய்தும் அமைதியைத் தந்தது. இஃது எத்தன்மைத்தோ?

கறி - மிளகு; அடுக்கம் - மலை; மங்குல் - மேகம்; கலை - ஆண்குரங்கு; பூ - பொலிவு, சால்பு - அமைதி; உண்துறை - ஊரார் நீர் உண்ணுகின்ற துறை.

இரவில் பெய்த மழையினாலுண்டான அருவி கலை தொட விழுந்த பலாப் பழத்தைப் பலரும் நீராடும் துறையிடத்துக் கொண்டுதரும் நாடன் என்றதனால், தலைவன் களவில் கூடிய செய்தியை ஊரார் அறிந்து பழி கூறுவாராயினர் என்னும் உட் கருத்தை வெளிப்படுத்தலால் இஃது இறைச்சிப் பொருளாம்.

இப்பாடலின் உட்பொருளை நச்சினார்க்கினியர் பின்வருமாறு விளக்குகிறார்: "கேண்மை தோளை மெலிவித்ததாயினும் எனக்கு அமைதியைத் தந்தது. யான் ஆற்றவும், தான் மெலிதல் பொருந்தாதது எத்தன்மைத்தெனத் தலைவி தோழிக்குக் கூறிய வாறு காண்க. கலை தீண்ட வழுக்கி வீழ்ந்த பழத்தை அருவி பின்னும் பயன்படுத்தும் நாடன் என்றதனாலே அலரால் நம் சுற்றத்திற் பிரிந்தேமாயினும் அவன் நம்மை வரைந்துகொண்டு இல்லறம் செய்வித்துப் பயன்படுத்துவன் என்பதாம்" (தொல். பொருளியல், 9.).

91. மருதம் — தலைவி கூற்று

அரில்பவர்ப் பிரம்பின் வரிப்புற விளைகனி
குண்டுநீர் இலஞ்சிக் கெண்டை கதூஉம்
தண்துறை ஊரன் பெண்டினை ஆயின்
பலஆ குகநின் நெஞ்சில் படரே
ஓவாது ஈயும் மாரி வண்கைக்
கடும்பகட்டு யானை நெடுந்தேர் அஞ்சி
கொன்முனை இரவுஊர் போலச்
சிலஆ குகநீ துஞ்சும் நாளே.

— ஔவையார்

பரத்தையர்மாட்டுப் பிரிந்த தலைமகன் வாயில் வேண்டிப் புக்கு வழித் தன் வரைத்தன்றி அவன் வரைத்தாகித் தன் நெஞ்சு நெகிழ்ந்துழித் தலைமகள் அதனை நெருங்கிச் சொல்லியது. பரத்தையர் பிரிந்து வந்தவழி வேறுபட்ட கிழத்தியைத் தோழி கூறியதூஉம் ஆம்.

நெஞ்சே! ஒன்றோடொன்று பின்னிக்கொண்டு வளர்கின்ற பிரப்பங் கொடியின் புறத்தே வரிகளைக் கொண்ட கனிந்த பழத்தை ஆழமான நீரையுடைய குளத்தில் உள்ள கெண்டைகள் கவ்வுதற்கு இடமாகிய தண்ணிய நீர்த்துறைகளையுடைய தலை

வனுக்குரிய மனைவியாக நீ இருப்பாயாயின், நின் உள்ளத்தில் துன்பமும் பலவாக ஆகுக. எப்பொழுதும் ஒழியாது கொடுக்கும் மேகம் போன்ற கைவண்மையுடைய கையினையும் விரைந்த செலவினையுமுடைய யானைப்படையினையும் நீண்ட தேர்ப்படையினையும் கொண்டுள்ள அதியமான் அஞ்சியினது அச்சத்தைச் செய்யும் இரவினையுடைய ஊரில் உள்ளாரைப்போல நீ தூங்கும் நாள்கள் சிலவாகுக.

பெண்டினை என்பது கற்புக்கடம் பூண்ட நிலையினைக் குறித்தது. தலைவன் செய் கொடுமையை மறந்து ஏற்பினும், மீண்டும் அவன் பிரிய, அதனால் துன்பங்கள் பல உளவாகும் எனத் தோழி சுட்டிக் கூறயவாறாயிற்று.

அரில் - பிணக்கு; ஒன்றுடன் ஒன்று பின்னிப் படர்தல்; பவர் - பிரப்பங் கொடி. கதூஉம் - கதுவும்; அஞ்சி - அதியமான் அஞ்சி. போர்க்களம் அடுத்த ஊரினர் அச்சத்தால் இரவில் தூங்காமை போல இவளும் இரவில் தூங்காதவளாயினாள் என்பதாம்.

நிலத்தில் படர்ந்துள்ள பிரம்பின் கனியை நீரில் வாழும் கெண்டை கவ்வும் என்பது உயர்குடிப்பிறந்தானாகிய தலைவன் தன் மனை நீத்துத் தானே சென்று அடைந்து பரத்தையர் வசமாயினான் என்னும் உட்குறிப்பை வெளிப்படுத்தலின் இறைச்சிப் பொருளாம்.

92. நெய்தல் — தலைவி கூற்று

ஞாயிறு பட்ட அகல்வாய் வானத்து
அளிய தாமே கொடுஞ்சிறைப் பறவை
இறைஉற ஓங்கிய நெறிஅயல் மராஅத்த
பிள்ளை உள்வாய்ச் செரீஇய
இரைகொண் டமையின் விரையுமால் செலவே.

— தாமோதரன்

காமம் மிக்க கழிபடர்கிளவியால் பொழுது கண்டு சொல்லியது.

பகலவன் மறைந்த அகன்ற இடம் பொருந்திய ஆகாயத்தில் வளைந்த சிறகுகளைக் கொண்ட பறவைகள் தாம் தங்குவதற்கு ஏற்றபடி உயர்ந்ததும் வழியின் பக்கத்தில் வளர்ந்ததுமான கடப்ப மரத்திலுள்ள கூட்டில் இருக்கும் தம் குஞ்சுகளின் உள்வாயில் செருகுவதற்காக இரையைத் தம் அலகுகளில் எடுத்துக் கொண்டமையினால் விரைந்து செல்லுகின்றன. அப் பறவைகள் இரங்கத் தக்கன.

மாலை நேரம் வந்தமையால் காமநோய் மிகப்பெற்று ஆற்றாது அவலமுறுதல் பெறப்படும்.

மாலையில் பறவைகள் குஞ்சுகளுக்குரிய இரையுடன் விரைந்து பறந்து செல்லுதலைக் கண்ட தலைவி தானும் தலைவனுட னிருந்து இல்லறம் ஆற்றிக் குழந்தைப் பேறு பெற்று மகிழ்வதற் கில்லையே என்னும் ஏக்கத்தை வெளிப்படுத்துதலின் இஃது இறைச்சிப் பொருளாம்.

ஞாயிறு படுதல் - சூரியன் மறைதல்; இறையுறல் - தங்குதல்; செரீஇய - செருகும் பொருட்டாக, நுழைப்பதற்காக; பருகி என்பது பரீஇ (நாலடி. 228) என வருவதுபோல் செருகி என்பது செரீஇ என வந்தது; பிள்ளை - பறவையின் இளமைப்பெயர். இறை உற ஓங்கிய மராஅம், நெறி அயல் மராஅம் எனக் கூட்டுக.

மாலைக் காலத்திலே பிரிந்து உறையும் பெண்டிரின் காம நோயை மிகுதிசெய்ய விலங்கு பறவை முதலியன தூண்டும் ஏதுவாய் அமைதலைக் கவிஞர் மிகுத்துப் பாடுதல் மரபு. 'மாலை மலரும் இந்நோய்' என்னும் திருக்குறள் உரைக்குப் பரிமேலழகர், "தத்தம் துணையை உள்ளி வந்து சேரும் விலங்குகளையும் மக்களையும் கண்டு தான் அக் காலத்தில் நுகர்ந்த இன்பம் நினைந்து ஆற்றாமை மிகுதிபற்றி மாலை மலரும் என்றும் கூறினாள்" எனத் தரும் விளக்கமும் இங்குக் கருதத்தக்கது.

நச்சினார்க்கினியர், இப் பாடலில் இரங்கல் நிமித்தம் என்னும் உரிப்பொருள் வந்தது (தொல். அகத். 14) என்றும், தலைவிக்குக் காமம் சிறந்து தோன்றினமையின் கூற்று நிகழ்ந்தது (தொல். களவு. 20) என்றும் கருத்துரைப்பர்.

93. மருதம் — தலைவி கூற்று

நல்நலம் தொலைய நலம்மிகச் சாஅய்
இன்உயிர் கழியினும் உரையல் அவர் நமக்கு
அன்னையும் அத்தனும் அல்லரோ தோழி
புலவியஃது எவனோ அன்பிலங் கடையே.

— அள்ளூர் நன்முல்லையார்

வாயிலாகப் புக்க தோழிக்கு வாயில் மறுத்தது.

தோழி! நம்முடைய நல்ல பெண்மை நலம் கெடவும் உடலழகு மிகவும் மெலிந்து போகவும் எல்லாவற்றினும் இனிய நம் உயிர் நீங்குமாயினும் அவர்மாட்டுப் பரிவுரை பகராதே. அத் தலைவர் நமக்குத் தாயும் தந்தையும் அல்லரோ? அன்பு என்பது இல்லாவிடத்துப் புலவி உண்டாவது எதன் பொருட்டு?

எனவே, தலைவன் என்பால் மனைவி என்னும் கருத்துடன் அன்பு செய்தான் அல்லன் என்பதாம்.

நலம் - ஒன்று பெண்மைநலம்; மற்றொன்று அழகு: அன்னையும் அத்தனும் - தாயும் தந்தையும்; புலவி - பிணக்கு.

இளம்பூரணர், தலைவனைத் தலைவி காய்தற்கண் வந்தது (தொல். கற்பு.6) என இப் பாடலை எடுத்துக் காட்டுவர். நச்சினார்க்கினியர் இப் பாடலின் கருத்து விளக்கமே தருகின்றார்: தோழி தலைவனை அன்பிலை கொடியை எனக் கேட்ட தலைவன் முனிந்த உள்ளத்தனாங் கொல்லோ என ஐயுற்று அவனது குறிப்பை அறிதல் வேண்டியும், தனது நெஞ்சில் நிறைந்த ஊடல் கையிகந்து துணையாகியவழி இஃது அவற்கு எவனாங்கொல் என அஞ்சிய வழியும் தலைவி தலைவனோடு அயன்மையுடைய சொல்லைத் தோற்றுவிக்கவும் பெறும் என்ற நூற்பாக் கருத்திற்கு இயைய 'நன்னலம்......கடையே' இதனுள், அவரை அன்பிலை கொடியை என்னாதி, அன்பில்வழி நின் புலவி அவரை என் செய்யும்? அவர் நமக்கு இன்றியமையாத எமர் அல்லரோ என இருவகையானும் அயன்மை கூறியவாறு காண்க (தொல். கற்பு. 18) என்று பாடற்குரிய உட்கருத்தையும் உரைப்பர்.

இப் பாடலின் ஈற்றயலடி 'அன்னையும் அத்தனும் அல்லரோ தோழி' என நாற்சீரடியாய் நிற்றலின் நிலைமண்டில ஆசிரியம் ஆகும். சங்க அகப்பாடலில் நேரிசை ஆசிரியப்பாவே மிகுந்து காணப்படுதலைக் கருதி இங்குத் தோழி என்னும் நாலாம் சீர் இல்லாத பாடம் கொண்டனர் சிலர். ஆயினும் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் மேற்கோளாக எடுத்தாளும்போது நாற்சீரடியாகவே கொண்டுள்ளனர்.

94. முல்லை — தலைவி கூற்று

பெருந்தண் மாரிப் பேதைப் பித்திகத்து
அரும்பே முன்னும் மிகச்சிவந் தனவே
யானே மருள்வென் தோழி பானாள்
இன்னும் தமியர் கேட்பின் பெயர்த்தும்
என்ஆ குவர்கொல் பிரிந்திசி னோரே
அருவி மாமலைத் தத்தக்
கருவி மாமழைச் சிலைதரும் குரலே.

— கதக்கண்ணன்

'பருவங்கண்டு ஆற்றாள்' எனக் கவன்ற தோழிக்கு, 'ஆற்றுவல்' என்பதுபடத் தலைமகள் சொல்லியது.

தோழி! பெரிய குளிர்ச்சியையுடைய மழைக்காலத்துக்கு உரிய அறிவின்மையையுடைய பிச்சியின் அரும்புகள் மாரிக் காலத்திற்கு முன்பேயே மிகுதியும் சிவந்து காணப்படுகின்றன. அதனைக் கண்டு யானோ கார்ப்பருவம் என்று மயங்குவேன்? மயங்கேன். ஆயினும் பிரிந்து என்பால் இப்பொழுதும் மீண்டு வாராது தனித்திருப்பவராகிய தலைவர், அருவியானது பெரிய மலையிலே தத்தி விழும்படி தொகுதியாகிய பெரிய மேகங்கள் முழங்கும் ஓசையை நடு இரவில் கேட்பாராயின், பிரிவுத் துயரால் மேலும் என்ன நிலையினை எய்துவரோ?

அதனை எண்ணி யான் மயங்குவேன் என்பதாம்.

தலைவர் இடிமுழக்கம் கேட்டுச் சென்ற வினைமுடியாமல் மீள்வரோ என்னும் கருத்துப் புலப்படத் தலைவியின் உரை உள்ளது. 'யானே மருள்வென்' என்றமையால் யான் வருந்தாமல் ஆற்றியிருப்பேன் என்னும் குறிப்பினைப் புலப்படுத்தும்.

பித்திகம் - பிச்சி; மாரிக்காலத்தில் அரும்பி மலரும் தகையது. பானாள் - நடுஇரவு, நடுநாள்; சிலைதருதல் - ஒலித்தல்; மழைக் குரல் - மேகத்தினது இடிமுழக்கம்.

95. குறிஞ்சி — தலைவன் கூற்று

மால்வரை இழிதரும் தூவெள் அருவி
கல்முகைத் ததும்பும் பல்மலர்ச் சாரற்
சிறுகுடிக் குறவன் பெருந்தோட் குறுமகள்
நீர்ஓ ரன்ன சாயல்
தீஓ ரன்னஎன் உரன்அவித் தன்றே.

— கபிலர்

தலைமகன் பாங்கற்கு உரைத்தது.

தோழா! பெரிய மலையிலிருந்து விழுகின்ற தூய வெண்மையான அருவி நீர் பாறை வெடிப்புகளில் நிரம்பி வழிந்து ஒலிக்கும் பல மலரையுடைய சாரலில் உள்ள சிற்றூரில் வாழும் குறவனுடைய பெரிய தோள்களைக் கொண்ட சிறுமகளின் நீரைப் போன்ற மென்மை தீயை ஒத்த என் வன்மையை அழியச் செய்தது.

இதனால் குறுமகள் ஒருத்தியிடம் தாம் கொண்ட காமமே இத்தகு அழிவிற்குக் காரணமாயிற்று என்பதனை வெளிப்படுத்த வாறாம்.

இழிதருதல் - இறங்கிவருதல், விழுதல்; சாய்ல் - மென்மை; உரன் - வலிமை. சிறுகுடி - பெருந்தோள், நீர் - நீ என்பன சொல்முரண் பொருள் முரண் நயம் பயப்பன.

96. குறிஞ்சி — தலைவி கூற்று

அருவி வேங்கைப் பெருமலை நாடற்கு
யான்எவன் செய்கோ என்றி யான்அது
நகைஎன உணரேன் ஆயின்
என்ஆ குவைகொல் நன்னுதல் நீயே.

— அள்ளூர் நன்முல்லை

தலைமகனை இயற்பழித்துத் தெருட்டும் தோழிக்குத் தலைமகள் இயற்படச் சொல்லியது.

நல்ல நெற்றியை உடையவளே! நீ அருவியை அடுத்துள்ள வேங்கை மரங்களையுடைய பெரிய மலைநாட்டுக்கு உரிய தலைவனுக்கு யான் என்ன செய்வேன் என்று கூறி, அவனுடைய இயல்பைப் பழித்தாய். யான் நீ அங்ஙனம் கூறியதனை நகையாடிக் கூறியதாகக் கருதவில்லையானால் நீ என்ன பாடு படுவை!

ஆதலால் நீ தலைவன் இயல்பைப் பழித்துரைத்தல் தகாது என்பதாம்.

அருவி தன்னை அடுத்து வளரும் வேங்கை மரத்திற்கு உதவிக் காப்பதுபோலத் தலைவனும் தன் துணையாகச் சேர்ந்த என்னைக் காப்பான் என்பது உட்குறிப்பு. இதனால் தலைவி தன் தலைவன் இயல்புடையன் எனச் சுட்டியவா றாயிற்று. இஃது இறைச்சிப் பொருளாம்.

இப் பாடலுக்குத் தலைவன் வரைதலை விரும்பி இயற்பழித்த தோழிக்குத் தலைவி இயற்பட மொழிந்தது (தொல். களவு. 16) என நச்சினார்க்கினியர் கருத்துரைப்பர்.

97. நெய்தல் — தலைவி கூற்று

யானே ஈண்டை யேனே என்நலன்
ஆனா நோயொடு கான லஃதே
துறைவன் தம்மூ ரானே
மறைஅலர் ஆகி மன்றத் தஃதே.

— வெண்பூதி

வரைவு நீட்டித்தவழித் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

தோழி! யான் இவ்விடத்தில் உள்ளேன். என் பெண்மை நலனோ என்பாலிருந்து நீங்கி அமையாத வருத்தத்தொடு கடற்கரைச் சோலையிடத்துள்ளது. துறைவன் ஆகிய தலைவனோ தம் ஊரிடத்து உள்ளான். எம்மிடையே நிகழ்ந்த மறையாகிய களவு பலர் அறியும்படி பழிமொழியாய் ஊர்ப் பொதுவிடத்தும் ஆயிற்று.

என் நலன் கொண்ட தலைவர் துன்பமின்றியிருத்தற்குரிய வரைதலைச் செய்ய முற்பட்டிலர் என்பதாம்.

நெய்தலினிடத்து நிகழ்ந்த இயற்கைப் புணர்ச்சியாதலின் நலன் கானலஃது என்று குறித்தாள்.

ஆனாநோய் - அமையாத வருத்தம்; மறை - களவினால் பெற்ற தொடர்பு; துறைவன் - நெய்தல் நிலத்தலைவன்; அலர் - பலர் அறிந்து கூறும் பழிச்சொல். கானலஃதே, மன்றத்தஃதே என ஈரிடத்தும் ஆய்தம் விரிக்கும்வழி விரித்தல்.

'என்னலன்' என்னும் பாடத்திற்கான காரணம் முன்பே (குறுந். 54) காட்டப்பெற்றது. அஃது ஈண்டும் பொருந்தும்.

சேணிடையின்றி இட்டிதாகப் பிரிந்துழித் தலைவி இரங்கிக் கூறியது என்பர் நச்சினார்க்கினியர் (தொல். களவு. 20). மேலும் அவர், 'தம்மூரான்' என்றலின் ஓதல் முதலிய பிரிவின்றி அணித்தாய வழிப் பிரிந்தானென அவ்விரண்டும் பயப்பக் கூறியவாறு காண்க என்று உட்பொருள் உரைப்பர்.

98. முல்லை — தலைவி கூற்று

இன்னள் ஆயினள் நன்னுதல் என்றுஅவர்த்
துன்னச் சென்று செப்புநர்ப் பெறினே
நன்றுமன் வாழி தோழிநம் படப்பை
நீர்வார் பைம்புதற் கலித்த
மாரிப் பீரத்து அலர்சில கொண்டே.

— கோக்குளமுற்றன்

பருவங்கண்டு அழிந்த தலைமகள் தோழிக்கு உரைத்தது.

தோழி! நம் தோட்டத்தில் உள்ள நீர் ஒழுகுகின்ற பசிய புதலைப் பற்றுக்கோடாகக் கொண்டு தழைத்து நன்கு படர்ந் துள்ள மழைக்காலத்து மலரும் பீர்க்கின் மலர்களுள் சிலவற்றைக் கொண்டு, தலைவரை நெருங்கச் சென்று, நல்ல நெற்றியை யுடைய தலைவி இப் பீர்க்கமலர் போன்ற நிறமுடைய பசலை

படரப் பெற்றாள் என்று அவரிடம் சொல்லுவாரைப் பெற்றால் மிகவும் நன்மை தருவதாயிருக்கும்.

நான் பசலை படர்ந்து துன்பமுறுதலை அத் தலைவர் அறிந்திலர். அறிவாராயின் விரைந்தெய்த வாராமல் இருப்பரோ? என் துயர நிலையைச் சென்று உணர்த்துவார் உளராயின் அவர் மீண்டுவரத் தூண்டுதலாயிருக்கும் என்பதாம்.

பீரம் - பீர்க்கு; மழைக்காலத்தில் மலர்வது; படப்பை - வீட்டிற்கு அருகில் உள்ள தோட்டம். புதல் - புதர்ச்செடி; துன்னல் - நெருங்குதல்; கலித்தல் - தழைத்தல்.

இயற்கைப்புணர்ச்சிப்பின் நிகழ்ந்தனவற்றைத் தோழிக்கு நாணத்தால் உரையாளாயின் நோயட வருந்துவாள் தலைவி (தொல். களவு. 21) என இளம்பூரணர் இப் பாடலை எடுத்துக் காட்டுவர். நச்சினார்க்கினியர், தன்னைத் தலைவன் காணா வகை நாணால் மறைந்தொழுகினும் தன் பொலிவழிவினைத் தலைவனுக்குக் காட்டல் வேண்டுதற் கண்ணும் தலைவிக்குக் கூற்று நிகழும்; இன்னளாயினள் என்றது தற்காட்டுறுதல்; செப்புநர்ப்பெறினே என்பதனாற் களவாயிற்று. கற்பிற்கு வாயில்கள் செப்புவார் உளராதலின் என்று விளக்கம் தருகிறார் (தொல்.களவு. 20).

99. முல்லை — தலைவன் கூற்று

உள்ளினென் அல்லெனோ யானே உள்ளி
நினைந்தனென் அல்லெனோ பெரிதே நினைந்து
மருண்டனென் அல்லெனோ உலகத்துப் பண்பே
நீடிய மரத்த கோடுதோய் மலிர்நிறை
இறைத்துணச் சென்றுஅற் றாஅங்கு
அனைப்பெருங் காமம் ஈண்டுகடைக் கொளவே.

— ஔவையார்

பொருள் முற்றிப் புகுந்த தலைமகன், 'எம்மை நினைத்தும் அறிதிரோ? என்ற தோழிக்குச் சொல்லியது.

யான் உம்மை இடையறாது உள்ளத்தால் கருதினேன் அல்லெனோ? கருதிய யான் மீட்டும் மீட்டும் நினைவு கூர்ந்தேனும் அல்லெனோ? நினைந்த யான் முயற்சி முற்றுப்பெற வேண்டும் என்னும் உலகத்தின் இயல்பை எண்ணி மருட்சியுற்றேன் அல்லெனோ? உயர்ந்து வளர்ந்த மரத்தினது கொம்புகளைத் தொட்டுப் பெருகியோடும் வெள்ளம் நெடுகிலும் சென்று படிப்

படியாகக் குறைந்து முடிவில் கையால் இறைத்து உண்ணும் அளவிற்குச் சென்று இல்லாமற் போவது போல யான் கொண்ட வெள்ளப் பெருக்கொத்த காம நோயும் இங்குத் திரும்பத் தொடங்கியதும் கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைந்து நும்மை அடைந்ததும் முடிவுற்றது.

யான் பிரியினும் உங்களை இடையறாது எப்பொழுதும் நினைத்திருந்தேன் எனத் தோழிக்குக் கூறலாயினன்.

உள்ளுதல் - உள்ளத்தே நினைதல்; நினைத்தல் - மீட்டும் மீட்டும் எண்ணுதல்; கடைக்கொள்ளுதல் - முடிவடைதல்; தீர்தல். உலகத்துப் பண்பு - உலகப் பண்பாவது இல்லறம் நிகழ்த்தப் பொருள் தேடி வரவேண்டும் என்பது. மலிர் நிறை - மிகுந்த வெள்ளம்.

இளம்பூரணர், இளமையும் காமமும் நோக்காது பெயர்ந்தீர் என்று கூறி இதற்குக் காரணம் என்னை எனத் தலைவன் வந்துழிக் கேளிர் நிகழ்த்தும் நிகழ்ச்சிக்கண் தலைவனுக்குக் கூற்று நிகழ்ந்தது என்பர் (தொல். கற்பு. 5) நச்சினார்க்கினியர், மீண்டு வந்த தலைவனை இடைச்சுரத்து மறந்தீரோ எனத் தலைவி வினாயவழி அவனுக்குக் கூற்று நிகழ்ந்தது (தொல். கற்பு. 5) என்பர்.

100. குறிஞ்சி — தலைவன் கூற்று

அருவிப் பரப்பின் ஐவனம் வித்திப்
பருஇலைக் குளவியொடு பசுமரல் கட்கும்
காந்தள் வேலிச் சிறுகுடி பசிப்பின்
கடுங்கண் வேழத்துக் கோடுநொடுத்து உண்ணும்
வல்வில் ஓரி கொல்லிக் குடவரைப்
பாவையின் மடவந் தனளே
மணத்தற்கு அரிய பணைப்பெருந் தோளே.

— கபிலர்

பாங்கற்கு உரைத்தது. அல்ல குறிப்பட்டு மீள்கின்றான் தன் நெஞ்சிற்குச் சொல்லியதூஉம் ஆம்.

அருவி பாயும் பரந்த நிலப்பரப்பில் ஐவனம் என்னும் மலை நெல்லை விதைத்து, அந் நெல்லுடன் இடையே முளைக்கும் பருத்த இலையையுடைய காட்டுமல்லிகையையும் பச்சை நிற முடைய மரலையும் களையாகப் பறித்து எறியும் காந்தளையே இயற்கை வேலியாகவுடைய இச் சிறுகுடியி லுள்ளோர்

உணவின்றிப் பசியுடையராகத் தறுகண்மையுடைய யானை யின் கொம்புகளை விற்று வரும் விலையால் உணவுப் பொருள் பெற்று உண்ணுமவர்கள் இருக்கும் வலிய வில்லையுடைய ஓரி வள்ளலது கொல்லி மலையின் மேல்புறத்தில் உள்ள பாவையைப் போல் யான் கண்டு காமுற்ற மகளும் எனக்கு மடப்பம்வரச் செய் தாள். அவளுடைய மூங்கிலைப் போன்ற பெரிய தோள்கள் தழுவுவதற்கு அரியனவாம்.

என் உள்ளம் கவர்ந்த தலைவி கிட்டுதற்கு அரியளாயுள்ளாள் என்பதாம்.

பாங்கற்குத் தன்னிலை உரைத்தலாயின் பாங்கனை விளித்துக் கூறுவதாகவும், அல்லகுறிப்பட்டவன் தன் நெஞ்சிற்குச் சொல்லுதலாகவும் இப் பாடலை அமைத்துக் கொள்ளலாம். இவ்விருவகையான கருத்தும் இப் பாடலுக்குப் பொருத்தமாம்.

ஐவனம் - மலைநெல்; மரல் - ஒருவகைக் கற்றாழை; குளவி - காட்டுமல்லிகை; ஓரி - ஏழு வள்ளல்களுள் ஒருவன்; கொல்லிமலை இவனுக்கு உரியது. 'வல்வில் ஓரி' எனப் புறநானூற்றில் இவன் சிறப்பிக்கப் படுகிறான் (புறம். 152). குடவரை - மலையின் மேல் பக்கம். கொல்விப் பாவை தன்னைக் கண்டாரை அறிவு மயங்கச் செய்யுமாறு போலத் தலைவியும் எனக்கு மய்க்கம் தரலானாள் என்பதாம்.

101. குறிஞ்சி — தலைவன் கூற்று

விரிதிரைப் பெருங்கடல் வளைஇய உலகமும்
அரிதுபெறு சிறப்பின் புத்தேள் நாடும்
இரண்டும் தூக்கின் சீர்சா லாவே
பூப்போல் உண்கண் பொன்போல் மேனி
மாண்வரி அல்குல் குறுமகள்
தோள்மாறு படூஉம் வைகலொடு எமக்கே.

— பரூஉ மோவாய்ப் பதுமன்

தலைமகட்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது. வலித்த நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியதூஉம் ஆம்.

விரிந்த அலைகளையுடைய பெரிய கடலால் சூழப்பெற்ற பூவுலக இன்பமும் அரிதின் முயன்று பெறுவதான சிறப்புடைய தேவருலக இன்பமும் ஆகிய இரண்டையும், தாமரைப் பூப்போன்ற மைதீட்டப்பெற்ற கண்களையும் பொன்போன்ற நிறத்தினையும் மாட்சிமைப்பட்ட வரிபடைத்த அல்குலையும் உடைய இளந் தலைவியது தோளோடு தோள் கலந்து மாறுபடத் தழுவும் நாளில்

பெறும் இன்பத்தையும் ஒருங்குவைத்து ஆராய்ந்தால் இவளிடம் பெறுகின்ற இன்பத்திற்கு அவை ஒப்பாகா.

பொருள் வலித்த நெஞ்சிற்குத் தலைவி தரும் இன்பம் குறித்துச் செலவினைத் தவிர்ந்தானாகவும் கொள்ளலாம்.

புத்தேள் உலகம் - தேவருலகம்; தூக்குதல் - ஆராய்தல்; தோள் மாறுபடுதல் - தோளோடு தோள் பின்னிப் பிணைதல்; அதாவது வலத்தோளோடு இடத்தோளும் இடத்தோளோடு வலத்தோளும் இணையத் தழுவுதலாம்.

பொருளினும் காமம் வலியுடைத்தென உட்கொண்ட வழித் தலைவனுக்குக் கூற்று நிகழ்ந்தது என எடுத்துக்காட்டுவர் இளம் பூரணர் (தொல். கற்பு. 5). நச்சினார்க்கினியர், 'கரணத்தின் அமைந்து முடிந்தகாலை நெஞ்சு தளையவிழ்ந்த புணர்ச்சிக்கண்' இல்லொழுக்கமும் புணர்ச்சியும் முதலியவற்றால் தலைவன் மகிழ்ந்தது என்று உரைப்பர் (தொல். கற்பு. 5; செய்யு.187).

102. நெய்தல் — தலைவி கூற்று

உள்ளின் உள்ளம் வேமே உள்ளாது
இருப்பின்எம் அளவைத்து அன்றே வருத்தி
வான்தோய் வற்றே காமம்
சான்றோர் அல்லர்யாம் மரீஇ யோரே.

— ஔவையார்

'ஆற்றாள்' எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி, 'யான் யாங்ஙனம் ஆற்றுவேன்' என்றது.

தோழி! நம் தலைவரை நினைந்தால் அவர் பிரிவை எண்ணிய எம் உள்ளம் வேகத் தொடங்கிவிடும். நினையாமல் இருப்போம் என்று கருதினாலோ அவ்வாறு இருப்பதும் நம் ஆற்றலளவிற்கு உட்பட்டதன்று. காமநோய் என்னை வருந்தச் செய்து வானத்தைச் சென்று தோய்வது போன்ற பெருக்கமுடைய தாகின்றது. எம்மால் மருவப்பட்ட தலைவரோ வாராதிருத்த லால் சால்புடையாரல்லர்.

தலைவர் தம் சொற்படி வாராமையினால் காமநோய் வருத்தம் ஆற்றேனாயினேன் என்று வெளிப்படுத்தலாயினள் என்க.

சான்றோர் இயல்புகளாக அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்னும் ஐந்து பண்புகளையும் கூறுவர் திருவள்ளுவர் (குறள். 983). எல்லாவற்றிற்கும் முதலாகிய அன்பு இருப்பின் இங்ஙனம் செய்யார் என்பதாம். அன்பு கொண்டு மீளாமையின் சான்றோர் அல்லர் என உரைத்தாள்.

வேம் - வேகும்; மரீஇயோர் - சேர்ந்தவர், கூடியவர். இப் பாட்டை வருத்தமிகுதியால் தலைவனை வழிபடுதலை மறுத்துத் தலைவி கூறியது என்பர் நச்சினார்க்கினியர் (தொல். களவு. 20).

103. நெய்தல் — தலைவி கூற்று

கடும்புனல் தொடுத்த நடுங்குஅயிர் அள்ளல்
கவிர்இதழ் அன்ன தூவிச் செவ்வாய்
இரைதேர் நாரைக்கு எவ்வம் ஆகத்
தூஉம் துவலைத் துயர்கூர் வாடையும்
வாரார் போல்வர்நம் காதலர்
வாழேன் போல்வல் தோழி யானே.

— வாயிலான் தேவன்

பருவங்கண்டு அழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

தோழி, மிகுந்த நீரினால் திரட்டப்பெற்ற காற்றுக்கும் அசைகின்ற நுண்ணிய மணலையுடைய சேற்றினிடத்து இரையாகிய மீனைத் தேடித் திரியும் முள்ளுமுருங்கை மலரின் இதழைப் போன்ற மென்மை வாய்ந்த இறகினையும் சிவந்த அலகையுமுடைய நாரைக்குத் துன்பம் உண்டாகுமாறு தூவுகின்ற நீர்த் துளிகளையுடைய பிரிந்தார்க்குத் துன்பம் செய்யும் வாடைக் காலத்திலும் நம் காதலர் வாரார். அதனால் யானும் இனி உயிர் வாழ்வேன் அல்லேன்.

தலைவன் வாடைக் காலத்திலும் வாராமையால் தலைவி துன்பம் மிகப் பெற்றமை வெளிப்படுத்தவாறாம்.

கடும்புனல் - மிகுந்த நீர், பெருவெள்ளம்; தொடுத்தல் - சேர்த்தல்; அயிர் - நுண்மணல்; கவிர் - முள்ளு முருக்கு; தூவி இறகு; எவ்வம் - துன்பம்; துவலை - துளி.

அள்ளல் சேற்றுநிலம். அந் நிலத்திற்கு ஏற்றது நுண்மணலாகிய அயிர் என்பதே. நுண்மணலின் வீழ்ச்சி அங்கே இரை தேடும் நாரைக்குத் துன்பம் தருவதாய் அமையும். எனவே ஈண்டு நடுங்குஅயிர் என்ற பாடமே கொள்ளப்பெற்றது.

104. பாலை — தலைவி கூற்று

அம்ம வாழி தோழி காதலர்
நூல்அறு முத்தின் தண்சிதர் உறைப்பத்
தாளித் தண்பவர் நாள்ஆ மேயும்
பனிபடு நாளே பிரிந்தனர்
பிரியும் நாளும் பலஆ குவவே.

— காவன் முல்லைப் பூதனார்

பிரிவின் ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குக் கூறியது. 'சிறிய உள்ளிப் பெரிய மறக்க வேண்டாவோ' என்ற தோழிக்குக் கிழத்தி கூறியதூஉம் ஆம்.

தோழி! ஒன்று சொல்லுவன் கேட்பாயாக. நம் காதலர், நூல் அற்றுப்போன முத்துவடத்திலிருந்து உதிர்கின்ற முத்துகளைப் போலக் குளிர்ந்த பனித்துளிகள் துளிக்கத் தாளியறுகின் கொடியை விடியற்காலத்திலே பசுக்கள் மேயும் பனி விழுகின்ற காலத்திலே பிரிந்தனர். அங்ஙனம் அவர் பிரிந்து சென்ற நாள் களும் பலவாகின்றன.

இங்ஙனம் ஆகவும் நான் எங்ஙனம் ஆற்றியிருப்பேன்.

பிரிந்து செல்லக்கூடாத பனி பெய்யும் நாளில் பிரிந்து சென்றதோடு மட்டுமின்றிப் பல நாள்களாகியும் மீண்டு வந்தாரில்லை எனத் தன் பிரிவாற்றாமையைத் தலைமகள் வெளிப் படுத்தவாறாம்.

இரண்டாவது கருத்து வருமாறு: அத் தலைவரின் தனிமையை நினைந்து இப் பிரியும் கொடுமையை மறப்பாமாக என்று தோழி கூறவே, அவர் பிரிந்த காலமும் ஏற்புடையதன்று; வரவேண்டிக் குறித்த காலமும் கடந்துவிட்டதே. இனி எங்ஙனம் மறந்து வாழ்வது என்று தலைவி உரைத்தாளாயினள் என்க.

சிதர் - பனித்துளி; பவர் - கொடி; தாளி ஒருவகை அறுகு.

பாலைக்குப் பின்பனிப் பருவம் வந்தது: தலைவி தோழிக்கு உரைத்தது என நச்சினார்க்கினியர் இப் பாடலின் கருத்தை விளக்குவர் (தொல். அகத். 10).

105. குறிஞ்சி — தலைவி கூற்று

புனவன் துடவைப் பொன்போல் சிறுதினைக்
கடிஉண் கடவுட்கு இட்ட சில்குரல்
அறியாது உண்ட மஞ்ஞை ஆடுமகள்
வெறிஉறு வனப்பின் வெய்துற்று நடுங்கும்
சூர்மலை நாடன் கேண்மை
நீர்மலி கண்ணொடு நினைப்புஆ கின்றே.

— நக்கீரர்

வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

புனத்தையுடையவனான குறவன் தன் தோட்டத்திலே விளைந்த பொன்னைப் போன்ற சிறுதினையில் புதிது உண்ணும்

கடவுளுக்குப் படைய்லாக விட்டிருந்த சிலவாகிய கதிரைத் தெரியாது உண்ட மயில், தேவராட்டி வெறியுற்று ஆடுகின்ற அழகைப்போல வெம்மையுற்று, நடுங்குதற்கு இடமாகிய தெய்வங்கள் வாழும் மலை நாட்டையுடையவனது நட்பானது நீர்நிறைந்த கண்களோடு நாம் அவனை நினைப்பதற்குக் காரணமாய் விட்டது.

தலைவன் வரைந்து கொள்ளாமையினாலே அவனை நினைந்து துன்புறுகின்றேன் என்பதாம்.

புனவன் - புனத்தையுடைய குறவன்; கடி உண் கடவுள் - புதிது உண்ணும் கடவுள்; மஞ்ஞை - மயில்; ஆடுமகள் - வெறியாடுபவள், தேவராட்டி; சூர் - தெய்வம், அச்சம்.

செழுங்குரல் என்பது செழிப்பான ஒற்றைக் கதிரையே குறிப்பதாகும். தெய்வத்துக்கென ஒன்றுக்கு மேற்பட்ட சில கதிர்களை யாவது ஒதுக்குவதே மரபாகும். பல கதிர்களிடையே மேயும் மயில் ஒதுக்கிய கதிர்களை அறியாது உண்ணுதலும் இயல்பு. சில் குரல் என்ற பாடமே ஏடுகளில் மிகுந்து காணப்படுகிறது. எனவே இப் பாடமே ஈண்டுக் கொள்ளப்பெற்றது.

வரைவிடை வைத்த காலத்து வருத்தமுற்றவழித் தலைவி தானே கூறியது என்பதற்கு இப் பாடலை எடுத்துக்காட்டுவர் இளம்பூரணர் (தொல். களவு. 22).

106. குறிஞ்சி — தலைவி கூற்று

புல்வீழ் இற்றிக் கல்இவர் வெள்வேர்
வரைஇழி அருவியின் தோன்றும் நாடன்
தீதுஇல் நெஞ்சத்துக் கிளவி நம்வயின்
வந்தன்று வாழி தோழி நாமும்
நெய்பெய் தீயின் எதிர்கொண்டு
தாம்மணந் தனையம்என விடுகம் தூதே.

— கபிலர்

தலைமகன் தூது கண்டு கிழத்தி தோழிக்குக் கூறியது.

தோழி! மலையிலுள்ள கற்களில் பற்றிப் படர்கின்ற புல்லிய் விழுதையுடைய இற்றி மரத்தினது வெள்ளிய வேரானது மலையிலிருந்து விழுகின்ற அருவியைப் போலத் தோன்றும் நாட்டையுடைய தலைவன் குற்றம் இல்லாத நெஞ்சினால் எண்ணிக் கூறிய சொற்களை உரைக்கும் தூது நம்மிடத்து வந்துள்ளது. நாமும் நெய்யைப் பெய்த தீயைப்போல அத் தூதை ஏற்றுக்கொண்டு

தாம் எம்முடன் கூடிக் கலந்த காலத்திருந்த அன்புடைய ராயினேம் என்று கூறித் தூது விடுவோம் என்றவாறு.

தலைவனை நாம் ஏற்றுக் கொள்வோம் என்னும் கருத்துப் புலப்படுத்தவாறாம்.

வெள்வேர் அருவி போலத் தோன்றும் என்றமையால் தீதுள நெஞ்சினனானவன் தீதில் நெஞ்சனாய் வெளிக்குத் தோற்றமளிக் கிறான் என்பது உள்ளுறை உவமம். இற்றி - இற்றிமரம்; இச்சி என இக் காலத்தார் வழங்குவர். இவர்தல் - படர்தல்; நெய்பெய் தீ - நெய் சொரிந்து வழிபடும் வேள்வித்தீ.

தலைவி தோழியையும் உளப்படுத்தி நாம் என்று தன்மைப் பன்மையாகக் கூறியதற்கு ஒப்ப தலைவனையும் தாம் எனப் படர்க்கைப் பன்மையாய்ச் சுட்டினாள். ஏடுகளிலும் தாம் என்னும் பாடமே மிக்குக் காணப்படுகிறது. மணந்தனையம் என்னும் மகிழ்வுச் செய்தியைக் குறிப்பதால் உவப்பினால் உயர்த்திப் பேசினாள் என்று கொள்வதும் தகும். எனவே இப் பாடம் கொள்ளப் பெற்றது.

இப் பாட்டைத் தூது முனிவின்மை வந்தது என்பர் இளம் பூரணர் (தொல். களவு. 21). அது கற்பிற்கல்லது ஏலாது; என்னை? களவினுள் நெய்பெய் தீயின் வந்து எதிர்கொள்ளலாகாமையின் என்பர் பேராசிரியர் (தொல். மெய்ப்பாடு. 23). நச்சினார்க்கினியர், தூது கண்டு தலைவி கூறியது என்பர் (தொல். கற்பு. 6).

---

107. மருதம் — தலைவி கூற்று

குவிஇணர்த் தோன்றி ஒண்பூ அன்ன
தொகுசெந் நெற்றிக் கணம்கொள் சேவல்
நள்இருள் யாமத்து இல்எலி பார்க்கும்
பிள்ளை வெருகிற்கு அல்குஇரை ஆகிக்
கடுநவைப் படீஇயரோ நீயே நெடுநீர்
யாணர் ஊரனொடு வதிந்த
ஏம இன்துயில் எடுப்பி யோயே.

— மதுரைக் கண்ணனார்

பொருள் முற்றிவந்த தலைமகனை உடைய கிழத்தி காமம்மிக்க கழிபடர் கிளவியால் கூறியது.

குவிந்த கொத்துகளையுடைய தோன்றியினது ஒள்ளிய பூவைப் போன்ற தொக்க சிவந்த கொண்டையையுடைய பெட்டைகளின் கூட்டம் கொண்ட சேவலே! ஆழமான நீரினால்

உண்டாகும் புதுவருவாயையுடைய ஊரனுடன் தங்கி இன்பம் தருகின்ற இனிதான உறக்கத்தினின்றும் என்னை எழுப்பினை. நீ செறிந்த இருளையுடைய இரவின் நடுயாமத்தில் வீட்டில் உள்ள எலிகளை உண்ணும்பொருட்டு ஆராயும் காட்டுப்பூனையின் குட்டிக்குச் சில நாள் இட்டுவைத்து உண்பதற்குரிய உணவாகி மிக்க துன்பத்தை அடைவாயாக.

பொழுது புலர்ந்தமையின் இனிய துயிலுக்கு இடையூறாயிற்று என்பதாம். காம மயக்கத்தால் சேவலின்மேல் குறையுளதாகக் கூறலின் இது காமம் மிக்க கழிபடர் கிளவி ஆயிற்று.

கணம் - திரள், கூட்டம்; இல்எலி - வீட்டு எலி; வெருகு காட்டுப்பூனை; ஏமம் - இன்பம்.

108. முல்லை — தலைவி கூற்று

மழைவிளை யாடும் குன்றுசேர் சிறுகுடிக்
கறவை கன்றுவயின் படரப் புறவில்
பாசிலை முல்லை ஆசில் வான்பூச்
செவ்வான் செவ்வி கொண்டன்று
உய்யேன் போல்வல் தோழி யானே.

— வாயிலான் தேவன்

பருவங் கண்டு அழிந்த தலைமகள் தோழிக்குக் கூறியது.

தோழி! மேகங்கள் தவழ்ந்து விளையாடுவதற்கு உரிய இடமாகிய மலையைச் சேர்ந்த சிற்றூரினிடத்து மேயும் பொருட்டாக வெளிச் சென்றிருந்த பசுக்கள் தம் கன்றுகளிடத்து நினைந்து செல்ல, முல்லை நிலத்தில் பசிய இலைகளையுடைய முல்லையினது குற்றமில்லா வெண்ணிற மலர்கள் செக்கர் வானத்தின் அழகைக் கொண்டன. இவற்றைக் காணும் யான் இனி உயிர் வாழேன்.

கார்ப்பருவம் தொடங்கிவிட்டது; அதனால் தலைவன் பிரிவைப் பொறுத்து இனி ஆற்றியிரேன் என்பதாம்.

கறவை - பாற்பசு; முல்லை நிலம் செந்நிறமாயிருத்தலின் அது செவ்வானுக்கும் பூத்த முல்லை உடுக்களுக்கும் உவமை யாயின. கறவை கன்றை நினைத்து மீள்தலும் முல்லை பூத்தலும் மாலையில் நிகழ்வன ஆதலின் தலைவி அவற்றைச் சுட்டிக் கூறுவாளாயினள் என்க.

கறவை கன்றை நினைந்து வரும் என்றது தலைவன் தன்னை நினைந்து குறித்த காலத்தில் வாராமையைச் சுட்டியும், முல்லை

செவ்வி கொள்ளும் வேளையில்தான் செவ்வி கெட்டு நிற்றலையும் நினைவுறுத்துதலினால் இஃது இறைச்சிப் பொருளாம்.

109. நெய்தல் — தோழி கூற்று

முட்கால் இறவின் முடங்குபுறப் பெருங்கிளை
புணரி இகுதிரை தரூஉம் துறைவன்
புணரிய இருந்த ஞான்றும்
இன்னது மன்னோ நல்நுதற் கவினே.

— நம்பிகுட்டுவன்

தலைவன் சிறைப்புறமாகத் தலைவி வேறுபாடு கண்ட புறத்தார் அலர் கூறுகின்றமை தோன்றத் தோழி தலைமகட்குக் கூறுவாளாய்க் கூறியது.

முள்ளை வெளியே காட்டும் வளைந்த முதுகுப் புறத்தையுடைய இறால்மீனின் பெரிய இனத்தைக் கடலில் உடைந்து வரும் அலையானது கொண்டு வந்து தருதற்கு இடமாகிய துறையையுடைய தலைவன் புணரும் பொருட்டாக அவன் குறியிடம் வந்திருந்தபோதிலும், இவளுடைய நல்ல நெற்றியினது அழகு அலரால் வெளிச் செல்ல இயலாமையால் இத்தகைய வேறுபாடு உடையதாயிற்று. இஃது இரங்குதற்கு உரியதாம்.

தலைவன் வரைந்து கொள்ளுதல் ஒன்றே இவளது வேறுபாட்டை நீக்கும் எனச் சிறைப்புறத்தானாகிய தலைவன் உணரும் வண்ணம் தோழி எடுத்துரைப்பதாயினள்.

காலுதல் - தோன்றுதல், வெளிப்படுதல்; முடங்குதல் - வளைதல்; இகுதல் - உடைதல்; ஞான்று - பொழுது. முட்கால் இறவு, முடங்குபுற இறவு என்க.

110. முல்லை — தலைவி கூற்று

வாரார் ஆயினும் வரினும் அவர்நமக்கு
யாரா கியரோ தோழி நீர
நீலப் பைம்போது உளரிப் புதல
பீலி ஒண்பொறிக் கருவிளை ஆட்டி
நுண்முள் ஈங்கைச் செவ்அரும்பு ஊழ்த்த
வண்ணத் துய்மலர் உதிரத் தண்ணென்று
இன்னாது எறிதரும் வாடையொடு
என்ஆ யினள்கொல் என்னா தோரே.

— கிள்ளிமங்கலங்கிழார்

பருவங்கண்டு அழிந்த தலைமகள் தோழிக்கு உரைத்தது. தலைமகனைக் கொடுமை கூறித் தலைமகளைத் தோழி வற்புறீஇயதும் ஆம்.

தோழி! நீரிடத்துள்ளதாகிய நீலத்தினது மலரும் செவ்வியை யுடைய போதினை மலரச் செய்து, புதலிடத்தேயுள்ள மயிற் பீலியின் ஒளிபடைத்த கண்ணைப் போன்ற கருவிளை மலரை அலைத்து, நுண்ணிய முள்ளையுடைய ஈங்கையாகிய இண்டஞ் செடியினது செவ்விய அரும்புகள் மலர்ந்த நிறத்தோடு துய்யை யும் உடைய மலர்கள் உதிரும்படி குளிர்ச்சியுடையதாய்த் துன்பம் தருவதாய் வீசும் வாடைக்காற்றினால் எத்தன்மையள் ஆயினளோ என்று நினைந்து கவலையுறாத தலைவர் வாரா விடினும் வந்தாலும் நமக்கு எத்தகைய உறவினராவர்?

அவர் வருவதற்குமுன் இறந்து படுவேன் என்பதாம்.

தலைவி கூற்றாகிய இதனை இரண்டாவது கருத்தின்படி தோழி கூற்றாகவும் கொண்டு கூறலாம். அவ்வாறு கொள்ளும் போது தோழி உரிய காலத்தில் வாராத தலைவர் இனி வந்தும் பயன் இல்லை என்று சுட்டிக் கூறுவதாக அமையும்.

நீலமலர் - குவளைப்பூ; ஆட்டுதல் - அசைத்தல்; பீலி - மயிற்பீலி; கருவிளை - காக்கணம் பூ; ஈங்கை - இண்டஞ்செடி; ஊழ்த்தல் - மலர்தல்; துய் - பஞ்சுத்துய்; உளர்தல் - உதிர்தல்; வண்ணம் - நிறம், அழகு; எறிதல் - வீசுதல்; வாடை - வடக்கி லிருந்து வரும் குளிர்காற்று.

வாடையொடு என்பது வாடையான் என ஆன் உருபின் பொருளில் வந்தது.

பருவங் கண்டு அழிந்த தலைவி கூறியது என இப் பாட லுக்குக் கருத்துரைப்பர் நச்சினார்க்கினியர் (தொல். கற்பு 6).

111. குறிஞ்சி — தோழி கூற்று

மென்தோள் நெகிழ்த்த செல்லல் வேலன்
வென்றி நெடுவேள் என்னும் அன்னையும்
அதுஎன உணரும் ஆயின் ஆயிடைக்
கூழை இரும்பிடிக் கைகரந் தன்ன
கேழ்இருந் துறுகல் கெழுமலை நாடன்
வல்லே வருக தோழிநம்
இல்லோர் பெருநகை காணிய சிறிதே.

— தீன்மிதிநாகன்

வரைவு நீட்டித்தவழித் தலைமகள் வேறுபாடு கண்டு வெறி யெடுப்பக் கருதிய தாயது நிலைமை தலைமகட்குச் சொல்லு வாளாய்த் தலைவன் சிறைப்புறமாகத் தோழி கூறியது.

தோழி! நின்னுடைய மெல்லிய தோள்களை மெலியச் செய்ததாகிய துன்பம் கண்டு வெறியாட்டாளனாகிய வேலன் வெற்றியையுடைய நெடிய முருகக் கடவுளால் நேர்ந்தது என்று சொல்லுவான். நம் அன்னையும் அம் முருகக் கடவுளால் நேர்ந்தது என்று உண்மையாய் உணர்வாளாயின் அப்பொழுது குறிய கரிய பெண்யானை கைமறைத்துக் காணப் பட்டாற் போன்ற கருநிறத்தையுடைய குண்டுக்கல் பொருந்திய மலை நாட்டையுடைய தலைவன் நம் வீட்டிலுள்ளாரது பெரிய நகைப் பிற்கு இடமான செய்கையைக் காணும் பொருட்டுச் சிறிது நேரம் இங்கே விரைந்து வருவானாக.

தலைவன் விரைய வாராவிடின் அன்னை வெறியாட்டெடுக்க முற்படுவாள் என்னும் கருத்தைப் புலப்படுத்தல் காணலாம். சிறைப் புறத்தானாகிய தலைவனுக்கு அவன் வரைந்து கொள் ளாமையால் வந்த துன்ப நிகழ்ச்சியைக் குறிப்பிட்டு அவன் விரைந்து வரைந்து கொள்ளவேண்டும் என்பதனை உணர வைத்தாளாயிற்று.

செல்லல் - துன்பம்; வேலன் - முருக பூசை செய்பவனாகிய வெறியாட்டாளன்; நெடுவேள் - முருகன்; கூழை - குறுகிய தன்மை, சிறுமை; பிடி - பெண்யானை; இல்லோர் - வீட்டினி லுள்ளோர், குடும்பத்தார்; வல் - விரைவு.

112. குறிஞ்சி — தலைவி கூற்று

கௌவை அஞ்சின் காமம் எய்க்கும்
எள்அற விடினே உள்ளது நாணே
பெருங்களிறு வாங்க முரிந்துநிலம் படாஅ
நாருடை ஒசியல் அற்றே.
கண்டிசின் தோழிஅவர் உண்டஎன் நலனே.

— ஆலத்தூர் கிழார்

வரைவு நீட்டித்தவழித் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

தோழி! பிறர் கூறும் பழிமொழிக்கு அஞ்சினோமானால் நம்பாலுள்ள காமம் மெலிவடைந்து போகும். பிறர் பழித்தல் இல்லாகும்படி அக் காமத்தை விட்டோமானால் என்பால்

இருப்பது நாண்மட்டுமே யாகும். அவர் நுகர்ந்த என் பெண்மை நலம் பெரிய ஆண்யானையானது உண்ணும் பொருட்டாக வளைக்கவும் முரிந்து நிலத்திற் படாது பட்டையையுடைய ஒடிந்த கிளையைப் போன்றதாய் உள்ளது. இதனைக் காண்பாயாக.

ஊராரின் அலருக்கு அஞ்சிக் காமத்தை மிகுதியும் வெளிப் படுத்தாதிருக்கின்றேன் என்பதாம். கௌவையும் நாணமும் காமத்தைப் பெருகவிடாமல் தடைசெய்கின்றன என்பது புலப் படுத்தப்பட்டுள்ளது.

கௌவை - பிறர் கூறும் பழிமொழி; எய்க்கும் - மெலிவுறும்; ஒசியல் - முரிந்தும் ஒட்டிக்கொண்டு ஊசலாடும் கிளையின் ஒடிந்த குறை.

ஒசியல் ஒடிபட்டு விழாமலும் முன்னை நிலையில் தழையாமலும் தொங்குதல் போலக் காமமும் நாணமும் ஒன்றற்கொன்று மறுதலையாதலின் ஒன்றைவிட்டு ஒன்றைப் பேண இயலாமையின் நலன் கெட நின்றமை புலப்படுத்தப் பெற்றது. நாரின் தொடர் பினால் கிளையில் தழைக்கும் தன்மை இருத்தல் போலத் தலைவன் உண்ட நலமும் அவன் வருகையால் வளரும் என்பதனையும் வெளிப்படுத்தி நிற்றலின் உள்ளுறை உவமமாம்.

தலைவனை வழிபடுதலை மறுத்த தலைவியே அவனை ஏற்றுக்கோடலை விரும்பியபோது கூறியது. இது நாணே உள்ளது; கற்புப்போம் என்றலின் மறுத்தெதிர் கோடலாம் என நச்சினார்க் கினியர் இப் பாட்டிற்குக் கருத்துரைப்பர் (தொல். களவு. 20).

113. மருதம் — தோழி கூற்று

ஊர்க்கும் அணித்தே பொய்கை பொய்கைக்குச்
சேய்த்தும் அன்றே சிறுகான் யாறே
இரைதேர் வெண்குருகு அல்லது யாவதும்
துன்னல் போகின்றால் பொழிலே யாம்எம்
கூழைக்கு எருமணம் கொணர்கம் சேறும்
ஆண்டும் வருகுவள் பெரும்பே தையே.

— மாதீர்த்தன்

பகற்குறி நேர்ந்த தலைமகற்குக் குறிப்பினாற் குறியிடம் பெயர்த்துச் சொல்லியது.

தலைவ! பொய்கை ஊருக்கு மிக அண்மையில் உள்ளது சிறிதான காட்டாறு அப் பொய்கைக்குத் தொலைவிடத்தது

அன்று; அதன் அண்மையிலேயே உள்ளது. அங்குள்ள சோலையோ பொய்கையிலும் ஆற்றிலும் இரை தேடித் திரியும் வெண்ணிற நாரையன்றி வேறு எவ்வுயிரும் அடைதலை ஒழிந்ததாயுள்ளது. நாங்கள் எங்கள் கூந்தலுக்குச் சூடும்பொருட்டுச் செங்குவளை மலரைக் கொய்துகொண்டு வருவதற்காக அங்கே போவோம். பெரிய பேதைமையினையுடைய தலைவியும் அவ்விடத்திற்கு வருவாள்.

எனவே நீயும் அங்கு வருக எனத் தலைமகனுக்குப் பகற்குறியிடம் சுட்டி உரைத்தவா றாயிற்று.

பொய்கை - ஊரார்க்குப் பயன்படுவதாகிய ஆழமான நீர்நிலை; இதனை ஊருணி என்பர். குருகு - நாரை; கூழை - கூந்தல்; எருமணம் - செங்குவளை, செங்கழுநீர்.

பகற்குறி நேர்ந்தது என இப் பாடலைக் காட்டுவர் இளம்பூரணர். நச்சினார்க்கினியர், பகற்குறி நேர்ந்து இடங்காட்டியது எனக் குறிப்பிடுவர் (தொல். களவு. 23).

114. நெய்தல் — தோழி கூற்று

நெய்தல் பரப்பில் பாவை கிடப்பி
நின்குறி வந்தனென் இயல்தேர்க் கொண்க
செல்கம் செலவியங் கொண்மோ அல்கலும்
ஆரல் அருந்த வயிற்ற
நாரை மிதிக்கும் என்மகள் நுதலே.

— பொன்னாகன்

இடத்துய்த்து நீங்கும் தோழி தலைமகற்குக் கூறியது.

நன்றாக இயற்றப்பெற்ற தேரையுடைய தலைவனே! நெய்தல் நிலத்திலே என் பாவையைக் கிடத்திவிட்டு நீ இருக்கும் இவ்விடத்திற்கு வந்தேன். இரவு வருதலும் ஆரல் மீனை அருந்திய வயிற்றையுடைய நாரைகள் என் மகளின் நெற்றியை மிதித்துவிடும். அதனால் யாம் போகின்றோம். தலைவியையும் அவ்விடத்திற்குப் போகும்படி நீயே ஏவுவாயாக.

தலைவியை எதிர்ப்பட்டுக் கூடி அளவளாவி விரைவில் விடுப்பாயாக என்பது கருத்து.

நெய்தற் பரப்பு - நெய்தல் நிலப் பரப்பு; நெய்தற்பூவின் பரப்பு என்றும் ஆம். பாவை - மகளிரின் விளையாட்டுப் பாவை; இதனைப் பஞ்சாய்ப் பாவை என்பர். வியங்கொள்ளல் - ஏவலை மேற்கொள்ளல்.

இப் பாடலைத் தலைமகள் குறை நயந்தமை தலைமகற்குக் கூறியது என்பர் இளம்பூரணர் (தொல். களவு. 24). நச்சினார்க்கினியர் இப் பாடலை எடுத்துக்காட்டி உரைக்கும் விளக்கம் வருமாறு: ஆயத்தின் நீங்கித் தன்னோடு நின்ற தலைவியைத் தலைவனோடு கூட்டவேண்டி அவளின் நீங்கித் தலைவனுக்கு இன்னுழி எதிர்ப்படுதி என உரைத்தவிடத்துப் பாங்கிக்குக் கூற்று நிகழ்ந்தது. 'வந்தனென்' என்றும் 'என்மகள்' என்றும் ஒருமை கூறிச் செல்கம் என்ற உளப்பாட்டுப் பன்மையால் தலைவி வரவும் கூறி இடத்துய்த்தவாறும் உணர்த்தினாள். 'செலவியங் கொண்மோ' என்றது நீயே அவளைப் போகவிடுவாய் என்றதாம் (தொல். களவு. 24).

115. குறிஞ்சி — தோழி கூற்று

பெருநன்று ஆற்றின் பேணாரும் உளரே
ஒருநன்று உடையள் ஆயினும் புரிமாண்டு
புலவி தீர அளிமதி இலைகவர்பு
ஆடுஅமை ஒழுகிய தண்நறுஞ் சாரல்
மென்நடை மரையா துஞ்சும்
நன்மலை நாட நின்அலது இலளே.

— கபிலர்

உடன்போக்கு ஒருப்படுத்து மீளும் தோழி தலைமகற்குக்கூறியது.

அசைகின்ற மூங்கில்கள் நீண்டு வளர்ந்திருக்கும் குளிர்ச்சியான நறுமணமுடைய மலைப்பக்கத்தில் மெல்லிய நடையையுடைய காட்டுப்பசு இலைகளைக் கவர்ந்து உண்டு அவ்வுண்ட மயக்கத்தாலே துயிலுதற்கு இடமாகிய நல்ல மலைநாட்டையுடைய தலைவ! பெரிய நன்மை தோன்றச் செய்தால் அவரைப் போற்றாதாரும் உள்ளனரோ? (எல்லோரும் போற்றுவர்.) அங்ஙனமன்றி இத் தலைவி சிறிய நன்மையை உடையவளாய் இருக்கும் காலத்திலும் விருப்பம் மிகுந்தனையாய் ஒருகால் நின்னொடு மாறுபடினும் இவளுடைய பிணக்கம் நீங்கும்வண்ணம் பாதுகாப்பாயாக. இவள் நின்னையன்றி வேறு எத்தகைய பற்றுக்கோடும் இல்லாதவள்.

இவளிடம் இன்று போல என்றும் அன்பு வைத்து வாழ்க என்பதாம்.

மரையா தனக்குப் பயன்படாத மூங்கில் உள்ள சாரலாயினும் தனக்குப் பயன்படும் தழைகளைத் தேடி உண்டு அவ்விடத்து அன்புவைத்துத் துயிலுகின்றன. அதுபோல உனக்குப் பயன்

படாத மூப்பு நிலையிலும் நின்பாலுள்ள அவள் அன்பு கண்டு இன்புற்று என்றும் அன்பு பாராட்டி ஒழுகுக என்னும் பொருள் தருதலின் இஃது இறைச்சிப் பொருளாம்.

நன்று - நன்மை, உபகாரம்; புரிமாண்டு - விருப்பம் மாட்சிமைப்பட்டு; புலவி - பிணக்கு; நின் அலது இலள் என்றது பெற்றோரையும் உற்றாரையும் விடுத்து உன்னையே தனக்குப் பற்றுக்கோடாகக் கொண்டவள் என்பதாம்.

இப்பாடலைத் தலைவன் ஒருவழித் தணக்கும்வழிப் பாங்கி ஓம்படை கூறியது என இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் (தொல் களவு. 24) உரைப்பர்.

116. குறிஞ்சி — தலைவன் கூற்று

யான்நயந்து உறைவோள் தேம்பாய் கூந்தல்
வளம்கெழு சோழர் உறந்தைப் பெருந்துறை
நுண்மணல் அறல்வார்ந் தன்ன
நல்நெறி யவ்வே நறுந்தண் ணியவே.

— இளங்கீரன்

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கும் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

நெஞ்சே! என்னால் விரும்பப் பெற்று என்னுடன் வந்து தங்கும் தலைவியினது வண்டுகள் தாவுமாறு நறுமணத்துடன் விளங்கும் கூந்தல், சோழர்களது உறையூரில் உள்ள பெரிய காவிரிப் பெருந்துறையிடத்தே நுண்ணிய கருமணல் நீண்டு படிந்தாற் போன்ற நல்ல நெறிப்பையுடையன; நறுமணமும் குளிர்ச்சியும் உடையன.

இயற்கைப் புணர்ச்சியில் கூடி மகிழ்ந்த தலைமகன் அவளுடைய கூந்தலின் இயல்பினைப் பாராட்டி நெஞ்சிற்குக் கூறும்முறையில் உரைக்கின்றான்.

தேம் - வண்டு, தேன்; சூடியுள்ள பூவிலிருந்து தேன் சொரியும் கூந்தல் என்றும் ஆம். உறந்தைப் பெருந்துறை - உறையூரை அடுத்த காவிரிப் பெருந்துறை. நெறிப்பு - நீரோட்டத்தினால் படிப்படியாக மணலில் தோன்றும் சுவடு; வார்தல் - நீள்தல். நல் நெறியவ்வே என்றவிடத்து வகர ஒற்று விரித்தல் விகாரத்தால் வந்தது.

117. நெய்தல் — தோழி கூற்று

மாரி ஆம்பல் அன்ன கொக்கின்
பார்வல் அஞ்சிய பருவரல் ஈர்ஞெண்டு
கண்டல் வேர்அளைச் செலீஇயர் அண்டர்
கயிறுஅரி எருத்தின் கதழும் துறைவன்
வாராது அமையினும் அமைக
சிறியவும் உளஈண்டு விலைஞர்கை வளையே.

— குன்றியனார்

வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகட்குத் தோழி சொல்லியது.

தோழி! மாரிக் காலத்துக் காணும் ஆம்பல் மலரைப் போன்ற தோற்றமுடைய கொக்கினது பார்வையைக் கண்டு அஞ்சிய ஈரமான உடம்பினையுடைய நண்டு தாழையின் வேரிடையேயுள்ள வளைக்குள் செல்லும் பொருட்டாக, இடையரால் கட்டப்பெற்ற கயிற்றை அறுத்துச் செல்லும் எருதைப் போல, விரைந்து செல்வதற்கு இடமாகிய கடற்துறையையுடைய தலைவன் இங்கே வாராது அவனூரில் இருப்பானாயினும் இருக்க. அவன் வாராமையினால் உடல் மெலிவுற்று நின் கைகளிலுள்ள வளைகளை இழப்பினும் மேனி மெலிவு புலப்படாமல் செறிப்பதற்குரிய விற்பார் தரும் சிறிய வளையல்களும் உள்ளன.

அவன் வாராமையால் உண்டான உடல் மெலிவை நாம் மறைத்து ஒழுகுவோம் என்றவாறு.

இத் தோழி கூற்றுத் தலைவன் சிறைப்புறத்தானாக அவன் கேட்கு மாற்றாற் கூறியது என்பதாம். இதன் பயன் அவன் விரைவில் மணந்துகொள்ள வேண்டும் என்பதாம்.

பார்வல் - பார்வை; பருவரல் - துன்பம். விலைஞர் - விலை கூறிப் பொருள்களை விற்பார். நாரையின் பார்வைக்கு அஞ்சி நண்டு வளையுள் புகுமாறு போல அலர் தூற்றுவார் பார்வைக்குப் பயந்து விரைவில் வரைந்து அவன் இல்லப் பாதுகாப்பில் புகுவோம் என்னும் குறிப்புடைமையின் இறைச்சிப் பொருளாம்.

118. நெய்தல் — தலைவி கூற்று

புள்ளும் மாவும் புலம்பொடு வதிய
நள்ளென வந்த நார்இல் மாலை
பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்
வருவீர் உளீரோ எனவும்
வாரார் தோழிநம் காத லோரே.

— நன்னாகையார்

வரைவு நீட்டித்தவழித் தலைமகள் பொழுதுகண்டு தோழிக்குச் சொல்லியது.

தோழி! பறவைகளும் விலங்குகளும் தனிமைத் துயருடன் தங்கும்படியாக நள் என்னும் ஓசை உண்டாகும்படி வந்த அன்பில்லாத மாலைக்காலத்தில் பலரும் புகுவதற்குரிய வீட்டுக் கடைவாயிலை அடைக்கும் பொருட்டாக வினாவுவாள் இன்னும் உள்ளே வருகின்றவர் இருக்கின்றீரோ என்று கூவிக் கேட்கவும் நம் தலைவர் வாராராயினர்.

தலைவர் மாலைப் பொழுதினும் வாராமை கண்டு இரங்கிக் கூறியவாறு.

'வாயில் அடையக் கடவுநர்' என்னும் பாடத்திற்கு வாயிலில் உள்ளாரை ஒருவரும் எஞ்சாமல் முற்றவும் ஆராய்வர் என்க.

வதிதல் - தங்குதல்; நார் - அன்பு; பலர்புகுவாயில் - விருந்தினராக வரும் பலரும் தடையின்றிப் புகும்பொருட்டுத் திறந்திருக்கும் அடையா வாயில்.

விருந்தினர் பிறர் வந்தபோதும் அவருடன் தலைவனும் வந்திலனே என்று தலைவி வருந்தியவாறாம். தலைவன் விருந்தொடு தலைவியின் இல்லத்தே வருதல் உண்டு என்பதனை,

'புகாஅக் காலை புக்குஎதிர்ப் பட்டுழிப்
பகாஅ விருந்தின் பகுதிக் கண்ணும்
வேளாண் எதிரும் விருந்தின் கண்ணும்'

எனத் தொல்காப்பியர் கூறுவது மெய்ப்பிக்கும் (தொல். களவு. 16).

119. குறிஞ்சி — தலைவன் கூற்று

சிறுவெள் அரவின் அவ்வரிக் குருளை
கான யானை அணங்கி யாஅங்கு
இளையள் முளைவாள் எயிற்றள்
வளையுடைக் கையள்எம் அணங்கி யோளே.

— சத்திநாதனார்

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கும் தலைமகன் பாங்கற்கு உரைத்தது.

பாங்கனே! இளமைப்பருவமுடையவளும் மூங்கில் முளை போன்ற ஒளிபடைத்த பற்களையுடையவளும் ஆகிய ஒருத்தி, சிறியதும் வெண்ணிறமுடையதுமான பாம்பின் அழகிய கோடுகளையுடைய குட்டியானது காட்டு யானையை வருத்தினாற் போல, எம்மை வருத்தமுறச் செய்தாள்.

இயற்கைப் புணர்ச்சியில் கூடிய தலைமகன் தன் நிலையைப் பாங்கனுக்கு எடுத்துரைப்பதாக இப் பாடல் அமைந்துள்ளது.

இளைய பாம்புக்குட்டி அடங்காது திரியும் காட்டு யானையைத் தீண்டி வருத்தியது போல இளையவளாகிய தலைவி பகைவரால் தோல்வியுறச் செய்ய முடியாத வீரம் படைத்த தலைவனை வருத்தினாள் என்பது. பாம்புக்குட்டி பல்லினால் துன்பம் விளைத்ததுபோலத் தலைவியும் தன் முறுவலினால் என்னை வருத்தினாள் என்பதாம்.

வெள்ளரவு பாம்பினத்தில் உயர்ந்ததாதலின் தலைவியும் உயர் குடிப்பிறப்பினள் என்பதனைச் சுட்டியவாறாம்.

120. குறிஞ்சி — தலைவன் கூற்று

இல்லோன் இன்பம் காமுற் றாஅங்கு
அரிதுவேட் டனையால் நெஞ்சே காதலி
நல்லள் ஆகுதல் அறிந்தாங்கு
அரியள் ஆகுதல் அறியா தோயே.

— பரணர்

அல்ல குறிப்பட்டு மீளும் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது. இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன் பிரிந்த வழிக் கலங்கியதூஉம் ஆம்.

நெஞ்சே! பொருள் இல்லாத வறுமையாளன் இன்பத்தை விரும்பினாற் போலப் பெறுதற்கரிய பொருளை நீ விரும்பினாய். நம் காதற்குரிய தலைவி நமக்கு நன்மை தருவாளாதலை மட்டும் தெரிந்தது போல நாம் வேண்டிய பொழுதெல்லாம் நமக்கு எளிதில் பெறுதற்கு அரியாளாதலையும் அறியாது போயினை.

தலைவி எளிதாய்ப் பெறுதற்கு அரியள் என்பதாம்.

அரிது என்பது தலைவிபால் பெறும் இன்பத்தை. அவளை அடையும் ஒருவழி மணந்து கொள்ளுதலே என்பதும் குறிப்பினால் பெறப்படும்.

இப் பாடலைக் குறிபிழைத்தவழித் தலைவன் உள்ளத்திற்குச் சொல்லியது என்பர் இளம்பூரணர் (தொல். களவு. 17); நச்சினார்க்கினியரோ, புணர்ந்து பிரிந்துழி அன்பு மிகுதியால் தான் மறைந்து அவளைக் காணுங்கால் சீறூரிடைக் கண்டு இனிக் கூடுதல் அரிது எனத் தலைவன் இரங்கியது என்பர் (தொல். களவு. 11).

121. குறிஞ்சி — தலைவி கூற்று

மெய்யோ வாழி தோழி சாரல்
மைபட் டன்ன மாமுக முசுக்கலை
ஆற்றப் பாயாத் தப்பல் ஏற்ற
கோட்டொடு போகி யாங்கு நாடன்
தான்குறி வாயாத் தப்பற்குத்
தாம்பசந் தனஎன் தடமென் தோளே.

— கபிலர்

இரவுக் குறிவரும் தலைமகன் செய்யும் குறி பிறிது ஒன்றனான் நிகழ்ந்து மற்று அவன் குறியை ஒத்தவழி, அவ் ஒப்புமையை மெய்ப்பொருளாக உணர்ந்து சென்று, ஆண்டு அவனைக் காணாது தலைமகள் மயங்கியவழி, பின்னர் அவன் வர வுணர்த்திய தோழிக்குத் தலைமகள் கூறியது.

தோழி! தலைவன் இப்பொழுது வந்ததாக நீ கூறியது உண்மைதானோ? மலைப் பக்கத்திலே மை பட்டாற் போன்ற கரிய முகத்தையுடைய் ஆண்குரங்கு தாங்கும் கிளை தெரிந்து பாயாத தவற்றின் பயனால் அக் குரங்கை ஏற்றுக்கொண்டு முரிந்த அக் கொம்பினிடத்துச் சென்றாற் போலத் தலைவன் குறியை வாய்ப்பச் செய்யாத தவற்றினால் என்னுடைய பரந்த மெல்லிய தோள்கள் பசலையை அடைந்தன.

முன்பு போலத் தலைவன் வந்தான் என்பது பிழையாது இருக்குமோ என்று கூறியவாறு. மெய்யேயாயின் அவன் வரவு உணர்த்திய நீ வாழ்வாயாக என்பதாம்.

முசு - முகம்மட்டும் கருநிறமுடைய குரங்கு வகை; கலை - ஆண்; தப்பல் - தவறு

இரவுக் குறிவரும் தலைவன் செய்யுங்குறி பிறிதொன்றனான் நிகழ்ந்து தலைவன் குறியை ஒத்தவழி அதனை மெய்யாக உணர்ந்து மயங்கியவழித் தலைவிக்குக் கூற்று நிகழ்ந்தது. கோடு ஆற்றப் பாயாது வேண்டியவாறு பாய்ந்து அதனை முரித்த முசுப் போல நாம் குறிபெறுங் காலத்து வாராது புள்தாமே வெறித் தியம்பும் துணையும் நீட்டித்துப் பின்பு வருதலின், குறிவாயாத் தப்பு அவன் மேலேற்றி, அதற்குத் தோள் பசந்தன என்று பின் ஒருநாள் அவன் வந்துழித் தோழியை நோக்கி இவ் வரவு மெய்யோ எனவே தன்வயின் உரிமையும் அவன்வயிற் பரத்தையும் பெற்றாம் என நச்சினார்க்கினியர் இப் பாடலை எடுத்துக்காட்டி விளக்கம் தருகிறார் (தொல். களவு. 20).

122. நெய்தல் — தலைவி கூற்று

பைங்காற் கொக்கின் புன்புறத் தன்ன
குண்டுநீர் ஆம்பலும் கூம்பின இனியே
வந்தன்று வாழியோ மாலை
ஒருதான் அன்றே கங்குலும் உடைத்தே.

— ஓரம்போகியார்

தலைமகள் பொழுது கண்டு அழிந்தது.

பசிய கால்களையுடைய கொக்கினது புல்லிய முதுகினைப் போன்ற ஆழமான நீர்நிலையில் வளர்ந்த ஆம்பல் மலர்களும் குவிந்தன. இப்பொழுது மாலைக் காலமும் வந்தது. அக் காலம் வாழ்வதாக. இங்ஙனம் வந்தது மாலைக் காலம் மட்டுமன்று; அதன் பின்வரும் யாமத்தையும் உடையது.

இனி நான் என் செய்வேன் என்பதாம். இராக் காலம் வந்து விட்டமையால் தான் பெருந்துன்பத்தினை அடைவேன் என்கிறாள் தலைவி.

ஆம்பல் மலர் மாலையில் குவிந்தன ஆதலின் குண்டுநீர் ஆம்பல் என்றாள். மாலை - இரவின் முதல் யாமம்; கங்குல் - இடையாமம். 'மாரி ஆம்பல் அன்ன கொக்கின்' என 117 ஆம் குறுந்தொகைப் பாடலிலும் கொக்கின் முதுகிற்கு ஆம்பல் சுட்டியமை கருதத்தக்கது.

123. நெய்தல் — தோழி கூற்று

இருள்திணிந் தன்ன ஈர்ந்தண் கொழுநிழல்
நிலவுக்குவித் தன்ன வெண்மணல் ஒருசிறைக்
கருங்கோட்டுப் புன்னைப் பூம்பொழில் புலம்ப
இன்னும் வாரார் வருஉம்
பல்மீன் வேட்டத்து என்னையர் திமிலே.

— ஐயூர் முடவன்

பகற்குறியிடத்து வந்த தலைமகனைக் காணாத தோழி அவன் சிறைப்புறத்தானாதல் அறிந்து தலைமகட்குச் சொல்லியது.

தோழி! இருள் ஓரிடத்தில் செறிந்தாற்போன்ற ஈரமும் குளிர்ச்சியும் கொண்ட கொழுமையான நிழலைக் கொண்டதும் நிலவுக் கதிர்களை ஓரிடத்தில் குவித்துவைத்தாற் போன்ற வெண்மணல் மேடிட்டுக் கிடப்பதும் ஆகிய கடற்கரையின் ஒரு பக்கத்திலே கரிய கிளைகளைக் கொண்ட புன்னை மரங்கள்

அடர்ந்திருக்கிற பூம்பொழிலில் தனிமைப்பட்டு வருந்துமாறு செய்தவராகிய தலைவர் இன்னும் வந்திலர். பல மீன்களையும் வேட்டையாடிக் கொண்டு கரையை நோக்கி வருபவரான என் தமையன்மார் படகுகள் இப்பொழுது வந்துவிடும்.

எனவே, தமையன்மார் வீடு திரும்பும் முன்பாக நாம் வீட்டிற்குத் திரும்பிப் போய்விடுவோம் என்பதாம். தலைவர் உடனடியாக வரின் நன்று என்பது குறிப்பு.

திணிதல் - செறிதல், நெருக்கமாயிருத்தல்; கொழுநிழல் - செழுமையான நிழல்; திமில் - படகு.

இப் பாடலை, ஒருவழித் தணத்தற்கண் தோழி தலைவிக்குக் கூறியது என எடுத்துக்காட்டுவர் இளம்பூரணர் (தொல். களவு. 24).

124. பாலை — தோழி கூற்று

உமணர்
சேர்ந்து கழிந்த மருங்கின் அகன்தலை
ஊர்பாழ்த் தன்ன ஓமைஅம் பெருங்காடு
இன்னா என்றிர் ஆயின்
இனியவோ பெரும தமியோர்க்கு மனையே.

— பாலை பாடிய பெருங்கடுங்கோ

புணர்ந்து உடன்போக நினைத்த தலைமகள் ஒழியப்போகலுற்ற தலைமகற்குத் தோழி சொல்லியது.

பெரும! உப்பு வாணிகர் பலர் கூடித் தங்கியிருந்து நீங்கிச் சென்ற பக்கத்தையும் விரிந்த இடத்தையும் உடைத்தான ஊர் பாழ்பட்டுக் கிடப்பது போன்ற தோற்றத்தையுடைய ஓமை மரங்கள் வளர்ந்த பெருங்காட்டு வழியானது செல்லுதற்குத் துன்பம் தருவது என்று சொன்னீர். ஆனால், தலைவரைப் பிரிந்து தனித்திருப்பவரான மகளிர்க்கு அவர்தம் வீடுகள் இனிமையாய் இருப்பதாகுமா?

பிரிவால் துன்புற்று வருந்தியிருப்பர் என்பதாம்.

தனித்திருத்தல் தலைவிக்குத் துன்பம் தருமாதலின் உடன் கொண்டு செல்க என வேண்டினாளாயிற்று. தலைவன் உடன் இருந்தால் காடும் இனியதாகும் என்பதனை எடுத்துக்கூறிய வாறாம்.

உமணர் - உப்பு வாணிகர்; பாழ்த்தல் - பாழ்பட்டுப் போதல்: ஓமை - உகாமரம்.

ஆசிரியப்பாவுள் ஐஞ்சீரடி வந்தது என யாப்பருங்கலக் காரிகையும் (யா. கா. ஒழிபு. 5) இலக்கண விளக்கமும் (745) கூறும். வீரசோழியத்தில், 'அடிமுதலிற் கூன் வந்த ஆசிரியம்' என்று கொள்வர். எனவே இப் பாடலில் தனிச் சொல்லைப் பிரித்தால், 'சேர்ந்து - ஊர்ப்பாழ்த்தன்ன' என எதுகை புலப்படுவதுடன் நாற்சீராதலும் விளக்கமாம்.

125. நெய்தல் — தலைவி கூற்று

இலங்குவளை நெகிழச் சாஅய் யானே
உளெனே வாழி தோழி சாரல்
தழைஅணி அல்குல் மகளி ருள்ளும்
விழவுமேம் பட்டஎன் நலனே பழவிறல்
பறைவலம் தப்பிய பைதல் நாரை
திரைதோய் வாங்குசினை இருக்கும்
தண்ணம் துறைவனொடு கண்மா றின்றே.

— அம்மூவன்

வரைவு நீட்டித்த இடத்துத் தலைமகள் தோழிக்குக் கூறுவாளாய்த் தலைவன் சிறைப்புறமாகச் சொல்லியது.

தோழி! மலைச்சாரலிடத்தே கொண்ட தழைய்ாலான ஆடையினையுடைய மகளிர் பலராவர். அவர்களுள்ளே விழாவைப் போலச் சிறப்புடன் முன்பு இலங்கிய என் பெண்மை நலமானது பழைய ஆற்றலையுடைய சிறகின் வன்மை தவறியதனாலே துன்பம் கொண்ட நாரையானது அலைகளைத் தோய்ந்தபடியே வளைந்து சாய்ந்திருக்கின்ற மரக்கிளையில் பறத்தற்கு இயலாது தங்கியிருக்கும் குளிர்ந்த கடற் துறைக்கு உரிய என் தலைவனோடே என்னைவிட்டு இடம் பெயர்ந்துள்ளது. அங்ஙனமாகவும் யான் மட்டும் விளங்குகின்ற வளை நெகிழும்படி மெலிந்து இன்னும் உயிருடன் வாழ்கின்றேன்.

தலைவன் விரைந்து வந்து வரைவு மேற்கொள்ளாவிடின் உயிர் தாங்கியிரேன் என்றபடி.

சாரல் - மலைப்பக்கம்; தழை - தழையினாலாய உடை; பறை - சிறகு; வலம் - வலிமை; பைதல் - துன்பம்; வாங்குசினை - வளைந்த மரக்கிளை; கண்மாறுதல் - இடம்பெயர்தல்; ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செல்லுதல். தண்ணம்

துறைவன் - குளிர்ந்த கடற்துறையையுடைய-தலைவன்; விறல் - மிடுக்கு; வலம் - வெற்றி.

பழைய சிறைவலிமை இல்லாத நாரை திரை தரும் இரையன்றி வேறு பெற இயலாத நிலையில் நீர் தோயும் கிளையில் இருக்கின்றது. அதுபோலத் தலைவியும் தன் பண்டை நலன் இழந்து தலைவன் தானே உளமிரங்கிச் செய்யும் தண்ணளியை எதிர்நோக்கியுள்ளாள் என்பது குறிப்பாய் உணர்த்தப்படுதலின் இஃது இறைச்சிப் பொருளாம்.

126. முல்லை — தலைவி கூற்று

இளமை பாரார் வளம்நசைஇச் சென்றோர்
இவணும் வாரார் எவண ரோஎனப்
பெயல்புறந் தந்த பூங்கொடி முல்லைத்
தொகுமுகை இலங்குஎயிறு ஆக
நகுமே தோழி நறுந்தண் காரே.

— ஒக்கூர் மாசாத்தி

பருவம் கண்டு அழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

தோழி! இளமையினது அருமையினை எண்ணிப் பாராதவராய்ப் பொருளை விரும்பி என்னைப் பிரிந்து சென்ற தலைவர் இவ்விடத்திற்கு இன்னும் மீண்டு வந்தாரில்லை; அவர் எவ்விடத்தில் உள்ளாரோ என்று கேட்பது போல நறிய தண்ணிய கார்கால மழையால் பாதுகாக்கப்பட்ட பூவையுடைய முல்லைக்கொடி தனது தொகுதியான அரும்புகளையே தன் விளங்குகின்ற பற்களாகக் கொண்டு எம்மைப் பார்த்துச் சிரிக்கும்.

கார்காலம் வந்தும் அவர் மீண்டுவரக் காணேன் என்பதாம்.

பெயலும் முல்லையும் கார்காலத்தைக் காட்டுவன. முகை - அரும்பு; எயிறு - பல்.

127. மருதம் — தோழி கூற்று

குருகுகொளக் குளித்த கெண்டை அயலது
உருகெழு தாமரை வால்முகை வெரூஉம்
கழனிஅம் படப்பைக் காஞ்சி ஊர
ஒருநின் பாணன் பொய்யன் ஆக
உள்ள பாணர் எல்லாம்
கள்வர் போல்வர்நின் அகன்றிசி னோர்க்கே.

— ஓரம்போகியார்

பாணன் வாயிலாகப் புக்கவழித் தலைமகற்குத் தோழி சொல்லியது.

நாரையால் பற்றிக் கொள்ளப்பட்டு அதன் வாயிலிருந்தும் தப்பி நீருள் குதித்து மறைந்த கெண்டைமீன் அதன் பின்பு பக்கத்துள்ளதாகிய வெண்ணிறமுள்ள தாமரையின் முகையினைக் கண்டு நாரை என அஞ்சும் வயற்பக்கங்களையுடைய காஞ்சி மரங்கள் நிறைந்த ஊரையுடைய தலைவனே! நின் பாணன் ஒருவன் பொய் பேசுபவன். ஆதலினாலே மற்றுமுள்ள பாணர் எல்லாரும் நின்னைப் பிரிந்து தனித்திருக்கும் மகளிருக்குப் பொய்யுரைக்கும் கள்வரைப் போலத் தோற்றுவர்.

நின் பாணன் உண்மை பேசுபவனல்லன்; பொய்யுரைப் பவனே என அந்த வாயிலை மறுத்தலைமக்கு ஏதுவும் கூறினா ளாயிற்று.

'நீ அகன்றிசினோர்க்கே' என்றும் பாடம். அகன்றிசினோர்க்கு என்பதுடன் பொருந்திவருவது 'நின் அகன்றிசினோர்க்கே' என்னும் முதற் பதிப்பாசிரியர் பாடமேயாதலின் அது கொள்ளப் பெற்றது.

குருகு - நாரை; கொக்கு என்றும் கொள்வர்; குளித்தல் - மூழ்குதல், மறைதல்; தாமரை - குருகு என்பதற்கு ஏற்ப வெண்டாமரை என்க. வால் - வெண்மை.

நின் அகன்றிசினோர் என்பதனால் தலைவன் மகளிர் பலருடன் தொடர்புடையான் என்பது பெறப்படும்.

குருகினால் துன்புற்ற கெண்டைமீன் அதன் பின் கொடுமை செய்யாத தாமரை முகையினையும் குருகு என அஞ்சினாற்போல நீ விடுத்த பாணனைப் பொய்யனாகக் கண்டு வெறுத்த மகளிர் பொய்யரல்லாத பிற பாணரையும் அத்தகையர் என வெறுத் தனர் என்னும் உட்குறிப்புத் தோற்றுவித்தலின் இஃது இறைச்சிப் பொருளாம்.

128. நெய்தல் — தலைவன் கூற்று

குணகடற் திரையது பறைதபு நாரை
திண்டேர்ப் பொறையன் தொண்டி முன்துறை
அயிரை ஆர்இரைக்கு அணவந் தாஅங்குச்
சேயள் அரியோட் படர்தி
நோயை நெஞ்சே நோய்ப்பா லோயே.

— பரணர்

அல்ல குறிப்பட்டு மீளும் தலைமகன் தன் நெஞ்சினை நெருங்கிச் சொல்லியது. உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன் கூறியதூஉம் ஆம்.

கீழைக்கடலின் அலைக்கு அருகிலுள்ளதாகிய சிறகுகளின் வலிமையை இழந்த நாரையானது திண்மையான தேரையுடைய சேரனது மேலைக் கடற்கரையில் அமைந்த தொண்டி என்னும கடற்றுறையில் உள்ள அயிரை மீனாகிய பெறுதற்கு அரிய உணவைப் பெறும்பொருட்டுத் தலையை மேலே எடுத்துப் பார்த் தாற்போல, நெடுந்தூரத்தில் உள்ளவளும் பெறுதற்கு அரியளு மாகிய தலைவியை நினைத்தாய். அதனால் துன்பத்திற்குக் காரணமான தீவினையுடையாய்.

தலைவியை இனி நாம் அடைவது அருமை என்பது குறிப் பித்தவாறாம்.

உணர்ப்புவயின் வாரா ஊடல்பற்றிய தலைவன் கூற்றாகக் கொள்ளும்போது இவள் ஊடலை நீக்கும் பழைய வலிமையை இழந்தேன்; இவளோ நெஞ்சால் சேயள். எனவே பெறுதற்கு அரியள் என்று சுட்டியதாகக் கொள்ளல்வேண்டும். எனவே, இஃது உள்ளுறை உவமமாம்.

பறை - சிறகு; தபுதல் - இழத்தல்; தொண்டி - மேலைக் கடற் கரையிலிருந்த ஒரு துறைமுகப்பட்டினம்; இது சேரமன்னர்க்கு உரியது. அணவருதல் - நிமிர்ந்து நோக்குதல்.

இப் பாட்டை அல்குறிப்பட்டுப் பெயர்ந்து செல்லும் தலைவன் தன் நெஞ்சினை நெருங்கிச் சொல்லியது என்பர் இறை யனார் களவியலுரைகாரர் (17). புணர்ந்து பிரிந்துழி அன்பு மிகுதியால் தான் மறைந்து அவள் காணுங்கால் ஆயத்திடைக் கண்டு, இனிக் கூடுதல் அரிது எனத் தலைவன் இரங்கியது என்பர் நச்சினார்க்கினியர் (தொல். களவு. 11).

129. குறிஞ்சி — தலைவன் கூற்று

எலுவ சிறுஅர் ஏமுறு நண்ப
புலவர் தோழ கேளாய் அத்தை
மாக்கடல் நடுவண் எண்நாள் பக்கத்துப்
பசுவெண் திங்கள் தோன்றி யாங்குக்
கதுப்புஅயல் விளங்கும் சிறுநுதல்
புதுக்கோள் யானையின் பிணித்தற்றால் எம்மே.

— கோப்பெருஞ்சோழன்

தலைமகன் பாங்கற்கு உரைத்தது.

எம் நண்பனே! இளைஞர் இன்புறுதற்குக் காரணமான நட்பினைச்செய்வோய்! அறிவுடையாருக்கு நண்பன் ஆகுபவனே! கேட்பாயாக. கரிய கடலின் நடுவில் எட்டாம் நாளுக்குரிய இளமையான வெள்ளிய பிறைச்சந்திரன் தோன்றியதைப்போல ஒரு பெண்ணின் கூந்தலுக்குப் பக்கத்தில் விளங்குகின்ற சிறிய நெற்றியானது புதிதாகப் பிடித்துக் கொள்ளப்பட்ட யானையைப் பிணிப்பதுபோல எம்மையும் தன்பால் பிணித்துக் கொண்டது.

அழகிய மகள் ஒருத்தி என் உள்ளத்தைக் கவர்ந்தாள் என்பதனைப் பாங்கனுக்குத் தலைவன் உரைக்கின்றான்.

எலுவன் - தோழன்; ஏமம் உறு என்பது ஏமுறு என்றாயிற்று. ஏமம் - இன்பம்; மா - கருமை; கதுப்பு - கூந்தல்; கூந்தலுக்குக் கடலும் நெற்றிக்கு எட்டாம் பிறைத்திங்களும் ஒப்பாயிற்று. புதுக்கோள் யானை - காட்டிலிருந்து புதிதாகப் பிடிக்கப்பட்ட யானை; பிணித்தல் - கவர்ந்து பற்றுதல். இப் பாட்டைத் தலைவன் பாங்கற்கு உற்றது உரைத்தது என இறையனார் அகப் பொருளுரையும்(3) இளம்பூரணர் உரையும் (தொல். களவு. 11) சுட்டும். பாங்கன் கேட்பத் தலைவன் கூறியது என்பர் நச்சினார்க் கினியர் (தொல். செய்யு. 196, களவு. 11).

130. பாலை — தோழி கூற்று

நிலம்தொட்டுப் புகாஅர் வானம் ஏறார்
விலங்குஇரு முந்நீர் காலின் செல்லார்
நாட்டின் நாட்டின் ஊரின் ஊரின்
குடிமுறை குடிமுறை தேரின்
கெடுநரும் உளரோநம் காத லோரே.

— வெள்ளிவீதியார்

பிரிவிடை அழிந்த தலைமகளைத் தோழி வற்புறுத்தியது. 'நீ அவர் பிரிந்தார் என்று ஆற்றாயாகின்றது என்னை? யான் அவர் உள்வழி அறிந்து தூதுவிட்டுக் கொணர்வேன். நின் ஆற்றாமை நீங்குக' எனத் தோழி தலைமகளை ஆற்றுவித்தது. தோழி தூது விடுவாளாகத் தலைமகள் தனது ஆற்றாமையால் கூறியதூஉம் ஆம்.

தோழி! நம் அன்பிற்குரிய காதலர், பூமியைத் தோண்டி அதன் உள்ளே புகமாட்டார்; ஆகாயத்தின்கண் பறந்து மறைந்து விடமாட்டார்; குறுக்கிடுகின்ற பெரிய கடலின்மேல் காலினால் நடந்து செல்லார். நாடுகள்தோறும் ஊர்கள்தோறும் முறையாகக் குடிகள்தோறும் ஆராய்ந்தால் அகப்படாமல் தப்புவாரும் உள்ளாரோ?

தப்பார். நாம் அவரைத் தேடிக் காண்போம் என்பதாம்.

ஒருவரின் செலவு நிலம், நீர், வான் மூவழியிலும் நடத்தற் பாலது. நிலத்துள் புகுதல், வானில் ஏறுதல், கடலில் நடத்தல் என்பன எண்வகைச் சித்திகளுள் சேர்ந்தன. தலைவர் சித்தர் அல்லர்; மனிதரே. ஆகவே அவரைக் காண இயலும் என்பதாம்.

தொடுதல் - தோண்டுதல்; வானம் ஏறுதல் - ஆகாய வழிப் பறந்து செல்லுகை; விலங்கு - குறிக்கீடு, அலைகளின் குறுக்கீடு. முந்நீர் யாற்று நீரும் ஊற்று நீரும் மழை நீரும் உடைமையால் வந்த பெயர். படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழி லையும் ஆற்றவல்ல காரணத்தால் வந்த பெயர் என்றும் கூறுவர். நாடு, ஊர், குடி ஆகியவை ஒன்றனுள் ஒன்று அடங்குவன.

தூதுவிட்டுத், தலைவரைத் தேடிக் கண்டு தன் நிலை எடுத் துரைத்தல் நன்று எனத் தலைமகள் தோழிக்கு எடுத்துக் கூறுவ தாகக் கொள்ளல் இரண்டாவது கருத்திற்கு ஏற்கும்.

இப் பாட்டு, செவிலி இடைச்சுரத்துச் சென்று தலைவியைத் தேடத் துணிந்தது; இக் குறுந்தொகையுள் நம்மாற் காதலிக்கப் பட்டோரென்றது அவ் விருவரையும் என்பர் நச்சினார்க்கினியர் (தொல். அகத். 37).

131. பாலை — தலைவன் கூற்று

ஆடுஅமை புரையும் வனப்பின் பணைத்தோள்
பேர்அமர்க் கண்ணி இருந்த ஊரே
நெடுஞ்சேண் ஆர்இடை யதுவே நெஞ்சே
ஈரம் பட்ட செவ்விப் பைம்புனத்து
ஓர்ஏர் உழவன் போலப்
பெருவிதுப் புற்றன்றால் நோகோ யானே.

— ஓரேருழவனார்

வினைமுற்றிய தலைமகன் பருவ வரவின்கண் சொல்லியது.

அசைகின்ற மூங்கிலை ஒத்த அழகினையுடைய பருத்த தோள் களையும் பெரும்போர் புரியும் கண்ணையுமுடைய தலைவி இருந்த ஊர் நீண்ட தூரத்தில் அடைதற்கு அரிய இடத்தில் உள்ளது. என்னுடைய நெஞ்சு ஈரம் பொருந்திய செவ்வியையுடைய பசுமை யான புனத்தையுடைய ஒற்றை ஏரைப் பெற்ற உழவன் அதனைப் பண்படுத்த விரைதலைப் போலப் பெருவிரைவினை அடைந்தது; அதனால் யான் வருந்துவேன் என்பதாம்.

திரும்புவதாக யான் சொல்லிவந்த பருவம் வந்துவிட்டமையினால் எனது நெஞ்சம் தலைவியை அடைய அவாவி நிற்கின்றது என்பதாம்.

ஓர் ஏர்உழவன் பல ஏருடையானினும் விரைந்து தானே செயலாற்றும் நிலையில் உள்ளான் ஆதலின் விரைவு மேற்கொண்டான் என்பதாம். ஓர் ஏர்உழவன் என்பது ஓரணை ஏரும் அதனால் உழப்படும் சிறு நிலப்பரப்பும் உடையான் என்பதாம்.

ஆடு அமை தோள், வனப்பின் தோள், பணைத் தோள் எனத் தோளுக்கு மூவடை வந்தமை காண்க. பணைத்தல் - பருத்தல்; இடை - இடம்; விதுப்புறுதல் - விரைதல்.

132. குறிஞ்சி — தலைவன் கூற்று

கவவுக் கடுங்குரையள் காமர் வனப்பினள்
குவவுமென் முலையள் கொடிக்கூந் தலளே
யாங்குமறந்து அமைகோ யானே ஞாங்கர்க்
கடுஞ்சுரை நல்ஆன் நடுங்குதலைக் குழவி
தாய்காண் விருப்பின் அன்ன
சாய்நோக் கினளே மாஅ யோளே.

— சிறைக்குடி ஆந்தையார்

கழற்றெதிர்மறை.

தோழ! மாமை நிறத்தையுடையவளாகிய தலைவி என்னைத் தழுவுவதில் மிக்க விரைவுடையவள்; விருப்பம் நல்கும் அழகினையுடையவள்; குவிதலைக் கொண்ட மென்மையான முலையினையுடையவள். பக்கத்திலே மேயச் சென்ற மிகுந்த சுரப்பையுடைய நல்ல பசுவினது நடுங்கும் தலையையுடைய கன்று தன் தாயைக் காணும் விருப்பத்தோடு இருந்தாற் போன்ற விருப்பத்தை வெளிப்படுத்தும் மெலிந்த பார்வையினை யுடையவள்; அத்தகைய பேரன்புடையாளை எப்படி மறந்து இருப்பேன்.

அவளை மறத்தற்கு இயலாதேன் என்பதாம்.

கவவு - தழுவுகை; காமர் - பெருவிருப்பம்; குவவுதல் - குவிதல், திரளுதல்; ஞாங்கர் - பக்கம்; சாஅய் நோக்கம் - மெலிந்த பார்வை; வனப்பு - அழகு; வனப்பு என்பது பல உறுப்பும் திரண்டவழிப் பெறுவதோர் அழகு என்பர் பேராசிரியர்.

'சாஅய் நோக்கினளே' என்றும் பாடம். இங்கே அளபெடை வேண்டுவதன்று. மேலும் தாய்காண் விருப்பின் என்ற முன்னடி

யில் :வரும் சீர்க்கு ஏற்ற எதுகை நயம் வாய்ந்த பாடம் சாய் நோக்கினளே' என்பதே ஆகும். எனவே இப்பாடம் கொள்ளப் பெற்றது.

இப்பாட்டை, களவுக் காலத்து நிகழ்ந்த கூட்டத்து அருமையைத் தனித்துச் சுழலுதலையுடைய உள்ளத்தோடே உசாவிய விடத்துத் தலைவற்குக் கூற்று நிகழ்ந்தது என்பர் நச்சினார்க்கினியர் (தொல். கற்பு. 5).

133. குறிஞ்சி — தலைவி கூற்று

புனவன் துடவைப் பொன்போல் சிறுதினைக்
கிளிகுறைத்து உண்ட கூழை இருவி
பெரும்பெயல் உண்மையின் இலைஒலித் தாங்குஎன்
உரம்செத்தும் உளெனே தோழிஎன்
நலம்புதிது உண்ட புலம்பி னானே.

— உறையூர் முதுகண்ணன் சாத்தன்

வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகள் சொல்லியது.

தோழி! தினைப் புனத்தையுடைய குறவனுக்கு உரித்தான தோட்டத்தில் விளைந்ததாகிய பொன்னைப் போன்ற நிறமுடைய சிறிய செந்தினைக் கதிரை கிளி ஒடித்து உண்ணுதலால் குறைவுப்பட்ட தாளில் பெரிய மழை பெய்தமையினாலே அத் தினையின் இலை தழைத்தாற் போலத் தலைவன் என் பெண்மை நலத்தை உண்டு பிரிந்ததனால் நேர்ந்த தனிமை வருத்தத்தோடு என் வலி அழிந்தும் உயிரோடு உள்ளேன் ஆயினேன்.

தலைவர் வந்து அருள் செய்வார் என்னும் துணிவினால் உயிர்தாங்கியுள்ளேன் என்பது குறிப்பித்தவாறாம்.

உரம் - மனவ்லிமை; கன்னிமை எனவும் கொள்வர்; புதிது உண்ணல் - புதிதாக ஒரு பொருளை முதன்முறையாக உண்ணுதல்; குறைத்தல் - கொய்துகொண்டு போதல்.

தினையினது இருவி என வேற்றுமைப் பொருள்படத் தொடர் அமைதலின் வேற்றுமைப் பொருளைச் சுட்டும் சந்தி இங்கு இன்றியமையாததாகும். எனவே 'சிறுதினைக்' என்ற பாடம் கொள்ளப் பெற்றது.

கதிருண்ட கிளி என்பது அவளைக் களவிற்கூடிப் பிரிந்து சென்ற தலைவனைக் குறிக்கும். கூழை இருவி கதிரின்றி அழ

கிழந்து காணப்படுதல் தலைவன் பிரிய வருந்தி மெலிந்திருக்கும் தலைவியது நிலையைச் சுட்டும். பெரும் பெயல் என்பது தோழியின் ஆறுதல் மொழிகளையும் தலைவன் மீண்டுவந்து தலையளி செய்தலையும் மழையினால் தினையின் இலை தளிர்த்தாற் போலத் தலைவன் வருகையினால் மீண்டும் நலம் பெற்றுச் சிறப்பாள் என்பதனையும் குறிக்கும். இவ்வாறு தலைவி கூறிய உவமை உள்ளுறை உவமையாகப் பொருள் பயத்தல் காணத்தகும்.

134. குறிஞ்சி — தலைமகள் கூற்று

அம்ம வாழி தோழி நம்மொடு
பிரிவுஇன்று ஆயின் நன்றுமன் தில்ல
குறும்பொறைத் தடைஇய நெடுந்தாள் வேங்கைப்
பூவுடை அலங்குசினை புலம்பத் தாக்கிக்
கல்பொருது இரங்கும் கதழ்வீழ் அருவி
நிலம்கொள் பாம்பின் இழிதரும்
விலங்குமலை நாடனொடு கலந்த நட்பே,

— கோவேங்கைப்பெருங்கதவன்

வரைவிடை ஆற்றாளாகிய தலைமகள் ஆற்றுவிக்கும் தோழிக்குச் சொல்லியது.

தோழி! ஒன்று சொல்லுவன்; கேட்பாயாக. குறுகிய பொற்றைக்கற்களிடையே பருத்தனவாய் வளர்ந்த உயர்ந்த அடியையுடைய வேங்கை மரத்தினது பூவோடு கூடிய அசைகின்ற கிளைகள் அம் மலர்களை இழந்து தனிக்கும்படியாகத் தாக்கிக் கற்களை மோதி ஒலிக்கும் விரைந்து விழுகின்ற அருவியானது நிலத்தை இடமாகக் கொண்டு ஊர்ந்து செல்லும் பாம்பு போல இறங்கி வருதற்கு இடமாகிய ஒன்றற்கொன்று மாறுபட்டுக் குறுக்கிடும் மலைநாடனொடு கூடியதால் உண்டாகிய நட்பானது தலைவனோடு நமக்குப் பிரிவின்றி இருக்குமானால் மிக நன்றாகும்.

இதுவே என் விருப்பம் என்பதாம். தலைவனுடைய பிரிவை ஆற்றகில்லேன் என்பதைத் தலைவி வெளிப்படுத்தவாறாயிற்று.

குறும்பொறை - சிறிய பொற்றைக் கற்கள்; தாள் - அடிமரம்; அலங்குசினை - அசையும் கொம்புகள்; கதழ் - விரைவு.

அருவியின் செய்கை தலைவன் செய்கையோடு ஒப்பிடற் பாலது. அருவி இறுதியில் நிலம் சார்ந்து வளமை தருவதாயினும் வரும் இடைவழியில் வேங்கை மலர்களை உதிர்த்தும் பாறைகளைத் தாக்கியும் பாம்பு போலத் தோற்றி அச்சுறுத்தியும்

வருந்தல் போலத் தலைவனின் நட்பு இப்பொழுது பிரிவினால் துன்பம் தரும் நிலையதாயினும் முடிவில் நன்மைதருவதாகும் என்னும் குறிப்பினைக் கொண்டிருத்தலால் இஃது உள்ளுறை உவமமாகும்.

135. பாலை — தோழி கூற்று

வினையே ஆடவர்க்கு உயிரே வாள்நுதல்
மனைஉறை மகளிர்க்கு ஆடவர் உயிர்என
நமக்குஉரைத் தோரும் தாமே
அழாஅல் தோழி அழுங்குவர் செலவே.

— பாலை பாடிய பெருங்கடுங்கோ

தலைமகன் பிரியும் என வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.

தோழி! தொழில் புரிவதுதான் ஆண்மக்களுக்கு உயிர் ஆகும். ஒளி பொருந்திய நெற்றியையுடைய இல்லத்தில் வாழும் மகளிருக்கு அவருடைய கணவரே உயிர் ஆவர். இவ்வாறு நமக்கு உரைத்தவரும் அத் தலைவரே. ஆதலால் அழுதலை ஒழிவாயாக. தலைவர் தாம் செல்லுதலைத் தவிர்வார்.

தலைவர் பிரிந்து செல்லாராதலின் நீ அழுகையை விடுக என அவளுக்கு ஆறுதல் கூறுகின்றாள் என்பதாம்.

அழுங்குதல் - செல்லுதலைத் தவிர்தல்; மனை உறை மகளிர் - வீட்டிலிருந்து இல்லறம் பேணும் பெண்டிர்.

136. குறிஞ்சி — தலைவன் கூற்று

காமம் காமம் என்ப காமம்
அணங்கும் பிணியும் அன்றே நுணங்கிக்
கடுத்தலும் தணிதலும் இன்றே யானை
குளகுமென்று ஆள்மதம் போலப்
பாணியும் உடைத்துஅது காணுநர்ப் பெறினே.

— மிளைப் பெருங்கந்தன்

தலைமகன் பாங்கற்கு உரைத்தது.

காமம் காமம் என்று உலகோர் குறைவுபட்டது போலக் கூறுவர். அந்தக் காமமானது கண்டாரைத் தீண்டி வருத்தும் தெய்வமும் அன்று; நோயும் அன்று; நுண்ணிதாகி மிகுதலும் இல்லை; பெரிதாகிப் பின்னர்க் குறைந்து போவதும் இல்லை. யானை அதிமதுரத்தழையுணவை மென்று தின்று அதனாற்

கொண்ட மதத்தைப் போலக் கண்டு மகிழ்வாரைப் பெற்றால் அக் காமம் வெளிப்படும் காலச் செவ்வியையும் உடையது.

எஃவே, காமம் இயல்பாக ஒருவரிடமிருந்து வெளிப்படுவது என்பதனைக் கூறியவாறாம்.

தலைவியைத் தழையாகவும், அதனை உண்ட யானையைத் தலைவனாகவும், அதனால் விளைந்த மதத்தைத் தலைவன் உற்ற காம நோயாகவும் கொள்ளக்கிடக்கின்றன. எனவே இஃது உவமையில் பொதிந்த உள்ளுறை பொருள் ஆகும்.

அணங்கு - வருத்தம், வருத்தம் தரும் தெய்வம்; பிணி - நோய்; கடுத்தலும் இன்று தணிதலும் இன்று என்க. கடுத்தல் - மிகுதல்; தணிதல் - குறைதல், தண்மையாதல்; குளகு - தழை; பாணி - ஏற்ற காலம், வெளிப்படுதற்குரிய செவ்வி; காணுநர்ப் பெறின் - கண்டு மகிழ்வாரைப் பெற்றால்.

இப் பாட்டைக் களவுக் காலத்துத் தலைவனைப் பாங்கன் கழறல் என்பதற்கு எடுத்துக்காட்டுகின்றார் இளம்பூரணர் (தொல். கற்பு. 41).

குளகு - தழையின் பொதுப் பெயராயினும் யானைக்கு மதமூட்டும் தழை எனக் காணப்படுவதால் அது அதிமதுரத் தழையே யாதல் வேண்டும். அதிங்கம் என்னும் அதிமதுரத் தழை யானைக்கு மதமூட்டும் என்பதனை, "நாறும் மதத்தினாலே நாகத்தை இரிக்கும் நாகம், ஆறிய சினத்த தன்றி அதிங்கத்தின் கவளங் கொண்டால், வேறுநீர் நினைந்து காணீர் யாவர்க்கும் விடுக்க லாகா" என வரும் சீவக சிந்தாமணிச் செய்யுளால் (705) தெளியலாம்.

137. பாலை — தலைவன் கூற்று

மெல்இயல் அரிவைநின் நல்அகம் புலம்ப
நிற்றுறந்து அமைகுவென் ஆயின் எற்றுறந்து
இரவலர் வாரா வைகல்
பலஆ குகயான் செலவுறு தகவே.

— பாலை பாடிய பெருங்கடுங்கோ

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன் பிரிவச்சம் உரைத்தது.

மென்மைத் தன்மையுடைய பெண்ணே! நின் நல்ல நெஞ்சம் தனிமையில் வருந்துமாறு நின்னை விடுத்துச் சென்ற அந்த இடத்

திலேயே மனம் பொருந்தியிருப்பேனாயின் யான் செல்வதற்குற்ற வினையிடத்தில் என்னை விடுத்து இரப்போர் வாராத நாள்களும் பலவாகுக.

ஆகவே நின்னைப் பிரியேன் எனச் சொல்லிப் பிரிந்தால் அறப்பயனை இழந்தவனாவேன் என்பதாம்.

அகம் - நெஞ்சம்; வைகல் - நாள்.

இப் பாடலைத் "தெளிவகப் படுத்தியது" என்பதற்கு எடுத்துக் காட்டுவர் நச்சினார்க்கினியர் (தொல். களவு. 10).

138. மருதம் — தோழி கூற்று

கொன்னூர் துஞ்சினும் யாம்துஞ் சலமே
எம்இல் அயலது ஏழில் உம்பர்
மயில்அடி இலைய மாக்குரல் நொச்சி
அணிமிகு மென்கொம்பு ஊழ்த்த
மணிமருள் பூவின் பாடுநனி கேட்டே.

— கொல்லன் அழிசி

குறியிழைத்த தலைமகன் பிற்றைஞான்று இரவுக்குறி வந்துழித் தோழி சிறைப்புறமாகக் கூறியது. இரவுக்குறி நேர்ந்ததூஉம் ஆம்.

பெரிய இவ்வூரில் உள்ளார் யாவரும் துயின்ற போதிலும் நாங்கள் தூங்காதவர்களாயினேம். எம் வீட்டிற்கு அயலதாக உள்ளதும் ஏழிலைப் பாலைமரத்தின் அப்பால் உள்ளதும் மயிலின் அடியைப் போன்ற இலையையுடையதும் கரிய பூங்கொத்துகளைக் கொண்டதுமான நொச்சியினது அழகுமிக்க மெல்லிய கொம்புகள் உதிர்த்த நீலமணி போன்ற பூக்கள் உதிர்வதால் உண்டாகும் ஓசையைக் கேட்டவாறே இரவு முழுவதும் தூங்கா திருந்தோம்.

ஆகவே தலைவன் வரவு நோக்கி விழித்து எதிர்பார்த்திருந்தோம் என்பதைச் சுட்டியவாறு.

கொன் - பெருமை; துஞ்சுதல் - துயிலுதல், உறங்குதல். ஏழில் - ஏழிலைப்பாலைமரம்; நள்ளிரவில் நொச்சியின் மலர்கள் உதிரும் என்பர்.

இரண்டாவது கருத்திற்கு ஏற்ப இராக்காலத்தில் யாம் துயிலாது இருந்தோம் என்றமையினாலே அப்பொழுது வந்தால்

தலைவியைக் கண்டு அளவளாவலாம் என்று உணர்த்தியவாறாகக் கொள்ளல்வேண்டும்.

இரவுக்குறி பிழைத்தவிடத்துத் தலைவிக்குக் கூற்று நிகழ்ந்தது என்பதற்கு இப் பாடலை எடுத்துக்காட்டுவர் நச்சினார்க்கினியர் (தொல். களவு. 16).

139. மருதம் — தோழி கூற்று

மனைஉறை கோழிக் குறுங்காற் பேடை
வேலி வெருகினம் மாலை உற்றெனப்
புகும்இடன் அறியாது தொகுபுஉடன் குழீஇய
பைதற் பிள்ளைக் கிளைபயிர்ந் தாஅங்கு
இன்னாது இசைக்கும் அம்பலொடு
வாரல் வாழியர் ஐயஎம் தெருவே.

— ஒக்கூர் மாசாத்தியார்

வாயில் வேண்டிப்புக்க தலைமகற்குத் தோழி வாயில் மறுத்தது.

ஐயனே! வீட்டில் வாழும் குறிய கால்களையுடைய கோழிப் பெட்டையானது, வேலிக்கு வெளியில் உள்ள காட்டுப்பூனையின் கூட்டம் மாலைக் காலத்தில் வந்தடைந்ததாக, அதற்குப் பயந்து பாதுகாப்பான இடத்துக்குச் செல்ல அறியாது ஒருங்கே கூடும் பொருட்டாகத் துன்பத்தையுடைய குஞ்சுகளாகிய இனத்தைக் கூவி அழைத்தாற்போல, இன்னாதனவாய் ஊரவர் சொல்லும் பழிமொழியோடு எம்முடைய தெருவிற்கு வருதலை ஒழிவாயாக.

எம் தெருவிற்கு வந்தால் ஊரவர் பழிப்பர் என்பதாம்.

மனைஉறை கோழி என்றது தாய்ரையும் குஞ்சு என்றது அவரது அணைப்பிலுள்ள தலைவியையும் சுட்டும்.

வெருகு - காட்டுப்பூனை; தலைவனுக்கு உவமை. பைதல் - துன்பம்; அம்பல் - பழிமொழி.

தலைவன் பரத்தமையோடு வாயில்களை முன்புகவிட்டு மனைக்கு வரக் கண்ட தோழி, அவனுடைய புறஒழுக்கத்தால் நேர்ந்த ஊரவர் பழிச்சொல்லை எடுத்துக்காட்டி, தலைவி தாயர் பாதுகாப்பில் உள்ளாள்; அவளை அடைய நல்லன் போல வருதல் தகைமைத்தன்று என்று தோழி மறுத்துரைத்தாளாயிற்று. இதுவே இப் பாடலின் உள்ளுறையாகும்.

நீத்த கிழவனை நிகழுமாறு படீஇயர் காத்ததன்வயிற் கண்ணின்று பெயர்க்குங்கால் தோழிக்குக் கூற்று நிகழ்ந்தது என்ப

தற்கு இப் பாடலை எடுத்துக்காட்டுகிறார் இளம்பூரணர் (தொல். கற்பு. 9). நச்சினார்க்கினியர், இதனுள் அம்பலொடு வாரல் எனவே, பன்னாள் நீத்தமையும் கண்ணின்று பெயர்த்தமையும் கூறிற்று. கோழி போலத் தாயர் மகளிரைத் தழீஇக் கொண்டார் என்றலின், புறம்போயும் பயம் இன்று எனக் காத்த தன்மை கூறிற்று (தொல். கற்பு. 9) என்பர்.

140. பாலை — தலைவி கூற்று

வேதின வெரிநின் ஓதி முதுபோத்து
ஆறுசெல் மாக்கள் புள்கொளப் பொருந்தும்
சுரனே சென்றனர் காதலர் உரன்அழிந்து
ஈங்குயான் தாங்கிய எவ்வம்
யாங்குஅறிந் தன்றுஇவ் அழுங்கல் ஊரே.

— அள்ளூர் நன்முல்லை

பொருள் வயிர்பிரிந்த் இடத்து, 'நீ ஆற்றுகின்றிலை' என்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

காதலர் கருக்கரிவாளைப் போன்ற முதுகையுடைய ஓந்தியின் முதிய ஆணானது வழிச் செல்லும் மனிதர்கள் புள் நிமித்தம் பார்த்துப் பயன்கொள்வதற்குத் தக்கபடி தங்குகின்ற பாலை நிலத்தில் சென்றனர். அவர் பிரிந்த பின்னர் வலிமை அழிந்து இங்கு யான் வருந்திப் பொறுத்துக் கொண்டிருக்கிற துன்பத்தை இந்த இரங்குதலையுடைய ஊர் எவ்வாறு அறியத்தக்கது.

அவர் பிரிகின்ற காலத்துச் செல்லாதவாறு தடுக்காது இப்பொழுது ஆற்றுகின்றாயில்லை என்று கூறுவதில் பயன் இல்லையே என்பதாம்.

வேதினம் - கருக்கரிவாள்; வெரிந் - முதுகு; புள் - புள் நிமித்தம்; தாங்குதல் - பொறுத்தல்; எவ்வம் - துன்பம்; ஓந்தியும் நன்னிமித்தம் பார்த்தற்கு உரியதாம். இங்கே ஊர் என்பது தோழியைச் சுட்டியவாறு; ஊர் என்று வேறுபடுத்து உரைத்தது அவளுடைய சினக்குறிப்பை வெளிப்படுத்தும். யாங்கு - எவ்வாறு; எவ்விடத்து என்றும் ஆம்.

இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் கற்புக்காலத்தும் அலர் எழுந்தது என்று கூறுதல் தலைவிக்கு உண்டு (தொல். கற்பு. 21) என இப் பாடலை எடுத்துக் காட்டுவர். இதனால் இங்கே ஊர்

என்பதற்கு ஊரினர் என்னும் பொருளை அவ்விருவரும் கருது கின்றனர் என்பது தெரியவரும்.

141. குறிஞ்சி — தலைவி கூற்று

வளைவாய்ச் சிறுகிளி விளைதினைக் கடீஇயர்
செல்களன் றோளே அன்னை எனநீ
சொல்லின் எவனோ தோழி கொல்லை
நெடுங்கை வன்மான் கடும்பகை உழந்த
குறுங்கை இரும்புலிக் கொலைவல் ஏற்றை
பைங்கட் செந்நாய் படுபதம் பார்க்கும்
ஆர்இருள் நடுநாள் வருதி
சாரல் நாட வாரலோ எனவே.

— மதுரைப் பெருங்கொல்லன்

இற்செறிக்கப்பட்டுழி இரவுக்குறி வந்தொழுகும் தலைமகற்கு வரும் ஏதம் அஞ்சிப் பகற்குறி நேர்ந்த வாய்பாட்டான் அதுவும் மறுத்துச் சிறைப்புறமாகத் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

தோழி! வளைந்த அலகையுடைய கிளிகள் வந்து விளைந்த தினைக் கதிரைக் கவர்ந்து செல்லாமல் ஓட்டும் பொருட்டாக நீவிர் செல்வீராக என்று எம் அன்னையும் சொல்லியுள்ளாள். புனக்கொல்லையில் உள்ள நெடிய கையையுடைய யானையினது கடும்பகை ஏதுவாக வருந்திய குட்டையான கையையுடைய கொல்லுதல் வல்ல பெரிய ஆண்புலியைப் பசுமையான கண்ணை யுடைய செந்நாய் அப் புலி இறக்கின்ற செவ்வியை எதிர்பார்த் திருக்கும் மலைநாட்டையுடைய தலைவனே! மிக்க இருளை யுடைய் இருளின் நடுயாமத்திலே வருகின்றாய். இனி அங்ஙனம் வருதலை ஒழிவாயாக என்று தலைவனுக்கு நீ எடுத்துரைத்தால் வரும் குற்றம் யாது?

புனஞ்செல்லவிருக்கும் காரணத்தால் இனித் தலைவன் பகற் பொழுது குறியிடத்து வருவான் என்பதாம். இதனால் பகற்குறி நேர்ந்தாளாயிற்று.

இப் பாட்டிற்கு, பொழுதும் ஆறும் புரைவதன்மையின் அழிவு தலைவந்த சிந்தைக்கண் தலைவி கூறியது என இளம் பூரணரும், நச்சினார்க்கினியரும் கருத்துரைப்பர் (தொல். களவு. 21, 20).

142. குறிஞ்சி — தலைவன் கூற்று

சுனைப்பூக் குற்றுத் தொடலை தைஇப்
புனக்கிளி கடியும் பூங்கட் பேதை
தான்அறிந் தனளோ இலளோ பானாள்
பள்ளி யானையின் உயிர்த்துஎன்
உள்ளம் பின்னும் தன்உழை யதுவே.

— கபிலர்

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கும் தலைமகன் சொல்லியது. தோழிக்குத் தலைமகன் தன் குறை கூறியதூஉம் ஆம்.

என் உள்ளமானது நடுயாமத்தே துயிலுதலையுடைய யானை பெருமூச்சு விடுவது போன்று பெருமூச்சு விட்டுக்கொண்டு அவளைப் பிரிந்த பின்னரும் அவளிடத்திலேயே செல்வதா யுள்ளது. சுனைக்கண்ணுள்ள பூக்களைப் பறித்து மாலையாகக் கட்டித் தினைப்புனக்கதிரை உண்ணவரும் கிளிகளை ஓட்டுகின்ற பூவைப் போன்ற கண்ணையுடைய பேதையாகிய தலைவி என் நிலைமையை அறிந்தாளோ இல்லையோ?

மீண்டும் என் உள்ளம் அத் தலைவியிடமே செல்வதாயுள்ளது ன்பதாம்.

குறுதல் - பறித்தல்; தொடலை - தொடுக்கப்படும் மாலை; உயிர்ப்பு - முன்பு விடும் அளவின்றி மூச்சினை நீளவிடுகை.

இப் பாடலுக்குரிய மற்றொரு கருத்தாகிய தோழிக்குத் தலைமகன் தன் குறை கூறியதாகக் கொள்ளுமிடத்து 'என் உள்ளம் அவள்பாலே செல்வதாகலின் யான் விரும்பியதைப் பெறுவேனாக' என்று எச்சப்பொருள் வருவித்தல் வேண்டும்.

143. குறிஞ்சி — தோழி கூற்று

அழியல் ஆயிழை அன்புபெரிது உடையன்
பழியும் அஞ்சும் பயமலை நாடன்
நில்லா மையே நிலையிற்று ஆகலின்
நல்இசை வேட்ட நயனுடை நெஞ்சின்
கடப்பாட் டாள னுடைப்பொருள் போலத்
தங்குதற்கு உரியது அன்றுநின்
அம்கலுழ் மேனிப் பாஅய பசப்பே.

— மதுரைக் கணக்காயன் மகன் நக்கீரன்

வரைவிடை வைத்துப் பிரிந்தவிடத்துத் தலைமகட்குத் தோழி கூறியது.

ஆய்ந்து எடுத்து அணிந்த அணிகலன்களையுடையவளே! நீ வருந்தாதே. பயனைத் தரும் மலைநாட்டுக்கு உரிய தலைவன் நம்பால் அன்பு மிகுதியும் உடையவன்; தகாத செய்தலால் வரும் பழிக்கும் அஞ்சுவான். நிலைத்து நில்லாமல் அழியும் தன்மையே இவ்வுலகத்தில் நிலைபெற்றது ஆதலினால் நல்ல புகழை விரும்பிய நன்மை புரிதலையே நினையும் நெஞ்சினையுடைய ஒப்புரவாளன் பெற்ற செல்வம் அவனிடம் தங்காது பலர்க்கும் பயன் விளைக்க அகன்று செல்வது போல நின்னுடைய அழகொழுகும் உடம்பில் பரவிய பசலையானது தங்கியிருத்தற்கு உரிமையுடையதன்று.

தலைவனுடைய வருகையால் அப் பசலை நீங்கிப்போகும் என்பதாம். தலைவன் விரைந்துவந்து வரைந்துகொள்வான் என்பதனைச் சுட்டிக் கூறியவாறாம்.

அழிதல் - வருந்துதல்; பயம் - பயன்; நயன் - அன்பு, அறவுணர்வு; உலகப்பொருள்கள் நிலையற்றவை, புகழே நிலை பெற்றிருப்பது என்னும் உணர்வுடையார் ஒப்புரவாளர் ஆதலால் அவர் கைப்பொருள் பிறர்க்குப் பயன்படத் தங்கியிராது சென்று கொண்டே இருக்கும். அங்ஙனமே தலைவியின் பசலையும் தலைவனுடைய வருகையால் நீங்கும் என்பதனைக் குறிப்பிக்கின்றாள் தோழி. 'ஈதல் இசைபட வாழ்தல்' என்பர் திருவள்ளுவர். ஆதலின் ஈதலான் வரும் புகழே சிறந்ததாகும். கடப்பாடு - ஒப்புரவு; கடப்பாட்டாளன் - ஒப்புரவாளன்.

இளம்பூரணர், தோழி தலைமகளை ஆற்றுவித்தது என்பதற்கு இப் பாடலைக் காட்டுவர் (தொல், களவு 24). தோழி இயற்பட மொழிந்து தலைவியை வற்புறுத்தியது என்பதற்கு எடுத்துக்காட்டுகிறார் நச்சினார்க்கினியர் (தொல். களவு. 23).

144. பாலை — செவிலித்தாய் கூற்று

கழிய காவி குற்றும் கடல
வெண்தலைப் புணரி ஆடியும் நன்றே
பிரிவுஇல் ஆயம் உரியதுஒன்று அயர
இவ்வழிப் படுதலும் ஒல்லாள் அவ்வழிப்
பரல்பாழ் படுப்பச் சென்றனள் மாதோ
செல்மழை தவழும் சென்னி
விண்உயர் பிறங்கல் விலங்குமலை நாட்டே.

— மதுரை ஆசிரியன் கோடங்கொற்றன்

மகட்போக்கிய செவிலித்தாய் சொல்லியது.

தன்னோடு பிரிதல் இல்லாமல் எப்பொழுதும் கூடியிருக்கும் ஆயமகளிர் கழியிடத்துள்ள கருங்குவளை மலர்களைப் பறித்தும் வெள்ளிய தலையையுடைய அலை துளைந்து விளையாடியும் நல்லபடியாகத் தமக்குரியதொரு விளையாடலில் ஈடுபட்டிருக்க, அவள் இத்தலை விளையாட்டிடத்துப் பொருந்த உடம் படாளாய்ச் சென்றுகொண்டே இருக்கும் மேகங்கள் தவழ்கின்ற வானளாவ உயர்ந்த விளக்கத்தையுடைய குறுக்கிடும் மலை களைக் கொண்ட அந்த வெம்மை மிகுந்த பாலைவழியில் பருக்கைக் கற்கள் தன்னடியின் அழகைச் சிதைக்க அவனோடு போயினாள்.

நம்மைப் பிரிந்து தலைவனுடன் சென்றாள் என்று செவிலித் தாய் இரங்கி உரைப்பாளாயினள் என்பதாம்.

காவி - நீல மலர்; குறுதல் - பறித்தல்; புணரி - அலை; ஆய்ம் - ஆயமகளிர், தோழிமார்; செல்மழை - விரைந்து செல்லும் மேகம்; இடியுடன் கூடிய மேகம் என்றும் ஆம். பிறங்கல் - விளக்கம். அகநானூற்று உரையாசிரியர் பிறங்கல் என்பதற்கு, 'பிறங்கு கல் பிறங்கல் என விகாரம்; வழியுயர்ச்சியுமாம்' என்பர் (அகநா. 13 உரை). சென்னி - உச்சி; பரல் - பருக்கைக்கற்கள்.

145. நெய்தல் — தலைவி கூற்று

உறைபதி யன்றுஇத் துறைகெழு சிறுகுடி
கானல்அம் சேர்ப்பன் கொடுமை எற்றி
ஆனாத் துயரமொடு வருந்திப் பானாள்
துஞ்சாது உறைநரொடு உசாவாத்
துயில்கண் மாக்களொடு நெட்டிரா உடைத்தே.

— கொல்லன் அழிசி

வரைவிடை ஆற்றாது தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

தோழி! கடலின் துறையில் அமைந்த இந்தச் சிற்றூர் நாம் தங்கியிருப்பதற்குத் தகுதியுடைய ஊரன்று. ஏனெனில் கடற் கரைச் சோலையை உடைய தலைவனது கொடுமையை நினைந்து, குறையாது பெருகுகின்ற துன்பத்தோடு வருந்தியவராய், நடு யாமத்திலும் தூங்காது தங்குவாரை ஏனென்று கேளாத துயிலுதல் பொருந்திய அறிவற்ற மக்களோடு நெடிய இராப்பொழுதையும் உடையது.

தலைவன் உடன் இல்லாத இவ்வூர் நமக்கு இனித் தங்கியிருக் கும் ஊராகாது என்கிறாள்.

சிறுகுடி - சிற்றூர்; கொடுமை என்றது தலைவன் பிரிவு நீட்டித்துள்ளமையை; எற்றி - நினைந்து; 'எற்று' என்னும் உரிச் சொல் நினைவு என்னும் பொருளில் வரும் என்பர் தொல்காப் பியர் (தொல். உரி. 41). துஞ்சாது உறைநர் என்றது தலைவி தன்னையே பிறர்போலக் கூறியவாறு. மாக்கள் என்றது இங்குத் தோழிமாரை. 'இனிதடங்கினரே மாக்கள்' (குறுந். 6) என முன்னர் வந்தவாறும் நோக்கத்தக்கது. நெட்டிரா - நீண்ட இராப்பொழுது. கணவரைப் பிரிந்தார்க்கு இராப்பொழுது மிக அதிகமாகத் தோற்றுதல் இயல்பு.

இப் பாட்டை, தலைவனோடு தன் திறத்து ஒருவரும் ஒன்று உரையாத வழித் தனது ஆற்றாமையால் தன்னோடும் அவனோடும் பட்டன சில மாற்றம் தலைவி தானே கூறுதலும் உள என்பதற்கு எடுத்துக்காட்டுவர் நச்சினார்க்கினியர் (தொல். களவு. 20).

146. குறிஞ்சி — தோழி கூற்று

அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ
தண்டுடைக் கையர் வெண்தலைச் சிதவலர்
நன்றுநன்று என்னும் மாக்களொடு
இன்றுபெரிது என்னும் ஆங்கணது அவையே.

— வெள்ளிவீதியார்

தலைமகன் தமர் வரைவொடு வந்து சொல்லாடுகின்றுழி, 'வரைவு மறுப்பவோ' எனக் கவன்ற தலைமகட்குத் தோழி சொல்லியது

தோழி! கேட்பாயாக. அவ்விடத்து உள்ளதாகிய நம்மைச் சேர்ந்த கூட்டத்தார் தண்டைப் பிடித்த கையினரும் வெள்ளிய நரையையுடைய தலையில் துகிலினையுடையாரும் நன்றுநன்று என்று உரைக்கும் தலைவனைச் சார்ந்த பெரியார்களோடு மணம் குறித்து வந்தமையால் நீங்கள் வந்த இந் நாள் பெருமையுடையது என்று முகமன் கூறுவர். ஆதலின் நம் ஊரில் பிரிந்தவர்களைச் சேர்த்து வைப்போரான சான்றோர் இருந்தனர்.

தலைவனுடைய வருகையை நம் ஊர் ஏற்றமையால் நீ வருந்தலை விடு என்றவாறு.

பிரிந்தோர்ப் புணர்ப்போர் - பிரிந்து உறையும் தலைவன் தலைவியரை மணத்தினால் ஒன்றுகூடச் செய்பவர். தலைவனிடத் திலிருந்து மகட் பேச வந்தோர் முதிய சான்றோர் என்பதைக் குறிப்பிக்கத் 'தண்டுடைக் கையர் வெண் தலைச் சிதவலர்'

என்றார். சிதவல் - சிதறிய துணி; தலையில் அணியும் பாகைத் துணியைக் குறித்தது.

நச்சினார்க்கினியர், தமர் வரைவு மறுப்பரோ எனக் கவன்றாட்குத் தோழி கூறியது என்பதற்கு இப் பாடலை எடுத்துக் காட்டுவர் (தொல். களவு 23).

147. பாலை — தலைவன் கூற்று

வேனிற் பாதிரிக் கூன்மலர் அன்ன
மயிர்ஏர்பு ஒழுகிய அம்கலுழ் மாமை
நுண்பூண் மடந்தையைத் தந்தோய் போல
இன்துயில் எடுப்புதி கனவே
எள்ளார் அம்ம துணைப்பிரிந் தோரே.

— கோப்பெருஞ்சோழன்

தலைமகன் பிரிந்த இடத்துக் கனாக் கண்டு சொல்லியது.

கனவே! வேனிற்காலத்து மலரும் பாதிரியினது வளைந்த மலர்த்துய் போன்ற மயிர் எழுந்து பரவிய அழகு ஒழுகும் மாமையையும் நுண்ணிய வேலைப்பாடு கொண்ட ஆபரணத்தையும் உடைய தலைவியைக் கொண்டுவந்து தந்தாயைப் போல நீயும் இனிய துயிலிலிருந்து எழுப்புகின்றாய். ஆதலால், துணைவியரைப் பிரிந்தோர் இனி உன்னை இகழார்.

தலைவியைக் கொண்டு காட்டிய கனவினைத் தலைவன் போற்றுகின்றமைப் பெறப்படும்.

பாதிரி - வேனிற்காலத்தில் மலர்வது ஆதலின் வேனிற் பாதிரி எனச் சிறப்பிக்கப் பெற்றது. கூன் - வளைவு. மடந்தை என்றது இங்குப் பருவம் சுட்டாது பெண் என்னும் பொதுமை சுட்டி நின்றது. எடுப்புதல் - எழுப்புதல்.

148. முல்லை — தலைவி கூற்று

செல்வச் சிறாஅர் சீறடிப் பொலிந்த
தவளை வாஅய பொலஞ்செய் கிண்கிணிக்
காசின் அன்ன போதுஈன் கொன்றை
குருந்தொடு அலம்வரும் பெருந்தண் காலையும்
கார்அன்று என்றி ஆயின்
கனவோ மற்றுஇது வினவுவல் யானே.

— இளங்கீரந்தையார்

பருவம் கண்டு அழிந்த தலைமகளைத் தோழி 'பருவம் அன்று' என்று வற்புறுத்தத் தலைமகள் சொல்லியது.

செல்வக்குடியில் பிறந்த சிறுவரது சிறிய அடியில் விளங்கிய தவளையின் வாயைப் போன்ற வாயையுடைய பொன்னால் செய்யப்பெற்ற கிண்கிணியின் காசைப் போன்ற பேரரும்பை வெளிப்படுத்தும் கொன்றை மரம் குருந்த மரத்தொடு சேர்ந்து சுழலும் மிக்க குளிர்ச்சியையுடைய இந்தக் காலத்தையும் கார்காலம் அன்று என்று நீ கூறுவாயாயின், இப்படித் தோன்றுவது எல்லாம் கனவுதானோ? யான் கேட்கின்றேன். எதிர்மாற்றம் கூறுவாயாக.

தலைவன் கார்காலத்தினும் மீண்டு வந்திலனே என்னும் தலைவியின் உள்ள வருத்தம் வெளிப்பட கூறியவாறாம்.

கிண்கிணி - காலில் அணியும் அணிகலம்; தவளையின் வாய் போன்ற அமைப்புடையது; பொன்னால் ஆனது. கொன்றையும் குருந்தும் ஆடினது காற்றினால் என்க. அலம்வரும் - சுழலும்; பெருந்தண்காலை - கார்ப்பருவம்.

149. பாலை — தலைவி கூற்று

அளிதோ தானே நாணே நம்மொடு
நனிநீடு உழந்தன்று மன்னே இனியே
வான்பூங் கரும்பின் ஓங்குமணற் சிறுசிறை
தீம்புனல் நெரிதர வீந்துஉக் காஅங்குத்
தாங்கும் அளவைத் தாங்கிக்
காமம் நெரிதரக் கைந்நில் லாதே.

— வெள்ளிவீதியார்

உடன் போக்கு உணர்த்திய தோழிக்குத் தலைவி சொல்லியது.

தோழி! நாணம் நம்மோடு பிரிவு இன்றி நெடுங்காலம் வருந்தியது. இனிமேல் வெண்ணிறப் பூவையுடைய கரும்பின் மணல் உயர்ந்த சிறுகரையானது இனிய நீர் நெருங்கி மோதுதலான் அக் கரை அழிந்து விழுந்தாற்போல நாணமும் தாங்கும் வரையில் தாங்கிக் காமம் மென்மேலும் நெருக்குதலால் என்னிடம் தங்கி நில்லாது போய்விடும். அஃது இரங்கத்தக்கது.

தலைவனுடன் செல்லவிருக்கும் காரணத்தால் நாணம் அகலும் எனக் கூறலாயினள் என்க.

அளிது - இரங்கத்தக்கது; உடன் - ஒத்திருந்த; காமம், நாணம் என்னும் இரண்டனுள் நாணத்தைக் காமம் வென்றது என்பதாம்.

இப் பாட்டை, நொதுமலர் வரைவின்கண் தலைவி நாண்அழிபு இரங்கிக் கூறியது என்பதற்கு எடுத்துக் காட்டுவர் இளம்பூரணர் (தொல். களவு. 23). நச்சினார்க்கினியர் இக் குறுந்தொகை தலைவிக்கு நாண் நீங்கினமை கூறியது என்பர் (தொல். அகத். 42).

150. குறிஞ்சி — தலைவி கூற்று

சேணோன் மாட்டிய நறும்புகை ஞெகிழி
வான மீனின் வயின்வயின் இமைக்கும்
ஓங்குமலை நாடன் சாந்துபுலர் அகலம்
உள்ளின் உள்நோய் மிகும்இனி மல்கும்
புல்லின் மாய்வது எவன்கொல் அன்னாய்.

— மாடலூர்கிழார்

இரவுக்குறி நேர்ந்த தோழிக்குத் தலைமகள் கூறியது.

தோழியே! பரணின்மேல் இருக்கும் குறவன் கொளுத்திய நறுமணமுள்ள கொள்ளியானது வானத்து நட்சத்திரங்களைப் போல இடந்தோறும் விட்டுவிட்டு ஒளி வீசும் உயர்ந்த மலை நாட்டையுடைய தலைவனது சாந்து புலர்ந்திருக்கும் மார்பினை யான் நினைத்தால் உள்ளத்தின்கண் காமநோய் மேலெழும்; இனியும் பெருகும். ஆனால் அம் மார்பைத் தழுவினாலோ அந் நோய் இல்லையாய் நீங்கிப் போவது எதனால்?

தலைவனைக் கூடினாலன்றி நோய் நீங்காது என்று குறிப்பித்தவாறாம்.

சேணோன் - மலைமேல் வாழும் குறவன்; பரணின்மேல் வாழ்பவன். நெருப்பு - புனத்தில் விலங்குகள் வாராமல் தடுக்க வேண்டி ஏற்றிவைத்த கொள்ளி. காமநோய் மேன்மேலும் வளர்ந்து பெருகுவதாகும். இக் கருத்தைச் சுட்டும் பாடம் 'மிகும்இனி மல்கும்' என்பதே. இதனால் இப் பாட்டு நிலைமண்டிலமாய்க் கருதப்பெற்று இப் பாடம் கொள்ளப்பெற்றது.

இப் பாட்டிற்குத் தலைவன் அளி சிறந்தவழித் தலைவிக்குக் கூற்று நிகழ்ந்தது என இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் கூறுவர் (தொல். களவு. 21 இளம். 20 நச்.). மேலும் நச்சினார்க்கினியர், தோழிமுன்னர்த் தலைவிக்கு வேட்கைக் கூற்று நிகழ்ந்தது எனவும் காட்டுவர் (தொல். களவு. 57).

151. பாலை — தலைவன் கூற்று

வங்காக் கடந்த செங்காற் பேடை
எழால்உற வீழ்ந்தெனக் கணவற் காணாது
குழல்இசைக் குரல குறும்பல அகவும்
குன்றுகெழு சிறுநெறி அரிய என்னாது
மறப்பருங் காதலி ஒழிய
இறப்பல் என்பதுஈண்டு இளமைக்கு முடிவே

— தூங்கலோரி

பொருள் வலிக்கப்பட்ட நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லியது.

நெஞ்சே! ஆண் வங்காப் பறவை தன்னைவிட்டு நீங்கப் பெற்றமையால் தனித்த சிவந்த கால்களையுடைய பெண்பறவை புல்லூறு என்னும் பறவை நெருங்கிப் பற்றிக்கொள்ளும்பொருட்டு விழுந்ததாகத் தன் கணவனாகிய ஆண் பறவையைக் காணாமல் வேய்ங்குழலின் இசைபோன்ற குரலுடையனவாய்க் குறிய பல ஒலிகளால் அழைத்துக் கொண்டிருக்கும் குன்றுகள் பொருந்திய சிறிய வழிகள் கடந்து செல்வதற்கு அரியன என்று எண்ணாமல் மறுத்தற்கு அரிய நம் தலைவி இவ்விடத்தில் தனித்துத் தங்கியிருக்க நான் செல்வேன் என்று துணிவது நம் இளமைப் பருவத்திற்கு முடிவாகிவிடும்.

என் தலைவி இங்குத் தனித்திருக்க யான் பிரிந்து செல்லேன் என்பதாம்.

இளமைக் காலத்தே தலைவியொடு இன்புறவேண்டும்; பிரிந்து செல்லின் காலக்கழிவு பெரியதாய் இளமை போகும்; இன்பமும் கைகூடாது. ஆதலின் பிரிந்து செல்லுதல் இளமைக்கு முடிவு என்கின்றான்.

அகவுதல் - கூவுதல், அழைத்தல்; இறத்தல் - செல்லுதல்; வங்கா - வங்கா எனப்படும் ஒருவகைப் பறவை; வக்கா எனவும் வழங்குவர். எழால் - புல்லூறு.

ஆண்பறவை பிரியப் பெண்பறவையைப் புல்லூறு பற்றிக் கொள்வதுபோலத் தலைவன் பிரிவானாயின் அவளைப் பசலை பற்றிக்கொண்டு வருத்தும் என்னும் குறிப்புத் தோன்றுதலின் இறைச்சிப் பொருளாம்.

152. குறிஞ்சி — தலைவி கூற்று

யாவதும் அறிகிலர் கழறு வோரே
தாய்இல் முட்டை போலஉட் கிடந்து
சாயின் அல்லது பிறிதுஎவன் உடைத்தோ
யாமைப் பார்ப்பின் அன்ன
காமம் காதலர் கையற விடினே.

— கிள்ளிமங்லங்கிழார்

வரைவு நீட்டித்தவழி ஆற்றாளாகிய தலைமகள், 'நீ ஆற்று கின்றிலை' என்று நெருங்கிய தோழிக்குச் சொல்லியது.

தாய் முகம் பார்த்து வளரும் ஆமையின் பார்ப்பைப் போலத் தலைவரைக் காண்பதால் வளரும் தன்மையது காமம். அக் காமம் நம் காதலர் நாம் செயலற்று வருந்தும்படி பிரிந்து கை விட்டனராயின், தாய் இல்லாத ஆமை முட்டை மண்ணுள் கிடந்து மாய்வதுபோல உள்ளத்துள்ளே கிடந்து மெலிவதன்றி வேறு என்ன பயனை உடையதாம். என்னை இடித்துரைப்போர் சிறிதளவாகிலும் இதனை அறிந்தாரில்லை.

தலைவன் வரைந்து தலையளி செய்தாலன்றிக் காமம் பயனற்றுக் கெடும் என்பது சுட்டியவாறாம்.

யாவதும் - சிறிதளவும்; கழறுவோர் - இடித்துரைப்போர்; அறவுரை பகருவோர். கையறவிடுதல் - செயலற்றுப் போம்படி நீங்கிச் செல்லுதல். யாமைப் பார்ப்புத் தாய் முகம் நோக்கி வளரும் தன்மையது என்பது, 'தீம்பெரும் பொய்கை யாமை இளம் பார்ப்புத், தாய் முகம் நோக்கி வளர்ந்தசி னாஅங்கு' எனவரும் ஐங்குறுநூற்றுப் பாடற்பகுதியாலும் (44) அறியக்கிடக்கின்றது.

153. குறிஞ்சி — தலைவி கூற்று

குன்றக் கூகை குழறினும் முன்றிற்
பலவின் இருஞ்சினைக் கலைபாய்ந்து உகளினும்
அஞ்சும்மன் அளித்துஎன் நெஞ்சம் இனியே
ஆர்இருட் கங்குல் அவர்வயின்
சாரல் நீள்இடைச் செலவு ஆனாதே.

— கபிலர்

வரையாது நெடுங்காலம் வந்து ஒழுகுகின்றுழி, 'நாம் அவரை வேறுபடுத்தற்குக் காரணம் என்னை?' என்ற தோழிக்கு, 'அவர் வரவு நமது ஆற்றாமைக்குக் காரணம் ஆம்' எனத் தலைமகள் கூறியது.

தோழி! என் நெஞ்சம் குன்றிலுள்ள கூகை ஒலி செய்தாலும் முற்றத்திலுள்ள பலாமரத்தின் பெரிய கிளையிடத்தே ஆண் குரங்கு தாவித் துள்ளினாலும், முன்பு அச்சத்தை அடையும். இப்பொழுதோ அது செல்லுதற்கு அரிய நிறைந்த இருளையுடைய இரவிலே அவரிடத்திற்கு மலைச்சாரலில் உள்ள நீண்ட வழியில் செல்லுதலை நீங்காததாகின்றது. அஃது இரங்குதற்கு உரியது.

நெஞ்சு அரிய மலைவழியில் செல்லும் என்றது தலைவன் இரவில் வருதற்கு உளதாகும் ஏதம் அஞ்சி உரைத்தவாறாம். இரவின் ஏதத்தை எடுத்துரைத்து வரைவுகடாவுக என்று உணர்த்தினாளாயிற்று.

கூகை - பேராந்தை; குழறுதல் - தெளிவற்ற குளறுபடியான ஒலிசெய்தல்; கூகையின் ஒலியைக் குழறுதல் என்பது மரபு. நீளிடை - நீண்ட வழி.

154. பாலை — தலைவி கூற்று

யாங்குஅறிந் தனர்கொல் தோழி பாம்பின்
உரிநிமிர்ந் தன்ன உருப்புஅவிர் அமையத்து
இரைவேட்டு எழுந்த சேவல் உள்ளிப்
பொறிமயிர் எருத்தின் குறுநடைப் பேடை
பொரிகாற் கள்ளி விரிகாய் அம்கவட்டுத்
தயங்க இருந்து புலம்பக் கூஉம்
அருஞ்சுர வைப்பின் கானம்
பிரிந்துசேண் உறைதல் வல்லு வோரே.

— மதுரைச் சீத்தலைச் சாத்தன்

பொருள் வயிற் பிரிந்த தலைமகனை நினைந்து தலைமகள் தோழிக்கு உரைத்தது.

தோழி, பாம்பினது உரியாகிய தோல் மேலுயர்ந்து விளங்குதல்போலக் கானலின் வெம்மை விளங்குகின்ற நண்பகற் காலத்தில் இரையை விரும்பி மேலெழுந்து பறந்து சென்ற புறாச் சேவலை நினைத்துப் புள்ளிகளையுடைய மயிர் பொருந்திய கழுத்தையும் குறுகக் குறுக அடியிட்டுச் செல்லும் செலவினையும் உடைய பெண்புறாவானது, பொரிந்த கால்களையுடைய கள்ளியினது வெடித்த காயையுடைய அழகிய கிளையில் தயக்கத்துடன் இருந்து தனிமை தோன்றக் கூவுகின்ற, கடத்தற்கு அரிய வழியையுடைய பாலை நிலத்தைக் கடந்து நெடுந்தொலைவில் தங்கியிருத்தற்கு வன்மையுடைய அத் தலைவர் எவ்வாறு அவ் வன்மையை அறிந்தவராவர்.

தலைவர் என்னைப் பிரிந்து எங்ஙனம் ஆற்றியிருக்கின்றனர் என்று எண்ணிக் கூறியவாறு. அவர் எங்ஙனம் அறிந்தனரோ என்பதால் நாம் அத்தகு ஆற்றியிருக்கும் வகையினை அறிந் திலோம் என்றவாறு.

உரி - தோல்; உருப்பு - கானலின் வெம்மை; பேய்த்தேர் என்றும் உரைப்பர். கவடு - கிளை. பொறிமயிர் எருத்தின் குறுநடைப் பேடை என்னும் உருசெயல் வருணனையால் புறா என்பது பெறப்பட்டது. பிரிந்த சேவலை நினைந்து பெடை கூவும் காட்சி தலைவனுக்குத் தலைவியினுடைய வருத்தத்தை நினை வூட்டும் என்பதாம்.

நச்சினார்க்கினியர் இப் பாடலுக்கு, தலைவன் பிரிந்துழித் தோழி கூற்றினைப் பின்னும் கேட்டற்குத் தலைவி விரும்பியது. 'இது வல்லுவோர் என்னும் பெயர் கூறித் தோழி கொடுமை கூறிய வழி அவளையே பிரிதல் வன்மை யாங்கறிந்தனர் எனத் தலைவி வினவுதலின் அது பின்னுங் கேட்டற்கு அவாவியதாம் (தொல். கற்பு. 6) என விளக்கங் கூறுவர்.

155. முல்லை — தலைவி கூற்று

முதைப்புனம் கொன்ற ஆர்கலி உழவர்
விதைக்குறு வட்டி போதொடு பொதுளப்
பொழுதோ தான்வந் தன்றே மெழுகுஆன்று
ஊதுஉலைப் பெய்த பகுவாய்த் தெண்மணி
மரம்பயில் இறும்பின் ஆர்ப்பச் சுரன்இழிபு
மாலை நனிவிருந்து அயர்மார்
தேர்வரும் என்னும் உரைவா ராதே.

— உரோடகத்துக் கந்தரத்தன்

தலைமகள் பருவம் கண்டு அழிந்து சொல்லியது.

பழங்கொல்லையை அழித்து விளைநிலமாகத் திருத்திய மிக்க ஆரவாரத்தையுடைய உழவர்கள் காலையில் விதைப்பதற்காக விதையுடன் எடுத்துச்சென்ற சிறிய வட்டிகள் மாலையில் அவர் கள் வீட்டிற்கு மீளும் காலத்து மலர்கள் நிறைந்து வழியுமாறு மாலைப் பொழுது வந்தது. மெழுகினால் இயற்றப்பட்ட கருவில் அமைத்துக் கொல்லனது ஊதுகின்ற உலையில் இட்டு ஆக்கப் பெற்ற பிளவுபட்ட வாயையுடைய தெளிந்த ஓசை பெற்ற மணிகள் மரங்கள் அடர்ந்த குறுங்காட்டில் ஒலிக்கும்படி அரிதான பாலை வழியைக் கடந்து மாலைக் காலத்தில் மிக்க விருந்து நுகரும்பொருட்டு வரும் தலைவருடைய தேர் வருகின்றது என்று சொல்லும் பேச்சு இன்னும் வந்திலது.

மாலைக் காலம் வரவும் தலைவர் வந்திலர் என்று தலைவி கார்ப்பருவம் கண்டு இரங்குகின்றமை பெறப்படும்.

முதை - பழங்கொல்லை; உழவர் விதையொடு சென்றமை கூறப்படுதலின் மழை பெய்யும் கார்ப்பருவம் வந்தமை புலப்படும். வட்டி - பனையோலையாலான பெட்டி. கார்காலத்து மாலையில் மலர்வது முல்லையாதலின் உழவர்தம் விதைவட்டிகளில் வழியிற்கண்ட முல்லைப் பூக்களைக் கொணர்ந்தனர். பொழுது - தலைவன் மீண்டு வருவதாகச் சொல்லிச் சென்ற மாலைப் பொழுது; இறும்பு - குறுங்காடு; செய்காடு என்றும் உரைப்பர். அயர்மார் - அயரும் பொருட்டாக. தலைவர் மீண்டுவரும் காலத்துத் தலைவியர் விருந்து செய்து மகிழ்தல் மரபாகும்.

தலைவி பொழுது கண்டு மகிழ்ந்து கூறியது என நச்சினார்க்கினியர் இப் பாடலை எடுத்துக் காட்டுவர் (தொல். கற்பு. 6).

156. குறிஞ்சி — தலைவன் கூற்று

பார்ப்பன மகனே பார்ப்பன மகனே
செம்பூ முருக்கின் நல்நார் களைந்து
தண்டொடு பிடித்த தாழ்கமண் டலத்துப்
படிவ உண்டிப் பார்ப்பன மகனே
எழுதாக் கற்பின் நின்சொ லுள்ளும்
பிரிந்தோர்ப் புணர்க்கும் பண்பின்
மருந்தும் உண்டோ மயலோ இதுவே,

— பாண்டியன் ஏனாதி நெடுங்கண்ணன்

கழறிய பாங்கற்குக் கிழவன் அழிந்து கூறியது.

பார்ப்பன மகனே, பார்ப்பன மகனே! சிவந்த பூக்களைக் கொண்ட முருக்கமரத்தின் நல்ல பட்டைகளை நீக்கி அத் தண்டோடு பற்றிய உறியில் தாழ்கின்ற கமண்டலத்தையும் விரத உணவையுமுடையவனான பார்ப்பன மகனே! எழுதாமல் கேள்வி வழிக் கற்கப்பட்டு வரும் வேதமாகிய நின்னுடைய மறைகளின் அகத்தே பிரிந்தோராகிய தலைவன் - தலைவியரைச் சேரச் செய்யும் தன்மை படைத்த வசிய மருந்தும் உண்டோ? (சேர்த்து வைப்பதற்குத் துணை செய்யாமல்) இவ்வாறு நீ இடித்துரைத்தல் மயக்கம் தருவதாம்.

நீ இடித்துரைப்பதால் பயன் ஒன்றும் இல்லை என்பதனைத் தலைவன் சுட்டிக் கூறினானாயிற்று.

மகன் என்றது இங்கு ஆண்மகன் என்னும் பொருளதாம். முருக்கு - முள்முருக்கமரம்; தாழ் கமண்டலம் - உறியிலே தாழ்ந்து

காணப்படும் தண்ணீர் வைக்கும் கரகம்; எழுதாக் கற்பு - எழுதாக் கிளவியாகிய வேதக் கல்வி; மருந்து - வசிய மருந்து; உபாயம் என்றும் ஆம்.

பார்ப்பனப் பாங்கன் காமநிலை யுரைத்துத் தேர்நிலை உரைத்தபோது தலைவன் கூற்று நிகழ்தலும் உண்டு என்ற நச்சினார்க்கினியர் கருத்திற்கு (தொல். கற்பு. 36) இப் பாடல் பொருந்துவதாகும்.

157. மருதம் — தலைவி கூற்று

குக்கூ என்றது கோழி அதன்எதிர்
துட்கென் றன்றுஎன் தூஉ நெஞ்சம்
தோள்தோய் காதலர்ப் பிரிக்கும்
வாள்போல் வைகறை வந்தன்றால் எனவே.

— அள்ளூர் நன்முல்லை

பூப்பு எய்திய தலைமகள் உரைத்தது.

கோழி, 'குக்கூ' என்று கூவியது. அதற்கு நேராக என் தோளைத் தழுவும் காதலரை என்னிடமிருந்து பிரியச் செய்யும் வாளைப் போல விடியற்பொழுதும் வந்தது. இவற்றால் என் தூயநெஞ்சம் அச்சமுற்றது.

தலைவனைப் பிரிய் வேண்டுமே என்பதுதான் அவள் கொண்ட அச்சமாகும்.

காதலர்ப் பிரிக்கும் வைகறை என்றது தலைவி பூப்பு எய்தி யதை மறைமுகமாகக் குறிப்பதாகும். பூப்பு நாளில் கூட்டமின் மையால் அது தலைவனின் தோள் தோயாது பிரிப்பதாயிற்று என்பதாம்.

துட்கு - அச்சம்; தூஉ நெஞ்சம் - தூய உள்ளம், மாசற்ற மனம் என்பதாம்.

இப் பாட்டை, தலைவிக்கு இன்பமும் துன்பமும் ஒருங்கு நிகழும் வழிக் கூற்று நிகழும் என்பதற்கு எடுத்துக் காட்டுவர் இளம்பூரணர் (தொல். கற்பு. 6). இதனை, முந்நாட் பிரிவாகிய பூப்பிடைப்பிரிவு வந்துழித் தலைவி கூறியது என்பர் நச்சினார்க் கினியர் (தொல். களவு. 31). மேலும் அவர், 'பூப்புப் புறப்பட்ட ஞான்றும் மற்றை நாளும் கருத்தங்கின் அது வயிற்றில் அழிதலும், மூன்றாம் நாள் தங்கின் சில்வாழ்க்கைத்தாதலும் பற்றி முந்நாளில் கூட்டமின்றென்றார்' (தொல். கற்பு. 46) என்கிறார்.

158. குறிஞ்சி — தலைவி கூற்று

நெடுவரை மருங்கின் பாம்புபட இடிக்கும்
கடுவிசை உருமின் கழறுகுரல் அளைஇக்
காலொடு வந்த கமஞ்சூல் மாமழை
ஆரளி இலையோ நீயே பேர்இசை
இமையமும் துளக்கும் பண்பினை
துணைஇலர் அளியர் பெண்டிர்இஃது எவனே.

— ஔவையார்

தலைமகன் இரவுக்குறி வந்துழி அவன் கேட்பத் தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.

உயர்ந்த மலைப்பக்கங்களில் உள்ள பாம்புகள் இறந்துபடுமாறு மிகுந்த வேகத்தையுடைய இடியேற்றினது இடிக்கும் முழக்கத்தோடு கலந்து, காற்றோடு சேர்ந்து வந்த நிறைந்த நீராகிய கருப்பத்தைக் கொண்ட மேகமே! உன்னிடம் இயல்பாகவே நிறைந்துள்ள இரக்கத்தை நீ இப்பொழுது பெறவில்லையோ? பெரும்புகழ் படைத்த இமயமலையையும் அசைக்கின்ற ஆற்றற் பண்பினையுடைய்யை. இப் பெண்டிர் தமக்குத் துணையாக உடனுறை காதலரைப் பெற்றிலர் ஆதலின் இரங்கத் தக்கவர். அங்ஙனமாகவும் நீ இப்படிப் பெய்து வருத்துவது எதனாலோ?

பெருமழையினால் காதலர் வரவு தடைபடுமோ என்று தலைவி அஞ்சி உரைப்பதாயினள் என்க.

இமயம், இமையம் இவை அகர ஐகார ஒலி வேற்றுமையால் வரும் வடிவ மாற்றங்களாகும். இங்கே ஈற்றடி துணையிலர் எனத் தொடங்குதலையொத்து முன்னடியில் இமையமும் என்னும் பாடம் கொள்ளப்பெற்றது.

உரும் - இடியேறு; கமஞ்சூல் - நிறை கருப்பம்; மாமழை - பெரிய மேகம், கரிய மேகம்; துளக்கும் - அசைக்கும், துணை - துணைவர், காதலர்.

159. குறிஞ்சி — தோழி கூற்று

தழைஅணி அல்குல் தாங்கல் செல்லா
நுழைசிறு நுசுப்பிற்கு எவ்வம் ஆக
அம்மெல் ஆகம் நிறைய வீங்கிக்
கொம்மை வரிமுலை செப்புடன் எதிரின
யாங்குஆ குவள்கொல் பூங்குழை என்னும்
அவல நெஞ்சமொடு உசாவாக்
கவலை மாக்கட்டுஇப் பேதை ஊரே.

— வடமவண்ணக்கன் பேரி சாத்தன்

தலைமகன் சிறைப்புறமாகத் தோழி செறிப்பறிவுறுத்தியது. உயிர் செல வேற்றுவரைவு வரினும் அது மாற்றுதற்கு நிகழ்ந்த தூஉம் ஆம்.

தழையுடை அணிந்த அல்குலைத் தாங்கமாட்டாது நுணுகிய சிறிய இடைக்குத் துன்பம் உண்டாகும்படி அழகிய மென்மையான மார்பகம் நிறையும்படி பருத்துத் திரட்சியையும் தேமலையும் கொண்ட முலைகள் செப்போடு மாறுபட்டனவாயின. பூத்தொழில் அமைந்த குண்டலத்தையுடைய இவள் எத்தன்மைத்தான துன்பத்தையுடையள் ஆவளோ? என்று எண்ணும் கவலை தோய்ந்த உள்ளத்தோடு ஏனென்று கேளாத கவலையுடைய மாக்களையுடையது இந்தப் பேதைமையுடைய ஊர்.

மாக்கள் என்றது இங்குத் தன் துயர் அறியாத செவிலித்தாய் முதலியோரை. இதனால் தாய் முதலியோர் தலைவியின் நிலையை உணர்ந்திலர் என்பது சுட்டியவாறாம்.

தழை - மகளிர் உடுக்கும் உடைவகை; தலைவி பருவ மங்கை யாயினள் என்பதனை முலைகளின் இயல்பு கூறிப் புலப்படுத்தி யுள்ளார். கொம்மை - திரட்சி; வரி என்றது இங்குத் தேமல் படர்ந்த நிறவரிகளை. நுழைநுசுப்பு - நுணுகிய சிற்றிடை.

இரண்டாவது கருத்திற்கு ஏற்ப நொதுமலர் வரைவு நேர்ந் தால் இவள் எத்தகு நிலையினளாவள் என்று ஆராயாத ஊர் என்க.

தலைவனோடு தன்திறத்து ஒருவரும் ஒன்று உரையாதவழித் தனது ஆற்றாமையால் தன்னோடும் அவனோடும் பட்டன சில மாற்றம் தலைவி தானே கூறியது என்பதற்கு நச்சினார்க்கினியர் இப் பாடலை எடுத்துக் காட்டுவர் (தொல். களவு. 20) இளம்பூரணரோ இது யாங்காகுவளென உயிர்செல்வு குறித்து நின்றது என்பர் (தொல். களவு. 21).

160. குறிஞ்சி — தலைவி கூற்று

நெருப்பின் அன்ன செந்தலை அன்றில்
இறவின் அன்ன கொடுவாய்ப் பெடையொடு
தடவின் ஓங்குசினைக் கட்சியிற் பிரிந்தோர்
கையற நரலும் நள்ளென் யாமத்துப்
பெருந்தண் வாடையும் வாரார்
இஃதோ தோழிநம் காதலர் வரவே.

— மதுரை மருதன் இளநாகன்

வரைவு நீட்டிப்ப ஆற்றாளாகிய தலைமகளை நோக்கித் தோழி, 'வரைவர்' என ஆற்றுவிப்புழித் தலைமகள் கூறியது.

நெருப்பைப் போன்ற சிவந்த தலையையுடைய ஆண்-அன்றிற் பறவை இறாமீனை ஒத்து வளைந்த அலகினையுடைய பெண் அன்றிலோடு தடாமரத்தினது உயர்ந்த கிளையிடத்தேயுள்ள கூட்டிலேயிருந்து ஒலிக்கின்ற நள்ளென்னும் ஒலியையுடைய யாமப்பொழுதில் பெரிதான குளிர்ச்சியுடைய வாடைக் காற்று வீசும் கூதிர்க்காலத்திலும் தலைவர் வந்தாரில்லை. நம் காதலர் வருகை இத் தன்மையதுதானே?

இனித் தலைவர் மணம் கூடுவது வாய்க்குமோ என்னும் இரக்கம் வெளிப்படுதல் காணலாம்.

செந்தலை - அன்றிலின் தலையில் உள்ள செஞ்சூட்டு; தட என்பது ஒருவகை மரம் 'தடவும் பிடவும் தாழச்சாய்த்து' என்பது பெருங்கதை (51:43). நரல்தல் - ஒலித்தல்.

161. குறிஞ்சி — தலைவி கூற்று

பொழுதும் எல்லின்று பெயலும் ஓவாது
கழுதுகண் பனிப்ப வீசும் அதன்தலைப்
புலிப்பற் றாலிப் புதல்வற் புல்லி
அன்னாய் என்னும் அன்னையும் அன்னோ
என்மலைந் தனன்கொல் தானே தன்மலை
ஆரம் நாறும் மார்பினன்
மாரி யானையின் வந்துநின் றனனே.

— நக்கீரர்

இரவுக்குறிக்கண் வந்த தலைமகனைக் காப்பு மிகுதியான் எதிர்ப் படப் பெறாத தலைமகள், பிற்றைஞான்று தலைமகன் சிறைப் புறத்தானாகத் தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.

பகற்பொழுதும் விளக்கமற்றதாகி இரவும் வந்துற்றது. மழையும் ஒழியாமல் பேய்கள் கண்களை இமைத்து நடுங்கும்படி யாகப் பெய்கின்றது. அதற்குமேல் அன்னையும் புலிப்பல்லால் கோத்து அமைத்த தாலியை அணிந்த புதல்வனைத் தழுவி, 'அன்னாய்' என்று விளித்தாள். அப்பொழுது தன் மலையில் விளைந்த சந்தனம் மணக்கின்ற மார்பையுடைய தலைவன் மழையில் நனைந்த யானையைப்போல நம் வீட்டின் புறத்தே வந்து நின்றான். அந்தோ! அவன் எதனைச் செய்வதற்கு மேற் கொண்டானோ?

காப்பு மிகுதியால் தலைவனைப் பெற்றேனில்லை என்பதாம்.

பொழுது - சூரியன், சூரியன் விளங்கும் பகற்பொழுது; எல்லின்று - இரவாயிற்று; ஒளி இழந்தது என்றும் ஆம். புலிப் பற்றாலி - புலிப்பல்லைப் பொன்னில் அமைத்துச் செய்த ஆபரணம். ஆரம் - சந்தனம். அன்னை என்பது அன்னாய் என விளி ஏற்றது. 'இச ஆகும் ஐஆய் ஆகும்' (தொல். சொல். 121) என்பது தொல்காப்பியப் பொது விதி.

இப்பாடலின் முதல் நான்கு அடிகளை, தலைவியிடத்துக் காதல் கையிகந்து பெருகுதலால் துயிலாநின்றுழியும் ஒன்றுகூறிச் செவிலி அரற்றியது இது. பொழுதும் எல்லின்று என்பதனுள் புதல்வற் புல்லி அன்னாய் என்று தலைவியை விளித்தது கனவின் அரற்றலாயிற்று என்பர் நச்சினார்க்கினியர் (தொல். களவு. 24). காப்பு மிகுதிக்கண் மனையகப்பட்டுக் கலங்கி அழிந்தவழித் தலைவி ஆராய்ச்சியுடையதாகிய அருமறையினைத் தோழிக்குக் கூறியது என இளம்பூரணரும் (தொல். களவு. 21) நச்சினார்க்கினியரும் (தொல். களவு. 20) இப்பாடலை எடுத்துக்காட்டுவர்.

162. முல்லை — தலைவன் கூற்று

கார்புறந் தந்த நீருடை வியன்புலத்துப்
பல்ஆ புகுதரும் புல்லென் மாலை
முல்லை வாழியோ முல்லை நீநின்
சிறுவெண் முகையின் முறுவல் கொண்டனை
நகுவை போலக் காட்டல்
தகுமோ மற்றிது தமியோர் மாட்டே.

— கருவூர்ப் பவுத்திரன்

வினை முற்றி மீளும் தலைமகன் முல்லைக்கு உரைப்பானாய் உரைத்தது.

முல்லையே, நீ வாழ்வாயாக. மேகத்தால் பாதுகாக்கப்பட்ட நீர்வளம் கொண்டதான அகன்ற முல்லை நிலத்துப் பாற்பசுக்கள் இல்லங்களை நோக்கி வருகின்ற ஒளி இழந்த மாலைக் காலத்திலே நீ உன்னுடைய சிறிய வெள்ளிய அரும்புகளால் புன்னகையைக் கொண்டுள்ளாய். துணைவரைப் பிரிந்து தனித்து இருப்போரிடம் இகழ்ந்து நகைப்பாரைப் போலக் காட்டுவதாகிய இது உனக்குத் தகுதியுடையதாகுமா?

தலைவியைப் பிரிந்து உரியகாலத்தில் வாராமை குறித்து என்னை இகழ்ந்து சிரிப்பது போல இம் முல்லைக் கொடிகள் பூத்தன என்பதாம்.

கார் - பெய்யும் நிலையிலுள்ள கருக்கொண்ட கரிய மேகம்; புல்லென்றல் - பொலிவிழந்திருத்தல்; நகுவை - சிரிப்பாய்; தமியோர் - தனித்து உறைவோர்.

163. நெய்தல் — தலைவி கூற்று

யார்அணங் குற்றனை கடலே பூழியர்
சிறுதலை வெள்ளைத் தோடுபரந் தன்ன
மீன்ஆர் குருகின் கானல்அம் பெருந்துறை
வெள்வீத் தாழை திரைஅலை
நள்ளென் கங்குலும் கேட்கும்நின் குரலே.

— அம்மூவன்

தன்னுள் கையாறு எய்திடு கிளவி.

கடலே! பூழி நாட்டார்க்குரிய, சிறிய தலையையுடைய வெள்ளிய சங்குக் கூட்டங்கள் எங்கும் பரவினாற்போல மீன் உண்ணும் கொக்குகளையுடைய சோலை நிறைந்த பெரிய துறையினிடத்தே வெண்ணிறப் பூவையுடைய தாழைகளை அலைகள் மோதி அலைக்கின்ற நள்ளென்னும் ஒலிபரவும் நடு இரவிலும் நின் ஆரவாரம் கேட்டுக் கொண்டிருக்கும். நீ யாரால் வருத்த முற்றாய்.

தலைவனைப் பிரிந்த யானும் நள்ளிரவிலும் உறக்கமின்றி வருந்தியிருக்கின்றேன் என்பதாம்.

பூழியர் - பூழிநாட்டினர்; வெள்ளை - வெண்ணிறச் சங்கு; தோடு - திரள், தொகுதி; குருகு - கொக்கு; வெள்வீ - வெண்ணிற மலர். பூழியர் கானல்அம் பெருந்துறை, குருகின் கானல் அம் பெருந்துறை என்க.

இரவில் வெண்ணிற மலர்களையுடைய தாழையைத் திரை அலைக்கும் என்பது பிரிவுத் துயரால் காதலுணர்வுடன் தனித்திருக்கும் தன்னைத் துன்புறுத்துகிறது என்னும் உட்குறிப்பு வெளிப்படும். காமம் மிக்க கழிபடர் கிளவியால் உரைப்போர் பிற பொருள்கள்மேல் தம் துயரை ஏற்றியுரைத்தல் இயல்பு.

164. மருதம் — காதற்பரத்தை கூற்று

கணைக்கோட்டு வாளைக் கமஞ்சூல் மடநாகு
துணர்த்தேக் கொக்கின் தீம்பழம் கதூஉம்
தொன்றுமுதிர் வேளிர் குன்றூர்க் குணாது
தண்பெரும் பௌவம் அணங்குக தோழி
மனையோள் மடமையின் புலக்கும்
அனையேம் மகிழ்நற்கியாம் ஆயினம் எனினே.

— மாங்குடி மருதன்

காதற்பரத்தை தலைமகட்குப் பாங்காயினார் கேட்ப உரைத்தது.

தோழி! மனைக்குரியளாகிய தலைவி தன் அறியாமையால் புலப்பதற்குக் காரணமாகிய அத் தன்மையேமாகத் தலைவனுக்கு யாம் ஆயினேம் ஆயின், திரண்ட கொம்புகளையுடைய வாளை மீனின் நிறைந்த கருப்பத்தையுடைய மடப்பம் மிக்க பெண் வாளை கொத்துக் கொத்தாகக் காய்த்துள்ள தேமாவினது உதிர்ந்த இனிய பழத்தைக் கவ்வி உண்ணுதற்கு இடமாகிய மிகப் பழைய வேளிருக்கு உரிய குன்றூருக்குக் கிழக்கின்கண் உள்ள தாகிய குளிர்ந்த பெரிய கடல் எம்மை வருத்துவதாக.

தலைவி தன் அறியாமையால் எம்மைப் பழிக்கின்றாள் என்பதாம்.

கோடு - கொம்பு; பக்கம் என்று பொருள் கொள்ளின் கணை போற் பக்கங்களையுடைய வாளை மீன் என்றாகும். துணர் - கொத்து; குணாது - கிழக்கில் உள்ளது; பௌவம் - கடல்.

தேமாவின் பழத்தைப் பறித்துண்ணாது விட்டதனால் அது தானே விழுந்து வாளை மீனுக்கு இரையாயிற்று. அதுபோலவே தலைவி தன் மடமையாற் புலக்கும் செயலே அவனை யாம் எளிதிற் பெறுதற்குக் காரணமாயிற்று என்னும் கருத்துப் புலப்பட வைத்தலின் இறைச்சிப் பொருளாம்.

165. குறிஞ்சி — தலைவன் கூற்று

மகிழ்ந்ததன் தலையும் நறஉண் டாங்கு
விழைந்ததன் தலையும் நீவெய் துற்றனை
அருங்கரை நின்ற உப்புஒய் சகடம்
பெரும்பெயல் தலையவீந் தாங்குஇவள்
இரும்பல் கூந்தல் இயல்அணி கண்டே.

— பரணர்

பின்னின்ற தலைமகன் மறுக்கப்பட்டுப் பெயர்த்தும் கூடலுறும் நெஞ்சிற்குச் சொல்லியது.

நெஞ்சே! ஏறிக் கடத்தற்கு அரிய கரையிடத்திலுள்ள உப்பை ஏற்றிச் செலுத்துகின்ற வண்டி பெரிய மழை பெய்ததனால் அழிந்தது போல இத் தலைவியினுடைய கரிய பலவான கூந்தலின் இயற்கை அழகைக் கண்டு, மறுக்கப்பட்டும் அன்பு நீங்காமல், காமத்தால் நாணத்தைவிட்டு, கள்ளுண்டு களித்ததன் மேலும் அக் கள்ளையே உண்டாற்போல ஒருமுறை விரும்பிய பின்னரும் விருப்பத்தைக் கொண்டுள்ளாய்.

இவ்வாறு விரும்புவது மய்க்கத்தின்பாற்பட்டது என்பதாம்,

மகிழ்தல் - கள்ளுண்டு அறிவு மயங்குதல், களித்தல்; நற - நறவு, கள்; வெய்துறல் - விரும்புதல்; ஒய்தல் - செலுத்துதல்; இயல் அணி - இயற்கையழகு. 'களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால்' என்னும் வள்ளுவர் வாக்கை (குறள் 1145) ஒப்ப மகிழ்ந்ததன் தலையும் நறவுண்டாங்கு என்பது உள்ளமை காணத் தகும்.

ஏற்றிச் செல்லும் வண்டியில் உள்ள உப்பு மழைபெய்தலால் கரைந்து வீணானது போலத் தலைவன் நாணும் வலிமையும் அழிந்தவனாய் உள்ளான் என்பதாம். ஒருமுறை கள்ளுண்டான் தன் நாணும் அறிவும் மயக்கமுற்றாலும் மீண்டும் உண்டு களிக்க விரும்புகின்றான். தலைவன் தலைவியை அடைவதற்காகத் தோழிபால் ஒருமுறை குறையிரந்தும் எண்ணியது கைகூடாமல் மீண்டும் குறையிரக்க விரும்புகின்றான் என்பதனை மேல் வரும் உவமை விளக்கும்.

166. நெய்தல் — தோழி கூற்று

தண்கடற் படுதிரை பெயர்த்தலின் வெண்பறை
நாரை நிரைபெயர்ந்து அயிரை ஆரும்
ஊரோ நன்றுமன் மாந்தை
ஒருதனி வைகின் புலம்பு ஆகின்றே.

— கூடலூர் கிழா

காப்பு மிகுதிக்கண் தோழி தலைமகட்கு உரைத்தது.

குளிர்ந்த கடலிடத்தே உண்டாகும் அலைகள் மீன்களைப் பெயரச்செய்வதனால் வெண்ணிறச் சிறகுகளையுடைய நாரை வரிசையின் நீங்கியவாய்ச் சென்று அயிரை மீன்களை உண்ணும் தன்மையடைய மாந்தையூர் தலைவனோடு இருக்குங்கால் மிகவும் நன்மையுடையதா யுள்ளது. ஆனால், தலைவனைப் பிரிந்து தனியே தங்கியிருப்போமாயின் வருத்தத்தைத் தருவதாகின்றது.

இற்செறிப்பால் காவலுக்குட்பட்ட தன் நிலையை விடுத்துத் தமரின் நீங்கித் தலைவருடனே அவர் ஊர் செல்லுகை நன்று என்று குறிப்பித்தவாறாம்.

மாந்தை என்னும் பாடத்திற்கான காரணம் முன்பே (குறுந். 31) விளக்கப்பெற்றது.

நாரை மீன் உள்ள இடத்தை நாடிச் சென்று இரை பெறுவது போல நாமும் மனை விடுத்துத் தலைவனுடன் சென்றால் இன்பம் கிட்டும் என்பது சுட்டப்பெறுதலின் இறைச்சிப் பொருளாம்.

பறை - சிறகு; நிரை - வரிசை; மாந்தை - குட்டுவனுக்குரியது இவ்வூர் என்பது தெரிய வருகிறது. 'குட்டுவன் மாந்தை' (குறுந். 34 : 6). புலம்பு - வருத்தம்.

167. முல்லை — செவிலித்தாய் கூற்று

முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கழுமத்
தான்துழந்து அட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே.

— கூடலூர் கிழார்

கடிநகர்ச் சென்ற செவிலித்தாய் நற்றாய்க்கு உரைத்தது.

முற்றிய கட்டித்தயிரைக் குழம்பு வைப்பதற்காகப் பிசைந்த காந்தள் மலரைப் போன்ற மெல்லிய விரல்களைத் துடைத்துக் கொண்ட ஆடையைத் துவைத்து அழுக்கை மாற்றாதே உடுத்துக் கொண்டு, குவளை மலரைப் போன்ற மையுண்ட கண்களில் தாளிப்பினது புகை நிறையத் தானே துழாவிச் சமைத்த இனிய புளிக்குழம்பினை இனிது எனக் கணவன் உண்பதனாலே ஒளி படைத்த நெற்றியுடையளாகிய தலைவியின் முகம் நுண்ணியதாக மகிழ்ச்சி கொண்டது.

தலைவனுக்கு வேண்டியவற்றை அவன் உள்ளம் உவப்பத் தலைவி செய்து வருகின்றாள் என அவள் இல்லறப் பாங்கைச் செவிலி சொல்லிப் புகழ்ந்து பேசுகிறாள்.

முளிதயிர் - நன்கு தோய்ந்த கட்டித்தயிர்; கலிங்கம் - ஆடை; குய் - தாளிப்பு; கழும - நிறைய, மண்ட; துழத்தல் - துழாவுதல்; பாகர் - குழம்பு.

இப் பாட்டை, அடிசிற்றொழிலின்கண் மகிழ்ச்சியாகிய தலைவியின் மாண்பை அகம்புகல் மரபின் வாயில்கள் தம்முள் தாம் கூறியது என இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் எடுத்துக் காட்டுவர் (தொல். கற்பு. 11). மேலும் நச்சினார்க்கினியர், இது பார்ப்பானையும் பார்ப்பனியையும் தலைவராகக் கூறியது. கடிமனைச் சென்ற செவிலி கூற்று; வாயில் நேர்வித்தலும் ஆம் என்று அகத்திணையியலுரையில் (தொல். அகத். 24) குறிப்பிடுகின்றார். மற்றும், உலகியல் வழக்கே வந்தது (தொல். அகத். 53) என்றும் உரைக்கின்றார்.

168. பாலை — தலைவன் கூற்று

மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகை
இரும்பனம் பசுங்குடைப் பலவுடன் பொதிந்து
பெரும்பெயல் விடியல் விரித்துவிட் டன்ன
நறுந்தண் ணியளே நல்மா மேனி
புனற்புணை அன்ன சாய்இறைப் பணைத்தோள்
மணத்தலும் தணத்தலும் இலமே
பிரியின் வாழ்தல் அதனினும் இலமே.

— சிறைக்குடி ஆந்தையார்

பொருள் வலிக்கும் நெஞ்சிற்குக் கிழமன் உரைத்தது.

நெஞ்சே! நல்ல மாமை நிறம் படைத்த நம் தலைவி, மாரிக் காலத்தில் மலரும் பிச்சியினது நீர்வழியும் செழுமையான அரும்புகளைப் பெரிய பசுமையான பனையோலைக்குடையில் பலவாக வைத்து மூடிப் பெருமழை பெய்த விடியற்காலத்திலே பொதிவாயை விரித்து விட்டாற்போன்ற மணமும் குளிர்ச்சியுமுடைய உடம்பினையுடையவள். நீரில் செலுத்தப்படும் தெப்பத்தைப் போன்ற வளைந்த சந்தினையுடைய வேயனைய அவள் தோள்களைக் கூடியிருத்தலால் பொருந்துதலும் விட்டுப் பிரிதலும் இலமாயினோம். அவளைப் பிரிவோமாயின் தனித்து உயிர்வாழ்தல் என்பது அதனினும் இல்லாதவராயினேம்.

இதனால் தலைவியைப் பிரிந்து செல்லுதல் இயலாது என்பதனைத் தலைவன் புலப்படுத்தியுள்ளமை தெரியவரும். எப்பொழுதும் நீங்காது உடனுறைதலினால் மணத்தலும் தணத்தலும் இலன் என்றனன்.

பித்திகம் - பிச்சி; குடை - உட்குழிவாகப் பனையோலையால் செய்யப்படும் சிறுகூடை. சாய் இறை - வளைந்த சந்து; மெல்லிய சந்து. பணை - வேய், மூங்கில். (புறநா. 32:3 பழைய உரை).

169. மருதம் — தலைவி கூற்று

சுரம்செல் யானைக் கல்உறு கோட்டின்
தெற்றென இறீஇயரோ ஐய மற்றுயாம்
நும்மொடு நக்க வால்வெள் எயிறே
பாணர்,
பசுமீன் சொரிந்த மண்டை போல
எமக்கும் பெரும்புலவு ஆகி
நும்மும் பெறேஎம் இறீஇயர்எம் உயிரே.

— வெள்ளிவீதியார்.

கற்புக் காலத்துத் தெளிவிடை விலங்கியது. இனித் தோழி வரைவு நீட்டித்தவழி வரைவு கடாஅயதூஉம் ஆம்.

ஐயனே! யாம் நும்மொடு சிரித்து மகிழ்ந்த வெண்ணிறப் பற்கள், காட்டுவழியிற் செல்லும் யானையின் மலையைக் குத்தி உடைபட்ட கொம்பைப் போல விரைவாக முரிந்து போவனவாக. எம்முடைய உயிர் பசிய மீனை இட்டு வைத்த பாணரின் உண் கலத்தைப்போல எமக்கும் பெரிய வெறுப்பைத் தருவதாகி உம்மையும் பெறேமாய்க் கெட்டு அழிவதாக.

சுரம் - காடு; கல் - மலை; தெற்றென - விரைவாக; மண்டை - வாயகன்ற மண்பாத்திரம்; புலவு - புலால் நாற்றம்; வெறுப்பு.

இரண்டாவது கருத்திற்குத் தோழி கூற்றாகக் கருத்துரைத் தல் வேண்டும். வரைந்து கொள்ளாமல் காலம் நீட்டித்தலால் தலைவி நின்னைப் பெறாளாய் அழகிழந்தாள்; இனி அவள் உயிரும் நீங்கி விடுமோ என உரைத்து அவள் வரைதலை விரைவு படுத்தக் கருதினாள் என்று கொள்ளல் வேண்டும்.

இப் பாட்டிற்கு இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்த காலத்துத் தலைவனது தீங்கு உணராது அவனை நன்றாக உணர்ந்த அறிவினது மடப்பம் கூறித் தம் காதற் சிறப்புரைத்தவிடத்துத் தோழி கூறியது. இஃது அவனோடு நகுதற்குத் தோன்றிய உணர்வு இன்றியமையாமை கூறித் தம் காதற்சிறப்பு உரைத்தது என்று விளக்கம் தருவர் நச்சினார்க்கினியர் (தொல். களவு. 23).

170. குறிஞ்சி — தலைவி கூற்று

பலரும் கூறுகஅஃ தறியா தோரே
அருவி தந்த நாட்குரல் எருவை
கயம்நாடு யானை கவளம் மாந்தும்
மலைகெழு நாடன் கேண்மை
தலைபோ காமைநற்கு அறிந்தனென் யானே.

— கருவூர்கிழார்

வரைவிடை ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

அருவியால் கொண்டுவரப்பட்டதும் காலத்தில் விளைந்தது மான கொத்தான கொறுக்காந்தட்டையை ஆழமான நீர் நிலையை விரும்புகின்ற யானையானது கவளமாக உண்ணும் மலைகள் பொருந்திய நாட்டையுடைய தலைவனின் நட்புக்

கெடாமையை யான் நன்கு தெரிந்துள்ளேன். அஃது அறியாதார் பலரும் தத்தமக்குத் தோன்றியவாறு கூறிக்கொள்வாராக.

தலைவனுடைய நட்பின் தன்மையை நான் நன்கு அறிதலால் அவன் வரைந்து கொள்வான் என்னும் துணிவுடையேன் என்பதாம்.

எருவை - கொறுக்காந்தட்டை; தலைபோதல் - முடிதல், அழிதல்.

கயத்தை நாடிச் சென்ற யானை முயற்சியின்றியே கொறுக்காந்தட்டையைக் கவளமாகப் பெற்றது. அங்ஙனமே தலைவனும் நல்லூழ் வயத்தால் என்னைக் கண்டு கூடி இன்புற்றனன் என்பது பெறப்படுதலின் இஃது இறைச்சிப்பொருளாம்.

இனி நட்பு ஊழ்வயத்தால் நீங்காது என்னும் துணிபு கொண்டாள் என்பதும் போதரும்.

171. மருதம் — தலைவி கூற்று

காண்இனி வாழி தோழி யாணர்க்
கடும்புனல் அடைகரை நெடுங்கயத்து இட்ட
மீன்வலை மாப்பட் டாஅங்கு
இதுமற்று எவனோ நொதுமலர் தலையே.

— பூங்கணுத்திரையார்

வரைவிடை ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

தோழி! புது வருவாயாகிய மிகுந்த நீர் சேர்ந்த கரையையுடைய நீட்சி பொருந்திய ஆழமான குளத்தினிடத்தே வீசிய மீனுக்கு உரிய வலையில் விலங்கு அகப்பட்டாற்போல அயலாரிடத்தே தோன்றும் வரைவுக்கு உரிய இந்த முயற்சி என்ன பயனைத் தந்துவிடும். இப்பொழுது நீயும் இதனைப் பார்ப்பாயாக.

அயலார் வரைவு மேற்கொள்ளும் முயற்சியால் பயன் ஒன்றும் இல்லை என்பதாம்.

மீனுக்காக வீசிய வலையில் விலங்கு வந்து சிக்கியது என்னும் உவமை தலைவனுக்கு என அமைந்த என்னை நொதுமலர் வரைய முயன்றனரே என்பதனை உட்கொண்டு அமைந்துள்ளமையின் இஃது உள்ளுறை உவமம் ஆம்.

யாணர் - புது வருவாய்; கயம் - குளம்; நொதுமலர் - அயலார்.

172. நெய்தல் — தலைவி கூற்று

தாஅவல் அஞ்சிறை நொப்பறை வாவல்
பழுமரம் படரும் பையுள் மாலை
எமியம் ஆக ஈங்குத் துறந்தோர்
தமியர் ஆக இனியர் கொல்லோ
ஏழ்ஊர்ப் பொதுவினைக்கு ஓர்ஊர் யாத்த
உலைவாங்கு மிதிதோல் போலத்
தலைவரம்பு அறியாது வருந்தும்என் நெஞ்சே

— கச்சிப்பட்டு நன்னாகையார்

வரைவிடை ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

தோழி! தாவும் தன்மையும் வலிமையும் அழகுமுடைய சிறகையும் மென்மையாகப் பறத்தலையுமுடைய வெளவால்கள் பழுத்த மரங்களை நோக்கிச் செல்லும் தனியாராயிருப்பார்க்குத் துன்பம் செய்யும் மாலைக் காலத்தே யாம் தமியேம் ஆகும்படியாக நம்மை இங்குவைத்துப் பிரிந்து சென்றவர், தனிமை பெற்றவராயும் இனிமை கொண்டவராயும் இருப்பரோ? ஏழு ஊரிலுள்ளார்க்கும் பொதுவான தொழிற்பாட்டுக்காக ஓர் ஊரில் அமைக்கப் பெற்ற உலையிடத்தில் பொருத்தப் பெற்ற துருத்தியைப் போல என் நெஞ்சம் முடிவுறும் எல்லை அறியக் கூடாதபடி வருத்தத்தை அடையும்.

நம்மை விடுத்துச் சென்ற தலைவர் படும் துயரம் கருதியே என் மனம் வருந்துகின்றது என்பதாம்.

சிறை - சிறகு; பழுமரம் - பழுத்த மரம்; ஆலமரம் என்றும் ஆம். பையுள் - துன்பம், வருத்தம்; உலை - கொல்லன் இரும்பைக் காய்ச்சிப் பதப்படுத்துதற்குப் பயன்படுத்தும் ஊது உலை; மிதி தோல் - உலை நெருப்பில் காற்றைச் செலுத்துவதற்காகத் தோலினால் அமைந்து மிதித்து இயக்கப்பெறும் துருத்தி. 'ஏழூர்ப் பொதுவினைக்கு ஓர் ஊர் யாத்த' என்பது ஒன்றுக்கு ஏழெனக் கூறும் உலகவழக்கு முறைமையாகும்.

173. குறிஞ்சி — தலைவன் கூற்று

பொன்நேர் ஆவிரைப் புதுமலர் மிடைந்த
பல்நூல் மாலைப் பனைபடு கலிமாப்
பூண்மணி கறங்க ஏறி நாண்அட்டு
அழிபடர் உள்நோய் வழிவழி சிறப்ப

இன்னள் செய்தது இதுஎன முன்நின்று
அவள்பழி நுவலும் இவ்வூர்
ஆங்குஉணர்ந் தமையின்ஈங்கு ஏகுமார் உளெனே.

— மரைக்காஞ்சிப் புலவன்

குறை மறுக்கப்பட்ட தலைமகன் தோழிக்கு உரைத்தது.

பொன்னை ஒத்த ஆவிரையின் புதிய பூக்களை நெருங்க வைத்துக் கட்டிய பல நூல்களையுடைய மாலைகளை அணிந்த பனங்கருக்கால் உண்டாக்கப்பட்ட செருக்கை உடைய குதிரையை அதன் கழுத்திற்கட்டிய மணிகள் ஒலி செய்யுமாறு ஏறியவனாய் நாணத்தைப் போக்கி, மிக்க நினைவையுடைய உள்ளத்தே எழும் காமநோய் மேன்மேலும் மிகுதியாக, இன்னாளால் தோற்றுவிக்கப்பட்டது இக் காமநோய் என்று யான் விளம்ப, அக் கோலத்தைக் கண்ணுற்ற இவ்வூரிலுள்ளார் எல்லோர்க்கும் முன்பாக நின்று அத் தலைவியது பழிச்செயலைப் பேசுவர். அத்தகையதொரு பரிகாரத்தை அறிந்திருத்தலால் இவ்விடத்தினின்று அகன்று செல்லும் பொருட்டாக உள்ளேன்.

நீ என் குறையைத் தீராவிட்டால் நான் இனி மடல் ஏறி அவளைப் பெற முயல்வேன் எனத் தலைவன் சுட்டிக் கூறிய வாறாம்.

ஆவிரம் பூவின் மஞ்சள் நிறம் பொன்போல் ஒளிரும் என்பதாம். இதனைப் பொன்னாவிரை என்வும் வழங்குவர். நூல்மாலை - குதிரைக்கு அணியப்படுவது. கறங்குதல் - ஒலித்தல்; மடல் ஏறி மன்றத்தே வருதலால் நாணத்தைத் தலைவன் விடுத்தானாயிற்று.

174. பாலை — தலைவி கூற்று

பெயல்மழை துறந்த புலம்புஉறு கடத்துக்
கவைமுட் கள்ளிக் காய்விடு கடுநொடி
துதைமென் தூவித் துணைப்புறவு இரிக்கும்
அத்தம் அரிய என்னார் நத்துறந்து
பொருள்வயிற் பிரிவார் ஆயின்இவ் உலகத்துப்
பொருளே மன்ற பொருளே
அருளே மன்ற ஆரும்இல் லதுவே.

— வெண்பூதி

பிரிவு உணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

தோழி! பொழிய வேண்டிய மழை பெய்யாது நீங்கிய ...ரத்தைப் பெற்றுள்ள பாலை நிலத்திலே கிளைவிட்டு வளர்ந்த

முட்களோடு கூடிய கள்ளியினது காய்கள் வெடிக்கும்பொழுது வெளிப்படும் கடிய ஒலியானது நெருங்கிய மென்மையான சிறகு களையுடைய ஆணும் பெண்ணுமாய்ச் சேர்ந்திருந்த புறாக்களை நீங்கி ஓடச் செய்யும் அரிய வழிகளைக் கடத்தற்கு அரியன என்று கருதாமல் நம்மைப் பிரிந்து பொருள் தேடும்பொருட்டுப் பிரிவாராயின், இந்த உலகத்திலே உறுதியாகச் செல்வம் ஒன்றே உறுதிப் பொருளாக அமையும். அருள் என்பது தன்னை ஏற்றுக் கொள்வார் யாரும் இல்லாததாகிவிடும்.

தலைவர் அருளுடையராயின் பொருளின் பொருட்டாக என்னைப் பிரிந்து செல்வது தகாது எனச் சுட்டியவாறாம்.

புலம்பு - வருத்தம்; கடம் - பாலை நிலம்; கவை - கிளை; நொடி - ஒலி; துதைதல் - நெருங்குதல்; துணைப்புறவு - துணை யுடன் கூடியிருக்கும் புறா; ஆண் பெண்ணாக அமர்ந்துள்ள இரட்டைகள். இரித்தல் - பயந்தோடச் செய்தல்; அத்தம் - பாலை வழி. மன்ற - தெளிபொருள் தருவதோர் இடைச்சொல்.

கூடி மகிழ்ந்திருந்த துணைப் புறாக்களைக் கள்ளியின் கடு நொடி பிரிந்தோடச் செய்யும் என்றது தலைவனின் பொருள் வேட்கை பிரிவை உண்டுபண்ணும் என்னும் குறிப்பினது ஆதலின் இறைச்சிப் பொருளாம்.

175. நெய்தல் — தலைவி கூற்று

பருவத் தேன்நசைஇப் பல்பறைத் தொழுதி
உரவுத்திரை பொருத திணிமணல் அடைகரை
நனைந்த புன்னை மாச்சினை தொகூஉம்
மலர்ந்த பூவின் மாநீர்ச் சேர்ப்பற்கு
இரங்கேன் தோழிஈங்கு என்கொல் என்று
பிறர்பிறர் அறியக் கூறல்
அமைந்தாங்கு அமைக அம்பல்அஃது எவனே.

— உலோச்சன்

பிரிவிடைக் கடுஞ்சொற் சொல்லி வற்புறுத்துவாட்குக் கிழத்தி உரைத்தது.

முதிரும் செவ்வியையுடைய தேனை விரும்பிப் பலவாகப் பறத் தலையுடைய வண்டுக் கூட்டங்கள், வலிய அலை வந்து மோதிய செறிந்த மணல் சேர்ந்த கரையிடத்துள்ள அரும்புகள் நிறைந்த புன்னை மரத்தின் பெரிய கிளையிடத்தே வந்து கூடுகின்ற மலர்ந்த மலர்களையும் கரிய நீரையும் உடைய கடற்கரைத் தலைவன்

பொருட்டு வருந்தேன். இவ்விடத்திலே இவள்தான் ஏன் இந்நிலை உற்றாள் என்று பிறர்பிறரும் ஒருவரையொருவர் அறியும்படி கூறுதல் அவர்களுடைய மனம் போனபடி அமைக; அவர்கள் கூறும் அம்பலாகிய பழிப்புரைகள் என்ன துன்பத்தைச் செய்து விடும்?

ஊரார் உரைக்கும் பழிக்கு அஞ்சேன் என்பதாம். தொழுதி - தொகுதி, கூட்டம்; பறை - பறத்தல் தொழிலையுடைய பறவைக் காயிற்று. தேன் நசைஇ என்பதனால் இங்கு வண்டுகள் என்பது பெறப்படும். உரவு - வலிமை; உலாவுதல் என்றும் உரைப்பர்; நனை - அரும்பு; மாச்சினை - பெரிய கிளை; கரிய கிளை என்றும் ஆம்; சேர்ப்பன் - கடற்கரைத் தலைவன். அம்பல் - சிலர் அறிந்து கூறும் பழிச்சொல்.

பல இடங்களில் வண்டுகள் பறந்து திரிந்தாலும் உரிய பருவத் தில் தேனை உண்ணவந்து அடைகின்ற சேர்ப்பன் ஆவன். ஆதலால் அவன் வினை பல கருதிப் பிரிந்து சென்றாலும் உரிய பருவத்தில் மீண்டுவந்து அளவளாவி அன்பு செய்வான் என்பது இதனால் பெறப்படும் இறைச்சிப் பொருளாகும்.

176. குறிஞ்சி — தோழி கூற்று

ஒருநாள் வாரலன் இருநாள் வாரலன்
பல்நாள் வந்து பணிமொழி பயிற்றிஎன்
நன்னர் நெஞ்சம் நெகிழ்த்த பின்றை
வரைமுதிர் தேனின் போகி யோனே
ஆசுஆகு எந்தை யாண்டுஉளன் கொல்லோ
வேறுபுலன் நல்நாட்டுப் பெய்த
ஏறுடை மழையின் கலுழும்என் நெஞ்சே.

— வருமுலையாரித்தி

தோழி கிழத்தியைக் குறைநயப்பக் கூறியது.

ஒரு நாள் மட்டும் வந்தானும் அல்லன்; இருநாள்கள் வந்தானும் அல்லன். பல நாள்கள் வந்து பணிவைப் புலப்படுத்தும் மொழிகளைப் பலகாற் சொல்லி என் நன்மையை எண்ணும் நெஞ்சத்தை இரங்கச்செய்த பின்னர் மலையிடத்தில் முதிர்ந்து விழும் தேனடையைப் போலப் போயினவனும் நமக்குப் பற்றுக் கோடாகிய எந்தையும் ஆகிய தலைவன் இப்பொழுது எங்கே இருக் கின்றானோ? வேற்றுப் புலங்களையுடைய நல்ல நாட்டிடத்தே பெய்த இடியேற்றையுடைய மழைநீர் கலங்கி வருதலைப்போல என் நெஞ்சும் கலங்கும்.

ஒரு தலைவன் நின்னை விரும்பி அலைந்து திரிகின்றான் என்பதனைத் தோழி புலப்படுத்தியவாறாம்.

ஒருமை இருமை பன்மை என்னும் வழக்குரை பயின்றுள்ளது. பயிற்றுதல் - பலகாற்கூறி வற்புறுத்துதல்.

கலுழ்தல் என்பது கலங்குதல் என்னும் பொருளைத்தரும் இயல்பான மூலவடிவம். எனவே இப் பாடம் கொள்ளப் பெற்றது.

மலைத் தேனடையைக் கொள்வார் இலாமையால் வீணே வீழ்ந்து அழிந்தது; அங்ஙனமே தன் மொழியை யாரும் ஏற்காமை யால் தலைவனும் நொந்து போயினான் என்பது உள்ளுறை உவம மாம். எந்தை என்பது தந்தைபோல ஆதரவு செய்யும் தன்மை யைச் சுட்டியவாறாம்.

"தோழி வலிதாகச் சொல்லிக் குறை நயப்பித்தது" என்பதற்கு இறையனார்களவியலுரை காட்டும் (இறை. 10). பின்னிலை நிகழும் பல்வேறு மருங்கினும் தோழிக்குக் கூற்று நிகழும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இப் பாடலை இளம் பூரணரும் நச்சினார்க்கினியரும் காட்டுவர் (தொல். களவு. 24 இளம். களவு. 23 நச்).

'வேற்றுப்புனல்' என வரற்பாலது 'வேறுபுனல்' என வந்தது அடுத்த அடியாக வரும் ஏறுடை என்னும் எதுகை நோக்கித் வந்த விகாரமாம்.

177. நெய்தல் — தோழி கூற்று

கடல்பாடு அவிந்து கானல் மயங்கித்
துறைநீர் இருங்கழி புல்லென் றன்றே
மன்றலம் பெண்ணை மடல்சேர் வாழ்க்கை
அன்றிலும் பையென நரலும் இன்று அவர்
வருவர்கொல் வாழி தோழி நாம்நகப்
புலப்பினும் பிரிவுஆங்கு அஞ்சித்
தணப்புஅருங் காமம் தண்டி யோரே.

— உலோச்சன்

கிழவன் வரவுணர்ந்து தோழி கிழத்திக்கு உரைத்தது.

தோழி! ஆள் நடமாட்டம் இன்மையால் கடற்கரையில் ஒலித்தல் அடங்கிக் கடற்கரைச் சோலையும் இருளால் மயக்கத் தையுடைய தாகித் துறையையும் நீரையுமுடைய கரிய உப்பங் கழிகளும் பூக்கள் குவிந்தமையால் பொலிவிழந்துள்ளன. மன்றத் திலுள்ள அழகிய பனைமரத்தின் மடல்களைப் பொருந்திய

வாழ்க்கையுடைய அன்றிற்பறவை மெல்லெனக் கூவும். நாம் தம்மை முன்பு நகையாடிப் புலந்து கூறினும் தாம் அவ்விடத்துப் பிரிவை அஞ்சியவராய் நீங்குதற்கரிய காம இன்பத்தை அலைத்தும் பெற்றவராகிய தலைவர் இன்று வருவர்.

தலைவன் வரவை உணர்ந்தவளாதலின் இன்று தவறாது வருவர் எனத் துணிந்து உரைப்பாளாயினள் என்பதாம்.

பாடு அவிதல் - ஒலியடங்குதல்; கானல் - கடற்கரைச் சோலை; மன்றலம் பெண்ணை என்பதில் அல்லும் அம்மும் சாரியை. இதனைக் 'கூம்பலங் கைத்தலத்து அன்பர், 'தேம்பலஞ் சிற்றிடை' எனவரும் திருக்கோவையார் 11 ஆம் பாடலில் பேராசிரியர், 'அல்லும் அம்மும் அல்வழிச் சாரியை' என்று எழுதிய வாற்றால் உணரலாம். அன்றிற் பறவை பெரும்பாலும் பனை மடலில் வாழும் இயல்பினது. தணத்தல் - நீங்குதல்.

இரவுக்குறியில் தலைவனைத் தலைவி சேர்தற்கு ஏற்ற புறச் சூழல் உள்ளமையைக் குறிப்பிப்பாளாய் கடல்பாடு அவிதலையும் கானல் மயங்குதலையும் அன்றிலின் மெல்லொலியையும் எடுத்துக் கூறுவாளாயினள் என்க.

கடற்கரையில் ஏனைய ஒலிகள் இன்மையால் அன்றிலின் மெல்லிய குரலும் நன்கு கேட்பதாயிற்று என்பதாம்.

178. மருதம் — தோழி கூற்று

அயிரை பரந்த அம்தண் பழனத்து
ஏந்துஎழில் மலர தூம்புடைத் திரள்கால்
ஆம்பல் குறுநர் நீர்வேட் டாங்குஇவள்
இடைமுலைக் கிடந்தும் நடுங்கல் ஆனீர்
தொழுகாண் பிறையின் தோன்றி யாம்நுமக்கு
அரியம் ஆகிய காலைப்
பெரிய நோன்றனிர் நோகோ யானே.

— நெடும்பல்லியத்தை

கடிநகர் புக்க தோழி, தலைமகன் புணர்ச்சி விதும்பல் கண்டு முன்னர் களவுக் காலத்து ஒழுகலாற்றை நினைந்து அழிந்து கூறியது.

ஐய! அயிரை மீன்கள் பரவியுள்ள அழகிய குளிர்ச்சி பொருந்திய பொய்கையினிடத்திலே அழகைத் தாங்கிய மலர் களைக் கொண்ட உள்ளே துளையையுடையதான தண்டைக் கொண்டுள்ள ஆம்பலைப் பறிப்போர் தண்ணீர் அருந்த விரும்பி

குறுந்.—11

யதை ஒப்ப, இத் தலைவியின் மார்பினிடையே தூங்கும் நிலை பெற்றும் நடுங்குதலை யுடையவ ராயினீர். யாம் தொழுது காணும் மூன்றாம் பிறை போல வெளிப்பட்டு நுமக்குக் காண் பதற்கு அரியேமா யிருந்த களவுக் காலத்தில் பெரிய வருத்தங் களைப் பொறுத்திருந்தீர். யான் அதனை எண்ணி வருந்துவேன்.

தலைவிபால் நீர் வைத்திருக்கும் அன்பின் ஆழத்தை நான் முன்பே அறிந்திலேனே என்று கூறியவாறாம்.

விதும்பல் - விரைதல்; ஏந்து எழில்மலர் - அழகு பெற்ற மலர்; நீர்மேல் உயர்ந்து காணும் அழகிய மலர் என்றும் ஆம்; குறுநர் - பறிப்பவர்; வேட்டல் - விரும்புதல்; தொழுது காண் பிறை - மூன்றாம் நாளில் தோன்றும் பிறைச்சந்திரன்; இப் பிறை காட் சிக்கு அரியதாய்த் தென்படும். இதனை மக்கள் கண்டு தொழுவது மரபு. கார்த்திகைப் பிறை மேக மூட்டத்தால் காண்பதற்கு அரிது என்னும் கருத்தால் கார்த்திகைப் பிறை என்றும் உரைப்பர்.

இப் பாட்டை எடுத்துக் காட்டி, பொழுது மறுப்பாக்கம் என்னும் மெய்ப்பாடு வந்தது என்றும் தொழுது காண் பிறையின் தோன்றினம் என்பது களவுக் காலத்து இடையீடு பெருகிற்று எனக் கூறி, அங்ஙனம் வரைந்த பொழுதினை மறுத்த காலத்தும் நடுங்கலானீர் என்றமையின் இஃது அப் பொருட்டாயிற்று என்றும் விளக்கம் தருவர் பேராசிரியர் (தொல். மெய். 21).

இப் பாட்டை பெறுதற்கு அரிய பெரும்பொருளை முடித்த பின்னர்த் தோன்றிய தெறுதற்கரிய மரபு காரணத்தால் தலைவன் சிறப்பித்துக் கூறுமிடத்துத் தோழி கூற்று நிகழும் என்பர் இளம்பூரணர் (தொல். கற்பு. 9). நச்சினார்க்கினியர் கருத்துரை இப் பாடலுக்குப்பின் வருமாறு: வதுவை நிகழ்ந்தபின் தன்னைச் சிறப்பித்துக் கூறுமிடத்துத் தோழிக்குக் கூற்று நிகழ்ந்தது. இதனுள் முலையிடைக் கிடந்தும் பனிக்கின்ற நீர் அரியமாகிய காலத்து எங்ஙனம் ஆற்றினீர் என யான் நோவா நின்றேன்; இங்ஙனம் அருமை செய்தலால் தேற்றுதற்குரியே னாகிய என்னைச் சிறப்பித்துக் கூறலாகாது என்றவாறு காண்க (தொல் - கற்பு 9).

179. குறிஞ்சி — தோழி கூற்று

கல்லென் கானத்துக் கடமா ஆட்டி
எல்லும் எல்லின்று ஞமலியும் இளைத்தன
செல்லல் ஐஇய உதுஎம் ஊரே

ஓங்குவரை அடுக்கத்துத் தீம்தேன் கிழித்த
குலையுடைப் பசுங்கழை தின்ற கயவாய்ப்
பேதை யானை சுவைத்த
கூழை மூங்கிற் குவட்டிடை யதுவே

— குட்டுவன் கண்ணன்

பகல் வருவானை இரவுக்குறி நேர்ந்தாள் போன்று வரைவு கடாயது.

ஐய, கல்லென்னும் ஒலி எழும் காட்டிடத்தில் கடமாவை வேட்டையாடி அலைத்தலைச் செய்யப் பகற்பொழுதும் மயங்கியது. நாய்களும் வேட்டையாடிக் களைப்பை அடைந்தன. உயர்ந்த மலைப் பக்கத்திலே இனிய தேன் இறாலைக் கிழித்த கூட்டமாக வளர்ந்துள்ள பசுமையான மூங்கில்களின் குருத்தைத் தின்ற ஆழ்ந்த வாயையுடைய பேதைமையுடைய யானை தின்ற தனாற் குறைவுபட்ட மூங்கிலைக்கொண்ட உச்சியின் இடையே உள்ளதாகிய அஃது எம் ஊர் ஆகும்.

நீ இரவில் எம் ஊருக்கு வந்து தங்கிச் செல்வாயாக என்பதாம்.

கானத்தில் கல்லெனல் - சிள்வீடு முதலிய விலங்குகளால் நேரும் ஒலி. கடமா - காட்டு விலங்கு வகையுள் ஒன்று.

எம் ஊருக்கு வந்து தங்குக என்றமையால் வரைந்து கொண்டு தலைவியைப் பிரியாது உடனுறையும் பேற்றை அடைக எனக் குறித்தவாறாயிற்று. கூழை - குறைபட்டது. குட்டை; கயவாய் - ஆழ்ந்தவாய்.

180. பாலை — தோழி கூற்று

பழூஉப்பல் அன்ன பருஉகிர்ப் பாஅடி
இருங்களிற்று இனநிரை ஏந்தல்வரின் மாய்ந்து
அறைமடி கரும்பின் கண்இடை அன்ன
பைதல் ஒருகழை நீடிய சுரன்இறந்து
எய்தினர் கொல்லோ பொருளே அல்குல்
அவ்வரி வாடத் துறந்தோர்
வன்பர் ஆகத்தாம் சென்ற நாட்டே.

— கச்சிப்பேட்டு நன்னாகையார்

பிரிவிடை வேறுபட்டாளைத் தோழி வற்புறுத்தியது.

பேயின் பற்களைப் போன்ற பருத்த நகங்களையுடைய பரந்த அடிகளைப் பெற்ற பெரிய களிற்றுத்திரள் வரிசையின்

தலைவனாகிய பெரிய யானை வந்து பற்றியதனாலே அழிந்து துகைப்புண்ட பாத்தியில் விழுந்த கரும்புகளின் இடையிடையே நின்ற ஒற்றைக் கரும்பு போல வருந்துதலையுடைய ஒற்றை மூங்கில் அங்கங்கே வளர்ந்துள்ள பாலை நிலத்தைக் கடந்து, அல்குலினது அழகிய தேமல் நிறம் கெடும்படி வன்னெஞ்சினராக நம்மைப் பிரிந்து சென்ற தலைவர் தாம் சென்ற நாட்டினிடத்துக் கருதிய பொருளினைத் தேடி அடைந்தாரோ இல்லையோ?

பொருளைப் பெற்றனராயின் விரைந்து வருவர் எனக் குறிப்பித்தவாறாம்.

பழூஉ - பேய்; செய்யுளில் ழகர உகரம் நீண்டு உகரம் பெற்று வந்தது என எடுத்துக்காட்டுவர் (தொல். உயிர் மயங். 59 இளம். நச்.). ஏந்தல் - தலைவன்; யானைக் கூட்டத் தலைவனை 'யூதநாதன்' என்பர். அறை - பாத்தி; சரும்பின் கண் இடை - கரும்புகளின் இடையே நிற்கும் ஒற்றைக் கரும்பு; பைதல் - வருந்துதல்; வன்பர் - வன்னெஞ்சினர்; பாவடி - பரந்த கால்.

181. மருதம் — தலைவி கூற்று

இதுமற்று எவனோ தோழி துனியிடை
இன்னர் என்னும் இன்னாக் கிளவி
இருமருப்பு எருமை ஈன்றணிக் காரான்
உழவன் யாத்த குழவியின் அகலாது
பாற்பெய் பைம்பயிர் ஆரும் ஊரன்
திருமனைப் பல்கடம் பூண்ட
பெருமுது பெண்டிரேம் ஆகிய நமக்கே.

— கிள்ளிமங்கலங்கிழார்

தலைமகன் பரத்தையிற் பிரிந்தவழி ஆற்றாளாகிய தலைமகள் ஆற்றல் வேண்டித் தோழி இயற்பழித்தவழி தலைமகள் இயற்பட மொழிந்தது.

தோழி! பெரிய கொம்புகளைக் கொண்ட கன்று ஈன்ற அணிமையையுடைய கரிய எருமையானது உழவனால் கட்டப் பெற்ற தன் கன்றின் பக்கலிலிருந்து நீங்காமல் பக்கத்தில் இட்ட பசிய புல்லை மேய்வதற்கு இடமாகிய ஊருக்குரியவனான தலைவனுடைய செல்வம் நிறைந்த மனை வாழ்வுக்கு உரிய பல கடப்பாடுகளையும் கைக்கொண்டுள்ள பெரிய முதிய பெண்டிராகிய நமக்குப் புலவிக் காலத்தில் இத் தலைவர் இத் தன்மையர் என்று சொல்லுகின்ற இனிமையில்லாத பேச்சாகிய இது என்ன பயனைத் தருவதாகும்.

தலைவனைக் குறைகூறிக்கொண்டிராது நம் கடப்பாடுகளைச் செய்வோம் என இல்லறப் பண்பு வாய்ந்த தலைவி பேசலாயினள் என்க.

இன்னர் - இன்ன தன்மையர் என்றது பரத்தைமை ஒழுக்கின ராதலைச் சுட்டியபடி; இன்னாக் கிளவி - இனிமையற்ற பேச்சு; இருமருப்பு - பெரிய கொம்பு; கரிய கொம்பு என்றும் ஆம். காரான் - காரெருமை; திருமனை - செல்வம் நிறைந்த இல்லம்; கடம் - கடமை, கடப்பாடு; பெருமுது பெண்டிர் - மிகவும் மூப் படைந்த மகளிர்; மூப்படைந்தமையால் தலைவன் இன்பநாட்டத் தால் இளம் பரத்தையரை நாடிச் செல்கின்றான் என்னும் கருத்துப் புலப்படும்.

எருமை தன் குழவியை விட்டு நீங்காமல் பக்கத்தில் இட்ட புல்லை மேயும் என்பது தலைவி மனையகத்திலிருந்து தனக்குரிய கடமைகளை ஆற்றுகின்ற நிலையினள் என்பதைக் குறிப்பித்தல் உள்ளுறை உவமாம்.

அடங்கா ஒழுக்கத்தையுடைய தலைவன்மாட்டு மனன் அழிந்தோளை அடங்கக்காட்டுதற்கு ஏதுவான பொருட்பக்கத் தில் தோழிக்குக் கூற்று நிகழ்ந்தது என்பதற்கு இப் பாடலை எடுத்துக்காட்டுவர் இளம்பூரணர் (தொல். கற்பு. 9). நச்சினார்க் கினியர், தோழி இன்னாக் கிளவி கூறியதனை இது பொழுது கூறிப் பயந்தது என்னெனத் தலைவி காய்ந்து கூறியது (தொல். கற்பு.6) என்பர்.

182. குறிஞ்சி — தலைவன் கூற்று

விழுத்தலைப் பெண்ணை விளையல் மாமடல்
மணிஅணி பெருந்தார் மரபின் பூட்டி
வெள்என்பு அணிந்துபிறர் எள்ளத் தோன்றி
ஒருநாள் மருங்கில் பெருநாண் நீக்கித்
தெருவின் இயலவும் தருவது கொல்லோ
கலிங்குஅவிர் அசைநடைப் பேதை
மெலிந்திலள் நாம்விடற்கு அமைந்த தூதே.

— மடல் பாடிய மாதங்கீரன்

தோழியால் குறை மறுக்கப்பட்ட தலைமகன் தன் நெஞ்சிற்கு உரைத்தது.

நெஞ்சே! ஆடை ஒளிரும் அசைந்த நடையையுடைய தலைவி நம் திறத்து உள்ளம் நெகிழ்ந்திலள், நாம் அத் தலைவியின்

உள்ளத்தை நெகிழ்ப்பதற்காக விடுகின்ற தூது மடல் ஊர்வது ஒன்றே. சிறந்த உச்சியையுடைய பனையின் நன்கு முற்றிய பெரிய மடலால் செய்த குதிரைக்கு மணியை முறைப்பட அணிவித்து நாம் வெண்ணிற எலும்புகளை அணிந்து கொண்டு கண்டார் பிறரெல்லாம் இகழும்படியாக மடல் மாவின்மேல் ஏறித்தோன்றி ஒருநாள் நம் நாணத்தை எல்லாம் விடுத்துத் தெருவினிடத்தே செல்லவும் தருவதுதான் போலும்.

இனி நான் மடலேறுவேன் என்னும் துணிவினைத் தலைவன் வெளிப்படுத்தியுள்ளமை காணலாம்.

'மாமடல்' என்பதனை 'மடல்மா' என்று மாற்றியும் பொருள் கொள்ளலாம். தூது என்றது இங்கே தோழிமை. இவளைப் பெட்டவாயில் எனச் சுட்டுவர் தொல்காப்பியர். நெஞ்சை நோக்கித் தலைவன் கூறியது தோழி அறிய வேண்டும் என்னும் கருத்தினாலேயாகும்.

கலிங்கு - ஆடை; கலிங்கம் என்பதன் தொகுத்தல் விகாரம். 'மெலிந்திலள்' எனவரும் பின்னடிக்கு ஏற்ற பாடம் இதுவே. நச்சினார்க்கினியரும் இப் பாடமே கொண்டுள்ளார் (தொல். களவு. 11).

இப் பாட்டிற்குத் தோழி சேட்படுத்தவிடத்துத் தலைவன் மடல்மா ஏறுவல் எனத் தன் நெஞ்சொடு கிளந்தது எனக் கருத்துரைப்பர் நச்சினார்க்கினியர் (தொல். களவு. 11).

183. முல்லை — தலைவி கூற்று

சென்ற நாட்ட கொன்றைஅம் பசுவீ
நம்போல் பசக்கும் காலை தம்போல்
சிறுதலைப் பிணையின் தீர்ந்த நெறிகோட்டு
இரலை மானையும் காண்பர்கொல் நமரே
புல்லென் காயா பூக்கெழு பெருஞ்சினை
மென்மயில் எருத்தின் தோன்றும்
புன்புல வைப்பின் கானத் தானே.

— ஔவையார்

பருவ வரவின்கண் ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

தோழி! மழைமுகம் காணாது பொலிவழிந்திருந்த காயா மரத்தின் மலர்கள் பொருந்திய கொம்பு மழைபெய்த காரணத்தால் மெல்லிய மயிலின் கழுத்தைப்போலப் பொலிவுற்றுத்

தோன்றும் புல்லிய இடத்தையுடைய காட்டிடத்தில் எம்மைப் பிரிந்து சென்று அவர் தங்கிய நாட்டிலே கொன்றை மரத்தின் பசுமையான செவ்விய மலர்கள் நம்மைப்போலப் பசலை நிறத்தை அடையும் இக் கார் காலத்தில் சிறிய தலையையுடைய பெண்மானை விட்டுப் பிரிந்த முறுக்குண்ட வளைந்த கொம்பு களையுடைய ஆண்மானையும் நம் தலைவர் காண்பரோ? காண வும் கூடும் என்பதாம்.

கலைமான் பிணையைத் தழுவிக் கொண்டிருக்கும் காட்சியைக் காண்பவர் நம் நினைவு மீதூர விரைந்து வந்துவிடுவார் என்ப தாம்.

பசத்தல் - பொன்னிறமாதல்; வைப்பு - இடம்; கானம் - முல்லைநிலம். இரலை - ஆண்மான்; பெருஞ்சினை - பெரியகிளை.

184. நெய்தல் — தலைவன் கூற்று

அறிகரி பொய்த்தல் ஆன்றோர்க்கு இல்லை
குறுகல் ஓம்புமின் சிறுகுடிச் செலவே
இதற்கிது மாண்டது என்னாது அதற்பட்டு
ஆண்டுஒழிந் தன்றே நாண்தகை நெஞ்சம்
மயிற்கண் அன்ன மாமுடிப் பாவை
நுண்வலைப் பரதவர் மடமகள்
கண்வலைப் படுஉம் கான லானே.

— ஆரிய அரசன் யாழ்ப்பிரமதத்தன்

கழறிய பாங்கற்குக் கிழவன் உரைத்தது.

மயிலின் பீலிக்கண்ணை ஒத்த கரிய கூந்தலையுடைய பாவை போன்றவளாகிய நுண்ணிய வலையையுடைய நெய்தல்நில மாக்களாகிய பரதவரின் இளமகளது கண்ணாகிய வலையில் ஆங்குச் செல்வார் சிக்குகின்ற கடற்கரைச் சோலையினிடத்திலே என்னுடைய நாணத்திற் சிறந்த நெஞ்சம் இப் பொருளுக்கு இது சிறந்தது என்று ஆய்ந்து தெளியாமல் அந்த இளமகளது கண் பார்வையில் சிக்கி அக் கானலிலேயே தங்கியது. அறிவால் நிறை வுற்ற சான்றோர்க்குத் தாம் கண்டறிந்தது ஒன்றை மறைத்துப் பொய்க்கரி கூறுதல் இயல்பு இல்லை. ஆதலின் நீயிரும் அச் சிற்றா ரிடத்துச் செல்லுதலைத் தவிர்க.

தவிராது நீயிரும் செல்வீராயின் அக் கண்வலைப்படுவீர்; இவ்வாறு கழறி உரையீர் என்பதாம்.

அறிகரி - கண்டறிந்ததோர் உண்மை; பொய்க்கரி - பொய்ச் சான்று; குறுகல் - அணுகுதல், சேர்தல்; ஓம்புமின் - பரிகரியு

மின்; நீங்குவீர்; மாண்டது - மாட்சிமைப்பட்டது. கண்வலை - கண்ணாகிய வலை. கண்ணை வலை என்றமையின், அதனில் சிக்கிய தலைவனுடைய நெஞ்சை மீனாக உருவகித்தல் சாலும். மாந்தர்க்குச் சிறப்புத்தருவது நாணுடை நெஞ்சமாகும். வள்ளுவர் 'நாணுடைமை மாந்தர் சிறப்பு' (1012) எனச் சுட்டுதலும் நோக்கத் தக்கது. ஏடுகளிலும் 'நாண்தகை' என்னும் பாடமே மிகுந்து காணப்படுகிறது. எனவே இப் பாடம் கொள்ளப்பெற்றது.

தலைவியின் கூந்தலுக்கு அடைமொழியாக வருதலின் மாண் என்பதினும் கருமை எனும் பொருள் கொண்ட மா என்பதே சிறப்பாகும். எனவே மாமுடிப்பாவை என்னும் பாடம் கொள்ளப் பெற்றது.

இப் பாடலுக்கு நச்சினார்க்கினியர், முல்லையும் குறிஞ்சியும் ஒழிந்தவற்றுடன் திணைதொறும் மரீஇய பெயருடையோரினும் திணைநிலைப் பெயராகிய தலைமக்களாக வழங்குவாரும் உளர் எனவும் இது கழறிய பாங்கற்குக் கூறியது எனவும் கருத்து விளக்கம் தருவர் (தொல். அகத். 22).

185. குறிஞ்சி — தலைவி கூற்று

நுதல்பசப்பு இவர்ந்து திதலை வாடி
நெடுமென் பணைத்தோள் சாஅய்த் தொடிநெகிழ்ந்து
இன்னள் ஆகுதல் நும்மின் ஆகும்எனச்
சொல்லின் எவனாம் தோழி பல்வரிப்
பாம்புபை அவிந்தது போலக் கூம்பிக்
கொண்டலின் தொலைந்த ஒண்செங் காந்தள்
கல்மிசைக் கவியும் நாடற்குஎன்
நல்மா மேனி அழிபடர் நிலையே

— மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்

தலைமகன் இரா வந்து ஒழுகாநின்ற காலத்து, வேறுபட்ட தலைமகளை, 'வேறுபட்டாயால்' என்றாட்குக் கிழத்தி உரைத்தது.

தோழி! பல கீற்றுகளையுடைய பாம்பினது படம் ஒடுங்கியது போலக் குவிந்து, கீழ்காற்றினால் வீழ்த்தப் பெற்றுக் கிடக்கிற ஒளிபடைத்த செங்காந்தள் மலர்கள் பாறையின்மேல் கவிந்து கிடக்கும் நாட்டையுடைய தலைவனுக்கு என்னுடைய நல்ல மாமை படர்ந்த மேனியினது மிக்க துன்ப நிலையை நெற்றியில் பசலைபட்ரப் பெற்றுத் தேமலால் ஒளி இழந்து நீண்ட மெல்லிய என் தோள்களும் மெலிந்தனவாய் வளையல்கள் நெகிழப்பெற்று

இத்தகைய மாறுபாட்டை உடையளாகுதல் நும்மால் விளைந் தாகும் என்று விளக்கமாகச் சொன்னால் என்ன குற்றம் வந்து விடும்.

என் மேனி வேறுபட்டமையை அவனுக்கு அறிவிப்பாயாக என்பதாம்.

பசப்பு - பசலை; திதலை - தேமல்; சாஅய்தல் - மெலிதல்; பாம்புபை - பாம்பின் படம்; கவிதல் - மூடி மறைத்தல்.

186. முல்லை — தலைவி கூற்று

ஆர்கலி ஏற்றொடு கார்தலை மணந்த
கொல்லைப் புனத்த முல்லை மென்கொடி
எயிறுஎன முகையும் நாடற்குத்
துயில்துறந் தனவால் தோழி என் கண்ணே.

— ஒக்கூர் மாசாத்தி

பருவ வரவின்கண் ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

தோழி! மிகுந்த முழக்கத்தையுடைய இடியேற்றோடு கார்காலமும் வந்து கூடின. முல்லை நிலத்திலுள்ள முல்லையின் மெல்லியகொடி பற்களைப் போல அரும்பும் நாட்டையுடைய தலைவன் பொருட்டாக என் கண்கள் உறக்கத்தை விடுத்தன.

தலைவன் வாராமையால் தூக்கமின்றி வருந்துகின்றேன் என்பதாம்.

கலி - ஆரவாரம்; ஏறு - இடியேறு; கார் - கார்காலம்; கொல்லைப்புனம் - முல்லைநிலம்; தலைமணத்தல் - கூடுதல்; முகைதல் - அரும்புதல்; கொல்லை - தரிசாகக் கிடந்த காடு.

187. குறிஞ்சி — தலைவி கூற்று

செவ்வரைச் சேக்கை வருடை மான்மறி
சுரைபொழி தீம்பால் ஆர மாந்திப்
பெருவரை நீழல் உகளும் நாடன்
கல்லினும் வலியன் தோழி
வலியன் என்னாது மெலியும்என் நெஞ்சே!

— கபிலர்

வரைவு நீட்டித்தவழி ஆற்றாளாகிய தலைமகளை ஆற்றுவிக்க வேண்டித் தலைமகனை இயற்பழித்த தோழிக்குத் தலைமகள் இயற்பட மொழிந்தது.

தோழி! செங்குத்தான மலையுச்சிகளிலே தங்கும் வருடை மானின் குட்டி தன் தாய் மடியில் சுரக்கும் இனிய பாலை நிரம்ப உண்டு, பின்னர்ப் பெருமலையின் பக்கத்திலுள்ள நிழலான இடத்திலே துள்ளுவதற்கு இடமாகிய நாட்டையுடையவன் கல்லைக் காட்டிலும் வலிமையுடையவன். அங்ஙனமாகவும் அவன் வன்மையுடையான் என்று கருதாமையினாலே என் நெஞ்சு மெலிவடையும்.

அவன் வலியன் ஆதலின் பொருள் முற்றி மீண்டுவருவன் என்பதனைப் பெறவைத்தாள்.

செவ்வரை - செங்குத்தான மலை; வருடை - எட்டுக்கால்களையுடைய விலங்கு.

வருடைமான்மறி பாலை நிரம்ப உண்டு துள்ளி விளையாடும் நாடன் என்றமையால் வரைபொருளை நிச்சயம் பெற்று இங்கு விரைந்து வந்து மணந்து கொள்வான் என்னும் இறைச்சிப் பொருள் தோன்றக் காணலாம்.

188. முல்லை — தலைவி கூற்று

முகைமுற் றினவே முல்லை முல்லையொடு
தகைமுற் றினவே தண்கார் வியன்புலம்
வால்இழை நெகிழ்த்தோர் வாரார்
மாலை வந்தன்றுஎன் மாண்நலம் குறித்தே.

— மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார்

பருவம் கண்டு அழிந்த கிழத்தி தோழிக்கு உரைத்தது.

தோழி! முல்லைக் கொடிகளிலே தோன்றிய அரும்புகள் முதிர்ச்சிப் பெற்றன. குளிர்ந்த கார்காலத்தைத் தழுவிய அகன்ற முல்லை நிலங்கள் முல்லைப் பூக்களோடு அழகு மிகப் பெற்றனவாயின. என்னுடைய மாட்சிமைப்பட்ட மேனி அழகு அழிதலையே குறிக்கோளாகக் கொண்டு மாலைக் காலமும் வந்தது. பிரிவினால் மேனி வாட என் தூய ஆபரணங்களைக் கழலுமாறு செய்த அத் தலைவர் இன்னும் வந்திலர்.

அவர் வாராமையால் இம் மாலைக் காலம் துன்பம் விளைக்கின்றது என்பதாம்.

தகை - அழகு, தகுதி; முல்லை நிலத்திற்குரிய தகுதி வாய்க்கப் பெறுகை. காரும் மாலையும் முல்லை நிலத்திற்குரிய பெரும்பொழுது சிறு பொழுதுகள். வந்தன்று - வந்தது; வால் இழை - தூய ஆபரணம்,

189. பாலை — தலைவன் கூற்று

இன்றே சென்று வருதும் நாளைக்
குன்றுஇழி அருவியின் வெண்தேர் முடுக
இளம்பிறை அன்ன விளங்குசுடர் நேமி
விசும்புவீழ் கொள்ளியின் பைம்பயிர் துமிப்பக்
கால்இயல் செலவின் மாலை எய்திச்
சில்நிரை வால்வளைக் குறுமகள்
பல்மாண் ஆகம் மணந்துஉவக் குவமே.

— மதுரை ஈழத்துப் பூதன் தேவன்

வினை தலைவைக்கப்பட்ட இடத்துத் தலைமகன் பாகற்கு உரைத்தது.

பாக! இன்றே வினைப் பொருட்டுச் சென்று நாளையே மீண்டு வருவோம். நாம் ஏறிச் செல்லும் வெள்ளிய தேரானது குன்றி லிருந்து வேகத்துடன் வரும் அருவியைப்போல விரைந்து செல்ல, அத் தேரினது இளம்பிறை போன்று விளங்கும் ஒளி படைத்த சக்கரங்கள் வானத்திலிருந்து வருகின்ற கொள்ளியைப்போலப் பசுமையான பயிர்களைத் துணிப்பக் காற்றின் இயக்கம்போல மிக விரைந்து செல்லும் வேகத்தினால் நாளை மாலைக் காலத் திலேயே தலைவியின் இருப்பிடம் சென்று சிலவாகிய வரியை யுடைய வெள்ளிய வளைகளைக் கொண்ட இளையாளது பலவாக மாட்சிமைப்பட்ட மேனியைக் கூடி மகிழ்வோம்.

கருதிய வினையை ஒரே நாளில் முடித்து அடுத்த நாள் மாலையிலே திரும்பிவிடுவதாகக் கூறலால் தலைவனுக்குத் தலைவி மாட்டுள்ள பெருங்காதல் வெளிப்படும்.

வெண்தேர் - யானைத் தந்தத்தால் செய்தமையால் வெண்ணிறமுடைய தேராயிற்று. சக்கரம் வட்ட வடிவினது ஆயினும் அது விரைந்து செல்லும்போது மண்ணில் புதைந்தது போக எஞ்சிய பகுதி பிறைபோலத் தோற்றும் என்பதாம்.

சில்வளை என்னும் குறிப்பினால் சில வளைகளே கழன்று விழாமல் எஞ்சியன என்றும் கொள்ளத்தகும். பல் மாண் ஆகம் - ஐம்புல இன்பங்களுக்கும் இடமாகத் தலைவியின் மேனியுள்ளமை யால் மாட்சிமை பலவும் கொண்ட உடம்பாயிற்று.

நெட்டாறு சேறலின்றி அணிமைக்கண் பிரியும் பிரிவு வந்தது என்று இப்பாடலுக்குக் கருத்து உரைப்பர் இளம்பூரணர் (தொல், களவு. 17).

190. முல்லை — தலைவி கூற்று

நெறிஇருங் கதுப்பொடு பெருந்தோள் நீவிச்
செறிவளை நெகிழச் செய்பொருட்கு அகன்றோர்
அறிவர்கொல் வாழி தோழி பொறிவரி
வெஞ்சின அரவின் பைந்தலை துமிய
உரஉரும் உரறும் அரைஇருள் நடுநாள்
நல்ஏறு இயங்குதொறு இயம்பும்
பல்ஆன் தொழுவத்து ஒருமணிக் குரலே.

— பூதம்புல்லன்

பிரிவிடை ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

தோழி! என் நெறிப்பையுடைய கருங்கூந்தலுடனே பெரிய தோள்களையும் தடவித் தேற்றி, நான் அணிந்துள்ள வளைகள் நெகிழும்படி தாம் ஈட்டும் பொருளின் பொருட்டாக என்னைப் பிரிந்து சென்ற தலைவர் புள்ளிகளையும் வரிகளையுமுடைய மிகுந்த கோபம் கொண்ட பாம்புகளின் பசிய தலைகள் துணியும் படியாக வீசிய வன்மையான இடியேறு முழங்குகின்ற இருள் மிகுந்த நடு இரவிலே பல பசுக்களையுடைய தொழுவத்திலே நல்ல ஆனேறு அப் பசுக்களை நாடிச் செல்லுந்தோறும் ஒலிக் கின்ற ஒற்றை மணியின் ஓசையைக் கேட்டு அறிவாரோ?

செறிவளை - நெருக்கமாக அணியப்பெற்ற வளையல்; பொறி - புள்ளி; உரம் - பேராற்றல்; நல் ஏறு - பசுக் கூட்டங் களுக்கு இன்பம் தருதலால் நன்மை செய் ஏறாயிற்று. ஒரு மணி- காளையின் கழுத்தில் அணியும் ஒற்றைமணி. நள்ளிரவு ஓசை யைக் குறிப்பிடும் தலைவி பிரிவினால் தூங்காதிருந்தமையை வெளிப்படுத்தும்.

191. முல்லை — தலைவி கூற்று

உதுக்காண் அதுவே இதுஎன் மொழிகோ
நோன்சினை இருந்த இருந்தோட்டுப் புள்ளினம்
தாம்புணர்ந் தமையின் பிரிந்தோர் உள்ளா
தீம்குரல் அகவக் கேட்டும் நீங்கிய
ஏதி லாளர் இவண்வரின் போதின்
பொம்மல் ஓதியும் புனையல்
எம்மும் தொடாஅல் என்குவெம் யாமே.

பிரிவிடை ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

தோழி! இதனை என்னென்று சொல்வேன். வலிய கிளைகளில் இருந்த பெரிய தொகுதியையுடைய பறவைக்கூட்டம் தாம் துணைகளோடு சேர்ந்திருந்தமையால் துணைவரைப் பிரிந்திருக்கும் மகளிரின் துன்பத்தை எண்ணாதனவாய் இனிய குரலால் அழைப்பதைக் கேட்ட பின்பும் நம்மைப் பிரிந்து சென்ற அயல் தன்மையுடையவராய தலைவர் இங்கே மீண்டு வந்தால், பொங்குதலையுடைய எம் கூந்தலையும் மலர்களால் அலங்கரித்தலை விடுக. எம்மையும் தொடுதலைவிட்டு நீங்குக என்று யாம் கூறுவோம். இவ்வாறு நான் செய்தலை உவ்விடத்துப் பார்ப்பாயாக.

தலைவன்பால் ஊடல்கொண்டு அவனை ஏற்றுக்கொள்ளேன் என்பதாம்.

மன்னே என்பது பொருளின்றி அசைச் சொல்லாகப் பாட்டின் இசையை நிரப்புகிறது. ஆயின் யாமே என்ற பாடமோ என்குவெம் என்பதற்கு எழுவாயாக அமைந்து பொருள் பொதிந்ததாய் உள்ளது. மேலும் இஃது எம்மும் என்ற முதற்சீர்க்கு ஏற்ற மோனை இயைபுடையதாய் இருக்கிறது. எனவே இப் பாடம் கொள்ளப்பெற்றது.

நோன்மை - வலிமை; தோடு - தொகுதி, கூட்டம்; தீம்குரல் - இனிய குரல்; துணையோடு கூடியிருத்தலால் இனிய குரலாயிற்று. அகவல் - அழைத்தல்; ஏதிலாளர் - அயல்தன்மை பெற்றவர். ஏதிலாளர் எனப் பன்மையில் கூறியவள் பின் புனையல், தொடாஅல் என ஒருமையில் கூறியமை அவள் கொண்ட சினக் குறிப்பை வெளிப்படுத்தும்.

தலைவன் பிரிந்தவழித் தலைவி காய்ந்து கூறியது என இப் பாடலுக்குக் கருத்துரைப்பர் நச்சினார்க்கினியர் (தொல். கற்பு. 6).

192. பாலை — தலைவி கூற்று

ஈங்கே வருவர் இனையல் அவர்என
அழாஅற்கோ இனியே நோய்நொந்து உறைவி
மின்னின் தூவி இருங்குயில் பொன்னின்
உரைதிகழ் கட்டளை கடுப்ப மாச்சினை
நறுந்தாது கொழுதும் பொழுதும்
வறுங்குரற் கூந்தல் தைவரு வேனே.

— கச்சிப்பேட்டு நன்னாகையார்

பிரிவிடை வற்புறுத்த வன்புறை எதிரழிந்து கிழத்தி உரைத்தது.

நோயினால் வருந்தி உறையும் தோழியே! தலைவர் இவ்விடத்தில் மீண்டு வருவர்: வருந்தாதே என்று சொல்வது நான் அழாமல் இருப்பதற்காகவோ? மின்னுகின்ற இனிய இறகுகளையுடைய கரிய குயில் தன் மேனி பொன்னை உரைத்த துகள் விளங்குகின்ற உரைகல்லை ஒப்ப மாமரத்தின் கிளைகளில் நறுமணமுள்ள பூந்தாதைக் கோதுகின்ற இளவேனிற் காலத்திலும் அவர் வாராமையால் அழகு செய்யப்பெறாத வெறுங்கூந்தலைத் தடவுவேன்.

குயில் மாவின் நறுந்தாதைக் குடையும்பொழுது என்றமையால் இளவேனிற்காலம் என்பது புலப்படும். தலைவனைப் பிரிந்து தனித்திருக்கும் மகளிர் கூந்தல் முதலியவற்றை ஒப்பனை செய்யார் என்பது தெரியவரும்.

குரற் கூந்தல் - கொத்தாக அமைந்த மயிர் முடி. உரைதிகழ் கட்டளை - உரைகல்.

193. முல்லை — தலைவி கூற்று

மட்டம் பெய்த மணிக்கலத் தன்ன
இட்டுவாய்ச் சுனைய பகுவாய்த் தேரை
தட்டைப் பறையின் கறங்கும் நாடன்
தொல்லைத் திங்கள் நெடுவெண் ணிலவின்
மணந்தனன் மன்னெடுந் தோளே
இன்றும் முல்லை முகைநா றும்மே.

— அரிசில்கிழார்

தோழி கடிநகர் புக்கு, 'நலம் தொலையாமே நன்கு ஆற்றினாய்' என்றாட்குக் கிழத்தி உரைத்தது.

தோழி! கள்ளினைப் பெய்துவைத்த நீலக்குப்பிகளைப் போன்ற சுருங்கிய வாயையுடைய சுனையிடத்துள்ளதாகிய பிளந்த வாயையுடைய தேரைகள் தட்டைப்பறை போல ஒலிக்கும் நாட்டையுடைய தலைவன் களவுக்காலமாகிய முந்தைய மாதத்தில் நெடிய வெண்ணிலா வொளியிலே என் நீண்ட தோள்களைத் தழுவினான். அதனால் இப்பொழுதும் அவன் மேனியில் அணிந்திருந்த முல்லை முகையின் மணம் என் தோள்களிலே கமழும்.

தலைவன் களவுக் காலத்துச் செய்த தலையளி காரணமாக என் மேனி நலம் குன்றாது அமைந்தது என்பதாம்.

மட்டம் - கள்; மணிக்கலம் - நீலநிறக்கலம், குப்பி; இட்டு வாய் - சிறியவாய்; தட்டை - மகளிர் தினைப்புனத்தில் கிளி

முதலிய பறவைகளை ஓட்டுதற்குப் பயன்படுத்தும் கருவிகளுள் ஒன்று.

194. முல்லை — தலைவி கூற்று

என்னெனப் படுங்கொல் தோழி மின்னுவர
வான்ஏர்பு இரங்கும் ஒன்றோ அதன்எதிர்
கான மஞ்ஞை கடிய ஏங்கும்
ஏதில கலந்த இரண்டற்குஎன்
பேதை நெஞ்சம் பெருமலக் குறுமே.

— கோவர்த்தனார்

பருவ வரவின்கண், 'ஆற்றாளாம்' எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

தோழி! மின்னல் வெளிப்பட மேகம் வானில் எழுந்து ஒலிக்கின்ற செயல் ஒன்று மட்டுமா? அந்த மேகத்திற்கு நேர் எதிராகக் காட்டிலுள்ள மயில்கள் விரைவனவாய் ஆரவாரிக்கும். இங்ஙனம் அயல் தன்மையுடையனவாய் வந்து சேர்ந்த இரண்டு பொருள்களாலும் பேதைமையுடைய நெஞ்சமானது பெருங்கலக்கத்தை அடையும். இந் நெஞ்சினது நிலை என்னவென்று சொல்லப் படுமோ.

கார்ப்பருவம் வந்து கூடியமையினால் என் உள்ளம் கலங்குகிறது என்பதாம்.

ஒன்றோ - எண்ணிடைச் சொல்; ஏர்பு - எழுகை; ஏதில - துன்பத்தைக் கருதாது வேறாம் தன்மையுடைய.

195. நெய்தல் — தலைவி கூற்று

சுடர்சினம் தணிந்து குன்றம் சேரப்
படர்சுமந்து எழுதரு பையுள் மாலை
யாண்டுஉளர் கொல்லோ வேண்டுவினை முடிநர்
இன்னாது இரங்கும் என்னார் அன்னோ
தைவரல் அசைவளி மெய்பாய்ந்து ஊர்தரச்
செய்வுறு பாவை அன்னஎன்
மெய்பிறி தாகுதல் அறியா தோரே.

— தேரதரன்

பிரிவிடைப் பருவ வரவின்கண் கிழத்தி மெலிந்து கூறியது.

தோழி! தடவுதலையுடைய அசைந்துவரும் இளங்காற்று உடம்பினிடத்தே தீண்டிப் பரவ, அதனால் பண்ணப்பெற்ற

பாவையைப் போன்ற எனது மேனி வேறுபாடு உடையதாதலை அறியாதவராகிய தலைவர், தாம் விரும்பிச் சென்ற பணியை முடித்துக் கொள்வாராய்க் கதிரவன் கடுமையான வெப்பம் தணியப் பெற்றவனாய் மேலை மலையைச் சென்று சேரத் துன்பத்தை மேற்கொண்டு தோன்றும் துயரத்தைத் தரும் மாலைக் காலத்திலே எங்கே இருக்கின்றாரோ? அந்தோ! துன்பம் தருவதாகிய இம் மாலைக்காலத்தில் தலைவி வருந்துவாள் என்று எண்ணாராயினரே.

பிரிவினால் மாலைக் காலத்தில் வருந்தும் என் நிலையைத் தலைவர் அறிந்தாரில்லையே என்றவாறாம்.

சினம் என்றது கதிரவன் வெயில் காய்தலை. பையுள் - துன்பம்; படர் - தனியராயினர் படும் துயர். அன்னோ - இரக்கக் குறிப்பு; பாவை - பொன்னாற் செய்த பாவை, ஊர்தரல் - பரத்தல்.

தலைவன் பிரியும் வரையில் பாவை போன்றிருந்த தலைவியின் அழகு அவன் பிரிவினால் கெட்டு மாறுபட்டது என்பதனைக் குறிப்பித்தவாறாம்.

196. மருதம் — தோழி கூற்று

வேம்பின் பைங்காய்என் தோழி தரினே
தேம்பூங் கட்டி என்றனிர் இனியே
பாரி பறம்பில் பனிச்சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கள் தண்ணிய தரினும்
வெய்ய உவர்க்கும் என்றனிர்
ஐய அற்றால் அன்பின் பாலே.

— மிளைக் கந்தன்

வாயில் வேண்டிப் புக்க கிழவற்குத் தோழி கூறியது,

ஐய! என் தோழியாகிய தலைவி முன்பு வேம்பின் பசிய காயைத் தந்தால் இனிதான பொலிவு பெற்ற வெல்லக்கட்டி என்று புகழ்ந்து சொல்வீர். இப்பொழுது பாரி மன்னனுக்குரிய பறம்பு என்னும் குன்றில் உள்ள குளிர்ந்த சுனையிலுள்ள தெளிந்த நீரைக் குளிர்மிக்க தை மாதத்தில் குளிர்ச்சி நிறைந்ததாகத் தந்தாலும் வெப்பம் உடையதாய் உவர்ப்புச் சுவை தராநின்றது என்று கூறாநின்றீர். நுமது அன்பின் இயல்பு அத் தன்மையதாம் என்றவாறு.

முன்பு தலைவியிடத்து நீர் அன்புடைய்வராயிருந்து இப்பொழுது அன்பற்றவராய் உள்ளீர் என்று எடுத்துரைத்தவாறு.

கட்டி - வெல்லக்கட்டி; பறம்பு - பறம்பு மலை; தெண்ணீர் - தெளிந்த தண்ணீர்.

தாம் எளியராகிய கற்புக் காலத்திலே களவுக் காலத்துத் தமது பெருமையை உணர்த்திய வருத்தத்தின்கண் தோழி கூறியது என்று இப் பாடலுக்குக் கருத்துரைப்பர் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் (தொல். கற்பு. 9).

197. நெய்தல் — தலைவி கூற்று

யாதுசெய் வாம்கொல் தோழி நோதக
நீர்எதிர் கருவிய கார்எதிர் கிளைமழை
ஊதையம் குளிரொடு பேதுற்று மயங்கிய
கூதிர் உருவின் கூற்றம்
காதலர்ப் பிரிந்த எற்குறித்து வருமே.

— கச்சிப்பேட்டு நன்னாகையார்

பருவ வரவின்கண் வற்புறுத்தும் தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

தோழி! நான் வருந்தும்படியாக நீரை ஏற்றுக் கொண்டுள்ள மின் இடி முதலிய தொகுதிகளையுடைய கார் காலத்தை ஏற்றுக் கொண்டு கிளைத்த மழையினால் உளதாகிய ஊதைக் காற்றினால் விளைந்த குளிர்ச்சியோடு மிகமயங்கிக் கலந்த கூதிர்க்காலமாகிய உருவத்தைக் கொண்டு வந்துள்ள யமனாகக் காதலரைப் பிரிந்திருக்கும் என்னை இலக்காகக் கொண்டு வருகின்றதே. இதற்கு என்ன செய்வேனோ!

தலைவர் கூதிர்க் காலத்தில் திரும்பி வாராமையினால் என் உயிர் மிகுதியும் நைந்து அழிய நேரும் என்பது குறிப்பித்தபடியாம்.

கருவி - தொகுதி; ஊதை - வாடைக்காற்று; தனது உயிரைப் போக்குதற்குக் காரணமாய் அமைதலின் கூற்றம் என்றாள் என்க.

198. குறிஞ்சி — தோழி கூற்று

யாஅம் கொன்ற மரம்சுட்ட இயவில்
கரும்புமருள் முதல பைந்தாட் செந்தினை
மடப்பிடித் தடக்கை அன்ன பால்வார்பு
கரிக்குறட்டு இறைஞ்சிய செறிகோட் பைங்குரல்
படுகிளி கடிகம் சேறும் அடுபோர்

எஃகுவிளங்கு தடக்கை மலையன் கானத்து
ஆரம் நாறும் மார்பினை
வாரற்க தில்ல வருகுவள் யாயே.

— கபிலர்

தோழி குறியிடம் பெயர்த்துக் கூறியது.

யாம் மரங்களை வெட்டிச் சுட்ட காட்டுப் பகுதிகளில் கரும்பைப் போன்று விளங்கும் அடித்தண்டை யுடையவான பசிய தாள்களையுடைய தினைப்பயிரினது, இளம்பெண் யானையின் வளைந்த கையைப் போன்றனவாய்ப் பால் நிரம்பிய கரியை எடுக்கின்ற குறட்டைப் போல வளைந்த, தானிய மணிகள் நிறைந்த பசிய கதிர்க் குலைகளிலே வந்து படியும் கிளிகளை ஓட்டுவேமாக அவ்விடத்தே செல்வோம். இங்கே எம் தாய் வருவாள். பகைவரைக் கொல்லும் போர்க்குரிய வேலாயுதம் விளங்கும் பெரிய கைகளையுடைய மலையனது காட்டிடத்தில் வளர்ந்த சந்தனம் மணக்கின்ற மார்பையுடையையாய் வருதலைக் கைவிடுக.

யாஅம் கிளிகடிகம் சேறும் எனக் கூட்டுக. யாஅம் என்பது எம் தந்தை தமையன்மார் ஏவலரைச் சுட்டும் என்று கருதுவாரும் உளர். இயவு - இடம்; மருள் - உவமஉருபு. மடப்பிடி - இளம் பெண்யானை. மடப்பம் - இளமை; வார்பு - நிரம்பி; கரிக்குறடு - கரியைப் பற்றி எடுப்பதற்கு உரிய கருவி. குரல் - கதிர்; எஃகு - வேல்; மலையன் - மலையமான் திருமுடிக்காரி என்னும் வள்ளல். மலையம் என்பது பொதியில் மலையையும் சுட்டும் ஆதலின் மலையன் என்பது பொதியில் மலைக்குரிய கோமானையும் சுட்டும் என்றும் கருதுவர். பொதியில் மலை சந்தனம் மிக்குளதாதலின் இவ்வாறு கருத்துக்கொள்வர். மலையன் என்பது சேரவரசர்க்குரிய ஒரு பெயரும் ஆகும்.

யாம் இயவிற் சேறும் என்றமையால் நீயும் அங்கு வருக என்னும் பொருள் எச்சமாய் நிற்கும். எனவே இப் பாடல் குறியிடம் பெயர்த்துக் கூறியது என்பது விளக்கமாகும்.

இப் பாட்டிற்கு, தலைவனது குறையைக் கடிது முடியாமையைக் கருதும் தோழி குரவரைத் தான் அஞ்சித் தலைவியும் அவரை அஞ்சுவள் எனக் கூறுவனவற்றுள் இது யாயை அஞ்சுதல் கூறியது என்பர் நச்சினார்க்கினியர் (தொல். களவு 23).

199. குறிஞ்சி — தலைவன் கூற்று

பெறுவது இயையாது ஆயினும் உறுவது ஒன்று
உண்டுமன் வாழிய நெஞ்சே திண்தோள்
கைவள் ஓரிக் கானம் தீண்டி
எறிவளி கமழும் நெறிபடு கூந்தல்
மைஈர் ஓதி மாஅ யோள்வயின்
இன்றை அன்ன நட்பின் இந்நோய்
இறுமுறை எனஒன்று இன்றி
மறுமை உலகத்தும் மன்னுதல் பெறுமே.

— பரணர்

தோழி செறிப்பு அறிவுறுப்ப நெஞ்சிற்குக் கிழவன் உரைத்தது.

நெஞ்சே! திண்மையான தோள்களையும் கைவண்மையுமுடைய ஓரிவள்ளலது கானத்தைத் தொட்டு வீசுகின்ற காற்றைப் போல மணக்கின்ற நெறிப்பு அமைந்த கூந்தலாகிய மைபோன்று கரிய குளிர்ந்த தலைமயிரை யுடையளாகிய இவளிடத்து இன்றைய நிலையைப் போன்று என்றும் நிலைபெற்று விளங்கும் நட்பினால் விளைந்த இந்தக் காமநோயானது அழிந்துபடும் முறை என்பது ஒன்று இல்லாமல் மறுமை உலகத்து வாழ்விலும் நிலைபெறுதலைச் செய்யும். ஆதலின் தலைவியை இப் பிறவியில் அடைவது கைகூடாவிடினும் மறுமையுலகத்து இவளை அடைவதாகிய பயன் ஒன்று உளதாகும்.

தலைவியின் இற்செறிப்புக் காரணமாக இம்மையில் தலைவியைக் காணப்பெறேனோ என்றான் என்பதாம்.

ஓரி - வல்வில் ஓரி; கானம் - ஓரிக்குரிய கொல்லிமலைக்காடு; எறிவளி - வீசும் காற்று; மறுமை - மறுபிறவி.

இப் பாட்டை, தோழி இற்செறிப்பு அறிவுறுப்பத் தலைவன் ஆற்றானாய்க் கூறியது என்பர் நச்சினார்க்கினியர் (தொல். களவு. 12).

200. முல்லை — தலைவி கூற்று

பெய்த குன்றத்துப் பூநாறு தண்கலுழ்
மீமிசைத் தாஅய வீஇ சுமந்துவந்து
இழிதரும் புனலும் வாரார் தோழி
மறந்தோர் மன்ற மறவாம் நாமே
கால மாரி மாலை மாமழை
இன்இசை உருமினம் முரலும்
முன்வரல் ஏமம் செய்துஅகன் றோரே.

— ஔவையார்

பருவ வரவின்கண் ஆற்றாளாகிய தலைமகட்குத் தோழி, 'பருவம் அன்று; வம்பு' என்றவழித் தலைமகள் சொல்லியது.

தோழி! கார்காலத்துப் பெய்தற்குரிய மழையையுடைய இம் மாலைக்காலத்தில் வரும் கரிய மேகங்கள், விதைத்து வான் நோக்கிய உழவர்க்கு இனிய ஓசையையுடைய இடியேற்றை உடையவாகி முழங்கும். முன்பு மழை பெய்த குன்றினிடத்தே மலர் மணக்கின்ற குளிர்ந்த கலங்கலின் மேலே பரவிய மலர்களைக் காற்று தாங்கி வந்து தர, அருவி நீரும் விழும். கார்ப்பருவத்திற்கு முன்பே வருவேம் என்னும் பாதுகாப்பினைச் சொல்லிச் சென்ற தலைவர் இன்னும் வந்து சேர்ந்தாரில்லையே. அவர் உறுதியாக நம்மை மறந்தார் போலும்; ஆயினும் நாம் அவரை மறவோம்.

தலைவனை நினைந்து ஆற்றியிருப்பேன் என்னும் குறிப் பினைத் தலைவி வெளிப்படுத்தாளாயிற்று.

கலுழ் - கலங்கல்; காலமாரி - கார்கால மழை, பருவ மழை; இன் இசை உருமினம் - வித்தி வான் நோக்கும் உழவர்க்கு மழை வரும் என்பதால் இனிமை தருவதாயிற்று, அன்றியும் கார்ப் பருவத்தே கணவரைக் கூடினார்க்கு இனிமை செய்வதாக அமைந்தது என்றும் கொள்ளலாம்.

201. குறிஞ்சி — தலைவி கூற்று

அமிழ்தம் உண்கநம் அயல்இ லாட்டி
பால்கலப் பன்ன தேக்கொக்கு அருந்துபு
நீல மென்சிறை வள்உகிர்ப் பறவை
நெல்லி அம்புளி மாந்தி அயலது
முள்இல் அம்பணை மூங்கில் தூங்கும்
கழைநிவந்து ஓங்கிய சோலை
மலைகெழு நாடனை வரும்என் றோளே.

கடிநகர்புக்கு, 'வேறுபடாது நன்கு ஆற்றினாய்' என்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கரிய மெல்லிய சிறகுகளையும் கூரிய நகங்களையுமுடைய் வௌவால் பாலைக் கலந்தாற்போன்ற இனிய தேமாவின் பழத் தைத் தின்று அதன்பின் நெல்லியினது புளித்தகாயையும் உண்டு பக்கத்தில் உள்ளதாகிய முள்ளில்லாத அழகிய பருத்த மூங்கிலில் தொங்குகின்ற மூங்கிற்கழைகள் உயர்ந்து வளர்ந்த சோலைகளை யுடைய தலைவனை வரைவுக்கு ஆயத்தமாய் வருவான் என்று நம் அயல்மனைக்குரிய தலைவி உரைத்தாள். ஆதலின் அவள் அமுதத்தை உண்பாளாக,

அயலிலாட்டியின் இன்னுரை என்னை ஆற்றியிருக்கச் செய்தது என்று தலைவி சுட்டியவாறாம்.

அமுதம் உண்க என்றது மறுமையில் நற்பேறுபெறுக என்ப தாம். நெல்லிஅம் புளி - புளிப்புச் சுவையுடைய நெல்லிக்காய். நீல மென்சிறை வள் உகிர்ப் பறவை என்பது அடைமொழிகளால் வெளவால் என்பதனைச் சுட்டும். இனிய் தேமாம்பழத்தை உண்ட வெளவால் இடையே புளிப்புச்சுவையுடைய நெல்லிக் காயையும் உண்டு பின் முள் முதலிய இடையூறு இல்லாத மூங்கில் கோலில் தூங்கும் என்றது தலைவனின் நிலையைக் குறிப்பாய்ச் சுட்டிய படியாம். தலைவனும் களவில் இன்பம் நுகர்ந்து, இடையே நேர்ந்த தடைகளால் வரும் துன்பத்தையும் ஏற்று, இப்பொழுது வரைந்து கொண்டு இன்பம் துய்க்கும் நிலையை அடைந்தான் என்பதனைச் சுட்டும். நாடனைச் சிறப்பித்துரைக் கும் கருப்பொருட்புறத்ததாக இக் குறிப்புப் பொருள் தோன்றுவ தால் இஃது இறைச்சிப்பொருளாகும்.

202. மருதம் — தலைவி கூற்று

நோம்என் நெஞ்சே நோம்என் நெஞ்சே
புன்புலத்து அமன்ற சிறியிலை நெருஞ்சிக்
கட்குஇன் புதுமலர் முட்பயந் தாஅங்கு
இனிய செய்தநம் காதலர்
இன்னா செய்தல் நோம்என் நெஞ்சே!

— அள்ளூர் நன்முல்லை

வாயிலாகப் புக்க தோழிக்குத் தலைமகள் வாயில் மறுத்தது.

தோழி! என் நெஞ்சு மிகவும் வருந்தா நிற்கும். புன்புலமாகிய முல்லைநிலத்திலே நெருங்கி முளைத்த சிறிய இலைகளையுடைய நெருஞ்சியினது கண்ணுக்கு இனிமை தருவதாகிய புதிய மலர், நெருங்கித் தொடுவார்க்குத் துன்பம் விளைக்கும் முள்ளையும் தோற்றுவித்ததுபோல, முன்பு நமக்கு இனியவற்றைச் செய்து வந்த நம் காதலர், இப்பொழுது துன்பம் தருவனவற்றைச் செய்து வருதலால் என் நெஞ்சு வருந்தா நிற்கும்.

தலைவனுடைய புறத்தொழுக்கைக் குறிப்பால் சுட்டி, தலைவி வாயில் மறுத்தாளாயிற்று.

புன்புலம் - முல்லை நிலம்; அமல்தல் - நெருங்கி முளைத்தல்.

முன்பு தன்னுடன் கூடியிருந்து இன்பம் செய்தானாகிய தலைவன் இப்பொழுது பரத்தை ஒழுக்கத்தால் துன்பம் செய்த

வனாக மாறிவிட்டான் என்பதனை நெருஞ்சியின் பூவையும் முள்ளையும் காட்டிக் குறிப்பால் பெற வைத்துள்ளார் ஆசிரியர்.

203. மருதம் — தலைவி கூற்று

மலைஇடை யிட்ட நாட்டரும் அல்லர்
மரந்தலை தோன்றா ஊரரும் அல்லர்
கண்ணிற் காண நண்ணுவழி இருந்தும்
கடவுள் நண்ணிய பாலோர் போல
ஒரீஇ ஒழுகும் என்னைக்குப்
பரியலென் மன்யான் பண்டுஒரு காலே

— நெடும்பல்லியத்தன்

வாயிலாகப் புக்க தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

தோழி! நம் தலைவர் மலைகள் இடையிட்டுக் கிடக்கும் தொலைதூரமான நாட்டினரும் அல்லர்; மரங்களின் உச்சிகள் மறைத்தலால் கண்ணிற்கு எட்டாத காடிடையிட்ட தூரத்துள்ள ஊரினரும் அல்லர். நாம் கண்ணாலே நித்தமும் காணும்படியாக விரைவில் சென்றடைதற்குரிய அணிமையிடத்திலிருந்தும், முனிவரை அடுத்து வாழும் பகுதியினரைப் போல உள்ளத்தால் நீங்கி நடக்கின்ற என் தலைவன்பொருட்டு முன்பு ஒரு காலத்தே பரிவுடையவளா யிருந்தேன்; இப்பொழுது அதுவும் நீங்கியது.

பரத்தையரை நாடித் தலைவியைப் புறக்கணித்து ஒழுகும் தலைவனிடம் தாம் முன்பு கொண்டிருந்த அன்பின் நிலைமை அவன் புறத்தொழுக்கத்தால் நீங்கும் நிலையாயிற்று எனச் சுட்டியவாறாம்.

கண்ணிற் காண நண்ணுவழி என்றது அவன் சேரிப்பரத்தை யரைச் சார்ந்துள்ளமை குறித்துக் கூறியவாறு.

முனிவரை அடுத்தவர் தம் தூய்மையின்மை காரணமாக விலகிச் செல்லுவர்: அது போலத் தூய தலைவியை அகன்று செல்லும் தலைமகன் தூய்மையின்மையன் ஆயினான் என்ப தாம்.

முனிவரை அடுத்தவர் மனைவாழ்வைத் துறந்து செல்வர்; அதுபோல மனைவியை விடுத்துப் பரத்தையை நாடினன் என்றும் கருத்துரைப்பர்.

பண்டு பரியலென் என்றது முந்திய களவுக் காலத்தைச் சுட்டும். இப்பொழுது அவன் தகாத ஒழுக்கத்தால் பரிவிலன் ஆயினேன் என்பதனை வெளிப்படுத்தாளாயிற்று.

204. குறிஞ்சி — பாங்கன் கூற்று

காமம் காமம் என்ப காமம்
அணங்கும் பிணியும் அன்றே நினைப்பின்
முதைச்சுவற் கலித்த முற்றா இளம்புல்
மூதா தைவந் தாங்கு
விருந்தே காமம் பெருந்தோ ளோயே.

— மிளைப்பெருங்கந்தன்

தலைமகற்குப் பாங்கன் உரைத்தது.

பெரிய தோள்களையுடையவனே, காமம் காமம் என்று விலக்கத்தகும் பொருள் போல அதனைக் குறைத்துப் பேசுவர். அந்தக் காமம் எதிர்ப்பட்டாரைத் தீண்டி வருத்தும் தெய்வமும் அன்று; ஒருவரைப் பற்றித் துன்புறுத்தும் நோயும் அன்று. அதன் தன்மையை எண்ணி நோக்குவோமாயின், அது பழங்கொல்லையாகிய மேட்டுநிலத்தில் தழைத்த முதிராத இளம்புல்லை கிழட்டுப்பசு நாவால் தடவி இன்புற்றாற் போன்றதொரு புதிய இன்பத்தை யுடையதாகும்.

ஆர்வத்தால் நேர்வதாகிய உணர்வை அறிவால் அடக்கி ஒழுகுதல் வேண்டும் என அறிவுறுத்தியபடியாம்.

கிழட்டுப்பசு ஆர்வத்தால் இளம்புல்லைத் தடவியதேயன்றி அதற்குச் சுவைப்பதற்குப் பயன்படாது. காம நினைவும் புதுமையின்பமாய்த் தோற்றினும் அது பயன்தராது எனச் சுட்டியபடியாம். அறிவுடையாரிடத்தே காமம் தோன்றாது என்றும் அதுவன்றி மனத்தின்வழிச் செல்வார்க்குப் புதுமையாகத் தோன்றும் என்றும் தலைவனைப் பாங்கன் இடித்துரைக்கின்றான்.

இப் பாட்டை, பாங்கன் கூற்று எனக் குறிப்பிடுவர் பேராசிரியரும் நச்சினார்க்கியரும் (தொல். செய்யு. 189). தொல்காப்பியக் களவியலுரையில் நச்சினார்க்கினியர், தலைவன் உற்றதுரைப்பக் கேட்ட பாங்கன் உலகத்து நிலை நிற்கும் நற்குணங்களை அவனை நினைப்பித்துக் கழறிக்கூறியது.என்று குறிப்பிட்டுள்ளார் (தொல். களவு. 11).

205. நெய்தல் — தலைவி கூற்று

மின்னுச்செய் கருவிய பெயல்மழை தூங்க
விசும்புஆடு அன்னம் பறைநிவந் தாங்கு
பொலம்படைப் பொலிந்த வெண்தேர் ஏறிக்
கலங்குகடற் துவலை ஆழி ந னைப்பு

இனிச்சென் றனனே இடுமணற் சேர்ப்பன்
யாங்குஅறிந் தன்றுகொல் தோழிஎன்
தேம்கமழ் திருநுதல் ஊர்தரும் பசப்பே.

— உலோச்சன்

வரைவிடை 'ஆற்றாள்' எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

அலைகள் கொண்டுவந்து இட்ட மணல் மேடுகளைக் கொண்ட கடற்கரை நாட்டவனாகிய தலைவன், மின்னலைச் செய்கின்ற இடி முதலிய தொகுதிகளைக் கொண்ட பெய்தலையுடைய மேகமானது பெய்யத் தொடங்கியதாக, வானத்தில் அசைந்து செல்லும் அன்னமானது பறத்தலில் உயர்ந்து சென்றது போலப் பொற்படைகளால் பொலிவுற்று விளங்கிய வெண்ணிறம் பெற்ற தேரின் மேல் ஏறியவனாக, கலங்கிய கடல் நீரினது துவலைகள் தேர்ச்சக்கரத்தை நனைக்கும்படியாக, இப்பொழுது பிரிந்து சென்றான். அதனைப் பசலையானது எவ்வாறு அறிந்ததோ? என் மணம் கமழ்கின்ற அழகிய நெற்றியிடத்தே பசலை படரத் தொடங்கியுள்ளது.

தலைவன் பிரிந்த அப்பொழுதே தலைவியின் மேனியில் பசலை படர்ந்தது என்பதாம். இது, 'தொடுவுழி தொடுவுழி நீங்கிக் காதலர் விடுவுழி விடுவுழிப் பரத்தலானே' எனவரும் குறுந்தொகைப் பாடற்கருத்துடன் (399) ஒத்தமைந்துள்ளமை காணலாம்.

மழை - மேகம்; தூங்கல் - பெய்யத் தொடங்குதல்; படை என்பது தேர்த்தட்டுகளைக் குறித்தபடியாம். தேம் - மணம், இனிமை.

இப் பாட்டிற்கு, களவு அலராகாமல் யான் பிரிந்துழித் தலைவி கலங்குவள் என்று அஞ்சித் தலைவன் பிரியாது உறைதலின் பிரிவைக் கருதப் பெறாத தலைவி அவ்வாறன்றிப் பிரிந்துழிக் கலங்கியது என்று கருத்துரைப்பர் நச்சினார்க்கினியர் (தொல். களவு. 20).

206. குறிஞ்சி — தலைவன் கூற்று

அமிழ்தத் தன்ன அம்தீம் கிளவி
அன்ன இனியோள் குணனும் இன்ன
இன்னா அரும்படர் செய்யும் ஆயின்
உடன்உறைவு அரிதே காமம்
குறுகல் ஓம்புமின் அறிவுடை யீரே.

— ஐயூர் முடவன்

கூறிய பாங்கற்குக் கிழவன் உரைத்தது.

அறிவை உடையவரே! அமிழ்தத்தை ஒத்ததான அழகிய இனிய சொல்லையுடையவளும் அது போன்றே காண்பதற்கும் கலப்பதற்கும் இனிமை தருபவளும் ஆகிய அழகிய அத் தலைவியது குணமும் இத்தகைய இன்னாதனவாகிய பொறுத்தற்கு அரிய துன்பங்களைச் செய்யுமாயின் காமம் ஒருங்குகூடி வாழ்வதற்கு அரிதான ஒன்றாகும். ஆதலினால் அதனை அணுகுதலை விடுத்து அப்பாற் செல்லுமின்.

காமம் தாங்குதற்கு அரியதாய் என்னை வருத்துகின்றது என்று எடுத்துக் கூறியவாறாம்.

அம்தீம் கிளவி - அழகிய இனிய சொல்; அரும்படர் - மருந்தால் தீர்ப்பதற்கு அரிதான துன்பம்.

அறிவின்மையால் நான் தாங்குதற்கு அரிய காமநோயை உற்றேன். அறிவுடையீராகிய நீர் அந்நோய் வயத்ததாகாது அப் பாற் செல்லுமின் என்ற இதனால் தன் நிலையைப் புலப்படுத்தி, அதனைத் தீர்த்தற்கு உபாயம் உரையீர் என்று குறிப்பித்தபடியாம்.

207. பாலை — தலைவி கூற்று

செப்பினம் செலினே செலவுஅரிது ஆகும்என்று,
அத்த ஓமை அம்கவட்டு இருந்த
இனம்தீர் பருந்தின் புலம்புகொள் தெள்விளி
சுரஞ்செல் மாக்கட்கு உயவுத்துணை ஆகும்
கல்வரை அயலது தொல்வழங்கு சிறுநெறி
நல்அடி பொறிப்பத் தாஅய்ச்
சென்றெனக் கேட்டநம் ஆர்வலர் பலரே.

— உறையன்

செலவுக் குறிப்பு அறிந்து, 'அவர் செல்வார்' என்று தோழி சொல்லக் கிழத்தி உரைத்தது.

பாலை நிலத்தில் உள்ள ஓமை மரத்தினது அழகிய கிளைகளில் இருந்த தன் கூட்டத்தை விட்டுப் பிரிந்துவந்த பருந்தினது தனிமையை வெளிப்படுத்தும் தெளிந்த ஓசை, அந்த வழியில் செல்லுகின்ற மக்களுக்கு உசாவும் துணையாக அமைந்துள்ள கற்களைக் கொண்டுள்ள மலையின் பக்கத்துள்ளதாகிய பழமையாய்ப் பலரும் சென்று வருவதாகிய சிறிய வழியில் தாம் பிரிய இருப்பதைத் தலைவியிடம் சொல்லிச் செல்வதாயின் தாம்

செல்வது அரிதாய்த் தடைபடும் என்று எண்ணியவராய் நல்ல அடிகள் சுவடுகளைப் பதிக்கத் தாவிச் சென்றார் என்று கேள்வி யுற்ற நம்முடைய அன்பர் பலராவர்.

அவர்வழி நான் முன்பே அவருடைய செலவினை அறிவேன் என்பதாம்.

செப்பினம் - முற்றெச்சம்; செப்பி என்பது பொருள். கவடு - கிளை; புலம்பு - தனிமை; 'தோல் வழங்கு சிறுநெறி' என்று பாடம் கொண்டால் யானைகள் திரிகின்ற வழி என்பது பொருளாம். ஆர்வலர் - அன்புடையார்.

208. குறிஞ்சி — தலைவி கூற்று

ஒன்றேன் அல்லேன் ஒன்றுவென் குன்றத்து
பொருகளிறு மிதித்த நெரிதாள் வேங்கை
குறவர் மகளிர் கூந்தற் பெய்ம்மார்
நின்றுகொய மலரும் நாடனொடு
ஒன்றேன் தோழி ஒன்ற னானே.

— கபிலர்

வரைவிடை. 'ஆற்றல் வேண்டும்' என்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

தோழி! நான் தலைவனோடு பொருந்தாத தன்மையள் அல்லேன்; அவனோடு பொருந்தும் இயல்பினையுடையேன். ஆயினும் வேற்று வரைவு வந்துறும் நிலைமை காரணமாக, மலையினிடத்து ஒன்றோடொன்று போரிடும் ஆண்யானைகளினால் மிதிக்கப்பட்டதனால் நெரிந்த அடிமரத்தையுடைய வேங்கைமரம் தாழ்வுற்றுக் குறமகளிர் தம்முடைய கூந்தலில் அணிந்துகொள்ளும் வகையில் மலர்தற்குரிய நாடனோடு பொருந்தேன்.

தலைவன் வரைவு நீட்டித்ததனால் வேற்று வரைவு நேர்தற்கு இடமாகின்றது என்றே நான் வருந்தினேன் என்பது கருத்து.

ஒன்றுதல் - பொருந்துதல்; ஒன்றனான் - ஒருகாரணத்தினால்.

போர்செய் களிற்றால் மிதிக்கப்பட்ட வேங்கை மரம் நெரிந்து பூமியில் தாழ்ந்து குறமகளிர் நின்றபடியே மலர் கொய்யும் படியாக விளங்கும் என்று தலைவி சுட்டுவது ஓர் உட்கிடையை வெளிப்படுத்தும். வேற்றுவரைவால் மனம் கலங்கிய யானும் தலைவன் வரின் அவனோடு உடன் சென்று வாழ்தற்கும் ஒருப்பட

உள்ளேன் என்பதைக் குறிக்கின்றாள். இக் கூற்றுகள் இறைச்சிப் பொருள் ஆகும்.

இப் பாட்டிற்கு, தலைவி உள்ளுறை உவமம் கூறுங்கால் அவள் அறியும் கருப்பொருள்களானே கூறல் வேண்டும். பொரு களிறு மிதித்த நெரிதாள் வேங்கைமரம் படப்பையில் உள்ளதாக லானும் தன்னால் பூக்கொய்யப்படுமாகலானும் அஃது அவள் அறி கிளவி எனப்பட்டது என்று விளக்கம் தருகிறார் பேராசிரியர் (தொல். உவம. 26).

இளம்பூரணர் இப் பாடலில் இறைச்சிப்பொருள் உளது என விளக்கம் தருகிறார் :

இறைச்சிப் பொருள் பிறிதுமோர் பொருள் கொள்ளக்கிடந் தது. வரைவெதிர் கொள்ளாது தமர் மறுத்தவழித் தலை மகனோடு ஒன்றுமாறு என்னெனக் கவன்ற தோழிக்கு உடன் போதற் குறிப்பினளாய்த் தலைமகள் கூறியது. ஆதலின், இதனுள் பொருகளிறு என்றமையால் தலைமகள் தமர் தலைமகன் வரைவிற்கு உடன்படுவாரும் மறுப்பாருமாகி மாறுபட்டனர் என்பது தெரிகின்றது. பொருகளிறு மிதித்த வேங்கை என்ற தனால் பொருகின்ற இரண்டு களிற்றினும் மிதிப்பது ஒன்றாகலின் வரைவுடன்படாதார் தலைமகனை அவமதித்தவாறு காட்டிற்று. வேங்கை நின்று கொய்ய மலரும் என்றதனான் முன்பு ஏறிப் பறித் தல் வேண்டுவது இப்பொழுது நின்று பறிக்கலாயிற்று என்னும் பொருள் பட்டது. இதனானே பண்டு நமக்கு அரியனான தலைமகன் தன்னை அவமதிக்கவும் நமக்கு எளியனாகி அருள் செய்கின்றான் எனப் பொருள்கொளக் கிடந்தவாறு காண்க (தொல். பொருள். 34 இளம்).

நச்சினார்க்கினியர் இப் பாடலை உள்ளுறை உவமத்தின் பாற் படுத்திக் கருத்துரைக்கிறார். உள்ளுறை உவமம் தெய்வம் ஒழிந்த கருப்பொருளை நிலமாகக் கொள்ளும். இக் குறுந்தொகை பிறி தொன்றன் பொருட்டுப் பொருகின்ற யானையால் மிதிப்புண்ட வேங்கை நசையற ஓங்காது மலர்கொய்வார்க்கு எளிதாகி நின்று பூக்கும் நாடன் என்றதனானே தலைவன் நுகரும் காரணத் தானன்றி வந்து எதிர்ப்பட்டுப் புணர்ந்து நீங்குவான் எம்மை இறந்துபாடு செய்வியாது ஆற்றுவித்துப் போயினான் எனவும், அதனானே நாமும் உயிர் தாங்கியிருந்து பலரானும் அலைப் புண்ணா நின்றனம் வேங்கைமரம் போல எனவும் உள்ளத்தான் உவமங்கொள்ள வைத்தவாறு காண்க என்பர் (தொல். அகத். 47),

209. பாலை — தலைவன் கூற்று

சுரந்தலைப் பட்ட நெல்லிஅம் பசுங்காய்
மறப்புலிக் குருளை கோள்இடம் கறங்கும்
இறப்புஅருங் குன்றம் இறந்த யாமே
குறுநடை பலஉள் ளலமே நெறிமுதல்
கடற்றில் கலித்த முடச்சினை வெட்சித்
தளைஅவிழ் பல்போது கமழும்
மழைஇருங் கூந்தல் மடந்தை நட்பே.

— பாலை பாடிய பெருங்கடுங்கோ

பொருள் முற்றி மறுத்தரும் தலைமகன் தோழிக்கு உரைப் பானாய்க் கிழத்தியைத் தெருட்டியது.

பாலை வழியில் காணப்பட்ட நெல்லி மரத்தினது பசிய காய்கள் புலியின் குட்டிகள் இரைகொள்ளும் இடத்தில் ஓடி யுருளும் கடத்தற்கரிய குன்றுகளைக் கடந்து சென்ற யாம், குறு நடையிட்டுச் செல்லும் தோழி! பலவற்றையும் நினைத்திலேம். வழியினிடத்தேயுள்ள காட்டிடத்தில் நன்கு தழைத்த வளைந்த கிளைகளையுடைய வெட்சியினது முறுக்கு அவிழும் பல பேரரும்பு கள் மணக்கின்ற மேகம்போல் கரிய கூந்தலையுடைய தலைவியின் நட்பை நினைத்திருந்தோம்.

தலைவியைத் தாம் என்றும் மறந்ததில்லை என்பதனை வெளிப்படுத்தவாறாம்.

கூந்தலுக்கு அடைமொழியாக, கருமைப் பொருளைத் தரும் மை, மழை என்ற இரண்டு பாடங்களிலும் மழை என்பது முந்திய அடியில் வரும் 'தளையவிழ்' என்பதற்கு ஏற்ப எதுகை நயமுடைய பாடமாகும். அன்றியும் மடந்தை எனவரும் மூன்றாம் சீர்க்கு ஏற்புடைய மகரமோனையாகவும் இது அமைகிறது. எனவே இப் பாடம் கொள்ளப்பெற்றது.

இறத்தல் - கடத்தல்; நட்பு - கூட்டம்; கறங்குதல் - உருளுதல்.

210. முல்லை — தோழி கூற்று

திண்தேர் நள்ளி கானத்து அண்டர்
பல்ஆ பயந்த நெய்யின் தொண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு
எழுகலத்து ஏந்தினும் சிறிதுஎன் தோழி
பெருந்தோள் நெகிழ்த்த செல்லற்கு
விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே.

— காக்கைபாடினியார் நச்செள்ளையார்

பிரிந்து வந்த தலைமகன், 'நன்கு ஆற்றுவித்தாய்' என்றார்க்குத் தோழி உரைத்தது.

வலிமை பெற்ற தேரினையுடைய நள்ளி என்னும் வள்ளலது காட்டிலுள்ள இடையர்களுக்குரிய பல பசுக்கள் தந்த நெய்யோடு தொண்டி என்னும் ஊரில் உள்ள வயல்களில் விளைந்த வெண்ணெல் அரிசியால் ஆக்கிய வெண்மையான சோற்றை ஏழு கலங்களில் இட்டுவைத்து ஏந்தி அளித்தாலும் என் தோழியது பெரிய தோள்களை மெலியச் செய்த துன்பத்தைப் போக்கும் பொருட்டாக விருந்தினர் வருமாறு கரைந்த காக்கைக்குரிய பலிச்சோறு சிறிய அளவினதே யாகும்.

காக்கை கரையும் காரணமாகத் தலைவன் வரவுண்மை அறிவித்து அவளைத் தான் ஆற்றுவித்ததாகத் தோழி எடுத்துரைத்தாளாயிற்று.

நள்ளி - வள்ளல்கள் எழுவருள் ஒருவன்; கோப்பெருநள்ளி என்பது இவனுடைய முழுப் பெயர். கானம் - முல்லை நிலம்; தொண்டி - மேல் கடற்கரையில் உள்ள ஓர் துறைமுகப் பட்டினம்.

இளம்பூரணர், குற்றமில்லாத தலைமகனைச் சுட்டிய தெய்வக் கடன் கொடுத்தற்கண் தோழிக்குக் கூற்று நிகழ்ந்தது என்பதற்கு இப் பாடலைக் காட்டுவர் (தொல். கற்பு. 9).

211. பாலை — தோழி கூற்று

அம்சில் ஓதி ஆய்வளை நெகிழ
நொந்தும்நம் அருளார் நீத்தோர்க்கு அஞ்சல்
எஞ்சினம் வாழி தோழி எஞ்சாத்
தீய்ந்த மராஅத்து ஓங்கல் வெஞ்சினை
வேனில் ஓர்இணர் தேனொடு ஊதி
ஆராது பெயரும் தும்பி
நீர்இல் வைப்பின் சுரன்இறந் தோரே.

— காவன்முல்லைப் பூதனார்

'இடைச்சுரத்துக் கவலுவன கண்டு நம்மை ஆற்றார் என நினைந்து மீள்வர்கொல்?' எனக் கவன்ற கிழத்திக்குத் தோழி சொல்லியது.

தோழி! கரிந்துபோன மராமரத்தினது கரியாது எஞ்சிய உயர்தலையுடைய வெம்பிய கிளைகளிலே வேனிற்காலத்து மலர்ந்த ஒற்றைப் பூங்கொத்தைத் தேன் என்னும் சாதிவண்டி

னோடு கூடி ஊதிய வண்டானது அதனிடத்து ஒன்றும் இல்லாமையால் உண்ணாது திரும்பி வருகின்ற நீர் இல்லாத இடங்களையுடைய பாலை நிலத்தைக் கடந்து சென்றிருக்கும் நம் தலைவர், அழகிய சிலவாகிய கூந்தலையுடைய தலைவியே நீ அணிந்த வளைகள் நெகிழும்படி வருந்தியும் நமக்கு அருள் செய்யாது நம்மைப் பிரிந்து சென்றோராகிய தலைவரின் பொருட்டாக அச்சங்கொள்ளுதலை நாமும் விடுத்தோம்.

அவர் அத்துணை விரைவில் வருவாரோ எனத் தாம் கொண்ட ஐயத்தைத் தோழி வெளிப்படுத்தளாயிற்று.

இடைச்சுரத்து வினைமுடியாமல் மீள்தல் முறையன்று என்பது கருதித் தலைவி மீள்வரோ எனக் கவன்றாள் என்பதாம். எஞ்சாச் சினை, தீய்ந்த மராஅத்துச் சினை எனக் கூட்டுக.

212. நெய்தல் — தோழி கூற்று

கொண்கன் ஊர்ந்த கொடுஞ்சி நெடுந்தேர்
தெண்கடல் அடைகரைத் தெளிமணி ஒலிப்பக்
காண வந்து நாணப் பெயரும்
அளிதோ தானே காமம்
விளிவது மன்ற நோகோ யானே.

— நெய்தற் கார்க்கியன்

குறை நேர்ந்த தோழி குறைநயப்பக் கூறியது.

தலைவன் ஏறிச் சென்ற கொடுஞ்சினையையுடைய நெடுந்தேரானது தெளிந்த நீரையுடைய கடலடுத்த கரையிடத்தே தெளிந்த ஓசைபெற்ற மணி ஒலி செய்யுமாறு நாம் காணும்படியாக வந்து பின்பு நாம் காணும்படியாக மீண்டு செல்லும் அவன் பெற்ற காமம் இரங்கத் தக்கது. அது உறுதியாக அழிதற்குரியதும் ஆகும். அதனால் யான் வருந்துகின்றேன்.

தலைவன் தன் குறை நிறைவுறாமல் மீண்டு சென்றான். ஆதலால் அவன் குறையை நீக்குதல் உன் கடன் எனக் குறிப்பித்தலால் தலைவி குறை நயப்பக் கூறியதாயிற்று.

கொண்கன் - நெய்தல் நிலைத்தலைவன்; கொடுஞ்சி-தாமரை மொட்டின் வடிவமாகச் செய்து தேர்த்தட்டின் முன் நடப்படுவது. தேரை நடத்திச் செல்வார்க்கு இது பற்றுக்கோடாக அமையும்.

நாம் காணுமாறு வந்து பெயரும் தலைவனது குறையைப் போக்குதல் உன் கடனாம் என்பது தோழியின் குறிப்புரையாகும்.

அடைகரை - கடலடுத்த கரை; தெளிமணி - தெளிந்த ஓசையை எழுப்பும் மணி.

213. பாலை — தோழி கூற்று

நசைநன்கு உடையர் தோழி ஞெரேரெனக்
கவைத்தலை முதுகலை காலின் ஒற்றிப்
பசிப்பிணிக்கு இறைஞ்சிய பருஉப்பெருந் ததரல்
ஒழியின் உண்டு அழிவுஇல் நெஞ்சின்
தெறித்துநடை மரபின்தன் மறிக்கு நிழல்ஆகி
நின்றுவெயில் கழிக்கும் என்பநம்
இன்துயில் முனிநர் சென்ற ஆறே.

— கச்சிப்பேட்டுக் காஞ்சிக்கொற்றன்

நம்பெருமான் நம் பொருட்டு இடைநின்று மீள்வான் எனக் கவன்ற தலைமகட்குத் தோழி உரைத்தது.

தோழி! தலைவர் உன்னிடம் விருப்பம் மிக உடையவர்; கடமை காரணமாக நம்மொடு கொள்ளும் இனிய துயிலை வெறுத்துப் பிரிந்து அவர் சென்ற வழியில் விரைவாகக் கவடுபட்ட கொம்புகளையுடைய முதிய ஆண்மான் காலால் உதைத்துத் தன் பசிப்பிணியைப் போக்கும் பொருட்டாக வளைந்த பருத்த மரப்பட்டையைத் தன் குட்டி உண்டு பின்னர் எஞ்சியதைத் தான் உண்டு தளராத நெஞ்சத்தோடு துள்ளி நடக்கும் இயல்புடைய குட்டிக்குத் தான் நிழலாக அமைந்து நின்று வெயிலை நீங்கச் செய்யும் என்று கூறுவர்.

முதிய கலையைப் போன்று தலைவனும் பொருளீட்டும் கடமை முற்றித் தன்னைச் சார்ந்தார்க்கு நிழலாக விளங்குவான் என்பதாம்.

நசை - விருப்பம்; ஞெரேரென - விரைவாக; ததரல் - சிதைந்த மரப்பட்டை; வெயில் கழிக்கும் - வெயிற்பொழுதைப் போக்கும். முதிய ஆண்மான் தன் பசியைத் தீர்ப்பதில் நாட்டமின்றி மறியின் பசியை நீக்கியும் தன்மேல் வெயிலைத் தாங்கித் தன் மறிக்கு நிழலைத் தந்தும் காத்தல் போலத் தலைவன் பொருளீட்டிச் சுற்றத்திற்கு உதவி எல்லாருக்கும் நிழலாய் நன்மை செய்பவனாய் விளங்குவான் என்னும் கருத்து வெளிப்படலால் இஃது இறைச்சிப் பொருளாம்.

214. குறிஞ்சி — தோழி கூற்று

மரம்கொல் கானவன் புனம்துளர்ந்து வித்திய
பிறங்குகுரல் இறடி காக்கும் புறம்தாழ்
அம்சில் ஓதி அசைஇயல் கொடிச்சி

திருந்துஇழை அல்குற்குப் பெருந்தழை உதவிச்
செயலை முழுமுதல் ஒழிய அயலது
அரலை மாலை சூட்டி
ஏமுற் றன்றுஇவ் அழுங்கல் ஊரே.

— கூடலூர்கிழார்

தோழி, வெறியாட்டு எடுத்துக் கொண்டவிடத்து அறத்தொடு நின்றது.

மரங்களை வெட்டி அழித்த காட்டில் வாழ் குறவன் அக் கொல்லையை உழுது விதைத்த விளங்குகின்ற கதிரையுடைய தினையைக் காவல் செய்யும் பின்புறம் தாழ்ந்த அழகிய சிலவாகிய கூந்தலையும் மெலிந்த சாயலையும் உடைய தலைவியினது நன்கு சமைக்கப்பெற்ற மேகலை ஆபரணத்தை அணிந்த அல்குலுக்குப் பெரிய தழையுடையை அளித்து அசோகினது பருத்த அடிமரம் தழையின்றி நிற்க, அதற்கு மாறுபட்டதாய் அரலை மாலையை முருகனுக்கு அணிவித்து இந்த ஆரவாரத்தையுடைய ஊர் இப்பொழுது மயக்கமுற்றது.

தலைவிக்குத் தழையுடை தந்த காதலன் இருக்க அன்னை முதலியோர் தெய்வ அணங்கு என்று வெறியாட்டு எடுக்க முற்பட்டனரே என உண்மை நிலையைத் தோழி சுட்டித் தலைவிபால் அன்புடையான் ஒருவன் உளன் என்பதனை வெளிப்படுத்த வாறாம்.

துளர்தல் - உழுதல், கொத்தலுமாம்; குரல் - கதிர்; அசைதல் - மெலிதல்; அசைஇயல் - மெலிந்த சாயல்; அசைந்து நடக்கும் இயல்பு என்றும் ஆம்; முழுமுதல் - அடிமரம்; அரலை - அரளி; அல்குல் இழை என்றது இடையில் அணியும் மேகலையைச் சுட்டும். ஏமுறுதல் - மயக்கமடைதல்.

215. பாலை — தோழி கூற்று

படரும் பைபயப் பெயரும் சுடரும்
என்றூழ் மாமலை மறையும் இன்றுஅவர்
வருவர்கொல் வாழி தோழி நீர்இல்
வறுங்கயம் துழைஇய இலங்குமருப்பு யானை
குறும்பொறை மருங்கின் அமர்துணை தழீஇக்
கொடுவரி இரும்புலி காக்கும்
நெடுவரை மருங்கின் சுரன்இறந் தோரே.

— மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார்

பிரிவிடைத் தோழி வற்புறுத்தியது.

தோழி! உன்னுடைய துன்பமும் மெல்ல மெல்ல நீங்கும்; ஒளி வீசும் சூரியனும் பெரிய அத்தகிரியில் மறைவான்; நீர் அற்றுப் போன வறுமையுற்ற குளத்தைத் துழாவிய விளங்கிய கொம்பு களையுடைய ஆண் யானைகள் குறிய பொற்றைகளுக்குப் பக்கத்தில் தாம் விரும்புகின்ற பிடிகளைத் தழுவிக்கொண்டு வளைந்த கோடுகளைக் கொண்டுள்ள பெரிய புலி தாக்கு தலினின்றும் பாதுகாக்கின்ற உயர்ந்த மலைப்பக்கத்தில் உள்ள பாலை நிலத்தைக் கடந்து சென்றவராகிய தலைவர் இன்று வருவர். நீ வாழ்வாயாக.

படர் - தலைவனை நினைந்து வருந்தும் துயர்; பைபய - மெல்ல மெல்ல; கொல் - அசைநிலை; நெடுவரை மருங்கில் கான் என்றமையால் இது குறிஞ்சி திரிந்த பாலை என்பது பெறப்படும்.

216. பாலை — தலைவி கூற்று

அவரே,
கேடுஇல் விழுப்பொருள் தருமார் பாசிலை
வாடா வள்ளிஅம் காடுஇறந் தோரே
யானே,
தோடுஆர் எல்வளை ஞெகிழ நாளும்
பாடுஅமை சேக்கையில் படர்கூர்ந் திசினே
அன்னள் அளியள் என்னாது மாமழை
இன்னும் பெய்ய முழங்கி
மின்னும் தோழிஎன் இன்உயிர் குறித்தே.

— கச்சிப்பேட்டுக் காஞ்சிக் கொற்றன்

பருவ வரவின்கண் ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

தோழி! அத் தலைவர் குற்றமற்ற சிறந்த செல்வத்தைத் தேடிவரும் பொருட்டாகப் பசுமையான இலைகளையுடைய வாடாத வள்ளிக்கொடி படர்ந்த நாட்டைக் கடந்து சென்றுள்ள னர். யான் தொகுதியாய்ப் பொருந்தியுள்ள ஒளிபடைத்த வளைகள் நெகிழும்படி பிரிவினால் ஏக்கமுற்று படுத்தற்கு அமைந்த படுக்கையிலே கிடந்து துன்பம் மிக உற்றேன். கரிய மேகம், அத்தகைய துன்பினாள், இரங்கத்தக்காள் என்று எண்ணாமல், இன்னும் மழை பெய்யும் பொருட்டு இடிமுழக்கம் செய்து என் இனிய உயிரைப் பறித்தலையே குறியாகக் கொண்டு மின்னுதலைச் செய்கின்றது.

இவ்வாறாகக் கார்கால வருகையால் தான் துன்புற நேர்ந் தமையைத் தலைவி வெளிப்படுத்தலாயினாள்.

குறுந்.—13

நிலையின்றி மாறிமாறிச் செல்லும் செல்வத்தைக் 'கேடு இல் விழுப்பொருள்' என்றது மங்கலமாம். உயிர்குறித்து - உயிரைக் கவர்தலை இலக்காக வைத்து.

217. குறிஞ்சி — தோழி கூற்று

தினைக்கிளி கடிகஎனின் பகலும் ஒல்லும்
இரவுநீ வருதலின் ஊறும் அஞ்சுவல்
யாங்குச்செய் வாம்எம் இடும்பை நோய்க்குஎன
ஆங்குயான் கூறிய அனைத்திற்குப் பிறிதுசெத்து
ஓங்குமலை நாடன் உயிர்த்தோன் மன்ற
ஐதே காமம் யானே
கழிமுதுக் குறைமையும் பழியும் என்றிசினே.

— தங்கால் முடக்கொல்லனார்

உடன் போக்கு நயப்பத் தோழி தலைமகட்குக் கூறியது.

தினைப்புனத்தில் வந்து விழும் கிளிகளை ஓட்டுவீராக என்று தாய் போகவிட்டாளாயின், பகற்காலம் நின்னோடு கூடியிருத்தற்குப் பொருந்தும். அவ்வாறு இன்மையின் (இற்செறிக்கப்பட்டிருத்தலால்) நீ இராப் பொழுதில் வருவதனால் வரும் வழியிடத்துள்ள துன்பங்களுக்கு அஞ்சுவோம். துன்பம் விளைக்கும் யாம் உற்ற காமநோயைப் போக்குதற்கு எவ்வகையான மாற்றினைச் செய்வோம் என்று யான் அப்படிக் கூறியதற்கு உயர்ந்த மலை நாட்டையுடைய தலைவன் வேறு'ஒன்றைக் கருதியவனாய்ப் பெருமூச்சுவிட்டு நின்றான். காமநோய் மிகவும் நுட்பமானது. அவன் வெய்துயிர்த்த குறிப்பை' உணர்ந்த யான் அச் செய்கை மிக்க அறிவுடைமையும் பழிக்குக் காரணமும் ஆகும் என்று உரைத்தேன்.

தலைவன் உன்னை உடன்கொண்டு செல்லும் விருப்புடையான் என்பதனைத் தலைவிக்கு எடுத்துரைத்தவாறாயிற்று.

தினையின்கண் வந்துபடியும் கிளி என்னும் பொருள் பயத்தலான் அவ் வேற்றுமைப் பொருள் தோன்ற 'தினைக்கிளி' என்னும் பாடம் கொள்ளப் பெற்றது.

உடன்போதலால் பழிவருமாயினும் அஃது அறிவுடைமைக்கு ஏற்ற செயலே எனச் சுட்டுதலால் தலைவி அதற்கு உடன்பட வேண்டும் எனக் கூறியவாறாயிற்று.

218. பாலை — தலைவி கூற்று

விடர்முகை அடுக்கத்து விறல்கெழு சூலிக்குக்
கடனும் பூணாம் கைந்நூல் யாவாம்
புள்ளும் ஓராம் விரிச்சியும் நில்லாம்
உள்ளலும் உள்ளாம் அன்றே தோழி
உயிர்க்குஉயிர் அன்னர் ஆகலின் தம்இன்று
இமைப்புவரை அமையா நம்வயின்
மறந்துஆண்டு அமைதல் வல்லியோர் மாட்டே.

— கொற்றன்

'பிரிவிடை ஆற்றாள்' எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

தோழி! நம் உயிருக்கு உயிர் போன்றவராதலின் தம்மையின்றி இமைப்பொழுதளவேனும் பிரிந்திருத்தலைப் பொருந்தாத நம்மை மறந்து தாம் சென்ற அந்த இடத்திலே தங்கியிருத்தற்கு வல்லவராகிய தலைவர் திறத்தில் பிளப்பையும் குகையையுமுடைய மலைப்பக்கத்தில் உள்ள வெற்றி பொருந்திய சூலாயுதத்தையுடைய கொற்றவைக்குப் பலிக்கடன் செலுத்துதலைச் செய்யோம்; கையில் காப்பு நூலைக்'கட்டோம். புள் நிமித்தத்தையும் பார்க்கமாட்டோம். அவரை நினைத்தலையும் செய்யோம்.

உயிருக்கு உயிரான தலைவர் ஆதலின் நம் துயரத்தை நினைந்து விரைந்து வருதல் வேண்டும் என்பதாம்.

விறல் - வெற்றி; சூலி - கொற்றவை; சூலாயுதத்தைக் கொண்டிருத்தலால் வந்த பெயர். தலைவன் வந்து கூடற்பொருட்டுக் கொற்றவையை வழிபடுதல் உண்டு என்பது இத் தலைவி கூற்றால் தெரியவரும். கடன் - வழிபடும் கடமை; தெய்வத்திற்குச் செய்யும் நேர்த்திக் கடனும் ஆம். வழிபடுவோர் நோன்பிருக்கும் காலத்துக் கையில் காப்புநூல் அணிவர். புள் ஓர்த்தல் - புள் நிமித்தம் பார்த்தல்; விரிச்சி - நற்சொல்.

219. நெய்தல் — தலைவி கூற்று

பயப்புஎன் மேனி அதுவே நயப்புஅவர்
நார்இல் நெஞ்சத்து ஆர்இடை யதுவே
செறிவும் சேண்இகந் தன்றே அறிவே
ஆங்கட் செல்கம் எழுகஎன ஈங்கே
வல்லா கூறி யிருக்கும் முள்இலை
தடவுநிலைத் தாழைச் சேர்ப்பர்க்கு
இடம்மன் தோழிஎந் நீரிரோ எனினே.

— வெள்ளூர் கிழார் மகனார் வெண்பூதியார்

சிறைப்புறம்.

தோழி! பசலை என் உடலிடத்தே உள்ளது. என் விருப்பமோ அவருடைய அன்பு இல்லாத நெஞ்சமாகிய புகுதற்கு அரிய இடத்தின்கண் உள்ளது. என் உள்ள அடக்கமும் நெடுந்தொலைவிற்கு நீங்கிச் சென்றுள்ளது. என் அறிவோ அவ்விடத்துச் செல்வோம், புறப்படுக என்று நம்மால் செய்ய இயலாத தொன்றைச் சொல்லி இங்கேயே தங்கியிருக்கும். முட்கள் பொருந்திய இலைகளையும் பருத்த அடிமரத்தையும் கொண்ட தாழை மரங்களையுடைய கடற்கரைத் தலைவருக்கு 'நீர் எந்நிலையில் உள்ளீரோ' என்று கேட்டு என் குறை தீர்ப்பாராயின், சொல்வதற்கு ஏற்ற செவ்வி இதுவேயாகும்.

தலைவர் வரைந்து கொண்டு நம் துயர் தீர்ப்பதற்கு ஏற்ற காலம் இது என்பதனைச் சுட்டிக் கூறியவாறாம்.

நயப்பு - விருப்பம்; செறிவு - அடக்கம். அறிவு - நன்மை தீமை அறிவிப்பது. இடம் - ஏற்ற செவ்வி; செறிவும் நிறையும் பெண்பாலர்க்கு உரிய சிறப்புப் பண்புகளாகும். நார் - அன்பு.

220. முல்லை — தலைவி கூற்று

பழமழைக் கலித்த புதுப்புன வரகின்
இரலை மேய்ந்த குறைத்தலைப் பாவை
இருவிசேர் மருங்கில் பூத்த முல்லை
வெருகுசிரித் தன்ன பசுவீ மென்பிணிக்
குறுமுகை அவிழ்ந்த நறுமலர்ப் புறவின்
வண்டுசூழ் மாலையும் வாரார்
கண்டிசின் தோழி பொருட்பிரிந் தோரே.

— ஒக்கூர் மாசாத்தி

பருவ வரவின்கண் கிழத்தி தோழிக்கு உரைத்தது.

தோழி! முன்பு பெய்த மழையினால் தழைத்த புனத்தில் உள்ள புதிய வரகு பயிரினிடத்தே சென்று ஆண்மான் மேய்ந்தமையால் குறைபட்ட நுனியையுடைய கதிர் நீங்கிய தாள் சேர்ந்துள்ள பக்கத்திலே மலர்ந்த முல்லைக் கொடியினது காட்டுப்பூனை சிரித்தாற்போன்ற தோற்றத்தையுடைய பசுமையான செவ்விப்பூவின் மெல்லிய பிணிப்பையுடைய் சிறிய அரும்புகள் மலர்ந்த மணம் வீசும் மலர்களையுடைய முல்லை நிலத்தில் வண்டுகள் வந்து மலரை ஊதும் பொருட்டுச் சுற்றுகின்ற மாலைக் காலத்திலும் பொருளீட்டும் பொருட்டாக நம்மைப் பிரிந்து சென்ற தலைவர் வாராராயினார். நம்பால் அவர் வாராதிருக்கின்ற இந் நிலையினை நீயும் காண்பாயாக.

முல்லைக் கார்காலத்தில் மலர்வதாதலின் அவர் குறித்துச் சென்ற கார்ப்பருவத்திலும் வந்திலர் என்பது குறித்தவாறு.

பழமழை - வரகு விதைக்கின்ற காலத்தில் பெய்த மழை; இரலை - ஆண்மான்; இருவி - கதிர் நீங்கிய தட்டை; வெருகு - காட்டுப்பூனை.

221. முல்லை — தலைவி கூற்று

அவரோ வாரார் முல்லையும் பூத்தன
பறியுடைக் கையர் மறியினத்து ஒழிய
பாலொடு வந்து கூழொடு பெயரும்
ஆடுடை இடைமகன் சென்னிச்
சூடிய எல்லாம் சிறுபசு முகையே.

— உறையூர் முதுகொற்றன்

பிரிவிடைப் பருவ வரவின்கண் வற்புறுத்தும் தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

தோழி! முல்லையும் பூத்தன. பறியோலையுடைய கையினரான இடையர்கள் குட்டிகளையுடைய ஆட்டின் திரள் உள்ள மந்தையில் சென்று தங்க, அவர்தம் இல்லத்திற்குப் பாலொடு வந்து தமக்கு உணவான கூழைப் பெற்று மீண்டு செல்லுகின்ற ஆடுகளையுடைய இடையன் தலையில் சூடிக் கொண்டன எல்லாம் சிறிய பசிய முல்லை அரும்புகளேயாகும்.

இத்தகைய கார்ப்பருவத்திலும் அவர் வந்தாரில்லை.

முல்லைப் பூத்தல் கார்காலத்திற்குரிய அறிகுறியாகும்; பறி - மழைக்காக இடையர்கள் தலையில் கவிழ்த்துக்கொள்ளும் கொங்காணி போன்றதோர் கருவி; இது பனையோலையால் செய்யப்படுவது.

மேய்ச்சல் நிலத்திலிருந்து பாலை வீட்டிற்குக் கொண்டுவந்து தந்துவிட்டுத் தமக்குரிய உணவாகிய கூழைப் பெற்றுச் செல்லுதல் இயல்பு. 'பாலொடு வந்து கூழொடு பெயரும் என்பதற்குப் பாலை விற்கும் பொருட்டு ஊருக்குக் கொண்டுவந்து அதற்கு மாற்றாகத் தாம் பெற்ற தானியங்களோடு மீண்டுவரும் என்றும் உரைக்கலாம். 'பொன்னொடு வந்து கறியொடுபெயரும்' (அகம். 149) என்பது போலப் பண்டமாற்று நிலையை உணர்த்துவதாக உள்ளது இத் தொடர்.

222. குறிஞ்சி — தலைவன் கூற்று

தலைப்புணைக் கொளினே தலைப்புணைக் கொள்ளும்
கடைப்புணைக் கொளினே கடைப்புணைக் கொள்ளும்
புணைகை விட்டுப் புனலோடு ஒழுகின்
ஆண்டும் வருகுவள் போலும் மாண்ட
மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகைச்
செவ்வெரிந் உறழும் கொழுங்கடை மழைக்கண்
துளிதலைத் தலைஇய தளிர்அன் னோளே.

— சிறைக்குடி ஆந்தையார்

பெட்டவாயில் பெற்று இரவு வலியுறுத்தது.

மாட்சிமைப்பட்ட மாரிக்காலத்துப் பிச்சியானது நீர் ஒழுகும் வளமான அரும்பினது சிவந்த புறத்தை ஒக்கும் கொழுவிய கடையையும் குளிர்ச்சியையும் உடைய கண்களையும் மழைத்துளி தன்னிடத்தே பொருந்தப்பெற்ற தளிரைப் போன்ற மேன்மையை யுடைய தலைவியானவள், இத் தோழி தெப்பத்தின் தலைப்பைக் கைப்பற்றினால் தலைவியும் தலைப்பைப் பிடித்துக்கொள்வாள்; இவள் தெப்பத்தின் கடைப்பகுதியைக் கைக்கொண்டால் தலைவி யும் அக் கடைப் பகுதியையே கொள்வாள். தெப்பத்தைக் கைவிட்டு இத் தோழி நீரோடு செல்லுமாயின் அவ்விடத்தும் தலைவி உடனேயே வருவாள்.

ஆதலின் இத் தோழி தலைவியொடு உளமொத்த நிலை யினாள் போலும். இதனால் தலைவன் தலைவியின் உயிர்த் தோழியைக் கண்டு கொள்கிறான் என்பதாம்.

புணை - தெப்பம்; பித்திகம் - பிச்சி; கார்காலத்தில் பூப்ப தாதலின் 'மாரிப் பித்திகத்து' என்று குறிப்பிடுகிறார். கண்ணின் கடை நீராடலால் சிவந்தது என்பதனைக் குறிப்பின் பெற வைத்தார்.

தோழி உடம்பட்டு விலக்கியது என்பதற்கு இறையனார் களவியல் இப் பாடலைக் காட்டுகிறது (இறை. 10). பெட்டவாயில் பெற்று இரவு வலியுறுப்பினும் என்பதற்கு இரட்டுற மொழிதல் என்பதனால், தலைமகள் தான் விரும்பப்பட்ட தோழியாகிய் எமக்கு வாயில் நேர்வாள் எனப் பெற்றுப் பின் இரந்து குறையுற நினைதல் உண்டு. அங்ஙனம் நினைந்தது என்பதற்கு இப் பாடலை எடுத்துக் காட்டுவர் இளம்பூரணர் (தொல். களவு. 11). தோழியிற் கூட்டம் (தொல். செய்யு. 186) என்பர் பேராசிரியர். தலைவன் தோழியை

இரந்து பின்னிற்பல் என வலித்தது. இது தலைவி அவட்கு இனையள் என்று கருதி அவளை வாயிலாகத் துணிந்தது. அன்றித் தோழி கூற்றெனில் தலைவியை அருமை கூறினன்றி இக் குறை முடிப்பலென ஏற்றுக் கொள்ளாள், தனக்கு ஏதமாம் என்று அஞ்சி; அன்றியும் தாமே குறையுறுகின்றாற்கு இது கூறிப் பயந்ததூஉம் இன்று என்பர் நச்சினார்க்கினியர் (தொல். களவு. 11).

223. குறிஞ்சி — தலைவி கூற்று

பேரூர் கொண்ட ஆர்கலி விழவில்
செல்வாம் செல்வாம் என்றி அன்றுஇவண்
நல்லோர் நல்ல பலவால் தில்ல
தழலும் தட்டையும் முறியும் தந்துஇவை
ஒத்தன நினக்குஎனப் பொய்த்தன கூறி
அன்னை ஓம்பிய ஆய்நலம்
என்னைகொண் டான்யாம் இன்னமால் இனியே.

— மதுரைக் கடையத்தார் மகன் வெண்ணாகன்

வரைவிடை வேறுபட்ட கிழத்தியது வேறுபாடு கண்டு வற்புறுத்தும் தோழிக்குக் கிழத்தி கூறியது.

தோழி! முன்பு ஒருநாள் பேரூரில் உள்ளார் எடுத்த ஆரவாரம் மிக்க விழாவிற்குப் போவோம் போவோம் என்று கூறினாய். அந் நாளில் நாம் புறப்படுகையில் நல்லோரால் சொல்லப்பட்ட நல்ல வாய்ச்சொற்களாகிய நிமித்தங்கள் இங்கே பலவாக நேர்ந்தன. கிளிகளை ஓட்டும் கருவிகளாகிய தழலையும் தட்டையையும் தழையுடையையும் எனக்குத் தந்து, இப் பொருள்கள் உனக்கு ஏற்றன என்று சொல்லிப் பின்னர் பல புனைந்துரைகளையும் கூறி, நம்முடைய தாய் பாதுகாத்து அளித்த என் அழகிய பெண்மை நலத்தை என்னுடைய தலைவன் கொள்ளை கொண்டு போனான். யாம் இப்பொழுது நலன் இழந்து இத் தன்மையேம் ஆயினேம்.

தலைவனால் நலன் இழந்தமை ஏதுவால் வேறுபாடு உற்றேன் எனத் தன்னிலை பேசினாள் தலைவி என்பதாம்.

தலைவனுடைய தொடர்பு தலைவி விழாவிற்குத் தோழியுடன் சென்றிருந்தபோது நேர்ந்தது என முன்னிகழ்வை நினைவு கூர்ந்து உரைக்கிறாள் தலைவி. நல்லோர் நல்ல - நல்லோர் வாயினின்று வெளிப்பட்ட நிமித்தமாகிய வாய்ச்சொல்; தழல் - கையால் சுற்றின காலத்துப் பிறக்கும் ஒலியால் கிளிகளை ஓட்டுவ

தாகிய ஒரு கருவி. தட்டை - மூங்கிற் கழியால் செய்யப்பெற்றுத் தட்டினால் ஓசை எழுப்பிப் பறவைகளை ஓட்ட உதவும் கருவி. முறி - தழை; இங்கே தழையுடையைச் சுட்டும்.

'நல்லோம் நல்ல' என்ற பாடமும் ஏற்கும் எனக்கொண்டு கருத்துரைப்பதும் உண்டு.

224. பாலை — தலைவி கூற்று

கவலை யாத்த அவல நீள்இடைச்
சென்றோர் கொடுமை எற்றித் துஞ்சா
நோயினும் நோய்ஆ கின்றே கூவல்
குரால்ஆன் படுதுயர் இராவிற் கண்ட
உயர்திணை ஊமன் போலத்
துயர்பொறுக் கல்லேன் தோழி நோய்க்கே.

— கூவன் மைந்தன்

பிரிவிடை இறந்துபடும் எனக் கவன்ற தோழி கேட்பக் கிழத்தி உரைத்தது.

கிணற்றினுள்ளே விழுந்த குரால் நிறப்பசு படும் துன்பத்தை இராப் பொழுதில் கண்ட ஊமையன் அதனைப் பிறருக்கு எடுத்துரைக்க இயலாது துன்புற்றது போல, என் பொருட்டுத் தோழி படும் துயரத்தை பொறுக்கும் ஆற்றல் இயல்லாதவளாயினேன். கவர்த்த வழிகளில் யாமரங்கள் உள்ள துன்பத்தைக் கொண்ட நீண்ட வழிகளில் பிரிந்து சென்றவராகிய தலைவரது கொடுமையை நினைந்து தூங்காதிருக்கும் துன்பத்தைவிடவும் மிக்க துன்பமாகின்றது.

என் பொருட்டுத் தோழி வருந்துகை என் பிரிவுத் துன்பத்தை மேலும் மிகச் செய்கின்றது என்பதாம்.

இடை - வழி; எற்றல் - நினைதல்; குரால்ஆன் - குரால் நிறமுள்ள பசு.

உயர்திணை ஊமன் என்பதில் உயர்திணை என்னும் அடை அஃறிணை ஊமனாகிய கோட்டானை விலக்கிற்று.

பிறருக்கு எடுத்துரைக்க இயலாது உள்ளத்தே குமைந்து கிடக்கும் துயரநிலை ஊமையனது நிலை போன்றதாயிற்று என்பதாம்.

225. குறிஞ்சி — தோழி கூற்று

கன்றுதன் பயமுலை மாந்த முன்றில்
தினைபிடி உண்ணும் பெருங்கல் நாட
கெட்டஇடத்து உவந்த உதவி கட்டில்
வீறுபெற்று மறந்த மன்னன் போல
நன்றி மறந்தனை ஆயின் மென்சீர்க்
கலிமயிற் கலாவத்து அன்னஇவள்
ஒலிமென் கூந்தல் உரியவா நினக்கே.

— கபிலர்

வரைவிடை வைத்துப் பிரிவார்க்குத் தோழி சொல்லியது.

யானைக் கன்று தன்னுடைய பாலுள்ள முலைகளைக் குடித்துக் கொண்டிருக்க முற்றத்தே உலரவைத்துள்ள தினையைப் பெண் யானை உண்ணுதற்கு இடமாகிய பெரிய மலை நாட்டையுடையவனே, கெட்டுப் போன காலத்தில் பிறரால் பெற்ற உதவியினை அரசுகட்டி லாகிய சிறப்பைப் பெற்றதும் மறந்துவிட்ட மன்னன் ஒருவனைப்போல, நீயும் யாம் செய்த உதவியை மறந்து வரைவு நீட்டிப்பாயாயின் இத் தலைவியின் மென்மைச் சிறப்புடைய ஆரவாரிக்கும் மயிலினது பீலியைப் போன்ற தழைத்த மெல்லிய கூந்தல் நினக்கே உரிமையுடையன வாகுமா?

யாம் செய்த நன்றியை மறவாது விரைவில் வரைந்து கொள்க எனத் தலைவனுக்கு அறிவுறுத்தியவாறாம்.

கெட்ட இடம் என்பது அகரம் தொகுத்துக் கெட்டிடம் என்றாகும். கட்டில் - அரசுகட்'டில்; வீறு - சிறப்பு; கலித்தல் - தழைத்தல்; கலாவம் - தோகை.

'மறந்தமையாய்' என்பது மூவசைச் சீராயும் பொருள் தெளிவின்றியும் உள்ளது. 'மறந்தனை' என்னும் பாடம் ஈரசைச் சீராயும்' பொருள் தெளிவுடையதாயும் காணப்படுகிறது. ஏடுகளில் இப் பாடமே மிகுந்து காணப்படுகிறது. எனவே இப் பாடம் கொள்ளப்பெற்றது.

உரியவாம், உரியவால் என வரும் இரண்டு பாடங்களும் உடன்பாட்டுப் பொருள்தருவனவாய் அமைகின்றன. நன்றி மறந்த தலைவனுக்கு அது உரியவாதல் இயல்பன்று. உரியவா என வினவாகத் தலைவனைக் கேட்டு அவன் வரைவினை விரைந்து செய்ய வேண்டும் என்பதை வற்புறுத்தும் பாங்கில் அமைதலின் இப் பாடமே சிறப்புடைத்தாகக் கொள்ளப் பெற்றது.

பெண்யானை தன் கன்றுக்குப் பாலூட்டியபடியே தன் பசிக்கு முற்றத்துத் தினையைத் தின்னுகிறது. அங்ஙனமே நீயும் பொருள் தேடும் உன் கடமையை நிறைவேற்றுவதோடு யானை கன்றிற்குப் பயந்தது போல இவளது நலனையும் பேண வேண்டும் என்னும் குறிப்புத் தோன்ற அமைதலின் இஃது இறைச்சிப் பொருளாம்.

நச்சினார்க்கினியர் இப் பாடலின் பொருளை விளக்கி இதனுள் இறைச்சிப் பொருள் அடங்கியிருத்தலையும் வெளிப் படுத்தியுள்ளார். அவர் தம் உரை விளக்கப் பகுதி வருமாறு :

கருப்பொருள் பிறிதோர் பொருட்கு உபகாரப்படும் பொருட் டாதலேயன்றி அக் கருப்பொருள் தன்னுள்ளே தோன்றும் பொருளும் உள. இதனுள், தான் கெட்டவிடத்து உதவின உதவியை அரசவுரிமை எய்திய மன்னன் மறந்தாற்போல நீ இரந்து துயருற்ற காலத்து யான் தலைவியை நின்னோடு கூட்டிய செய்ந்நன்றியை மறவாது இன்று நீ வரைந்து கொள்வாயாயின் இவள் கூந்தல் நினக்குரிய என்ற வழி, உவமையும் பொருளும் ஒத்து முடிந்தமையின் முன்னின்ற நாட என்பது உள்ளுறை உவமம் அன்றாய் இறைச்சியாம்.

என்னை? தன் கன்றிற்குப் பயன்பட்டுப் பிறர்க்கு உயிரைக் கொடுக்கின்ற தினையைத் தான் உண்டு அழிவு செய்கின்றாற் போல நீ நின் கருமம் சிதையாமல் பார்த்து எமக்கு உயிராகிய இவளைத் துயருறுத்தி எம்மை இறந்துபடுவித்தல் ஆகாது என்று உவமை எய்திற்றேனும், பின்னர் நின்ற பொருளோடு இயையாது இவ்வுவமம் உள்ளுறையுற்றுப் பொருள் பயவாது இறைச்சியாகிய நாடன் என்பதனுள்ளே வேறோர் பொருள் தோற்றுவித்து நின்றதேயாமாதலின் முலைமாந்த என்றது தன் கருமம் சிதையா மல் பார்த்து என்னும் துணையன்றி உள்ளுறை உவமப்பொருளை முற்ற உணர்த்தாமை உணர்க (தொல். பொருள். 36). இக் கருத்தை விளக்குமா போல,

கருப்பொருள் பிறிதோர் பொருட்கு உபகாரப் படுதலேயன்றி அக் கருப்பொருள் தன்னுள்ளே தோன்றும் பொருளும் உள. அஃது உள்ளுறை உவமம் அன்று, இறைச்சி என்று கொள்க என மாறனலங்கார உரைதரும் விளக்கமும் ஊன்றி நோக்கத் தக்கது (மாறன். பொருளணி. 291).

உதவி மறந்த மன்னன் என்பது பாரதக் கதையில் பாஞ்சால மன்னன் துருபதன் தான் துரோணாசாரியாருக்கு அளித்த வாக்கை மறந்து. பின் துயரமடைந்த நிகழ்ச்சியை ஒத்துள்ளது காணலாம்.

226. நெய்தல் — தலைவி கூற்று

பூவொடு புரையும் கண்ணும் வேய்என
விறல்வனப்பு எய்திய தோளும் பிறைஎன
மதிமயக் குறூஉம் நுதலும் நன்றும்
நல்லமன் வாழி தோழி அல்கலும்
தயங்குதிரை பொருத தாழை வெண்பூக்
குருகுஎன மலரும் பெருந்துறை
விரிநீர்ச் சேர்ப்பனொடு நகாஅ வூங்கே.

— மதுரை எழுத்தாளன் சேந்தம் பூதன்

வரைவிடை ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

தோழி! இரவெல்லாம் விளங்கிய அலைகளால் தாக்கப் பெற்ற தாழையினது வெண்ணிறப் பூவானது நாரையைப் போல மலரச் செய்வதற்கு இடமாகிய பெரிய கடற்றுறைகளைக் கொண்ட அகன்ற நீர்ப்பரப்பையுடைய தலைவனாகிய சேர்ப்ப னோடு அளவளாவி நகுவதற்கு முன்பு பூவை ஒத்தனவாய் விளங்கும் கண்களும் மூங்கிலைப்போல வெற்றியையுடைய அழகைப் பெற்ற தோள்களும் பிறை என்று சொல்லும்படியாகக் கண்டார் அறிவை மயங்கச் செய்யும் நுதலும் மிகவும் நல்லன வாய்ப் பொலிவுற்றிருந்தன. இப்பொழுது அந் நிலை போய் விட்டது.

தலைவனது பிரிவே தலைவியின் மேனிநலம் அழிந்தமைக்குக் காரணம் என்பதைக் குறிப்பிட்டவாறு.

விறல் வனப்பு - பிறர் வனப்பினும் விஞ்சி நிற்கும் அழகு நகுதல் - இங்குக் கூடிக்குலாவுதல்; இடக்கரடக்கிக் கூறியவாறு. சேர்ப்பன் - நெய்தல் நிலத் தலைவன்; வாழி - அசைநிலை. செந்தாழையும் உண்டாதலின் அதனை விலக்குதற்கு வேண்டி வெண்பூ என்று சுட்டப்பெற்றது.

227. நெய்தல் — தோழி கூற்று

பூண்வனைந் தன்ன பொலஞ்சூட்டு நேமி
வாள்முகம் துமிப்ப வள்இதழ் குறைத்த
கூழை நெய்தலும் உடைத்துஇவண்
தேரோன் போகிய கான லானே.

— ஓதஞானி

சிறைப்புறம்.

தேரில் வந்த தலைவன் மீண்டு சென்ற கடற்கரைச் சோலையிடத்தே பூணைப் பதித்தாற் போன்ற பொன்னாலாகிய சக்கரத்தின் வாள் போன்ற வாய்ப்பகுதி துண்டித்தலினால் வளப்பமான இதழ்கள் ஒடிந்த நெய்தற் பூக்களையும் கொண்டுள்ளது.

தலைவன் முன்னைநாள் இங்கு வந்திருந்தமையைக் குறிப்பிட்டாளாயிற்று.

முதல்நாள் தலைவனைக் குறியிடம் வந்தானில்லையே என்று அல்லகுறிப்பட்ட தலைவி மொழிய, அவன் வந்த தேர்ச் சுவடு தெரியவருவதனைத் தோழி சுட்டிக் கூறுகிறாள்.

தலைவனுடைய தேரினால் குறைக்கப்பட்டு வாடியிருக்கும் நெய்தற்பூவின் நிலைபோலத் தலைவன் கூடிப் பிரிந்து விரைவில் வரைய வாராமையால் தலைவி மேனி நலம் கெட்டு மெலிந்து துன்புறுகின்றாள் என்பதனை சுட்டிக்கூறுதலின் இஃது இறைச்சிப் பொருளாம்.

228. நெய்தல் — தலைவி கூற்று

வீழ்தாழ் தாழை ஊழுறு கொழுமுகை
குருகுஉளர் இறகின் விரிபுதோடு அவிழும்
கானல் நண்ணிய சிறுகுடி முன்றில்
திரைவந்து பெயரும் என்பநத் துறந்து
நெடுஞ்சேண் நாட்டார் ஆயினும்
நெஞ்சிற்கு அணியரோ தண்கடல் நாட்டே.

— செய்தி வள்ளுவன் பெருஞ்சாத்தன்

'கடிநகர் வேறுபடாது நன்கு ஆற்றினாய்' என்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

தோழி! நம் தலைவர் நம்மைவிட்டுப் பிரிந்து சென்று மிகத் தொலைவான நாட்டில் இருப்பவராயினும் அவர் நம் நெஞ்சிற்கு மிக அணியராயுள்ளார். அவருடைய தண்மையான கடலையுடைய நாட்டினிடத்தே விழுதுகள் தாழ்ந்து காணப்படும் தாழை மரங்களின் செழிப்பான அரும்பு நாரைகள் கோதுகின்ற சிறகினைப் போல இதழ்கள் மலர்கின்ற கடற்கரைச் சோலையிற் பொருந்திய சிற்றூரின் முன்னிடத்தில் அலைகள் வந்து மீண்டு செல்லும்.

நெஞ்சிற்கு அணியராய்தும் அவர் நாட்டோடு எங்கள் நாட்டுக்கு அலைகளின் தொடர்பு இருந்ததும் ஆற்றியிருக்கக் காரணமாயிற்று என்பதாம்.

நாரைகள் இறகினைக் கோதுவது போலத் தாழை முகைகள் இதழ் விரிந்து மலர்ந்தன என்னும் காட்சி இன்ப உவமையாயிற்று. வீழ் - விழுது; உளர்தல் - கோதுதல்; சேணோட்டார் - தூரதேசத் துள்ளவர்; கடிநகர் - தலைவி இல்லறம் நிகழ்த்தும் இல்லம்.

229. பாலை — கண்டோர் கூற்று

இவன்இவள் ஐம்பால் பற்றவும் இவள்இவன்
புன்தலை ஓரி வாங்குநள் பரியவும்
காதற் செவிலியர் தவிர்ப்பவும் தவிராது
ஏதில் சிறுசெரு உறுப மன்னோ
நல்லைமன் றம்ம பாலே மெல்இயல்
துணைமலர்ப் பிணையல் அன்னஇவர்
மணம்மகிழ் இயற்கை காட்டி யோயே.

— மோதாசனார்

இடைச் சுரத்துக் கண்டார் தம்முள்ளே சொல்லியது.

இவன் இவளுடைய கூந்தலைப் பற்றி இழுக்கவும், இவள் இவனது புற்கென்ற நிறமுடைய தலைமயிரைப் பிடித்து வளைத்து இழுப்பவளாய் ஓடவும், இவர்தம் மோதலை அன்புடைய செவிலித்தாயர் இடைமறித்துத் தடுக்கவும் விட்டுச் செல்லாமல் அயன்மையையுடைய சிறு பூசலைப் புரிபவர்களாய் முன்பு இருந்த னர். இப்பொழுதோ இணையாகப் பொருந்தக் கட்டிய மலர் மாலை போல இவர்கள் ஒருமையுள்ளத்தராய் மணம் கூடி மகிழும் இயல்பினைத் தோற்றுவித்தாய். ஆதலால் ஊழ்வினையே நீ உறுதியாக நன்மையையுடையாய் ஆவாய்.

ஊழ்வினை வசத்தால் தலைவன் தலைவியராகச் சேர்ந்தனர் என்று வியந்து போற்றியவாறு.

புன்மை - பொலிவிழந்த தன்மை, புற்கென்னும் நிறமாகை; ஓரி - ஆண்மயிர்; ஏதில் சிறு செரு - காரணமின்றியே செய்யும் பூசல்; செவிலியர் - வளர்ப்புத் தாயர்; பால் - ஊழ்; மலர்ப் பிணையல் - மலர்மாலை.

230. நெய்தல் — தோழி கூற்று

அம்ம வாழி தோழி கொண்கன்
தான்அது துணிகுவன் அல்லன் யான்என்
பேதை மையால் பெருந்தகை கெழுமி

நோதகச் செய்ததுஒன்று உடையேன் கொல்லோ
வயச்சுறா வழங்குநீர் அத்தம்
சில்நாள் அன்ன வரவுஅறி யானே.

— அறிவுடை நம்பி

வலிதாகக் கூறிக் குறை நயப்பித்தது.

தோழி! ஒன்று உரைப்பேன்; கேட்பாயாக. தலைவன் வலிமை பெற்ற சுறாமீன்கள் உலாவுகின்ற நீரையுடைய வழியிலே சில நாள்களாக முன்போல வந்துகொண்டிருந்த வரவினை அறியாதவனா யுள்ளான். அவ்வாறு வாராது இருத்தலைத் தானாகவே துணிந்து நடக்கும் இயல்புடையவன் அல்லன். யான் என்னுடைய அறிவின்மையால் சிறந்த தலைவனைப் பொருந்தி அவன் வருந்தி இங்கே வாராத வண்ணம் செய்த செயல் ஒன்றனை உடையேனோ?

பலகால் நின்னைக் காணும்பொருட்டு வந்த தலைவன் யான் சேட்படுத்தியமையால் வாராதொழிந்தான் போலும் என்பதாம்.

கொண்கன் - நெய்தல் நிலத்தலைவன்; தகை - தகுதி, உரிமை; நோதக - நோவுறும்படி; நோதகச் செய்தல் - வருத்த முறும்படி செய்கை. வரவறியான் - வந்திலன்.

231. மருதம் — தலைவி கூற்று

ஓர்ஊர் வாழினும் சேரி வாரார்
சேரி வரினும் ஆர முயங்கார்
ஏதி லாளர் சுடலை போலக்
காணாக் கழிப மன்னே நாண்அட்டு
நல்அறிவு இழந்த காமம்
வில்உமிழ் கணையின் சென்றுசேண் படவே.

— பாலை பாடிய பெருங்கடுங்கோ

வாயிலாகப் புக்க தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

தோழி! நம் தலைவர் நம்மோடு ஓர் ஊரிலேயே வாழ்ந்தாலும் நாம் இருக்கின்ற தெருவுக்கு வாராராயினர். நம் தெருவழியே அவர் வந்தாலும் நம் இல்லத்தினுள்ளே வந்து நன்கு தழுவிக் கொள்ளார். நாணத்தை அழித்து நமது நல்ல அறிவையும் இழக்கச் செய்யும் காமமானது வில்லினின்றும் புறப்படவிட்ட கணையைப் போலச் சென்று அகன்ற தொலைவிடத்தே அழியும் படி அயலாருடைய சுடலையைப் போலக் கருதி நம் நலிவைக் கண்டும் காணாதவர் போலச் செல்வாராயினர்.

இவ்வாறு அன்பின்றி நடக்கின்ற தலைவரை எப்படி ஏற்றுக் கொள்ள இயலும் என்று சுட்டியபடியாம்.

காமம் வில் உமிழ் கணையின் சென்று சேட்பட என்பது தலைவன் தொலை தூரத்துள்ள பரத்தையரைச் சார்ந் தொழுகும் போக்கினைச் சுட்டியவாறாம்.

சேரி - தெரு: ஆர - மனநிறைவு உண்டாம்படி; சுடலை - பிணம் சுடும் இடம்; சுடுகாடு.

232. பாலை — தோழி கூற்று

உள்ளார் கொல்லோ தோழி உள்ளியும்
வாய்ப்புணர்வு இன்மையின் வாரார் கொல்லோ
மரற்புகா அருந்திய மாஎருத்து இரலை
உரற்கால் யானை ஒடித்துஉண்டு எஞ்சிய
யாஅ வரிநிழல் துஞ்சும்
மாஇருஞ் சோலை மலைஇறந் தோரே.

— ஊன்பித்தை

பிரிவிடைத் தோழி வற்புறுத்தியது,

தோழி! மரலாகிய உணவை உண்ட பெரிய பிடரையுடைய ஆண்மான் உரல்போன்ற காலையுடைய யானை ஒடித்து உண்டு குறைபடச் செய்த யாமரத்தின் புள்ளிகளையுடைய நிழலில் தூங்குகின்ற அழகிய சோலைகளையுடைய மலையிடத்தைக் கடந்துசென்றவராகிய தலைவர் நம்மை நினையாதிருப்பாரோ. அன்றி நம்மை நினைத்தும் வாய்ப்பான செவ்வியை உணராமை யினால் வாராராயினரோ?

வினை முடியாமையின் வந்திலரேயன்றிக் காரியம் கைகூடிய தும் விரைந்து வருவர் என்பதனைச் சுட்டிக் கூறியவாறாயிற்று.

தனக்கு வேண்டிய அளவு உணவை உண்ட ஆண்மானை மரத்தடியில் வந்து தூங்குதலைத் தலைவர் பார்ப்பாராயின், தாம் சென்ற வினை வாய்த்ததும் நின்னோடு வந்து துயிலுவார் என்னும் குறிப்பு உண்மையின் இஃது இறைச்சிப்பொருளாகும்.

233. முல்லை — தலைவன் கூற்று

கவலை கெண்டிய அகல்வாய்ச் சிறுகுழி
கொன்றை ஒள்வீ தாஅய்ச் செல்வர்
பொன்பெய் பேழை மூய்திறந் தன்ன

கார்எதிர் புறவி னதுவே உயர்ந்தோர்க்கு
நீரொடு சொரிந்த மிச்சில் யாவர்க்கும்
வரைகோள் அறியாச் சொன்றி
நிரைகோற் குறுந்தொடி தந்தை ஊரே.

— பேயன்

பட்டபின்றை வரையாது சென்று வினைமுற்றி மீளும் தலைவன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

பாகனே! பெரியோர்களுக்கு நீரோடு தானம் பண்ணி எஞ்சிய பொருள்களையும் யாவர்க்கும் வரையறுத்துக் கொள்ளுதல் அறியாத மிகு சோற்றையுமுடைய வரிசையாக உள்ள திரண்ட குறியவளைகளை அணிந்த தலைவியினுடைய தந்தையின் ஊரானது கவலைக் கிழங்கைத் தோண்டி எடுத்த கற்கள் விரவி யுள்ள சிறு குழிகளில் கொன்றையினது ஒள்ளிய மலர்கள் பரவப் பெற்றுப் பொன்னை வைக்கும் பெட்டியினது வாயைத் திறந்து வைத்தாற்போலத் தோன்றும் கார்காலத்தை ஏற்றுக் கொண்டுள்ள முல்லை நிலத்தில் உள்ளதாகும்.

பொன்பெய் பேழை - பொற்காசுகள் இட்டுவைக்கப்பெற்ற பெட்டி: குழிக்குப் பேழையும் கொன்றை மலருக்குப் பொற்காசும் ஒப்பாம். கார் எதிர்புறவு - கொன்றை மலரும் காலம் கார்கால மாதலின் காரை ஏற்றதாயிற்று.

உயர்ந்தோர் என்றது சான்றோர்களை; மிச்சில் - எஞ்சிய பொருள்; சான்றோர்க்கு நீர் சொரிந்து தானம் கொடுத்தல் நடைமுறை. வரைகோள் - வரையறுத்தல், தடைசெய்தல் என்றும் ஆம்.

பிரிந்து மீளும் தலைமகன் பாகற்குக் கூறியது என்பதற்கு இப் பாடலை எடுத்துக் காட்டுவர் நச்சினார்க்கினியர் (தொல். களவு. 12).

234. முல்லை — தலைவி கூற்று

சுடர்செல் வானம் சேப்பப் படர்கூர்ந்து
எல்லுறு பொழுதின் முல்லை மலரும்
மாலை என்மனார் மயங்கி யோரே
குடுமிக் கோழி நெடுநகர் இயம்பும்
பெரும்புலர் விடியலும் மாலை
பகலும் மாலை துணைஇ லோர்க்கே.

— மிளைப் பெருங்கந்தன்

பருவ வரவின்கண் தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

தோழி! அறிவு மயக்கமுற்றோர் சூரியன் மறைந்ததால் வானம் செம்மை நிறமாகத் துன்பம் மிக்க இரவுப்பொழுது உறுகின்ற வேளையில் முல்லை மலரும் வேளையே மாலைக்காலம் என்பர். துணை இல்லாதவர்க்கு கொண்டையையுடைய கோழி கூவுகின்ற பெரிய இராப்பொழுது புலர்கின்ற விடியற்காலமும் மாலைக் காலமாகும்; பகற்காலமும் மாலைக் காலமாகும்.

தலைவனைப் பிரிந்த நிலையில் நான் எல்லாப் பொழுது களிலும் துன்பமுடையவ ளாயினேன் என்பதாம். அறிவு மயங்கியோர் என்பது வற்புறுத்தும் தோழியை நோக்கிக் கூறிய தாகவும் கொள்ளலாம்.

சேப்ப - சிவக்க; எல்லுறு பொழுது - இரவு வருகின்ற நேரம்; குடுமி - உச்சிக்கொண்டை.

235. பாலை — தலைவி கூற்று

ஓம்புமதி வாழியோ வாடை பாம்பின்
தூங்குதோல் கடுக்கும் தூவெள் அருவிக்
கல்உயர் நண்ணி யதுவே நெல்லி
மரையினம் ஆரும் முன்றிற்
புல்வேய் குரம்பை நல்லோள் ஊரே.

— மாயேண்டன்

வரையாது பிரிந்து வருவான் வாடைக்கு உரைப்பானாய்ப் பாகற்கு உரைத்தது.

வாடைக்காற்றே! நெல்லிக்காயை மரையின் கூட்டம் உண்ணு கின்ற முன்னிடத்தையுடைய புல்லால் வேயப்பெற்ற குடிசை களையுடைய நல்லவளாகிய தலைவியின் ஊர் பாம்பினது தொங்குகின்ற தோலை ஒத்திருக்கும் தூய வெள்ளிய அருவியை யுடைய மலையின் உயர்ந்த பகுதியில் பொருந்தியுள்ளது. அங்கு வாழும் தலைவியை நீ பாதுகாப்பாயாக; நீ வாழ்வாயாக.

வினை முற்றி மீண்டுவரும் தலைவன் வாடைக்காற்றிற்கு உரைப்பானாய்த் தன் பாகனுக்கு விரைந்து அத் தலைவி இருக் கும் இடத்திற்குத் தேரைச் செலுத்துமாறு அவள் இருக்கும் இடமும் நிலையும் சுட்டிக் கூறியவாறாம்.

பாம்பின் தோல் - பாம்பு உரித்துப் போட்ட சட்டைத்தோல்; குரம்பை - குடிசை.

இப் பாட்டை, தலைவன் நெட்டாறு சேறலன்றி அண்மைக் கட் பிரிந்தவழிக் கூறியது (தொல். களவு. 17) என்றும், தலைவன் வரைவிடை வைத்துச் சேறுவான் கூறியது என்றும் இரு துறை

கட்குக் காட்டுவர் இளம்பூரணர் (தொல். களவு. 12). நச்சினார்க்கினியர், வரைவிடை வைத்துப் பிரிந்து போகும் தலைமகன் கூறியது (தொல். களவு. 12) என்பர்.

236. நெய்தல் — தோழி கூற்று

விட்டென விடுக்குமநாள் வருக அதுநீ
நேர்ந்தனை ஆயின் தந்தனை சென்மோ
குன்றத் தன்ன குவவுமணல் அடைகரை
நின்ற புன்னை நிலம்தோய் படுசினை
வம்ப நாரை சேக்கும்
தண்கடற் சேர்ப்பநீ உண்டஎன் நலனே.

— நரிவெருஉத்தலையார்

வரைவிடைவைத்துப் பிரிவான், 'இவள் வேறுபடாமை ஆற்றுவி' என்றாற்குத் தோழி நகையாடி உரைத்தது.

குன்று போன்று உயர்ந்து விளங்கும் குவிதலான மணல் அடைந்த கரையிலே நின்ற புன்னைமரத்தினது நிலத்தைத் தொடும்படி தாழ்ந்த கிளையில் புதிய நாரைகள் வந்து தங்கியிருக்கும் தண்ணிய கடல் சேர்ந்த நாட்டையுடைய தலைவனே! நீ இவளை விட்டுப் பிரிந்தாய் என்னும் அந்த நாளும் வருவதாக. நீ அப்படி வருவதனை ஒருப்பட்டாயாயின் நீ நுகர்ந்த என் பெண்மை நலத்தை மீட்டுத் தந்தனையாய்ச் செல்வாயாக.

இவளைப் பிரிந்தால் இவள் தன் பெண்மை நலம் அழியும்; எனவே இவளை நீ பிரியற்க என்பதாம்.

விட்டென - முற்றும் கைவிட்டாயென; படுசினை - தாழ்ந்த கிளை. குவவு மணல் - குவிந்து திரண்டு காணப்படும் மணல்.

இப் பாட்டை நீ கொண்ட நலத்தினைத் தந்து போவெனக் கூறுதற்கண் தோழிக்குக் கூற்று நிகழ்ந்தது என்பர் இளம்பூரணர் (தொல். கற்பு. 9).

237. பாலை — தலைவன் கூற்று

அஞ்சுவது அறியாது அமர்துணை தழீஇ
நெஞ்சுநப் பிரிந்தன்று ஆயினும் எஞ்சிய
கைபிணி நெகிழின்அஃது எவனோ நன்றும்
சேய அம்ம இருவாம் இடையே
மாக்கடல் திரையின் முழங்கி வலன்ஏர்பு
கோட்புலி வழங்கும் சோலை
எனைத்துஎன்று எண்ணுகோ முயக்கிடை மலைவே.

— அள்ளூர் நன்முல்லை

பொருள் முற்றி மீள்வான் தேர்ப்பாகற்கு உரைத்தது.

பாகனே! வழியிடை நேரும் ஏதத்திற்கு அஞ்சாது நாம் விரும்பும் தலைவியைத் தழுவிக்கொண்டு என் நெஞ்சமானது நம்மை விட்டுவிட்டுப் பிரிந்து சென்றது. ஆயினும் எஞ்சியுள்ள கையால் நம்மைக் கட்டித் தழுவுதல் நெகிழுமானால் அஃது முன்னர்ச் சென்றும் என்ன பயனையுடையது. தலைவிக்கும் எனக்கும் இடையிலுள்ள இடங்கள் மிகவும் சேய்மையில் உள்ளன. தலைவியுடன் கூடுதற்கு இடையிலேயுள்ள வழித் தடையாகிய கொல்லும் புலியானது கரிய கடலின் ஒலி போல ஆரவாரம் செய்து வலமாக எழுந்து உலாவுகின்ற சோலைகள்தாம் எத்தனை என்று எண்ணுவேன்.

தலைவியுள்ள இடம் நீண்ட தூரத்தில் உள்ளது. ஆதலின் விரைந்து தேரைச் செலுத்துக எனப் பாகனுக்குக் கூறியவாறு.

இருவாம் - இருவராகிய யாம். பாகனுக்குத் தன் காம மிகுதியைச் சுட்டி நெஞ்சிற்கு வினாவாய் வெளியிட்டுத் தேரை விரைந்து செலுத்துக என்று குறிப்பித்தவாறு.

238. மருதம் — தோழி கூற்று

பாசவல் இடித்த கருங்காழ் உலக்கை
ஆய்கதிர் நெல்லின் வரம்புஅணைத் துயிற்றி
ஒண்தொடி மகளிர் வண்டல் அயரும்
தொண்டி அன்னஎன் நலம்தந்து
கொண்டனை சென்மோ மகிழ்நநின் சூளே.

— குன்றியன்

தலைமகன் பரத்தையின் மறுத்தந்து வாயில்வேண்டித் தோழியிடைச் சென்று தெளிப்பான் புக்காற்குத் தோழி சொல்லியது.

பச்சை நெல்லை அவலாக இடித்த கரிய வயிரம் பாய்ந்த உலக்கையை அழகிய் கதிரையுடைய நெற்பயிர் விளைக்கும் வயல் வரம்பாகிய அணையிலே படுக்கவைத்து, ஒள்ளிய வளையல்களை அணிந்த பெண்கள் வண்டல் விளையாட்டைச் செய்யும் தொண்டி என்னும் பட்டினத்தைப் போன்ற என் பெண்மை நலத்தைத் தந்து நின்னுடைய சூளைப் பெற்றுக்கொண்டு செல்வாயாக.

நீ சூள் கூறுவதனால் யாம் மயங்கேம் என்றபடியாம்.

பாசவல் - நெல்லை வறுக்காமல் பச்சையாய் இடித்துச் செய்த அவல்; மகிழ்நன் - மருதநிலத் தலைவன்.

239. குறிஞ்சி — தலைவி கூற்று

தொடிநெகிழ்ந் தனவே தோள்சா யினவே
விடும்நாண் உண்டோ தோழி விடர்முகைச்
சிலம்புடன் கமழும் அலங்குகுலைக் காந்தள்
நறுந்தாது ஊதும் குறுஞ்சிறைத் தும்பி
பாம்புஉமிழ் மணியின் தோன்றும்
முந்தூழ் வேலிய மலைகிழ வோற்கே.

— ஆசிரியன் பெருங்கண்ணன்

சிறைப்புறம்.

தோழி! பிளப்பினையும் குகைகளையும் உடைய பக்கமலை முழுவதும் மணம் வீசுகின்ற அசைகின்ற கொத்துகளையுடைய காந்தட் பூவின் மகரந்தத்தை ஊதுகின்ற தும்பி என்னும் வண்டு பாம்பினால் உமிழப்படும் மணியைப் போலத் தோற்றமளிக்கும் மூங்கிலை வேலியாகவுடைய மலைகளைக் கொண்டுள்ள தலைவன் பொருட்டாக என் வளைகள் நெகிழ்ச்சியுற்று நழுவின; என் தோள்களும் மெலிந்தன; இனி விடுவதற்கான நாணம் என்பால் உளதோ? அது முன்னரே கழிந்தது.

என் நிலை அறிந்த தலைவன் என்னை வரைந்து வாழ்விக்க வேண்டும் என்பதாம்.

தொடி - தோள்வளை; கைவளை என்றும் ஆம்; இயல்பாகவே மணமுள்ள பூந்தாது வண்டு ஊதியதால் மேலும் மலர்ந்து மணம் வீசுவதாயிற்று என்பதாம். பாம்பு காந்தள் மலருக்கும் வண்டு மணிக்கும் ஒப்பாகும்.

காந்தளின் தாதை ஊதி எங்கும் மணம் பரவச் செய்த வண்டினைப் போலத் தலைவன் நின் நலனை நுகர்ந்து எங்கும் அலர்வரச் செய்தான். காந்தளும் தும்பியும் பாம்பும் வண்டும் போன்ற அஞ்சுதகு தோற்றம் தந்தது போல, இருவர் நட்பும் அஞ்சத்தக்க நிலையினதாயிற்று என்னும் உட்பொருளும் தோன்ற அமைதலின் இஃது இறைச்சிப் பொருளாகும்.

240. முல்லை — தலைவி கூற்று

பனிப்புதல் இவர்ந்த பைங்கொடி அவரைக்
கிளிவாய் ஒப்பின் 'ஒளிவிடு பல்மலர்
வெருக்குப்பல் உருவின் முல்லையொடு கஞலி
வாடை வந்ததன் தலையும் நோய்பொரக்
கண்டிசின் வாழி தோழி தெண்திரைக்
கடல்ஆழ் கலத்தின் தோன்றி
மாலை மறையும்அவர் மணிநெடுங் குன்றே.

— கொல்லன் அழிசி

வரைவிடை, 'ஆற்றாள்' எனக் கவன்ற தோழிக்குக் கிழந்தி உரைத்தது.

தோழி! குளிர்ச்சியையுடைய புதலின் மேலே படர்ந்த பசிய கொடியாகிய அவரையின் கிளியின் அலகை ஒத்திருக்கும் ஒளியை வெளியிடும் பல மலர்கள் காட்டுப்பூனையின் பல்லைப் போன்ற உருவுடைய முல்லை மலர்களோடு நெருங்கும்படி வாடைக்காற்று வீசுகின்றது. அதன் மேலும் வருத்தம் என்னை அலைக்கும் வண்ணம் அத் தலைவருடைய மணிகளைக் கொண்டுள்ள உயர்ந்த குன்று கடலினுள் ஆழ்கின்ற கப்பலைப் போன்று மாலைக் காலத்தில் மறைகின்றது. இதனை நீயும் காண்பாயாக.

தலைவனது பிரிவை அவருடைய குன்றத்தைப் பார்த்து ஆற்றியிருந்தேன்: அதுவும் இப்பொழுது மறைவதால் ஆற்றேனாயினேன் என்பதாம்.

இருளில் மறையும் குன்றுக்குக் கடலில் ஆழும் கலம் உவமையாயிற்று. கலம் அடியிலிருந்து மறைவதுபோல தலைவர் குன்றும் மறைவதாயிற்று என்பதாம்.

இதனை, பருவம் கண்டு ஆற்றாது தலைவி தோழிக்குக் கூறியது என்பர் நச்சினார்க்கினியர் (தொல். களவு. 21).

241. குறிஞ்சி — தலைவி கூற்று

யாம்எம் காமம் தாங்கவும் தாம்தம்
கெழுதகை மையின் அழுதன தோழி
கன்றுஆற்றுப் படுத்த புன்தலைச் சிறாஅர்
மன்ற வேங்கை மலர்பதம் நோக்கி
ஏறாது இட்ட ஏமப் பூசல்
விண்தோய் விடரகத்து இயம்பும்
குன்ற நாடற் கண்டஎம் கண்ணே.

— கபிலர்

பிரிவிடை ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது

தோழி! நாம் எமது காம நோயைப் பொறுத்துக்கொண்டு ஆற்றியிருக்கவும் கன்றுகளை மேய்ச்சலுக்காக வழிப்படுத்திய புற்கென்ற தலையையுடைய ஆயர் சிறுவர்கள் வேங்கை மரம் மலரும் அழகினைப் பார்த்து அம் மரத்தின்மேல் ஏறாது அடியில் நின்றபடி செய்த இன்ப ஆரவாரம் வானம் அளாவிய மலையின்

குகைகளில் எதிரொலிக்கும் குன்றங்களையுடைய நாட்டுக்குத் தலைவனைக் கண்ட எம் கண்கள் நட்பு முதிர்வின் காரணமாக அவர் பிரிந்தமை கருதி அழுதலைச் செய்தன.

நான் ஆற்ற எண்ணியும் ஆற்றாமை மீதூர்கின்றது என்பது குறித்தவாறாம்.

தாங்குதல் - தடுத்தல்; வெளிப்படாது அடக்குதல். கெழுதகைமை - நட்புரிமை; மன்றம் - பொதுவிடம்.

கையறு தோழி கண்ணீர் துடைத்த காலத்துத் தலைவி கூறியது என்பர் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் (தொல். களவு. 21 இளம். 20 நச்.)

242. முல்லை — செவிலித்தாய் கூற்று

கானங் கோழிக் கவர்குரற் சேவல்
ஒண்பொறி எருத்தின் தண்சிதர் உறைப்பப்
புதல்நீர் வாரும் பூநாறு புறவில்
சீறூ ரோளே மடந்தை வேறுஊர்
வேந்துவிடு தொழிலொடு செலினும்
சேந்துவரல் அறியாது செம்மல் தேரே.

— குழற்றத்தன்

கற்புக்காலத்துக் கடிநகர் சென்ற செவிலித் தாய் நாற்றாய்க்குச் சொல்லியது.

காட்டுக் கோழியினது கவர்த்த குரலையுடைய சேவலினது ஒள்ளிய புள்ளிகளையுடைய கழுத்தில் தண்மையான நீர்த்துளி துளிக்கும்படி புதலிடமெல்லாம் நீர் ஒழுகும் மலர்மணம் வீசும் முல்லைநிலத்தில் அமைந்த சிறிய ஊரில் மடந்தை உள்ளாள். தலைவனுடைய தேர் வேந்தனால் ஏவப்பெற்ற தொழிலை மேற்கொண்டு வேற்றூருக்குச் சென்றாலும் சென்ற ஊரில் தங்கிவருதலை அறியாது.

உடனே திரும்பி வந்துவிடும் என்பதாம்.

தலைவனும் தலைவியும் ஒருங்கிணைந்து இல்லறம் நடத்தி வாழ்கின்றனர் என்பதாம். கானங்கோழி - இசையெழுப்பும் ஒருவகைக் காட்டுக் கோழி. முல்லை நிலப்பறவை என இறையனார் அகப்பொருள் உரை சுட்டும். புறநானூற்றில் 395ஆம் பாடலில் மனைக் கோழி, கானக்கோழி, நீர்க்கோழி என மூவகை கோழிகள் சுட்டப்பட்டுள்ளன.

மடந்தை - பெண்; வேந்துவினை - வேந்தன் பொருட்டாகச் சென்று செய்த செயல்; சேத்தல் - தங்குதல்; செம்மல் -தகைமை யுடைய தலைவன்.

இதனை, தலைவியின் மாண்புகளை அகம்புகல் மரபின் வாயில்கள் தம்முட் கூறியது என்பர் இளம்பூரணர் (தொல். கற்பு. 11). நச்சினார்க்கினியர், செவிலி நற்றாய்க்கு உவந் துரைத்தல் என்கிறார் தொல். கற்பு. 11).

243. நெய்தல் — தலைவி கூற்று

மான்அடி அன்ன கவட்டிலை அடும்பின்
தார்மணி அன்ன ஒண்பூக் கொழுதி
ஒண்தொடி மகளிர் வண்டல் அயரும்
புள்இமிழ் பெருங்கடற் சேர்ப்பனை
உள்ளேன் தோழி படீஇயர்என் கண்ணே.

— நம்பிகுட்டுவன்

வன்புறை எதிர் அழிந்து சொல்லியது.

தோழி! மானின் குளம்பினைப் போலப் பிளவுபட்ட இலை களையுடைய அடும்பங் கொடியானது குதிரையின் கழுத்திடு மாலையில் விளங்கும் மணியைப் போன்ற ஒள்ளிய பூக்களை வலிய அலர்த்தி ஒள்ளிய வளைகளையுடைய பெண்கள் வண்டலில் விளையாடும் பறவைகள் ஒலிக்கும் பெரிய கடற்குரிய சேர்ப்பனை இனி நினையேன். ஆதலால் என் கண்கள் துயில் கொள்ளுமாக.

தலைவனை நினையாது இருத்தல் இயலாது என்பதாம்.

கவடு - பிளவு; அடும்பு - நெய்தல் நிலத்தில் வளரும் கொடி; வண்டல் அயர்தல் - மகளிர் புழுதியில் அளைந்து விடுயாடுகை.

இப் பாட்டை, பெரிதாகிய இடையீட்டினுள் அரிதாகத் தலைவன் வந்த ஞான்றும் பெறாத ஞான்றைத் துன்பமிகுதியாற் பெற்றதனையும் கனவு போன்று கொண்டு இகழ்ந்திருப்பின் தலைவிக்குக் கூற்று நிகழும் என்பர் நச்சினார்க்கினியர் (தொல். களவு. 20).

244. குறிஞ்சி — தோழி கூற்று

பல்லோர் துஞ்சும் நள்ளென் யாமத்து
உரவுக்களிறு போல்வந்து இரவுக்கதவு முயறல்
கேளேம் அல்லேம் கேட்டனெம் பெரும

ஓரி முருங்கப் பீலி சாய
நல்மயில் வலைப்பட் டாங்குயாம்
உயங்குதொறும் முயங்கும் அறன்இல் யாயே.

— கண்ணன்

இரவுக்குறிவந்து ஒழுகாநின்ற தலைமகனைத் தாம் காவல் மிகுதியால் புறப்பட்டு எதிர்கொள்ளப் பெறாத வழி, பிற்றை ஞான்று தோழி, 'வரைந்து கொள்ளின் அல்லது இவ்வொழுக லாற்றின் இனிக் கூடல் அரிது' என வரைவு கடாயது.

பெருமானே! ஊரிலுள்ளார் பலரும் தூங்கும் இருள் செறிந்த இரவில் வலிமை பெற்ற யானைபோல வந்து இராக்காலத்தே அடைக்கப்பட்ட கதவைத் திறக்க முயன்றதனால் உண்டாகும் ஒலியை யாம் கேளேம் அல்லேம்; கேட்டோம். தலைக் கொண்டை சிதையவும் பீலிகள் மெலியவும் நல்ல மயில் வலையினிடத்தே அகப்பட்டாற்போல யாம் இல்லிலிருந்து வருந்துந் தோறும் அறவுணர்ச்சி இல்லாத தாய் எம்மைத் தழுவிக் கொள்வாள்.

அதனால் இரவுக்குறியிடம் வர இயலாதவராயினேம் என்பதாம்.

துஞ்சும் - தூங்கும்; ஓரி - ஆண்மயிருக்குரிய பெயர்; இங்கு ஆண்மயிலின் தலைக்கொண்டையைச் சுட்டும். முருங்குதல் - சிதைதல்; உயங்குதல் - வருந்துதல்.

காப்புவரை யிறத்தல் என இப் பாடலைக் குறிப்பர் இளம்பூரணர் (தொல். களவு. 24). நச்சினார்க்கினியர், இரவுக் குறிக் காப்பின் கடுமை தோழி கூறியது என்பர் (தொல். களவு. 23).

245. நெய்தல் — தலைவி கூற்று

கடல்அம் கானல் ஆயம் ஆய்ந்தஎன்
நலம்இழந் ததனினும் நனிஇன் னாதே
வாள்போல் வாய கொழுமடற் தாழை
மாலை வேல்நாட்டு வேலி ஆகும்
மெல்லம் புலம்பன் கொடுமை
பல்லோர் அறியப் பரந்துவெளிப் படினே.

— மாலை மாறன்

வரைவிடை 'ஆற்றாள்' எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

தோழி! வாளரம் போன்ற விளிம்பையுடைய கொழுப்பான மடல்கள் கொண்ட தாழை வரிசையாக வேல்களை நாட்டிய் வேலியைப் போலப் பயன்தரும் மெல்லிய கடற்கரையுடைய தலைவன் நமக்கு இழைத்த கொடுமை பல்லோராலும் அறியும் படியாக வெளிப்பட்டதாயின், அவ் வெளிப்பாடு கடலிடத்தே யுள்ள அழகிய கடற்கரைச் சோலையில் பெண்கள் பாராட்டிய என் பெண்மை நலத்தை இழந்ததைவிடவும் மிகத் துன்பம் தருவதாகும்.

புலம்பன் கொடுமை பிறர் அறிய வெளிப்படாவாறு காப்பேன் என்பதாம்.

ஆய்ந்த நலம் - எல்லா நலன்களிலும் சிறந்தெடுத்துப் பாராட்டப்படும் அழகு. வாள் - கருக்கமைந்த வாயுடைய கருவி; புலம்பு - கடற்கரை; புலம்பன் - கடற்கரைத் தலைவன்.

இயல்பாக வளர்ந்தோங்கிய தாழைகள் வேலியாவது போலத் தலைவன் கொடுமையை ஆற்றுவேன் என்னும் குறிப்புப்பட உரைத்தமையால் இஃது இறைச்சியாம்.

246. நெய்தல் — தலைவி கூற்று

பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
களிற்றுச்செவி அன்ன பாசடை மயக்கிப்
பனிக்கழி துழவும் பானாள் தனித்துஓர்
தேர்வந்து பெயர்ந்தது என்ப அதற்கொண்டு
ஓரும் அலைக்கும் அன்னை பிறரும்
பின்னுவிடு கதுப்பின் மின்இழை மகளிர்
இளையரும் மடவரும் உளரே
அலையாத் தாயரொடு நற்பா லோரே.

— கபிலர்

சிறைப்புறம்.

தோழி! பெரிய கடற்கரையிடத்துள்ளதாகிய சிறிய வெண்மையையுடைய காக்கை ஆண்யானையின் செவியை ஒத்த பசிய இலையைக் கலக்கிக் குளிர்ச்சியையுடைய கழிநீரை இரைப் பொருட்டுத் துழாவிக் கொண்டிருக்கும் நள்ளிரவு வேளையிலே தனிப்பட்ட தேர் ஒன்று வந்தது என்று சொல்லுவர். அது முதலாக அன்னை என்னைத் துன்புறுத்துகின்றாள். பின்னி விடப்பட்ட கூந்தலையுடைய ஒளிவிடும் ஆபரணங்களை அணிந்த பெண்கள் கூட்டத்துள் இளமையுடையோரும் மடப்பமுடையவரும் இருக்கின்றனர். அவர் எல்லாம் தம்மை வருத்தாத தாயரோடு நல்ல வினையையுடையராவர்,

காப்பு மிகுந்துள்ளதாதலின் தலைவன் என்னை வரைந்து கொள்வதே நலம் எனச் சுட்டிக் கூறியவாறாம்.

சிறுவெண் காக்கை - கழுத்தில் சிறிதளவு வெண்மை நிறத்தையுடைய காக்கை. பாசடை - பசிய இலை; களிற்றுச் செவியன்ன இலை என்பதால் சேம்பின் இலையைச் சுட்டியதாகும். மடவர் - அழகுடையவர்; மடம் - அழகு.

இப் பாட்டை, பிறர் கூற்றால் தமர் தலைவியைக் காத்தற்கண் தலைவி கூறியது என்பர் நச்சினார்க்கினியர் (தொல். களவு. 20).

247. குறிஞ்சி — தோழி கூற்று

எழில்மிக உடையது ஈங்குஅணிப் படூஉம்
திறவோர் செய்வினை அறவது ஆகும்
கிளையுடை மாந்தர்க்குப் உளையும்மார் இல்என
ஆங்குஅறிந் திசினே தோழி வேங்கை
வீயா மென்சினை வீஉக யானை
ஆர்துயில் ஈயும் நாடன்
மார்பு உரித்துஆகிய மறுஇல் நட்பே.

— சேந்தம்பூதன்

கடிநகர்த் தெளிவு விலங்கினமை அறியத் தோழி கூறியது. வரைவுடன் பட்ட தோழி தலைமகட்குக் கூறியதூஉம் ஆம்.

தோழி! வேங்கை மரத்ினது கெடாத மெல்லிய கிளையிலிருந்து மலர்கள் உதிர்ந்து கொண்டிருக்க அவ்விடத்திலே யானை பெறுதற்கு அரிய உறக்கங் கொள்ளுதலைச் செய்யும் நாட்டையுடைய தலைவனது மார்பை உரிமையாகப் பெற்ற குற்றமற்ற நட்பானது அழகு மிக உடையது. இவ்விடத்திலே அது அணிமைக் காலத்தே பொருந்துவதாகும். சான்றோர் செய்கின்ற செயல்கள் அறத்தொடு பொருந்தியதாகும். வருத்தம் தருவதற்கு உறவுடைய சுற்றத்தார்க்கு வேறுவகையாக எதுவும் இல்லை என்று அவ்விடத்தில் யானும் அறிந்தேன்.

தலைவன் நின்னை விரைவில் வரைந்து கொள்வான் என்று குறிப்பித்தபடியாம்.

காப்பு முதலிய தடைகளைத் தலைவனுக்கு எடுத்துரைத்து அவனை வரைவுடன்படச் செய்த தோழிக்கு அவன் வரைந்து கொள்வேன் என உறுதி கூறியதைத் தலைவிக்கு எடுத்துரைத்தாள் என்று இரண்டாவது கருத்திற்கேற்பக் கொள்ளல் வேண்டும்.

'உளையுமார் இல்என' என்னும் பாடம் கிளையுடை மாந்தர்க்கு என்னும் தொடக்கத்தோடு எதுகை நயம் பொருந்தவும் பொருள் தெளிவுடையதாகவும் அமைகிறது. எனவே இப் பாடம் கொள்ளப்பெற்றது.

அணிப்படுஉம் - அணிமைத்தாகும்; திறவோர் - சான்றோர்; அறவது - அறத்தொடு பொருந்தியது. துயில் ஈயும் - தூங்கும்.

வேங்கைமலர் தன்மேல் உதிர யானை தூங்கும் நாடன் என்றமையால் சுற்றத்தார் பாராட்டத் தலைவியை மணம் புரிந்து தலைவன் அவளிடம் இன்பம் நுகர்ந்து துயில்வான் என்னும் உட்பொதி பொருள் தோற்றுதலால் இஃது இறைச்சிப் பொருளாகும்.

248. நெய்தல் — தோழி கூற்று

அதுவரல் அன்மையோ அரிதே அவன்மார்பு
உறுக என்ற நாளே குறுகி
ஈங்கு ஆகின்றே தோழி கானல்
ஆடுஅரை புதையக் கோடை இட்ட
அடும்புஇவர் மணற்கோடு ஊர நெடும்பனை
குறிய ஆகும் துறைவனைப்
பெரிய கூறி யாய்அறிந் தனளே.

— உலோச்சன்

வரைவு நீட்டித்தவழி ஆற்றாளாகிய கிழத்தியைத் தோழி ஆற்றுவித்தது.

தோழி! கடற்கரைச் சோலையிடத்தேயுள்ள அசைகின்ற அடியிடம் புதையும்படி மேல்காற்றுக் கொண்டுவந்து போட்ட அடும்பங்கொடி படர்ந்த மணற்குவியல் பரவ நெடிய பனைமரங்கள் குறியனவாகத் தோன்றும் கடற்கரையையுடைய தலைவனை முருகன் என்று சொல்லி வெறியெடுத்துத் தாய் அறிந்து கொண்டாள். அதனால் அந்த வரைவுக்குரிய நாள் வாராமற் போவதென்பது அரிதாகும்; வரைவு நேரும் நிலையாகும். அவன் மார்பை அடைக என்று வரையறுத்த நாள் அணிமையாக வந்தும் இப்படி ஆற்றாமை உண்டாவது என்னையோ?

உன் வரைவு விரைவில் நிகழுமாதலின் ஆற்றாதிருத்தல் நன்றன்று என்றவாறாம்.

குறுகி - அணுகி, அடுத்து; ஆடுதல் - அசைதல்; கோடை - மேல்காற்று; பெரிய கூறுதல் - முருகன் என்று பெருமைப்பட உரைத்தல்.

249. குறிஞ்சி — தலைவி கூற்று

இனமயில் அகவும் மரம்பயில் கானத்து
நரைமுக ஊகம் பார்ப்பொடு பனிப்ப
படுமழை பொழிந்த சாரல் அவர்நாட்டுக்
குன்றம் நோக்கினென் தோழி
பண்டை யற்றோ கண்டிசின் நுதலே.

— கபிலர்

வரைவிடை வைப்ப, 'ஆற்றகிற்றியோ?' என்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

தோழி! திரளான மயில்கள் ஆரவாரம் செய்யும் மரங்கள் நெருங்கிய காட்டிடத்தில் வெள்ளை முகத்தையுடைய கருங் குரங்கு குட்டிகளோடு குளிரால் நடுங்கும்படி மிகுதியான பெரு மழை பெய்த மலைச்சாரலையுடைய அத் தலைவருடைய நாட்டில் உள்ள குன்றத்தைப் பார்த்தேன். அதனால் என்னுடைய ஒளி இழந்து பசப்பூர்ந்தநெற்றி இப்பொழுது பண்டைய விளக்கம் அதன்பால் உண்டாயிற்றல்லவா?

இங்ஙனம் தலைவரின் குன்றத்தைப் பார்த்துப் பார்த்து ஆற்றுவேன் என்று கூறியவாறாம்.

இனம் - கூட்டம், திரள்; படுமழை - பெருமழை, மிகுந்த மழை.

250. பாலை — தலைவன் கூற்று

பரல்அவற் படுநீர் மாந்தித் துணையொடு
இரலை நன்மான் நெறிமுதல் உகளும்
மாலை வாரா அளவை கால்இயல்
கடுமாக் கடவுமதி பாக நெடுநீர்ப்
பொருகயல் முரணிய உண்கண்
தெரிதீம் கிளவி தெருமரல் உயவே.

— நாமலார் மகன் இளங்கண்ணன்

தலைமகன் பாகற்கு உரைத்தது.

தேர்ப்பாகனே! பரற்கற்களையுடைய பள்ளத்திலே தேங்கி யிருக்கும் நீரை உண்டு, ஆண்மான் தன் துணையோடு வழியி னிடத்தே துள்ளி விளையாடுகின்ற மாலைக்காலம் வருவதற்கு முன்னமேயே ஆழ்ந்த நீரில் உள்ள இரு கயல்மீன்களை ஒத்த மை

பூசப்பெற்ற கண்களையும் ஆராய்ந்த இனிய சொற்களையுமுடைய தலைவி துன்பச்சுழற்சியிலிருந்தும் நீங்கக் காற்றுப் போலக் கடுகிச் செல்லும் இயல்புடைய விரைகின்ற குதிரையைச் செலுத்துவாயாக.

நெடுநீர் என்றது ஆழமான நீர்நிலை என்பதாம். கடுமா - விரைவினையுடைய குதிரை.

251. முல்லை — தோழி கூற்று

மடவ வாழி மஞ்ஞை ஆய்இனம்
கால மாரி பெய்தென அதன்எதிர்
ஆலலும் ஆலின பிடவும் பூத்தன
கார்அன்று இகுளை தீர்கநின் படரே
கழிந்த மாரிக்கு ஒழிந்த பழநீர்
புதுநீர் கொளீஇய உகுத்தரும்
நொதுமல் வானத்து முழங்குகுரல் கேட்டே.

— இடைக்காடன்

பிரிவிடைத் தோழி, 'பருவம் அன்று; பட்டது வம்பு' என்று வற்புறுத்தியது.

தோழி! சென்ற காலத்துப் பெய்யாது எஞ்சி நின்ற மழை நீரை வேறு புதிய நீரைக் கொள்ளும் பொருட்டாகச் சொரிகின்ற அயன்மையையுடைய மேகத்தினது ஒலிக்கின்ற ஓசையைக் கேட்டு, மயில்களாகிய அழகிய கூட்டங்கள் பருவத்துக்குரிய மழை பெய்ததாகக் கருதி, அம் மழைக்கு எதிராக ஆடுதலைச் செய்தன; பிடாமரமும் மலர்ந்தன; அவை அறியாமையை உடையன. இது கார்காலம் அன்று. ஆதலால் நின் துன்பத்தைக் கைவிடுவாயாக.

மாரிக்காலத்தில் கிளர்ந்தெழுந்து ஆடுவன ஆண்மயில்களே. எனவே அழகிய மயில்கள் எனும் பொருள்படும் 'ஆய்இனம்' என்னும் பாடம் ஈண்டுக் கொள்ளப்பெற்றது.

மஞ்ஞை - மயில்; ஆய் - அழகு; காலமாரி - உரிய காலத்தில் பெய்யும் மழை; பழநீர் - பெய்யாமல் எஞ்சிய நீர்; ஆலுதல் - ஆடுதல்; உகுத்தரும் - சொரியும்; படர் - துன்பம்; மடவ - அறியாமையையுடையன. மழை பொழிய மயில் ஆடுவதும் பிடவம் பூப்பதும் அவற்றிற்குரிய இயல்புகளாகும்.

252. குறிஞ்சி — தலைவி கூற்று

நெடிய திரண்ட தோள்வளை ஞெகிழ்த்த
கொடியன் ஆகிய குன்றுகெழு நாடன்
வருவதோர் காலை இன்முகம் திரியாது
கடவுட் கற்பின் அவனே பேணி
மடவை மன்ற நீஎனக் கடவுபு
துனியல் வாழி தோழி சான்றோர்
புகழும் முன்னர் நாணுப
பழியாங்கு ஒல்பவோ காணும் காலே.

— கிடங்கில் குலபதி நக்கண்ணன்

தலைமகன் வரவு அறிந்த தோழி, 'அவர் நம்மை வலிந்து போயி னார்க்கு எம்பெருமாட்டி தீயன கடிந்து நன்கு ஆற்றினாய்' என்றாட்குக் கிழத்தி உரைத்தது.

தோழி! நெடியவாயும் திரட்சிபெற்றனவாயும் உள்ள தோள் களில் உள்ள வளைகளை நெகிழச் செய்த கொடிய தன்மை யனான குன்றுகள் பொருந்திய நாட்டையுடைய தலைவன் பரத்தையர் இல்லம் சென்று திரும்பிவருங் காலத்தில் இனிய முகம் வேறுபடாமல் தெய்வத்தன்மையுடைய கற்பினால் அவனையே விழைந்து புறந்தந்தாய் ஆதலால் நிச்சயமாக அறிவில்லாதவளா யினை என்று வினவி வருத்தமுறாதே. அறிவு சான்ற பெரியோர் தம்மைப் புகழ்வதற்கு முன்னரே நாணுவர். அத்தகைய இயல்பினர் ஆராயுமிடத்துப் பழிச்சொல்லை எங்ஙனம் பொறுத்துக் கொள்வர்?

தலைவன் பழிக்கு அஞ்சும் இயல்பினன் ஆதலின் அவனை ஏற்றுக் கொண்டேன் என்று சுட்டியவாறாம்.

கொடியன் - தலைவிக்கு உளதாகும் துன்பத்தை அறியாத கொடுமையுடையன்; கடவுட் கற்பு - மழை தருதல் முதலிய தெய்வத்தன்மை பெற்ற கற்புடைமை, தெய்வக் கற்பு! அருந்ததி போன்ற பெருங்கற்பு என்றும் கொள்ளலாம்.

பெரும்பான்மையான ஏடுகள் அவனே என்னும் பாடம் கொண்டிருத்தலாலும், இது நேர்பொருள் பயத்தலாலும் ஏகாரம் தலைவனது சிறப்பினை வெளிப்படுத்தலாலும் இப்பாடம் கொள் ளப்பெற்றது.

இங்கே சான்றோர் இயல்பு என்று சுட்டியது தலைவனைக் குறித்துக் கூறியவாறாம். தலைவன் சான்றோன் எனவும் பழிக்கு அஞ்சுபவன் எனவும் புலப்படுத்தினாளாயிற்று.

253. பாலை — தோழி கூற்று

கேளார் ஆகுவர் தோழி கேட்பின்
விழுமிது கழிவது ஆயினும் நெகிழ்நூல்
பூச்சேர் அணையின் பெருங்கவின் தொலைந்தநின்
நாள்துயர் கெடப்பின் நீடலர் மாதோ
ஒலிகழை நிவந்த ஓங்குமலைச் சாரல்
புலிபுகா உறுத்த புலவுநாறு கல்அளை
ஆறுசெல் மாக்கள் சேக்கும்
கோடுஉயர் பிறங்கல் மலைஇறந் தோரே.

— பூங்கண்ணன்

பிரிவிடைத் தோழி வற்புறுத்தியது.

தோழி! ஒன்றுடன் ஒன்று உராய்ந்து ஒலி எழுப்புகின்ற மூங்கில்கள் நீண்டு வளர்ந்துள்ள உயர்ந்த மலைப் பக்கத்தில் புலியானது தனக்குரிய உணவினை இட்டு வைத்திருக்கும் புலால் நாற்றம் வீசும் மலைக் குகையினிடத்து வழிச் செல்லும் மனிதர் தங்கும்படியான சிகரங்கள் உயர்ந்த விளக்கத்தையுடைய மலைகளைக் கடந்து சென்ற தலைவர் நின் துயரைக் கேளாதவர் ஆவர். கேட்பாராயின் சிறந்த பொருள் நீங்குவதாக இருப்பினும் நெகிழ்ந்த நூலாற் கட்டிய மலர்மாலைகள் சேர்ந்த படுக்கையிடத்தில் கிடந்து வருந்திப் பெரிய அழகு நீங்கிய உன்னுடைய இக்காலத்துள்ள துயரம் கெடும்படி பிரிவை நீட்டித்திராராய்த் திரும்பி வருவர்.

நின் நிலையை அறியாமையினாலேயே விரைந்து வந்தாரில்லை. அறிந்தனராயின் உடனே மீள்வர் என்று தோழி தேறுதல் மொழிகள் பகர்வதாயினாள்.

விழுமிது - சிறந்த பொருள்; அணை - படுக்கை; புகா - உணவு; கோடு - உச்சி, சிகரம்; ஒலிகழை - உராய்தலினால் ஒலி எழுப்பும் மூங்கில்; தன்பால் உள்ள துளைவழி காற்றுப் போகையினால் ஒலி எழுப்பும் மூங்கில் என்றும் கொள்ளலாம். பிறங்கல் - பிறங்குகல், மலை.

254. பாலை — தலைவி கூற்று

இலைஇல் அம்சினை இனவண்டு ஆர்ப்ப
முலைஏர் மென்முகை அவிழ்ந்த கோங்கின்
தலைஅலர் வந்தன வாரா தோழி
துயில்இன் கங்குல் துயில்அவர் மறந்தனர்

பயில்நறுங் கதுப்பின் பாயலும் உள்ளார்
செய்பொருள் தரல்நசைஇச் சென்றோர்
எய்தின ரால்என வரூஉம் தூதே.

— பார்காப்பான்

பருவங் கண்டு வற்புறுத்தும் தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

தோழி! இலையில்லாத அழகிய கிளைகளில் திரளான வண்டுகள் ஆரவாரம் செய்யும்படி முலையை ஒத்த மெல்லிய அரும்புகள் விரிந்த கோங்கமரத்தின் முதலிற் பூக்கும் மலர்கள் தோன்றின. ஈட்டுதற்குரிய பொருளை விரும்பிச் சென்றவராகிய தலைவர் மீண்டு வந்தனர் என்று அறிவித்தற்குத் தூதுகளும் வந்தில. நம்மைப் பிரிந்துசென்ற அவர் துயிலுதற்கு இனிய இராக்காலத்திலே உடன் துயிலுதலை மறந்தனர். தாம் பழகுகின்ற கூந்தலாகிய அணையையும் நினையாராயினர்.

ஆதலால் தலைவர் நம்மிடம் ஆர்வமின்றி நம்மை மறந்தனர் போலும் என்று கூறியவாறு.

தலைஅலர் - முதலிற்பூக்கும் பூ; கோங்கு மலரும் காலத்தில் இலையின்றித் தோன்றும்; இது இலவமரத்தின் இனமாகும். கோங்கம் மலர்ந்தமை குறிப்பதனால் இளவேனிற் பருவம் என்பது தெரியவரும்.

255. பாலை — தோழி கூற்று

பொத்துஇல் காழ அத்த யாஅத்துப்
பொரிஅரை முழுமுதல் உருவக் குத்தி
மறம்கெழு தடக்கையின் வாங்கி உயங்குநடைச்
சிறுகட் பெருநிரை உறுபசி தீர்க்கும்
தடமருப்பு யானை கண்டனர் தோழி
கடன்கடன் இறீஇயர் எண்ணி இடம்தொறும்
காமர் பொருட்பிணிப் போகிய
நாமஎம் காதலர் சென்ற ஆறே.

— கடுகு பெருந்தேவன்

'இடைநின்று மீள்வர்' எனக் கவன்ற கிழத்தியைத் தோழி வற்புறுத்தியது.

தோழி! நம்முடைய இல்லறக் கடமை எல்லாம் நிறைவேற்றும் பொருட்டாக இடங்கள்தோறும் விருப்பத்தையுடைய பொருள் முயற்சிக்கண் தோய்ந்த உள்ளப் பிணிப்பினால் எம் தலைவர் பிரிந்து சென்ற அச்சம் விளைப்பதான வழியில் புரையில்

லாத வயிரத்தை யுடையன வான யாமரத்தின் பொரிந்த அடிமரத்தை ஊடுருவிச் செல்லும்படியாகத் தன் கொம்பால் குத்தி வீழ்த்தி வலிமை கொண்ட கையினாலே வளைத்து வருந்திய நடையையும் சிறிய கண்ணையும் உடைய பெரிய யானையணியின் மிக்க பசியைத் தீர்க்கின்ற வளைந்த கொம்புடைய ஆண்யானை யைக் கண்டனர்.

ஆண்யானை பெண்யானைக்கு உதவுதலைக் காணும் தலைவரும் வினை முற்றி மீண்டு வருவர் என்று குறித்தவாறாம்.

கடன் கடன் என இரட்டித்து வருதல் கடமை எல்லாவற்றை யும் வலியுறுத்திச் சுட்டுமாறு காணப்படுகிறது. மேலும் இப் பாடம் மேலடியில் வரும் தடமருப்பு என்பதனோடு ஒத்த எதுகையுடைய பாடமு மாகும். இப் பாடல் முழுமையும் இரண்டடிகள் ஒத்த எதுகையினவாய் வருதலை நோக்க இஃது ஏற்புடைத்தாகிறது; இடந்தொறும் எனவரும் 4ஆம் சீர்க்கும் ஏற்புடைமை எதுகை நயத்ததாகும்.

ஈற்றடியில் 'நாமஎம்' என்ற பாடம் தலைவன் சென்ற ஆற்றின் அருமையை வெளிப்படுத்தும் பொருட்சிறப் புடைய தாயும் எதுகை அமைப்புடைய்தாயும் அமைதலின் இப் பாடமே கொள்ள பெற்றது.

பொத்து - பொந்து, உள்துளை; காழ் - வயிரம்; அத்தம் - அரிய காட்டுவழி; சிவப்பு என்றும் பொருளாம். காமர் - அழகு; பிணி - பிணிப்பு; பொருட்பிணி - பொருளிடத்து அதிகப் பிணிப் புண்ணல்; கடன் - கடமை; போதல் - தோய்தல்.

256. பாலை — தலைவன் கூற்று

மணிவார்ந் தன்ன மாக்கொடி அறுகைப்
பிணிகால் மென்கொம்பு பிணையொடும் மாந்தி
மான்ஏறு உகளும் கானம் பிற்பட
வினைநலம் படீஇ வருதும் அவ்வரைத்
தாங்கல் ஒல்லுமோ பூங்குழை யோய்எனச்
சொல்லா முன்னர் நில்லா ஆகி
நீர்விலங்கு அழுதல் ஆனா
தேர்விலங் கினவால் தெரிவை கண்ணே.

பொருள் வலிக்கப்பட்ட கிழவன் செலவழுங்கியது.

பொலிவு பெற்ற குழையை அணிந்தோய்! நீலமணி ஒழுகினாற்போலக் கரிய கொடியாகிய அறுகம்புல்லினது பிணித்த வேர்களையுடைய மெல்லிய தண்டினைப் பெண்மானோடு வந்து

குறுந்.—15

நிரம்ப உண்டு ஆண்மான் துள்ளுகின்ற காடு பின்னாகச் சென்று தொழில் நன்மை உண்டாகப் பெற்று மீண்டு வருவோம். அந்தக் காலத்தளவும் நின்னால் பொறுத்திருக்க இயலுமோ என்று நாம் சொல்வதற்கு முன்பாகவே தலைவியினுடைய கண் பண்டைய நிலையில் நில்லாமல் மாறிக் கலக்கமுற்று நீரால் மாறுபடுதலை யுடைய அழுகை நிற்காமல் எம் தேரைத் தடை செய்தன.

மலர் - நீலமலர்; அரில் - பிணக்கம்; பிணி என்பது கொடி களால் பின்னப்பெற்ற பிணக்கு; வினைநலம் படுதல் - பொருள் முயற்சி முற்றுப்பெறுகை; விலங்குதல் - தடுத்தல்.

257. குறிஞ்சி — தலைவி கூற்று

வேரும் முதலும் கோடும் ஓராங்குத்
தொடுத்த போலத் தூங்குபு தொடரிக்
கீழ்தாழ்வு அன்ன வீழ்கோட் பலவின்
ஆர்கலி வெற்பன் வருதொறும் வருஉம்
அகலினும் அகலா தாகி
இகலும் தோழிநம் காமத்துப் பகையே.

— உறையூர்ச் சிறுகந்தன்

வரைவு உணர்த்திய தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

தோழி! நம்பால் தோன்றும் காமமாகிய பகை, வேரிலும் அடிமரத்திலும் கிளையிலும் ஒருபடியாகத் தொடுத்துவைத்தன போலத் தொங்கித் தொடர்ந்து கீழே தாழ்ந்தாற் போன்ற குலை களைக் கொண்ட பலாமரத்தினையுடைய ஆரவாரம் நிறைந்த மலைக்குத் தலைவன் இங்கே வருந்தொறும், வெளிப்படும். அவன் அகன்று சென்றாலும் போகாமல் மாறுபடும்.

தலைவனைப் பிரிவின்றி ஒன்றியிருத்தலே எனக்கு இன்பம் பயப்பது என்பதாம்.

வீழ்தல் - தாழ்தல்; விரும்புதல்; கோள் - காய்க்குலை.

அடைந்தால் இன்பமும் பிரிந்தால் துன்பமும் தந்துவந்த காமத்துப்பகை இனித் தீர்ந்தது; எனவே முற்றும் இன்பமாய் விளங்கும் என்பதாம்.

258. மருதம் — தோழி கூற்று

வாரல்எம் சேரி தாரல்நின் தாரே
அலரா கின்றால் பெரும காவிரிப்
பலர்ஆடு பெருந்துறை மருதொடு பிணித்த

ஏந்துகோட்டு யானைச் சேந்தன் தந்தை
அரியல்அம் புகவின் அம்தோட்டு வேட்டை
நிரைய ஒள்வாள் இளையர் பெருமகன்
அழிசி ஆர்க்காடு அன்னஇவள்
பழிதீர் மாண்நலம் தொழுவன கண்டே.

— பரணர்

தோழி தலைமகற்கு வாயில் மறுத்தது. வாயில் நேர்ந்ததூஉம் ஆம்.

பெரும! பலரும் வந்து நீராடுகின்ற காவிரியின் பெரிய நீர்த் துறையினிடத்தே மருதமரத்தில் கட்டிய மேலே ஏந்திய கொம்பு களைக் கொண்ட யானைகளையுடைய சேந்தனது தந்தையும் கள்ளாகிய உணவையும் அழகிய விலங்குத் திரள்களை வேட்டை யாடும் தொழிலையும் பகைவர்க்கு நரகத்தைப் போலத் துன்பம் தரும் ஒள்ளிய வாளையுமுடைய இளைய வீரர்களுக்குத் தலைவனு மான அழிசி என்பவனின் ஆர்க்காடு என்னும் நகரத்தைப் போன்ற இவளுடைய குற்றமற்ற மாட்சிமையுடைய நலங்கள் அழிதல் கண்ட பின்பும் எம் சேரியிடத்து வருதலை ஒழிவாயாக. நின் மாலையைத் தருதலையும் கைவிடுக. பழிச்சொல் உண்டா கின்றது.

எனவே, நீ இங்கே வாரற்க என மறுத்துரைத்தாளாயிற்று.

அலர் - இங்குப் பரத்தையர் கூறும் பழிமொழி; அரியல் - கள்; தோடு - விலங்கின் தொகுதி; நிரயம் - நரகம்; நிரய ஒள்வாள் - பகைவர்க்கு நரக வேதனையைச் செய்யும் ஒளிபடைத்த வாள். அழிசி - சேந்தன் என்பவனுடைய தந்தை; ஆர்க்காடு என்னும் ஊருக்குரியவன்; தொழுதல் - தாழ்தல், குறைதல்.

தாழ்தல் குறைதல் என்னும் பொருள்தரும் தொழுதன என்னும் பாடம் பழிதீர் எனவரும் தொடக்கத்துக்கு ஒத்த இசையினை யுடைய தாகும். எனவே, இப் பாடம் கொள்ளப் பெற்றது.

இரண்டாவது தரப்பட்டுள்ள துறைக் கருத்து முன்னதற்கு முற்றிலும் மாறுபட்டது. உம் செய்கை எமக்கு உடன் பாடல்ல வேனும் ஊரார் உரைக்கும் பழிமொழிக்கு அஞ்சி நினக்கு உடன் பட்டேன் என்று எச்சப்பொருள் வருவித்துரைத்தல் வேண்டும்.

259. குறிஞ்சி — தோழி கூற்று

மழைசேர்ந்து எழுதரு மாரிக் குன்றத்து
அருவி ஆர்ந்த தண்நறுங் காந்தள்
முகைஅவிழ்ந்து ஆனா நாறும் நறுநுதல்

பல்இதழ் மழைக்கண் மாஅ யோயே
ஒல்வை ஆயினும் கொல்வை ஆயினும்
நீஅளந்து அறிவைநின் புரைமை வாய்போல்
பொய்ம்மொழி கூறல்அஃது எவனோ
நெஞ்சம் நன்றே நின்வயி னானே.

— பரணர்

காப்பு மிகுதிக்கண் ஆற்றாளாகியவழித் தோழி அறத்தொடு நின்று, 'யானே பரிகரிப்பல்' என்று கருதியதனைத் தலைமகளும் நயப்பாளாகக் கூறியது.

மேகங்கள் திரண்டு மேலே எழுகின்ற மழையையுடைய மலையினிடத்திலே அருவிக்கு அடுத்துள்ள தண்ணிய நறிய காந்தள் அரும்புகள் மலர்ந்து அமையாதனவாய் மணம் வீசுகின்ற நறிய நெற்றியையும் பல இதழ்களையுடைய குவளை போன்ற குளிர்ச்சியான கண்ணையும் உடைய மாமைநிறம் கொண்டவளே! நீ என்னைப் பொறுப்பாயாயினும் சினந்து வருத்துவாயாயினும் நின்னுடைய உயர்வினை நீயே அளவிட்டு அறியும் ஆற்றலையுடையையாய் மெய்யைப் போலப் பொய்வார்த்தைகளைக் கூறுதல் என்ன பயனைத் தரும். நின்திறத்துத் தலைவனுடைய நெஞ்சம் நன்மையையே எண்ணுவதாகும்.

தான் அறத்தொடு நின்றதன் பயனாகவே நன்மை விளைந்தது என எடுத்துக் கூறுவாளாயினள்.

மழை - மேகம்; மாரி - மழை; முகை - அரும்பு; பல்லிதழ் என்பது இங்கே குவளை மலரை; 'பல்இதழ் உண்கண்' என்பதனோடு (குறுந். 5) ஒப்பிடுக. ஒல்லுதல் - பொறுத்தல்; கொல்லுதல் - வருத்துதல்; புரைமை - உயர்ச்சி; வாய் - வாய்மை.

260. பாலை — தோழி கூற்று

குருகும் இருவிசும்பு இவரும் புதலும்
வரிவண்டு ஊத வாய்நெகிழ்ந் தனவே
சுரிவளைப் பொலிந்த தோளும் செற்றும்
வருவர்கொல் வாழி தோழி பொருவார்
மண்எடுத்து உண்ணும் அண்ணல் யானை
வண்தேர்த் தொண்டையர் வழைஅமல் அடுக்கத்துக்
கன்றுஇல் ஓர்ஆ விலங்கிய
புன்தாள் ஓமைய சுரன்இறந் தோரே.

— கல்லாடனார்

அவர் வரவிற்கு நிமித்தமாயின கண்டு ஆற்றாளாகிய தலைமகட்குத் தோழி சொல்லியது.

தோழி! நாரைகளும் கரிய வானத்தின்கண் உயரப் பறக்கும்; புதலிடத்து உள்ள போதுகளும் கோடுகளையுடைய வண்டுகள் ஊதுதலினாலே இதழ்களின் வாய் மலர்ந்தன. சுழித்த சங்கினால் செய்யப்பெற்ற வளையினால் விளங்கிய தோள்களும் நெகிழ்ச்சி நீங்கி வளையோடு செறியும். ஆதலினாலே பகை கொண்டு போர் செய்தாருடைய நாட்டைக் கைப்பற்றிப் பயன் பெறும் தலைமை பொருந்திய யானையையும் வளப்பான தேரையும் உடைய தொண்டைமான்களுக்கு உரிய சுரபுன்னைகள் நெருங்கிய மலைப்பக்கத்தில் கன்று இல்லாத ஒற்றைப் பசுவை நிழல் காட்டித் தன்பால் வரச் செய்து தடுத்த புல்லிய அடியையுடைய ஓமை மரங்களைக் கொண்டுள்ள பாலை நிலங்களைக் கடந்து சென்ற தலைவர் வந்து சேர்வர்.

நல்நிமித்தங்கள் காணப்படுவதனால் தலைவர் வருவர் என்று தோழி எடுத்துரைத்தாளாயிற்று.

புதல் - புதர்; வளை - தோள்வளை; இப் பாடலில் சுட்டப் பெற்ற நிமித்தங்கள் கூதிர்க்கால வரவினை அறிவிப்பன. கூதிர்க் காலத்தில் திரும்பிவிடுவேன் என்று பிரிந்துசென்ற தலைவர் வருவர் என்பது சுட்டியவாறாம். சுரிதல் - சுழிதல்; வழை - சுரபுன்னை.

261. குறிஞ்சி — தலைவி கூற்று

படுமழை பொழிந்தெனப் பதன்அழிந்து உருகிய
சிதட்டுக்காய் எண்ணின் சில்பெயற் கடைநாள்
சேற்றுநிலை முனைஇய செங்கட் காரான்
நள்ளென் யாமத்து ஐயெனக் கரையும்
அஞ்சுவரு பொழுதி னானும் என்கண்
துஞ்சா வாழி தோழி காவலர்
கணக்குஆய் வகையின் வருந்திஎன்
நெஞ்சுபுண் உற்ற விழுமத் தானே.

— கழார்க்கீரன் எயிற்றி

இரவுக்குறிக்கண் தலைமகன் சிறைப்புறமாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.

தோழி! ஊர்காவலர் இராப்பொழுதின் ஒவ்வொரு நொடியையும் கணக்கிட்டு ஆராய்வதுபோல ஆராய்ந்து நெஞ்சமானது புண்பட்ட ஏதுவினாலே மிகு மழையும் பெய்ததாகச் செவ்வி கெட்டு உள்ளீடு இல்லாத காயையுடைய எள்ளுப் பயிரைக் கொண்ட சிறிய மழையையுடைய கார்ப்பருவத்தின் இறுதி

நாள்களில் சேற்றிலே நிற்றலை வெறுத்த சிவந்த கண்ணையுடைய் எருமை இருள் செறிந்த நடுஇரவில் ஐயென ஒலிக்கும் அச்சம் உண்டாகின்ற காலத்திலும் என்னுடைய கண்கள் துயிலாவாயின.

தலைவனுடைய வருகையை இரவில் எதிர்பார்த்துத் தூங்காதிருந்தேன் என்பதாம்.

படுமழை - மிகுதியான மழை; படு - மிகுதி; பதன் - இயற்கைச் செவ்வி; சிதட்டுக்காய் - உள்ளீடு இல்லாத ஊமைக்காய்; எண் - எள்; பெயல் - மழை; முனைதல் - வெறுத்தல்; காரான் - கரும்பசு, எருமை; ஆ என்னும் பெயர் எருமைக்கும் உரித்தாதலை இது சுட்டும். எருமையின் ஒலி - ஐயெனக் கரையும் ஒலி. காவலர் - ஊர்காவலர்; இவர் நாழிகை வட்டிலை நோக்கி நாழிகையைக் கணக்கிட்டு அறிவிப்பர்.

எட்செடியின் பதனழிவிற்கு மழை மிகுதியே காரணமாகும். ஆகவே மிகுந்த மழை எனப் பொருள்தரும் படுமழை என்னும் பாடமே ஈண்டு ஏற்புடையதாகும். 'படுமழை பொழிந்த' எனவரும் நற்றிணைத் தொடரும் (நற். 61 : 7) ஈண்டு ஒப்பு நோக்கத்தகும்.

262. பாலை — தோழி கூற்று

ஊஉர் அலர்எழச் சேரி கல்லென
ஆனாது அலைக்கும் அறன்இல் அன்னை
தானே இருக்கத் தன்மனை யானே
நெல்லி தின்ற முள்எயிறு தயங்க
உணல்ஆய்ந் திசினால் அவரொடு சேய்நாட்டு
விண்தொட நிவந்த விலங்குமலைக் கவாஅன்
கரும்புநடு பாத்தி அன்ன
பெருங்களிற்று அடிவழி நிலைஇய நீரே.

— பாலை பாடிய பெருங்கடுங்கோ

உடன்போக்கு நேர்ந்த தோழி கிழத்திக்கு உடன்போக்கு உணர்த்தியது.

தோழி! ஊரிடத்தே பழிச்சொல் உண்டாகத் தெருவிலுள்ளார் கல்லென்று ஆரவாரம் செய்ய அமையாமல் நம்மை வருத்துகின்ற அறநினைவு இல்லாத அன்னையும் தன் இல்லிடத்தே தான்மட்டும் தனியே இருப்பாளாக. யான் நெடுந்தூரத்திலுள்ள நாட்டிலே வானத்தைத் தொடும் வண்ணம் ஓங்கி உயர்ந்த குறுக்கிட்டுக் கிடக்கும் மலையின் அடிவாரத்தில் உள்ள கரும்பை நட்ட

சிறுபாத்தி போன்ற ஆண் யானையின் காலடிச் சுவட்டில் தங்கிய நீரை அத் தலைவருடனே நெல்லிக்காயைத் தின்ற முள்ளைப் போன்ற கூரிய பற்கள் விளங்கும்படி நீ உண்ணுதலை நினைந்தேன்.

தலைவனுடன் நீ உடன்போதலுக்கு நேர்ந்தேன் என்பதைத் தோழி வெளிப்படக் கூறியவாறு.

புணர்ச்சி விதிப்படி 'இருக்கத்' என வருமொழிக்கேற்பத் தகரம் மிகுந்து வருதலே அமைவுடையதாகும். மொழிநிலை கருதி இப் பாடம் கொள்ளப்பெற்றது.

சேரி - தெரு; ஆனாது - அமையாமல்; முள்எயிறு - முள்ளைப் போலக் கூரிய பல்.

இதனை, ஊராருடைய கூற்றுக் கொண்டெடுத்து மொழியப் பட்டது என்பர் பேராசிரியர் (தொல். செய்யு. 191). இடையூறு பொருளின்கண் தலைவி போக்குடன்பட்டது என்றும் (தொல். பொருளியல், 31) போக்கு நேர்ந்தமை தோழி கூறியது என்றும் (தொல். அகத். 39) நச்சினார்க்கினியர் ஈரிடங்களில் இருவேறு கருத்துப்பட எடுத்துக்காட்டுகின்றார். "தலைவி போக்குடன் பட்டது" என்ற கருத்திற்கு இப் பாடற்பொருள் அமைப்புச் சிறப்பாகத் தோன்றும்.

263. குறிஞ்சி — தோழி கூற்று

மறிக்குரல் அறுத்துத் தினைப்பிரப்பு இரீஇ
செல்ஆற்றுக் கவலைப் பல்இயம் கறங்கத்
தோற்றம் அல்லது நோய்க்குமருந்து ஆகா
வேற்றுப்பெருந் தெய்வம் பலஉடன் வாழ்த்தி
பேஎய்க் கொளீஇயள் இவள்எனப் படுதல்
நோதக் கன்றே தோழி மால்வரை
மழைவிளை யாடும் நாடனைப்
பிழையேம் ஆகிய நாம்இதற் படவே.

— பெருஞ்சாத்தன்

'அன்னை வெறி எடுக்கக் கருதா நின்றாள், இனி நாம் இதற்கு என் கொலோ செயற்பாலது?' எனத் தோழி தலைமகட்குத் தலைமகன் சிறைப்புறமாகக் கூறியது.

தோழி! பெரிய மலையினிடத்தே மேகங்கள் விளையாடுகின்ற நாட்டிற்குரிய தலைவனுக்குத் தவறு இழைக்காதவர்களாகிய நாம் இக் களவொழுக்கத்திலே ஈடுபட்டு நிற்க, ஆட்டுக்குட்டியின்

கழுத்தை அறுத்துத் தினையைப் பலியாக வைத்து ஓடுகின்ற ஆற்றுத் துருத்தியிலே பலவகையான இசைக் கருவிகள் முழங்கத் தாம் வெளிப்படுதலேயன்றி நம் நோய்க்கு மருந்தாக அமையாத வேறான பல தெய்வங்களை வாழ்த்தி வழிபட்டு, இத் தலைவி பேயால் பிடிக்கப்பட்டாள் என்று சொல்லப்படுவது வருந்துதற்கு உரியதாகும்.

தாய் வெறியாட்டு நிகழ்த்தக் கருதியமையும் அது நிகழாமல் தடுக்கத் தலைவன் நின்னை வரைந்துகொள்ள வேண்டும் என்பதனையும் சிறைப்புறத்துள்ள தலைவன் உணரும்வண்ணம் கூறப்பெற்றது.

மறி - துள்ளுநடை போடும் ஆட்டுக்குட்டி; குரல் - கழுத்து; குரல் வெளிப்படுதற்கான இடத்தை உணர்த்தியது. பிரப்பு - தெய்வங்களுக்குக் கூடைகளில் இட்டு வைக்கும் பலி உணவு; கவலை - ஆற்றிடைக் குறையாகிய துருத்தி; துருத்தியில் தெய்வம் உறைவதாகப் போற்றுவது முந்தைய மரபு. வேற்றுப் பெருந் தெய்வம் என்றமையால் தலைவிக்குத் தெய்வமாவான் தலைவனே என்பது குறிப்பித்தவாறாம். நோய்க்கு மருந்து - நோயைப் போக்குவதற்கு உரிய மருந்து. 'பிணிக்கு மருந்து பிறமன்' என்பார் வள்ளுவரும் (குறள் : 1102). மழை - மேகம். இதற்பட என்பது களவொழுக்கத்தில் பொருந்த என்பதோடு இத்தகைய துன்பத்துள் அகப்பட்டு வருந்த என்றும் ஆம்.

264. குறிஞ்சி — தலைவி கூற்று

கலிமழை கெழீஇய கான்யாற்று இகுகரை
ஒலிநெடும் பீலி துயல்வர இயலி
ஆடுமயில் அகவும் நாடன் நம்மொடு
நயந்தனன் கொண்ட கேண்மை
பசந்தக் காலும் பசப்பு ஒல்லாதே.

— கபிலர்

'ஆற்றாள்' எனக் கவன்ற தோழிக்குத் தலைமகள் 'ஆற்றுவல்' என்றது.

ஆரவாரத்தோடு கூடிய மழை பொருந்திய காட்டாற்றினது சிதைவுபட்டுக் காணும் கரையினிடத்திலே தழைத்த நீண்ட தோகை அசையுமாறு நடந்து ஆடுகின்ற மயில்கள் அகவுதலைச் செய்யும் நாட்டையுடைய தலைவன் நம்மொடு விருப்புடைய வனாகக் கொண்ட நட்பானது நாம் பசலையை அடைந்தாலும் அந்தப் பசலையொடு பொருந்தி இராது.

என் நெஞ்சம் அவர் கொண்ட நட்பை உறுதியாக எண்ணியிருத்தலினாலே ஆற்றியிருப்பேன் என்பது குறிப்பித்தவாறாம்.

பசலை என்பதற்குப் பயலை என்பது மாற்று வடிவமே. பசலை என்ற சொல்லாட்சியே சங்கப் பாடல்களில் மிகுந்து காணப்படுகிறது. ஏடுகளில் இப் பாடமே பெரும்பாலும் உள்ளது. எனவே பசந்த, பசப்பு என்னும் பாடங்கள் கொள்ளப்பெற்றன.

கலி - இடி முதலியவற்றால் உண்டாகும் ஆரவாரம்; இகுகரை - நீரால் அரித்துச் செல்லப்பட்டுச் சிதைவுபட்டுக் காணும் கரை; தாழ்ந்த கரை என்றும் ஆம். துயல் வருதல் - அசைதல்.

265. குறிஞ்சி — தோழி கூற்று

காந்தள்அம் கொழுமுகை காவல் செல்லாது
வண்டுவாய் திறக்கும் பொழுதில் பண்டும்
தாம்அறி செம்மைச் சான்றோர்க் கண்ட
கடன்அறி மாக்கள் போல இடன்விட்டு
இதழ்தழை அவிழ்ந்த ஏகல் வெற்பன்
நன்னர் நெஞ்சத்தன் தோழி நின்நிலை
யான்தனக்கு உரைத்தனென் ஆகத்
தான்நா ணினன்இஃது ஆகா வாறே.

— கருவூர்க் கதப்பிள்ளை

வரையாது பிரிந்தவிடத்து, 'அவர் பிரிந்த காரணம் நின்னை வரைந்துகோடல் காரணமாகத்தான்' எனத் தோழி தலைமகட்குக் கூறியது.

தோழி! காந்தளினது அழகிய செழுமையான அரும்பைத் தானாக மலரும்வரை காத்திராமல் வண்டுகள் அரும்பின் மூடிய வாயைத் திறக்கும் சமயத்தில், முன்பே தாம் அறிந்த நடுநிலையுடைய சான்றோரைக் கண்டதும் எதிர் கொள்ளுதல் முதலிய கடமை அறிந்த மனிதரைப் போல, அவ் வண்டுகளுக்கு இடம் கொடுத்து இதழ்களின் பிணிப்பை விட்டு மலர்ந்துள்ள உயர்வான மலைகளையுடைய தலைவன் யான் நின்னுடைய நிலையை எடுத்துச்சொன்னேனாக இந்தக் களவொழுக்கம் நீட்டித்து நிகழாதபடி அவன் நாணமுற்றான். அவன் நின்னை வரைந்துகொள்ளும் நல்ல நெஞ்சத்தை உடையவனாவன்,

ஆகவே, உன்னை விரைந்து வரைந்துகொள்ளும் பொருட்டாகவே பிரிந்தனன்; ஆதலின் வருந்தாதே; விரைந்து வந்து மணம் புரிவான் என எடுத்துரைத்தவாறாம்.

வாய்திறத்தல் - மலரின் வாயைத் திறக்கச் செய்தல்; வாய்திறந்து பாடுதலும் ஆம்; பண்டு - முன்பு; கடன் - கடமை; ஏகல் - உயர்ந்த மலை; விளக்கமுறத் தோன்றும் மலை. நாணுதல் - செய்யாமை குறித்த எண்ணத்தால் நாணமுற்றான் என்பதாம்.

266. பாலை — தலைவி கூற்று

நமக்குஒன்று உரையார் ஆயினும் தமக்குஒன்று
இன்னா இரவின் இன்துணை ஆகிய
படப்பை வேங்கைக்கு மறந்தனர் கொல்லோ
மறப்புஅரும் பணைத்தோள் மரீஇத்
துறத்தல் வல்லியோர் புள்வாய்த் தூதே.

— நக்கீரர்

வரையாது பிரிந்த இடத்துத் தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

தோழி! மறத்தற்கு அரிதான பருத்த நம் தோள்களைத் தழுவி இன்புற்றபின் அதனை மறந்து பிரிந்து சென்ற வன்மையுடையராகிய தலைவர், பறவை வழியாக நமக்கு விடுக்கும் தூது மொழியை நம்மை மதித்து நமக்கு ஒன்றைச் சொல்லாவிடினும், தமக்குப் பொருந்திய துன்பத்தையுடைய இராப்பொழுதில் இனிய துணையாக இருந்த மனைத் தோட்டத்திலுள்ள வேங்கை மரத்திற்கும் தூதுமொழி விடுதலை மறந்தார் போலும்.

வேங்கைக்குத் தூது மறந்தனரோ என்பது இரவுக் குறியிடத்து வந்து வேங்கை மரத்தடியில் கூடி நின்று அளவளாவிய சொற்களை மறந்தாரோ என்னும் கருத்தை வெளிப்படுத்தும்.

இன்னா இரவு - காவல் மிகுதியையுடைய துன்ப இரவு. தன்னைத் தலைவன் காணவந்த இடமாதலின் வேங்கையை இன்துணை என்று குறிப்பிடுகிறாள். புள்வாய்த் தூது - நன்மையை முன்னறிவிக்கும் புள்நிமித்தம். மரத்திற்கு ஏற்பப் புள்வாய்த்தூதினைச் சுட்டியது பொருத்தமாம்.

267. பாலை — தலைவன் கூற்று

இருங்கண் ஞாலத்து ஈண்டுபயப் பெருவளம்
ஒருங்குடன் இயைவது ஆயினும் கரும்பின்
கால்எறி கடிகைக் கண்அயின் றன்ன
வால்எயிறு ஊறிய வசைஇல் தீம்நீர்க்

கோல்அமை குறுந்தொடிக் குறுமகள் ஒழிய
ஆள்வினை மருங்கிற் பிரியார் நாளும்
உறல்முறை மரபின் கூற்றத்து
அறன்இல் கோள்நற்கு அறிந்திசி னோரே.

— காலெறிகடிகையார்

'மேல்நின்றும் ஆடவர் பொருட்குப் பிரிந்தாராகலின் நாமும் பொருட்குப் பிரிதும்' என்னும் நெஞ்சிற்கு நாளது சின்மையும் இளமையது அருமையும் கூறிச் செலவு அழுங்கியது.

நெஞ்சே, நாள்தோறும் முறையாக அடைகின்ற மரபுடைய கூற்றுவனது கொலைத்தொழிலின் தன்மையை நன்றாக அறிந்தோர் பெரிய இடத்தையுடைய பூமிப்பரப்பில் கூடித் திரண்ட பயனையுடைய பெரிய செல்வம் ஒருசேரப் பொருந்துவ தாயினும், கரும்பின் அடிப்பகுதியை வெட்டிய துண்டத்தைத் தின்றாற் போன்ற சுவையுடைய வெள்ளிய பற்களிடத்தே ஊறிய குற்றமில்லாத இனிய நீரையும் திரட்சியான குறுகிய வளையை யும் உடைய இளையவளான தலைவி தனியளாய் நீங்கியிருப்ப, முயற்சியின் பொருட்டாகத் தாம் மட்டும் பிரிந்து செல்லார்.

நானும் தலைவியைப் பிரிந்து செல்லேன் என்பது கருத்தாம்.

பயம் - பயன்; கால் - அடிப்பகுதி; கடிகை - துண்டு; ஆள்வினை - முயற்சி. நாளும் உறல்முறை மரபின் கூற்றம் - நாள்தோறும் வாழ்நாள் முடிவு வரையறுக்கப்பட்ட உயிர்களை நாடி முறையாகச் செல்லும் மரபினையுடைய கூற்றுவன். இப் பாடலில் கூற்றத்தைக் குறித்தது நாளது சின்மை பற்றியும் குறுமகள் ஒழியப் பிரியார் என்றது இளமையது அருமையும் சுட்டிக் கூறும் பகுதிகளாகும்.

'வால்எயிறு ஊறிய வசைஇல் தீம்நீர்' என்பதனோடு,

'பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயிறு ஊறிய நீர்' (குறள் 1121)

என்னும் குறட்பா ஒப்புக் காணத் தகும்.

எயிற்றின்கண் ஊறிய நீர் அடிக்கரும்பின் சாறு போன்று இனிப்பது என ஒப்புக் கூறி விளக்குகிறார் புலவர். இது பற்றியே இவர் சிறப்பு வகையால் காலெறிகடிகையார் எனப் பெயர் பெற்றார் என்பர்.

268. குறிஞ்சி — தோழி கூற்று

சேறி ரோஎனச் செப்பலும் ஆற்றாம்
வருவி ரோஎன வினவலும் வினவாம்
யாங்குச்செய் வாம்கொல் தோழி பாம்பின்
பையுடை இருந்தலை துமிக்கும் ஏற்றொடு
நடுநாள் என்னார் வந்து
நெடுமென் பணைத்தோள் அடைந்திசி னோரே.

— கருவூர்ச் சேரமான் சாத்தன்

தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகட்குத் தோழி சொல்லியது.

தோழி! பாம்புகளின் படத்தையுடைய பெரிய தலையைப் பிளக்கும்படியான இடியேற்றோடு கூடிய நள்ளிரவு என்றும் எண்ணாமல் வந்து நின்னுடைய நீண்ட மெல்லிய தோள்களை அடைந்து இன்புறுகின்றார். அவர்பால் எம்மை விட்டுச் செல்லு கின்றீரோ என்று செப்புதற்கும் வன்மை இல்லாதவராயினோம். செல்லின் மீண்டும் வருவீரோ என்று கேட்டலையும் செய்யோம். எவ்வாறு அதனை நாம் செய்வோம்.

தலைவர் செல்லுதலும் வருதலும் இன்றி என்றும் உடன் இருப்பாராகிய நிலையை அடைய வரைந்துகொள்ளுதல் நலம் என்று குறிப்பித்தவாறாம்.

பிரிய மனமின்மையின் சேறிரோ எனச் சுட்ட இயலாத நிலை. அத் தலைவன் வரும் வழியின் ஏதம் அஞ்சிப் பார்க்கும்போது மீண்டும் வருக என்றற்கும் இயலாத நிலை.

செப்பல் - சொல்லுதல்; வினவல் - கேட்டல்; பை - படம்; துமிதல் - பிளத்தல்; பணை - மூங்கில்; நடுநாள் - நள்ளிரவு; ஏறு - இடியேறு.

269. நெய்தல் — தலைவி கூற்று

சேயாறு சென்று துனைபரி அசாவாது
உசாவுநர்ப் பெறினே நன்றுமன் தில்ல
வயச்சுறா எறிந்த புண்தணிந்து எந்தையும்
நீல்நிறப் பெருங்கடல் புக்கனன் யாயும்
உப்பை மாறி வெண்ணெல் தரீஇய
உப்புவிளை கழனிச் சென்றனள் அதனால்
பனிஇரும் பரப்பின் சேர்ப்பற்கு
இனிவரின் எளியள் என்னும் தூதே.

— கல்லாடனார்

தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.

தோழி! என் தந்தை வலிமையுடைய சுறாமீன் தாக்கியதால் நேர்ந்த புண் ஆறி மீன் வேட்டைக்காக நீல நிறமுடைய பெரிய கடலிடத்துப் புகுந்தனன். என் தாயும் உப்பை விற்று வெண்ணெல்லைப் பெற்று வருவதற்காக உப்பு விளையும் அளத்திற்குச் சென்றாள். அதனால் குளிர்ச்சியுடைய பெரிய பரப்பாகிய கடற்கரையுடைய தலைவனுக்கு இப்பொழுது இங்கு வந்தால் தலைவி எளிதிற் கண்டு பெறுதற்குரியளாவள் என்னும் தூது மொழியை நெடுந்தூர வழியைக் கடந்து போய் விரையும் நடையினால் வருந்தாமல் கூறி உசாத்துணையாவாரைப் பெற்றால் மிகவும் நல்லதாகும். இஃது என் விருப்பமாகும்.

தலைவி தன்னுடன் கூடித் தலைவன் அளவளாவுதற்கு ஏற்ற காலம் இது எனச் சுட்டிக் கூறினாளாயிற்று. தூது செலின் நன்று என்றது தோழியை அப்பால் போதற்கு உரைத்ததொரு குறிப்பு மொழியாகும்.

துனைபரி - விரைவு நடை; அசாவாமை - வருந்தாமை; உப்பு விளை கழனி - உப்பு வயல், உப்பளம். தூது - தூதுமொழி.

270. முல்லை — தலைவன் கூற்று

தாழ்இருள் துமிய மின்னித் தண்ணென
வீழ்உறை இனிய சிதறி ஊழியின்
கடிப்புஇகு முரசின் முழங்கி இடித்துஇடித்துப்
பெய்துஇனி வாழியோ பெருவான் யாமே
செய்வினை முடித்த செம்மல் உள்ளமொடு
இவளின் மேவினம் ஆகிக் குவளைக்
குறுந்தாள் நாள்மலர் நாறும்
நறுமென் கூந்தல் மெல்அணை யேமே.

— பாண்டியன் பன்னாடு தந்தான்

வினைமுற்றிப் புகுந்த தலைமகன் கிழத்தியோடு உடனிருந்து கூறியது.

யாம் நினைந்தவண்ணம் செய்வினைகளை முற்றுவித்தத னால் தோன்றிய நிறைவான உள்ளத்தோடு இத் தலைவியுடன் விரும்பிப் பொருந்தினேமாய் குறிய காம்பையுடைய அன்றலர்ந்த குவளையின் செவ்வி மலர் மணக்கின்ற நல்ல மெல்லிய கூந்த லாகிய பாயலிடத்துக் கிடந்தோம். ஆகையினால் மேகமே தங்கியிருந்த இருள் அழியும்படி மின்னலைச் செய்து குளிர்ச்சி

யுண்டாம்படி விழுகின்ற துளிகளுள் இனியவற்றைத் துளித்து முறைமையினால் குறுந்தடியால் அடிக்கப்பெறும் முரசின் ஓசை போல முழங்கிப் பலமுறையும் இடித்து மழை பெய்து வாழ்வா யாக.

நான் தலைவியுடன் கூடி இன்பம் பெற்றேனாதலின் மழை நன்கு பெய்வதாக என்பதாம்.

துமிதல் - அழிதல்; வீழ் உறை - விரும்பப் படும் மழைத்துளி; ஊழி - முறைமை; செம்மல் உள்ளம் - நிறைவு பெற்ற உள்ளம்.

முறைமை என்னும் பொருளில் ஊழ் என்பது போலவே ஊழி என்னும் சொல் வடிவமும் உண்டு. ஊழியின் என்றே எல்லா ஏடு களும் பாடங் கொண்டுள்ளன. எனவே இப் பாடமே கொள்ளப் பெற்றது.

இப் பாட்டை, பிரிந்து வந்து புகுந்த தலைவன் கூற்று என்பர் இளம்பூரணர் (தொல். கற்பு. 5). பிரிந்த இடத்துத் தான் பெற்ற பெருக்கம் எய்திய சிறப்பின்கண் தலைவன் மனமகிழ்ந்து கூறியது (தொல். கற்பு. 5) என்றும், தலைவன் பள்ளியிடத்து வந்திருந்து கூறியது என்றும் (தொல். கற்பு 5) நச்சினார்க்கினியர் இப் பாடலுக்குக் கருத்து விளக்கம் தருகிறார்.

271. மருதம் — தலைவி கூற்று

அருவி அன்ன பருஉறை சிதறி
யாறுநிறை பகரும் நாடனைத் தேறி
உற்றது மன்னும் ஒருநாள் மற்றுஅது
தவப்பல் நாள்தோள் மயங்கி
வௌவும் பண்பின் நோய்ஆ கின்றே.

— அழிசி நச்சாத்தனார்

தலைமகற்கு வாயில்நேர்ந்து புக்க தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

தோழி! அருவியை ஒத்த பருமையான துளிகளைச் சிதறி மழைபெய்தமையால் ஆறு வெள்ளம் நிரம்பப் பெற்றதாய் ஒலிக்கும் நாட்டுக்குரிய தலைவனைத் தெளிந்து அவனோடு சேர்ந்திருந்தது ஒரே நாள்தான். அங்ஙனம் சேர்ந்தமையால் மிகப் பல நாள்கள் தோளோடு கலந்து அழகைக் கொள்ளை கொள்ளும் தன்மையினையுடைய நோயாக ஆகின்றது.

அறங்கருதித் தலைவனை ஏற்றுக் கொள்கின்றேன் என்பதாம்.

ஆறு பெருந்துளிகளால் நிறைவுற்றுப் புறத்தேயுள்ள பொருள் களுக்குப் பயன் விளைக்குமாறு போலத் தலைவனும் புறத்தில் உறையும் பரத்தையர்க்குப் பயன்படுகின்றான் என்பதனைக் குறிப்பித்தலால் இஃது இறைச்சிப் பொருளாம்.

உறை - துளி; நிறை - வெள்ளம்; மயங்கி - கூடி; பகர்தல் - ஒலித்தல்; கொடுத்தல் என்றும் கொள்ளலாம்.

272. குறிஞ்சி — தலைவன் கூற்று

தீண்டலும் இயைவது கொல்லோ மாண்ட
வில்லுடை வீளையர் கல்இடுபு எடுத்த
நனந்தலைக் கானத்து இனம்தலைப் பிரிந்த
புன்கண் மடமான் நேர்படத் தன்னையர்
சிலைமாண் கடுவிசை கலைநிறத்து அழுத்திக்
குருதியொடு பறித்த செங்கோல் வாளி
மாறுகொண் டன்ன உண்கண்
நாறுஇருங் கூந்தல் கொடிச்சி தோளே.

— ஒருசிறைப் பெரியன்

கழறிய பாங்கற்குக் கிழவன் உரைத்தது.

மாட்சிமையுடைய வில்லைக் கொண்ட வீளையொலியை உடையோராய்க் கற்களை வீசி விலங்குகளை எழுப்பிய அகன்ற இடத்தையுடைய காட்டிலே தன் இனத்தினின்றும் பிரிந்த துன்பத்தையும் இளமையையுமுடைய பெண்மான் எதிர்ப்படவும் அதனை எய்யாமல் அவளுடைய தமையன்மார் சிலைத்தல் மாட்சிமையுடைய ஆண்மானினது மருமத்திலே அழுந்தச் செய்து இரத்தத்தோடு பிடுங்கிய சிவந்த திரட்சியையுடைய அம்பு ஒன்றை ஒன்று மாறுபட்டாற்போன்ற மையுண்ட கண்ணையும் மணம் வீசுகின்ற கரிய கூந்தலையும் உடைய கொடிச்சியாகிய தலைவியின் தோள்களை மீண்டும் ஒருகால் தழுவுதலும் என்பால் பொருந்துவதோ?

தலைவி பெறுதற்கு அரியள் என்பதனைச் சுட்டியவாறாம்.

'தோள் தீண்டலும் இயைவது கொல்' என்றது முன்பு தான் அவள் தோள் தீண்டியதனைக் குறித்தபடியாம்.

கொடிச்சி - குறிஞ்சி நிலப் பெண்; வீளை - சீழ்க்கை யொலி; தோள் தீண்டல் - தலைவியை முயங்கிச் சேர்தல்.

கழறிய பாங்கற்குக் கூறும் தலைவன், 'இவனான் இக் குறை முடியாது; நெருநல் இடந்தலைப்பாட்டிற் கூடியாங்குக் கூடுவல்;

அது கூடுங்கொல்' என்று கூறுவான் அற்றைஞான்று மெய் தொட்டுப் பயின்றதே கூறியது என இப் பாடலுக்கு நச்சினார்க் கினியர் கருத்து உரைப்பர் (தொல். களவு. 11).

273. பாலை — தலைவி கூற்று

அல்குறு பொழுதில் தாதுமுகை தயங்கப்
பெருங்காட்டு உளரும் அசைவளி போலத்
தண்ணிய கமழும் ஒண்ணுத லோயே
நொந்தனை ஆயின் கண்டது மொழிவல்
பெருந்தேன் கண்படு வரையில் முதுமால்பு
அறியாது ஏறிய மடவோன் போல
ஏமாந் தன்றுஇவ் உலகம்
நாம்உளேம் ஆகப் பிரியலன் தெளிமே.

—சிறைக்குடி ஆந்தையார்

'பிரிவர்' எனக் கவன்ற தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.

இராப் பொழுதிலே தாதையுடைய அரும்பு விளங்கப் பெரிய காட்டினிடத்தே தடவி வருகின்ற அசைகின்ற மெல்லிய காற்றைப் போலக் குளிர்ந்தனவாய் நறுமணம் வீசும் ஒளி படைத்த நெற்றியையுடையோய்! நீ தலைவன் பிரிவான் என்று வருந்தினாய் ஆனால், யான் அறிந்ததைச் சொல்லுவேன்; கேட்பாயாக. பெரிய தேனிறால் தங்கியிருக்கின்ற மலைப் பக்கத்திலே அதனைப் பெறும் பொருட்டாகப் பழைய கண்ணேணியின் மேல் அறியாமல் ஏறிய அறிவில்லாதவனைப் போல இந்த உலகம் ஏமாந்தது. நாம் உயிரோடு இருக்கின்ற வரையில் தலைவன் நின்னைப் பிரிந்து செல்லான். இதனைத் தெளிவாயாக.

தலைவன் தலைமகளைப் பிரிந்து செல்லான் எனத் தோழி வற்புறுத்திக் கூறியது.

அசைவளி - மெல்லென வீசும் காற்று; மென்காற்று. பெருந்தேன் - மலையிலுள்ள பெரிய தேனிறால்; மால்பு - கண்ணேணி; மடவோன் - அறிவில்லாதான்.

274. பாலை — தலைவன் கூற்று

புறவுப்புறத் தன்ன புன்கால் உகாஅய்க்
காசினை அன்ன நளிகனி உதிர
விடுகணை வில்லொடு பற்றிக் கோடுஇவர்பு
வருநர்ப் பார்க்கும் வன்கண் ஆடவர்

நீர்நசை வேட்கையின் நார்மென்று தணியும்
இன்னாக் கானமும் இனிய பொன்னொடு
மணிமிடை அல்குல் மடந்தை
அணிமுலை ஆகம் உள்கினம் செலினே.

—உருத்திரன்

பொருள் வலித்த நெஞ்சிற்குக் கிழவன் உரைத்தது.

நெஞ்சே! பொன்னாலும் மணியாலும் செய்யப்பெற்ற அணிகளை அணிந்த அல்குலையுடைய தலைவியினது அழகிய முலைகளோடு கூடிய மார்பை நினைந்தவண்ணமாய்ச் சென்றால் புறாவினது முதுகை ஒத்த புல்லிய அடிமரத்தையுடைய உகாய் மரத்தினது மணிக்காசினைப் போன்ற செறிந்த கனிகள் உதிரும்படி விடுகின்ற அம்பை வில்லோடும் பிடித்து உயர்ந்த இடத்தின் மேல் ஏறி, வழியில் வருவாரைப் பார்த்திருக்கும் வன்கண்மையுடைய ஆறலைக்கள்வர் நீர் வேட்கையினால் மரப்பட்டையை மென்று அவ் வேட்கை நீங்கும் துன்பம் மிகுந்த காடுகளும் இனியவாகும்.

தலைவியின் நினைவு துன்பம் மிக்க பாலை வழியினும் இனிமை பயக்கும் என்பதாம்.

புறவு - புறா; உகாஅய் - ஒருவகை மரம்; மணிபோன்ற நிறமுடைய கனியையுடையது. நார் - பட்டை; கணை - அம்பு.

275. முல்லை — தோழி கூற்று

முல்லை ஊர்ந்த கல்உயர்பு ஏறிக்
கண்டனம் வருகம் சென்மோ தோழி
எல்லூர்ச் சேர்தரும் ஏறுடை இனத்துப்
புல்லூர் நல்ஆன் பூமணி கொல்லோ
செய்வினை முடித்த செம்மல் உள்ளமொடு
வல்வில் இளையர் பக்கம் போற்ற
ஈர்மணற் காட்டாறு வரூஉம்
தேர்மணி கொல்ஆண்டு இயம்பிய உளவே!

— ஒக்கூர் மாசாத்தி

பருவ வரவின்கண் வரவு நிமித்தம் தோன்றத் தோழி தலைமகட்கு உரைத்தது.

தோழி! அங்கே ஒலிப்பவை மாலைக் காலத்திலே ஊரை வந்து அடையும் காளைகளுடன் கூடி, புல்தரையின் மீது மெல்ல நடந்து வரும் நல்ல பசுக்கள் பூண்டுள்ள அழகிய மணியோசையோ? தாம் கருதிய வினை முற்றவும் முடித்ததனாலுள்ள

குறுந்.—16

நிறைவு பெற்ற உள்ளத்தோடு வலிய வில்லையுடைய இளையர் தன் பக்கத்தில் பாதுகாத்துவரக் காட்டுவழியே தலைவன் வருகின்ற தேரின் மணியோசையோ? முல்லைக் கொடி படர்ந்த மலையின்மேல் ஏறிக் கண்டு வருவோம்; வருவாயாக.

தேரின் மணியோசை கேட்டலினால் தலைவன் வருகின்றான் என்பதைத் தலைவிக்குத் தோழி கூறியவாறாயிற்று.

ஏற்றினம் மேய்ந்துவிட்டு மனைக்கு மீண்டு வருகின்ற செய்தியே இங்குக் காட்டப்படுகின்றது. ஆகவே புல்மேல் மெல்ல நடந்து வரும் என்னும் பொருள்தரும் புல்லூர் என்னும் பாடமே இங்குக் கொள்ளப் பெற்றது. இப் பாடம் மேலடியில் வரும் எல் ஊர் என்பதற்கு ஏற்ற இசை நயம் உடையதாகவும் அமைகிறது.

ஏடுகளில் கண்ட பெரும்பான்மையான பாடம் பூமணி என்பதே. இது மாடுகளுக்கு அணியும் ஒருவகை அழகிய மணியாகவும் இருத்தல் கூடும். எனவே இப் பாடம் கொள்ளப் பெற்றது. இக் காலத்தார் வழங்கும் சலங்கை மணியாக இருக்கலாம் போலும்.

உயர்பு - உயர்ந்த இடம்; ஏறுடை இனம் - காளையைக் கொண்டுள்ள பசுத்திரள்; ஊர்தல் - மெல்ல நடத்தல்; ஆன் பூ மணி - பசுவின் கழுத்தில் கட்டிய அழகிய மணி; ஈர்மணல் - ஈரப்பதமுள்ள மணல்; மழையினால் மணல் ஈரப்பதமாயிற்று என்பதாம்.

276. குறிஞ்சி — தலைவன் கூற்று

பணைத்தோட் குறுமகள் பாவை தைஇயும்
பஞ்சாய்ப் பள்ளம் சூழ்ந்தும் மற்றுஇவள்
உருத்துஎழு வனமுலை ஒளிபெற எழுதிய
தொய்யில் காப்போர் அறிதலும் அறியார்
முறையுடை அரசன் செங்கோல் அவையத்து
யான்தற் கடவின் யாங்குஆ வதுகொல்
பெரிதும் பேதை மன்ற
அளிதோ தானேஇவ் அழுங்கல் ஊரே.

— கோழிக்கொற்றன்

தோழிக்குக் குறைமறாமல் தலைவன் கூறியது.

மூங்கிலைப் போன்ற தோள்களையுடைய இளையோளாகிய இவளுடைய பாவையை முன்னர்ச் செய்துகொடுத்தும், அதன் பொருட்டாகப் பஞ்சாய்க் கோரை வளர்ந்துள்ள பள்ளப் பகுதிகளில் சுற்றித் திரிந்தும் இவளுடைய அரும்பி மேலெழுந்த அழகிய முலை நிறமுண்டாக யான் எழுதிய தொய்யிலையும் இத் தலைவி

யைப் பாதுகாத்து நிற்பவர்கள் அறியார். நீதிமன்னனது செங்கோன்மையுடைய அறங்கூறவைபத்தில் யான் தலைமகளை வினாவினால் இவையெல்லாம் எவ்வாறு ஆகுமோ? அதனால் இந்த வருத்தத்தையுடைய ஊர் நிச்சயமாக அறிவின்மையுடையதாகும். இது இரங்கத் தக்கதாம்.

மடலேறி அறங்கூறவையத்துச் சான்றோர் துணையாய் இவளை அடைவேன் என்றபடியாம்.

அழுங்கல் ஊர் என்பது தோழியைச் சுட்டிக் கூறியவாறாம். பஞ்சாய் - பஞ்சாய்க் கோரை; இது பாவை செய்வதற்குப் பயன் படுவது. காப்போர் - தலைவியைக் காப்பாற்றும் தாயரும் தோழியரும் ஆவர். கடவுதல் - வினாதல்; அழுங்கல் - வருந்தல்.

இப் பாட்டை, தோழி சேட்படுத்தவழித் தலைவன் பிற கூறியது என்பர் இளம்பூரணர் (தொல் களவு. 11). நச்சினார்க்கினியர், தோழி இவ்விடத்துக் காவலர் கடியர் எனக் கூறிச் சேட்பட நிறுத்தலின் தனக்கு உண்டாகிய வருத்தத்தைப் பார்த்துத் தலைவன் மடன்மா ஏறுதலைக் கூறியது என்பர் (தொல். களவு. 11).

277. பாலை — தோழி கூற்று

ஆசுஇல் தெருவின் நாய்இல் வியன்கடை
செந்நெல் அமலை வெண்மை வெள்இழுது
ஓர்இல் பிச்சை ஆர மாந்தி
அற்சிரை வெய்ய வெப்பத் தண்ணீர்
சேமச் செப்பில் பெறீஇயரோ அன்னை
மின்னிடை நடுங்கும் கடைப்பெயல் வாடை
எக்கால் வருவது என்றி
அக்கால் வருவர்எம் காத லோரே.

— ஓரிற்பிச்சையார்.

தலைமகன் பிரிந்தவழி, அவன் குறித்த பருவ வரவு தோழி அறிவரைக் கண்டு வினாவியது.

அறிவரே! மின்னலைப் போன்ற இடையையுடைய தலைவி நடுங்குதற்கு ஏதுவான இறுதியில் மழையையுடையதான வாடைக் காலம் எப்பொழுது வருவது என்று எனக்குச் சொல்வாயோ அப்பொழுது காதலரும் வருவர். அதனால் அதனை நீ எமக்குச் சொல்வாயாக. குற்றமற்ற தெருவினிடத்தேயுள்ள நாய் இல்லாத அகன்ற கடைவாயிலிலே செந்நெற் சோற்றான் ஆகிய உருண்டையையும் மிக வெண்மையான நெய்யும் கலந்ததாய் ஒரு வீட்டில் இடுகின்ற பிச்சையை வயிறு நிரம்ப உண்டு இந்த முன்

பனிக் காலத்தில் உரித்தான விரும்பத் தகுந்தவெப்பத்தையுடைய நீரைச் சேமித்து வைக்கும் செப்பில் நீ பெறுவாயாக.

முன்பனி என்னும் பொருளில் அற்சிரம் என்பது போலவே அற்சிரை என்னும் சொல்லும் உண்டு. இங்கே அற்சிரை என்னும் சொல்வடிவமே ஏடுகளில் காணப்படுகிறது. எனவே இப் பாடம் கொள்ளப்பெற்றது.

தலைவன் வாடை வீசும் பருவத்தில் மீண்டு வருவேன் என்றமையால் அப் பருவம் எப்பொழுது வரும் என்பது அறியத் தோழி அறிவரை வினாவினாளாயிற்று.

அறிவர் - முக்காலமுய அறிந்து உரைக்கவல்ல துறவோர்; இவர் பிச்சை ஏற்று உண்ணும் இயல்பினராவர். இழுது - நெய்; வெப்பத் தண்ணீர் - விரும்பத்தகுந்த சூட்டையுடைய நீர், வெந்நீர்; சேமச் செப்பு - நீரின் தட்பவெப்பத்தைப் பாதுகாத்து வைக்கும் கலம். அற்சிரை - முன்பனிக் காலம்; ஆசு - குற்றம்.

278. பாலை — தலைவி கூற்று

உறுவளி உளரிய அம்தளிர் மாஅத்து
முறிகண் டன்ன மெல்லென் சீறடி
சிறுபசும் பாவையும் எம்மும் உள்ளார்
கொடியர் வாழி தோழி கடுவன்
ஊழுறு தீம்கனி உதிர்ப்பக் கீழ்இருந்து
ஏற்பன ஏற்பன உண்ணும்
பார்ப்புடை மந்திய மலைஇறந் தோரே.

— பேரிசாத்தன்

பிரிவிடை வற்புறுத்தும் தோழிக்குத் தலைமகள் உரைத்தது.

தோழி! ஆண்குரங்கு மரத்தின் மேலே இருந்து முதிர்ந்த இனிய பழங்களை உதிர்த்துப்போட, அம் மரத்தின் கீழே இருந்து ஏற்பனவற்றை எடுத்து உண்ணுகின்ற குட்டிகளையுடைய பெண் குரங்குகள் இருக்கும் மலையைக் கடந்து சென்ற தலைவர் மிக்க காற்றுக் கோதிய அழகிய தனிமையுடைய மாமரத்தினது தளிரைக் கண்டாற் போன்ற மென்மையான சிறிய பாதங்களைக் கொண்ட சிறிதான பசிய தாது முதலியவற்றால் ஆக்கப் பெற்ற பாவையையும் எம்மையும் நினையார்; ஆதலின் அவர் கொடுமை யுடையவராயினர்.

கடுவன் தன் மந்தியையும் குட்டிகளையும் விட்டுப் போகாது அவற்றிற்கு உண்ணக் கனிகளை உதிர்க்கும் மலையைக் கண்டு

சென்றும் அவர் எம்மையும் பாவையையும் நினைந்தாரில்லையே! அகன்று சென்றனரே என்று தலைவனின் கொடுமையைச் சுட்டி உரைப்பாளாயினாள் தலைவி என்பதாம். கடுவனின் காட்சி அவனுக்குத் தன் கடமையைச் சுட்டியிருக்கவேண்டும் என்பது அவள் கருத்து.

உறுவளி - மிகுந்த காற்று, கடுங்காற்று; முறி - தளிர்; ஊழுறுதல் - முதிர்தல்.

279. முல்லை — தலைவி கூற்று

திரிமருப்பு எருமை இருள்நிற மைஆன்
வருமிடறு யாத்த பகுவாய்த் தெண்மணி
புலம்புகொள் யாமத்து இயங்குதொறு இசைக்கும்
இதுபொழுது ஆகவும் வாரார் கொல்லோ —
மழைகெழு மறந்த மாஇருந் துறுகல்
துகள்சூழ் யானையின் பொலியத் தோன்றும்
இரும்பல் குன்றம் போகித்
திருந்துஇறைப் பணைத்தோள் உள்ளா தோரே.

— மதுரை மருதன் இளநாகனார்

வற்புறுத்தும் தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

தோழி! மழை பொருந்தப் பெறாத கரிய பெரிய பொற்றைக் கல் புழுதி படிந்த யானை போல விளக்கமுறத் தோன்றும் பெரிய மலைகளைக் கடந்து சென்றவராகிய திருத்தமான சந்து களையுடைய மூங்கிலைப் போன்ற என் தோள்களை நினையாத வராகிய தலைவர், முறுக்கிய கொம்புகளைக் கொண்ட கரிய எருமையின் வளர்கின்ற கழுத்தில் உள்ள பிளந்த வாயையுடைய தெளிந்த ஓசையுள்ள மணியானது தனிமையாக இருக்கும் இரவின்கண் அந்த எருமை செல்லுந்தோறும் ஒலிக்கின்ற இந்தக் காலம் வருந்துதற்குரிய காலமாக இருப்பவும் அவர்தாம் வாரா ராயினர்.

அவர் வருதற்கு உரிய காலமாக இது இருந்தும் வந்திலராத லின் ஆற்றேனாயினேன் என்பதாம்.

மழைகெழு என்னும் பாடமே ஏடுகளில் காணப்படுகிறது. மழைகழூஉ என்னும் பாடம் மூவசைச்சீராக நின்று தேவையற்ற ஓசை நீட்சியைத் தருகின்றது. மழைகெழு என்பது ஆசிரிய உரிச்சீராக நின்று ஓசையும் பொருளும் பயத்தலின் இப் பாடமே கொள்ளப் பெற்றது.

புலம்பு - தனிமை; கெழுமுதல் - பொருந்துதல்; துகள் - புழுதி; பணை - மூங்கில், தோள்களை நினைவாராயின்

அவளோடு கூடி அளவளாவும் ஆர்வத்தால் மீள்வர் எனத் தலைவி கருதினாளாயிற்று.

280. குறிஞ்சி — தலைவன் கூற்று

கேளிர் வாழியோ கேளிர் நாளும்என்
நெஞ்சுபிணிக் கொண்ட அம்சில் ஓதிப்
பெருந்தோட் குறுமகள் சிறுமெல் ஆகம்
ஒருநாள் புணரப் புணரின்
அரைநாள் வாழ்க்கையும் வேண்டலென் யானே.

— நக்கீரர்

கழற்றெதிர்மறை.

நண்பரே! நீர் வாழ்வீராக. எப்பொழுதும் என் நெஞ்சைப் பிணித்துக்கொண்ட அழகிய சிலவாகிய கூந்தலையும் பெருத்த தோள்களையும் உடைய இளையோளாகிய தலைவியின் சிறிய மென்மை வாய்ந்த உடம்பினை ஒருநாள் முற்றவும் இயையும்படி தழுவுதலைப் பெற்றால் அதன்பின் அரைநாளாயினும் வாழ்ந் திருக்க விரும்பேன்.

தலைவி என் உயிருக்கு உயிராய் அத்தனை இன்றியமையாத வளாக உள்ளாள் என்பதாம்.

தலைவியைப் பெறாது பலநாள் உயிர் வாழ்தலினும் அவளோடு அளவளாவிச் சிறிது பொழுதில் மாய்ந்து விடினும் நன்று என்பது தலைவன் கருத்து.

பிணிக்கொண்ட - பிணித்துக் கொண்ட; புணரப்புணரின் - புணரக்கூடுமாயின் என்றும் ஆம்.

இப் பாடலைத் தலைவன் கூற்று என்று (தொல். செய்யு. 189) கூறுவர் பேராசிரியர். பாங்கற் கூட்டத்துப் பாட்டு என்று (தொல். செய்யு. 201) பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் நவில்வர். தலைவன் தலைவியின் தன்மை கூறியது (தொல். களவு. 11) என்றும் நச்சினார்க்கினியர் உரைப்பர்.

281. பாலை — தலைவி கூற்று

வெண்மணற் பொதுளிய பைங்காற் கருக்கின்
கொம்மைப் போந்தைக் குடுமிவெண் தோட்டு
அத்த வேம்பின் அமலை வான்பூச்
சுரிஆர் உளைத்தலை பொலியச் சூடி
குன்றுதலை மணந்த கானம்
சென்றனர் கொல்லோ சேயிழை நமரே.

— குடவாயிற் கீரத்தன்

பிரிவிடை வேறுபட்டாளைக் கண்டு தோழி வற்புறுப்பாட்குக் கிழத்தி உரைத்தது.

சிவந்த அணிகளையுடையாளே! நம்மவராகிய தலைவர் — வெண்மையான மணற்பாங்கான இடத்திலே தழைத்த பசிய அடிமரத்தையும் கருக்கையும் திரட்சியையும் உடைய் பனை மரத்தின் உச்சியிலே உள்ள வெண்மையான குருத்தோலையிலே வைத்துப் பாலைநிலத்து வேப்பமரத்தினது நெருக்கத்தையுடைய வெண்மையான மலரைக் கட்டிச் சுழித்தல் மிகுந்த மயிரையுடைய தலை விளங்கும்படி அணிந்துகொண்டு — மலைகளோடு சேர்ந்த காட்டைக் கடந்து போயினர் போலும்.

தலைவர் பாலை வழியை ஊறின்றிக் கடந்தனரோ என்று வருந்தினேன் என்பதாம்.

பொதுளுதல் - தழைத்தல்; கொம்மை - திரட்சி; குடுமி - உச்சி; சுரி - சுருள்.

282. பாலை — தோழி கூற்று

செவ்விகொள் வரகின் செஞ்சுவற் கலித்த
கவ்வை நாற்றின் கார்இருள் ஓர்இலை
நவ்வி நாள்மறி கவ்விக் கடன்கழிக்கும்
கார்எதிர் தண்புனம் காணின் கைவளை
நீர்திகழ் சிலம்பின் ஓராங்கு அவிந்த
வெண்கூ தாளத்து அம்தூம்பு புதுமலர்
ஆர்கழல்பு உகுவ போல
சோர்குவ அல்ல என்பர்கொல் அவரே.

— நாகன் போத்தன்

வினைவயிற் பிரிந்த இடத்துத் தோழி கிழத்திக்கு உரைத்தது.

தோழி! செம்மண் மேட்டில் தழைத்திருக்கும் பருவம் வாய்ந்த வரகினது ஒலித்தலையுடைய் நாற்றின் மிகக் கறுத்த ஓர் இலையை மானின் இளங்கன்று கவ்வியதாய் அவ் வேளைப் பசியைப் போக்கிக் கொள்ளும் கார்காலத்தை ஏற்றுக்கொண்ட குளிர்ந்த கொல்லையை அத் தலைவர் காண்பாராயின், நீர் விளங்குகின்ற மலைப் பக்கத்திலே ஒருபடித்தாய்ச் சிதைந்துள்ள வெள்ளிய கூதாளத்தின் அழகிய உட்துளையுள்ள புதிய மலர்கள் காம்பி லிருந்து கழன்று உதிர்வது போல நின் கையிலுள்ள வளைகள் சோர்ந்து வீழ்வன அல்ல என்று எண்ணுவரோ? நினையார்.

உன் மெலிவை அவர் நன்கு உணர்வர். ஆதலின் கார்ப்பருவம் வந்தது உணர்ந்து விரைந்து வருவர் என்பதாம்.

நீர்மிகுதியினால் கூதாளம் செவ்வி கெட்டு அதில் மலர்ந்த பூக்கள் காம்பினின்று கழன்று விழுகின்ற செய்தியே இங்குச் சுட்டப்படுகிறது. சிதைந்த என்னும் பொருள்தரும் அவிந்த என்ற பாடமே ஏடுகளில் மிகுதியும் காணப்படுகிறது. எனவே இப் பாடம் கொள்ளப் பெற்றது.

பிரிந்த தலைவனைச் சுட்டிக் கூறலின் அவர் என்னும் சுட்டுச் சொல் இங்குப் பொருத்தமாக உள்ளது. சுவடிகளில் இப் பாடமே மிகுதியும் ஆட்சி பெற்றுள்ளது. எனவே இப் பாடம் கொள்ளப் பெற்றது.

செவ்வி - ஏற்றபருவம்; சுவல் - மேட்டுநிலம்; கலித்தல் - தழைத்தல்; கவ்வை - ஆரவார ஒலி; நவ்வி - மான்; நாள்மறி - இளங்கன்று; அவிதல் - சிதைதல்; கூதாளம் - இது கூதளம், கூதளி எனவும் வழங்கும். ஆர் - காம்பு, அவர் - பண்டறிசுட்டு, தலைவர்.

283. பாலை — தலைவி கூற்று

உள்ளது சிதைப்போர் உளர்எனப் படாஅர்
இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவுஎனச்
சொல்லிய வன்மை தெரியக் காட்டிச்
சென்றனர் வாழி தோழி என்றும்
கூற்றத் தன்ன கொலைவேல் மறவர்
ஆற்றுஇருந்து அல்கி வழங்குநர்ச் செகுத்த
படுமுடைப் பருந்துபார்த் திருக்கும்
நெடுமூ திடைய நீர்இல் ஆறே.

— பாலை பாடிய பெருங்கடுங்கோ

தலைமகன் பொருள்வயிற் பிரிந்த வழி, 'ஆற்றாள்' எனக் கவன்ற தோழிக்கு, 'அவர் பிரிய ஆற்றேனாயினேனல்லேன்; அவன் போன கானத்துத் தன்மை நினைந்து வேறுபட்டேன்' என்று கிழத்தி சொல்லியது.

தம் மூதாதையர் ஈட்டிவைத்த தாயச் செல்வத்தைப் பெற்றுச் செலவழித்து வாழ்வார் செல்வர் என உலகத்தாரால் போற்றப்படார். தாமாக முயன்று தேடிப் பொருள் பெறாது முந்தையர் பொருளால் வாழ்வாரின் வாழ்க்கை இரத்தலைக் காட்டிலும் இழிவுடையதாகும் என்று அவர் சொன்ன ஆண்மைத் தன்மையை யாம் நன்கு தெரிந்து தெளியும்படியாகச் சொல்லி, யமனைப் போன்ற கொலைத் தொழில் புரியும் வேலைக் கொண்ட மறவர் இனத்தார் வழியினிடத்தே தங்கி வழிப் போவாரைக் கொன்றதனால் உண்டான புலாலைப் பருந்துகள்

எதிர்பார்த்துத் தங்கியிருக்கும் நெடிய பழமையான இடத்தை யுடைய நீர் இல்லாத பாலை நிலத்து வழியிடத்தே சென்றனர். அவர் வாழ்வாராக.

தலைவர் சென்ற வழியின் கொடுமையை நினைப்பத னாலேயே ஆற்றாமை உண்டாகின்றது என்பதாம்.

ஆடவர் கடமை தன் முயற்சியால் பொருள் தேடி வாழ்தலே யாம் என்பது தெளிவுபடுத்தப் பெற்றது. உள்ளது - மூதாதையரால் ஈட்டப் பெற்றுத் தாயமுறையால் வந்தபொருள். இல்லோர் - முயற்சியால் பொருள் தேடாதார். இரவு - இரத்தல்; வழங்குநர் - வழிச் செல்வார்; மூதிடை - பழைய இடம்.

284. குறிஞ்சி — தோழி கூற்று

பொருத யானைப் புகர்முகம் கடுப்ப
மன்றத் துறுகல் மீமிசைப் பலஉடன்
ஒண்செங் காந்தள் அவிழும் நாடன்
அறவன் ஆயினும் அல்லன் ஆயினும்
நம்ஏ சுவரோ தம்இலர் கொல்லோ
வரையின் தாழ்ந்த வால்வெள் அருவி
கொன்நிலைக் குரம்பையின் இழிதரும்
இன்னாது இருந்தஇச் சிறுகுடி யோரே.

— மிளைவேள் தித்தன்

வரைவிடைத் தோழி கிழத்திக்கு உரைப்பாளாய் உரைத்தது.

போரிட்ட யானையினது புள்ளிகளைக் கொண்ட முகத்தைப் போல மன்றத்தில் உள்ள பொற்றைக் கல்லின் மேலே காணும் ஒள்ளிய செங்காந்தள் மலர்கள் பல ஒருங்கே உதிர்ந்து கிடக்கும் நாட்டையுடைய தலைவன் அறநெறிப்படி நடப்பவனாயினும் நெறிதவறியவனாயினும் மலையிடத்தேயிருந்து தாழ்ந்து விழு கின்ற தூய வெண்ணிற அருவியானது அச்சந்தரும் குடிலின் அருகில் இறங்கி ஓடும் நமக்கு இன்னாதாயிருந்த இச் சிறு குடியி லுள்ளார் நம்மை இகழ்வார்களோ? தமக்கென அறியும் ஓர் அறிவும் இல்லாதவரோ?

தலைவனின் செய்கைக்காக நம்மைப் பழிப்பார் அறிவற்றவர் என்பதாம்.

பொற்றைக் கல்லின்மேல் உதிர்ந்து கிடக்கும் செங்காந்தள் மலர் போரிட்ட யானையின் முகத்திலுள்ள குருதியாடிய புள்ளி களுக்கு ஒப்புக் கூறப்பட்டுள்ளது. அறவன் அறநெறிப்படி நடப்ப

வன்; நல்லவன். கொன் - அச்சம்; ஏசுதல் - இகழ்தல், பழித்தல்; குரம்பை - சிறுகுடில்.

285. பாலை — தலைவி கூற்று

வைகா வைகல் வைகவும் வாரார்
எல்லா எல்லை எல்லவும் தோன்றார்
யாண்டுஉளர் கொல்லோ தோழி ஈண்டுஇவர்
சொல்லிய பருவமோ இதுவே பல்ஊழ்
புன்புறப் பெடையொடு பயிரி இன்புறவு
இமைக்கண் ஏதுஆ கின்றோ ஞெமைத்தலை
ஊன்நசைஇ ஒருபருந்து இருக்கும்
வான்உயர் பிறங்கல் மலைஇறந் தோரே.

— பூதத் தேவன்

பருவங்கண்டு வேறுபட்ட இடத்து வற்புறுத்தும் தோழிக்கு வன்புறை எதிரழிந்து தலைமகள் சொல்லியது.

தோழி! இனிமையுடைய ஆண்புறா புல்லிய புறத்தைக் கொண்ட தன் பெடையைப் பலமுறை அழைத்து இமைப் பொழுதிலே எத்தகைய இன்பத்தை உடையதாகின்றது. ஞெமை மரத்தின் உச்சியிலே இறந்து விழுவாரது ஊனை விரும்பி ஒற்றைப் பருந்து இருக்கும் வானளாவ உயர்ந்த விளக்கத் தையுடைய மலையைக் கடந்து சென்ற தலைவர் நிலைபெற்றி ராத பகற்காலம் வரவும் வந்திலர்; எல்லாப் பகலின் எல்லையாகிய இரவு தோன்றவும் தாம் மீண்டு தோன்றுதலைச் செய்யார். அத் தலைவர் எவ்விடத்தில் இருக்கின்றாரோ? இங்கே அவர் மீண்டு வருவதாகச் சொல்லிய பருவமும் இதுவேயாம்.

சொன்னவாறு உரிய பருவத்தில் வந்திலரே என்று வருந்திக் கூறியவாறு.

ஆண்புறா பெண்புறாவின் அருகிலிருந்து அழைத்து இன்புறு தலைக் கண்ணுற்ற தலைவரும் என் நினைவு தோன்ற விரைந்து வந்து அன்பு செய்ய மறந்தனரே என்பதனைக் குறித்தலின் இஃது இறைச்சிப் பொருளாம்.

ஞெமை மரத்தின் மேல் ஒரு பருந்து ஊனை விரும்பியிருக்கும் என்றது தலைவன் பொருள் வேட்கையனாய்த் தங்கியுள்ளான் என்பதைக் குறிப்பதாம். வைகல் - நாள், பகல்; எல்லை - இரவு; பல்ஊழ் - பலமுறை; புறம் - முதுகு; பயிர்தல் - அழைத்தல்; புறவு - புறா; பிறங்கல் மலை - விளக்கத்தையுடைய மலை.

286. குறிஞ்சி — தலைவன் கூற்று

உள்ளித் காண்பென் போல்வல் முள்எயிற்று
அமிழ்தம் ஊறும் செவ்வாய் கமழ்அகில்
ஆரம் நாறும் அறல்போற் கூந்தல்
பேர்அமர் மழைக்கண் மடந்தை
மூரல் முறுவலொடு மதைஇய நோக்கே.

—எயிற்றியனார்

இரந்து பின்னின்ற கிழவன் குறை மறாமல் கூறியது. பாங்கற்குச் சொல்லியதூஉம் ஆம்.

முள்ளைப் போன்ற கூரிய பற்களையும் அமிழ்தம் சுரக்கின்ற சிவந்த வாயையும் மணமுள்ள அகிலும் சந்தனமும் மணக்கின்றதும் கருமணல்போல் விளங்குவதுமாகிய கூந்தலையும் பெரிதாக அமர்த்த குளிர்ச்சியையுடைய கண்களையும் உடைய் தலைவியின் புன்னகையோடு பொருந்திய செருக்கிய பார்வையை யான் நினைத்துக் காண்பேன் போல்வேன்.

இனி அத் தலைவியைக் காணுதல் அரிதாகும் போலும் என்றவாறாம்.

உள்ளுதல் - நினைதல்; கமழ்தல் - மணத்தல்; நாறுதல் - மணம் வீசுதல்.

மடந்தை என்னும் பாடமே ஏடுகளில் எல்லாம் காணப்படு கிறது. இது குறிஞ்சித்திணைப் பாடல் என்பது கருதி குறிஞ்சித் தலைவியைக் குறிக்கும் கொடிச்சி என்னும் மாற்றுப்பாடம் தோன்றியிருக்கலாம். மழைக்கண் என்னும் முன்சீருடன் ஒத்த மோனை நயம் உடைய பாடம் மடந்தை என்பதே ஆகும். எனவே இப் பாடம் கொள்ளப்பெற்றது.

இரண்டாவது கருத்திற்குத் தலைவியைப் பெறுதல் அரிது எனத் தலைவன் வருந்திப் பாங்கற்குக் கூறியதாக அமையும்.

இப் பாட்டை ஒருதலையுள்ளுதல் என்னும் மெய்ப்பாடு வந்தது என்பர் இளம்பூரணர் (தொல். களவு. 9). தலைமகளைக் காணாவகையில் பொழுது மிகவும் கடந்தபொழுது தலைவன் கூறியது என்றும் அவர் பிறிதோரிடத்துச் சுட்டுகிறார் (தொல். களவு. 17). இருவரும் உள்வழி வந்த தலைவன் தலைவி தன்மை கூறவே, இவள் கண்ணது இவன் வேட்கை என்று தோழி குறிப்பான் உணர அவன் கூறியது என்பர் நச்சினார்க்கினியர் (தொல். களவு. 11).

287. முல்லை — தோழி கூற்று

அம்ம வாழி தோழி காதலர்
இன்னே கண்டும் துறக்குவர் கொல்லோ
முந்நாள் திங்கள் நிறைபொறுத்து அசைஇ
ஒதுங்கல் செல்லாப் பசும்புளி வேட்கைக்
கடுஞ்சூல் மகளிர் போல நீர்கொண்டு
விசும்புஇவர் கல்லாது தாங்குபு புணரிச்
செழும்பல் குன்றம் நோக்கிப்
பெருங்கலி வானம் ஏர்தரும் பொழுதே.

— கச்சிப்பேட்டு நன்னாகையார்

பிரிவிடை வேறுபட்ட கிழத்தி, 'நம்மைத் துறந்து வாரார்' என்று கவன்றாட்குப் பருவங்காட்டித் தோழி, 'வருவர்' எனச் சொல்லியது.

தோழி! கேட்பாயாக. மூன்றாம் நாள் பிறைபோல வெண்ணிறம் மிகுந்து பரந்து உலாவியவாயும் நடக்கமாட்டாது பச்சைப்புளியின் சுவையை விரும்பும் முதற்சூலையுடைய மகளிரைப் போல நீரை முகந்து கொண்டவாயும் வானத்தில் ஏறமாட்டாமல் அந் நீரைத் தாங்கியவாய் ஒன்றோடொன்று சேர்ந்து வளப்பமான பல மலைகளை நோக்கிப் பெரிய முழக்கத்தையுடைய மேகங்கள் எழுகின்ற கார்ப்பருவத்தை இப்பொழுதே பார்த்தபின்பும் நம் தலைவர் நம்மைப் பிரிந்து இருப்பாரோ?

வருவர் என்று தெளிவித்தவாறாம்.

இப் பாட்டு மேகத்தின் எழுச்சி பற்றிய சித்திரமாகும். அசைஇ, கொண்டு, புணரி, நோக்கி ஏர்தரும்பொழுது என்பது வினைமுடிபு. இங்ஙனமிருக்கவும் முந்நால் திங்கள் எனப் பாடங் கொண்டு அசைஇ என்பதைச் சூல் மகளிர்க்கு ஏற்றி உரைப்பது சற்றும் பொருந்தாது. ஏடுகளில் காணும் பாடமும் முந்நாள் திங்கள் என்பதே. எனவே இப் பாடமே இங்குப் பொருத்தமாகக் கொள்ளப்பெற்றது.

கார்ப்பருவம் தோன்றியதால் தலைவர் வரும் காலம்; நெருங்கியுள்ளது என்பதாம். நிறைதல் - மிகுதல், பரவுதல்; ஒதுங்கல் - நடத்தல்; செழுமை - வளப்பம்; கடுஞ்சூல் - முதற்சூல்; பசும்புளி - பச்சைநிறப் புளியங்காய்; ஏர்தருதல் - எழுதல்.

288. குறிஞ்சி — தலைவி கூற்று

கறிவளர் அடுக்கத்து ஆங்கண் முறிஅருந்து
குரங்குஒருங்கு இருக்கும் பெருங்கல் நாடன்
இனியன் ஆகலின் இனத்தின் இயன்ற
இன்னா மையினும் இனிதோ
இனிதுஎனப் படூஉம் புத்தேள் நாடே.

— கபிலர்

தலைமகனது வரவு உணர்ந்து, 'நம்பெருமான் நமக்கு அன்பிலன்' என்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

தோழி! மிளகுகொடி படர்கின்ற மலைப்பக்கமாகிய அவ்விடத்திலே தளிரைத் தின்கின்ற குரங்குகள் ஒன்றாகத் திரண்டு இருக்கின்ற பெரிய மலை நாட்டினனாகிய தலைவன் எப்பொழுதும் நமக்கு இனியனாயுள்ளான். ஆதலின் உறவுடையாரால் நேரும் துன்பத்தைக் காட்டிலும் இனிது என்று போற்றியுரைக்கப்படும் தேவருலகம் இனிமையுடையதோ?

தலைவன் அன்புடையனாதலின் அவன் பிரிந்து துன்பம் தரினும் இனிமை பயப்பதாகவே அமையும் என்று குறிப்பித்தாளாயிற்று.

'இனத்தின்' எனப் பொதுப்படச் சுற்றத்தைக் குறித்தாலும் இங்குத் தலைவனைச் சுட்டி உரைத்ததாம். புத்தேள் நாடு என்றும் ஒருபடித்தான இன்பம் நல்குவது. தலைவன் பிரிந்ததனால் வரும் துன்பத்தின்பின் அவனுடன் கூடுகின்ற காலத்து இன்பம் மிகுதியாம்; ஆதலின் புத்தேள்நாட்டு இன்பத்தினும் இனிது எனப்பட்டது. கறி - மிளகு; வளர்தல் - படர்தல்; புத்தேள்நாடு - தேவர் உலகம்.

289. முல்லை — தலைவி கூற்று

வளர்பிறை போல வழிவழிப் பெருகி
இறைவளை நெகிழ்த்த எவ்வ நோயொடு
குழைபிசைந் தனையேம் ஆகிச் சாஅய்
உழையர் அன்மையின் உழப்பது அன்றியும்
மழையும் தோழி மான்றுபட் டன்றே
பட்ட மாரி படாஅக் கண்ணும்
அவர்திறத்து இரங்கும் நம்மினும்
நம்திறத்து இரங்கும்இவ் அழுங்கல் ஊரே.

- பெருங்கண்ணன்

'காலம் கண்டு வேறுபட்டாள்' எனக் கவன்ற தோழிக்கு, காலத்து வந்திலர் என்று வேறுபட்டேன் அல்லேன்; அவரைப் புறத்தார், கொடியர் என்று கூறக் கேட்டு வேறுபட்டேன்' என்று தலைமகள் சொல்லியது.

தோழி! துன்பம் தரும் காமநோய் வளர்கின்ற பிறைபோல மேன்மேலும் பெருக்கமுற்று உடல்மெலிய முன்கை வளைகளைக் கழலப் பண்ணினமையால் தளிரைக் கசக்கினாற் போன்ற நிலையை அடைந்தேமாய் மிக மெலிந்து துன்பம் தீர்ப்பதற்குரிய தலைவர் பக்கத்தில் இல்லாமையினாலே நாம் துன்பப்படுவது அல்லாமல் இம் மழையும் மயங்கிப் பெய்தது. இங்ஙனம் மழை பெய்வதற்கு முன்னமேயே இந்தக் கலக்கத்தையுடைய ஊரினர் அவர் பொருட்டு வருந்தும் நம்மைவிடவும் நம்மாட்டு இரங்குவர்.

தலைவரைக் கொடியர் என உரைக்கின்றமை நோக்கி மேனி வேறுபட்டேன் என்பதாம்.

இறை - முன்கை; சாஅய்தல் - கெடுதல்; மான்றுபடல் - மயங்கிவிழுதல்; அழுங்கல் - ஆரவாரம், கலக்கம். இங்கே ஊர் என்றது தன் பொருட்டுக் கவலும் தோழியைச் சுட்டியதாம்.

290. நெய்தல் — தலைவி கூற்று

காமம் தாங்குமதி என்போர் தாம்அஃது
அறியலர் கொல்லோ அனைமது கையர்கொல்
யாம்எம் காதலர்க் காணேம் ஆயின்
செறிதுளி பெருகிய நெஞ்சமொடு பெருநீர்க்
கல்பொரு சிறுநுரை போல
மெல்ல மெல்ல இல்லா குதுமே.

— கல்பொரு சிறுநுரையார்

வற்புறுத்துந் தோழிக்குத் தலைமகள் அழிவுற்றுச் சொல்லியது.

காமநோயைத் தாங்கிக் கொள்வாயாக என்று சொல்லுபவர் தாம் அக் காமத்தின் தன்மையை அறிந்திலரோ? அதனைத் தாங்கிக்கொள்ளும் அத்தனை வன்மையுடையவரோ? யாம் எம் தலைவரைக் காணேமாயினால் நிறைந்த துயரம் மிக்க நெஞ்சத்தோடு மிக்க வெள்ளத்திலே பாறையின்மேல் மோதும் சிறிய நுரையைப் போல மெல்ல மெல்ல இல்லையாவோம்.

தலைவருடைய பிரிவு நீட்டிக்குமானால் என் உயிர் நீங்கும் என்று சுட்டியவாறாம்.

மதுகை - வலிமை; துனி - துயரம்; பெருநீர் - பெருவெள்ளம்; கல் - பாறை. கற்பொரு சிறுநுரை என வரற்பாலது எதுகை நோக்கால் கல்பொரு சிறுநுரை என்று ஆகியது.

இப் பாட்டை, அறமும் பொருளும் செய்வதனாற் புறத்து உறைதலில் தலைவனைத் தலைவி நீங்கும் காலம் பெரிதாகலின் அதற்குச் சுழற்சி மிக்க வேட்கை மிகுதி நிகழ்ந்தவிடத்துத் தெருட்டும் தோழிக்குத் தலைவி கூறியது என்பர் நச்சினார்க்கினியர் (தொல். கற்பு. 6).

291. குறிஞ்சி — தலைவன் கூற்று

சுடுபுன மருங்கில் கலித்த ஏனற்
படுகிளி கடியும் கொடிச்சிகைக் குளிரே
இசையின் இசையா இன்பா ணித்தே
கிளிஅவள் விளிஎன விழல்ஒல் லாவே
அதுபுலந்து அழுத கண்ணே சாரல்
குண்டுநீர்ப் பைஞ்சுனைப் பூத்த குவளை
வண்டுபயில் பல்இதழ் கலைஇத்
தண்துளிக்கு ஏற்ற மலர்போன் றவ்வே.

— கபிலர்

பாங்கற்கு உரைத்தது.

தோழி! மரங்களை வெட்டிச் சுட்டுப் பண்படுத்திய கொல்லையிலே தழைத்து வளர்ந்த தினைப்பயிரினிடத்தே வந்து விழுகின்ற கிளிகளை ஓட்டுகின்ற தலைவியின் கையிலுள்ள கிளியோட்டும் கருவியாகிய குளிரின் இசையோடு பொருந்தி இனிய தாளத்தையுடையதாய் அமைந்த அக் குளிரின் ஓசையை அவளுடைய பாட்டின் தாளம் எனக் கருதிக் கிளிகள் மேலும் விழுதலை ஒழியாதனவாயின. அதனால், வருந்தி அவளுடைய கண்கள் அழுதன. அவை மலைப்பக்கத்தேயுள்ள ஆழமான நீரையுடைய பசுஞ்சுனையிடத்துப் பூத்திருக்கும் குவளையினது வண்டுகள் பழகுகின்ற பல இதழ்களும் கலைந்து தண்ணிய மழைத்துளியை ஏற்றுக்கொண்ட மலர்களைப் போன்றன.

தலைவி தினைப்புனக் காவலில் உள்ளாள் என்பதனைத் தோழனுக்குக் குறிப்பித்தவாறாம்.

தலைவி ஓட்டவும் கிளிகள் மேன்மேலும் வந்து விழுந்த வண்ணமே இருந்தன என்பதே இங்குச் சொல்லப்படும் செய்தி. இதனைக் குறிக்கும் பொருத்தமான பாடம் விழல் ஒல்லாவே

என்பதே ஆகும். ஏடுகளில் இப் பாடமே காணப்படுகிறது. எனவே இப் பாடம் கொள்ளப் பெற்றது.

குளிர் - கிளி கடி கருவி: இது மூங்கிலால் செய்யப்படுவது என்பர். விளி - கூப்பீடு; குண்டு - ஆழம்.

292. குறிஞ்சி — தோழி கூற்று

மண்ணிய சென்ற ஒள்நுதல் அரிவை
புனல்தரு பசுங்காய் தின்றதன் தப்பற்கு
ஒன்பதிற்று ஒன்பது களிற்றொடு அவள்நிறை
பொன்செய் பாவை கொடுப்பவும் கொள்ளான்
பெண்கொலை புரிந்த நன்னன் போல
வரையா நிரையத்துச் செலீஇயரோ அன்னை
ஒருநாள்,
நகைமுக விருந்தினன் வந்தெனப்
பகைமுக ஊரில் துஞ்சலோ இலளே.

— பரணர்

தோழி இரவுக்குறிக்கண் சிறைப்புறமாகக் காப்பு மிகுதி சொல்லியது.

ஒருநாளில் நகை முகங்கொண்ட விருந்தினனாய்த் தலைவன் வந்தானாகத் தாயும் பகைவர் மாறுபட்டு நிற்கும் போர்க்களத்தை அடுத்துள்ள ஊரினரைப் போலத் தூங்காதவளாயினாள். நீராடும் பொருட்டுச் சென்ற ஒளிபடைத்த நெற்றியையுடைய பெண்ணொருத்தி நீரால் இழுத்து வரப்பட்ட பசுங்காயைத் தின்றதாகிய குற்றத்திற்காக எண்பத்தொரு ஆண் யானைகளோடு அவளுடைய நிறையளவான பொன்னால் செய்த பாவையை ஈடாகக் கொடுப்பவும் கொள்ளானாகி அப் பெண்ணைக் கொலை செய்த நன்னன் என்பவனைப் போல நீங்குதல் இல்லாத நரகத்தில் நம் அன்னையும் துன்புறுவாளாக.

அன்னையின் காப்பு மிகுதிபற்றி இவ்வாறு அவள் தண்டனை பெறுக எனக் கூறினாளாயிற்று.

நன்னன் - ஒரு குறுநில மன்னன்; இவனுடைய ஆற்றங்கரைத் தோட்டத்திலுள்ள அரியதொரு மாமரத்தின் காய் ஆற்றில் விழ அந் நீரில் மிதந்து வந்த காயை ஒருபெண் கைப்பற்றித் தின்றுவிட்டாள். அந்தக் குற்றத்திற்காக அவள் தந்தை எண்பத்தொரு யானைகளும் அவளுடைய நிறை அளவான பொற்பதுமையும் தர முன்வந்தும் ஏற்காது அப் பெண்ணுக்குக் கொலைத்

தண்டனை விதித்தான். இதனால் அவன் 'பெண்கொலை புரிந்த நன்னன்' என்று பேசப்படலானான்.

மண்ணுதல் - நீராடுதல்; தப்பல் - பிழை, தவறு; வரையா நிரயம் - நீங்காத நரகம்; உய்வில்லாமல் கிடந்து உழல வேண்டிய நரகம்.

புகாக் காலத்துத் தலைமை மிக்க தலைவன் புக்கதற்கு விருந்தேலாது செவிலி இரவும் துயிலாதாளைத் தலைவி முனிந்து கூறியது என்பதற்கு இப் பாட்டைக் காட்டுவர் நச்சினார்க்கினியர் (தொல். களவு. 16).

293. மருதம் — தலைவி கூற்று

கள்ளின் கேளிர் ஆர்த்திய உள்ளூர்ப்
பாளை தந்த பஞ்சிஅம் குறுங்காய்
ஓங்குஇரும் பெண்ணை நுங்கொடு பெயரும்
ஆதி அருமன் மூதூர் அன்ன
வயல்வெள் ஆம்பல் அம்பகை நெறித்தழை
தித்திக் குறங்கின் ஊழ்மாறு அலைப்ப
வருமே சேயிழை அந்தில்
கொழுநற் காணிய அளியேன் யானே.

— கள்ளில் ஆத்திரையன்

பரத்தையிற் பிரிந்துவந்த கிழவற்கு வாயிலாகப் புக்க தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கள்ளினால் சுற்றத்தாரை உண்பிக்கும் பொருட்டாக உள்ளூரினிடத்தே பாளையினால் தரப்பட்ட நாரையுடைய குறுங் காய்களைக் கொண்ட பனை மரத்தினது நுங்கைக் கொண்டு மீண்டுவரும் ஆதியருமனின் பழைய ஊரினைப் போல, வயலில் வளர்ந்த வெள்ளாம்பலினது அழகிய மாறுபட்ட முழுநெறியைக் கொண்ட தழையுடையானது தேமலையுடைய துடையினிடத்தே மாறிமாறி அசைய, செம்பொன்னாலான அணிகளைப் பூண்ட பரத்தை அவ்விடத்திலே தலைவனைக் காணும் பொருட்டு வருவாள். ஆதலால் நான் இரங்கத் தக்கவளாயுள்ளேன்.

தலைவனை மீட்டும் பரத்தை கைக்கொள்வாள் எனத் தன் தனிநிலை குறித்து இரங்கி உரைத்தவாறாம்.

வயல்வெள் ளாம்பல் என்னும் பாடமே ஏடுகளில் காணப்படு கிறது. ஆதலின் இப் பாடம் கொள்ளப்பெற்றது.

ஆர்த்திய - உண்பிக்கும் பொருட்டாக; பஞ்சி - பனங்காயின் புறத்தேயுள்ள நார்; நெறித்தழை - முழுமையான தழையுடை; நித்தி - தேமற்புள்ளிகள்.

நன்மை செய்யும் நுங்கை உண்பதுபோலே தீமை செய்யும் கள்ளினையும் கேளிரோடு உண்ணும் ஆதியருமன் ஊரினர் போலச் சிறந்த எம் தலைவனைப் புல்லிவிட்டுப் பின் பிறரையும் புல்லுகின்ற இயல்புடைய அப் பரத்தை மீண்டும் இங்கு வருவளாயின் நான் இரங்கத்தக்கவளே யாவேன் என்பது உள்ளுறை.

294. நெய்தல் — தோழி கூற்று

கடல்உடன் ஆடியும் கானல் அல்கியும்
தொடலை ஆயமொடு தழூஉஅணி அயர்ந்தும்
நொதுமலர் போலக் கதுமென வந்து
முயங்கினன் செலினே அலர்ந்தன்று மன்னே
நித்தி பரந்த பைத்துஅகல் அல்குல்
திருந்துஇழைத் துயல்வுக்கோட்டு அசைத்த பசுங்குழைத்
தழையினும் உழையின் போகான்
தான்தந் தனன்யாய் காத்தோம் பல்லே.

— அஞ்சில் ஆந்தை

பகற்குறிக்கண் தலைமகன் வந்தவிடத்துத் தோழி செறிப்பு அறிவுறீஇயது.

கடலில் ஆய மகளிர் பலருடன் நீராடியும் கடற்கரைச் சோலையிடத்தே தங்கியிருந்தும் மாலையையுடைய மகளிர் கூட்டத்தோடு கூடிக் குரவைக் கூத்தாடியும் இருக்க, அக் காலத்தில் அயலாரைப் போல விரைவாக வந்து என்னைத் தழுவியவனாய்ச் சென்றிருந்தால் அலர் உண்டாகியிருக்கும். தேமல் படர்ந்த பாம்பின் படம்போல விரிந்த அல்குலினது திருத்தமான அணிகலன்கள் அசைதலையுடைய பக்கமாகிய அரையில் கட்டிய பசிய தளிரினாலான தழையுடையைக் காட்டினும் அணியனாய்ப் பக்கத்திலிருந்து போகானாய்ச் சேர்ந்த காரணத்தினால் தாய் இற்செறித்துக் காக்கும் நிலைமையை நமக்குத் தந்தனன்.

தலைவனின் களவொழுக்கம் அறிந்தமையால் இற்செறிக்க முற்பட்டுள்ளாள் என்பதனைத் தலைவனுக்கு உணர்த்தினாளாயிற்று.

கானல் - கடற்கரைச் சோலை; தொடலை - மாலை; ஆயம் - விளையாட்டு மகளிர் கூட்டம்; தழூஉ அணி - குரவையாட்டு; நொதுமலர் - அயலார்; பைத்து - பாம்பின் படத்தன்மை பெற்ற

தாய்: துயல்வு - அசைவு: பசுங்குழைத்தழை - பசிய இலைகளால் ஆக்கப் பெற்ற தழையுடை

பகற்குறிக்கண் சிறைப்புறமாகச் செறிப்பு அறிவுறீஇய்து என்பதற்கு இப் பாடலைக் காட்டுவர் நச்சினார்க்கினியர் (தொல். களவு. 23).

295. மருதம் — தோழி கூற்று

உடுத்தும் தொடுத்தும் பூண்டும் செரீஇயும்
தழைஅணிப் பொலிந்த ஆயமொடு துவன்றி
விழவொடு நின்றாய் நீயே இஃதோ
ஓர்ஆன் வல்சிச் சீர்இல் வாழ்க்கை
பெருநலக் குறுமகள் வந்தென
இனிவிழவு ஆயிற்று என்னும்இவ் ஊரே.

— தூங்கலோரி

வாயில் வேண்டிச் சென்ற கிழவற்குத் தோழி உரைத்தது.

தலைவனே! தழையை உடையாக உடுத்தும் மாலையாகத் தொடுத்து அணிந்தும் குழை முதலிய அணியாகக் கொண்டும் கூந்தலினிடத்தே செருகியும் தழையலங்காரத்தால் பொலிவு பெற்ற பரத்தையர் கூட்டத்தோடு நெருங்கிக் கூடி, நீ நீர்விழாவிற்குரிய புனைவுகளோடு வந்து நிற்பாயாயினை. இந்த ஊரிலுள்ளார், ஒருபசுவினால் வரும் வருவாயைக் கொண்டு உணவுபெற்று வாழ்ந்துவந்த சிறப்பில்லாததாகிய உன் வாழ்க்கை மிக்க அழகையுடைய தலைவி உனக்கு மனைவியாக வந்தாளாக இப்போது இப்படி விழாக் கொண்டிருத்தற்கான உயர்நிலையாயிற்று என்று சொல்லுவர்.

உன்னுடைய செல்வத்திற்குக் காரணமாயிருந்த தலைவியை நீ விட்டு நீங்கிச் சென்றமையால் ஊரினர் பழி கூறினர் என்பதாம்.

நின்றாய் நீயே என்பது மோனை நயமுடைய பாடமாயும் ஏடுகளில் மிகுந்து காணப்படுவதாயும் உள்ளது. எனவே இப் பாடம் கொள்ளப்பெற்றது.

தழை உடையாகவும் மாலையாகவும் அணியாகவும் பயன் பட்டது என்பதாம். ஆயம் - திரள்; இங்கே பரத்தையர் கூட்டத்தைக் குறிக்கும். வல்சி - உணவு; வருவாய். விழாவாயிற்று - விழாக்காணும்படியான நல்ல வளமுடையதாயிற்று.

'சீரில் வாழ்க்கைப் பெருநலக் குறுமகன்' என்றும் பாடம் உண்டு. குறுமகன் என்பதற்குக் குழந்தை என்று பொருள்

கொண்டு, மகன் பிறந்ததனால் இனி வாழ்வு சிறப்புறும் என்று ஊரார் சொல்வர் என்று பொருள் கொள்வர். இப்பாடத்துள் குறுமகன் என்பதற்குத் தலைவன் எனப் பொருள் கொண்டால் தலைவன் இல்லத்துக்கு வர மகிழ்ந்து விழாக் கொண்டாடினர் எனத் தலைவியின் பண்புடைமையை ஊர் சிறப்பித்துக் கூறி நிற்கும் என்று கொள்ளலாம் என்பர்.

கழறிய தலைவனை எல்லையின்கண்ணே நிறுத்துதல் அறிவர்க்குரியது; அங்ஙனம் கழறியது இது என்பர் இளம்பூரணர் (தொல். கற்பு. 14).

மேலும் அவர், நல்குரவு சிறப்பித்தல் காரணமாக வந்தது. இதனுள் ஓர் ஆன் வல்சிச் சீர் இல் வாழ்க்கை எனத் தலைமகன் செல்வக் குறைபாடு கூறி, 'பெருநலக்குறுமகள் வந்தென விழவா யிற்று என்னும் இவ்வூர்' என்றமையான் நல்குரவு பற்றித் தலைமகளைச் சிறப்பிக்க வந்தது என்றும் பொருளியலில் விளக்கம் தருவர் (தொல். பொருளியல், 49). நச்சினார்க்கினியர் கருத்தும் இளம்பூரணரை ஒட்டியதாகவே அமைந்துள்ளது. அவர் தம் கருத்துரை வருமாறு:

உணர்ப்புவயின் வாராது ஊடிய தலைவிமாட்டு ஊடின தலைவனை அறிவர் கழறியது (தொல். கற்பு. 14). தோழியும் அறிவரும் பரத்தையிற் பிரிவால் தலைவர்க்கும் தலைவியர்க்கும் தோன்றிய வருத்த மிகுதியைத் தீர்க்கக் கருதி அவரது இல்வாழ்க்கை நிகழ்ச்சிக்கண்ணே தமக்கு வருத்தம் தோன்றிற் றாகக் கூறியது. இதனுள் முன்னர் நிகழ்த்திய வாழ்க்கை இவள் வந்தாளாகப் புறத்து விளையாடும் விழவுளதாயிற்றென்று இவ்வூர் கூறாநிற்கும் செல்வம் இவளை நெகிழ்ந்தாற் பழைய தன்மையாம் என்று அறிஞர் இரங்கிக் கூறியவாறு காண்க (தொல். பொருளியல், 32).

296. நெய்தல் — தலைவி கூற்று

அம்ம வாழி தோழி புன்னை
அலங்குசினை இருந்த அம்சிறை நாரை
அறுகழிச் சிறுமீன் முனையின் செறுவில்
கள்நாறு நெய்தல் கதிரொடு நயக்கும்
தண்ணம் துறைவற் காணின் முன்நின்று
கடிய கழறல் ஓம்புமதி தொடியோள்
இன்னள் ஆகத் துறத்தல்
நும்மின் தகுமோ என்றனை துணிந்தே.

— பெரும்பாக்கன்

காணும் பொழுதிற் காணாப்பொழுது பெரிதாகலான், ஆற்றாளாய தலைமகள், தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.

தோழி! ஒன்று சொல்லுவன் கேட்பாயாக. புன்னை மரத்தின் அசைகின்ற கிளைகளிலேயிருந்த அழகிய சிறகினை யுடைய நாரை நீர்வற்றிய உப்பங்கழியிலுள்ள சிறு மீன்களை உண்ணுதலை வெறுத்ததாயின் வயலில் உள்ள தேன் மணக்கும் நெய்தற் பூக்களை நெற்கதிரோடு சேர்த்து விரும்பும் குளிர்ந்த அழகிய துறைக்கு உரியவனான நம் தலைவனைக் கண்டால் அவன் முன்னே நின்று வளையணிந்தாளாகிய தலைவி இத் தன்மையளாகும்படி பிரிந்து செல்லுதல் உமக்குத் தகுமோ என்று துணிவுடையளாய்க் கடிய சொற்களைக் கூறி இடித்துரைத் தலைச் செய்யாதிருப்பாயாக.

இங்ஙனம் பிரிந்து சென்றமை குறித்துத் தலைவன் வருத்த முறுமாறு இடித்துரையற்க என்று தலைவி வேண்டியுரைத்தா ளாயிற்று.

செறு - வயல்; கடியகழறல் - கடுமையான சொற்களால் இடித்துரையற்க; அல் எதிர்மறை வியங்கோள். ஓம்புமதி - தவிர்வாய்.

கழியில் மீன் குறைந்த காரணத்தால் நாரை வயலை நோக்கிச் செல்கின்றது என்பது இங்குக் காணும் செய்தியாகும். இதற்கு ஏற்ற பாடம் அறுகழி என்பதே. ஏடுகளில் காணும் பாடமும் இதுவே. எனவே இப் பாடம் கொள்ளப்பெற்றது.

புன்னைமரத்திலிருந்த நாரை, பக்கத்திருந்த கழிச் சிறு மீன்களை வெறுத்து, நிலத்திலே குவளை மலருடன் நெற்கதிர் விளைந்திருக்கின்ற இடத்திலுள்ள மீன்களை நாடிச் செல்லும் என்பது, பலவேறு தடைகளுடன் கூடிய களவினை ஒழித்து வரைந்து இன்புற வேண்டும் என்பதனைக் குறிப்பித்தலால் இஃது இறைச்சிப் பொருளாம்.

297. குறிஞ்சி — தோழி கூற்று

அவ்விளிம்பு உரீஇய கொடுஞ்சிலை மறவர்
வைவார் வாளி விறற்பகை பேணார்
மாறுநின்று இறந்த ஆறுசெல் வம்பலர்
உவல்இடு பதுக்கை ஊரின் தோன்றும்
கல்உயர் நனந்தலை நல்ல கூறிப்
புணர்ந்துஉடன் போதல் பொருள்என
உணர்ந்தேன் மன்றஅவர் உணரா ஊங்கே.

— காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணன்

தோழி வரைவு மலிந்தது.

மேல் விளிம்பை உருவி எடுத்த கொடிய வில்லைப் பூண்ட மறச்சாதியாருடைய கூர்மையான நீண்ட அம்பினைக் கொண்ட வெற்றியுடைய பகைவரிடமிருந்து தம்மைப் பாதுகாவாராய் எதிரே நின்று பொருது இறந்துபட்ட வழிப்போவார் மேலே மறவர் தழையிட்டு மூடிவைத்த குவியல்கள் ஊரைப் போலத் தோன்றுகின்ற மலைகள் உயர்ந்து காணும் அகன்ற இடத்திலே நல்ல சொற்களைச் சொல்லித் தலைவனொடு சேர்ந்து போதலே செய்யத்தக்க செயல் என்று அத் தலைவர் உணர்வதற்கு முன்னரேயே யான் உணர்ந்தேன்.

நீ தலைவனுடன் சென்று மணந்துகொள்ளுதலே நன்று என்று தோழி அறிவுறுத்தினாளாயிற்று.

அவ்விளிம்பு - மேல் விளிம்பு; கொடுஞ்சிலை - கொடிய வில்; வளைந்த வில் என்றும் ஆம். விறல் - வெற்றி; வம்பலர் - வழிச் செல்வாராகிய புதியவர்; உவல் - தழை; பதுக்கை - குவியல்; நல்ல கூறல் - மணந்து நலம் பெறுக என நற்சொற்களை உரைத்தல்.

298. குறிஞ்சி — தோழி கூற்று

சேரி சேர மெல்ல வந்துவந்து
அரிது வாய்விட்டு இனிய கூறி
வைகல் தோறும் நிறம்பெயர்ந்து உறையும்அவன்
பைதல் நோக்கம் நினையாய் தோழி
இன்கடுங் கள்ளின் அகுதை பின்றை
வெண்கடைச் சிறுகோல் அகவன் மகளிர்
மடப்பிடிப் பரிசில் மானப்
பிறிதுஒன்று குறித்ததுஅவன் நெடும்புற நிலையே.

— பரணர்

கிழத்திக்குத் தோழி குறை மறாமல் கூறியது.

தோழி! நம்முடைய தெருவிலே ஒருவன் மெல்ல வந்துவந்து, அருமையாகத் தன் வாயைத் திறந்து நாம் மகிழும்வண்ணம் இனிய சொற்களைச் சொல்லி, நாள்தோறும் தாம் எண்ணியது கூடாமையின் ஒளிமாறித் தங்குகின்ற அவனுடைய துன்பத்தை வெளிப்படுத்தும் பார்வையை நீ நினைத்துப் பார்ப்பாயாக. அவன் நீண்ட நேரம் இங்ஙனம் இரப்பவன் போல நிற்றல், அகுதையின் பின்நின்ற வெள்ளிப்பூண் கட்டிய சிறிய கோலைத் தாங்கிய அகவன்மகளிர் மடப்பம் பொருந்திய பெண்யானை

யாகிய பரிசிலைப் பெறுமாறு போல, நம்மைக் கண்டு கூறிய உரைகளும் வேறொன்றை எண்ணியதாகும்.

நின்னைப் பெறவேண்டும் என்னும் குறிப்பினன் என்பது வெளிப்படுகின்றது என்பதாம்.

வெண்கடைச் சிறு கோல் - வெள்ளிப் பூண்களை இருமுனைகளிலும் கொண்ட சிறு கொம்பு. இன் கடும் கள் - இனிமையும் கடுமையும் உடைய கள்; மயக்கம் தருவதால் கடுங்கள் ஆயிற்று. நிறம் பெயர்தல் - நிறம் மாறுபடுதல்; வெளிறிய தன்மையதாதல்.

299. நெய்தல் — தலைவி கூற்று

இதுமற்று எவனோ தோழி முதுநீர்ப்
புணரி திளைக்கும் புள்இமிழ் கானல்
இணர்அவிழ் புன்னை எக்கர் நீழல்
புணர்குறி வாய்த்த ஞான்றைக் கொண்கற்
கண்டன மன்எம் கண்ணே அவன்சொற்
கேட்டன மன்எம் செவியே மற்றுஅவன்
மணப்பின் மாண்நலம் எய்தித்
தணப்பின் ஞெகிழ்பஎம் தடமென் தோளே.

— வெண்மணிப்பூதி

சிறைப்புறமாகத் தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

தோழி! பழமையான நீராகிய கடலினது அலைகள் வந்து தழுவுகின்ற பறவைகள் ஒலிசெய்து கொண்டிருக்கும் கடற்கரைச் சோலையில் உள்ள பூங்கொத்துகள் மலர்ந்த புன்னைமரம் வளர்ந்த மேட்டிலுள்ள நிழலில் தலைவனோடு சேர்வதற்குரிய குறியிடம் வாய்க்கப்பெற்ற அந்தக் காலத்திலே எம் கண் தலைவனைப் பார்த்தன; எம் செவி அவன் சொன்ன சொற்களைக் கேட்டன. எமது பரந்த மெல்லிய தோள்கள் அவன் என்னைக் கூடினால் மாட்சிமைப்பட்ட அழகினை அடைந்து அவன் பிரிந்தால் சோர்வுற்று மெலிகின்றன. இந் நிலைமை எதனாலோ?

தலைவன் பிரியாது என்னுடனே இருப்பானாயின் எனது அழகு கெடாது எனக் குறிப்பித்தவாறாம்.

தலைவன் களவில் குறியிடத்து வந்து பிரிகின்ற நிலையின்றி என்றும் கூடியிருக்கத்தக்கபடி வரைந்து கொள்ளும் கற்பொழுக்கத்தைக் கொள்ளுதல் கடன் எனத் தலைவனுக்குச் சுட்டி உரைத்தபடியாம்.

கொண்கன் - நெய்தல் நிலத்தலைவன்; புணரி - அலை; திளைத்தல் - தரையை வந்து மோதித் தழுவுதல்; ஞான்று - பொழுது; மணத்தல் - கூடுதல்; தணத்தல் - பிரிதல்.

300. குறிஞ்சி — தலைவன் கூற்று

குவளை நாறும் குவைஇருங் கூந்தல்
ஆம்பல் நாறும் தேம்பொதி துவர்வாய்
குண்டுநீர்த் தாமரைக் கொங்கின் அன்ன
நுண்பல் தித்தி மாஅ யோயே
நீயே,
அஞ்சல் என்றஎன் சொல்அஞ் சலையே
யானே,
குறுங்கால் அன்னம் குவவுமணற் சேக்கும்
கடல்சூழ் மண்டிலம் பெறினும்
விடல்சூ ழலென்யான் நின்னுடை நட்பே.

— சிறைக்குடி ஆந்தையார்

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன் பிரிவச்சமும் வன் புறையும் கூறியது.

குவளை மலரின் மணம் வீசுகின்ற கற்றையான கரிய கூந்தலினையும் ஆம்பல் மலரின் மணம் வீசும் தேன் பொதிந்த சிவந்த வாயையும் ஆழமான நீரில் மலர்ந்த தாமரையினது பூந்தாதைப் போன்ற நுண்ணிய பல தேமல் புள்ளிகளையும் கொண்ட மாமை நிறமுடையோய்! யான் பிரிவேன் என்று கருதி அஞ்சாதே என்ற என் சொல்லைக் கேட்டு நீ அஞ்சாதே கொள் வாய். நான் நின்னுடைய நட்பினைக் குறுகிய கால்களையுடைய அன்னங்கள் திரண்டு, குவியலாகவுள்ள மணல் மேடுகளிலே தங்கி யிருக்கும் கடல் சூழ்ந்த இந்த நிலவட்டத்தைப் பெற்றாலும் நின்னை விட்டுப் பிரிதலை நினையேன்.

என்றும் உன்னைப் பிரியேன் எனத் தேறுதல் மொழி புகன்றான் தலைவன். கூந்தலையும் வாயையும் முற்படக் கூறினான் அவற்றின் நலம் துய்த்த பாங்கினால் என்க.

குவளை, ஆம்பல், தாமரை என்னும் மூன்று நீர்ப்பூக்களை உவமை காட்டிய பொருத்தமும் காணத் தக்கது. தித்தி - தேமல்; மாஅயோய் - மாமை நிறத்தை உடையோய். 'விடல்சூ ழலென்யான்' என்னும் பாடத்திற்கு 43 ஆம் பாடலில் தந்த விளக்கமே இங்கும் பொருந்தும்.

இப் பாட்டை, தலைவன் நயப்பும் பிரிவச்சமும் வன்புறையும் கூறியது என்பர் நச்சினார்க்கினியர் (தொல். களவு. 10).

301. குறிஞ்சி — தலைவி கூற்று

முழவுமுதல் அரைய தடவுநிலைப் பெண்ணைக்
கொழுமடல் இழைத்த சிறுபொன் குடம்பைக்
கருங்கால் அன்றிற் காமர் கடுஞ்சூல்
வயவுப்பெடை அகவும் பானாட் கங்குல்
மன்றம் போழும் இனமணி நெடுந்தேர்
வாரா தாயினும் வருவது போலச்
செவிமுதல் இசைக்கும் அரவமொடு
துயில்துறந் தனவால் தோழிஎன் கண்ணே.

— குன்றியன்

வரைவிடை வைப்ப, 'ஆற்றகிற்றியோ' என்ற தோழிக்குக் கிழத்தி சொல்லியது.

தோழி! முழவினைப் போன்ற பருத்த அடிமரத்தையுடைய வளைந்து தோன்றும் பனையினது கொழுமையான மட்டையினிடத்தே கட்டிய சிறிய அழகிய கூட்டிலுள்ள கரிய காலினையுடைய ஆண் அன்றிலினது விருப்பத்தையுடைய முதற்சூலினைக் கொண்டதனாலுள்ள நோயையுடைய பெண் அன்றிற் பறவை தன் துணையை நாடி அழைக்கின்ற பாதியிரவு நேரத்தில், தனது சக்கரங்களால் மன்றத்தைப் பிளந்து கொண்டு வரும் தொகுதியாகிய மணியையுடைய தலைவனது நெடிய தேர் வாராதாயிருப்பினும் அது வருவது போலக் காதினிடத்தே ஒலிக்கும் ஒலியினால் என் கண்கள் தூக்கத்தை விடுத்தன.

தலைவனுடைய தேர் வரவை எதிர்பார்த்து இரவில் துயில் கொள்ளாதிருந்தேன் என்பதனை வெளிப்படுத்துகின்றாள் தலைவி.

அன்றிலின் கூடு எதனால் ஆக்கப்பெறுகிறது என்பது தெளிவாகத் தெரியாத ஒன்று. அழகு என்னும் பொருள்தரும் பொன் என்னும் பாடம் ஏடுகளில் பெரும்பாலும் காணப் படுகின்றது. எனவே இப் பாடம் கொள்ளப் பெற்றது.

அன்றிற் பேடை கூட்டில் இருந்து ஒன்றையொன்று அழைத்துச் சார்ந்து வாழ்கின்றன. அவற்றைப் போலக் கூடியிருக்கும் பேற்றைப் பெற்றிலேன் எனத் தலைவியின் உள்ளக்கிடக்கை பொதிந்திருத்தலின் இஃது இறைச்சிப் பொருள் ஆகும்.

அரை - அடிமரம்; தடவு - வளைவு; போழ்தல் - பிளத்தல்; அரவம் - ஒலி.

இப் பாட்டை, இரவுக்குறி பிழைத்த இடத்துத் தலைவி கூறியது என்பர் நச்சினார்க்கினியர் (தொல். களவு. 16).

302. குறிஞ்சி — தலைவி கூற்று

உரைத்திசின் தோழிஅது புரைத்தோ அன்றே
அருந்துயர் உழத்தலும் ஆற்றாம் அதன்தலைப்
பெரும்பிறி தாகல் அதனினும் அஞ்சுதும்
அன்னோ இன்னும் நல்மலை நாடன்
பிரியா நண்பினர் இருவரும் என்னும்
அலர்அதற்கு அஞ்சினன் கொல்லோ பலர்உடன்
துஞ்சுஊர் யாமத் தானும்என்
நெஞ்சத்து அல்லது வரவுஅறி யானே.

— மாங்குடி கிழார்

வரைவிடைக் கவன்ற தோழிக்குக் கிழத்தி சொல்லியது.

தோழி! தலைவனுடைய பிரிவினாலே பொறுத்தற்கரிய துயரால் வருந்துதற்கும் ஆற்றல் இலரானேம். அதன்மேலும் இறந்துபடுதலைக் கருதின் மிகவும் அஞ்சுகின்றோம். அந்தோ! மேலும், நல்மலை நாடனாகிய தலைவன் இருவரும் என்றும் பிரியாத நட்பினையுடையர் என்று பிறர் உரைக்கும் பழிச் சொல்லுக்கு அஞ்சினானோ? ஊரிலுள்ளார் பலரும் ஒருங்கு துயிலுகின்ற இரவின் நடுயாமத்தும் யான் அவனையே நினைப் பதனால் என் நெஞ்சிடத்தே வருதலேயன்றி நேரில் வருதலை அறியானாயினனே? அங்ஙனம் இருத்தல் உயர்வுடையது அன்று. நீ கூறுவாயாக.

தலைவன் என் நினைவில் நிறைந்துள்ளானேயன்றி நேரில் வந்தானில்லையே எனத் தலைவி தன் கவலையை வெளிப்படுத்து கின்றாள்.

புரைத்து - உயர்வானது; பெரும்பிறிதாதல் - இறத்தல்; அலர் - பழிச்சொல்.

அலர் இருவரிடையே உள்ள நட்பினை உறுதிப்படுத்தத் துணை செய்வதாயிருப்பவும் அதற்கு அஞ்சுதல் தகாது என்ப தாம்.

இப் பாட்டை, வரைவிடைக் கவன்ற தோழிக்குத் தலைவி கூறியது என்பர் நச்சினார்க்கினியர் (தொல். களவு. 21).

303. நெய்தல் — தோழி கூற்று

கழிதேர்ந்து அசைஇய கருங்கால் வெண்குருகு
அடைகரைத் தாழைக் குழீஇப் பெருங்கடல்
உடைதிரை ஒலியின் துஞ்சும் துறைவ

தொல்நிலை நெகிழ்ந்த வளையள் ஈங்குப்
பசந்தனள் மன்என் தோழி என்னொடும்
இன்இணர்ப் புன்னைஅம் புகர்நிழல்
பொன்வரி அலவன் ஆட்டிய ஞான்றே.

— அம்மூவன்

செறிப்பறிவுறீஇ வரைவு கடாயது.

உணவின் பொருட்டாகக் கழிநீரை ஆராய்ந்து அங்குத் தங்கிய கரிய காலையுடைய வெண்ணிறக் குருகுகள் தம் பசி நீங்கியதும் நீர் வந்து அடைகின்ற கடற்கரையிடத்துள்ள தாழையினிடத்தில் கூடிப் பெரிய கடலிலிருந்து எழுந்து கரையை மோதி உடைகின்ற அலைகளின் ஓசையினாலே துயில் கொள்ளும் துறையையுடைய தலைவ! இனிய பூங்கொத்துகளையுடைய புன்னை மரத்தின் புள்ளிபட்டு விழுகின்ற நிழலிலே பொன்னிறக் கோடுகளைப் பெற்ற நண்டுகளை அலைத்து விளையாடிய அப்பொழுதே என் தோழியாகிய தலைவியும் பழைய செறிவு நிலையிலிருந்து நெகிழ்ந்து பெயரும் வளைகளையுடையளாய் இவ்விடத்தில் மிகவும் பசலை படரப் பெற்றாள்.

இனி நீ அவளை மணந்து கொள்ளுதலே செய்யத்தக்கது என எடுத்துரைத்தவாறாம்.

அசைதல் - தங்குதல்; வெண்குருகு - வெண்ணிறக் கொக்கு; உடைதிரை - ஒன்றுடன் ஒன்று மோதிச் சிதறுகின்ற அலை; நண்டுகளை அலைத்து விளையாடியது முதல் என்றது தலைவனை அவள் கண்டு கூடிய காலத்தை நினைவூட்டியதாம். பசலை படர்ந்த காரணத்தால் தாய் அவளை இற்செறித்துள்ளாள் என்பதாம்.

குருகு கழிமீனை உண்டு தாழை மடலில் கடலொலி கேட்டுத் துயிலுகிறது. அவ்வாறே களவிற்கூடித் தலைவியின் இன்பம் பெற்ற நீ மணம் புரிந்து சான்றோர் வாழ்த்தொலியோடு இல்லறம் நடத்துவாயாக என்ற கருத்தைப் புலப்படுத்துவதாதலின் இஃது இறைச்சிப் பொருளாம்.

304. நெய்தல் — தலைவி கூற்று

கொல்வினைப் பொலிந்த கூர்வாய் எறிஉளி
முகம்பட மடுத்த முளிவெதிர் நோன்காழ்
தாங்குஅரு நீர்ச்சுரத்து எறிந்து வாங்குவிசைக்

கொடுந்திமிற் பரதவர் கோட்டுமீன் எறிய
நெடுங்கரை இருந்த குறுங்கால் அன்னத்து
வெண்தோடு இரியும் வீததை கானல்
கைதைஅம் தண்புனற் சேர்ப்பனொடு
செய்தெனெம் மன்றஓர் பகைதரு நட்பே.

— கணக்காயன் தத்தன்

வரைவிடை 'ஆற்றாள்' எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

தோழி! கொல்லனது செயற்பாட்டினாலே பொலிவு பெற்ற கூரிய முகத்தையுடைய எறிகின்ற உளி என்னும் இரும்புக் கருவியைத் தன்னுடைய முகத்திலே அமையும்படி பொருத்தப்பெற்ற மூங்கிலின் வலிய காம்பினைப் பற்றித் தாங்குதற்கு அரிய நீரையுடைய கடல்வழிஇடத்திலே எறிந்து அதனை மீண்டும் கயிற்றால் கைப்பற்றும் வளைந்த மீன் படகையுடைய பரதவர் கொம்பு உடைய சுறாமீனை எறியுளியால் எறிய, நீண்ட கரையிலேயிருந்த குறுகிய கால்களையுடைய அன்னப் பறவைகளின் வெண்ணிறக் கூட்டம் அஞ்சி ஓடிவிடும் மலர்கள் நெருங்கியுள்ள சோலையையும் தாழையையும் அழகிய தண்ணிய நீரையும் உடைய கடற்கரைத் தலைவனோடு நிச்சயமாக நாம் பகை விளைக்கும் நட்பினையே செய்துகொண்டோம்.

தலைவன் பிரிவின் காரணமாகத் தான் மெலிந்து துன்புறு தலைச் சுட்டுவாளாய், அவன் நட்புப் பகைதரு நட்பாயிற்று என்று குறிப்பிடுகின்றாள்.

கொல் - கொல்லன்; கொல்வினைப் பொலிந்த உளி, கூர்வாய் உளி, எறி உளி என்க. முளிவெதிர் - உலர்ந்த மூங்கில்; கோட்டுமீன் - கொம்புகளையுடைய சுறாமீன்; தோடு - தொகுதி, திரள்; நீர்ச்சுரம் - கடல் நீரில் படகு செல்வழி; பகைதரு நட்பானது பிரிவினால் வருத்த மிகுதி உண்டுபண்ணும் தொடர்பு என்பதாம்.

305. மருதம் — தலைவி கூற்று

கண்தர வந்த காம ஒள்எரி
என்புஉற நலியினும் அவரொடு பேணிச்
சென்றுநாம் முயங்கற்கு அருங்காட் சியமே
வந்துஅஞர் களைதலை அவர்ஆற் றலரே
உய்த்தனர் விடாஅர் பிரித்துஇடை களையார்

குப்பைக் கோழித் தனிப்போர் போல
விளிவாங்கு விளியின் அல்லது
களைவோர் இலையான் உற்ற நோயே.

— குப்பைக் கோழியார்

காப்பு மிகுதிக்கண் தோழி அறத்தொடு நிற்பாளாகத் தனது ஆற்றாமை தோன்றத் தலைமகள் தன்னுள்ளே கூறியது.

தலைவரைக் கண்டபோதே கண்கள் தந்ததனால் உண்டாகிய காமமாகிய ஒள்ளிய நெருப்பு எலும்பையும் பொருந்தி என்னை வருத்திய போதிலும், அவரை விரும்பிச் சென்று அடைந்து தழுவுதற்கு அவரை முன்பு போலக் காண்பதற்கு இயலாதவராயினேம். அத் தலைவரும் நாம் இருக்கும் இடம் வந்து நம் துயர் நீக்குதலைச் செய்தாரல்லர். இந்த நிலையில் நான் அடைந்த இக் காம நோயானது, செலுத்தி விடாரும் போரை இடையில் நீக்காரும் இல்லாத குப்பைமேட்டில் தனித்துப் போரிடும் கோழிச் சண்டையைப் போலத் தானே அழியும் வழி அழிந்தாலன்றி இதனைப் போக்குவார் எவரும் இல்லை.

என் துன்பத்தை நீக்கும் துணையாவாரைப் பெற்றிலேன் என்பதாம்.

என்புறநலிதல் - அகத்தே மிக வருந்துதல்; அஞர் - துன்பம்.

சேரிக் கோழியின் போர் பெருந்திரளான மக்கள் பார்க்க நடைபெறும். குப்பைமேட்டில் தனித்துப் போரிடும் கோழிச் சண்டை அவற்றைச் செலுத்துவாரும் விலக்குவாரும் இன்றி நடைபெறும். அங்ஙனமே தலைவியும் காமநெருப்பால் தனித்துத் துயரமுறுகின்றாள் என்பதாம்.

306. நெய்தல் — தலைவி கூற்று

மெல்லிய இனிய மேவரு தகுந
இவைமொழி யாம்எனச் சொல்லினும் அவைநீ
மறத்தியோ வாழிஎன் நெஞ்சே பலஉடன்
காமர் மாஅத்துத் தாதுஅலர் பூவின்
வண்டுவீழ்பு அயரும் கானல்
தெண்கடற் சேர்ப்பனைக் கண்ட பின்னே.

— அம்மூவன்

காப்பு மிகுதியான் நெஞ்சு மிக்கது வாய் சோர்ந்து கிழத்தி உரைத்தது.

என் நெஞ்சே! மென்மையுடையனவும் இனியனவும் விரும்பத் தக்கனவுமாகிய இச் சொற்களை இனிச் சொல்லமாட்டோம் என்று சொன்னாலும், அழகிய மாமரத்தின் தாது பொருந்திய மலர்களிடத்தில் வண்டுகள் பலவும் ஒருசேர வந்து விடுதலைச் செய்கின்ற கானற்சோலையையுடைய தெளிந்த கடல்நிலத் தலைவரைக் கண்டபின், நீ நான் கூறியவற்றை மறந்துவிடு கின்றாயோ.

தலைவனைக் காணும்போது எல்லாத் துன்பங்களையும் மறந்துவிடுகின்றேன் என்பதாம்.

கானல் - கடற்கரைச் சோலை; மாமரத்தின் பூவில் வண்டு தங்கும் காலம் என்பது இளவேனிற் காலத்தைச் சுட்டும்.

307 பாலை — தலைவி கூற்று

வளைஉடைத் தனையது ஆகிப் பலர்தொழச்
செவ்வாய் வானத்து ஐயெனத் தோன்றி
இன்னம் பிறந்தன்று பிறையே அன்னோ
மறந்தனர் கொல்லோ தாமே களிறுதன்
உயங்குநடை மடப்பிடி வருத்தம் நோனாது
நிலைஉயர் யாஅத் தொலையக் குத்தி
வெண்நார் கொண்டு கைசுவைத்து அண்ணாந்து
அழுங்கல் நெஞ்சமொடு முழங்கும்
அத்த நீள்இடை அழப்பிரிந் தோரே.

— கடம்பனூர்ச் சாண்டிலியன்

பிரிவிடைக் கடுஞ்சொற் சொல்லிய தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

தோழி! பிறையானது சங்கினை உடைத்தாற் போன்றதாகிக் கன்னிமகளிரும் பிறரும் ஆகிய பலரும் தொழும்படியாகச் செக்கர் வானத்திலே விரைவாக வெளிப்பட்டு மீண்டும் பிறந் துள்ளது. ஆண் யானை வருந்திய நடையையுடைய பெண் யானையினது வருத்தத்தைத் பொறாமல் உயர்ந்த நிலையை யுடைய யாமரம் அழியும்படி கொம்பால் குத்தி அதன் வெள்ளிய நாரைப் புய்த்துக் கைக்கொண்டு நீர் இன்மையால் வறுங் கையைச் சுவைத்து மேல்நோக்கிப் பிடியின் வருத்தம் போக்க இயலாத நிலையை நினைத்து வருந்துதலையுடைய நெஞ்சமோடு முழங்கும் அரிய காட்டு வழியாகிய நீண்ட இடத்தே யாம் அழும்படியாக நம்மைப் பிரிந்து சென்ற தலைவர் அந்தோ நம்மை மறந்து விட்டனரோ?

பிறைக்காட்சி தோன்றும் மாலைக் காலம் பிரிந்தார்க்குத் துன்பம் தருவதாதலின் பிறை பிறந்தமையைச் சுட்டி உரைத்தாள் தலைவி.

யா என்பதே மரப்பெயர். இது வருமொழி வல்லெழுத்தோடு புணரும்போது அகரப்பேறும் மெல்லெழுத்து மிகுதலும் ஆகிய மாற்றங்களைப் பெறும் எனத் தொல்காப்பியர் கூறுவர் (உயிர்மயங். 24, 27). 'வல்லெழுத்து மிகினு மானமில்லை' (உயிர்மயங். 28) என்றொரு சிறப்புவிதியும் தருகின்றார். இங்கே யாஅம் தொலைய, யாஅத் தொலைய என இருவடிவமும் வருதல் பொருந்தும். இவற்றுள் யாஅத் தொலைய என்னும் பாடமே ஏடுகளில் மிகுந்து காணப்படுகிறது. ஆதலின் இப் பாடம் கொள்ளப்பெற்றது.

பெண் யானையின் வருத்தத்தை நீக்க முயலும் ஆண் யானையைத் தாம் செல்லும் வழியில் கண்டவராகிய தலைவர் என் வருத்தத்தை நீக்க வந்திருக்க வேண்டும் என்னும் கருத்துப் புலப்படக் கூறுதலின் இஃது இறைச்சிப் பொருளாம்.

வளை - சங்கு; ஐயென - விரைவாக; இன்வம் - மீண்டும்; உயங்குதல் - வருந்துதல்; அண்ணாத்தல் - மேல் நோக்குதல்; அத்தம் - காடு.

308. குறிஞ்சி — தோழி கூற்று

சோலை வாழை சுரித்துஉகும் பிணிய
அணங்குடை இருந்தலை நீவலின் மதன்அழிந்து
மயங்குதுயர் உற்ற மையல் வேழம்
உயங்குஉயிர் மடப்பிடி உலைபுறம் தைவர
ஆம்இழி சிலம்பின் அரிதுகண் படுக்கும்
மாமலை நாடன் கேண்மை
காமம் தருவ்துஒர் கைதாழ்ந் தன்றே.

— பெருந்தோட் குறுஞ்சாத்தன்

வரைவிடைக் கிழத்தியை வன்சொல் சொல்லி வற்புறுத்தியது.

சோலையிடத்துள்ள வாழை சுழித்து ஒழுகும் மதநோயையுடைய அச்சமூட்டும் கரிய பெரிய மத்தகத்தைத் தடவுதலினால் மதம் கெட்டுக் கலங்கிய துயரத்தை அடைந்த மயக்கத்தைக் கொண்ட ஆண் யானையானது வருந்திய மூச்சையுடைய மடப்பத்தையுடைய பெண்யானை அதன் முதுகைத் தடவ, நீர் வழிந்தோடும் மலைப்பக்கத்தில் அரிதான உறக்கத்தைக்

கொள்ளுகின்ற பெரிய மலைநாட்டையுடைய தலைவனது நட்பு காம இன்பத்தைத் தருவதாகிய செயலிலே தங்கியது.

தலைவன் நினக்கு நன்மை சேரும் பொருட்டே பிரிந்தான் எனத் தோழி குறித்தவாறாம்.

வாழை என்பது எழுவாயாக நின்று நீவலின் என்னும் எச்சத்தைத் தழுவுகிறது. எனவே இங்கு 'வாழைச்' என மிகுத்தெழுதல் பொருந்தாது. யானையின் மதம் வாழை தடவுவதனுல் கெடுகிறது என்று குறிக்கப்பெறுவதால், 'சுரித்துஉகும் பிணிய' என்னும் பாடமே ஏற்புடையதாகக் கொள்ளப்பெற்றது. இப் பாடமே ஏடுகளில் மிகுந்து காணப்படுகிறது என்பதும் நோக்கத் தக்கது.

மையல் - மயக்கம்; நீவல் - தடவுதல்; கை - செயல்; தாழ்தல் - தங்குதல்.

309. மருதம் — தோழி கூற்று

கைவினை மாக்கள்தம் செய்வினை முடிமார்
சுரும்புஉண மலர்ந்த வாசம் கீழ்ப்பட
நீடிய வரம்பின் வாடிய விடினும்
கொடியோர் நிலம்பெயர்ந்து உறைவேம் என்னாது
பெயர்த்தும் கடிந்த செறுவில் பூக்கும்
நின்ஊர் நெய்தல் அனையேம் பெரும
நீஎமக்கு இன்னா கியபல செய்யினும்
நின்இன்று அமைதல் வல்லா மாறே.

— உறையூர்ச் சல்லியங்குமரன்

பரத்தையிற் பிரிந்து வந்த கிழவற்குத் தோழி வாயில் நேர்ந்தது.

பெருமானே! நீ எமக்குத் துன்பம் தருவதான பல செயல்களைச் செய்த போதிலும் நின்னையில்லாமல் இங்குப் பொருந்தி வாழ்தலுக்கு வன்மையில்லாதவராயினேம். தொழில் செய்யும் உழவர் முதலியோர் தமது தொழிலைச் செய்து முடிப்பாராகி வண்டு உண்ணுதலால் மலர்ந்த மலரின் வாசனை கீழாம்படி நீண்ட வரப்பிலே வாடும்படி விட்டாலும் இவ்வுழவர் கொடியராதலின் இந் நிலத்தைவிட்டு நீங்கி வாழ்வேம் என்று கருதாது மீட்டும் தம்மை நீக்கிய வயலிடத்துப் பூக்கும் நின் ஊரில் உள்ள நெய்தற்பூவை ஒத்த தன்மையுடையோம்.

நீ கொடுமை செய்தாலும் யாம் நின்னை வெறுக்க மாட்டேம் என்றவாறு.

இன்னாதன. இன்னாகிய இரண்டும் பன்மை குறித்தனவே ஏடுகளில் இன்னாகிய என்னும் பாடம் மிகுந்து காணப்படுதலின் இப் பாடம் கொள்ளப்பெற்றது.

கைவினை மாக்கள் - உழவர்; செய்வினை - செய்தொழில்; வல்லாமாறு - வன்மை இல்லாத காரணம்.

நெய்தல் மலர் உழவர் தமக்கு இன்னாதன செய்தாலும் அவர் வயலில் மீட்டும் பூக்கும். அது போலத் தலைவன் எமக்குத் துன்பம் தருவன செய்யினும் உம்பால் மீட்டும் யாம் அன்புடையவராயினேம் என்பதாம்

310. நெய்தல் — தலைவி கூற்று

புள்ளும் புலம்பின பூவும் கூம்பின
கானலும் புலம்புநனி உடைத்தே வானமும்
நம்மே போலும் மம்மர்த்து ஆகி
எல்லை கழியப் புல்லென் றன்றே
இன்னும் உளெனே தோழி இந்நிலை
தண்ணிய கமழும் ஞாழல்
தண்ணம் துறைவற்கு உரைக்குநர்ப் பெறினே.

— பெருங்கண்ணன்

வரைவிடை முனிந்து கிழத்தி தோழிக்கு உரைத்தது.

தோழி! பறவைகளும் ஒலி செய்தன. நீரில் மலர்ந்த மலர்களும் குவிந்தன. கடற்கரைச் சோலையும் தனிமையை மிகவுடைய தாயிற்று. வானமும் நம்மைப் போன்ற மயக்கத்தை உடையதாகிப் பகற்பொழுது நீங்கப் பொலிவிழந்து தோன்றுகிறது. இந்த நிலையினைத் தண்ணியவாய் மணம் வீசுகின்ற மலரையுடைய ... தலைவனுக்கு உரைப்பாரைப் பெற்றால் இனிமேலும் உயிரோடு உள்ளேன் ஆவேன்.

இன்றேல் இறந்துபடுவேன் என்பதாம். தலைவனுக்கு என் துயரை எடுத்துரைத்து என் துயரைப் போக்குவதற்கு முற்படுவாயாக என்றவாறாம்.

எல்லை - பகல், சூரியன்; ஞாழல் - புலிநகக்கொன்றை.

311. நெய்தல் — தலைவி கூற்று

அலர்யாங்கு ஒழிவ தோழி பெருங்கடல்
புலவுநாறு அகன்துறை வலவன் தாங்கவும்
நில்லாது கழிந்த கல்லென் கடுந்தேர்
யான்கண் டன்றோ இலனே பானாள்

ஓங்கல் வெண்மணல் தாழ்ந்த புன்னைத்
தாதுசேர் நிகர்மலர் கொய்யும்
ஆயம் எல்லாம் உடன்கண் டன்றே.

— சேந்தன்கீரன்

அலர் அஞ்சிய தலைமகள் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.

தோழி! பெரிய கடலினது புலால் நாற்றம் வீசும் அகன்ற துறையினிடத்திலே பாகன் தடுக்கவும் நில்லாமல் சென்றதாகிய கல்லென்னும் ஆரவாரத்தையுடைய விரைந்து செல்லும் தலைவனுடைய தேரை நான் மட்டும் கண்டேனில்லை. நடு இரவின் கண் உயர்ச்சியையுடைய வெள்ளிய மணலிடத்துத் தாழ்ந்து வளர்ந்த புன்னை மரத்தினது மகரந்தத்தோடு கூடிய ஒளியை யுடைய மலர்களைப் பறிக்கும் ஆயமகளிர் எல்லாரும் ஒருசேரப் பார்த்தனரே. அங்ஙனமாகவும் பழிமொழி எங்ஙனம் நீங்கிப் போகும்.

தலைவன் வந்து செல்வதை ஆயமும் பிறரும் அறிந்து பழி கூறுகின்றனர் என்பதாம்.

தாங்குதல் - தடுத்தல்; ஓங்கல் வெண்மணல் - உயர்ந்த மணல் மேடு; மணற்குன்றம் என்றும் உரைப்பர். நிகர்மலர் - ஒளி படைத்த பூக்கள்.

அலர் மிகுதியைச் சிறைப்புறத்தானாகிய தலைவனுக்குப் புலப்படுத்தி அவ்வலர் ஒழிய அவன் விரைவில் மணந்து கொள்ள வேண்டும் என்பதை அறிவுறுத்தும் நோக்கில் அமைந்தது தலைவியின் இந்தப் பேச்சு.

312. குறிஞ்சி — தலைவன் கூற்று

இரண்டுஅறி கள்விநம் காத லோளே
முரண்கொள் துப்பின் செவ்வேல் மலையன்
முள்ளூர்க் கானம் நாற வந்து
நள்ளென் கங்குல் நம்ஓ ரன்னள்
கூந்தல் வேய்ந்த விரவுமலர் உதிர்த்து
சாந்துஉளர் நறுங்கதுப்பு எண்ணெய் நீவி
அமரா முகத்தள் ஆகித்
தமர்ஓ ரன்னள் வைகறை யானே.

— கபிலர்

இரவுக்குறி வந்து நீங்குகின்ற தலைமகன் தன் நெஞ்சிற்கு வரைவிடை வேட்பக் கூறியது.

நெஞ்சே! தம் காதலுக்கு உரியளான தலைவி இருவேறு வகைப்பட்ட நடத்தையை அறிந்த கள்ளத்தன்மையை உடையளாவள். செறிந்த இருளையுடைய இரவில் மாறுபாட்டைக் கொண்ட வலியையுடைய சிவந்த வேலைத் தாங்கிய மலையனது முள்ளூர் மலைக்காட்டிலுள்ள நறுமணம் போன்ற மணமுடையளாய் வந்து. நம்மோடும் ஒத்த இயல்பினள் ஆயினாள். விடியற்கால வேளையிலே யான் தனது கூந்தலிடத்துச் சூடிய பலவாகக் கலந்துள்ள மலர்களை எல்லாம் உதிர்த்து விட்டு மயிர்ச்சாந்தையிட்டுக் கோதிய நறுமணமுடைய கூந்தலிலே எண்ணெயைத் தடவிப் பொருந்தாத முகத்தையுடையவளாய்த் தன்னுடைய சுற்றத்தாரோடு ஒத்தவளாயினாள்.

களவு ஒழுக்கத்தைப் பிறர் அறியாவாறு தலைவி நன்கு மறைத்து அயலார் அறியாமல் ஒழுகுகின்றாள் என்பதாம்.

துப்பு - வலிமை: மலையன் - மலையமான் திருமுடிக்காரி என்னும் வள்ளல். இவனைத் 'தேர்வண் மலையன்' என்றும் சுட்டுவர். இவனுக்கு உரியது முள்ளூர்.

இரவில் தன்னோடு சார்ந்தும் பகலில் தமரோடு சார்ந்தும் நடத்தலால் அவளை இரண்டு அறி கள்வி என்று சுட்டலாயினன். இந்த இரு வேறுபட்ட நிலை நீட்டித்து நிகழ்தல் கூடாதாதலின் வரைவுடைமையை நயந்து கூறியதாகும்.

இளம்பூரணர், தான் புகுதற்குத் தகுதியில்லாத காலத்துக் கண் அகம்புக்கு எதிர்ப்பட்டுழி, அவரால் நீக்கப்படாத விருந்தின் பகுதியனாகியவழித். தலைவன் கூறியது (தொல். களவு. 17) என்று இப் பாடலுக்குக் கருத்துரைப்பர்.

பேராசிரியர், அமரா முகத்தளாதலும் தமரோரன்னளாகுதலும் தலைமகற்குப் புலனாகலின் அவை கண்ணுணர்வு எனப்படும் என்பர் (தொல். மெய்ப். 27).

தொல்காப்பியக் களவியல் உரையில் ஈரிடங்களில் இப் பாடலை நச்சினார்க்கினியர் எடுத்துக் காட்டுகின்றார். 1. தான் வருந்திக் கூறுகின்ற., கூற்றினைத் தலைவியைச் சார்த்தித் தலைவன் கூறலின், இவ்வாறு ஆற்றானாய் இங்ஙனம் கூறினான் என்று அஞ்சித் தோழி உணராமல் தலைவி தானே கூடிய பொழுது தலைவுன் கூறியது (தொல். களவு. 11). 2. எஞ்ஞான்றும் கூட்டம் பெற்றமையால் தலைவி மகிழ்தல், இரண்டறி கள்வி என்னும் பாட்டினுள் தோற்றப் பொலிவை மறைப்பள் எனத் தலைவன் கூறியவாற்றான் உணரப்படும் (தொல். களவு. 20).

313. நெய்தல் — தலைவி கூற்று

பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
நீத்துநீர் இருங்கழி இரைதேர்ந்து உண்டு
பூக்கமழ் பொதும்பர்ச் சேக்கும் துறைவனொடு
யாத்தேம் யாத்தன்று நட்பே
அவிழ்த்தற்கு அரிதுஅது முடிந்துஅமைந் தன்றே.

இரவுக்குறி வந்து ஒழுகுங் காலத்துத் தலைமகனது வரவு உணர்ந்து, 'பண்பிலர்' என்று இயற்பழித்த தோழிக்கு, 'அவரோடு பிறந்த நட்பு அழியாத நட்பு அன்றோ' என்று சிறைப்புறமாகத் தலைமகள் இயற்பட மொழிந்தது.

தோழி! பெரிய கடற்கரையிடத்து உள்ளதாகிய சிறிதான வெண்மையுடைய காக்கை பெருவெள்ளமான நீரையுடைய கரிய கழியினிடத்தில் மீனாகிய இரையை நாடி உண்டு மலர் மணம் வீசும் சோலையின்கண் தங்கும் துறையையுடைய தலைவனோடு நம்மைப் பிணித்துக் கொண்டோம். அவனுடைய நட்பு நன்றாய்ப் பொருந்தியது; அது பிறரால் பிரித்தற்கு அரியதாகிச் சமைந்தது.

தலைவனுடைய நட்பு என்றும் நீங்காதது என அவன் நட்பினைப் போற்றியது.

கடற்கரைக் கழியில் இரைதேடி உண்ட காக்கை பூமணச் சோலையில் தங்கும் துறைவன் என்றது களவொழுக்கத்தில் வந்து நீங்கும் தலைமகன் வரைந்து கொண்டு தன் மனையிலிருந்து இல்லறம் புரிவான் என்னும் குறிப்பை உட்கொண்டிருத்தலால் இஃது இறைச்சிப் பொருள் ஆகும்.

314. முல்லை — தலைவி கூற்று

சேய்உயர் விசும்பின் நீர்உறு கமஞ்சூல்
தண்குரல் எழிலி ஒண்சுடர் இமைப்பப்
பெயல்தாழ்பு இருளிய புலம்புகொள் மாலையும்
வாரார் வாழி தோழி வருஉம்
மின்உறழ் இழைமுலை ஞெமுங்க
இன்னா வைப்பின் சுரன்இறந் தோரே.

— பேரிசாத்தன்

பிரிவிடை வேறுபட்ட கிழத்தி வற்புறுத்துந் தோழிக்குப் பருவங் காட்டி அழிந்து கூறியது.

தோழி! துன்பத்தைச் செய்யும் இடங்களையுடைய பாலை நிலத்தைக் கடந்து சென்றவர் நெடுந்தொலைவு மிக உயர்ந்த வானத்திலே நீர் மிகப் பெற்ற நிறைந்த கருப்பத்தோடு தண்ணிய முழக்கத்தையுமுடைய மேகம் ஒள்ளிய மின்னலின் ஒளியை வீசி விளங்க மழை பெய்து இருண்ட தனிமையையுடைய மாலைக் காலத்திலும் வளருகின்ற மின்னல் போல் ஒளிவிடும் ஆபரணங் களை அணிந்த இளமுலைகள் அழுந்தும்படியாக நம்மைத் தழுவு வதற்கு வாராராயினர்.

மின்னுதல் என்னும் பண்பை முலைக்கு ஏற்றி மின்னுறல் இளமுலை என்று பாடம் கொள்வாரும் உளர். முலைமேல் அணியப்பெற்ற அணிகலனே மின்போல் ஒளிவீச வல்லது. எனவே, மின்னுறழ் இழைமுலை என்னும் பாடம் கொள்ளப்பெற்றது.

கமம் - நிறைவு; தண் எழிலி, குரல் எழிலி என்க. இருளிய - இருண்ட; ஞெமுங்குதல் - அழுந்துதல்; வைப்பு - இடம்; வருமுலை - எழுகின்ற முலை. வாராமுலை, வருமுலை, வந்தமுலை என்பன பருவம் குறித்த குறிப்புகளாகும். வருமுலையாள் என்றது மங்கைப் பருவத்தினள் என்பது அறிவித்தற்கு.

315. குறிஞ்சி — தலைவி கூற்று

எழுதரு மதியம் கடற்கண் டாஅங்கு
ஒழுகுவெள் அருவி ஓங்குமலை நாடன்
ஞாயிறு அனையன்என் தோழி
நெருஞ்சி அனையஎன் பெரும்பணைத் தோளே.

— மதுரை வேளாதத்தன்

வரைவிடை, 'வேறுபடுகின்றாய்' என்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

என் தோழி! மேலே எழுகின்ற முழுமதியம் கடலிடத்தே தோன்றினாற் போல ஓடி வருகின்ற வெள்ளிய அருவியையுடைய உயர்ந்த மலை நாட்டையுடைய தலைவன் சூரியனைப் போன்றவன். என்னுடைய மூங்கிலைப் போன்ற பெரிய தோள்கள் நெருஞ்சி மலர்களைப் போன்றன. சூரியனை நோக்கி யிருக்கும் நெருஞ்சி மலர் போலத் தலைவனையே என் தோள்கள் நோக்கியுள்ளன என்பதாம்.

தலைவன் வழியே தான் ஒழுகுவேன் என்பது குறிப்பித்த வாறாம்.

கடலுக்கு மலையும் அதன் மேலே பொங்கிவழியும் வெண்ணிற அருவிக்குக் கடலிற் பொங்கி மேலெழும் முழுமதியமும் ஒப்புக்

கூறியவாறாம். முழுமதியின் ஒளி எங்கும் பொங்கிப் பரவுதல் போல மலையருவியும் பொங்கித் ததும்பி ஓடிவருகின்றது என்ப தாம். இங்கே மதி என்பதனைப் பிறை எனக் கொள்வாரும் உளர். பிறை கடலிடத்தே தோன்றுவது இயற்கையின்மையின் அக் கூற்றுச் சிறவாது.

நெருஞ்சி மலர் சூரியனின் கதிரொளி நோக்கியே திரும்பும் இயல்பினது.

அனையன் என் என்பதுவே ஏடுகளில் மிகுந்து காணப்படும் பாடம். இது அடுத்து வரும் அடியில் நெருஞ்சி அனைய என் என்னும் சீரோடு ஒத்து நின்று அமைதலின் இப் பாடம் கொள்ளப் பெற்றது.

316. நெய்தல் — தலைவி கூற்று

ஆய்வளை ஞெகிழவும் அயர்வுமெய் நிற்பவும்
நோய்மலி வருத்தம் அன்னை அறியின்
உளெனோ வாழி தோழி விளியாது
உரவுக்கடல் பொருத விரவுமணல் அடைகரை
ஓரை மகளிர் ஓராங்கு ஆட்ட
ஆய்ந்த அலவன் துன்புறு துனைபரி
ஓங்குவரல் விரிதிரை களையும்
துறைவன் சொல்லோ பிறஆ யினவே.

— தும்பிசேர்கீரன்

வரைவிடை 'வேறுபடுகின்றாய்' என்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

தோழி! முழுமையும் கெட்டுப் போகாமல் வலிமையுடைய கடலால் அலைக்கப்பட்ட மணல்விரவிய அடைகரையில் விளையாட்டுப் பெண்கள் ஒரு தன்மையாக அலைத்தலினாலே மெலிந்த நண்டினுடைய வருத்தம் மிக்க விரைந்த செலவை உயர்ந்து வருதலையுடைய விரிந்த கடல் அலையானது போக்கும் துறையைச் சார்ந்த தலைவன் சொல்லிய சொற்கள் வேறுபாடு உடையவாயின. அழகிய வளைகள் நெகிழ்ந்து போகவும் சோர்வினை உடம்பிலே நிலைக்கச் செய்யவும் ஆன துன்பம் மிகுந்த என் வருத்தத்தைத் தாய் அறிவாளாயின் இனிமேலும் உயிரோடு உளென் ஆவனோ?

தாய் அறிவாளாயின் யான் உயிர்நீப்பேன் எனக் குறித்த வாறாம்.

ஞெகிழ்தல் - கழலுதல்; நோய் - உடலில் தோன்றும் பிணி: அது காம நோயும் ஆம். சொல் பிறவாதல் - சொன்ன சொல் மாறுபடுதல், பொய்படுதல்; துனை பரி - விரைந்த செலவு.

நிலைத்தல் என்னும் பொருளில் நிற்பவும், நிறுப்பவும் என்பன ஒத்துக் காணப்படினும், ஏடுகளில் நிற்பவும் என்னும் பாடமே மிகுந்து காணப்படுதலின் இப் பாடமே கொள்ளப்பெற்றது.

ஓரை மகளிர் வருத்தும் காலத்து அவருக்கு அஞ்சி விரைந்து ஓடிய நண்டினை அம் மகளிர் கைப்பற்றாவாறு கடல் அலை கொண்டு சென்றதனால் அதன் விரைந்த நடையும் வருத்தமும் நீங்கின. அங்ஙனம் தாய்க்கு அஞ்சி நிற்கின்ற என்னுடைய நோய்மலி வருத்தத்தைத் தலைவனும் வரைந்து கொண்டு தன்னுடன் சேர்த்துக் கொள்ளுதலால் நீக்குதற்கு உரியன் என்னும் குறிப்பை உள்ளடக்கிய இப் பகுதி இறைச்சிப் பொருளாம்.

317. குறிஞ்சி — தோழி கூற்று

புரிமட மரையான் கருநரை நல்ஏறு
தீம்புளி நெல்லி மாந்தி அயலது
தேம்பாய் மாமலர் நடுங்க வெய்துஉயிர்த்து
ஓங்குமலைப் பைஞ்சுனை பருகும் நாடன்
நம்மைவிட்டு அமையுமோ மற்றே கைம்மிக
வடபுல வாடைக்கு அழிமழை
தென்புலம் படரும் தண்பனி நாளே.

— மதுரைக் கண்டரதத்தன்

பிரிவிடைக் கிழத்தியைத் தோழி வற்புறுத்தியது.

விரும்புகின்ற அழகு படைத்த மரையானினது கருமையும் பெருமையுமுடைய நல்ல ஆண் இனிய புளிப்பையுடைய நெல்லிக் காயைத் தின்று அண்மையில் உள்ளதாகிய தேன்பரவியுள்ள அழகிய மலர்கள் நடுங்கும்படி வெப்பமான பெருமூச்சைவிட்டு உயர்ந்த மலையிடத்துள்ள பசிய சுனை நீரை உண்ணுகின்ற நாட்டையுடைய தலைவன், அளவு கடந்து வடதிசையிலிருந்து வரும் வாடைக் காற்றுக்கு அழிந்த மேகம் தென்திசையை நோக்கிச் செல்லும் தண்ணிய பனிப் பருவத்தில், இன்றியமையாத நம்மைவிட்டுப் பிரிந்து இருத்தல் பொருந்துமோ?

அவன் குறித்த மழைப் பருவமாகிய இதில் வந்துவிடுவான் என்று உறுதி மொழிந்தவாறு.

மரை - மானினத்தில் ஒன்று என்பர். மடப்பம் - அழகு, இளமை. நரை - பெருமை; வெண்மை என்றும் ஆம். நெல்லிக் காய் முதலில் இனிப்பும் பின்பு புளிப்புமாகிய சுவை தோற்றுவிப்பது ஆதலின் 'தீம்புளி' என்றனர். 'தீம்புளிப் பாகர்' (குறுந். 167. 4) என்றாற் போலப் புளிக்கு அடையாகவும் கொள்ளலாம். நெல்லிக்காயைத் தின்று நீரைக் குடித்தால் இன்சுவை தோன்றும் என்பர். நீர்மேல் பரவிய பூக்களை மூச்சுக்காற்றால் விலக்கி விலங்குகள் நீர் குடிப்பது இயல்பு என்பதைப் புலப்படுத்தியவாறு.

318. நெய்தல் — தலைவி கூற்று

எறிசுறாக் கலித்த இலங்குநீர்ப் பரப்பின்
நறுவீ ஞாழலொடு புன்னை தாஅய்
வெறிஅயர் களத்தினின் தோன்றும் துறைவன்
குறியான் ஆயினும் குறிப்பினும் பிறிதுஒன்று
அறியாற்கு உரைப்பலோ யானே வேய்கவிப்
பணைஎழில் மென்தோள் அணைஇய அந்நாள்
பிழையா வஞ்சினம் செய்த
களவனும் கடவனும் புணைவனும் தானே.

— அம்மூவன்

கிழவன் கேட்கும் அண்மையன் ஆகத் தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

தோழி! எதிர்ப்பட்டாரைத் தாக்குகின்ற தன்மையுடைய சுறாமீன்கள் மிகுந்துள்ளதான விளங்கிய கடற்கரைப் பரப்பிலே நறுமணங்கொண்ட ஞாழல் மலர்களையுடைய புன்னை மலரும் பரவி வெறியாடும் களத்தைப் போலத் தோற்றமளிக்கின்ற துறையையுடைய தலைவன், என்னை மணந்து கொள்ளுதலை மனத்துள் கருதானாயினும் கருதினும், அயலார் மணம் வேண்டி வர நேரும் என்பதனை அறியாத அவனுக்கு யான் என்ன சொல்லுவேனோ. மூங்கிலும் நாணும்படியான பருத்த அழகிய மென்மையான தோள்களை அடைந்த அந்த நாளிலே நம்மிடத்துப் பிழையாமையைப் புலப்படுத்தும் சூளைச் செய்த வஞ்சக நெஞ்சுடையவனும் அதனை நிறைவேற்றும் கடப்பாடுடையவனும் நமக்குப் புணை போன்று அமைந்து நம்மைக் காப்பவனும் அத் தலைவனே யாவான்; வேறு பிறர் இல்லை.

தலைவன் தன் சொல் தவறாது வந்து வரைந்து கொள்ள வேண்டும் என்பதனை வற்புறுத்திக் கூறினாளாயிற்று.

களவு நிகழ்ச்சிக்கண் பூரித்த தோள்களைப் பற்றியே இங்குக் குறிக்கப்பெறுகிறது. இதற்கு ஏற்புடைய பாடம், 'வேய்கவிப்

பணை எழில்' என்னும் பாடமே ஆகும். ஏடுகளிலும் இப் பாடமே மிகுந்து காணப்படுதலின் இப் பாடமே கொள்ளப்பெற்றது.

எறிசுறா - எதிர்ந்தாரைத் தாக்கும் சுறாமீன்; வலைஞரால் எறி உளியால் எறிந்து கொள்ளப்படும் சுறா என்றும் ஆம். வஞ்சினம் என்றது இயற்கைப்புணர்ச்சியின்போது பிரியேன் என்று தலைவன் உரைத்த சூளுரை; கடவன் - கடப்பாட்டையுடையவன்; புணைவன் - புணைபோல் தாங்குதற்கு உரியவன்.

319. முல்லை — தலைவி கூற்று

மான்ஏறு மடப்பிணை தழீஇ மருள்கூர்ந்து
கானம் நண்ணிய புதல்மறைந்து ஒடுங்கவும்
கையுடை நல்மா பிடியொடு பொருந்தி
அமைஅணி மருங்கின் மலையகம் சேரவும்
மாலை வந்தன்று மாரி மாமழை
பொன்ஏர் மேனி நல்நலம் சிதைத்தோர்
இன்னும் வாரார் ஆயின்
என்ஆம் தோழிநம் இன்உயிர் நிலையே.

— தாயங்கண்ணன்

பருவவரவின்கண் வேறுபட்ட கிழத்தி வன்புறை எதிர் அழிந்து சொற்றது.

தோழி! ஆண்மான்கள் இளமையும் அழகும் வாய்ந்த பெண் மான்களைத் தழுவி மயக்கம் மிகுந்து காட்டிடத்தே பொருந்திய புதல்களிடத்தே மறைந்து ஒடுங்கியிருக்கவும், துதிக்கையுடைய நல்ல ஆண்யானைகள் பெண்யானைகளோடு சேர்ந்து மூங்கில்களால் அணி செய்யப் பெற்ற மலைப்பக்கங்களை அடையவும் கார்காலத்துக்குரிய பெருமழை மாலைக் காலத்தில் வந்தது. பொன் போன்ற அழகிய என் மேனியின் அழகைக் கெடுத்த தலைவர் கார்ப்பருவம் தொடங்கிய இந்தக் கார்கால மாலையில் இன்னும் வந்து சேராராய்விடின் நம்முடைய இனிய உயிர்நிலை எத்தன்மையதாகும்?

தலைவன் வராவிடின் என் உயிர்நீங்கும் எனத் தன் துயர நிலையைத் தோழியிடம் தலைவி உரைப்பதாயினள்.

இயற்கையில் மானும் பிணையும் களிறும் பிடியும் கூடிக் களித்திருக்கின்ற காட்சி தலைவனைப் பிரிந்த தலைமகளின் ஆற்றாமையை மிகுவிப்பதாயிற்று என்பதாம்.

மேகம் மலையுச்சியை அணி செய்வது. உச்சியில் யானை பிடியுடன் சென்றது என்பது பொருந்தாது. மூங்கில் அணி

செய்கின்ற பக்கங்களையுடைய மலையிடத்தில் சென்றதென்பதே இயற்றைக்கு ஒத்தது. எனவே அமையணி மருங்கின் என்னும் பாடம் கொள்ளப்பெற்றது.

கையுடை நன்மா - யானை; அமை - மூங்கில்; பொன் நேர்மேனி எனக் கொண்டு பொன்னுக்கு ஒப்பான என்றும் உரைக்கலாம்; நேர் என்பதனை உவம உருபாகக் கொள்ள வேண்டும்.

320. நெய்தல் — தலைவி கூற்று

பெருங்கடற் பரதவர் கொள்மீன் உணங்கலின்
இருங்கழிக் கொண்ட இறவின் வாடலொடு
நிலவுநிற வெண்மணல் புலவப் பலஉடன்
எக்கர்தொறும் பரிக்கும் துறைவனொடு ஒருநாள்
நக்கதோர் பழியும் இலமே போதுஅவிழ்
பொன்இணர் மரீஇய புள்இமிழ் பொங்கர்ப்
புன்னைஅம் சேரி இவ்ஊர்
கொன்அலர் தூற்றும்தன் கொடுமை யானே.

— தும்பிசேர்கீரன்

அலர் அஞ்சி ஆற்றாளாகிய தலைமகள் தலைவன் கேட்பானாகத் தோழிக்குக் கூறியது.

தோழி! பெரிய கடலிடத்தேயிருந்து பரதவர் பிடித்துக் கொண்டுவந்த மீனினது உலர்ந்த வற்றல், கரிய கழியிடத்தி லிருந்து பிடித்துவந்த இறாமீனின் வாடலொடு நிலவின் நிறத்தை ஒத்த வெண்ணிற மணல் புலால் நாற்றம் வீசும்படி பலவும் மணல்மேடு தோறும் தங்கிக் கிடக்கும் கடற்றுறையையுடைய தலைவனோடு ஒரு நாளேனும் சிரித்து மகிழ்ந்து விளையாடிய பழிதானும் இல்லாதோம். அங்ஙனமாகவும் அரும்புகள் மலர்ந்த பொன்போலும் பூங்கொத்துகளைக் கொண்ட வண்டுகள் ஒலி செய்யும் கிளைகளையுடைய புன்னைமரங்கள் பொருந்திய தெருக் களைக் கொண்ட இவ்வூரில் உள்ளார் தம்பாலுள்ள கொடுமைக் குணத்தினாலே வீணாக நம்மேல் பழிச்சொற்களைக் கூறு கின்றனர்.

இவ்வூரினர் கூறும் அலர் பெரிதாயிற்று என்பதனை எடுத்துரைத்தவாறாம். இவ் அலர் நீங்க அவன் வந்து மணத்தல் வேண்டும் என்பது குறிப்பு.

கொள்மீன் - கொண்டுவந்த மீன்; உணங்கல், வாடல் என்பன காய்ந்த வற்றலைக் குறித்தன. உணங்கலின், இன் - சாரியை, 'காப்பின் ஒப்பின் ஊர்தியின் இழையின்' என்றாற்போல

(தொல். சொல். 72). புலவ - புலால் நாற்றம் வீச; புள் - வண்டு; நாரை முதலிய பறவைகளும் ஆம். சேரி - தெரு.

மீன் வலைஞர் பிடித்துக் கொண்டுவந்த மீனின் உணங்கலும் இறவின் வாட்டலும் வெண்மணல் முழுதும் புலால் நாற்றம் வீசுகின்றது என்னும் செய்தி தலைவனுடன், தான் கொண்ட நட்பு ஊர் முழுதும் அலர்மொழி பரவ ஏதுவாயிற்று என்பதனைச் சுட்டும் குறிப்பினை உட்கொண்டுள்ளமையின் இஃது இறைச்சிப் பொருளாம்.

321. குறிஞ்சி — தோழி கூற்று

மலைச்செஞ் சாந்தின் ஆர மார்பினன்
சுனைப்பூங் குவளைச் சுரும்புஆர் கண்ணியன்
நடுநாள் வந்து நம்மனைப் பெயரும்
மடம்ஆர் அரிவைநின் மார்புஅமர் இன்துணை
மன்ற மரையா இரிய ஏறுஅட்டு
செங்கண் இரும்புலி குழுமும் அதனான்
மறைத்தற் காலையோ அன்றே
திறப்பல் வாழிவேண்டு அன்னைநம் கதவே.

தோழி கிழத்திக்கு நொதுமலர் வரையுமிடத்து அறத்தொடு நிற்பேன் என்றது.

அழகும் இளமையும் உடைய பெண்ணே! நின்னுடைய மார்பைப் பொருந்தும் இனிய தலைவன் மலையிலிருந்து பெற்ற செஞ்சந்தனத்தையும் முத்துமாலையையும் அணிந்த மார்பினனாய்ச் சுனையிலே பூத்த குவளைமலரின் வண்டினம் மொய்க்கின்ற தலைமாலையை யுடையனாயும் நம்முடைய இல்லத்திற்கு நடுஇரவே வந்து மீண்டு செல்வான். அந்தப் பொழுதில் நம் ஊரின் மன்றத்தில் உள்ள மரையாவானது அச்சங் கொண்டன வாய்க் கலைந்து ஓட, அதன் ஏற்றினைக் கொன்றதாய்ச் சிவந்த கண்களையுடையதான பெரிய புலியும் முழக்கமிட்டிருக்கும். அதனால் நம் ஒழுக்கத்தை மறைத்தற்குரிய காலமோ இதுவன்று. நம் மனக்கதவைத் திறந்து களவாகிய மந்தணத்தை வெளியிடுவேன். இதனை நீ விரும்புவாயாக.

இதனால் தோழி தான் அறத்தொடு நிற்க முற்படுவதை அறிவித்தாளாயிற்று.

மூன்றாம் வேற்றுமைப் பொருளில் ஆன் உருபு பழைமை யானது. ஆல் பிற்பட்டது. எனவே அதனான் என்னும் பாடம் இங்குக் கொள்ளப்பெற்றது.

சுரும்பு - வண்டு; நடுநாள் - நடு இரவு; மடம் - இளமை, அழகு; குழுமுதல் - ஒலித்தல்; கதவு - மறைக்கப்பட்டிருந்த பொருள்; களவுப் புணர்ச்சி நிகழ்ச்சி.

322. குறிஞ்சி — தலைவி கூற்று

அமர்க்கண் ஆமான் அம்செவிக் குழவி
கானவர் எடுப்ப வெரீஇ இனம்தீர்ந்து
கானம் நண்ணிய சிறுகுடிப் பட்டென
இளையர் ஓம்ப மரீஇஅவண் நயந்து
மலைஉறை வாழ்க்கை வல்லி யாங்கு
மருவின் இனியவும் உளவோ
செல்வாம் தோழி ஒல்வாங்கு நடந்தே.

— ஐயர் முடவன்

தலைமகன் வரவு உணர்ந்து தலைமகள் இயற்பட மொழிந்தது.

தோழி! துடிப்புடைய கண்களைக் கொண்டுள்ள காட்டுப் பசுவின் அழகிய காதுகளையுடைய கன்று, கானவர் காட்டைக் கலைத்து எழுப்புதலாலே அச்சமுற்று, தன் இனத்தைவிட்டுப் பிரிந்து காட்டிடத்தில் உள்ளதாகிய சிறிய ஊரிலே அகப்பட்டதாக இளமகளிர் பாதுகாக்க அவரோடு சேர்ந்து அவ்விடத்தை விரும்பி வீட்டினில் வாழும் வாழ்க்கையிலே வன்மை பெற்றது போலத் தலைவரோடு கலந்து பழகுதலைக் காட்டிலும் இனிய பொருள் களும் நமக்கு வேறு இருக்கின்றனவோ? ஆதலின் நாமும் தலைவரோடு சேரும் பொருட்டாக இயன்ற அளவில் நடந்து அவர் இருப்பிடத்திற்குச் செல்லுவோம்.

தலைவரின் இருப்பிடத்திற்கு யாம் போவோம் என்றபடியாம்.

ஆமானின்குழவி கானவருடைய சிறுகுடியிற் பொருந்தி அவரோடு கலந்து உறைந்து காட்டையும் தன் இனத்தையும் மறந்து வாழ்தலைப் போல தானும் இல்லத்தைவிட்டு நீங்கித் தலைவனோடு சேர்ந்து அவனுடைய ஊரில் அவன் பேண வாழவேண்டும் என்னும் விருப்பத்தை வெளிப்படுத்தினாளாயிற்று.

இளையர் - இளமகளிர்; மனை உறை வாழ்க்கை - வீட்டில் தலைவனோடு உடனுறைந்து செய்யும் இல்லறம்.

323. முல்லை — தலைவன் கூற்று

எல்லாம் எவனோ பதடி வைகல்
பாணர் படுமலை பண்ணிய எழாலின்
வானத்து அஞ்சுவர நல்இசை வீழப்
பெய்த புலத்துப் பூத்த முல்லைப்
பசுமுகைத் தாது நாறும் நறுநுதல்
அரிவை தோள் - அணைத் துஞ்சிக்
கழிந்த நாள்இவண் வாழும் நாளே.

— பதடி வைகலார்

வினை முற்றினான் பாகற்கு உரைத்தது.

பாணர் படுமலைப் பண்ணை இசைத்த யாழின் நல்லிசை போன்று வானத்தின்கண் அச்சம் தோன்ற நல்ல இடியோசை எங்கும் பரக்க மழை பெய்த கொல்லையிலே மலர்ந்த முல்லையினது பசிய அரும்பிடத்துள்ள தாதின் மணம் போல வீசுகின்ற நல்ல நெற்றியையுடைய தலைவியின் தோள்களாகிய படுக்கையின் மேலே துயின்று இவ்வுலகத்தில் வாழும் நாள்களே வாழும் நாள்களாகும். ஏனைய எல்லாம் என்ன பயனை உடையன? உள்ளீடு இல்லாத கருக்காயைப் போன்றன.

விரைந்து தலைவியினிடம் சென்று சேரவேண்டும் என்று பாகனுக்குச் சொல்லியவாறாம்.

படுமலை - படுமலைப் பாலை என்னும் பண்; எழாஅல் - யாழ் பசுமுகை - செவ்வியரும்பு.

324. நெய்தல் — தோழி கூற்று

கொடுந்தாள் முதலைக் கோள்வல் ஏற்றை
வழிவழக்கு அறுக்கும் கானல்அம் பெருந்துறை
இனமீன் இருங்கழி நீந்தி நீநின்
நயன்உடை மையின் வருதி இவள்தன்
மடன்உடை மையின் உவக்கும் யான்அது
கவைமக நஞ்சுஉண் டாங்கு
அஞ்சுவல் பெருமஎன் நெஞ்சத் தானே.

— கவைமகன்

செறிப்பு அறிவுறுக்கப்பட்டு, 'இரா வாரா வரைவல்' என்றார்க்குத் தோழி அது மறுத்து வரைவு கடாயது.

பெருமானே! நீ உன்னுடைய அன்புடைமையினாலே வளைந்த கால்களையுடைய கொல்லுதல் வல்ல ஆண் முதலை நீர் வழியிடத்துப் பிறர் செல்வதைத் தடுக்கும்படியான கானற் பெருந்துறையினிடத்தே திரளான மீன்களையுடைய கழியினை நீந்திக் கடந்து நீயும் வருகின்றாய். இத் தலைவியோ உனக்கு நேரும் ஏதம் அறியாமல் வருகைக்கு மகிழ்கின்றாள். யான் என் நெஞ்சத்தால் இரட்டைப் பிள்ளைகள் நஞ்சை உண்டால் இருவர் திறத்தும் ஒரு தாய் வருந்தினாற்போல நீ வருதல் குறித்து அஞ்சுவேன்.

தலைவன் அன்பு காரணமாக இரவில் ஏதம் தரும் வழியினைக் கடந்து வருதலின், அதனைக் குறித்தும் அஞ்சுகின்றேன். நீ வாராதொழியின் இவள் துன்பம் கருதியும் அஞ்சுகின்றேன் எனத் தான் இருவர் நிலை குறித்து நஞ்சுண்ட இரட்டைப் பிள்ளைகளுக்கு இரங்கும் ஒரு தாயின் நிலையில் உள்ளதாகத் தோழி உரைக்கின்றமை கருதத்தகும்.

கொடுந்தாள் - வளைந்த கால்; நீந்தி - நீந்திக் கடந்து; நயன் - அன்பு; கவைமக - இரட்டைக் குழந்தை; மடன் - அறியாமை.

325. நெய்தல் — தலைவி கூற்று

சேறும் சேறும் என்றலின் பண்டைத்தம்
மாயச் செலவாச் செத்து மருங்கற்று
மன்னிக் கழிகஎன் றேனே அன்னோ
ஆசுஆகு எந்தை யாண்டுஉளன் கொல்லோ
கருங்கால் வெண்குருகு மேயும்
பெருங்குளம் ஆயிற்றுஎன் இடை முலை நிறைந்தே.

— நன்னாகையார்

பிரிவிடை, 'ஆற்றாள்' எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி மெலிந்து உரைத்தது.

தோழி! செல்வேம் செல்வேம் என்று தலைவர் பல காலம் சொல்லிக் கொண்டிருந்தமையினாலே முன்பு அவர் கூறிவருகிறபடி அதனை அவர் பொய்ச் செலவாக எண்ணி, 'என் பக்கத்திலிருந்தும் நீங்கி நிலையாய்ப் போய்விடுக' என்றேன். ஐயோ! இப்பொழுது நமக்குப் பற்றுக்கோடாக உள்ள தலைவர் எவ்விடத்தில் இருக்கின்றாரோ? என் முலைகளின் இடைப்பட்ட மார்பகம் அவன் பிரிவால். அழுத கண்ணீரால் நிறைந்து கரிய

காலையுடைய வெள்ளிய நாரைகள் இரைதேடிப் பொருந்தும் பெரிய குளம்போல நீர் நிறைந்ததாயிற்று.

தலைவியின் கூற்றான இப் பாடலில் தலைவனைக் குறிக்கும் சொற்கள் பன்மையும் ஒருமையுமாய் மயங்கி வந்துள்ளன. இந்த நிலை கருத்துக்கும் பேச்சுக்கும் உள்ள உணர்வு நிலையை வெளிப் படுத்துவதாகத் தோன்றுகிறது.

தலைவனுடைய பிரிவை ஆற்றியிரா நிலையினன் ஆயினேன் என்பதாம்.

மாயம் - பொய்; கழிக - செல்க, நீங்குக. எந்தை என்றது உறவின் மிகுதியைச் சுட்டியது. ஆசு - பற்றுக்கோடு; இடைமுலை என்பதனை முலை இடை என மாறிக் கூட்டுக. கொல் - இரக்கத்தை உணர்த்தும் உரிச்சொல்.

326. நெய்தல் — தலைவி கூற்று

துணைத்த தோகைப் பணைப்பெருந் தோளினர்
கடல்ஆடு மகளிர் கானல் இழைத்த
சிறுமனைப் புணர்ந்த நட்பே தோழி
ஒருநாள் துறைவன் துறப்பின்
பல்நாள் வரூஉம் இன்னா மைத்தே.

சிறைப்புறம்.

தோழி! சேர்த்துக் கட்டிய கூந்தலையும் மூங்கில் போன்ற பெருந்தோளினையும் உடையராய்க் கடலில் நீர்விளையாடலைச் செய்யும் பெண்கள் கடற்கரைச் சோலையிலே செய்த சிற்றிலில் விளையாடிய காலத்திலே பொருந்திய நட்பு அத் துறைவன் ஒரு நாள் பிரிவானானால் பல நாளிலும் வரும் துன்பத்தை யுடையதாகுக.

தலைவனுடைய சிறு பிரிவையும் தாங்கேன் என்பதனால் அவன் வரைந்து கொண்டு பிரியாது கூடி வாழவேண்டும் என்பதைக் குறிப்பித்தவாறாயிற்று.

மகளிர் உறுப்புகளைப் பற்றிய வருணனையே இப் பாடலின் தொடக்கத்தில் காணப்பெறுகிறது. அதற்கு ஏற்புடையது கூந்தலைக் குறிக்கும் தோகை என்னும் பாடமே ஆகும். இப் பாடமே ஏடுகளில் காணப் பெறுகிறது. எனவே இப் பாடம் கொள்ளப்பெற்றது.

துணைத்தல் - பிணைத்தல்; பணை - மூங்கில்; சிற்றில் - சிறுவீடு.

ஒருநாள் பிரியினும் பல நாள் பிரிந்தாற் போன்ற துன்பம் தருதலின் அவன் என்றும் பிரியாது உடனுறையும் இல்வாழ்வு அமைய அவன் வரைந்து கோடலே தக்கது எனச் சுட்டி உரைத்தாளாயிற்று.

327. குறிஞ்சி — தலைவி கூற்று

நல்கின் வாழும் நல்கூர்ந் தோர்வயின்
நயன்இலர் ஆகுதல் நன்றுஎன உணர்ந்த
குன்ற நாடன் தன்னினும் நன்றும்
நின்நிலை கொடிதால் தீம்கலுழ் உந்தி
நம்மனை மடமகள் இன்ன மென்மைச்
சாயலள் அளியள் என்னாய்
வாழைதந் தனையால் சிலம்புபுல் லெனவே.

— அம்மூவன்

கிழவன் கேட்கும் அண்மையனாக, அவன் மலையினின்றும் வரும் யாற்றோடு உரைப்பாளாய்க் கிழத்தி உரைத்தது.

காட்சிக்கினிய கலங்கல் நீர்ப்பெருக்கையுடைய ஆறே! நம் இல்லத்திடத்திலுள்ள இளமை அழகு படைத்த தலைவி இத் தகைத்தான மென்மையான சாயலைக் கொண்டவள். ஆகவே அவள் அளி செய்தற்குரியவள் என்று கருதாமல் நீ தோன்றிய மலையிடம் பொலிவு இழந்து போம்படி அங்கே வளர்ந்துள்ள வாழை மரங்களைப் பெயர்த்துக் கொண்டு வந்துள்ளாய். ஆதலின் தான் தண்ணளி செய்தலினால் வாழுகின்ற வறியோரிடம் அன்பு இல்லாதாராதல் நல்லது என்று உணர்ந்த குன்ற நாடானாகிய தலைவனது நிலையைக்காட்டிலும் நினது இயல்பு மிகவும் கொடியது.

தலைவன் கொடியனாயுள்ளான். அவன் மலைப் பிறந்த ஆறே நீ அதனினும் கொடியையாயுள்ளாய் எனத் தலைவனின் கொடுமையைச் சுட்டிக் கூறியவாறு. இதனால் தலைவன் தெளிவுபெற்றுத் தலைவியை வரைந்து கொள்ள முற்படுவான் என்பது குறிப்பு.

நல்கூர்ந்தோர் - வறியர்; நயன் - அன்பு; தீம்கலுழ் உந்தி - காட்சிக்கினிய கலங்கல் நீருடன் கூடிய ஆறு; சிலம்பு - மலை; புல்லென்றல் - பொலிவழிதல்.

328. நெய்தல் — தோழி கூற்று

சிறுவீ ஞாழல் வேர்அளைப் பள்ளி
அலவன் சிறுமனை சிதையப் புணரி
குணில்வாய் முரசின் இரங்கும் துறைவன்
நல்கிய நாள்தவச் சிலவே அலரே
வில்கெழு தானை விச்சியர் பெருமகன்
வேந்தரொடு பொருத ஞான்றைப் பாணர்
புலிநோக்கு உறழ்நிலை கண்ட
கலிகெழு குறும்பூர் ஆர்ப்பினும் பெரிதே.

— பரணர்

வரைவிடை வேறுபடும் கிழத்தியை, 'அவர் வரையும் நாள் அணித்து' எனவும், 'அலர் அஞ்சல்' எனவும் கூறியது.

சிறிய பூக்களைக் கொண்ட ஞாழல் மரத்தின் வேரிடத்தில் அமைக்கப்பட்ட இருப்பிடமாகிய வளை சிதையும்படி குறுந்தடியால் அடிக்கப்பெற்ற முரசின் முழக்கம்போலக் கடல் அலைகள் ஒலி செய்து வந்து முழங்கும் கடற்துறையையுடையவன் தலைவன். அவன் தண்ணளி செய்த நாள்கள் சிலவேயாகும். அதனால் எழுந்த பழிச்சொல்லோ வில் தாங்கிய வீரர் படையினையுடைய விச்சியர்களுக்குத் தலைவன் ஏனைய அரசர்களோடு போர் செய்தபொழுது அதனைப் பார்த்த பாணரின் புலியினது பார்வையை ஒத்த பார்வையைக் கண்ட குறும்பூரிலுள்ளார் செய்த ஆரவாரத்திலும் மிகப் பெரிதாகும்.

ஊரவர் அலர் மிகுந்தது எனவே உரிய தலைவனை அறிந்து வரைவினை ஏற்பர் எனத் தேறுதல் கூறியவாறாம்.

ஞாழல் - சுரபுன்னை; அலவன் - நண்டு; குணில் - முரசை அடிக்கும் குறுந்தடி; தவச்சில - மிகச்சில; விச்சியர் பெருமகன் புறநானூற்றிலும் பதிற்றுப்பத்திலும் குறிக்கப்பெறும் விச்சிக்கோ ஆதல்வேண்டும். புலிநோக்கு - அரிமா நோக்கு எனவும் படும்; இருபக்கமும் நாட்டம் செலுத்துகை.

329. பாலை — தலைவி கூற்று

கான இருப்பை வேனில் வெண்பூ
வளிபொரு நெடுஞ்சினை உஞற்றலின் ஆர்கழல்பு
களிறுவழங்கு சிறுநெறி புதையத் தாஅம்
பிறங்குமலை அருஞ்சுரம் இறந்தவர்ப் படர்ந்து
பயில்இருள் நடுநாள் துயில்அரிது ஆகித்
தெள்நீர் நிகர்மலர் புரையும்
நல்மலர் மழைக்கணிற்கு எளியவால் பனியே.

— ஓதலாந்தையார்

பிரிவிடை மெலிந்த கிழத்தி வற்புறுத்தும் தோழிக்கு 'யான் ஆற்றுவல்' என்பதுபடச் சொல்லியது.

தோழி! காட்டிலே வளர்ந்த இருப்பை மரத்தின் வேனிற் காலத்திலே பூக்கும் வெள்ளிய மலர்கள் நெடிய கிளைகள் காற்று மோதி அசைத்தலினால் காம்பிலிருந்து விலகிக் களிறுகள் திரியும் சிறிய வழித்தடம் மறையும் வண்ணம் பரக்கின்ற விளங்கிய மலைகளையுடைய அரிய பாலை நிலத்தைக் கடந்து சென்றவரை நினைந்து இருள் நிறைந்த நடுயாமத்தில் தூங்குதல் இல்லையாய்த் தெளிந்த நீரிடத்து மலிந்த ஒலியையுடைய மலரை ஒக்கும் நல்ல மலர்ந்த குளிர்ச்சியையுடைய கண்ணிற்கு நீர்த்துளிகள் எளிதில் அரும்பின.

யான் ஆற்றியிருக்கவும் கண்கள் துயிலாது கண்ணீர்த்துளி களைச் சிந்தின எனத் தன்னுடைய தாங்கற்கு அரிய துயரைத் தலைவி வெளிப்படுத்தவாறாயிற்று.

கானம் - பாலை நிலம்; இருப்பை - இப்பொழுது இலுப்பை எனவும் வழங்கும். ஆர் - காம்பு. வேனில் - வேனல் எனவும் பாட வேறுபாடு உண்டு 'கான இருப்பை' எனத் தொடங்கும் எதுகைக்கு ஏற்ப 'வேனல்' என உருமாற்றம் கொள்ளப் பெற்றது போலும். இத்தகு மாற்றம் சிலப்பதிகாரம், திருவாசகம் முதலிய வற்றிலும் காணலாகும். எனினும் 'வேனல்' என்னும் உருவம் சங்கப் பாடல்களில் வேறு எங்கும் காணப் பெறாமையினால் 'வேனில்' என்னும் பாடமே கொள்ளப்பெற்றது. அரிதாதல் - இன்மையாதல்; நிகர் - ஒளி; மழை - குளிர்ச்சி.

330. மருதம் — தலைவி கூற்று

நலத்தகைப் புலைத்தி பசைதோய்த்து எடுத்துத்
தலைப்புடைப் போக்கித் தண்கயத்து இட்ட
நீரின் பிரியாப் பருஉத்திரி கடுக்கும்
பேர்இலைப் பகன்றைப் பொதியவிழ் வான்பூ
இன்கடுங் கள்ளின் மணம்இல கமழும்
புன்கண் மாலையும் புலம்பும்
இன்றுகொல் தோழிஅவர் சென்ற நாட்டே.

— கழார்க்கீரன் எயிற்றியன்

பிரிவிடை வேறுபட்ட கிழத்தி தோழிக்குச் சொல்லியது.

தோழி! உலகிற்கு நன்மை செய்கின்ற தகைமை கொண்டவ ளாகிய வண்ணாத்தி கஞ்சிப் பசையிலே தோய்த்து எடுத்துக் கல்லில் முதலில் அடித்துத் தப்புதலைச் செய்து குளிர்ந்த நீர்

நிலையிலே போட்ட நீரில் பிரியாத பருத்த ஆடை முறுக்கை ஒக்கும் பெரிய இலையையுடைய பகன்றைக் கொடியின் முறுக்கவிழ்ந்த வெள்ளிய மலர் இனிய கடுமையான கள்ளைப் போல நறுமணமற்றனவாய்க் கமழ்ந்து கொண்டிருக்கும் துன்பத்தைத் தரும் மாலைக் காலமும் தனிமை நிலையும் அத் தலைவர் பிரிந்து சென்ற நாட்டில் இல்லை போலும்.

மாலைக் காலமும் தனிமையும் என்னை வாட்டி வருத்துகின்றன; இது போன்ற நிலைமை அவர் சென்ற நாட்டில் அவரும் காண்பாராயின் வரமாட்டாரரோ என்பதாம்.

புலைத்தி - வண்ணாத்தி; பகன்றை - இதற்குச் சிவதை என்றும் சிலந்தி என்றும் பெயருண்டு; பொதி - இதழ் சேர்ந்துள்ள கட்டு. பருஉத்திரி - முறுக்குண்ட வெள்ளாடை; வான்மை - வெண்மை; புன்கண் - துன்பம்.

331. பாலை — தோழி கூற்று

நெடுங்கழை திரங்கிய நீர்இல் ஆர்இடை
ஆறுசெல் வம்பலர் தொலைய மாறுநின்று
கொடுஞ்சிலை மறவர் கடறுகூட் டுண்ணும்
கடுங்கண் யானைக் கானம் நீந்தி
இறப்பர்கொல் வாழி தோழி நறுவடிப்
பைங்கால் மாஅத்து அம்தளிர் அன்ன
நல்மா மேனி பசப்ப
நம்மினும் சிறந்த அரும்பொருள் தரற்கே.

— வடாப்பிரமந்தன்

செலவுக் குறிப்பு அறிந்து வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.

தோழி! மணமுள்ள வடுவையும் இளமையான அடிமரத்தையுமுடைய மாமரத்தினது அழகிய தளிரைப் போன்ற நல்ல மேனியின் மாமைநிறம் பசலை அடையும்படி நம்மைக் காட்டிலும் சிறந்ததாகத் தலைவர் கருதுகிற அரிய பொருளைத் தேடி வருவதற்காக நீண்ட மூங்கில் வற்றி உலர்ந்த நீர் இல்லாத அரிய பாலை நிலத்திலுள்ள வழியிற் போகும் புதியராய பயணிகள் அழியும்படி அவருக்கு எதிராக நின்று வளைந்த வில்லையுடைய மலைச்சாதியார் காட்டிடத்திலே கொள்ளையிட்டுத் தாம் உண்டு வாழும் தறுகண்மையையுடைய யானைகள் நிறைந்த காட்டைக் கடந்து செல்வாரோ?

அவர் நம்மைப் பிரிந்து செல்வது உறுதியன்று என்று குறிப்பித்தவாறாம்.

இறப்பர்கொல் என்பதிலுள்ள ஐயம் இறவார் என்பதனையே உணர்த்தி நின்றது. சுடலை - காடு; கூட்டுண்ணுதல் - கூடியுண்ணுதல்; கடுங்கண் - தறுகண்மை; திரங்குதல் - வற்றிச் சுருங்கி வாடுதல்; பசுமை - இளமை.

332. குறிஞ்சி — தோழி கூற்று

வந்த வாடைச் சில்பெயற் கடைநாள்
நோய்நீந்து அரும்படர் தீரநீ நயந்து
கூறின் எவனோ தோழி நாறுஉயிர்
மடப்பிடி தழீஇத் தடக்கை யானைக்
குன்றச் சிறுகுடி இழிதரும்
மன்றம் நண்ணிய மலைகிழ வோற்கே.

— மதுரை மருதங்கிழார் மகன் இளம்போத்தன்

வரையாது வந்தொழுகா நின்ற காலத்துக் கிழவன் கேட்பக் கிழத்திக்குத் தோழி கூறியது.

தோழி! வெளிப்படும் பெருமூச்சைக் கொண்ட இளைய பெண் யானையைத் தழுவிக் கொண்டதாய் வளைந்த கையை யுடைய ஆண்யானை குன்றிடத்துள்ள சிற்றூரில் இறங்கிச் செல்லும் மன்றங்கள் பொருந்திய மலைநாடுடைய தலைவனுக்கு வாடையொடு வந்த சிலவாகிய மழையையுடைய நாளின் கடையாமத்தும் வருத்தத்திலே துளைந்துகொண்டிருக்கும் பொறுத்தற்கு அரிய நின்னுடைய துன்பம் நீங்கும் வண்ணம் நீ விரும்பிக் கூறத் தகுந்தவற்றை எடுத்துக் கூறினால் என்னவாகும்.

நீயே எடுத்துக் கூறினால் அத் துன்பம் நீங்க வழி பிறக்கும் என்பதாம்.

நாறு உயிர் - தோன்றி வெளிப்படும் மூச்சுக்காற்று; கடைநாள் - நாளின் கடையாமம்; இழிதரும் - இறங்கிச்செல்லும்; மன்றம் - ஊர்ப்பொதுவிடம். 'மன்றம்' என்பதற்கு ஒத்த எதுகை நயமுடைய 'குன்ற' என்னும் பாடம் தேர்ந்தெடுக்கப்பெற்றது.

333. குறிஞ்சி — தோழி கூற்று

குறும்படைப் பகழிக் கொடுவிற் கானவன்
புனம்உண்டு கடிந்த பைங்கண் யானை
நறுந்தழை மகளிர் ஓப்பும் கிள்ளையொடு

குறும்பொறைக்கு அணவும் குன்ற நாடன்
பணிக்குறை வருத்தம் வீடத்
துணியின் எவனோ தோழிநம் மறையே.

— உழுந்தினைம்புலவன்

'அறத்தொடு நிற்பல்' எனக் கிழத்திக்குத் தோழி உரைத்தது.

தோழி! குறிய ஆயுதமாகிய அம்பையும் வளைந்த வில்லையும் உடைய வேட்டுவனது தினைப்புனத்தை உண்டதால் அங்கிருந்தும் விரட்டப்பெற்ற பசிய கண்ணையுடைய யானை, நறிய தழையுடை அணிந்த பெண்கள் ஓட்டுகின்ற கிளிகளுடனே குறுகிய பொற்றை களிடத்தே செல்லுவதற்கு மேல்நோக்கும் மலை நாட்டினனாகிய தலைவனுடைய வினை நிறைவேறாமையால் உண்டாகிய வருத்தம் நீங்கும் வண்ணம் நம்முடைய மறைவான உறவைத் தாய்க்குத் தெரிவித்தால் என்ன குற்றம் உண்டாகும்.

யான் அறத்தொடு நிற்பேன் எனத் தோழி தெரிவித்த வாறாம்.

தினைப்புனம் கவரவந்த யானையைக் கானவனும் கிளிகளை மகளிரும் ஓட்டினாராயிற்று. பணிக்குறை - தலைவனுடைய வரைவு முயற்சி நிறைவேறாமல் நிற்பது. மறை - மந்தணம், களவு நிகழ்ச்சி; அணவுதல் - மேல்நோக்குதல்.

தினைப்புனக் காவலால் யானையும் கிளியும் கடியப்பட்டது போலத் தலைவனை நெருங்கவிடாமலும் தலைவியை இற்செறித் துப் பிரித்தும் வைத்தமையால் அவர்கள் சேர இயலாத நிலை யாயினர் என்பது குறிப்பித்தவாறு. யானை மேலும் கிளி மேலும் வைத்து உரைத்த குறிப்பு இறைச்சிப் பொருளாம்.

334. நெய்தல் — தலைவி கூற்று

சிறுவெண் காக்கைச் செவ்வாய்ப் பெருந்தோடு
எறிதிரைத் திவலை ஈர்ம்புறம் நனைப்பப்
பனிபுலந்து உறையும் பல்பூங் கானல்
இருநீர்ச் சேர்ப்பன் நீப்பின் ஒருநம்
இன்உயிர் அல்லது பிறிதுஒன்று
எவனோ தோழி நாம்இழப் பதுவே.

— இளம்பூதனார்

'வரைவிடை ஆற்றகிற்றியோ?' என்ற தோழிக்குக் கிழத்தி சொல்லியது.

தோழி! சிறிதளவு வெண்மையான காக்கையினது செவ்விதான வாயையுடைய பெருந்தொகுதி வீசுகின்ற அலை

களின் திவலைகள் தம் ஈரமான சிறகுப்புறத்தை நனைக்க அந்தக் குளிரினை வெறுத்துத் தாம் தங்குதற்குரிய இடமாகிய பலபூக்களையுடைய சோலைகளைச் சென்றடையும் மிகுந்த நீர்ப்பரப்புடைய தடற்கரைத் தலைவன் பிரிந்தால் நாம் இழப்பது ஒப்பற்ற நமது இனிய உயிரையல்லது வேறு ஒன்று யாது?

தலைவனுடைய பிரிவைத் தாங்கி நான் உயிர் தரித்திரேன் என்றவாறு.

சிறுவெண்மை - காக்கையின் கழுத்து வெண்மையாம். செவ்வாய் - காக்கையின் உள்வாய் சிவந்து தோன்றுதலைச் சுட்டியது. தோடு - தொகுதி, கூட்டம்; புலத்தல் - வெறுத்தல்; இருநீர் - கடல். 'ஒருநம்' என்பதுடன் 'இருநீர்' என்பது ஒருஉ எதுகைநயம் கொண்டமைதலின் தேர்ந்து கொள்ளப்பெற்றது.

குளிருக்கு ஆற்றாது வந்த காக்கையும் சென்று பாதுகாப் பாகத் தங்குதற்குரிய கடற்கரைச் சோலையுடைய தலைவ னாதலின் நாம் துயருற்று நலியுமாறு கைவிட்டுப் போகான் என் பது இதன் உட்பொதி இறைச்சிப் பொருளாம்.

இப் பாட்டை, சேணிடையின்றி இட்டிதாகப் பிரிந்துழித் தலைவி இரங்கித் தன்வயின் உரிமையும் அவன்வயிற் பரத்தை மையும் படக் கூறியது என்பர் நச்சினார்க்கினியர் (தொல். களவு. 20).

335. குறிஞ்சி — தோழி கூற்று

நிரைவளை முன்கை நேர்இழை மகளிர்
இருங்கல் வியல்அறைச் செந்தினை பரப்பிச்
சுனைபாய் சோர்வுஇடை நோக்கிச் சினைஇழிந்து
பைங்கண் மந்தி பார்ப்பொடு கவரும்
வெற்பன் நண்ணி யதுவே வார்கோல்
வல்வில் கானவர் தங்கைப்
பெருந்தோட் கொடிச்சி இருந்த ஊரே.

— இருந்தையூர்க் கொற்றன் புலவன்

இரவுக்குறி நயவாமைத் தோழி செறிப்பு அறிவுறீஇயது.

வரிசையான வளையல்கள் அணிந்த முன்கையையும் நேரிதான அணிகலன்களையும் பூண்ட மகளிர் கரிய மலையி லுள்ள பரந்த பாறையினிடத்தில் சிவந்த தினையைக் காயும் பொருட்டாகப் பரப்பிவிட்டுச் சுனையிடத்து நீராடுதற்குப் பாய்கின்ற காவல் சோர்வுபட்ட இடைப்பட்ட நேரத்தைப்

பார்த்து மரக்கிளையிலிருந்து இறங்கிப் பசிய கண்ணையுடைய் பெண் குரங்குகள் தம் குட்டிகளோடு அத் தினையைக் கைப்பற்றி உண்ணும் மலைநாடனே! நீண்ட அம்பையும் இலக்குகளைத் தவறாது சென்று தாக்கும் வலிய வில்லையும் உடைய வேட்டுவருடைய தங்கையாகிய பெரிய தோளையுடைய் குறிஞ்சி நில மகளாகிய தலைவி இருந்த ஊர் களவிற்குப் பொருந்தியதோ?

தலைவி இருக்கின்ற ஊர் இரவுக்குறியில் கண்டு அளவளாவுதற்கு அருமையானது என அது கைகூடாமை அறிவுறுத்தியவாறு. இதனால் தலைவியை வரைந்து கொள்ளுதலே தக்க செயல் என்பதனை எடுத்துரைத்தாளாயிற்று.

தலைவனுக்கு இரவுக்குறி நயவாமை சுட்டிக் கூறுதலின் அவனே விளித்துக் கூறுதல் பொருத்தமாகும். எனவே வெற்பன் என்பதை விளியாகக் கொண்டு, கொடிச்சி இருந்த ஊர் நண்ணியதுவே என்று முடிப்பது பொருத்தமாகும். எனவே வெற்பன் என்னும் பாடம் கொள்ளப்பெற்றது.

வியல் அறை - அகன்ற பாறை; வெற்பன் - அண்மை விளி; நேர்தல் - பொருத்தமாக அமைதல்.

தினைக்காவல் புரிந்த மகளிர் காவல் சோர்ந்த இடத்து மந்தி பார்ப்பொடு தினை கவர்ந்து சென்றது போலத் தலைவியின் இல்லத்துக் காவல் சோர்ந்த இடத்து அவளை உடன்கொண்டு சென்று மணத்தல் நன்று என்னும் உட்கோள் பொதிந்துள்ளமையின் இஃது இறைச்சிப்பொருளாம்.

336. குறிஞ்சி — தோழி கூற்று

செறுவர்க்கு உறுநகை ஆகத் தெறுவர
ஈங்குஇனம் வருபவோ தேம்பாய் துறைவ
சிறுநா ஒண்மணி விளரி ஆர்ப்பக்
கடுமா நெடுந்தேர் நேமி போகிய
இருங்கழி நெய்தல் போல
வருந்தினள் அளியள்நீ பிரிந்திசி னோளே.

— குன்றியன்

தலைமகன் இரவுக்குறி நயந்தானைத் தோழி சொல்லி மறுத்தது

தேன் பரவுகின்ற நீர்த்துறையையுடைய தலைவ! பகைவர்க்குப் பெருமகிழ்ச்சி ஆமாறு எமக்குத் துன்பம் வரும்வகையில் இங்கே இன்னும் எவரேனும் வருவார்களோ. நீ பிரிந்ததனால் தனித்திருக்கும் தலைவி சிறிய நாவையுடைய ஒள்ளிய மணிகள்

விளரிப் பண்ணைப்போல முழக்கஞ்செய்ய விரைந்துசெல் குதிரை பூண்ட நெடிய தேரினது சக்கரம் மேலேறிச் சென்ற கரிய கழியிடத்து மலர்ந்த நெய்தல் மலரினைப் போல நைந்து வருத்தத்தை அடைந்தாள். அவள் மிகவும் இரங்கத்தக்காள்.

இரவுக்குறி வரின் அதன் ஏதம் கருதியும் அவள் மிக வருந்துவாள். ஆதலின் இரவில் வருதல் நன்றன்று என்று தோழி மறுத்து உரைப்பதாயினள்.

செறுவர்க்கு என்பதோடு எதுகை நயம் உடைய பாடம் உறுநகை என்பது. இப்படி என்பதைவிட இங்கே இன்னும் என்னும் பொருள் தருகின்ற ஈங்குஇனம் என்னும் பாடம் சிறப்புடைத்தாகும். ஏடுகளில் இப் பாடமே மிகுந்துள்ளது. எனவே இப் பாடங்கள் கொள்ளப்பெற்றன.

செறுவர் - பகைவர்; தாயரும் தமரும். விளரி - நெய்தல் நிலத்திற்குரிய தாகிய இரங்கற்பண்; தெறுவர - துன்பம் உண்டாக; தேம் - தேன்; பாய்தல் - பரத்தல்; மணி - தேரில் கட்டிய சிறுமணிகள். நேமி - சக்கரம்.

இப் பாட்டை, தலைவன் இரவுக்குறி நயந்தானைத் தோழி மறுத்தது என்பர் நச்சினார்க்கினியர் (தொல். களவு. 23).

337. குறிஞ்சி — தலைவன் கூற்று

முலையே முகிழ்முகிழ்த் தனவே தலையே
கிளைஇய குரலே கிழக்குவீழ்ந் தனவே
செறிநிரை வெண்பலும் பறிமுறை நிரம்பின
சுணங்கும் சிலதோன் றினவே அணங்குதற்கு
யான்தன் அறிவலே தான்அறி யலளே
யாங்கு ஆகுவள்கொல் தானே
பெருமுது செல்வர் ஒருமட மகளே.

— பொதுக்கயத்துக் கீரந்தை

தோழியை இரந்து பின்னின்ற கிழவன் தனது குறை அறியக் கூறியது.

தலைவியின் முலைகள் அரும்புகளைப் போலத் தோன்றின. அவளுடைய தலையில் கிளைத்து வளர்ந்த மயிர்க்கொத்துகள் கீழே தாழ்ந்துள்ளன. செறிந்த வரிசையாக அமைந்த வெள்ளிய பற்களும் விழுந்து முற்றும் முறையாக முளைத்து நிரம்பியுள்ளன. அவள் மேனியில் தேமலும் சிற்சில வெளிப்பட்டன. என்னை வருத்துமளவிற்கு அவள் உள்ளமையை யான் அறிவேன்; அவள்

அதனை அறிந்தாளில்லை. பெரிதான முதிய செல்வத்தை யுடைய்வரின் ஒப்பற்ற இளமகளாகிய அவள் எத்தன்மையை யுடையள் ஆவளோ?

தலைவி பருவமடந்தையாய் என்னை வருத்தினாள் என்பது குறிப்பித்தபடியாம்.

முகிழ் - அரும்பு; குரல் - மயிர்க்கொத்து; கிழக்கு - கீழ்; பறிமுறை - விழுந்து முளைத்த முறை. பெருமுது செல்வர் - மரபு வழிப் பழமையாகவரும் செல்வம் பெற்றவர். மடமகள் - இளைய மகள்.

இப் பாட்டை, இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன் வரைதல் வேண்டிக் கூறியது என்பர் இளம்பூரணர் (தொல். களவு 11). நச்சினார்க்கினியர், புணர்தல் நிமித்தம் வந்தது என்பர் (தொல். அகத் 14).

பேராசிரியர் மெய்ப்பாட்டியல் உரையில் இருவேறு கருத்து களுக்கு இப் பாடலை மேற்கோள் காட்டுவர். பின்னின்ற தலை மகன் கூறியதனால் தன்கண் தோன்றிய வருத்தம் பற்றிய இளிவரல் என்னும் மெய்ப்பாடு வந்தது (தொல். மெய்ப். 6). தலைமகள் கட்டுரையாதிருத்தலின் தலைமகன் தமரின் எய்தல் வேண்டினமையின் கட்டுரையின்மையின் வரைவு கடாவுத லாயிற்று (தொல். மெய்ப். 23).

338. பாலை — தோழி கூற்று

திரிமருப்பு இரலை அண்ணல் நல்ஏறு
அரிமடப் பிணையொடு அல்குநிழல் அசைஇ
வீததை வியல்அரில் துஞ்சிப் பொழுதுசெல
செழும்பயறு கறிக்கும் புன்கண் மாலைப்
பின்பனிக் கடைநாள் தண்பனி அச்சிரம்
வந்தன்று பெருவிறல் தேரே பணைத்தோள்
விளங்குநகர் அடங்கிய கற்பின்
நலம்கேழ் அரிவை புலம்பு அசாவிடவே.

— பெருங்குன்றூர் கிழார்

பிரிவிடைத் தோழி வற்புறுத்தியது.

மூங்கிலைப் போன்ற தோள்களையும் விளங்கிய இல்லத் தினிடத்தே அடங்கிய கற்பினையும் உடைய அழகு பொருந்திய அரிவையே! தனிமையால் வருந்தும் நின் துன்பம் நீங்கும்வகை பெருவெற்றிகொண்ட தலைவனுடைய தேர்—முறுக்குண்ட

கொம்பினையுடைய இரலையாகிய தலைமையையுடைய நல்ல ஆண்மான் மென்மையும் இளமையும் கொண்ட தன் பெண் மானோடு தாம் தங்குதற்குரிய நிழலிடத்திலே தங்கி மலர்கள் நெருங்கிய அகன்ற பிணக்கத்தையுடைய் தூற்றினிடத்தே கிடந்து பகற்பொழுது போயினதாகச் செழுமையான பயற்றம் பயிரைக் கடித்துத் தின்னும் துன்பத்தைத் தரும் மாலைக்காலத்தினையும் பின்பனிப் பருவத்தின் இறுதியையும் குளிர்ந்த பனியையும் உடைய அச்சிரக் காலத்தில் — அதோ வந்தது.

தலைவன் விரைந்து மீண்டுவருவான் என்று சுட்டியவாறாம்.

அரி - மென்மை; அல்குநிழல் - தங்குதற்கு ஏற்ற நிழல்; வீ - மலர்; அரில் - பிணக்கு; தூறு. துஞ்சுதல் - தங்குதல்; கடைநாள் - இறுதி, முடிவு. பெருவிறல் - மிகுந்த வெற்றியையுடைய தலைவன். அடங்கிய கற்பு - அறக்கற்பு. புலம்பு - தனிமை; அசா - வருத்தம்.

339. குறிஞ்சி — தோழி கூற்று

நறைஅகில் வயங்கிய நளிபுன நறும்புகை
உறைஅறு மையின் போகிச் சாரல்
குறவர் பாக்கத்து இழிதரும் நாடன்
மயங்குமலர்க் கோதை நல்மார்பு முயங்கல்
இனிதுமன் வாழி தோழி நறுஇதழ்க்
கூவளை உண்கண் கலுழப்
பசலை ஆகா ஊங்கலங் கடையே.

— பேயார்

வரைவிடை வேறுபட்ட கிழத்தியைத் தோழி கடுஞ்சொற் சொல்லி வற்புறீஇயது.

தோழி! நறுமணத்தையுடைய அகிலின் விளங்கிய காட்டி லிருந்து எழுந்த செறிவான மணத்தோடு கூடிய வெண்புகை துளியற்ற மேகத்தைப் போல வானத்து மிதந்து சென்று மலைச் சாரலிலுள்ள குறவர்களுடைய ஊரில் இறங்கும் நாட்டையுடைய தலைவன் பல்வகை மலரும் கலந்து கட்டிய மாலையையுடைய நினது நல்ல மார்பைத் தழுவுதல் மணமுள்ள இதழையுடைய குவளை போன்ற மையுண்ட உண்கண் அழும்படி பசலை தோன்றுவதற்கு முன்னர் மிக இனிதாயிற்று.

தலைவன் கூடிய காலத்து இன்புற்ற நீ உன்னை வரைந்து கொள்ள அவன் பொருள் தேடிப் பிரிந்த காலத்தில் துன்புறல் தகாது என்பதாம்.

குவளைமலர்க்குச் சிறப்புத் தருவது நறுமணம். எனவே நறுவிதழ்க் குவளை என்பது அதன் இயல்பைச் சுட்டியதாக அமைகிறது. இப் பாடமே ஏடுகளில் காணப்படுகிறது. எனவே இப் பாடம் கொள்ளப்பெற்றது.

தினை முதலிய பயிர்களைச் செய்யக் காட்டைச் சுட்டு அழித்தல் கானவர் இயல்பு. பாக்கம் - ஊர்; ஊங்கு - முன்னர்.

340. நெய்தல் — தலைவி கூற்று

காமம் கடையின் காதலர்ப் படர்ந்து
நாம்அவர்ப் புலம்பின் நம்மோடு ஆகி
ஒருபாற் படுதல் செல்லாது ஆயிடை
அழியின் நின்ற அலர்வேர்க் கண்டல்
கழிபெயர் மருங்கின் ஒல்கி ஓதம்
பெயர்தரப் பெயர்தந் தாங்கு
வருந்தும் தோழிஅவர் இருந்தஎன் நெஞ்சே.

— அம்மூவன்

இரவுக்குறி உணர்த்திய தோழிக்குக் கிழத்தி மறுத்தது.

தோழி! தலைவர் வீற்றிருந்த என் நெஞ்சம் காமம் மிகுதிப் பட்டுத் தோன்றுமாயின் தலைவரை நினைந்து அவர்பால் சென்றும், நாம் அவர் பொருட்டாக வருந்தினேமாயின் நம்மொடு உடன் இருப்பதாகியும் ஒருபக்கத்தில் அமையாது அவ்விரண்டின் இடையிலும், கடற்கழிமுகத்தில் வளர்ந்துள்ள பரந்த வேர்களைக் கொண்ட தாழை கழிநீர் பெயர்ந்துசெல்லும் போது தளர்ந்தும் வெள்ளம் மீண்டும் வரத் தான் பெயர்ந்து உயர்ந்தும் நிற்றல் போல, அலைப்புண்டு வருந்தும்.

ஒருபாற்படாது யான் மிக வருந்துவேன் என்றமையால் தலைவி மறுத்து உரைக்கின்றாள் என்பது பெறப்படும்.

கடற்கழிமுகத்தில் தாழைகள் மலர்ந்திருப்பது இயற்கை. கடற்கழிமுகத்திற்கு அழி என்பது ஒரு பெயராகும். அடுத்த அடியில் வரும் கழிபெயர் மருங்கின் என்னும் தொடர்க்கு ஏற்ற எதுகை நயம் உடையது அழியின் என்பதே. எனவே இப் பாடம் கொள்ளப்பெற்றது.

காமம் கடைதல் - விருப்பம் மிகுதிப்படுதல்; படர்தல் - நினைதல்; அழி - கடற்கழிமுகம்; ஓதம் - வெள்ளம்.

கழியில் வெள்ளம் மிகும்போது உயர்ந்தும் அது தாழ்ந்து செல்லும்போது தாழ்ந்தும் தாழை நிற்றல் போல நெஞ்சமும்

காமம் மிக அவர்பால் சென்றும் மிகாதபொழுது அவர் வரும் வழியின் ஏதம் கருதி வருந்தியும் நின்றது என்பதாம். ஏதம் விளைக்கும் இரவுக் குறியைக் கருதியும் இருபாற்பட்டதாயிற்று என்பது எடுத்துக் கூறப்பெற்றது.

341. நெய்தல் — தலைவி கூற்று

பல்வீ படரிய பசுநனைக் குரவம்
பொரிப்பூம் புன்கொடு பொழில்அணிக் கொளாஅச்
சினைஇனிது ஆகிய காலையும் காதலர்
பேணார் ஆயினும் பெரியோர் நெஞ்சத்துக்
கண்ணிய ஆண்மை கடவது அன்றுஎன
வலிய நெஞ்சம் வலிப்ப
வாழ்வேன் தோழிஎன் வன்க ணானே.

— மிழைகிழான் நல்வேட்டன்

பருவ வரவின்கண் வேறுபடும் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

தோழி! பல மலர்களோடு பரவிய இள அரும்புகளைக்கொண்ட குராமரம் நெற்பொரி போன்ற பூக்களையுடைய புன்கமரத்தோடு சோலையினிடத்தே அழகினைக் கொண்டு கிளைகள் எல்லாம் கண்ணுக்கு இனிமையாகத் தோன்றும் இந்தப் பருவத்திலும் தலைவர் நம்மை விரும்பிப் பாதுகாவாராயினும், பெரியோர் நெஞ்சத்திலே கருதிய ஆண்மைச்செயலை மீறிச் செல்லுதல் தகாது என்று என் வலிய நெஞ்சம் வற்புறுத்துதலால், என்னுடைய உறுதிப்பாட்டினாலே உயிரோடு வாழ்வேன்.

தலைவர் தாம் கருதிய வினையை முடித்து மீள்வர் என்னும் துணிவே பற்றுக்கோடாக வாழ்வேன் எனத் தன் உறுதிப் பாட்டைத் தலைவி உரைக்கின்றாள்.

இங்கு நெஞ்சின் உறுதிப்பாட்டைச் சுட்டிக் கூறுதலின் வலிய நெஞ்சம் என்பதே பொருத்தமாகும். ஏடுகளில் வலிய என்னும் பாடமே உள்ளது. எனவே இப் பாடம் கொள்ளப் பெற்றது.

நனை - அரும்பு; கண்ணுதல் - கருதுதல்; கடவது - மீறிச் செல்வது; வன்கண் - உறுதிப்பாடு; திண்மை.

342. குறிஞ்சி — தோழி கூற்று

கலைகை தொட்ட கமழ்சுளைப் பெரும்பழம்
காவல் மறந்த கானவன் ஞாங்கர்க்
கடியுடை மரந்தொறும் படுவலை நாட்டு

குன்ற நாட தகுமோ பைஞ்சுனைக்
குவளைத் தண்தழை இவள்ஈண்டு வருந்த
நயந்தோர் புன்கண் தீர்க்கும்
பயம்தலைப் படாஅப் பண்பினை எனினே.

— காவிரிப்பூம்பட்டினத்துக் சுந்தரத்தனார்

செறிப்பு அறிவுறுக்கப்பட்டான் வரைவின்கண் செல்லாது பின்னும் வரவு வேண்டின தலைமகனைத் தோழி நெருங்கிச் சொல்லி வரைவுகடாயது.

ஆண்குரங்கு தன் கையினாலே தோண்டி எடுத்த மணம் வீசும் சுளைகளோடு கூடிய பலாப்பழத்தைக் காத்தலை மறந்த கானவன் அதன்பின் பழுத்த பழத்தால் மணம் வீசும் மரங்கள் தோறும் குரங்குகள் அகப்படுவதற்கு ஏற்ற வலைகளைக் கட்டி வைக்கும் மலைநாட்டையுடையவனே! பசிய சுனையிலே பூத்த குவளை மலர்களை இடையிட்டுக் கட்டிய தண்மையான தழையுடையை அணிந்த இந்தத் தலைவி இங்கே இற்செறிப்பால் துன்புற நின்னை விரும்பியவர்களது துன்பத்தினைத் தீர்க்கும் நல்லபயனை அடைவதற்கு முற்படாத இயல்புடையாய் என்னின் அந்த இயல்பு நினக்குப் பொருந்துவதோ?

இவளுடைய வருத்தம் நீங்க நீ இவளை வரைந்து கொள்ள வேண்டும் என எடுத்துக் கூறினாளாயிற்று.

குரங்கு தோண்டிய பலாப்பழம் கானவன் வலையாட்டியபின் பெறுதற்கு அரிதாயிற்று. காப்போர் இல்லா நிலையில் நீ கண்டு அளவளாவிய தலைவி இற்செறிக்கப்பட்டுள்ளமையின் நின்னால் அணுகுதற்கு அரியள் ஆவாள் என்பதனைச் சுட்டும் குறிப்பினை உட்கொண்டுள்ளமையால் இஃது இறைச்சிப்பொருளாம்.

கலை - ஆண்குரங்கு; சுளைப்பெரும்பழம் - பலாப்பழம்; படுவலை - விலங்குகளை அகப்படுத்தும் வலை; புன்கண் - துன்பம்.

343. பாலை — தோழி கூற்று

நினையாய் வாழி தோழி நனைகவுள்
அண்ணல் யானை அணிமுகம் பாய்ந்தென
மிகுவலி இரும்புலிப் பகுவாய் ஏற்றை
வெண்கோடு செம்மறுக் கொளீஇய விடர்முகைக்
கோடை ஒற்றிய கருங்கால் வேங்கை
வாடுபூஞ் சினையிற் கிடக்கும்
உயர்வரை நாடனொடு பெயரு மாறே.

— ஈழத்துப் பூதன்தேவன்.

தோழி கிழத்தியை உடன்போக்கு நயப்பக் கூறியது

தோழி! மிகுந்த ஆற்றல் படைத்த பெரிய புலியினது பிளந்த வாயையுடைய ஆண், மதத்தால் நனைந்த கன்னத்தைக்கொண்ட தலைமையுடைய சிறந்த யானையின் அழகிய முகத்திலே பாய்ந்த தாக, அந்த யானையின் வெள்ளிய கொம்பு தன்னுடலில் குத்திய தனால் அதனைச் சிவந்த கறையைக் கொள்ளுமாறு செய்து, பிளப்புடைய் கற்குகையிடத்துள்ள மேல்காற்றின் விசையினால் வீழ்த்தப்பட்ட கரிய அடிமரத்தையுடைய வேங்கை மரத்தினது வாடிய பூவுடைய கிளையைப் போல, இறந்து கிடக்கும் உயர்ந்த மலைநாட்டையுடையவனோடு போகும் வழியை நீ நினையாய்; வாழ்வாயாக.

நீ ஆற்றல் மிக்க தலைவனுடன் செல்லுதலே நல்லது என்று தோழி சுட்டியபடியாம்.

கவுள் - கன்னம்; அண்ணல் - தலைமை, சிறப்பு; பகுவாய் - பிளந்தவாய்; யானையின்மேற் பாய முற்பட்டதாதலின் பிளந்த வாயையுடையதாயிற்று. மறு - கறை; கோடை - மேல்காற்று;

யானைமேற் பாய்ந்த புலி அதன் கொம்பின் தாக்குதலால் இறந்து வீழ்ந்துகிடந்தது. காற்றினால் முரிந்து விழுந்து கிடந்த வாடிய வேங்கைமரக்கிளைபோலத் தோற்றமளித்தது; வேங்கைப்பூ புலியின் மஞ்சள்வரி போலத் தோற்றமளிப்பதாகும்.

தலைவன் நாட்டிலுள்ள யானை தன்னை எதிர்த்துப் பாய்ந்த புலியைத் தான் தாக்காமலே தன் கொம்பினால் விழும்படி செய்தது. இதனால் அக் காட்டுக்குரிய தலைவனும் இடையூறு களை எதிர்த்து எளிதில் வெல்லும் ஆற்றலுடையான் என்பது குறிப்பால் பெறவைத்தவாறாம்.

344. முல்லை — தலைவி கூற்று

நோற்றோர் மன்ற தோழி தண்ணெனத்
தூற்றும் துவலைப் பனிக்கடுந் திங்கள்
புலம்பயிர் அருந்த அண்ணல் ஏற்றொடு
நிலம்தூங்கு அணல வீங்குமுலைச் செருத்தல்
பால்வார்பு குழவி உள்ளி நிரைஇறந்து
ஊர்வயின் பெயரும் புன்கண் மாலை
அரும்பெறல் பொருட்பிணிப் போகிப்
பிரிந்துஉறை காதலர் வரக்காண் போரே.

— குறுங்குடி மருதன்

பிரிவிடை வற்புறுத்தும் தோழிக்குத் தலைமகள் கூறியது.

தோழி! குளிர்ச்சியாகத் துளிக்கும் பனியையுடைய குளிர் தாங்கற்குக் கடுமையான மாதத்தில் மேய்ச்சல் நிலத்திலேயுள்ள புற்களை மேயும் பொருட்டாகத் தலைமையுடைய எருதுடனே நிலத்தளவும் தொங்குகின்ற அலை தாடியையுடைய பால் நிறைந் திருத்தலால் பருத்த மடியையுடைய பசுக்கள் பாலை ஒழுகவிட்டுத் தம் கன்றுகளை நினைந்து தம்முடன் ஒன்றாக மேயும் பசுத்திரளை விடுத்து நீங்கி ஊரினிடத்தே மீண்டு வருகின்ற துன்பத்தைத் தரும் மாலைக் காலத்தில், முயன்று அரிதில் பெறத் தக்க பொருள்மேற்சென்ற நெஞ்சப் பிணிப்பினாலே தேடிவரச் சென்று தம்மைப் பிரிந்து உறைந்த தலைவர் திரும்பிவரக்காணும் மகளிர் தவம் செய்தவராவர்.

தலைவர் இம் மாலைக் காலத்தே வாராமையினாலே நான் வருத்தமுற்றவளாவேன் என்று சுட்டியவாறாம்.

தாற்றுதல் - துளித்தல்; பயிர் - புல்; அணல் - அலைதாடி; செருத்தல் - மடியையுடைய பசு; பிணி - பிணிப்பு, பற்று; பொருட்பிணி - பொருள் வேட்கை.

345. நெய்தல் — தோழி கூற்று

இழைஅணிந்து இயல்வரும் கொடுஞ்சி நெடுந்தேர்
வரைமருள் நெடுமணல் தவிர்த்தனிர் அசைஇத்
தங்கினிர் ஆயின் தவறோ தகைய
தழைதாழ் அல்குல் இவள்புலம்பு அகல
தாழை தைஇய தயங்குதிரைக் கொடுங்கழி
இழுமென ஒலிக்கும் ஆங்கண்
பெருநீர் வேலிஎம் சிறுநல் ஊரே.

— அண்டர்மகன் குறுவழுதி

பகல் வந்து ஒழுகுவானைத் தோழி, 'இரா வா' என்றது.

தாழை மரங்கள் பொருந்திய விளங்கிய அலைகளையுடைய வளைந்த கடற்கரை உப்பங்கழி இழுமென ஆரவாரம் செய்யும் அந்த இடத்திலுள்ள கடலைக் காப்பாகவுடைய எம்முடைய சிறிய நல்ல ஊரின்கண், பொற்பணி அலங்காரத் தொங்கல்களைக் கொண்டு பொலிவு பெற்ற கொடுஞ்சியையுடைய பெரிய தேரை மலையை ஒத்துக்காணும் உயர்ந்த மணல் மேட்டிலே நிறுத்திய வராய் இளைப்பாறிச் சிறந்த அழகுவாய்ந்த தழையுடை தாழ்ந்து விளங்கும் அல்குலையுடைய இத் தலைவியின் தனிமை நீங்கும் வண்ணம் இங்குத் தங்குவீராயின் அது பிழையாகுமோ?

தலைவியுடன் நீர் இரவில் வந்து அளவளாவுவீராக என்று குறித்தவாறாம்.

கொடுஞ்சி - தேர் மொட்டு; மருள் - உவமஉருபு; அசைதல் - இளைப்பாறுதல்; தைஇய - பொருந்திய. ஆங்கண் என்றது தலைவியிருக்கும் ஊரைச் சுட்டியது.

346. குறிஞ்சி — தோழி கூற்று

நாகுபிடி நயந்த முனைக்கோட்டு இளங்களிறு
குன்றம் நண்ணிய குறவர் ஆர்ப்ப
மன்றம் போழும் நாடன் தோழி
சுனைப்பூங் குவளைத் தொடலை தந்தும்
தினைப்புன மருங்கில் படுகிளி ஓப்பியும்
காலை வந்து மாலைப் பொழுதில்
நல்லகம் நயந்துதான் உயங்கிச்
சொல்லவும் ஆகாது அஃகி யோனே.

— வாயில் இளங்கண்ணன்

தோழி கிழத்தியை இரவுக்குறி நயப்பக் கூறியது.

தோழி! இளமையான பெண்யானையை விரும்பிய கூரிய வெண்ணிறமான கொம்புடைய இளைய் யானை மலையிடத்தைப் பொருந்திக் குறவர்கள் ஆரவாரம் செய்தலினாலே ஊர்ப் பொது மன்றத்தைப் பிளந்து செல்லும் நாட்டையுடைய தலைவன் பகற்பொழுதிலே வந்து சுனையில் மலர்ந்த குவளை மலரானான மாலையைத் தந்தும், தினைப்புனத்தில் வந்து விழுகின்ற கிளிகளை எம்மோடு இருந்து ஓட்டியும், மாலைப் பொழுதிலே நின்னுடைய நல்ல மார்பை அணைய விரும்பியவனாய்த் தான் வருந்தி அக் கருத்தினை வெளிப்படச் சொல்லவும் பெறானாய்க் குறைவுற்றான்.

தலைவன் இரவிலும் நின்னோடு உடனுறைதலை விரும்பினான் என்பதனைக் குறிப்பால் உணர்ந்தேன் எனத் தோழி சுட்டலாயினாள்.

பிடியை விரும்பிய களிறு மலையை நண்ணும் என்றதனால் நின்னை விரும்பிய தலைவனும் நின் மனையிடத்தே இரவில் வருவான் என்பதனைக் குறிப்பித்தலால் இஃது இறைச்சிப் பொருளாம்.

இளங்களிற்றின் கொம்புக்கு மூங்கில் முளையை ஒப்புக் கூறுதல் இலக்கிய மரபாகக் காணப்படவில்லை. னை, ளை இரண்டும்

ஏட்டில் ஒன்று போலவே தோற்றம் அளிப்பன. கூரிய கொம்பு என்னும் பொருளில் முனைக்கோட்டு என்னும் பாடமே இங்குப் பொருந்துவதாகும். எனவே இப் பாடம் கொள்ளப்பெற்றது.

நாகு - இளமை; தொடலை - மாலை; ஒப்புதல் - ஒட்டுதல்.

இப் பாட்டை, தோழி கிழத்தியை இரவுக்குறி நயப்பித்தது என்பர் நச்சினார்க்கினியர் (தொல். களவு. 23).

347. பாலை — தலைவன் கூற்று

மல்குசுனை புலர்ந்த நல்கூர் சுரமுதல்
குமரி வாகைக் கோலுடை நறுவீ
மடமாத் தோகைக் குடுமியின் தோன்றும்
கான நீள்இடைத் தானும் நம்மொடு
ஒன்றுமணம் செய்தனள் இவள்எனின்
நன்றே நெஞ்சம் நயந்தநின் துணிவே.

— காவிரிப்பூம்பட்டினத்துச் சேந்தன் கண்ணன்

பொருள் வலிக்கும் நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லிச் செல வழுங்கியது.

நெஞ்சே! முன்பு நீர் நிரம்பியிருந்த சுனைநீர் வற்றுதலினால் வறுமையுற்றுக் காணப்பெற்ற பாலை வழியில். இளமைத் தன்மை யுடைய வாகை மரத்தின் கொம்பிலுள்ள மணமுள்ள மலர் இளமையான கரிய மயிலின் உச்சிக் கொண்டை போலத் தோன்று கின்ற நீண்ட காட்டுவழியில் இத் தலைவி நம்மோடு வந்து பொருந்தும் மணத்தினைச் செய்தாளாயின் பொருளின் பொருட்டுப் பிரியக் கருதிய உன் துணிவும் நன்மையுடையதாகும்.

இதனால் தலைவியைப் பிரிந்து செல்லுதல் இயலாது என்பதனை உணர்த்தியவாறாம்.

மல்குதல் - நிறைதல்; உலர்தல் - வற்றுதல்; தோகை - மயில்; நயத்தல் - விரும்புதல்.

348. பாலை — தோழி கூற்று

தாமே செல்ப ஆயின் கானத்துப்
புலம்தேர் யானைக் கோட்டிடை ஒழிந்த
சிறுவீ முல்லைக் கொம்பின் தாஅய்
இதழ்அழிந்து ஊறும் கண்பனி மதர்எழில்
பூண்அக வனமுலை நனைத்தலும்
காணார் கொல்லோ மாணிழை நமரே,

— மாவளத்தன்

செலவுக் குறிப்பு அறிந்து வேறுபட்ட கிழத்தியைத் தோழி வற்புறீஇயது.

மாட்சிமைப்பட்ட ஆபரணங்களைப் பூண்டோய்! நம் தலைவர் நம்மை விட்டுத் தாம் மட்டும் பிரிந்து செல்வாராயின் காட்டிலே மேய்புலத்தை ஆராய்கின்ற யானையினுடைய கொம்பினிடத்து முறிந்துதங்கிய சிறிய பூக்களையுடைய முல்லைக் கொடியின் கொம்பைப் போல இமையைக் கடந்து சுரக்கின்ற கண்ணீர் பரவி மதர்த்த அழகையுடைய முலைகளை நனைத்தலையும் காணாரோ.

உன் வருத்தத்தை அறிந்த தலைவர் உன்னைப் பிரிந்து போதலை ஒழிவர் என்று குறிப்பித்தவாறாம்.

யானைக் கோட்டிடைப்பட்ட முல்லை மலர் அதன் வாய்ப்புகுந்து உணவாதல் போலத் தாம் பிரியின் துயரால் நின் உயிரும் அழியும் என்பதைத் தலைவர் உணர்வார் என்பதாம்.

புலம் - மேய்புலம்; வனமுலை - அழகிய முலை; மாணிழை - மாட்சிமை பெற்ற அணிகள்.

349. நெய்தல் — தலைவி கூற்று

அடும்புஅவிழ் அணிமலர் சிதைய மீன்அருந்தும்
தடந்தாள் நாரை இருக்கும் எக்கர்த்
தண்ணம் துறைவற் தொடுத்து நம்நலம்
கொள்வாம் என்றி தோழி கொள்வாம்
இடுக்கண் அஞ்சி இரந்தோர் வேண்டிய
கொடுத்துஅவை தாஎனச் சொல்லினும்
இன்னா தோநம் இன்உயிர் இழப்பே.

— சாத்தன்

பரத்தைமாட்டுப் பிரிந்து வந்த தலைமகன் கேட்கும் அண்மையனாகத் தோழிக்குக் கிழத்தி கூறியது.

தோழி! அடும்பின் கொடியினிடத்தே மலர்ந்த அழகிய மலர் சிதையும்படியாக மீனை உண்ணுகின்ற வளைந்த காலையுடைய நாரை தங்கியிருக்கும் மணல் மேடுகளோடுகூடிய குளிர்ந்த துறையையுடைய தலைவனைச் சூழ்ந்து வளைத்துக் கொண்டு நாம் இழந்த பெண்மை நலத்தை மீண்டும் பெறுவேம் என்று உரைக்கின்றாய். அங்ஙனமே நாம் கொள்வேம் ஆயினும் தாம் உற்ற இன்மைத் துன்பத்திற்குப் பயந்து தம்பால் வந்து இரந்தவர் விரும்பியவற்றைக் கொடுத்துப் பின்னர் அவற்றைத் தருக என்று

சொல்வதைவிடவும் நமது இனிய உயிரை இழப்பது துன்பம் தருவதோ?

கொடுத்தவற்றை மீண்டும் பெறுதல் செய்யோம் என்பதாம். நாம் அவனுக்குத் தந்த நலத்தை மீட்டும் தா எனக் கேட்டு வேண்டிப்பெறேம் என்பதாம்.

சிதைஇ என்னும் செய்து என்ற வாய்பாட்டினும் சிதைய என்னும் செய என்ற வாய்பாடே இயல்பாகப் பொருந்துவ தாகும். நாரை மீன் அருந்துகிறபோது அதன்போக்கில் இயல்பாக மலர் சிதைகிறதே தவிர மலரைச் சிதைப்பது அதன் நோக்க மன்று. ஏடுகளில் இப் பாடமே காணப்படுகிறது. எனவே இப் பாடம் கொள்ளப்பெற்றது.

என்சொல்லினும் என்பதினும் எனச் சொல்லினும் என்பது நேர் பொருளைத் தருவதாகும். ஏடுகளில் எனச் சொல்லினும் என்ற பாடமே காணப்படுகிறது. இது சொல்லுவதற்கும் எளியது. எனவே இப் பாடம் கொள்ளப்பெற்றது.

தடந்தாள் - வளைவான கால்கள்; தொடுத்தல் - வளைத்துக் கொள்ளுதல்.

அணிமலர் சிதைய நாரை மீன் அருந்தும் எக்கர்த்துறைவன் என்பது நம் நலம் சிதைத்தும் பரத்தையருடன் இன்புற்று வாழும் இயல்பினன் என்பதனைச் சுட்டிக் கூறினாளாயிற்று. இஃது இறைச்சிப்பொருள்.

இப் பாட்டை, தோழி தலைவனைக் காய்தற்கண் தலைவி கூறியது; இது பிரித்தல்பற்றி வந்தது என்பர் இளம்பூரணர் (தொல். கற்பு.6)

350. பாலை — தோழி கூற்று

அம்ம வாழி தோழி முன்னின்று
பனிக்கடுங் குரையம் செல்லா தீம்எனச்
சொல்லினம் ஆயின் செல்லார் கொல்லோ
ஆற்றுஅயல் இருந்த இருங்கோட்டு அம்சிறை
நெடுங்காற் கணந்துள் ஆள்அறி வுறீஇ
ஆறுசெல் வம்பலர் படைதலை பெயர்க்கும்
மலையுடைக் கானம் நீந்தி
நிலையாப் பொருட்பிணிப் பிரிந்திசி னோரே.

— ஆலத்தூர் கிழார்

பிரிவு நேர்ந்த தலைமகள் அவனது நீக்கத்துக்கண் வேறு பட்டாளைத் தோழி வற்புறீஇயது.

தோழி! ஒன்று கூறுவேன். கேட்பாயாக. வழியின் பக்கலிலே உள்ள பெரிய கிளையில் உள்ள அழகிய சிறகுகளையும் நீண்ட கால்களையும் உடைய கணந்துள் பறவைகள் வழியிடத்தே துன்பம் விளைக்கும் ஆறலை கள்வர் உளர் என்பதை அறிவுறுத்தி வழிச்செல்லும் பயணிகள் கூட்டத்தை அவ்விடத்தினின்றும் நீங்கச்செய்யும் மலைகளையுடைய காட்டைக் கடந்து நிலைத்தல் இல்லாத பொருள் வேட்கையினால் பிரிந்து சென்றோனின் முன் நின்று நீர் பிரியின் யாம் பனியினது கடுமையால் தாக்குண்டார் போல நடுங்குவேம். ஆதலால் செல்லாதீர் என்று சொன்னோம் ஆயின் அன்றைக்குப் பிரிந்து செல்லார்கொல்?

நாம் தலைவர் முன்னின்று தடுத்திருந்தால் பிரிந்து சென்றிரார் என்று சுட்டியவாறு.

செல்லாதீம் என முன்னடியில் வருதல்போல ஈண்டும் செல்லார் என அமைதல் பொருத்தமாகும். ஏடுகளில் இப் பாடமே காணப்படுகிறது. எனவே இப் பாடம் கொள்ளப் பெற்றது.

கோடு - கிளை; கணந்துள் - கணந்துள் பறவை; வம்பலர் - புதிதாய்வரும் பயணிகள்; மலையுடைக்கானம் - குறிஞ்சி நிலம் திரிந்த பாலைநிலம்.

351. நெய்தல் — தோழி கூற்று

வளையோய் உவந்திசின் விரவும் கொடுந்தாள்
அளைவாழ் அலவன் கூர்உகிர் வரித்த
இளமணல் ஈர்நெறி சிதைய் இழுமென
உரும்இசைப் புணரி உடைதரும் துறைவற்கு
உரிமை செப்பினர் நமரே விரிஅலர்ப்
புன்னை ஓங்கிய புலால்அம் சேரி
இன்னகை ஆயத் தாரொடு
இன்னும் அற்றோ இவ் அழுங்கல் ஊரே.

— அம்மூவன்

தலைமகன் தமர் வரைவொடு வந்தவழி, 'நமர் அவர்க்கு வரைவு நேரார் கொல்லோ?' என்று அஞ்சிய தலைமகட்குத் தோழி வரைவு மலிந்தது.

வளையை அணிந்தவளே! பின்னிய வளைந்த கால்களை உடைய அளையிடத்தே வாழ்வதாகிய நண்டு கூரிய நகத்தினாலே அழகுபட மென்மையான மணல் இடத்தே கிழிக்கப்பட்ட வழியானது அழியும்படி இழும் என்னும் ஓசை உண்டாக இடியினது முழக்கத்தையுடைய அலைகள் உடைந்து சிதறும் துறையை

யுடைய தலைவருக்கு நீ உரிமையுடையாய் என்பதனை நம் சுற்றத்தாரும் உடம்பட்டுக் கூறினர். அதனை அறிந்து நான் மகிழ்ந்தேன். விரிந்த மலர்களையுடைய புன்னை மரங்கள் உயர்ந்து வளர்ந்த புலால் நாற்றத்தையுடைய சேரியிடத்துள்ள இனிய நகையையுடைய மகளிர் கூட்டத்தினரோடு இந்த ஆரவாரத்தையுடைய ஊர் இன்னும் அலர் கூறும் அத் தன்மை யுடையதோ?

தலைவருடைய வரைவுக்குச் சுற்றத்தார் உடன்பட்டனர் என்பதனை எடுத்துக் கூறியவாறு.

அளை - நண்டின் வளை; உகிர் - நகம்; இளமை - மென்மை; ஈர்தல் - கிழித்தல்; உரிமை செப்பல் - உரிமையுடைமையை உறுதிப்படுத்தல்; ஆயம் - மகளிர் கூட்டம்; வரித்தல் - கோலம் செய்தல்; உரிமை - மனைவி.

நண்டின் கால்கள் இயங்கும் நிலையில் ஒன்றோடொன்று பின்னிக் காணப்படுவது இயற்கை. இதனைச் சுட்டுவதாக விரவும் என்னும் பாடமே அமைகிறது. இப் பாடமே ஏடுகளில் காணப்படுகிறது.

இளமணலில் நண்டு செல்லும்வழி தெளிவாகத் தெரியும்படி இருக்கும். அதனை அலைகள் பாய்ந்து மாய்ப்பதுவும் இயற்கைக் காட்சியே. எனவே விரவும் என்னும் பாடமும் இளமணல் ஈர்நெறி என்னும் பாடமும் கொள்ளப்பெற்றன.

அலவன் இட்ட சிறுவரி சிதையும்வண்ணம் அலைநீர் வீசும் என்றது ஊரினர் உரைக்கும் பழிச்சொல் இல்லையாகத் தலைவன் மணந்துகொள்வான் என்னும் குறிப்பு உணர்த்தலின் இஃது இறைச்சிப் பொருளாம்.

352. பாலை — தலைவி கூற்று

நெடுநீர் ஆம்பல் அடைப்புறத் தன்ன
கொடுமென் சிறைய கூர்உகிர்ப் பறவை
அகல்இலைப் பலவின் சாரல் முன்னி
பகல்உறை முதுமரம் புலம்பப் போகும்
சிறுபுன் மாலை உண்மை
அறிவேன் தோழிஅவர்க் காணா ஊங்கே.

— கடியலூர் உருத்திரங்கண்ணனார்

பிரிவிடைத் தோழிக்குக் கிழத்தி மெலிந்து கூறியது.

தோழி! ஆழமான நீரிடத்தே வளர்ந்து மேலோங்கிய ஆம்பலினது இலையின் புறத்தைப் போன்ற வளைந்த மெல்லிய

சிறகையுடைய கூரிய நகங்களைக் கொண்டுள்ள வௌவால்கள் அகன்ற இலைகளையுடைய பலாமரங்கள் உள்ள மலைச்சாரலை நோக்கிப் பகற்காலத்திலே தாம் தங்கியிருந்த பழைய மரம் தனிக்கும்படி செல்லும் சிறிய புல்லிய மாலைக் காலம் உளதாதலை அத் தலைவரைக் காணாத காலத்திலே அறிவேன்.

தலைவனுடைய பிரிவின்பின் மாலைக்காலம் தனக்குத் துன்பத்தைத் தருவதொன்றாகியது என்பதனைத் தெரிவித்தாளாயிற்று.

நெடுநீர் - ஆழமான நீர்; அடை - இலை; சிறுபுன்மாலை என்றது தன் வருத்தம் நோக்கிக் கூறியதாம். முதுமரம் - பழைய மரம்; ஆலமரம் என்றும் ஆம்.

353. குறிஞ்சி — தோழி கூற்று

ஆர்கலி வெற்பன் மார்புபுணை ஆகக்
கோடுஉயர் நெடுவரைக் கவாஅன் பகலே
பாடுஇன் அருவி ஆடுதல் இனிதே
நிரைஇதழ் பொருந்தாக் கண்ணொடு இரவில்
பஞ்சி வெண்திரிச் செஞ்சுடர் நல்இல்
பின்னுவீழ் சிறுபுறம் தழீஇ
அன்னை முயங்கத் துயில்இன் னாதே.

— உறையூர் முதுகூத்தன்

பகற்குறி வந்தொழுகும் தலைமகன் வெளிப்பாட்ஞ்சி இரவுக்குறி நயந்தானது குறிப்பறிந்த தோழி, இரவின்கண் அன்னையது காவல் அறிந்து, பின்னும் 'பகற் குறியே நன்று அவ் இரவுக்குறியின்' என்று பகற்குறியும் இரவுக்குறியும் மறுத்துத் தலைமகன் சிறைப்புறத்தானாக வரைவு கடாயது.

பகற்பொழுதிலே கொடுமுடிகள் உயர்ந்த நீண்ட மலையினது தாழ்விடத்தே உள்ள இனிய ஓசைகொண்ட அருவியில் பேராரவாரத்தையுடைய மலை நாட்டினனாகிய தலைவனது மார்பே தெப்பமாக நீரில் விளையாடுவதால் இன்பம் தருவதாகும். இராப்பொழுதில் பஞ்சாலாகிய வெள்ளிய திரியையுடைய செவ்விய விளக்கின் ஒளியுடைய நல்ல வீட்டினிடத்தே நம் தாய் பின்னல் தாழ்கின்ற பிடரியைத் தழுவி அணைத்துக்கொள்ள வரிசையாகிய இமைகள் ஒன்றோடு ஒன்று பொருந்தாத கண்களோடு தூங்குதல் இன்னாமையுடையது.

காப்புமிகுதியால் இரவுக்குறியில் தலைவனைச் சேர்தல் அரிது என்பது சுட்டியவாறாம்,

ஆர்கலி - பேராரவாரம்; புணை - தெப்பம்; பாடு - ஓசை; செஞ்சுடர் - செந்நிற விளக்கின் கொழுந்து.

இரவுக் காவல் மிகுதி என்பது அன்னை தழுவ என்றதனால் பெறவைத்தாள். இமை பொருந்தாது தூங்குதல் என்பது துயிலாமையைச் சுட்டும்.

இப் பாட்டிற்கு, இரவுக்குறி நயந்த தலைவன் சிறைப்புற மாகப் பகற்குறி நேர்வாள் போல் தோழி இரவுக் காப்பு மிகுதி கூறியது. பாடின் அருவி யாடல் என்றாள் அதன்கண் உதவினான் என்பது பற்றி. அல்லது களவிற்கு உடனாடுதல் இன்று என்பது நச்சினார்க்கினியர் தரும் விளக்கம் (தொல். களவு. 23).

354. மருதம் — தோழி கூற்று

நீர்நீடு ஆடின் கண்ணும் சிவக்கும்
ஆர்ந்தோர் வாயில் தேனும் புளிக்கும்
தணந்தனை ஆயின்எம் இல்உய்த்துக் கொடுமோ
அம்தண் பொய்கை எந்தை எம்ஊர்க்
கடும்பாம்பு வழங்கும் தெருவில்
நடுங்குஅஞர் எவ்வம் களைந்த எம்மே.

— கயத்தூர் கிழான்

பரத்தையிற் பிரிந்து வாயில் வேண்டிச் சென்ற தலைமகற்குத் தோழி வாயில் மறுத்தது.

தண்ணீரிலே நீண்டநேரம் துளைந்து மூழ்கி விளையாடினால் கண்களும் சிவப்புநிறம் பெறும். பலமுறை உண்டோரது வாயினிடத்து இனிப்பான தேனும் புளிப்புச் சுவையுடையதாகத் தோன்றும். ஆதலால் நீயும் எம்மைப் பிரிவதற்கு விரும்பினா யானால் அழகிய குளிர்ந்த பொய்கையையுடைய எம் தந்தை யினது ஊரினிடத்தே நஞ்சுக் கடுமையுடைய் பாம்புகள் திரியும் தெருவில் நீ முன்பு நடுங்குதற்குரிய மிகுந்த துன்பத்தை நீக்கிய எம்மை வீட்டினிடத்துக் கொண்டு சேர்ப்பாயாக.

பிரிந்து நீ செல்வதாயின் எம்மை எம் தந்தையின் வீட்டில் கொண்டு போய் விட்டுச் செல்க என்றவாறாம்.

அளவிற்கு மீறி நெடுநேரம் நீராடினால் கண் சிவப்பது போலவும் மட்டுக்கு மிஞ்சிப் பலகால் உண்டலால் தேன் புளிப்புச் சுவையாய்த் தோன்றுவது போலவும் யாம் உனக்கு இனிமையா யிருந்தும் நெடுநாள் பழகினமையால் வெறுத்தற்குரியராயினேம் என்று எடுத்துக்காட்டப்பட்டது. ஆர்ந்தோர் - அருந்தினோர்;

தணத்தல் - பிரிதல்; கடும்பாம்பு - கொடிய நச்சுப்பாம்பு; அரூர் எவ்வம் - மிக்க துன்பம், ஒருபொருட்பன்மொழி.

இப் பாட்டை, தலைவனைத் தலைவி நீங்கித் தனிமையுறுதல் பெரிதாகலின் ஆண்டு அலமரல் பெருகிய காமத்தின் மிகுதிக்கண் தலைவி கூறியது என்பர் இளம்பூரணர் (தொல். கற்பு. 6). நச்சினார்க்கினியர், பரத்தையிற் பிரிவால் தலைவர்க்கும் தலைவியர்க்கும் தோன்றிய வருத்தமிகுதியைத் தீர்க்கக் கருதித் தோழி கூற்று நிகழ்த்தும் காலத்து அவரது இல்வாழ்க்கை நிகழ்ச்சிக்கண்ணே தனக்கு வருத்தம் தோன்றிற்றாகக் கூறுதலும் உரித்து. இதனுள் இல்லறத்தினை நீ துறந்தாயாயின் எம்மை எம்மூர்க்கண்ணே விடுக எனத் தனக்கு வருத்தம் தோன்றிற்றாகத் தோழி கூறியவாறு காண்க என்பர் (தொல். பொருள். 82).

355. குறிஞ்சி — தோழி கூற்று

பெயல்கால் மறைத்தலின் விசும்பு காணலரே
நீர்பரந்து ஒழுகலின் நிலம்கா ணலரே
எல்லை சேறலின் இருள்பெரிது பட்டன்று
பல்லோர் துஞ்சும் பானாள் கங்குல்
யாங்குவந் தனையோ ஓங்கல் வெற்ப
வேங்கை கமழும்எம் சிறுகுடி
யாங்குஅறிந் தனையோ நோகோ யானே.

— கபிலர்

இரவுக்குறி நேர்ந்த தலைமகற்குத் தோழி நொந்து கூறியது.

உயர்ச்சியுடைய மலைக்குத் தலைவனே! கால் இறங்கிப் பெய்கின்ற பெருமழை மறைத்தலினாலே வானத்தைக் காண்பாரில்லை. நீர் எங்கும் பரந்து ஓடுதலினாலே நிலத்தையும் காண்பாரில்லை. சூரியன் மறைந்து போனமையால் இருள் மிகுதியாகக் கவிந்துள்ளது. இத்தகு சூழலில் பலரும் உறங்குகின்ற நள்ளிரவு வேளையிலே எவ்வாறு வந்தாய்? வேங்கை மரத்தின் மலர்மணம் வீசுகின்ற எம்முடைய சிற்றூரை எங்ஙனம் அறிந்தாய்? நின் வரவை எண்ணி யான் மிக வருந்துவேன்.

இதனால் இரவுக்குறி வருதல் அஞ்சுதற்குரியது ஆதலின் அதனை வேண்டா என்று விலக்குவதோடு வரைதல் பற்றியும் தோழி அவனுக்கு அறிவுறுத்தினளாயிற்று.

பெயல்கால் - மழைத்தாரை; எல்லை - கதிரவன்; ஓங்கல் - உயர்ச்சி.

இப்பாட்டை, தலைவி இடையீடின்றித் தலைவனை எதிர்ப் படப்பெற்ற ஞான்று புதுவது மலிந்தமையின் அவள் கூறியது என்பர் இளம்பூரணர் (தொல். களவு. 21). நச்சினார்க்கினியர், இரவுக்குறி வந்த தலைவனை நோக்கித் தலைவி கூறியது என்பர் (தொல். களவு 20).

356. பாலை — செவிலித்தாய் கூற்று

நிழல்ஆன்று அவிந்த நீர்இல் ஆர்இடைக்
கழலோன் காப்பக் கடுகுபு போகி
அறுசுனை மருங்கின் மறுகுபு வெந்த
வெவ்வெங் கலுழித் தவ்வெனக் குடிக்கிய
யாங்குவல் லுநள்கொல் தானே ஏந்திய
செம்பொற் புனைகலத்து அம்பொரிக் கலந்த
பாலும் பலஎன உண்ணாள்
கோல்அமை குறுந்தொடித் தளிர்அன் னோளே.

— கயமன்

மகட்போக்கிய செவிலித்தாய் உரைத்தது.

கையில் தாங்கிய செம்பொன்னாலாகிய பாத்திரத்தில் உள்ள அழகிய பொரியோடு கலந்த பாலும் மிகுதியாய் உள்ளது என உண்ணாதவளாகிய திரட்சியுடைய குறிய வளையல்களை அணிந்த தளிரை ஒத்தவளாகிய என் மகள், நிழல் அடங்கி அற்றுப் போன நீர் இல்லாத அரிய பாலை வழியிலே வீரக் கழலையுடைய தலைவன் தன்னைப் பாதுகாப்ப விரைந்து சென்று நீர் இல்லாத சுனையின் பக்கத்தில் உலர்ந்து வெப்பமான கலங்கிய நீரைத் தவ்வென்னும் ஓசையுண்டாம்படி குடிப்பதற்கு எவ்வாறு வலியளாயினாள்.

வெம்மை மிகுந்த பாலை நிலத்திலே தலைவனுடன் என் மகள் எவ்வாறு சென்றனளோ என்று அவளுடைய மென்மைத் தன்மைக்கு இரங்கியவாறு.

கலுழியை என இரண்டாம் வேற்றுமைப் பொருள்பட இத் தொடர் நிற்றலின் 'கலுழித் தவ்வென' என வலி மிகுந்த பாடம் கொள்ளப்பெற்றது.

ஆன்று - அமைந்து, அடங்கி; அவிதல் - அற்றுப்போதல்; கடுகுபு - விரைந்து; மறுகுபு - சுழன்று; வெவ்வெம் - மிகுவெம்மை; ஒருபொருட்பன்மொழி. கலுழி - கலங்கல்நீர்; குடிக்கிய - குடிப்ப தற்கு; பலஎன - மிகுதி என்று, அதிகம் என்று. கோல் - திரட்சி.

357. குறிஞ்சி — தோழி கூற்று

முனிபடர் உழந்த பாடுஇல் உண்கண்
பனிகால் போழ்ந்து பணைஎழில் ஞெகிழ்தோள்
மெல்லிய ஆகலின் மேவரத் திரண்டு
நல்ல என்னும் சொல்லை மன்னிய
ஏனல்அம் சிறுதினை காக்கும் சேணோன்
ஞெகிழியின் பெயர்ந்த நெடுநல் யானை
மீன்படு சுடர்ஒளி வெரூஉம்
வான்தோய் வெற்பன் மணவா ஊங்கே.

— கபிலர்

தோழி கிழவன் கேட்கும் அண்மையனாகக் கிழத்திக்குச் சொல்லியது.

மூங்கிலினது அழகு குறைந்துள்ள தோள்கள், வெறுக்கத்தக்க துன்பத்தால் வருந்திய உறங்காமையின் கண்பொருந்துதல் இல்லாத மையுண்ட கண்களில் உண்டாகும் நீர்த்துளிகள் குறுக்கே கால் பிளந்து சென்று இப்பொழுது மெலிவை உண்டாக்கியதனால், தினையின் வகையில் ஒன்றாகிய அழகிய சிறிய தினையைக் காக்கின்ற பரணின் மேல் உள்ள குறவனது கொள்ளிக் கட்டையினால் அஞ்சிப்போன நல்ல யானையானது விண்மீன் ஒளிவிடுதலால் உண்டாம் மிக்க ஒளியை அஞ்சும் வான் அளாவிய மலையையுடைய தலைவன் உன்னைப் பொருந்துவதற்கு முன்பாக, விரும்பும்படி பருத்து இவை நல்ல என்று கூறும் சொற்களைப் படைத்தன.

படர் - துன்பம்; கால் - நீர்த்துளி; மேவர - விரும்பும்படி; சேணோன் - பரணில் வாழ்பவன்; ஞெகிழி - கொள்ளிக்கட்டை.

358. முல்லை — தோழி கூற்று

வீங்குஇழை நெகிழ விம்மி ஈங்கே
எறிகண் பேதுறல் ஆய்கோடு இட்டு
வாய பற்றுநின் படர்சேண் நீங்க
வருவேம் என்ற பருவம் உதுக்காண்
தனியோர் இரங்கும் பனிகூர் மாலைப்
பல்ஆன் கோவலர் கண்ணிச்
சொல்லுவ அன்ன முல்லைவெண் முகையே.

— கொற்றன்

தலைமகன் பிரிவிடைக் கிழத்தியைத் தோழி வற்புறுத்தியது.

செறிவுற்றிருந்த அணிகலன்கள் நெகிழும்படி அழுது இவ்விடத்தே ஆராய்வதற்குரிய கோடுகளைச் சுவரில் இட்டு நீர்த் துளிகளை வெளிப்படுத்தும் கண்களுடனே மயங்குதல் வேண்டா. அவர் வாய்ச்சொற்களை நம்புவாயாக. நின் துன்பம் நெடுந் தொலைவு நீங்கும்படியாக மீண்டுவருவேம் என்று தலைவர் கூறிய கார்ப்பருவம் இதோ வரக் காண்பாய். முல்லையினது வெள்ளிய அரும்புகள், தலைவரைப் பிரிந்து தனித்திருப்போர் வருந்துதற்குக் காரணமாகிய மாலைக் காலத்திலே பல பசுக்களை யுடைய இடையர்களது மாலையினிடத்தே இப் பருவத்தை வெளிப்படுத்திச் சொல்லுவன போன்றன.

தலைவர் குறித்துச் சென்ற கார்ப்பருவம் வந்ததாதலின் அவர் விரைந்து வருவர் என்று சொல்லித் தேற்றியவாறாம்.

எறிகண்பேதுறல் ஆய்கோடிட்டு என்றும், வாயபற்று என்றும் இங்கு இருதொடராகப் பாடங்கொள்ளப் பெற்றது. வாயபற்று என்னும் பாடமே ஏடுகளில் காணப்படுகிறது. இப் பாடத்திற்கு இட்டுச் என வலிமிகுதல் வேண்டா. அஃறிணைப் பன்மை விகுதியாக 'அஆ வஎன வரூஉம் இறுதி, அப்பால் மூன்றே பலவற்றுப் படர்க்கை'(வினை. 19) எனத் தொல்காப்பியர் வகர ஈறு விதித்தலின் சொல்லுவ என்னும் பாடம் கொள்ளப் பெற்றது. உரினுவ என்பதைச் சேனாவரையர் அஃறிணைப் பன்மையாகக் காட்டுதலும் இங்கு நோக்கத்தகும்.

விம்முதல் - அழுதல்; பேதுறல் - மயங்காதே; ஆய்கோடு இடல் - சுவரில் கோடு இட்டுத் தலைவன் மீண்டுவரும் நாளை எண்ணிக் கணக்கிடுதல்; எறிகல்ண - துளிகளைச் சிந்தும் கண்; கண்ணி - மாலை.

359. மருதம் — தோழி கூற்று

கண்டிசின் பாண பண்புஉடைத்து அம்ம
மாலை விரிந்த பசுவெண் நிலவின்
குறுங்காற் கட்டில் நறும்பூஞ் சேக்கைப்
பள்ளி யானையின் உயிர்த்தனன் நசைஇப்
புதல்வற் றழீஇயினன் விறலவன்
புதல்வன் தாய்அவன் புறம்கவைஇ யினளே.

— பேயன்

பரத்தையிற் பிரிந்துவந்த தலைமகன் வாயில் வேண்டிப் பெறாது தானே புக்குக்கூடியது கண்டு, தோழி பாணற்குச் சொல்லியது.

பாண! வெற்றியையுடைய தலைவன் மாலைக் காலத்திலே பரந்த இளமையான வெள்ளிய நிலா ஒளியில் குறுகிய கால்களை யுடைய கட்டிலிடத்தேயுள்ள நறுமணமுள்ள மலர்ப்படுக்கை யில், படுத்திருக்கும் யானையைப்போலப் பெருமூச்சுவிட்டானாகி, விருப்பத்தினால் தன் மகனைத் தழுவினான். அம் மகனது தாய் அத் தலைவனது முதுகினைத் தழுவிக் கொண்டாள். இச் செய் கையை நீ பார்ப்பாயாக. இஃது அழகுடைய செயலாகும்.

தலைவி புலவி தணிந்து கூடினாள் என்பதனை உரைத்த வாறு.

பாணன் வாயிலாக வந்து வேண்டிய பொழுது புலவி கொண்டு மறுத்தாள் தலைவி. ஆயின் தலைவன் தானே பள்ளி யிடத்து வந்து புதல்வனைத் தழுவிய காலத்தில் புலவி நீங்கினாள் என்பதனை வெளிப்படுத்தவாறு.

பண்பு - கணவனைப் பேணும் குண நலம்; பசுவெண் திங்கள் - இளந்திங்களின் வெண்ணிற ஒளி; சேக்கை - படுக்கை; உயிர்த்தல் - பெருமூச்சுவிடல்.

இப் பாட்டை, தலைவியின் மாண்புகளை அகம்புகல் மரபின் வாயில்கள் தம்முட் கூறியது என்பர் இளம்பூரணர் (தொல், கற்பு. 11).

360. குறிஞ்சி — தலைவி கூற்று

வெறிஎன உணர்ந்த வேலன் நோய்மருந்து
அறியான் ஆகுதல் அன்னை காணிய
அரும்படர் எவ்வம் இன்றுநாம் உழப்பினும்
வாரற்க தில்ல தோழி சாரற்
பிடிக்கை அன்ன பெருங்குரல் ஏனல்
உண்கிளி கடியும் கொடிச்சிகைக் குளிரே
சிலம்பின் சிலம்பும் சோலை
இலங்குமலை நாடன் இரவி னானே.

— மதுரை ஈழத்து பூதன்தேவன்

தலைமகன் சிறைப்புறத்தானாக வெறியஞ்சிய தோழிக்குச் சொல்லுவாளாய்த் தலைவி சொல்லியது.

தோழி! பொறுத்தற்கரியதான நினைவினால் உளதாகிய துன்பத்தினை இன்று நாம் அடைந்தாலும் என் நோய்க்கு மருந்து வெறியாடுதல் ஒன்றே என்று தெளிந்த வேலன் அந் நோயைத் தீர்ப்பதற்குரிய மருந்தினை அறியாதான் ஆதலை நம் தாய்

காணும் பொருட்டாக, மலைச்சாரலில் பெண்யானையின் கையை ஒத்துத்தோன்றும் பெரிய கதிர்க்கொத்தில் உள்ள தினையை உண்ணவரும் கிளிகளை ஓட்டும் குறமகளின் கையிலுள்ள குளிர் என்னும் கருவி பக்கமலைகளில் ஒலி செய்கின்ற சோலைகள் விளங்கும் மலைநாட்டையுடைய தலைவன் இராக்காலத்திலே இங்கே வாராது இருப்பானாக. இஃது என் விருப்பமும் ஆகும்.

படர் - நினைவு; எவ்வம் - துன்பம்; வெறி - வெறியாட்டு; சிலம்பின் சிலம்பும் - பக்கமலைகளில் ஒலிக்கும்; சிலம்புபோல ஒலி செய்யும் என்றும் உரைப்பர். குளிர் - கிளியோட்டும் கருவி.

361. குறிஞ்சி — தலைவி கூற்று

அம்ம வாழி தோழி அன்னைக்கு
உயர்நிலை உலகமும் சிறிதால் அவர்மலை
மாலைப் பெய்த மணம்கமழ் உந்தியொடு
காலை வந்த முழுமுதற் காந்தள்
மெல்இலை குழைய முயங்கலும்
இல்உய்த்து நடுதலும் கடியா தோளே.

—கபிலர்

வரைவு மலிந்தவழித் தோழி, 'நன்கு ஆற்றினாய்' என்றாட்குக் கிழத்தி சொல்லியது.

தோழி! ஒன்று கூறுவேன் கேட்பாயாக. தலைவருடைய மலையில் மாலையிலே பெய்த மழையினால் உண்டான நறுமணம் கமழும் ஆற்றுநீருடனே காலையில் ஊரை அண்மிவந்த காந்தட் செடியினது மென்மையான இலைகள் வளையும்படியாகத் தழுவு தலையும் வேரொடு கூடிய அந்தக் காந்தட் செடியினை வீட்டில் கொண்டு வந்து நடுதலையும் விலக்காதவளாகிய நம் அன்னைக்கு உயர்ந்த நிலையினதாகிய தேவருலகமும் கைம்மாறாகத் தருதற்கு நோக்குமிடத்துச் சிறிதாகும்.

தலைவனுடைய மலையிலிருந்து வந்த காந்தளைப் பெற்று அவனாகவே கருதி ஆற்றியிருந்தேன் என்று சொல்லியபடியாம்.

உந்தி - ஆறு; முழுமுதல் - வேரொடு கூடிய அடிப்பகுதி; கடிதல் - விலக்குதல்.

இப் பாட்டை, தலைவனைப் பெற்றவழி மகிழ்ந்து தலைவி தோழிக்கு உரைத்தது என்பர் நச்சினார்க்கினியர் (தொல். களவு. 20).

362. குறிஞ்சி — தலைவன் கூற்று

முருகுஅயர்ந்து வந்த முதுவாய் வேல
சினவல் ஓம்புமதி வினவுவது உடையேன்
பல்வேறு உருவின் சில்அவிழ் மடையொடு
சிறுமறி கொன்றுஇவள் நறுநுதல் நீவி
வணங்கினை கொடுத்தி ஆயின் அணங்கிய
விண்தோய் மாமலைச் சிலம்பன்
ஒண்தார் அகலமும் உண்ணுமோ பலியே.
— வேம்பற்றூர்க் கண்ணன் கூத்தன்

வெறி விலக்கித் தோழி அறத்தொடு நின்றது.

முருகப் பெருமானை வழிபட்டு வந்த பேரறிவு வாய்ந்த வேலனே! கோபித்துக் கொள்ளுதலைப் பாதுகாப்பாயாக. நின்னிடத்துக் கேட்பதாகிய செய்தி ஒன்று உடையேன். சிலவான தோற்றத்தையுடைய பலியுடனே சிறிய ஆட்டுக்குட்டியையும் கொன்று இத் தலைவியினுடைய நறுமையான நெற்றியைத் தடவி முருகனை வணங்கி அவனுக்குப் பலியாகக் கொடுப்பாயானால் இவளை வருத்திய வானத்தை அளாவும் பெரிய மலைப்பக்கத்துக் குரிய தலைவனுடைய ஒள்ளிய மாலை அணிந்த மார்பகமும் நீ கொடுக்கும் பலியை ஏற்றுக் கொள்ளுமோ?

இவளுடைய நோய் ஒரு தலைவனால் வந்தது என்பதனைப் புலப்படுத்தவாறாம்.

முது - பேரறிவு, முதுமை; அவிழ் - சோறு; மடை - தெய்வத்துக்கு இடும் பலி.

சிலம்பனால் வந்தது எனவே சிலம்பன் யாவன் என்னும் வினாவும் அதனைத் தொடர்ந்து அத் தலைவனுக்கு மணம் செய்து கொடுத்தலும் நேரும் என்பதாம்.

இப் பாடலை, வெறியாடுமிடத்து வேலற்குச் சொல்லு வாளாய்த் தோழி சொல்லியது என்பர் இறையனாரகப் பொருள் நூலார். இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும், வேலனொடு கூறுதற்கண் தலைவி உசாவியது என்பர் (தொல், களவு. 24, பொருளியல், 13).

363. பாலை — தோழி கூற்று

கண்ணி மருப்பின் அண்ணல் நல்ஏறு
செங்கோற் பதவின் வார்குரல் கறிக்கும்
மடக்கண் மரையா நோக்கி வெய்துற்றுப்

புல்அரை உகாஅய் வரிநிழல் வதியும்
இன்னா அருஞ்சுரம் இறத்தல்
இனிதோ பெரும இன்துணைப் பிரிந்தே.

— செல்லூர்க் கொற்றன்

பிரிவு உணர்த்தப்பட்ட தோழி கிழவற்குச் சொல்லியது.

பெருமானே! இனிய தன் துணைவியைப் பிரிந்து, கண்ணி சுற்றிய கொம்பினோடு தலைமையுடைய நல்ல மலை எருது செவ்விய தண்டுகளைக் கொண்டுள்ள அறுகம்புல்லினது நீண்ட கொத்துகளைக் கடித்துத் தின்னும் அழகு பொருந்திய கண்ணை யுடைய மலைப் பசுவைப் பார்த்துப் பெருமூச்சுவிட்டுப் புல்லிய அடியையுடைய உகாஅய் மரத்தினது புள்ளிகளையுடைய நிழலிலே தங்குகின்ற இன்னாத கடத்தற்கு அரிய பாலை வழியைக் கடத்தல் இனிமையுடையதோ?

தலைவியைப் பிரிந்து செல்லுதல் துன்பம் தருவது என்பதாம்.

கண்ணி - ஒருவகை மாலை. பதவு - அறுகம்புல். வரிநிழல் - தழைகளின் நெருக்கமின்மையால் திட்டுதிட்டாகத் தோன்றும் நிழல்.

364 மருதம் — இற்பரத்தை கூற்று

அரில்பவர்ப் பிரம்பின் வரிப்புற நீர்நாய்
வாளை நாள்இரை பெறூஉம் ஊரன்
பொன்கோல் அவிர்தொடித் தற்கெழு தகுவி
எற்புறங் கூறும் என்ப தெற்றென
வணங்குஇறைப் பணைத்தோள் எல்வளை மகளிர்
துணங்கை நாளும் வந்தன அவ்வரைக்
கண்பொர மற்றுஅதன் கண்அவர்
மணம்கொளற்கு இவரும் மள்ளர் போரே.

— ஔவையார்

வேறு ஒரு பரத்தை தன்னைப்புறங்கூறினாள் எனக் கேட்ட இற் பரத்தை அவட்குப் பாங்காயினார் கேட்பக் கூறியது.

பிணக்குடைய கொடிப்பிரம்புகளைப் போன்ற கோடுகள் பொருந்திய வரிகளைத் தன்முதுகிலே கொண்டுள்ள நீர் நாயானது வாளை மீனாகிய நாட்காலை உணவைப் பெறும் ஊருக்குத்தலைவனுடைய பொன்னாலாகிய திரட்சியும் விளக்கமு முடைய வளை அணிந்த தனக்குப் பொருந்திய தகுதியையுடைய பரத்தை என்னைப் புறங்கூறுவள் என்று கூறுவர். அவள் கூற்றுத்

தெளிவுறும்படி வளைந்த தோட்சந்தையுடைய மூங்கிலைப் போன்ற தோள்களில் ஒளிபடைத்த வளை அணிந்த மகளிர்க் குரிய துணங்கைக் கூத்தாடும் நாள்களும் வந்துள்ளன. அக் காலத்திலே அத் துணங்கைக் கூத்தினிடத்தே ஒருவர் கண் மற்றொருவர் கண்ணுடன் தாக்க, அம் மகளிரது மணத்தைக் கொள்ளுதற்கு மள்ளருடைய சேரிப் போரும் வந்து விரும்பிக் கொள்ளப்படும்.

என்னை விரும்பி அடைந்த தலைவனைத் துணங்கையில் என் வசமாக்குவேன் என்று தன் ஆற்றல் தோன்ற உரைப்பா ளாயினாள்.

பவர் - கொடி; நாள் இரை - நாட்காலையிலே பெறும் உணவு. தெற்றெனல் - தெளிவு பெறுதல்; இவரும் - விரும்பி வரவேற்கப்படும்; வந்து பொருந்தும் என்றும் ஆம். துணங்கை - மகளிர் விளையாட்டில் ஒன்று, இஃது ஆடவருடன் சேர்ந்து கைபிணைந்து ஆடப்படுவது.

365. குறிஞ்சி — தோழி கூற்று

கோடுஈர் இலங்குவளை நெகிழ நாளும்
பாடுஇல கலிழ்ந்து பனிஆ னாவே
துன்அரு நெடுவரைத் ததும்பி அருவி
தண்ணென முழவின் இமிழ்இசை காட்டும்
மருங்கில் கொண்ட பலவின்
பெருங்கல் நாடநீ நயந்தோள் கண்ணே.

— மதுரை நல்வெள்ளி

'யான் வரையும் துணையும் ஆற்றவல்லளோ?' என வினாவிய கிழவற்குத் தோழி சொல்லியது.

நெருங்குதற்கு அரிதான நெடிது உயர்ந்த மலைப்பக்கத்திலே நிறைந்து வழிகின்ற அருவி தண்ணென்ற ஒலியுடைய முழவினைப் போல ஒலிக்கின்ற ஆரவாரத்தை வெளிப்படுத்தும் பக்கத்தில் கொண்ட பலா மரங்களையுமுடைய பெரிய மலை நாடனே! நின்னால் விரும்பப்பட்ட தலைவியின் கண்கள், சங்கை அறுத்துச் செய்த வளையல் நெகிழ்ந்துவர நாள்தொறும் துயில் பொருந்துதல் இல்லாதனவாய்க் கலங்கிச் சிந்தும் நீர்த்துளிகளையுடைய வாயின.

தலைவி நின்னைப் பிரிந்து ஆற்றியிராள் என்று எடுத்துரைத் தவாறு.

கோடு - சங்கு; கலிழ்தல் - கலங்குதல். பல - பலா.

இப் பாடலை, யான் வரையுந் துணையும் ஆற்றுவளோ என்ற தலைமகற்குத் தோழி ஆற்றாள் என்று கூறியது என்பர் நச்சினார்க்கினியர் (தொல். களவு. 23).

366. குறிஞ்சி — தோழி கூற்று

பால்வரைந்து அமைத்தல் அல்லது அவர்வயின்
சால்புஅளந்து அறிதற்கு யாஅம் யாரோ
எனயான் கூறவும் அமையாள் அதன்தலைப்
பைங்கண் மாச்சுனைப் பல்பிணி அவிழ்ந்த
வள்இதழ் நீலம் நோக்கி உள்அகைபு
அழுத கண்ணள் ஆகிப்
பழுதுஅன்று அம்மஇவ் ஆயிழை துணிவே.

—பேரிசாத்தன்

காவல் மிகுதிக்கண் வேறுபட்ட தலைமகளது வேறுபாடு கண்டு 'இவ் வேறுபாடு எற்றினான் ஆயது' என்று செவிலி வினாவத் தோழி கூறியது.

ஆய்ந்த அணிகலன்களைப் பூண்ட இத் தலைவி, பழவினைப் பயனால் வரையறுக்கப்பட்ட தல்லாமல் அத் தலைவர் திறத்தில் தகுதியை வரையறுத்து அறிவதற்கு யாம் எத் தகுதியையுடையோம் என்று யான் எடுத்துச் சொல்லவும், அமைதி பெறாளாய், அதன் மேலும் பசிய இடத்தையுடைய கரிய சுனையிடத்திலே பல கட்டுகள் அவிழ்ந்த வளவிய இதழ்களையுடைய நீல மலரைப் பார்த்து நெஞ்சுள்ளே வருந்தி அழுது நீர் சிந்தும் கண்ணையுடையளாய இந்த ஆயிழையின் துணிவு குற்றமற்றது.

நீலமலர் தந்து நட்புப் பூண்டுள்ள ஒருவனை இவள் காதலித்தாள் என்பதாம். நீலப்பூவைக் கண்டு அழுதது அத் தகையதான நீலமலரைத் தனக்கு அளித்த தலைவனை நினைந்ததைக் குறிக்கும்.

ஏடுகளில் வெறியாள், வேறுயான், வெனயான் என மூவேறு வகைப்பட்ட பாடங்கள் காணப்படுகின்றன. அவற்றுள், வெறியாட்டெடுப்பது செவிலி, தாயர் முதலியவராலேயே யன்றி தோழியால் அன்று. எனவே வெறியாள் என்னும் பாடம் சற்றும் பொருந்தாமை உணரப்படும். வேறு என்னும் சொல் மாறு என்னும் பொருளில் வருதலின், எதற்கு மாறு என்று சொல்லுவதற்கு இயலாமையின், அதுவும் தள்ளத்தக்கதே. எனவே முன்வரும் கருத்துடன் இயைந்து வரும் எனயான் என்னும் பாடமே ஈண்டுக் கொள்ளப்பெற்றது.

குறுந்.—21

பால் - ஊழ், பழவினை; பிணி - கட்டு, முறுக்கு; அதன்தலை - அதன் மேலும்; அசைபு - வருந்தி.

367. மருதம் — தோழி கூற்று

கொடியோர் நல்கார் ஆயினும் யாழநின்
தொடிவிளங்கு இறைய தோள்கவின் பெறீஇயர்
உவக்காண் தோழி அவ்வந் திசினே
தொய்யல் மாமழை தொடங்கலின் அவர்நாட்டுப்
பூசல் ஆயம் புகன்றுஇழி அருவி
மண்ணுறு மணியின் தோன்றும்
தண்நறுந் துறுகல் ஓங்கிய மலையே.

— மதுரை மருதன்இளநாகன்

வரைவு உணர்த்திய தோழி தலைமகட்குக் கழியுவகை மீதூராமை உணர்த்தியது. வரைவு நீட்டித்த இடத்து ஆற்றளாகிய தலைமகளைத் தோழி ஆற்றும் வகையான் ஆற்றுவித்ததூஉம் ஆம்.

நெகிழ்ச்சியை உண்டுபண்ணும் பெரிய மழை பெய்யத் தொடங்குதலினால் அத் தலைவரது நாட்டிலுள்ள ஆரவாரத்தை யுடைய மகளிர் திரள் விரும்பி நீராடும்பொருட்டுப் புகுகின்ற அருவியானது கழுவப்பட்ட பளிங்கைப்போலத் தோன்றுகின்ற குளிர்ச்சியையுடைய குண்டுக்கற்கள் உயர்ந்த மலையை, கொடுமையுடைய தலைவர் தண்ணளி செய்யாவிடினும் நின்னுடைய வளையல் விளங்குகின்ற சந்துகளையுடைய நின் தோள்கள் அழகுபெறும் வண்ணம் அங்கே வந்தாயாய்ப் பார்ப்பாயாக.

நீ தலைவரது மலையைக் கண்டு ஆற்றியிருப்பாய் என்றபடியாம்.

தொய்யல் - தொய்வு, நெகிழ்ச்சி; பூசல் - ஆரவாரம்; துறுகல் - குண்டுக்கல்.

368. மருதம் — தலைவி கூற்று

மெல்லிய லோயே மெல்லிய லோயே
நல்நாண் நீத்த பழிதீர் மாமை
வன்பின் ஆற்றுதல் அல்லது செப்பின்
சொல்ல கிற்றா மெல்லிய லோயே
சிறியரும் பெரியரும் வாழும் ஊர்க்கே
நாள்இடைப் படாஅ நளிநீர் நீத்தத்
திண்கரைப் பெருமரம் போல
தீதுஇல் நிலைமை முயங்குகம் பலவே.

— நக்கீரர்

வரைவு மலிந்த தோழிக்குக் கிழத்தி கூறியது.

மென்மையான இயல்பினையுடையாய்! மெல்லியலோயே! நல்ல நாணத்தைவிடச் செய்த குற்றமற்ற மாமையை நம்முடைய வலிய இயல்பினால் பொறுத்திருத்தல் அல்லாது சொல்லுதற்கும் ஆற்றல் இல்லாதவளாகிய மென்மை இயல்பினையுடையாய்! சிறியோரும் பெரியோரும் வாழுகின்ற ஊரில் ஒரு நாளேனும் இடையீடின்றிச் செறிவான நீரையுடைய வெள்ளத்தினால் சிதைவுறாத திண்மையான கரையிலே உள்ள பெரிய மரத்தைப் போலத் தீது இல்லாத நிலைமையால் பலமுறை தலைவரை முயங்குவேம்.

துன்பம் குறுக்கிடினும் நிலைபெற மகிழ்ந்து வாழ்வோம் என்பதாம்.

வெள்ளம் வந்து மோதியபோதும் அசையாது நிற்கும் வலியமரம் எவ்வித இடையூறும் இன்றித் தழைத்து நிற்கிறது. அது போலப் பிறர் கூறிய பழிச் சொற்களால் எவ்வித இடையூறும் நேராது வாழ்வு வளம் பெறும் என்பதாம்.

நாண் - நாணம்; வன்பு - வன்மை, உளத்திண்மை; மாமை - மாமைநிறம்; இது மாந்தளிர் போன்றது என்பர்; தீது இல் நிலைமை - தீங்கு இல்லாத சூழல்.

369. பாலை — தோழி கூற்று

அத்த வாகை அமலை வால்நெற்று
அரிஆர் சிலம்பின் அரிசி ஆர்ப்பக்
கோடை தூக்கும் கானம்
செல்வாம் தோழி நல்கினர் நமரே.

— குடவாயிற்கீரத்தனார்

தோழி கிழத்திக்கு உடன்போக்கு உணர்த்தியது.

தோழி! நம்மவராகிய தலைவரும் அருள்புரிந்தார். ஆதலினால் அரிய வழியிடத்திலேயுள்ள ஒலியுடைய வாகைமரத்தின் வெள்ளிய நெற்றுகளின் உள்ளீடான விதைகள் உள்ளிடு பரலைக் கொண்ட சிலம்பினைப் போல ஆரவாரிக்க மேல் காற்று கடிது வீசி அலைக்கின்ற பாலை நிலத்தில் செல்வோமாக.

தலைவனோடு செல்வோமாக என்பதாம். தலைவன் தலைவியை உடன் கொண்டு தன்னூர் சென்று மணம்புரிவதாகத் தெரிவித்தமையால் அவனுடன் நாமும் செல்லுதல் வேண்டும் என்று அறிவுறுத்தியபடியாம்.

அத்தம் - அரிய காட்டுவழி: அமலை - ஒலி: அரி - சிலம்பின் உள்ளிடு பரல்.

370. மருதம் — பரத்தை கூற்று

பொய்கை ஆம்பல் அணிநிறக் கொழுமுகை
வண்டுவாய் திறக்கும் தண்துறை ஊரனொடு
இருப்பின் இருமருங் கினமே கிடப்பின்
வில்லக விரலின் பொருந்திஅவன்
நல்அகம் சேரின் ஒருமருங் கினமே.

— வில்லகவிரலினார்

கிழத்தி தன்னைப் புறனுரைத்தாள் என்பது கேட்ட பரத்தை அவட்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது.

பொய்கையில் வளரும் ஆம்பலினது அழகிய நிறத்தோடு கூடிய வளமான அரும்பினை ஊதி வண்டுகள் இதழ்வாயைத் திறக்கும் குளிர்ந்த நீர்த்துளிகளையுடைய ஊருக்கு உரியவனான தலைவனோடு கூடியிருப்பின் இரண்டு உடலையுடையோம். அவனோடு துயின்றால் வில்லைக் கையகப்படப் பிடித்த விரல்களைப் போலப் பிணைந்து ஓர் உடலையுடையேம்.

தலைவனும் தாமும் ஒருமனப்பட்டு ஒன்றிய காதலினர் என்பதாம்.

இருப்பின், கிடப்பின் என்பதால் தலைவன் விருப்பத்திற்கு ஏற்பத் தான் ஒழுகுவதன்றித் தனக்கென ஒரு தனி எண்ணமும் இல்லை எனத் தங்களது ஒன்றுபட்ட வாழ்வை வெளிப்படுத்தாளாயிற்று.

ஆம்பற் போதின் மலரும் செவ்வி அறிந்து வண்டு அதன் வாயைத் திறப்பது போலப் பரத்தையின் செவ்வி அறிந்து அவளை மகிழ்வித்து இன்புறுவான் என்னும் குறிப்பும் பெறப் படுதலின் இஃது இறைச்சிப் பொருளாம்.

கொழுமுகை - மலரும் பருவத்தையுடைய பெரும்போது.

371. குறிஞ்சி — தலைவி கூற்று

கைவளை நெகிழ்தலும் மெய்பசப்பு ஊர்தலும்
மைபடு சிலம்பின் ஐவனம் வித்தி
அருவியின் விளைக்கும் நாடனொடு
மருவேன் தோழிஅது காமமோ பெரிதே.

— உறையூர் முதுகூத்தன்

வரைவிடை வற்புறுத்தும் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

தோழி! மேகங்கள் படிகின்ற மலைப் பக்கத்தில் ஐவனம் என்னும் மலை நெல்லை விதைத்து அருவி நீரினாலே விளைவித்துக்கொள்ளுகிற நாட்டையுடைய தலைவனால் என் கைகளில் உள்ள வளைகள் கழலுதலையும் மேனியில் பசலை பரத்தலையும் அடையேன். ஆயினும் அக் காமமோ என் ஆற்றலுக்கு பெரிதாயுள்ளது.

காமம் மிகப் பெரிதாயினமையின் நலிவுற நேர்ந்தது என்பதாம்.

மை - மேகம்; ஐவனம் - மலைநெல்.

ஐவனம் வித்தி அருவியின் விளைக்கும் நாடனாதலின் அவன் என்னையும் மணந்து பயன்பெறச் செய்வான் என்னும் குறிப்பு வெளிப்படுதலின் இஃது இறைச்சிப் பொருளாம்.

372. நெய்தல் — தோழி கூற்று

பனைத்தலைக்
கருக்குடை நெடுமடல் குருத்தொடு மாய
கடுவளி தொகுத்த நெடுவெண் குப்பைக்
கணம்கொள் சிமைய உணங்கும் கானல்
ஆழிதலை வீசிய அயிர்ச்சேற்று அருவிக்
கூழைபெய் எக்கர்க் குழீஇய பதுக்கை
புலர்பதம் கொள்ளா இரவை
அலர்எழுந் தன்றுஇவ் அழுங்கல் ஊரே.

— விற்றூற்று மூதெயினனார்

இரவுக்குறி வந்து ஒழுகாநின்ற தலைமகன் கேட்பத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.

பனையின் உச்சியிலுள்ள கருக்கைக் கொண்டுள்ள நீண்ட மடல் குருத்திலைகளோடு மறையும் வண்ணம் மிகுந்த சூறைக் காற்றினால் ஒதுக்கிச் சேர்த்த உயர்ந்த வெண்ணிற மணற்குவியல் தொகுதிகளைக் கொண்ட மீன் முதலியன காய்கின்ற கடற்கரையில் கடலானது அம் மணற் குன்றுகளிலே வீசிய கூந்தல் போன்ற தோற்றமுடைய கருமணற் சேற்று ஒழுங்குகள் உலரும் பருவம் அடையா இரவுக்காலத்திலேயே இந்த ஆரவாரத்தையுடைய் ஊரில் பழிச்சொல் எழுவதாயிற்று.

ஊரலர் தோன்றியதனால் விரைவில் மணஞ்செய்து கோடல் தக்கது எனத் தோழி அறிவுறுத்தினாளாயிற்று.

கருக்கு - பனைமடலின் இரு விளிம்புகளிலும் காணப்பெறும் மரமறுக்கும் வாள் போன்ற பகுதி. குப்பை - குவியல், மேடு; பதுக்கை - சிறுமேடு; இர - இரவு.

அலர் மிக விரைந்து எழுந்தது என்பதுவே இங்குத் தோழி சுட்டுவது. இரவுக்குறி நிகழ்ச்சி அலை ஒதுக்கும் கருமணலின் ஈரம் புலரும் இராக்காலத்துக்குள்ளேயே அத்தனை விரைவாக அலர் எழுந்தது என்பது இங்கே குறிக்கப் பெறுகிறது. இராப் பொழுதை 'இரவை' என்று சுட்டும் பாடமே ஏடுகளில் காணப்படுகிறது. எனவே இப் பாடம் கொள்ளப் பெற்றது.

மணல் மேட்டில் வீசிய கருமணல் ஒழுங்குகள் புலர்வதற்குள் அலர் எழுந்தது என்பது தலைவன் வந்த சுவடு மறைவதற்குள் ளாகவே அலர் தோன்றிற்று என்னும் குறிப்பை வெளிப்படுத் துதலின் இஃது இறைச்சிப் பொருளாம்.

373. குறிஞ்சி — தோழி கூற்று

நிலம்புடை பெயரினும் நீர்தீப் பிறழினும்
இலங்குதிரைப் பெருங்கடற்கு எல்லை தோன்றினும்
வெவ்வாய்ப் பெண்டிர் கௌவை அஞ்சிக்
கேடுஎவன் உடைத்தோ தோழி நீடுமயிர்க்
கடும்பல் ஊகக் கறைவிரல் ஏற்றை
புடைத்தொடுபு உடையூப் பூநாறு பலவுக்கனி
காந்தள்அம் சிறுகுடிக் கமழும்
ஓங்குமலை நாடனொடு அமைந்தநம் தொடர்பே.

— மதுரைக் கொல்லன் புல்லன்

அலர் மிக்கவழி ஆற்றாளாகிய தலைமகட்குத் தோழி சொல்லியது.

தோழி! நீண்ட மயிர்களையும் கூரிய பற்களையும் உடைய கறுத்த விரல்களையுடைய கருங்குரங்கின் ஆண் பக்கத்திலே தோண்டியதனால் உடைந்து பொலிவுபெற்ற மணம் வீசும் பலவினது பழம், காந்தளையுடைய அழகிய சிறிய ஊரினிட மெல்லாம் மணக்கும் ஓங்கிய மலை நாட்டினனான தலைவ னுடன் பொருந்திய நமது நட்பானது, உலகம் இடம்விட்டுப் பெயர்ந்தாலும் நீரானது தீயாக மாறுபட்டாலும் விளங்குகின்ற பெரிய கடலுக்கு முடிவு நேர்ந்தாலும் வெவ்விய வாயையுடைய மகளிரின் பழிச் சொல்லை அஞ்சிக் கெடுதல் எவ்வாறு உண்டாகும்?

எனவே, என்றும் அவன் நட்புக் கெடாது என்பதாம்.

புடைபெயர்தல் - விலகுதல்; பிறழ்தல் - தன் நிலை மாற்ற முறுதல்; பூ - பொலிவு; எல்லை - முடிவு; வரம்பு என்றும் கொள்ளலாம். கௌவை - பழிச்சொல்; தொடர்பு - நட்பு.

374. குறிஞ்சி — தோழி கூற்று

எந்தையும் யாயும் உணரக் காட்டி
ஒளித்த செய்தி வெளிப்படக் கிளந்தபின்
மலைகெழு வெற்பன் தலைவந்து இரப்ப
நன்றுபுரி கொள்கையின் ஒன்றா கின்றே
முடங்கல் இறைய தூங்கணங் குரீஇ
நீடுஇரும் பெண்ணைத் தொடுத்த
கூடினும் மயங்கிய மையல் ஊரே.

— உறையூர்ப் பல்காயனார்

அறத்தொடு நின்றமை தோழி கிழத்திக்கு உரைத்தது.

நம் தந்தையும் தாயும் உணரும்படியாக இதுவரை மறைத்து வைத்திருந்த செய்தியாகிய களவொழுக்கத்தை வெளிப்படும்படி யான் சொன்ன பிறகு, மலைகள் பொருந்திய தலைவன் நம்மிடம் வந்து வரைதலை வேண்டி இரந்ததனால், நம் சுற்றத்தார் நன்மை செய்யும் கொள்கையினாலே ஒருப்பட, வளைவான சிறகினை யுடையவாகிய தூக்கணங்குருவி உயர்ந்த கரிய பனைமரத்தில் தொடுத்து அமைத்த கூட்டைக்காட்டினும் பல வகையாக மயக்க முற்றிருந்த இந்த ஊரும் நம்மோடு ஒன்றுபட்டது.

நான் அறத்தொடு நின்றமை காரணமாக நமது தலைவனது வரைவுக்கு உடன்பட்டனர் என்பதாம்.

ஒளித்த செய்தி - களவுச் செய்தி; முடங்கல் - வளைவு; கூட்டினும் என வரற்பாலது 'நீடி(டுஇ)ரும்' என்னும் முன்னை அடிக்கு ஏற்ப எதுகை நோக்கி வந்தது.

இப் பாட்டை, அறத்தொடு நின்றமை தோழி தலைவிக்கு உரைத்தது என்பர் நச்சினார்க்கினியர் (தொல். களவு. 23).

375. குறிஞ்சி — தோழி கூற்று

அம்ம வாழி தோழி இன்றுஅவர்
வாரார் ஆயினோ நன்றே சாரல்
சிறுதினை விளைந்த வியன்கண் இரும்புனத்து

இரவுஅரி வாரின் தொண்டகச் சிறுபறை
பானாள் யாமத்தும் கறங்கும்
யாமம் காவலர் அவியன்மார் அன்றே.

இரவுக்குறிக்கண் சிறைப்புறமாகத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய், இருபொழுதும் மறுத்து வரைவு கடாயது.

தோழி! ஒன்று கூறுவன் கேட்பாயாக. மலைப்பக்கங்களிலே சிறுதினை விளைந்து கிடக்கிற பரந்த இடத்தையுடைய பெரிய கொல்லையில் இராப்பொழுதில் தினைக்கதிரை அரிபவர்களைப் போலத் தொண்டகமாகிய சிறிய பறை பாதி இரவிலும் இராக் காவலாளிகள் தூங்காமையினாலே ஒலிக்கும். இன்று அத் தலைவர் வாராதிருப்பின் நன்றாகும்.

தலைவர் இரவினும் குறியிடத்து வருதல் நன்றன்று என்று தோழி எடுத்தியம்பியவாறாம்.

ஒலியடங்காமை என்னும் பொருளில் அவியன்மான்றே, அவியன்மாரன்றே என்னும் பாடங்களே ஏடுகளில் காணப்படு கின்றன. இவற்றுள் ஓசை இனிமையுடைய அவியன் மாரன்றே என்னும் பாடம் கொள்ளப்பெற்றது.

தொண்டகப்பறை - குறிஞ்சி நிலத்துக்குரிய பறை; காவலர் கடுகுதலால் இரவுக் குறியை மறுத்து இனி வரைந்து கோடலே தக்கது என எடுத்துக் கூறியவாறாம்.

376. நெய்தல் — தலைவன் கூற்று

மன்உயிர் அறியாத் துன்அரும் பொதியில்
சூருடை அடுக்கத்து ஆஅம் கடுப்ப
வேனி லானே தண்ணியள் பனியே
வாங்குகதிர் தொகுப்பக் கூம்பி ஐயென
அலங்குவெயிற் பொதிந்த தாமரை
உள்ளகத் தன்ன சிறுவெம் மையளே.

— படுமரத்து மோசிக் கொற்றன்

பொருள் வலிக்கும் நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லிச் செல வழுங்கியது.

நெஞ்சமே! நிலை பெற்ற உயிர்த் தொகுதியினரால் முற்றவும் அறியப்படாததும் அணுகுதற்கு அரியதுமான பொதிய மலையிலே தெய்வங்களையுடைய பக்கத்திலே ஊறிய தண்ணிய நீரைப்போல வேனிற்காலத்தில் இத் தலைவி தண்மை தருபவளாயுள்ளாள்,

பனிக்காலத்தில் அடங்கிய சூரியனின் கதிர்கள் மறைதலால் குவிந்து அழகிதாக அசைகின்ற வெயிலை உட்பொதிந்துள்ள தாமரை மலரின் உள்ளிடத்தை ஒத்த சிறிய வெம்மையைக் கொண்டுள்ளாள்.

வெயிலுக்கும் பனிக்கும் இதம் தருபவளாகிய இத் தலைவியைப் பிரிந்து செல்லுதல் இயலாது என்பதனைச் சுட்டியவாறாம்.

மன்உயிர் - நிலை பேறுடைய உயிர்த் தொகுதிகள்; துன்னுதல் - அணுகுதல், நெருங்குதல்; ஆஅம் - தண்ணீர்; வாங்கு கதிர் - உள்வாங்கிக் கொண்ட கதிர்; சூரியனின் மறைவில் கதிர்களும் ஒடுங்கிவிடுகின்றன. சூர் - மலைத் தெய்வமாகிய முருகன்; வரையரமகளிரும் ஆவர்.

தண்ணீர் இயற்கையான குளிர்ச்சியுடையது. பொதியமலை மேலுள்ள சுனைநீர் மேலும் குளிர்ச்சி பொருந்தியதாகும். ஆரம் என்னும் பாடமும் பொதியமலையுடன் பொருந்துவதே. எனினும் சந்தனம் அரைத்தபின்பே குளிர்ச்சியையும் மணத்தையும் மிகுவிப்பதாகும். எனவே செயற்கைப் பொருளினும் இயற்கைப்பொருள் ஏற்புடைத்தென்று கருதப்படும். நீர் என்னும் பொருள்தரும் ஆஅம் என்னும் பாடம் ஏடுகளில் மிகுந்து காணப்படுகிறது. எனவே இப் பாடம் கொள்ளப் பெற்றது. 'பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்' என்னும் (குறுந்- 196) கருத்து ஈண்டு ஒப்பு நோக்கத் தகும்.

377. குறிஞ்சி — தலைவி கூற்று

மலர்ஏர் உண்கண் மாண்நலம் தொலைய
வளைஏர் மென்தோள் ஞெகிழ்ந்ததன் தலையும்
மாற்றுஆ கின்றே தோழிஆற் றலையே
எய்தற்கு அமையா நாடனொடு
செய்து கொண்டதுஓர் சிறுநல் நட்பே.

— மோசி கொற்றன்

வரைவிடை 'ஆற்றாள்' எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி அழிந்து கூறியது.

தோழி! நம்மால் முழுமையும் அடைய இயலாத தலைவனோடு யாம் செய்து கொண்டதாகிய ஒரு சிறிய நல்ல நட்பானது பூவினது அழகினை ஒத்த மையுண்ட கண்களின் மாட்சிமைப்பட்ட அழகுகெட வளையல் அணிந்த அழகிய மெல்லிய தோள்கள் மெலிந்ததன் மேலும் அதனை மாற்றும் பொருளாகவும் அமை

கின்றது. அதனால் யான் பொறுத்திருந்தேன்; நீ பொறுக்கும் திறன் பெற்றாயில்லை.

தலைவனுடைய இயல்பை அறிந்திருந்தமையால் ஆற்றியிருந்தேன் என்பதாம்.

மாண்நலம் - மாட்சிமைப்பட்ட அழகு. ஞெகிழ்தல் - நெகிழ்தல், மெலிதல்; மாற்று - போக்கும் பொருள், பரிகாரம்.

தலைவனை முன்பே அறிந்து பழகியவள் தலைவி. ஆனால் வரைந்து உடன் இருக்கும் பேற்றை இன்னும் அடையாதவள். அடைதற்கு இயலாத நிலையில் இப்போதுள்ளாள். இதனைச் சுட்டுவது 'எய்தற்கு அமையா' என்னும் பாடமே. இஃது அடுத்துச் செய்து கொண்டதோர் எனவரும் அடியுடன் அடியெதுகை உடைய பாடமாகும். எனவே இப் பாடம் கொள்ளப் பெற்றது.

378. பாலை — செவிலித்தாய் கூற்று

ஞாயிறு காயாது மரநிழற் பட்டு
மலைமுதல் சிறுநெறி மணல்மிகத் தாஅய்
தண்மழை தலையின் றாகத் தண்ணளிச்
சுடர்வாய் நெடுவேற் காளையொடு
மடமா அரிவை போகிய சுரனே.

— கயமனார்

மகட்போக்கிய செவிலி தெய்வத்திற்குப் பராயது.

தண்ணிய அருளையும் ஒளிவீசும் கூரிய நெடிய வேலையுமுடைய இளைய வீரனோடு இளமையும் மாமை நிறத்தையும் கொண்ட நமது மகள் சென்ற பாலைநிலத்தில் சூரியனே நீ காயாமல் வெயிலே இல்லாது அமைந்த மர நிழல் பொருந்தியதாய் மலையிடத்தேயுள்ள சிறுவழிகள் மணல் மிகவும் பரவப் பெற்றதாய்க் குளிர்ந்த மழையையும் பெய்விப்பாயாக.

மகள் தலைவனோடு சென்றவழி நடந்து கடப்பதற்கு இனிதாய் அமைவதாக என்று ஞாயிற்றை நோக்கி வணங்கி வேண்டியவாறாம்.

தலைவன் ஈரமும் வீரமும் உடையான் என்பதைச் சிறப்பிக்கும் வகையில் 'தண்ணளி' என்னும் பாடம் அமைகிறது. தண்மழை என்னும் முதற்சீர்க்கு ஏற்ற மோனை நயமுடையதாகவும் இஃது அமைகிறது. இங்கே இசையானும் பொருளானும் ஒத்துவருதலின் தண்ணளி என்னும் பாடம் கொள்ளப்பெற்றது.

காய்தல் - வெயிலால் வருத்துதல்; தாஅய் - தாவி, பரந்து; காளை - கட்டிளமையோன்; ஞாயிறு - அண்மைவிளி.

379. குறிஞ்சி — தோழி கூற்று

இன்றுயாண் டையனோ தோழி குன்றத்துப்
பழங்குழி அகழ்ந்த கானவன் கிழங்கினொடு
கண்அகன் தூமணி பெறூஉம் நாடன்
அறிவுகாழ் கொள்ளும் அளவைச் செறிதொடி
எம்இல் வருகுவை நீஎனப்
பொம்மல் ஓதி நீவி யோனே.

நொதுமலர் வரைவுழித் தோழி அறத்தொடு நின்றது

தோழி! குன்றத்தினிடத்துப் பழைய குழியை அகழ்ந்து தோண்டிய கானவன் கிழங்கினோடு இடம் அகன்ற தூய மணியையும் பெறுகின்ற நாட்டையுடையவனும், 'நெருக்கமாக அணிந்த வளையினையுடையாய்! நின்னுடைய அறிவு முதிர்ச்சி பெறுங்காலத்து எம்முடைய இல்லத்திற்குத் தலைவியாக நீ வருவாயாக' என்று நெருக்கமாக உள்ள தலைமயிரைத் தடவியவனும் ஆகிய தலைவன் இன்று எவ்விடத்தில் உள்ளானோ?

தலைவனுக்குத் தலைவிபால் உள்ள ஈடுபாட்டை எடுத்துச் சொல்லியதாம்.

யாண்டையனோ என்று இரங்கற்பொருளில் தோழி எடுத்துரைக்கின்றாள்.

வேடன் கிழங்குடன் மணிபெற்றாற் போல வேட்டைமேற் சென்ற தலைவன் அதனோடு தலைவியையும் பெற்றான் என்னும் குறிப்பு வெளிப்படுவதால் இஃது இறைச்சிப் பொருளாம்.

காழ்கொள்ளுதல் - முதிர்தல்; இல் - இல்லம், வீடு.

காழ்கொள்ளுதல் ஒரு சொல்லாகும். 17ஆம் பாடலில் உரைத்த ஏது ஈண்டும் பொருந்துவதாகும்.

இப் பாட்டைச் செவிலி கேட்பத் தலைவியொடு தோழி உசாவி அறத்தொடு நின்றது என்பர் இளம்பூரணர் (தொல். களவு. 24). நச்சினார்க்கினியர், நொதுமலர் வரையக் கருதிய வழி, தோழி தாய் கேட்பத் தலைவிக்குக் கூறியது என்றும் (தொல் களவு. 23) நொதுமலர் வரைவு கூறி உசாவித் தோழி அறத்தொடு நின்றது என்றும் (தொல். பொருள். 12) எடுத்துக் காட்டுவர்.

380. பாலை — தோழி கூற்று

விசும்புகண் புதையப் பாஅய் வேந்தர்
வென்றுஎறி முரசின் நன்பல முழங்கிப்
பெயல்ஆ னாதே வானம் காதலர்
நனிசேய் நாட்டர் நம்உன் னலரே
யாங்குச்செய் வாம்கொல் தோழி ஈங்கைய
வண்ணத் துய்ம்மலர் உதிர
முன்னர்த் தென்ப பனிக்கடு நாளே.

— கருவூர்க்கதப்பிள்ளை

பனிப் பருவம் குறித்துப் பிரிந்தான் தலைமகன்; பிரிய, பருவ வரவின்கண் வேறுபடுவா ளாயினும், 'கதுமென ஆற்றுவிப்பது அரிது' என்னும் கருத்தினளாய்க் கூதிர்ப்பருவத்துத் தலைமகள் கேட்பத் தனது ஆற்றாமை விளங்கத் தோழி சொல்லியது.

தோழி! வானத்திடம் மறையும் வண்ணம் பரவி, மன்னர் போரில் பகைவர்களை வெற்றி கொண்டு அடிக்கப்படும் முரசத்தைப் போல முழக்கமிட்டு மேகம் மழை பெய்தலை நீங்காது. தலைவரோ மிகவும் தொலைவான நாட்டிலுள்ளார். அவர் நம்மை நினைத்தாரல்லர். ஈங்கையிலுள்ள நிறத்தையும் உளையையும் கொண்ட மலர்கள் உதிர, இனித் தோன்றப் போகிற பனி மிகுந்த குளிரின் கடுமையையுடைய பனிநாள் தோன்றும் என்பர். அதற்கு யாம் என்ன செய்வோம்.

தலைவன் குறித்த பருவத்தில் வரல் வேண்டும் என்பதாம்.

முன்னர்த் தோன்றும் என்பதினும் முன்னர்த் தென்ப என்பது கருத்தைத் தெளிவுற முடித்துக் காட்டுவதாய் உள்ளது. ஏடுகளில் இப் பாடமே காணப்படுகிறது. எனவே இப் பாடம் கொள்ளப்பெற்றது.

ஈங்கை - கூதிர்க்காலத்தில் மலரும் இயல்பினது; வண்ணம் - அழகு; துய் - பஞ்சித்துய் போன்ற உறுப்பு.

381. நெய்தல் — தோழி கூற்று

தொல்கவின் தொலைந்து தோள்நலம் சாஅய்
அல்லல் நெஞ்சமொடு அல்கலும் துஞ்சாது
பசலை ஆகி விளிவது கொல்லோ
வெண்குருகு நரலும் தண்கமழ் கானல்
பூமலி பொதும்பர் நல்மலர் மயக்கி
விலங்குதிரை உடைதரும் துறைவனொடு
இலங்குஎயிறு தோன்ற நக்கதன் பயனே.

வரைவிடை ஆற்றாளாகிய தலைமகளை ஆற்றுவிக்கலுறும் தோழி தலைமகனை இயற்பழித்தது.

வெள்ளை நாரைகள் ஒலி செய்கின்ற குளிர்ந்த மணம் வீசுகின்ற கடற்கரையிலே உள்ள பூக்கள் நிறைந்த சோலையிலுள்ள புதிய மலர்களைக் கலக்கச் செய்து குறுக்கிடும் அலைகள் உடைந்து சிதறும் துறைகளையுடைய தலைவனோடு விளக்கமுற்றுக் காணும் பற்கள் வெளிப்படச் சிரித்து மகிழ்ந்ததன் பயன், பழைய தான அழகு அழியத் தோளின் நலம் கெடத் துன்பத்தையுடைய நெஞ்சத்தோடு இரவு வேளையிலும் தூங்காமல் பசலை உண்டாக நாம் அழிவதுதானோ?

தலைவனிடம் கொண்ட நட்புக்குப் பரிசு நாம் நலம் அழிய வருந்துவது தானோ என்பதாம்.

நாள்மலர் என்பது அன்றலர்ந்த பூவைமட்டுமே குறிக்கும். இங்கே பொதுவாக மலர்களைக் குறிக்கிறது. அழகியமலர் என்னும் பொருளில் நன்மலர் என்னும் பாடமே ஏடுகளில் காணப்படுகிறது. எனவே இப் பாடம் கொள்ளப்பெற்றது.

தொல்கவின் - பழைய அழகு; சாஅய்தல் - தளர்தல், மெலிதல்; அல்லல் - துன்பம்; விளிவது - அழிவது. நரல்தல் - ஒலித்தல்; விலங்குதிரை - குறுக்கிடும் அலைகள்.

382. முல்லை — தோழி கூற்று

தண்துளிக்கு ஏற்ற பைங்கொடி முல்லை
முகைதலை திறந்த நாற்றம் புதல்மிசைப்
பூமலி தளவமொடு தேங்கமழ்பு கஞல
வம்பும் பெய்யுமார் மழையே வம்புஅன்று
கார்இது பருவம் ஆயின்
வாரா ரோநம் காத லோரே.

— குறுங்கீரன்

பருவ வரவின்கண் வேறுபட்ட தலைமகளைத் தோழி, 'பருவம் அன்று; வம்பு' என்று வற்புறீஇயது.

தன்மையான மழைத்துளிகளை எதிர்கொண்ட பசுமையான கொடியாகிய முல்லை அரும்புகள் மலர்ந்ததனால் உண்டாகிய மணம்; புதலிடத்தே மலர்கள் மிகுந்த செம்முல்லையோடு தேன் மணக்கும் வண்ணம் நெருங்கித் தோன்ற, மழையானது காலமல்லாக் காலத்தும் பெய்கின்றது. கார்கால மழையாய் இருக்குமாயின் நம் காதலர் வாராமல் இருப்பாரோ?

தலைவர் சொன்ன சொல் தவறாதவர். ஆதலின் அவர் வாராத காலத்துத் தோன்றும் இது அப் பருவம் அன்று என்பதனைத் தெளிவுறுத்தும் என்பது தோழியின் உரை.

காலமல்லாக் காலத்தும் எனச் சுட்டுதலின் வம்பும் பெய்யு மார் என்னும் உம்மையோடு கூடிய பாடம் சிறப்புடைத்தாக அமைகிறது. இப் பாடமே ஏடுகளில் காணப்படுகிறது. எனவே இப் பாடம் கொள்ளப்பெற்றது.

அமல்தல் - நிறைதல், நெருங்குதல்; தளவம் - செம்முல்லை; கஞலுதல் - நெருங்குதல்; வம்பும் பெய்தல் - காலமல்லாக் காலத்தும் பெய்தல். பெய்யுமார் - பெய்யும்; மார் - அசை.

383. பாலை — தோழி கூற்று

நீஉடம் படுதலின் யான்தர வந்து
குறிநின் றனனே குன்ற நாடன்
இன்றை அளவை சென்றைக்க என்றி
கையும் காலும் ஓய்வன ஒடுங்கித்
தீஉறு தளிரின் நடுங்கி
யாவதும் இலையான் செயற்குஉரி யதுவே.

— படுமரத்து மோசிகீரன்

உடன்போக்கு நேர்வித்து வந்த தோழி, நாணால் வருந்தும் தலைமகளை நாணுக்கெடச் சொல்லியது.

நீ உடன் போக ஒருப்பட்டமையால் அதனை யான் அவனுக்குக் கூறக் குன்ற நாடனாகிய அத் தலைவன் குறியிடத்தே வந்து நின்றுள்ளான். நீயோ 'இன்றைப் பொழுது கழிந்து செல்லலாம்' என்று சொல்லுகின்றாய். கையும் காலும் தளர்வுற்றுச் செயலற்றுப் போம்படி நெருப்பில் விழுந்த தளிரைப் போல நடுங்கி யான் செய்தற்குரிய செயல் எதுவும் இல்லை.

நீ தலைவனுடன் இப்பொழுதே செல்லுவதற்குப் புறப்பட வேண்டும் என்று எடுத்துக் கூறினாளாயிற்று.

ஒடுங்கி என்பது நடுங்கி என்னும் எச்சத்துடன் சேர்ந்து இலை என்பதைக் கொண்டு முடிவு பெறுகிறது. பொருட் பொருத்தத்துக்கு ஏற்பச் செய்து என்னும் வாய்பாட்டிற்குரிய ஒடுங்கி என்னும் பாடமே பொருந்துவதாகக் கொள்ளப் பெற்றது.

தர - செய்தியைச் சொல்ல; அழைத்துவர என்றும் ஆம்; குறி - குறித்த குறியிடம்; சென்றைக்க - செல்க, கழிக; யாவதும் - எதுவும், ஒன்றும்.

இப் பாட்டை எடுத்துக் காட்டி, வருத்த மிகுதியால் தலைவனை வழிபடுதலை மறுத்துக் கூறுமிடத்துத் தலைவிக்குக் கூற்று நிகழும். இத் தோழி கூற்றே சென்றைக்க என்றதனால் தலைவி மறுத்தமை பெற்றாம் என்பர் நச்சினார்க்கினியர் (தொல். களவு. 20).

384. மருதம் — தோழி கூற்று

உழுந்துஉடைக் கழுந்தின் கரும்புடைப் பணைத்தோள்
நெடும்பல் கூந்தல் குறுந்தொடி மகளிர்
நலன்உண்டு துறத்தி ஆயின்
மிகநன்று அம்ம மகிழ்ந்த சூளே.

— ஓரம்போகியார்

'நின் பரத்தையர்க்கு நீ உற்ற சூளுறவு நன்றாயிருந்தது!' என்று நகையாடித் தோழி வாயில் மறுத்தது.

உழுத்தங்காயை உடைத்து உளுந்தை உதிர்ப்பதற்காகப் பயன்படுத்தும் குறுந்தடியைப் போல உள்ளதும் கரும்பு எழுதிய தொய்யிலை உடையதும் ஆகிய பருத்த தோளையும் நீண்ட பலவான கூந்தலையும் உடைய பரத்தையரது பெண்மை நலத்தை நுகர்ந்து அவரை விட்டுவிட்டு இங்கு வருவாயானால் நீ அவர் மகிழும் வண்ணம் செய்த உறுதி மொழியாகிய சூளுரை மிக நன்றாயிருந்தது!

நின் மொழியை மெய் என்று நம்போம் என வாயில் மறுத்தாளாயிற்று.

பரத்தையர் மாட்டுத் தலைவன் செய்த சூளைச் சிறப்பித்து நிற்றலின், 'மகிழ்ந்த சூளே' என்னும் இப் பாடமே ஏற்புடையதாக உள்ளது. இதுவே ஏடுகளிலும் மிகுந்து காணப்படுகிறது.

கழுந்து - குறுந்தடி: உழுந்தை அடித்து அடித்து வழுவழுப்பாய் இருத்தலால் பரத்தையர் தோளுக்கு உவமை கூறினார். சூள் - உறுதிமொழி, வஞ்சினம்.

385. குறிஞ்சி — தலைவி கூற்று

பலவில் சேர்ந்த பழம்ஆர் இனக்கலை
சிலைவிற் கானவன் செந்தொடை வெரீஇச்
செருஉறு குதிரையின் பொங்கிச் சாரல்

இருவெதிர் நீடுஅமை தயங்கப் பாயும்
பெருவரை அடுக்கத்துக் கிழவோன் என்றும்
அன்றை அன்ன நட்பினன்
புதுவோர்த்து அம்மஇப் பழங்கேள் ஊரே.

— கபிலர்

வேற்று வரைவு மாற்றியது.

பலாமரத்தில் தொங்கும் பழத்தை உண்ட திரளான ஆண் குரங்குகள் சிலை மரத்தால் ஆன வில்லையுடைய வேட்டுவன் குறிபிழையாது எய்யும் அம்புகளுக்குப் பயந்து, போர்க்களத்தை அடைந்த குதிரையைப் போலப் பொங்கி எழுந்து, மலைச் சாரலிலே பெரிய மூங்கிலின் நீண்ட கோல்கள் அசையும்படி பாய்ந்து செல்லுகின்ற பெரிய மலைப் பக்கத்தையுடைய தலைவன் எப்பொழுதும் அவனைக் கண்ட அன்று இருந்ததைப் போன்ற மாறுபாடு இல்லாத நட்பினையுடையான். அங்ஙன மாகவும் இந்தப் பழைய சுற்றத்தாரையடைய ஊரானது மணம் குறித்து வந்த புதியவர்களையுடையது.

நொதுமலர் வரைவு கருதிப் போந்தனர் என்பதனைக் குறிப் பித்தவாறு.

சிலை - ஒருவகை மரம்; முழக்கம் என்றும் ஆம்; செந்தொடை - நேராகச் சென்று தாக்கும் தன்மையது. அன்றை என்றது இயற்கைப்புணர்ச்சி நேர்ந்த காலத்தைக் குறித்தது. புதுவோர் - வரைவின் பொருட்டு வந்த புதியவர்; வம்பலர், நொதுமலர் என்றும் சுட்டுவர்.

தலைவன் வரைவை நாடிய பழைய உறவினனாக இருப்பவும் புதியவரும் வரைவு வேண்டி வருவது பொருத்தமன்று என்பதைச் சுட்டுவாளாய்ப் பழங்கேள்ஊர் புதுவோர்த்து என்றாள். இங்கே புதுவோர், பழங்கேள்ஊர் என்பன முரண்தொடை அமைப் பெற்ற நயமுடையன. பொருட்செறிவு கருதியே இப் பாடம் கொள்ளப் பெற்றது.

தோழியிடம் தலைவி கூறியதன் நோக்கம் வேற்றுவரைவு மாற்றல் வேண்டும் என்னும் தம் உள்ளக்கிடக்கையை வெளிப் படுத்துதற்காம்.

இப் பாட்டை, இறந்துபாடு பயக்குமாற்றால் தன் திறத்து நொதுமலர் வரையக் கருதிய ஞான்று அதனை மாற்றுதற்கண் தலைவி கூறியது என்பர் நச்சினார்க்கினியர் (தொல். களவு. 20).

386. நெய்தல் — தலைவி கூற்று

வெண்மணல் விரிந்த வீததை கானல்
தண்ணந் துறைவன் தணவா ஊங்கே
வால்இழை மகளிர் விழவுஅணிக் கூட்டும்
மாலையோ அறிவேன் மன்னே மாலை
நிலம்பரந் தன்ன புன்கணொடு
புலம்புஉடைத்து ஆகுதல் அறியேன் யானே.

— வெள்ளிவீதியார்

பிரிவிடை வற்புறுத்தும் தோழிக்குக் கிழத்தி வன்புறை எதிர் அழிந்து கூறியது.

தோழி! வெண்மணல் பரந்து கிடக்கின்ற மலர்கள் மிகுந்துள்ள சோலையையுடைய குளிர்ந்த கடற்துறைக்கு உரிய தலைவன் என்னைப் பிரிந்து செல்லாத முன்னெல்லாம் தூய அணிகலன்கள் பூண்ட பெண்கள் விழாவுக்குரிய அலங்காரங் களைச் செய்கின்றதான மாலைக் காலத்தையே யான் அறிவேன். இப்பொழுது அது இல்லையாயிற்று. அம் மாலைக்காலமும் நிலம் பரந்தது போன்று மிகப் பரவிய பெருந்துன்பத்தோடு தனிமையை உடைத்தாதலையும் அப்பொழுது யானும் அறியேன்.

தலைவனது பிரிவினால் மாலைப் பொழுது மிகவும் வருத்தம் தருவதாயிற்று என்று தலைவி எடுத்துரைக்கின்றாள்.

மகளிர் விழவு அணிக்கூட்டும் என்பதனால் தானும் அவ்வாறு மகிழ்ந்திருந்தமையை நினைவு கூர்ந்தாளாயிற்று.

புன்கண் - காமநோய் மிகுதியால் வரும் துன்பம்; மகளிர் விழவு அணி - மகளிர் தம்மை அணிசெய்து கொள்ளுகை. புலம்பு- தலைவனைப் பிரிந்திருக்கும் தனிமை.

387. முல்லை — தலைவி கூற்று

எல்லை கழிய முல்லை மலரக்
கதிர்சினம் தணிந்த கையறு மாலை
உயிர்வரம்பு ஆக நீந்தினம் ஆயின்
எவன்கொல் வாழி தோழி
கங்குல் வெள்ளம் கடலினும் பெரிதே.

— கங்குல் வெள்ளத்தார்

பிரிவிடை வற்புறுத்தும் தோழிக்குக் கிழத்தி வன்புறை எதிர் அழிந்து கூறியது.

தோழி! பகற்பொழுது நீங்கிப் போக, முல்லைக் கொடிகள் மலரத் தொடங்கச் சூரியனது வெப்பம் குறைந்த செயலறுதற்குரிய மாலைக் காலத்தை உயிரை எல்லையாகக் கொண்டு கடந்தேன். அதன்பின் வருகின்ற இரவின் மிகுதி கடலைக் காட்டிலும் மிகப் பெரிதாயுள்ளது. அதனைக் கடக்க முடியாதே. மாலைக் காலத்தை மட்டும் கடத்தலால் நேரும் பயன் யாது?

தலைவனைப் பிரிந்து தனித்து உறையும் தலைவிக்கு மாலையும் இரவும் மிகுதியான வருத்தத்தை நல்கும் என்பதாம்.

எல்லை - பகல்; கதிர் - சூரியன்; வரம்பு - எல்லை; எவன் கொல் - என்ன பயனாம். வெள்ளம் - மிகுதியை உணர்த்தும் சொல்லாம்.

388. பாலை — தோழி கூற்று

நீர்கால் யாத்த நிரைஇதழ்க் குவளை
கோடை எற்றினும் வாடா தாகும்
கவணை அன்ன பூட்டுப்பொருது அசாஅ
உமண்எருத்து ஒழுகைத் தோடுநிரைத் தன்ன
முளிசினை பிளக்கும் முன்புஇன் மையின்
யானை கைம்மடித்து உயவும்
கானமும் இனியஆம் நும்மொடு வரினே.

— ஔவையார்

தலைமகள் உடன்போக்கு நேர்ந்தமை உணர்ந்த தலைமகன், சுரத்து வெம்மையும் தலைமகள் மென்மையும் குறித்துச் செலவு அழுங்கலுறுவானைத் தோழி அழுங்காமற் கூறியது.

நீரைத் தன் அடியிலே கொண்டுள்ள வரிசையான இதழ்களையுடைய குவளை மலர் கோடைக்காற்று வீசினாலும் வாடாமலிருக்கும்; கவணையைப் போன்ற நுகத்தின் பிணிப்புத் தாக்கியதனால் வருந்துதலை யுடைய உப்புவாணிகரின் வண்டிகளில் பூட்டப்பெற்ற எருதுகளைக் கொண்டுள்ள வண்டிகளின் தொகுதியை வரிசையாக வைத்தாற்போன்ற உலர்ந்த மரக் கிளையைப் பிளத்தற்கு உரிய வலிமை இல்லாமையினால் யானை தன் துதிக்கையை மடித்து வருந்துகின்ற பாலை நிலமும் நும்மோடு வந்தால் தலைவிக்கு இனிமையுடையதாகவே இருக்கும்.

தலைவியை உடன் கொண்டு செல்லத் தயங்கிய தலைவனுக்குத் தலைவிக்கு உம்மோடு வருதலும் இனிமை பயப்பதே என அவனை ஒருப்படச் செய்தாளாயிற்று.

காற்று வீசுதல் என்னும் பொருளில் எற்றுதல், ஒற்றுதல் என்னும் பாடங்கள் வரினும் இங்கே எற்றுதல் என்னும் பாடமே ஏடுகளில் காணப்படுதலால் இப் பாடமே கொள்ளப்பெற்றது. 'எறிதரும் வாடை' எனவரும் தொடரும் (குறுந்தொகை 110:7; அகநானூறு 294:15) ஈண்டு ஒப்பு நோக்கத்தகும்.

கால் - அடி; யாத்தல் - கட்டப் பெறுதல்; பொருந்துதல்; எற்றுதல் - வீசுதல்; கவனை - கவண்; கல் வைத்து எறிதற்கு உதவும் கருவி. உமண் - உமணர்; முளிதல் - காய்தல்.

389. குறிஞ்சி — தோழி கூற்று

நெய்கனி குறும்பூழ் காயம் ஆக
ஆர்பதம் பெறுக தோழி அத்தை
பெருங்கல் நாடன் வரைந்தென அவன்எதிர்
நன்றோ மகனே என்றலின்
நன்றே போலும் என்றுஉரைத் தோனே.

— வேட்ட கண்ணன்

தலைமகன் குற்றேவல் மகனால் வரைவு மலிந்தமை தோழி தலைமகட்குச் சொல்லியது.

தோழி! பெரிய மலை நாட்டையுடைய தலைவன் வரைவு முயற்சியுடைய்னாக அவனுக்கு எதிராக நின்ற குற்றேவல் மகனை யான் விளித்தவளாக, 'நலமோ மகனே' என்று வினாவ, அவனும் நன்றே என்று உரைத்தான். அதனால் அவன் நெய்மிக ஊறிய குறும்பூழ்ப் பறவை வியஞ்சனத்தோடு கூடிய கறியாக உண்ணும் உணவினைப் பெறுவானாக,

தலைவன் வரைவு மேற்கொண்டமையை உணர்த்திய குற்றேவல் மகன் விருந்து பெறுவானர்க எனத் தோழி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினாளாயிற்று.

என்றலின் எனவரும் எச்சத்தொடர் உரைத்தோன் என்பதோடு முடிவது தொடர்ப்பொருத்த முடையது. எச்சமாக அமைந்த இப் பாடமே ஏடுகளில் காணப்படுகிறது. எனவே இப் பாடம் கொள்ளப்பெற்றது.

குறும்பூழ் - குறும்பூழ்ப்பறவை: காயம் - வியஞ்சனம், வியஞ்சனத்தோடு கூடிய கூறி; ஆர்பதம் - சோறு, உணவு; அத்தை - அசைநிலை.

இப் பாட்டை, தலைவன் குற்றேவல் மகனால் வரைவு மலிந்த தோழி தலைவிக்கு உரைத்தது என்பர் நச்சினார்க்கினியர் (தொல். களவு. 23).

390. பாலை — கண்டோர் கூற்று

எல்லும் எல்லின்று பாடும் கேளாய்
செல்லா தீமோ சிறுபிடி துணையே
வேற்றுமுனை வெம்மையின் சார்ந்துவந்து இறுத்தென
வளைஅணி நெடுவேல் ஏந்தி
மிளைவந்து பெயரும் தண்ணுமைக் குரலே.

— உறையூர் முதுகொற்றன்

புணர்ந்துடன் போயினாரை இடைச்சுரத்துக் கண்டார் பொழுது செலவும் பகையும் காட்டிச் செலவு விலக்கியது.

சிறிய பிடியானை போன்றவளுக்குத் துணையாகச் செல்பவனே. இப்போது சூரியனும் விளக்கமற்றவனாயினான். வணிகர் கூட்டம் வந்தடைந்ததாகப் பகைப்புலத்தர் சினத்தினால் அடுத்து வந்து தங்கி, பூண் கட்டப்பெற்ற நெடிய வேலைத் தாங்கிக் காவற்காட்டினிடத்தே வந்து அவர்கள் முழக்கும் தண்ணுமை வாத்திய ஓசை எதிரொலிப்பதையும் கேட்பாயாக.

ஏதமுடைத்தாலின் மேலும் வழிச் செல்வதனைத் தவிர்க எனக் கண்டோர் அத் தலைவனுக்கு அறிவுறுத்தினாராயிற்று.

சிறுபிடி - தலைவியைச் சுட்டியது. வேற்றுமுனை - பகைப் புலம்; மிளை - காவற்காடு; பாடு - ஒலி.

வழியின் ஏதம்பற்றி உரைப்பது இப் பாட்டு. பகைப்புலத்தார் மேற்செல்லும் வழியில் வந்து தண்ணுமை ஒலித்தலே இங்குச் சுட்டப்படுகிறது. சினத்தினால் அடுத்து வந்தனர் என்னும் குறிப்பைத் தரும் 'வெம்மையின் சார்ந்து' என்னும் பாடமே ஈண்டுப் பொருத்தமாகும். எனவே இப் பாடம் கொள்ளப் பெற்றது.

இப்பாட்டை, இடைச் சுரத்துக் கண்டோர் பொழுதும் ஆறும் உட்குவரத் தோன்றி வழுவினாகிய குற்றம் காட்டியது என்பர் நச்சினார்க்கினியர் (தொல். அகத். 40).

391. முல்லை — தலைவி கூற்று

உவரி ஒருத்தல் உழாஅது மடிய
புகரி புழுங்கிய புயல்நீங்கு புறவில்
கடிதுஇடி உருமின் பாம்புபை அவிய
இடியொடு மயங்கி இனிதுவீழ்ந் தன்றே
வீழ்ந்த மாமழை தழீஇப் பிரிந்தோர்

கையற வந்த பையுள் மாலை
பூஞ்சினை இருந்த போழ்கண் மஞ்ஞை
தாம்நீர் நனந்தலை புலம்பக்
கூஉம் தோழி பெரும்பே தையவே.

— பொன்மணியார்

பிரிவிடை, 'பருவ வரவின்கண் ஆற்றாள்' எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி அழிந்து சொல்லியது.

தோழி! மழை இன்மையால் எருது வெறுத்து உழாமல் சோம்பிக் கிடக்கவும் புள்ளிமான்கள் வெம்மையால் வருந்தி வாடியிருக்கவும் மழை நீங்கிப் போன முல்லை நிலத்திலே வேகமாய் முழங்கும் இடியேற்றினால் பாம்புகளின் படம் ஒடுங்கும்படி இடியோடுகூடிக் கனமழை இனிதாகப் பெய்தது. பெய்த மழையைப் பொருந்தித் தம் தலைவரைப்பிரிந்த பெண்டிர் செயலறும்படி வந்த துன்பம்தரும் மாலைக் காலத்திலே மலரையுடைய கொம்புகளில் இருந்த போழ்ந்தாற் போன்ற கண்களையுடைய மயில்கள் தாவிச் செல்லும் நீரையுடைய அகன்ற இடங்களில் தனித்து இருந்து வருத்தமுறக் கூவுகின்றன. அவைதாம் மிகுதியும் பேதைமையுடையன.

தலைவர் குறித்துச் சென்ற கார்காலம் வந்தும் அவர் வாராமையினால் நான் மிக வருந்துவேன் எனத் தலைவி உரைத்தாளாயிற்று.

உவரி - வெறுத்து; மடிதல் - சோம்பிக் கிடத்தல்; புகரி - புள்ளியையுடையதான மான்; இடி உரும் - முழங்குகின்ற இடியேறு; பை - படம்; அவிய - ஒடுங்க, கெட; கையறுதல் - செயலறுதல்; நனந்தலை - அகன்ற இடமுடைய முல்லை நிலம்; பேதைமை - அறியாமை.

392. குறிஞ்சி — தோழி கூற்று

அம்ம வாழியோ மணிச்சிறைத் தும்பி
நல்மொழிக்கு அச்சம் இல்லை அவர்நாட்டு
அண்ணல் நெடுவரைச் சேறி ஆயின்
கடவை மிடைந்த துடவைஅம் சிறுதினைத்
துளிர்எறி நுண்துகள் களைஞர் தங்கை
தமரான் தீராள் என்மோ அரசர்
நிரைசெலல் நுண்தேர் போலப்
பிரசம் தூங்கு மலைகிழ வோர்க்கே.

— தும்பிசேர் கீரனார்

வரைவிடை கிழத்தியது நிலைமை தும்பிக்குச் சொல்லுவாளாய்ச் சிறைப்புறமாகத் தோழி சொல்லியது.

நீலமணி போன்ற கரிய சிறகுகளையுடைய தும்பியே! ஒன்று கூறுவேன் கேட்பாயாக. நல்ல சொற்களை ஒருவரிடம் சொல் வதனால் பயப்பட வேண்டுவதில்லை. அத் தலைவருடைய நாட்டிலுள்ள தலைமையுடைய உயர்ந்த மலைக்கு நீ செல்வா யானால், அரசர்களது வரிசையாகச் செல்லும் வேலைப் பாடமைந்த தேர்களைப் போலத் தேனடைகள் தொங்குகின்ற மலையையுடைய தலைவனுக்கு வழியிடத்தைச் சார்ந்த தோட்டத் திலுள்ள அழகிய இளம் தினைப்பயிரின் தளிர்களைத் தாக்குகின்ற நுண்ணிய பூச்சிகளைக் களைபவருடைய தங்கையாகிய தலைவி சுற்றத்தாரால் போக்க இயலாத நோயுடையளாயினாள் என்று சொல்லுவாயாக.

தலைவி பிரிவினுல் பெருந்துன்புறுகிறாள் என்பதை வண்டின் வாயிலாகத் தோழி புலப்படுத்தியவாறாம்.

தினைத்தளிர்களைத் தாக்கும் நுண்ணிய பூச்சிகளைக் களைவது பயிர் வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும். பெரும் பாலான ஏடுகளில் 'துளிரெறி' என்னும் பாடமே உள்ளது. களை நீக்குவதுபோலச் செடியைத் தாக்கும் பூச்சிகளையும் அப்பாற் படுத்தும் முறையும் இதனால் தெரிய வருகிறது.

தலைவியின் துன்பத்தைச் சுட்டிக்காட்டுதலின், பிற சுற்றத் தாராலும் நீக்க முடியாத தலைவன் ஒருவனாலேயே போக்க முடிந்த நோயினையுடையளாயினாள் என்னும் குறிப்பையே இப் பாடல் வெளிப்படுத்துகிறது. தமரான் என்னும் மூன்றாம் வேற்றுமை உருபு அமைந்த பாடமே இதற்கு இயைபுடைய தாகும். ஏடுகளிலும் இப்பாடமே மிக்குக் காணப்படு கிறது.

தேனடையின் வடிவம் தேர், கேடகம் போன்றவற்றை ஒத்திருப்பதாகக் கூறுவது மரபு. எனினும் இங்கு நுண்தேர் என்னும் பாடமே மிகுந்து காணப்படுகிறது. எனவே இப் பாடங் கள் கொள்ளப்பெற்றன.

தும்பி - வண்டு; அண்ணல் - தலைமை; கடவை - வழி; துடவை - தோட்டம்; நுண்துகள் - நுண்ணிய துகள் போன்ற பூச்சி; பிரசம் - தேன்.

393. மருதம் — தோழி கூற்று

மயங்குமலர்க் கோதை குழைய மகிழ்நன்
முயங்கிய நாள்தவச் சிலவே அலரே
கூகைக் கோழி வாகைப் பறந்தலைப்
பசும்பூட் பாண்டியன் வினைவல் அதிகன்
களிறொடு பட்ட ஞான்றை
ஒளிறுவாட் கொங்கர் ஆர்ப்பினும் பெரிதே.

— பரணர்

தலைமகன் சிறைப்புறமாகத் தோழி அலர் மிகவு உரைத்து வரைவு கடாயது.

தோழி! பல மலர்களும் கலந்து கட்டிய மாலையானது குழையும் படியாகத் தலைவன் நின்னைத் தழுவிய நாள்கள் மிகச் சிலவே. ஆனால், பழிச் சொல்லோ, கோட்டானாகிய கோழியை யுடைய வாகைப் பறந்தலை என்னும் போர்க்களத்தே பசிய பூண்களை அணிந்த பாண்டியனது ஏவலிலே வல்லவனான அதிகன் என்பவன் தன்னுடைய போர்யானையோடு இறந்த காலத்திலே ஒளி வீசும் வாளினையுடையவரான கொங்கர் களுடைய வெற்றி ஆரவாரத்தினும் மிகப் பெரிதாயுள்ளது.

ஊரார் உரைக்கும் அலர் மிகுதியாயிற்று என்பதாம்.

கோதை - தலைவி அணிந்த மாலை; மகிழ்நன் - தலைவன்; தவ - மிகுதி; பறந்தலை - போர்க்களம்; வினை - ஏவல்வினை; அதிகன் - பசும்பூட் பாண்டியனுடைய போர் அலுவலில் உள்ளவன்; சேனைத் தலைவனாகலாம். இவன் கொங்கர்களோடு செய்த போரில் தான் ஏறிய யானையோடும் இறந்துபட்டான்.

394. குறிஞ்சி — தோழி கூற்று

முழந்தாள் இரும்பிடிக் கயந்தலைக் குழவி
நறவுமலி பாக்கத்துக் குறமகள் ஈன்ற
குறிஇறைப் புதல்வரொடு மறுவந்து ஓடிக்
கூரை முற்றும் சாரல் நாடல்
முன்நாள் இனியது ஆகிப் பின்நாள்
அவர்தினை மேய்தந் தாங்குப்
பகைஆ கின்றுஅவர் நகைவிளை யாட்டே.

— குறியிறையார்

வரைவிடை ஆற்றாளாகிய கிழத்தியை ஆற்றுவிக்கும் தோழி தலைமகனை இயற்பழித்துக் கூறியது.

முழந்தாளையுடைய் கரிய பெண்யானையின் மெல்லிய தலையையுடைய கன்று, கள் மிகுதியாயுள்ள மலைப்பக்கத்து ஊரிலுள்ள குறத்தி பெற்ற குறிய கைச்சந்தினையுடைய புதல்வரோடு சுற்றிச்சுழன்று ஓடிக் கூரை வீடுகள் நிறைந்த சாரலை நாடி வருதல் முன்காலத்தில் இனிமை தருவதாய் அமைந்து, பின் காலத்தில் அதுவே அவர்களுடைய தினைப்பயிரை மேய்ந்தாற் போல, அத் தலைவர் நம்மோடு முன்பு நகைத்து விளையாடியது இப்போது பகைமையுடையதாக ஆகின்றது.

அவருடைய் நட்பினால் வந்தது துன்பமே என்பதாம்.

கயம் - மென்மை; பாக்கம் - ஊர்; மறுவந்து ஓடுதல் - சுற்றிச் சுழன்று ஓடுதல்.

கூரை முற்றும் சாரல் நாடல் என்னும் இப் பாடலின் 4ஆம் அடி இப் பாடற் பொருளுக்கு ஏற்புடையதே ஆகும். ஏடுகளில் இவ்வடி தவறாமல் இடம் பெற்றுள்ளது. எனவே இவ்வடி உடன் சேர்த்துக் கொள்ளப் பெற்றது.

முன்பு குறவரின் இளம்பிள்ளைகளுடன் விளையாடிய யானைக் கன்று பின் வளர்ந்த காலத்து அக் குறவர் பயிரிட்ட தினைப்புனத்தையே அழிப்பதாயிற்று. முன்பு கூடி இன்பம் தந்துவந்த தலைவன் பிரிவு காரணமாகத் துன்பம் தருவானாயி னான் என்பதற்கு எடுத்துக் காட்டப்பெற்றது.

395. பாலை — தலைவி கூற்று

நெஞ்சே நிறைஒல் லாதே அலரே
அன்புஇன் மையின் அருள்பொருள் என்னார்
வன்கண் கொண்டு வலித்துவல் லுநரே
அரவுஉறு மதியிற்கு இவணோர் போலக்
களையார் ஆயினும் கண்இனிது படீஇயர்
அஞ்சல் என்மரும் இல்லை அந்தில்
அளிதோ தானே நாணே
யாம்கா வாஅது நீங்கப் படினே.

வரைவிடை வைத்துப் பிரிய, ஆற்றாளாகிய கிழத்தி, 'நாம் ஆண்டுச் சேறும்' எனத் தோழிக்கு உரைத்தது.

என் நெஞ்சு நிறுத்தலைச் செய்ய இயலாது. அத் தலைவர் என்னிடம் அன்பு இல்லாத காரணத்தினாலே அருளைப் பொருள் என்று கருதாராய் வன்கண்மை கொண்டவராய் என்னை வற்புறுத்தி அந்த வற்புத்தலிலே வன்மை பெற்றோராயினர். பாம்பினால் பற்றப்படும் சந்திரன் பொருட்டு இவ்வுலகத்திலுள்

ளார் உதவ இயலாமல் இருக்கும் நிலைபோல ஈண்டுள்ளார் என் துன்பத்தை நீக்காவிடினும் இனிமையாகக் கண்மூடித் துயிலுகின்றனர்; அஞ்சாதே என்று தேற்றுவாரும் இல்லை. ஆதலின் யாம் பாதுகாக்காத அந் நாணம் நீங்கப்பட்டால் அது வருந்தத் தக்கதாகும்.

தலைவர் இருக்குமிடத்திற்கு நாமும் செல்வோம் என்று தோழிக்குத் தலைவி உரைக்கின்றாள். நிறை - தடுத்து நிறுத்துதல்; அடக்குதல். அன்பின் முதிர்வே அருள் ஆதலின் அன்பில்லாமையினால் அருளும் இல்லாதவராயிற்று. பொருளே பொருள் எனக் கொண்டு சென்றார் என்பதைக் குறிப்பித்தவாறு.

அரவுறுமதி - கிரகண காலத்துச் சந்திரன். கிரகணம் வந்தபோது உலகத்தார் பல பேசிப் பின் துயில்வர். அதுபோலவே சுற்றத்தார் முதலியோரும் இவள் நிலைக்கு இரங்கிப் பேசித் தூங்குவாராயினர். இவண் - இவ்வுலகம்; அந்தில் அசை.

பெரும்பாலான பாடங்கள் 'அரவுறு' என்று படிக்கும் வண்ணமே அமைந்துள்ளன. அஞ்சேல் என்பது முன்னிலையாரைச் சுட்டி உரைக்கும் ஆறுதல் மொழியாகும். யாம்கா வாஅது என்பதுவே ஏடுகளில் காணப்படும் பாடம். இது முன்னர்ச் சுட்டிய நாண் நீக்கம் பற்றி உரைப்பதாகும். எனவே இது பொருள் தொடர்ச்சிக்கும் ஏற்புடையதாகிறது. எனவே இப் பாடங்கள் கொள்ளப் பெற்றன.

396. பாலை — செவிலித்தாய் கூற்று

பாலும் உண்ணாள் பந்துடன் மேவாள்
விளையாடு ஆயமொடு அயர்வோள் இனியே
எளிதுஎன உணர்ந்தனள் கொல்லோ முளிசினை
ஓமைக் குத்திய உயர்கோட்டு ஒருத்தல்
வேனிற் குன்றத்து வெவ்அறைக் கவாஅன்
மழைமுழங்கு கடுங்குரல் ஓர்க்கும்
கழைதிரங்கு ஆர்இடை அவனொடு செலவே.

— கயமன்

மகட்போக்கிய தாய் உரைத்தது.

பாலையும் உண்ணாளாய், பந்தாடுதலையும் விரும்பாதவளாய் முன்பு தன்னோடு விளையாடும் மகளிர் கூட்டத்தோடு விளையாடிப் பொழுது போக்கிய தலைவி உலர்ந்த கொம்புகளையுடைய ஆண் யானை வேனில் தாக்கப்பெற்ற மலையின் வெம்மையுடைய பாறைகளையுடைய பக்க மலையிலே மேகம்

முழங்குகின்ற முழக்கத்தை உற்றுக் கேட்கும் மூங்கில்கள் உலர்ந்து சுருங்கிய அரிய வழியில் அத் தலைவனோடு உடன் செல்லுதலை எளிமையுடையது என அறிந்தாள் போலும்.

விளையாட்டில் ஈடுபட்டிருந்த தலைவியின் இளமைத் தன்மைக்குச் செவிலி இரங்கிக் கூறினாளாயிற்று.

ஆயம் - மகளிர் கூட்டம்; ஒருத்தல் - ஆண் யானை; முளிதல் - காய்தல்; மழை - மேகம்.

397. நெய்தல் — தோழி கூற்று

நனைமுதிர் ஞாழற் தினைமருள் திரள்வீ
நெய்தல் மாமலர்ப் பெய்தல் போல
ஊதை தூற்றும் உரவுநீர்ச் சேர்ப்ப
தாய்உடன்று அலைக்கும் காலையும் வாய்விட்டு
அன்னாய் என்னும் குழவி போல
இன்னா செயினும் இனிதுதலை யளிப்பினும்
நின்வரைப் பினள்என் தோழி
தன்உறு விழுமம் களைஞரோ இலளே.

— அம்மூவன்

வரைவிடை வைத்து நீங்கும் தலைமகற்குத் தோழி உரைத்தது.

அரும்புகள் முதிர்ந்த ஞாழலது தினை மணிகள் போன்ற திரண்ட மலர்கள் நெய்தலினது கரிய மலரிலே பெய்தாற்போலக் குளிர்காற்றுத் தூவுகின்ற வலிமை கொண்ட கடற்கரைக்குத் தலைவனே! தாய் சினந்து அடித்து வருத்திய பொழுதும் வாய் திறந்து அன்னையே என்று அழும் குழந்தையைப் போல, என் தோழியாகிய தலைவி நீ அவளுக்கு இன்னாதவற்றைச் செய்தா யாயினும் இனிதாகத் தலையளி செய்தாயாயினும் நின்னால் காக்கப்படும் எல்லைக்குட்பட்டவ ளாவள். நின்னையன்றித் தனது மிக்க துன்பத்தைப் போக்குவாரைப் பெற்றிலள்.

இன்பதுன்பமாகிய எல்லாக் காலத்தும் நீயே துணையாவாய் ஆதலால் உன் பிரிவால் உளதாம் துன்பம் நீக்கவும் விரைவில் திரும்புக என எடுத்துக் கூறியவாறாம்.

ஞாழல் - ஞாழல் மரம்; வீ - மலர்; ஊதை - குளிர்காற்று; குழவி - குழந்தை; உடல்தல் - சினத்தல்; அலைத்தல் - அடித்து வருத்துதல்; விழுமம் - துன்பம்.

இப் பாடலைத் தோழி தலைவனிடம் ஓம்படுத்துக் கூறியது என்பர் இறையனாரகப் பொருள் உரைகாரர் (இறை. 23).

நச்சினார்க்கினியர், தலைவற்குத் தோழி தலைவியைப் பாது காத்துக்கொள் என்று கூறியது என்பர் (தொல். களவு. 23).

398. பாலை — தலைவன் கூற்று

செற்றாம் அன்றே தோழி தண்ணெனத்
தூற்றும் துவலைத் துயர்கூர் காலை
கயல்ஏர் உண்கண் கனங்குழை மகளிர்
கையுறை ஆக நெய்பெய்து மாட்டிய
சுடர்துயில் எடுப்பும் புன்கண் மாலை
அரும்பெறற் காதலர் வந்தென விருந்துஅயர்பு
மெய்ம்மலி உவகையின் எழுதரு
கண்கலிழ் உகுபனி ஆக்கு வோரே.

— பாலை பாடிய பெருங்கடுங்கோ

பிரிவுணர்த்திய தோழி, 'பிறர் தலைமகன் பிரிந்து வினை முற்றி வரும் துணையும் ஆற்றியுளராவர்' என்று உலகியல்மேல் வைத்து உரைத்தாட்குத் தலைமகள் ஆற்றாமை சொல்லியது.

தோழி! குளிர்ச்சி உண்டாம்படி தூவுகின்ற மழைத்துளிகளை யுடைய துன்பம் மிக்க பொழுதிலே கெண்டை மீனை ஒத்த மையுண்ட கண்களையுடைய கனத்த குண்டலங்களை அணிந்த பெண்கள், தம் கையுறையாக நெய்யைப் பெய்து ஏற்றிய விளக்கு களை மேலும் ஒளிபெறச் செய்கின்ற புல்லிய மாலைக் காலத்தில் பெறுதற்கு அரியராகிய தலைவர் வந்தாராக, விருந்து செய்து உடம்பு பூரிக்கும்படியான மகிழ்ச்சியொடு கண்களினின்று துளித்து வீழும் உவகைக் கண்ணீரை விளைப்போராவர். தலைவன் பிரிவால் அவற்றை நாம் வெறுத்தோமாவோம்.

செற்றாம், சுடர்துயில், ஆக்குவோர் என்னும் பாடங்கள் ஏடு களில் மிகுந்து காணப்படுகின்றன. தலைவன் பிரிவினால் துயர் மிகுகின்ற சூழலைச் சித்திரிக்கின்றது இப் பாடல். தலைவன் வரக்கண்ட பிறமகளிர் விளக்கேற்றி, விருந்து செய்து மகிழ்ச்சிக் கண்ணீரால் திளைப்பர். தலைவன் வரக் காணாத தலைவிக்கு இவை வெறுப்பூட்டுகின்றன என்பதே இப் பாடற்கருத்து. அரக்கு வோர் என்னும் வழக்கு சங்கப்பாடல்களில் பயிலக் காண்கிலம். எனவே இதனை ஆக்குவோர் எனப் படித்தலே நேரிதாகும்; எனவே இப் பாடங்கள் கொள்ளப்பெற்றன.

கையுறை - காணிக்கை; எடுப்புதல் - எழுப்புதல்; மெய்ம்மலி உவகை -உடம்பு பூரிக்கும் பெருமகிழ்ச்சி; செறுதல் - வெறுத்தல்.

399. மருதம் — தலைவி கூற்று

ஊர்உண் கேணி உண்துறைத் தொக்க
பாசி அற்றே பசலை காதலர்
தொடுவுழித் தொடுவுழி நீங்கி
விடுவுழி விடுவுழிப் பரத்த லானே.

— பரணர்

வரைவு நீட்டித்த இடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

தோழி! பசலை நோயானது தலைவர் தீண்டுந்தோறும் தீண்டுந்தோறும் உடலை விட்டு நீங்கி, அவர் விடுந்தோறும் விடுந்தோறும் பரவுகின்றதனாலே ஊரால் உண்ணப்படும் நீரை யுடைய கிணற்றின் துறையிடத்தே கூடிச் சேர்ந்துள்ள பாசியைப் போன்று விலகியும் கூடியும் வரும் நிலையை ஒத்துள்ளது.

பசலை நீங்கி மீண்டும் உடனடியாகப் பரத்தலால் பாசி போன்றது என்றாளாயிற்று. நான் பசலை நோயால் வருத்த முறுவேன் என்பதாம்.

400. முல்லை — தலைவன் கூற்று

சேயாறு செல்லாம் ஆயின் இடர்இன்று
களைகலம் காமம் பெருந்தோட்கு என்று
நன்றுபுரிந்து எண்ணிய மனத்தை ஆகி
முரம்புகண் உடைய ஏகிக் களரிக்
கரம்பைப் புதுவழிப் படுத்த மதியுடை
வலவோய் இன்று தந்தனை தேரோ
நோய்உழந்து உறைவியை நல்க லானே.

— பேயனார்

வினைமுற்றி வந்த தலைமகன் தேர்ப்பாகனைத் தலையளித்தது.

நெடுந்தூர வழியில் செல்வோமாயின் பெரிய தோளையுடைய தலைவிக்குத் துன்பத்தை இன்று நீக்க மாட்டோம் என்று நன்மை விரும்பி நினைத்த மனத்தையுடையாய்! பருக்கைக் கற்களை யுடைய மேட்டு நிலம் பிளக்கும்படி போய்ச் சேற்று நிலத்தும் பாலைநிலத்தும் புதுவழியை உண்டாக்கிய அறிவுடைய தேர்ப்

பாகனே! நோயினால் வருந்தி வாழும் தலைவியை இறந்து படாமல் மீட்டுத்தந்தமையால் இன்றைக்குத் தேரையா செலுத்தி வந்தனை? தலைவியையே தந்தாய்.

உரிய காலத்தில் தேரை விரைந்து ஓட்டி இல்லம் வந்து சேர்ந்த தேர்ப்பாகனின் திறமையைத் தலைவன் பாராட்டுவா னாயினான்.

தேர்வந்த வழியருமையைச் சுட்டுதலின் களரியும் கரம்பையும் பொருட் பொருத்தம் உடையன. மேலும் 4ஆம் அடியில் களரிக் என்பதும் தொடர்ந்து கரம்பை என்பதும் ஏடுகளில் காணப் படுகின்றன. இதற்குச் சேற்று நிலத்தும் பாழ்நிலத்தும் என்பது பொருள். 4 ஆம் அடியில் வரும் முரம்புகண் என்பதற்கு ஏற்ற எதுகை நயம் உடையதாகவும் கரம்பை அமைகிறது. இப் பாடத் தால் இப் பாடல் நிலை மண்டிலமாகவும் மாறுகிறது.

சேயாறு - நெடுந்தொலைவு; நன்று - நன்மை; முரம்பு - கற்கள் நிரம்பிய மேட்டு நிலம்; களரி - சேற்றுநிலம்; கரம்பு - பாழ் நிலம்; மதி - அறிவு.

401. நெய்தல் — தலைவி கூற்று

அடும்பின் ஆய்மலர் விரைஇ நெய்தல்
நெடுந்தொடை வேய்ந்த நீர்வார் கூந்தல்
ஓரை மகளிர் அஞ்சி ஈர்ஞெண்டு
கடலில் பரிக்கும் துறைவனொடு ஒருநாள்
நக்குவிளை யாடலும் கடிந்தன்று
ஐதே கம்ம மெய்தோய் நட்பே.

— அம்மூவன்

வேறுபாடு கண்டு இற்செறிக்கப்பட்ட தலைமகள் தன்னுள்ளே சொல்லியது.

அடும்பின் அழகிய மலரைக் கலந்து நெய்தற் பூவாலாகிய நெடிய மாலையை அணிந்த நீரை ஒழுகிய கூந்தலையுடைய விளையாட்டு மகளிரைக் கண்டு அச்சங்கொண்டு ஈரத்தையுடைய நண்டு கடலுக்குள் ஓடும் துறையையுடைய தலைவனோடு ஒரு நாள் நகைத்து விளையாடுதலையும் அவனுடைய உடம்பைத் தழுவிக்கொண்ட காதல் நட்பானது போக்கிவிட்டது. இது வியத்தற்குரியது.

தலைவனோடு அளவளாவியதனால் உண்டான வேறுபாடு அவனை முன்பு கண்டு மகிழ்ந்த இன்பத்தையும் போக்கி விட்டதே என்றவாறாம்.

அடும்பு - கடற்கரையில் வளரும் கொடி; தொடை - மாலை; ஞெண்டு - நண்டு - பரித்தல்; ஓடுதல்; ஐது - வியப்பைத் தருவது.

இப் பாடலை, தன் தோற்றப்பொலிவாகிய வேறுபாடு கண்டு தமர் தன்னை இற்செறித்தமையைத் தலைவி தன்னுள்ளே கூறியது என்பர் நச்சினார்க்கினியர் (தொல். களவு. 20).

பாட்டு முதற்குறிப்பு அகராதி

[எண் : பாட்டு எண்]

அ

அகவன் மகளே 23
அஞ்சுவது அறியாது 237
அடும்பின் ஆய்மலர் 401
அடும்புஅவிழ் அணிமலர் 349
அணிற்பல் அன்ன 49
அத்த வாகை அமலை 369
அதுகொல் தோழி 5
அதுவரல் அன்மையோ 248
அம்சில் ஓதி 211
அம்ம வாழி தோழி அன்னைக்கு 361
அம்ம வாழி தோழி இன்று அவர் 375
அம்ம வாழி தோழி காதலர்... இன்னே 287
அம்ம வாழி தோழி காதலர் ...நூல்அறு 104
அம்ம வாழி தோழி கொண்கன் 230
அம்ம வாழி தோழி நம் ஊர்ப் 146
அம்ம வாழி தோழி நம்மொடு 134
அம்ம வாழி தோழி புன்னை 298
அம்ம வாழி தோழி முன்நின்று 350
அம்ம வாழி தோழி யாவதும் 77
அம்ம வாழியோ 392
அமர்க்கண் ஆமான் 322
அமிழ்தத்தன்ன 206
அமிழ்தம் உண்க 201
அமிழ்துபொதி செந்நா 14
அயிரை பரந்த 178
அரில்பவர்ப்...நீர்நாய் 364
அரில்பவர்ப்...விளைகனி 91
அரும்புஅற மலர்ந்த 26
அரும்பெறல் அமிழ்தம் 83
அருவி அன்ன பருஉறை 271
அருவிப் பரப்பின் 100
அருவி வேங்கைப் 96
அருளும் அன்பும் 20
அல்குறு பொழுதில் 273
அலர்யாங்கு ஒழிவ 311
அவ்விளிம்பு உரீஇய 297
அவரே கேடுஇல் 216
அவரோ வாரார் 221
அழியல் ஆயிழை 143
அளிதோ தானே நாணே 149
அறிகரி பொய்த்தல் 184
அன்னாய் இவன்ஓர் 33

ஆ

ஆசுஇல் தெருவின் 277
ஆடுஅமை புரையும் 131
ஆம்பற் பூவின் சாம்பல் 46
ஆய்வளை நெகிழவும் 316
ஆர்கலி ஏற்றொடு 186
ஆர்கலி மிதித்த 52
ஆர்கலி வெற்பன் 353

இ

இடிக்கும் கேளிர் 58
இதுமற்று...துனியிடை 181

இதுமற்று...முதுநீர்ப் 299
இரண்டுஅறி கள்வி 312
இருங்கண் ஞாலத்து 267
இருள்திணிந் தன்ன 123
இல்லோன் இன்பம் 120
இலங்குவளை நெகிழச் 125
இலைஇல் அம்சினை 254
இவளே, நின்சொற்
கொண்ட 81
இவன்இவள் ஐம்பால் 229
இழைஅணிந்து
இயல்வரும் 345
இளமை பாரார் 126
இன்றுயாண் டையனோ 379
இன்றே சென்று வருதும் 189
இன்னள் ஆயினள் 98
இனமயில் அகவும் 249

ஈ

ஈங்கே வருவர் 192
ஈதலும் துய்த்தலும் 63

உ

உடுத்தும் தொடுத்தும் 295
உதுக்காண் அதுவே 191
உமணர், சேர்ந்து கழிந்த 124
உரைத்திசின் தோழி 302
உவரி ஒருத்தல் 391
உழுந்துஉடைக் கழுந்தின் 384
உள்ளது சிதைப்போர் 283
உள்ளார் கொல்லோ...
உள்ளியும் 232
உள்ளார் கொல்லோ...
கள்வர் 16
உள்ளார் கொல்லோ...
கிள்ளை 67
உள்ளிக் காண்பென் 286
உள்ளின் உள்ளம் வேமே 102
உள்ளினென் அல்லெனோ 99
உறுவளி உளரிய 278
உறைபதி யின்று 145

ஊ

ஊஉர் அலர்எழச் 262
ஊர்உண் கேணி 399
ஊர்க்கும் அணித்தே 113

எ

எந்தையும் யாயும் 374
எம்அணங் கினவே 53
எல்லாம் எவனோ 323
எல்லும் எல்லின்று 390
எல்லை கழிய 387
எலுவ சிறாஅர் 129
எவ்வி இழந்த 19
எழில்மிக உடைய்து 247
எழுதரு மதியம் 315
எற்றோ வாழி தோழி 90
எறிசுறாக் கலித்த 318
எறும்பின் அளையின் 12
என்எனப் படுங்கொல் 194

ஐ

ஐயவி அன்ன சிறுவீ 50

ஒ

ஒடுங்குஈர் ஓதி 70
ஒருநாள் வாரலன் 176
ஒலிவெள் அருவி 88
ஒறுப்ப ஓவலர் 34
ஒன்றேன் அல்லேன் 208

ஓ

ஓம்புமதி வாழியோ 235
ஓர்ஊர் வாழினும் 231

க

கடல்அம் கானல் 245
கடல்உடன் ஆடியும் 294
கடல்பாடு அவிந்து 177
கடும்புனல் தொடுத்த 103
கண்டிசின் பாண 359

கண்ணி மருப்பின் 363
கண்தர வந்த காம 305
கணைக்கோட்டு வாளைக் 164
கருங்கட் தாக்கலை 69
கருங்கால் வேங்கை 47
கருங்கால் வேம்பின் 24
கல்லென் கானத்துக் 179
கலிமழை கெழீஇய 264
கலைகை தொட்ட 342
கவலை கெண்டிய 233
கவலை யாத்த அவல 224
கவவுக்கடுங் குரையள் 132
கழனி மரத்து 8
கழிதேர்ந்து அசைஇய 303
கழியகாவி குற்றும் 144
கள்ளின் கேளிர் 293
கறிவளர் அடுக்கத்து 288
கன்றுதன் பயமுலை 225
கன்றும் உண்ணாது 27

கா

காண்இனி வாழி தோழி 171
காதலர் உழையர் ஆகப் 41
காந்தள்அம் கொழுமுகை 265
காந்தள் வேலி ஓங்குமலை 76
காமம் ஒழிவ தாயினும் 42
காமம் கடையின் 340
காமம் காமம் என்ப... நினைப்பின் 204
காமம் காமம் என்ப... நுணங்கிக் 136
காமம் தாங்குமதி 290
கார்புறந் தந்த 162
காலே பரிதப் பினவே 44
காலை எழுந்து கடுந்தேர் 45
காலையும் பகலும் 32
கான இருப்பை 329
கானமஞ்ஞை அறைஈன் 38
கான யானை தோல்நயந்து 79
கானங்கோழிக்கவர்குரற் 242

கு

குக்கூ என்றது கோழி 157
குணகடற் திரையது 128
குருகுகொளக் குளித்த 127
குருகும் இருவிசும்பு 260
குவளை நாறும் குவைஇருங் 300
குவிஇணர்த் தோன்றி 107
குறுந்தாட் கூதளி 60
குறும்படைப் பகழிக் 333
குன்றக் கூகை 153

கூ

கூந்தல் ஆம்பல் 80
கூன்முள் முண்டகக் 51

கே

கேட்டிசின் வாழி 30
கேளார் ஆகுவர் 253
கேளிர் வாழியோ 280

கை

கைவளை நெகிழ்தலும் 371
கைவினை மாக்கள் 309

கொ

கொங்குதேர் வாழ்க்கை 2
கொடியோர் நல்கார் ஆயினும் 367
கொடுந்தாள் முதலைக் 324
கொண்கன் ஊர்ந்த 212
கொல்வினைப் பொலிந்த 304
கொன் ஊர் துஞ்சினும் 138

கோ

கோடல் எதிர்முகைப் 62
கோடுஈர்...பாடுஇல கலிழ்ந்து 365
கோடுஈர்...பாடுஇல கலிழும் 11

கௌ

கௌவை அஞ்சின் காமம் 112

சி

சிறுவீ ஞாழல் 328
சிறுவெண் காக்கைச் 334
சிறுவெள் அரவின் 119
சிறைபனி உடைந்த 86

சு

சுடர்சினம் தணிந்து 195
சுடர்செல் வானம் 234
சுடுபுன மருங்கில் 291
சுரந்தலைப் பட்ட 209
சுரம்செல் யானைக் 169
சுனைப்பூக் குற்றுத் 142

செ

செங்களம் படக்கொன்று 1
செப்பினம் செலினே 207
செல்வச் சிறாஅர் 148
செல்வார் அல்லர்என்று 43
செவ்வரைச் சேக்கை 187
செவ்விகொள் வரகின் 282
செற்றாம் அன்றே 398
செறுவர்க்கு உறுநகை 336
சென்ற நாட்ட கொன்றைஅம் 183

சே

சேணோன் மாட்டிய 150
சேய்உயர் விசும்பின் 314
சேயாறு செல்வாம் ஆயின் 400
சேயாறு சென்று 269
சேரி சேர மெல்ல 298
சேறி ரோஎனச் செப்பலும் 268
சேறும் சேறும் என்றலின் 325

சோ

சோலை வாழை 308

ஞா

ஞாயிறு காயாது 378
ஞாயிறு பட்ட அகல்வாய் 92

த

தச்சன் செய்த சிறுமா 61
தண்கடற் படுதிரை 166
தண்துளிக்கு ஏற்ற 382
தலைப்புணைக் கொளினே 222
தழைஅணி அல்குல் 159

தா

தாஅவல் அஞ்சிறை நொப்பறை 172
தாதின் செய்த தண்பனிப் 48
தாமரை புரையும் (கடவுள் வாழ்த்து)
தாமே செல்ப ஆயின் 348
தாழ்இருள் துமிய 270

தி

திண்தேர் நள்ளி 210
திரிமருப்பு இரலை 338
திரிமருப்பு எருமை 279
தினைக்கிளி கடிகஎனின் 217

தீ

தீண்டலும் இயைவது கொல்லோ 272

து

துணைத்த தோகைப் 326
துறுகல் அயலது 36

தொ

தொடி நெகிழ்ந்தனவே 239
தொல்கவின் தொலைந்து 381

ந

நகைநன்கு உடையர் 213
நகைபெரிது உடையர் 37

நமக்குஒன்று உரையார் 266
நல்உரை இகந்து 29
நல்கின் வாழும் 327
நல்நலம் தொலைய 93
நலத்தகைப் புலைத்தி 330
நள்ளென் றன்றே 6
நறைஅகில் வயங்கிய 339
நனைமுதிர் ஞாழற் 397

நா

நாகுபிடி நயந்த 346
நாண்இல மன்ற 35

நி

நிரைவளை முன்கை 335
நிலத்தினும் பெரிதே 3
நிலம்தொட்டுப் புகாஅர் 130
நிலம்புடை பெயரினும் 373
நிழல்ஆன்று அவிந்த 356
நினையாய் வாழி தோழி 343

நீ

நீஉடம் படுதலின் 383
நீகண் டனையோ 75
நீர்கால் யாத்த 388
நீர்நீடு ஆடின் 354
நீர்வார் கண்ணை 22

நு

நுதல்பசப்பு இவர்ந்து 185

நெ

நெஞ்சே நிறைஒல் லாதே 395
நெடிய திரண்ட
தோள்வளை 252
நெடுங்கழை திரங்கிய 331
நெடுநீர் ஆம்பல் 352
நெடுவரை மருங்கின் 158
நெய்கனி குறும்பூழ் 389
நெய்தல் பரப்பில் பாவை 114
நெருப்பின் அன்ன 160
நெறிஇருங் கதுப்பொடு 190

நோ

நோம்என் நெஞ்சே...இமை
தீய்ப் 4
நோம்என் நெஞ்சே...
புன்புலத்து 202
நோற்றோர் மன்ற 344

ப

படரும் பைபயப் பெயரும் 215
படுமழை பொழிந்தெனப் 261
பணைத்தோட் குறுமகள் 276
பதலைப் பாணிப் பரிசிலர் 59
பயப்புஎன் மேனி அதுவே 219
பரல்அவற் படுநீர் 250
பருவத் தேன்நசைஇப் 175
பல்ஆ நெடுநெறிக்கு 64
பல்வீ படரிய 341
பல்லோர் துஞ்சும் 244
பலரும் கூறுக அஃது 170
பலவில் சேர்ந்த பழம்ஆர் 385
பழமழைக் கலித்த 220
பழூஉப்பல் அன்ன 180
பறைபடப் பணிலம் 15
பனிப்புதல் இவர்ந்த 240
பனைத்தலைக்
கருக்குடை 372

பா

பாஅடி உரல பகுவாய் 89
பாசவல் இடித்த 238
பார்ப்பன மகனே 156
பால்வரைந்து அமைத்தல் 366
பாலும் உண்ணாள் 396

பு

புரிமட மரையான் 317
புல்வீழ் இற்றிக் கல்இவர் 106
புள்ளும் புலம்பின 310

புள்ளும் மாவும் 118
புறவுப்புறத் தன்ன 274
புனவன் துடவைப்...
கடிஉண் 105
புனவன் துடைவைப்...
கிளிகுறைத்து 133

பூ

பூஇடைப் படினும் 57
பூஒத்து அலமரும் 72
பூண்வனைந் தன்ன 227
பூவொடு புரையும்
கண்ணும் 226
பூழ்க்கால் அன்ன 68

பெ

பெய்த குன்றத்துப் 200
பெயர்த்தனென்
முயங்கயான் 84
பெயல்கால் மறைத்தலின் 355
பெயல்மழை துறந்த 174
பெருங்கடற் கரையது...
களிற்றுச் 246
பெருங்கடற் கரையது...
நீத்துநீர் 313
பெருங்கடற் பரதவர் 320
பெருந்தண் மாரிப் 94
பெருநன்று ஆற்றின் 115
பெருவரை மிசையது 78
பெறுவது இயையாது
ஆயினும் 199

பே

பேர்ஊர் கொண்ட 223

பை

பைங்காற் கொக்கின் 122

பொ

பொத்துஇல் காழ 255
பொய்கை ஆம்பல் 370
பொருத யானைப் 284
பொழுதும் எல்லின்று 161
பொன்நேர் ஆவிரைப் 173

ம

மகிழ்ந்ததன் தலையும் 165
மகிழ்நன் மார்பே 73
மட்டம் பெய்த 193
மடவ மன்ற தடவுநிலைக் 66
மடவ வாழி மஞ்ஞை 251
மண்ணிய சென்ற
ஒள்நுதல் 292
மணிவார்ந் தன்ன 256
மயங்குமலர்க்
கோதை 393
மரம்கொல் கானவன் 214
மருந்துஎனின் மருந்தே 71
மல்குசுனை புலர்ந்த 347
மலர்ஏர் உண்கண் 377
மலைஇடை யிட்ட 203
மலைச்செஞ் சாந்தின் 321
மழைசேர்ந்து எழுதரு 259
மழைவிளை யாடும் 108
மள்ளர் குழீஇய 31
மறிக்குரல் அறுத்துத் 263
மன்உயிர் அறியாத் 376
மன்ற மராஅத்த 87
மனைஉறை கோழிக் 139

மா

மாஎன மடலும் 17
மாக்கழி மணிப்பூக் 55
மாசுஅறக் கழீஇய 13
மாரி ஆம்பல் அன்ன 117
மாரிப் பித்திகத்து 168
மால்வரை இழிதரும் 95
மான்அடி அன்ன 243
மான்ஏறு மடப்பிணை 319

மி

மின்னுச்செய் கருவிய 205

மு

முகைமுற் றினவே 188
முட்கால் இறவின் 109
முதைப்புனம் கொன்ற 155
முருகு அயர்ந்து வந்த 362
முல்லை ஊர்ந்த 275
முலையே முகிழ்முகிழ்த் தனவே 337
முழந்தாள் இரும்பிடிக் 394
முழவுமுதல் அரைய 301
முளிதயிர்ப் பிசைந்த 167
முனிபடர் உழந்த 357

மூ

மூட்டு வேன்கொல் 28

மெ

மெய்யோ வாழி தோழி 121
மெல்இயல் அரிவை 137
மெல்லிய இனிய 306
மெல்லிய லோயே 368
மென்தோள் நெகிழ்த்த 111

யா

யாஅம் கொன்ற 198
யாங்கு அறிந் தனர்கொல் 154
யாதுசெய் வாம்கொல் 197
யாம்எம் காமம் 241
யாய்ஆ கியளே மாஅ 9
யாய்ஆ கியளே விழவு 10
யாயும் ஞாயும் 40
யார்அணங் குற்றனை 136
யாரினும் இனியன் 95
யாரும் இல்லைத் 25
யாவதும் அறிகிலர் 152
யான்நயந்து உறைவோள் 116
யானே ஈண்டையேனே... ஆனா 97
யானே ஈண்டை யேனே... ஏனல் 54

வ

வங்காக் கடந்த 151
வண்டுபடத் ததைந்த 21
வந்தவாடைச் சில்பெயற் 332
வளர்பிறை போல 289
வளைஉடைத் தனையது 307
வளையோய் உவந்திசின் 351
வளைவாய்ச் சிறுகிளி 141
வன்பரற் தெள்அறல் 65

வா

வார்உறு வணர்கதுப்பு 82
வாரல்எம் சேரி 258
வாரார் ஆயினும் வரினும் 110

வி

விசும்புகண் புதையப் 380
விட்ட குதிரை விசைப்பின் 74
விட்டென விடுக்கும் 236
விடர்முகை அடுக்கத்து 218
விரிதிரைப் பெருங்கடல் 101
வில்லோன் காலன கழலே 7
விழுத்தலைப் பெண்ணை 182
வினையே ஆடவர்க்கு 135

வீ

வீங்குஇழை நெகிழ 358
வீழ்தாழ் தாழை 228

வெ

வெண்மணற் பொதுளிய 281
வெண்மணல் விரிந்த 386
வெந்திறல் கடுவளி 39
வெறிஎன உணர்ந்த 360

வே

வேட்டச் செந்நாய் 56
வேதின வெரிநின் 140
வேம்பின் பைங்காய் 196
வேரல் வேலி வேர்க்கோட் 18
வேரும் முதலும் கோடும் 257
வேனிற் பாதிரிக் 147

வை

வைகா வைகல் 285

பாட வேறுபாடு

ஏடுகள் - ஒற்றுமை வேற்றுமை

இக் குறுந்தொகைப் பதிப்புக்கு நான்கு ஏடுகளும், ஐந்து பதிப்புகளும் ஒப்புநோக்கப்பெற்றன. இலண்டனிலிருந்து வரவழைக்கப்பெற்ற நுண்படம் (காகிதச் சுவடியின் நுண்படம், எழுதப்பெற்ற காலம்: 1894). அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து வரவழைக்கப்பட்ட மகாவித்துவான் ரா. இராகவையங்கார் அவர்களின் கையெழுத்துப்படி (மதுரையில் 1899-ல் எழுதப் பெற்றது). மதுரைப் புலவர் இளங்குமரன் அவர்களிடமிருந்து பெறப்பெற்ற பூண்டியப்பப்புலவர் அவர்களின் ஏட்டுக் குறிப்பு, திரு அடிகளாசிரியர் அவர்களின் வழியாகக் கிடைத்த 226 பாடல்களுக்கான காகிதச்சுவடி ஆகிய நான்கு சுவடிகள் முற்படக் கூறத்தக்கன. இதுவரை குறுந்தொகையைப் பதிப்பித்தவர்கள் இவற்றைக் கண்டதாகத் தோன்றவில்லை. டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களின் பதிப்பில் இடம் பெறாத வேறுபாடுகள் பல இவற்றில் இருப்பதைக் காணலாம்.

பதிப்புகளைப் பொறுத்தவரை, ஒற்றுமை வேற்றுமை காண்பது இயலாத ஒன்று. அவை பல்வேறு ஏடுகளை ஒப்பிட்டு நோக்கியே பதிப்பிக்கப் பெற்றன. ஆயினும், ஏடுகளின் காலப் பழமையையும், ஒப்புகளையும் காண இயலாது. பதிப்பித்தாரும் பாடவேறுபாடுகளையும் அவை காணப்பெற்ற சுவடிகளைப் பற்றிய விவரங்களையும் முறையாகத் தரவில்லை. ஆய்வு முன்னுரை, அகராதிகள், ஒப்புமைகள் என விளக்கமாகப் பதிப்பித்த ஐயர் அவர்களும் பாடவேறுபாடுகள் பற்றியோ பாடத் தேர்வுக்கான காரணம்பற்றியோ, ஏடுகள் பற்றிய விவரமோ அளிக்காமை குறிப்பிடத்தக்கது. எனவே இவற்றுள் ஒற்றுமை வேற்றுமை காண்பது எளிதன்று. எனினும் பெரும்பாலான நோக்குகளைக் காணும்போது சௌரிப்பெருமாள் அரங்கன் அவர்களின் பதிப்பையும் பாடத்தையும் ஒட்டியே கலாநிலையப்பதிப்பு செல்வதைக் காணமுடிகிறது. இவை இரண்டிலிருந்தும் சில பாடங்களை மாற்றிய நிலையில் அருணாசலதேசிகர் பதிப்பு அமைகிறது. சாமிநாதையர் அவர்கள் இவை மூன்றிலிருந்தும் பாடங்களைத் தேர்ந்து திருத்தமுற அமைத்து வழங்குவதாகத் தோன்றுகிறது.

பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையவர்கள் இவற்றையும், மேலும் தமக்குக் கிடைத்த சுவடிகளையும் ஒப்புநோக்கி வெளியிட்ட சங்க இலக்கியத்தொகுப்பில் சில பல புதிய பாடங்களைக் காணலாம். சாமிநாதையர் அவர்களின் குறுந்தொகைப் பதிப்புக்கும் சங்க இலக்கியக் குறுந்தொகைப் பதிப்புக்கும் 234 இடங்களில் பாடங்கள் வேறுபடுகின்றன. சங்க இலக்கியத் தொகுப்புக்குப் பின்வரும் ஆய்வுப்பதிப்பான இக் குறுந்தொகைப் பதிப்புக்கும் சங்க இலக்கியப் பதிப்புக்கும் 225 இடங்களில் பாடங்கள் வேறுபடுகின்றன. சாமிநாதையரின் பதிப்புக்கும் இக் குறுந்தொகைப் பதிப்புக்கும் 260 இடங்களில் பாடங்கள் மாறுபாடு கொள்கின்றன. இவை இரண்டிலும் இடம் பெறாமல் மாறுபாடு காட்டும் புதிய பாடங்களாக 131 இடங்கள் இப் பதிப்பில் இடம் பெற்றுள்ளமை குறிக்கத் தக்கதாகும்.

ஏடுகளைப் பொறுத்தவரை ஒப்புமைப் பகுதிகளைக்காட்டிலும் வேற்றுமைப் பகுதிகளையும் தவறான இடங்களில் அவை இணைந்தும் மாறுபட்டும் நிற்கும் நிலைகளையும் ஆய்வு செய்து ஒற்றுமை வேற்றுமை காண்பதே எளிதாகும். இவ் வகையில் 1894-ல் எழுதப்பெற்ற இலண்டன் சுவடியும், 1890-ல் எழுதப் பெற்ற மகாவித்துவான் ரா. இராகவையங்கார் அவர்களின் சுவடியும் பெரிதும் ஒத்திருக்கின்றன. இவை இரண்டும் மதுரைப் பக்கம் கிடைத்த சுவடியை அடிப்படையாகக் கொண்டன எனக் கொள்வது பொருந்தும். வேறு சுவடிகளில் காணாத புதிய பாடங்கள் சில பூண்டியப்பப் புலவர் ஏட்டில் காணப்பெறுகின்றன! தவறுகள் குறைந்த பாடங்களாகவும் உள்ளன. எனவே இது வேறொரு சுவடி எனக்கொள்ளல் வேண்டும். அடிகளாசிரியர் அவர்களின் ஏடு குறைப்பிரதி; எனவே அதுபற்றி முழுமையாகக் கூறமுடியா நிலை உளது. எனினும் இம் மூன்று சுவடிகளினின்று மாறுபட்ட சுவடி போலவே தோன்றுகிறது. இவற்றுள் சில மாறுபட்ட திருத்தமான பாடங்கள் அமைந்திருப்பதை நோக்கும் போது பூண்டியப்பப் புலவர் ஏடு பழமை கொண்டதாக இருக்கலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

மேற்கூறிய கருத்துகளுக்கு அரண்செய்யும் ஏடுகளின் சில ஒற்றுமை வேற்றுமைகளைக் காட்டும் பட்டியல் அடுத்துவரும் 361, 362ஆம் பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளது.

பாட்டு. அடி. சீர்	இலண்டன் ஏடு	இராகவையங் கார் ஏடு	பூண்டியப்பப்புலவர் ஏடு	அடிகளாசிரியர் ஏடு
8. 2 : 3	தூஉம்	→	கதூஉம்	→
6 : 1	மேவன	→	ஏவின	மேவின
9. 3 : 3-4	பொய்காயினளே	→	மெய்காயினளே	→
10. 3 : 1	யருள்வர	→	உள்வர	உழவர்
11. 6 : 1	பல்வேற்	→	வல்வேற்	→
12. 1 : 1	எறும்பி	→	எறும்பின்	எறும்பி
14. 1 : 3-4	அஞ்சவந்த	→	அஞ்ச நிவந்த	அஞ்சிநிவந்த
16. 1 : 1	கணவர்தம்	→	கள்வர்தம்	கானவர்
22. 5 : 1-2	தேமூரெண் ணுதல்	→	தேமுசொண் ணுதல்	தேமூரெண் ணுதல்
25. 3 : 4	காஅல	→	காலவே	கால
26. 6 : 1-2	தேக்கொக் கருந்தும்	→	முத்துநிரை யொத்த	→
29. 2 : 1-2	பேணீர்கேற்றன	→	பெயனீர்கேற்ற	பெயனீர்க் கேற்றன
40. 4 : 2	பெய்ந்நீர்	→	பெயல்நீர்	→
43. 4 : 1-2	இருபேராண்	→	இருபேராண்மை	இருபெய ராண்மை
59. 2 : 1	தலைக்	→	அதலைக்	→
69. 5 : 1	சேர	→	சாரல்	→
75. 3 : 3	சோனை	→	சோணை	பூஞ்சுனை
4 : 2	பாடிலி	→	பாடலி	பாடினி
80. 5 : 3-4	பல்வேல் எழுநி	→	கூர்வேல்எழினி	பல்வேல்எழினி
83. 1 : 2	அமிர்தம்	→	அமிழ்தம்	→
100. 2 : 2	குவியொடு	→	குளவியொடு	குவியொடு
3 : 4	பகுப்பின்	→	பசிப்பின்	→
105. 2 : 4	சில்குரல்	→	செழுங்குரல்	சிறுகுரல்
133. 3 : 4	ஆங்கெண்	→	ஆங்கென்	ஆகென்
138. 5 : 4	கேட்டே	→	ஓர்ந்தே	கேட்டே
160 1:3-4	செந்தலை அன்றில்	→	சிறுகட்பன்றி	செந்தலை அன்றில்

பாட்டு அடி, சீர்	இலண்டன் ஏடு	இராகவையங்கார் ஏடு	பூண்டியப்பப் புலவர் ஏடு	அடிகளாசிரியர் ஏடு
180. 1 : 1	பழுப்பல்	→	பழுஉப்பல்	→
198. 1 : 1	மாஅம்	→	யாஅம்	மாஅம்
200. 2:3-4	வீசும்வந்து	→	வீசுமந்து	வீஇசுமந்துவந்து
205. 3 : 1	பொலம்பிடைப்	→	பொலம்படைப்	→
3 : 3	வெண்தேர்	→	திண்தேர்	வெண்தேர்
219. 5 : 4	அள்ளிலைத்	→	முள்ளிலைத்	→
222. 3 : 1	புனல்கை	→	புணைகை	→
241. 1:1-2	யாமேகாமம்	→	யாமெம்காமம்	
245. 4 : 1	மானில	→	மாலை	
247. 3 : 3	புனையுமார்	→	உளையுமார்	
270. 6:2-3	மேவுதலாகி	→	மேவினமாகி	
275. 4 : 1	புல்லூர்	→	புல்லார்	
282. 3 : 2	நாள்மறி	→	நன்மறி	
306. 6 : 1	தெண்கடல்	→	தண்கடல்	
308. 2 : 2	அருந்தலை	→	இருந்தலை	
309. 3 : 1	நடன	→	நீடிய	
314. 5 : 2	இளமுலை	→	இழைமுலை	
318. 1 : 1	எறிதருக்	→	எறிசுறாக்	
319. 4 : 1	மையணி	→	அமையணி	
333. 2 : 2	படிந்த	→	கடிந்த	
355. 6 : 2	கமழும்	→	கமழுமெம்	
363. 4 : 3	வருநிழல்	→	வரிநிழல்	
372. 3 : 2	சிமய	→	சிமைய	
375. 6:3-4	அவியன் மான்றே	→	அவியன் மாரன்றே	
376. 2 : 3	தாஅம்	→	ஆரம்	
385. 1 : 3	பழமார்	→	பழந்தின்	
7 : 3	அழுங்கல்	→	பழங்கேள்	
396. 5 : 3	வெவ்வரை	→	வெவ்வறை	

பாட வேறுபாடு
ஒப்புநோக்கு அட்டவணை

